# முழுமையான
# சீஷத்துவ
# நற்செய்தி பணி

(The Complete Discipleship Evangelism)

Levels 1 - 3
48 lessons

## நிலை 1

ஆண்ட்ரூ வோமக்
மற்றும்
டான் க்ரோ

Andrew Wommack
and
Don Krow

The Complete Discipleship Evangelism
48-Lesson Course
Level 1 (16 Lessons)

Copyright ©2012, Andrew Wommack

Andrew Wommack Ministries
PO Box 3333, Colorado Springs, CO 80934-333
www.awmi.net

Title in Tamil: முழுமையான சீஷத்துவ நற்செய்தி பணி

©2020 Andrew Wommack Ministries India

ISBN:
www.awmindia.net
info@awmindia.net

Item Code: TM 417-1/3

Permission is granted to duplicate or reproduce for discipleship purposes on the condition that it is distributed free of charge.

# முழுமையான சீஷத்துவ நற்செய்தி பணி நிலை 1

## உள்ளடக்கம


| | |
|---|---|
| 1. நித்திய ஜீவன் | 5 |
| 2. கிருபையினால் இரட்சிப்பு | 13 |
| 3. கிருபையினால் நீதி | 24 |
| 4. தேவனோடுள்ள உறவு | 32 |
| 5. தேவனுடைய சுபாவம் | 41 |
| 6. மனந்திரும்புதல் | 52 |
| 7. அர்ப்பணிப்பு | 64 |
| 8. தண்ணீர் ஞானஸ்நானம் | 73 |
| 9. கிறிஸ்துவுக்குள் உங்கள் அடையாளம் - பாகம் 1 | 82 |
| 10. கிறிஸ்துவுக்குள் உங்கள் அடையாளம் - பாகம் 2 | 93 |
| 11. கிறிஸ்தவன் பாவம் செய்யும் போது என்ன நேரிடுகிறது | 102 |
| 12. தேவனுடைய வார்த்தையின் முழுமை | 111 |
| 13. தேவன் குற்றமற்றவர் | 121 |
| 14. ஆவியினால் நிறைந்த வாழ்வின் வல்லமை | 131 |
| 15. பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வது எப்படி | 141 |
| 16. அந்நிய பாஷையில் பேசுவதின் நன்மைகள் | 150 |

பாடம் 1

# நித்திய ஜீவன்

ஆண்ட்ரூ வோமக்

வேதாகமத்தில் மிகவும் பிரபலமான வசனம் யோவான் 3:16 ஆகும். அனைவரும் தங்களது சிறுவயது முதலே அந்த வசனத்தை நன்றாய் அறிந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் அது சரியாக புரிந்து கொள்ளப்படாமலும் தவறாக பயன்படுத்தப்பட்டும் வருகிறது என்று நான் நம்புகிறேன். *யோவான் 3:16ல், "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலக்கத்தில் அன்புகூர்ந்தார்"என்று வேதம் சொல்லுகிறது.*

இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதற்க்காகவே வந்தார் என்றும் அதனால் நாம் அழிவுக்கு தப்புவிக்கப்படுகிறோம் என்றும் பாரம்பரியமாக இந்த வசனத்தை குறித்து போதிக்கப்பட்டு வருகிறது. அது உண்மையென்றாலும் கூட இந்த வசனத்தின்படி இயேசு இந்த உலகத்திற்க்கு வந்து நமது பாவங்களுக்காக மரித்ததின் உண்மையான நோக்கம் நாம் நித்தியஜீவனை பெற்றுக்கொள்வதற்காகவே என்று கூறப்படுகிறது. நமக்கும் நித்தியஜீவனுக்கும் இடையில் நமது பாவங்கள் தடையாக நின்றபடியால், அது அப்படியாயிற்று.

இயேசு நம்முடைய பாவங்களுக்கு மரித்தார் என்பது உண்மைதான். இயேசுவை விசுவாசித்தால் நாம் கெட்டுப்போவதில்லை என்பதும் உண்மையே. ஆனாலும் இதை காட்டிலும் சுவிசேஷத்தில் இன்னும் அதிகமாக இருக்கிறது. தேவன் உங்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்க விரும்புகிறார் என்பதுதான் சுவிசேஷத்தின் உண்மையான செய்தியாக இருக்கிறது. அதை பற்றி நான் விளக்கிச்சொல்ல விரும்புகிறேன்.

அவரை சிலுவையில் அறைவதற்கு முந்தைய இரவு இயேசு கிறிஸ்து *ஜெபிக்கும்போது இப்படியாக சொன்னார். "ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3).* ஒன்றான மெய் தேவனாகிய பிதாவையும் அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிந்து கொள்வதே நித்திய ஜீவன் என்று இந்த வசனம் சொல்லுகிறது. இதுவே நித்திய ஜீவ னென்பது. நீத்தியஜீவனென்றால் நித்யகாலமாக உயிரோடு என்று இருப்பது நிறையபேர் நினைத்துக்கொண்டு இருக்கின்றனர்.எல்லோரும்தான் நித்தியகாலமாக உயிரோடு இருப்பார்கள். ஒருவர் மரித்துப்போனால் அவர் முற்றிலும் இல்லாமல் அழிந்து போய்விடுவார் என்று எண்ணுகிறது ஒரு தவறான கருத்தாகும். ஆவியும் ஆத்துமாவும் தேவனிடத்திற்கு போய்க்கலந்துவிடும், சரீரம் கல்லறையில் மக்கிப்போய்விடும் என்று எண்ணுகின்றனர். உண்மை என்னவெனில், பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவரும் மரித்தபின்பும் தொடர்ந்து ஆவியின் ரீதியில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆகையால் நித்திய ஜீவனென்றால் நித்தியகாலம் உயிரோடு இருப்பது என்பது முழுமையான சத்தியமல்ல. எல்லோரும் நித்தியகாலாக உயிரோடுதான் இருப்பார்கள். தேவனுடனான நித்தியஜீவன் எல்லோருக்கும் தானாக கொடுக்கப்படவில்லை என்று இந்த வசனம் மிகத் தெளிவாக காண்பிக்கிறது.

சில ஜனங்கள், "நித்திய ஜீவனென்றால், நரகத்தில் நித்திய காலமாக உயிரோட இருப்பதற்கு பதிலாக பரலோகத்தில் நித்திய காலமாக உயிரோட இருப்பதுதான்" என்று சொல்கிறார்கள். ஆனால், யோவான் 17:3ல் *தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்* என்று இயேசு சொல்லுகிறார். இது அறிவு சார்ந்த புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாறப்பட்டதாகும். வேதவாக்கியங்கள் முழுவதிலும், "அறிதல்" என்கிற வார்த்தை, நமக்கு ஏற்படக்கூடிய மிக நெருக்கமான, அந்நியோன்னியமான தனிப்பட்ட உறவை விவரித்துக்காட்டுகிறதற்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இரட்சிப்பின் உண்மையான நோக்கம் நித்தியகாலமாக பரலோகத்தில் உயிரோடுருப்பது என்பதல்ல. அப்படி இருப்பது சிறப்பானதுதான், இரட்சிப்பின் உண்மையான நோக்கமே,

நாம் நம்முடைய கர்த்தராகிய தேவனோடு நெருக்கமான, அந்நியோன்னியமான தனிப்பட்ட உறவைவைத்துக் கொள்ளவேண்டுமென்பதுதான். ஏராளமானவர்கள் தங்களுடைய பாவம் மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமே தேவனிடம் கதறுகிறார்கள். ஆனால் அவர்கள் தேவனோடு நெருக்கமான அந்நியோன்னியமான தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை இலக்காக கொண்டிருப்பதில்லை.

இரட்சிப்பின் உண்மையான நோக்கத்தை விவரிக்காமல் இருப்போமானால் நாம் சுவிசேஷத்திற்க்கு கெடுதல் செய்கிறவர்களாக இருப்போம். நாம் இரட்சிப்பை ஆவிக்குறிய காரியங்களுக்கு மட்டும் சம்மந்தப்பட்டதாக, அதாவது எதிர்காலத்தில், நித்தியத்தில் மட்டும் பயனுள்ளதாக, நாம் பகிரும்போது, நாம் ஜனங்களுக்கு உதவி செய்ய தவறியவர்களாக இருப்போம். சிலர் இப்போழுதும்கூட இந்த உலகத்தில் நரகம்போன்ற வாழ்க்கையைதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அநேகர் மன அழுத்ததிலும், ஏழ்மையிலும், வைராக்கியத்திலும்,சண்டைகளில் ஈடுபட்டுக்கொண்டும், நிராகரிக்கபட்டவர்களாகவும் காயப்பட்டவர்களாயும், திருமண உறவு முறிந்துபோனவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் மக்கள் தங்கள் வாழ்க்கையை மிகுந்த சிரமத்துடன் நகர்த்திக் கொண்டுபோக தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கின்றார். இப்படி இரட்சிப்பை எதிர்காலத்திற்க்குமட்டும் பயன்படக்கூடியதாக ஆக்கிவிட்டபடியால் நிறைய ஜனங்கள் இன்று ஒவ்வொரு நாளும் சிரமத்துடன் வாழ்க்கையை நகர்த்த முயற்சி செய்துகொண்டிருப்பதினால் அந்த மேன்மையான இரட்சிப்பைக் குறித்து முடிவுசெய்யாமல் விட்டுவிட்டார்கள்.

உண்மை என்னவெனில், நாம் நரகத்தில் சாபத்திலும் தண்டனையிலும் வாழ்வதைக்காட்டிலும், நாம் ஆசீர்வாதத்துடன் பரலோகத்தில், நித்தியமாக வாழ்வதற்கு நமக்கு நித்திய இலக்கை உண்டு பண்ணுவதற்கு மட்டும் இயேசு கிறிஸ்து வரவில்லை,இயேசு நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிப்பதற்காகவும் வந்தார் (கலாத்தியர் 1:4). பிதாவாகிய தேவனிடத்தில் அந்நியோன்னியத்தையும் நெருக்கமான உறவையும் நமக்கு உண்டு பண்ணுவதற்கே இயேசு வந்தார்.

உங்களை தம்மோடு, நெருங்கிய அந்நியோன்னியமான, தனிப்பட்ட உறவிற்குள் கொண்டுவரவே இயேசு வந்தார். இயேசு உங்களை நேசிக்கிறார். இயேசு உங்களை தனிப்பட்டமுறையில் அறிந்துகொள்ள விரும்புகிறார். உலகில் நீங்கள் வேறு எதன்மூலமும் கிடைக்க க்கூடாததும் கிடைக்கவாய்ப்பில்லாததுமான தரமான மேன்மையான வாழ்க்கையை இயேசு உங்களுக்கு தரவிரும்புகிறார்.

இயேசு இதை, யோவான் 10:10ல் இவ்விதமாக சொல்லியிருக்கிறார். *“திருடன் (சாத்தானை பற்றி சொல்லுகிறது) திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான், நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்”.* (குறிகளில் சொல்லப்பட்டது நான் சொன்னது). தேவன் உங்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்க விரும்புகிறார். தேவன் உங்களுக்கு பரிபூரண ஜீவனையும் கொடுக்க விரும்புகிறார். மேலும் இன்று அது உங்களுக்கு தேவையானதும், அவசியமானதுமாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னிப்பதற்க்காக மட்டும் மரிக்கவில்லை. அவரோடு உங்களை சேர்த்துக்கொள்வதற்காகவும் மரித்தார். நீங்கள் தேவனை அறியவில்லையென்றால், நீங்கள் அந்த காரணத்திற்க்காகவே அவரை அறிந்துகொள்வது அவசியமாகும். நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களாக இருப்பீர்களானால், உங்கள் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்வதோடு நின்றுவிடாமல், அந்த நிலையை தாண்டிச்சென்று நீங்கள் பிதாவோடு நித்தியஜீவனில் பிரவேசிக்க வேண்டும்.

## நித்தியஜீவனை பற்றிய காரியங்கள்

அ. சுவிசேஷத்தின் நோக்கமே நித்திய ஜீவன் (யோவான் 3 :16)

ஆ. நித்தியஜீவன் என்பது தேவனை அறிவதாகும்.(யேவான் 17:3)

இ. தேவனை அறிதல் என்பது அவரோடு உண்டாகும் அந்நியோன்யமான தனிப்பட்ட உறவாகும். .(1கொரி 6:16-17)

ஈ. நித்தியஜீவன் இப்போழுது கிடைக்கக்கூடியதாயிருக்கிறது. (1யோவான் 5:12)

உ. தேவன் உங்களோடு தனிப்பட்டஉறவை எதிர்பார்க்கிறார். (வெளி 3:20)

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. யோவான் 3:16 - வாசிக்கவும். இயேசுவை தேவன் இந்த உலகத்திற்கு அனுப்பியதற்கான காரணம் என்ன?

**யோவான் 3:16 -** *தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*

2. "அறிதல்" என்ற வார்த்தையின் வேதாகம பயன்பாடுகள், ஒருவருடைய தனிப்பட்ட அந்நியோந்நிய உறவை குறிக்கிறது. (ஆதி 4:1 ) யோவான் 17:3. வாசிக்கவும் இந்த வசனத்தின் படி நித்தியஜீவன் மற்றும் நித்தியவாழ்வு என்பது என்ன?

**ஆதியாகமம் 4:1** - *ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்.*

**யோவான் 17:3 -** *ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.*

3. 1யோவான் 5:11-12.ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின்படி நித்திய ஜீவன் அல்லது அழியாவாழ்வு என்பது எப்போது தொடங்குகிறது?

**1யோவான் 5:11-12 -** *தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச்சாட்சியாம். 12. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.*

4. யோவான் 10:10 ஐ வாசிக்கவும். இயேசு நமக்கு எப்படிப்பட்ட வாழ்வை கொடுப்பதற்காக வந்தார்?

**யோவான் 10:10 -** *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

5. பரிபூரண வாழ்வை பற்றிய தரம் அல்லது பண்புகளை பற்றி உங்களுடைய சுய வார்த்தைகளால் விளக்கவும்.

6. தேவன் தமது குமாரன் இயேசுவை இந்த உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படிக்கு உலகத்திற்கு அனுப்பினார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நித்தியஜீவனும் அழியாவாழ்வும் விசுவாசிக்கிறவர்களுக்கு கொடுக்கப்படுகிறதா?

7. நித்தியஜீவன் அல்லது முடிவில்லா வாழ்வு என்பது காலத்தை (நித்தியமான) மட்டும் குறிப்பிடவில்லை என்பதும் அது தரமும் நிறைவும் உள்ள வாழ்வை குறிக்கிறது என்பதும் தெளிவாக விளங்கிவிட்டதல்லவா?

# பதில் ஆதாரங்கள்

1. யோவான் 3:16 - வாசிக்கவும். இயேசுவை தேவன் இந்த உலகத்திற்கு அனுப்பியதற்கான காரணம் என்ன?

**இந்த உலகை இரட்சிப்பதற்க்காகவும் பாவத்தின் தண்டனைய நீக்கி, அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் நித்திய ஜீவனை கொடுக்க இயேசுவை அனுப்பினார்.**

2. “அறிதல்“ என்ற வார்த்தையின் வேதாகம பயன்பாடுகள், ஒருவருடைய தனிப்பட்ட அந்நியோந்நிய உறவை குறிக்கிறது. (ஆதி 4:1 ) யோவான் 17:3. வாசிக்கவும் இந்த வசனத்தின் படி நித்தியஜீவன் மற்றும் நித்தியவாழ்வு என்பது என்ன?

**நித்தியஜீவன் என்பது தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் அறிவதாகும்.(மாம்சத்தின்படியல்ல அந்நியோந்நியத்தின்படி)**

3. 1யோவான் 5:11-12.ஐ வாசிக்கவும் இந்த வசனத்தின்படி நித்திய ஜீவன் அல்லது அழியாவாழ்வு என்பது எப்போது தொடங்குகிறது?

**குமாரனகிய இயேசு கிறிஸ்துவை நமது வாழ்வில் ஏற்றுக்கொள்ளும்போது தொடங்குகிறது.**

4. யோவான் 10:10 ஐ வாசிக்கவும். இயேசு நமக்கு எப்படிப்பட்ட வாழ்வை கொடுப்பதற்க்காக வந்தார்?

**பரிபூரண வாழ்வு**

5. பரிபூரண வாழ்வை பற்றிய தரம் அல்லது பண்புகளை பற்றி உங்களுடைய சுய வார்த்தைகளால் விளக்கவும்.

**பரிபூரண வாழ்வு என்பது திருடன் எதை செய்யும்படி வருகிறன் என்று இயேசு குறிப்பிட்டுள்ளரோ அதற்கு எதிர்மறையானதாக இருக்கும்.**

6. தேவன் தமது குமாரன் இயேசுவை இந்த உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படிக்கு உலகத்திற்கு அனுப்பினார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நித்தியஜீவனும் அழியாவாழ்வும் விசுவாசிக்கிறவர்களுக்கு கொடுக்கப்படுகிறதா?

**ஆம்**

7. நித்தியஜீவன் அல்லது முடிவில்லா வாழ்வு என்பது காலத்தை (நித்தியமான) மட்டும் குறிப்பிடவில்லை என்பதும் அது தரமும் நிறைவும் உள்ள வாழ்வை குறிக்கிறது என்பதும் தெளிவாக விளங்கிவிட்டதல்லவா?

**ஆம்**

பாடம் 2

# கிருபையினால் இரட்சிப்பு

டான் க்ரோ

இயேசு பலமுறை நமக்கு ஆவிக்குரிய சத்தியங்களை விளக்குவதற்காக உதாரணக் கதைகளையும், உவமைகளையும் உபயோகப்படுத்தினார். லூக்கா 18:9 -14 இப்படியாக ஆரம்பிக்கிறது, *"அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் இந்த உவமையை சொன்னார்"*. இங்கே அவர், தங்களையே நீதிமான்கள் என்று நம்பி மற்றவர்களை அற்பமாயென்னுகிற சில குறிப்பிட்ட ஜனங்களை குறித்து பேசுகிறார். அவர்கள் தங்களையே நீதிமான்கள் என்று நம்பிக்கொள்கின்றவர்கள். அதைப்போலவே மற்றவர்களை அற்பமாக எண்ணி அனைவரையும் தங்களுக்கு கீழானவர்களாக பார்கிறவர்கள். இப்படி செய்கின்றதை நம்பிக்கொண்டிருந்த அவர்களுக்காகவே இந்த உவமையை அவர் பேசினார். நாம் அப்படிபட்டவர்களை சுயநீதிகாரர்கள் என்று சொல்லுவோம். அதைத்தான் இயேசு பேசும் போது அவர்கள் மற்றவர்களை அற்பமாக எண்ணிக்கொண்டு நான் உன்னை விட சிறந்தவன் என்று சொல்லுகிறவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

10வது வசனத்தில், *"இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்கு போனார்கள், ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன்"*, இன்றைய மொழி நடையில் சொல்வோமானால் அவர்கள் ஜெபம் பண்ணும்படி திருச்சபைக்கு சென்றார்கள், அதிலே ஒருவன் பரிசேயனாயிருந்தான், பரிசேயன் எனப்படுபவன் மிகவும் மதரீதியானவன். அந்த வார்த்தையின் உண்மையான பதமானது "வேறுபிரிக்கப்பட்டவன்" என்பதாகும். இது ஒரு மதரீதியான ஒருவரை சொல்லுகிறது. அதாவது ஒருவிதமாக அவர்கள், "என்னை தீட்டுப்படுத்தாதீர்கள், என் பக்கத்தில் வராதீர்கள், நான் மற்றவர்களை போலானவன் அல்ல,

மற்ற அனைவரை காட்டிலும் நான் சிறந்தவன்" என்பதாக சொல்லுவார்கள். குறிப்பிடும் மற்ற மனிதன் ஒரு ஆயக்காரன். இந்த ஆயக்காரர்கள் என்பவர்கள் வரிவசூல் செய்கின்றவர்கள். அவர்கள் தீயவர்களாகவும், பாவம் செய்கின்றவர்களாகவும், ஏமாற்றுகிறவர்களாகவும், மோசடி பேர்வழிகளாகவும் அறியப்பட்டவர்கள். எந்தெந்த வழிகளிலெல்லாம் வரி வசூலிக்க முடியுமோ அப்படியெல்லாம் வரி வசூல் செய்து வந்தனர். ஏராளமான பணத்தை தங்களுடைய பைகளிலே பதுக்கி வைத்துக் கொண்டு கொஞ்சம் பணத்தை ரோம அரசாங்கத்துக்கு கணக்கு காட்டி விடுவார்கள். ஆனபடியினால் அவர்களுடைய உடன் சகாக்களே கூட அவர்களுக்கு சாதகமாக இருக்கவில்லை.

அப்படியே தொடர்ந்து, 11,12வது வசனத்தில், *"பரிசேயன் நின்று தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர், ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டு நாள் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்"*. இங்கே நீங்கள் கவனம் செலுத்தும்படி நான் விரும்புகிறேன். அவன் யாரை நோக்கி ஜெபம் பண்ணுகிறான்? அவன் "தேவனே" என்ற வார்த்தையை சொல்லி சரியான வார்த்தைகளை பயன்படுத்தியிருந்தாலும் உண்மையிலேயே அவன் தன்னிடத்திலேயே ஜெபம் பண்ணிக்கொள்கிறான். தேவன் அந்த ஜெபத்தை அங்கிகரிக்கவில்லை. ஏன் என்பதை குறித்து நாம் பிறகு பார்ப்போம். இவன் ஜெபிக்கும்முறையை கவனியுங்கள். இவன், "தேவனே, நான் மற்ற மனுஷரை போலவும், நான் இந்த ஆயக்காரனை போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என்று கூறுகிறான். இந்த பரிசேயன், இந்த மதரீதியான மனுஷன், "நான் மற்றவர்களை போல அல்ல, நான் பாவம் செய்யாதவன், நான் மிரட்டி பணம் பறிப்பவன் அல்ல, நான் அநியாயம் செய்கிறவனல்ல, விபச்சாரக்காரன் அல்ல, மேலும் இங்கே ஜெபம் பண்ணும்படி வந்திருக்கிற இந்த ஆயக்காரனை

போலவும் அல்ல" என்கிறான். சற்று கவனியுங்கள். மற்றவர்களை இவன் அற்பமாக என்னுவதுடன் மட்டமாகவும் நினைக்கிறான். ஏனென்றால், இவன் மற்றவர்களைக்காட்டிலும் தன்னை சிறந்தவனாக எண்ணிக்கொண்டிருந்தான்.

12வது வசனத்தில் *இந்த பரிசேயன், "நான் இரண்டுதரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்தில் தசமபாகம் செலுத்தி வருகிறேன்"* என்றான். அதாவது நான் என்னவெல்லாம் செய்கிறேன் என்பதை கவனியுங்கள் என்பதாக குறிப்பிடுகிறான். உபவாசம் என்று எதை குறிப்பிடுகிறான் என்று புரிகிறதா? உண்மையில் உணவு சாப்பிடாமல் பட்னியாய் இருப்பதைப் பற்றி பெருமையாய் சொல்கிறான். தேவாலயத்திற்கு பணம் கொடுக்கிறவன் என்று மார்தட்டிக் கொள்ளும் கூட்டத்தாரில் இவனும் ஒருவன்.

இப்பொழுது ஆயக்காரனை பற்றி பார்ப்போம். 13ம் வசனத்தில், *"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பில் அடித்துக்கொண்டு, தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான்."* அவனுடைய உடல் அசைவுகளை கவனித்துப்பாருங்கள். அவன் தேவாலயத்தின் உள்ளே கூட போகாமல் "தூரத்திலே நின்று கொண்டான்". அவன் மிகவும் கூனிக்குருகி தன்னுடைய வாழ்க்கையும், தான் செய்த காரியங்களையும், தன்னுடைய வாழ்க்கை நிலையைப்பற்றியும் சிந்தித்து வெட்கப்பட்டான். ஆகவே தான் அவன் தூரத்திலே நின்றான். தன் தலையை உயர்த்தி வானத்துக்கு நேராக தன் கண்களை ஏறெடுக்க துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டான். வேதாகமத்தில், குறிப்பாக பழைய ஏற்பாட்டில், மார்பில் அடித்துக் கொள்வதை பற்றி பல இடங்களில் குறிப்பிடபட்டுள்ளது. அந்த சூழ்நிலைகளில் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டதாக குறிப்பிடபட்டிருக்கும். அது, "தேவனே நான் செய்த பாவத்துக்காக மனம் வருந்துகிறேன்" என்று தெரியப்படுத்துதலாகும். அது மனந்திரும்புதலுக்கும், நொருங்குண்ட இருதயத்திற்கும், உடைந்த ஆவிக்கும் அடையாளமாயிருக்கிறது. அப்படிபட்ட ஒருவரை தேவன் புறக்கணிப்பதில்லை. ஆயக்காரனாகிய அந்த மனிதன், "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்." என்று கதறுகிறான்.

14வது வசனத்தில், *"அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டுக்கு திரும்பிப்போனான் என்று உங்களுக்கு சொல்கிறேன். ஏனெனில், தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னை*

*தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்".* ஆயக்காரன் நீதிமானாக்கப்பட்டவனாய் வீட்டுக்குப் போனான். தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கபட்டவனாகவும், தேவனோடு நிற்க தகுதியுடையவனாகவும், தேவனால் மன்னிக்கப்பட்டவனாகவும் இருந்தான். அவன் ஏன் மன்னிக்கப்பட்டான் ? அவன் தேவனோடு நிற்க தகுதி கொண்டவனாக, நீதிமானாக்கபட்டவனாக, தன் வீட்டுக்கு போனான். ஆனால், அந்த பரிசேயன் ஏன் நீதிமானாக்கப்படவில்லை? ஏனென்றால் பரிசேயன் தன்னை மேன்மைபடுத்திக்கொண்டான். நான் மற்றவர்களை காட்டிலும் சிறந்தவன்! நான் பாவமே செய்யவில்லை! நான் மற்றவர்களை போல அல்ல என்று சொல்லி தன்னைத்தானே மேன்மைபடுத்திக் கொண்டான். அதே சமயம் ஆயக்காரனோ தேவனுக்கு முன்பாக தான் பாவி என்று அறிந்திருந்தான். தேவனுக்கு கொடுக்க அவனிடம் எதுவும் இல்லை. அவனோ பாவியான மனிதன். நீதிமான்களையல்ல, பாவிகளையே இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்று வேதாகமம் சொல்லுகிறது. நாம் அனைவரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம். இந்த ஆயக்காரன் தன்னைத்தான் தாழ்த்தினான். அதனால் பாவமன்னிப்பையும், இரக்கத்தையும் பெற்றுக்கொண்டான்.

கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பை பற்றி பார்க்கிறோம். கிருபை என்பது ஒரு அற்புதமான வார்த்தை. அதை குறித்து அனைவராலும் அங்கிகரிக்கப்பட்டதான விளக்கத்தை சொல்கிறேன். கிருபையென்பதில் அதை காட்டிலும் அதிகம் இருக்கிறது. புதிய ஏற்பாடு எழுதப்பட்டுள்ளதான கிரேக்க மொழியில் கிருபை என்ற வார்த்தை "கேரிஸ்" என்பதாகும். கிருபையை பற்றிய அங்கிகரிக்கப்பட்டுள்ள விளக்கமானது என்னவென்றால்: கிருபை பெற தகுதி இல்லாதவர்களுக்கு தேவன் இலவசமாக அளிக்கும் தேவனுடைய தயவு. இங்கே இந்த ஆயக்காரன் தேவனிடம் இருந்து எதையும் பெற்றுக்கொள்ள தகுதியற்றவனாயிருந்தும் அவன் தன்னைத்தான் தாழ்த்தினபடியினால் தேவனுடைய இரக்கத்தை பெற்றான். கிருபையை குறித்த மற்றொறு கிரேக்கப்பதம் "கரிஷ்மா" என்பதாகும்.

அதாவது கேரிஸ் என்ற வார்த்தையின் இறுதியில் "மா"என்ற பதமும் சேர்ந்திருக்கும். அதன் அர்த்தம் என்னவென்றல், தேவனுடைய கிருபையின் குறிப்பிட்ட வெளிப்பாடு அல்லது வடிவம் என்பதாகும். இந்த ஆயக்காரன் நீதிமானாக்கப்படுதலையும், தேவனுக்குமுன்பாக நிற்க தகுதியையும் ஈவாக பெற்றுக்கொண்டான்.

ரோமர் 5:17ல், "*அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே*". தேவன் தமக்கு முன்பாக நீங்களும் நானும் தகுதியுள்ளவர்களாக நிற்கும் வாய்ப்பினை ஈவாக தருகிறார். நாம் எடுத்துக்கொண்ட வேத பகுதியின்படி இந்த ஆயக்காரன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக மட்டுமே கிடைக்கக்கூடியதான நீதியையும் நீதிமானாக்கப்படுதலையும் ஈவாகக் கண்டடைந்தான். *யோவான்1:17ல்,* "*நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்டது கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக உண்டாயின என்று சொல்கிறது*". தான் தேவனுக்கு முன்பாக நிற்கிறதற்கு தகுதியற்றவன் என்பதை உணர்ந்து, தன்னைத்தான் தாழ்த்தி, தேவனுடைய இரக்கத்திற்காக வேண்டிக்கொள்கிறவனுக்கு மட்டுமே அந்த கிருபை கொடுக்கப்படகூடியதாக இருக்கிறது. அப்படிபட்டவர்கள்தான் தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்றுக்கொள்கின்றனர்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. லூக்கா 18:9ஐ வாசிக்கவும். உவமை என்றால் என்ன?

**லூக்கா 18:9 - 12-** *அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்: இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.*

2. லூக்கா 18:9ஐ வாசிக்கவும். இயேசு இந்த உவமையை யாரை குறித்து கூறினார்?

3. லூக்கா 18:9ஐ (வசனத்தின் கடைசிபகுதி) சுயநீதி உடையவர்கள் எப்பொழுதும் மற்றவர்களிடம் தங்களைப்பற்றிய குணாதிசயங்களை வெளிப்படுத்துவார்கள். 18:9ன் படி அந்த குணாதிசயங்கள் யாவை?

**A**. அவர்கள் மற்றவர்களை விரும்புவார்கள்.

**B**. அவர்கள் மற்றவர்களை அற்பமாகவோ கீழானவர்களாகவோ சிந்திப்பார்கள்.

**C**. அவர்கள் மற்றவர்களை நேசிப்பார்கள்.

4. லூக்கா 18:10ஐ வாசிக்கவும். இரண்டுபேர் ஜெபிக்கும்படி போனார்கள். இன்றைய வழக்கு சொல்லின்படி அவர்கள் ஜெபிக்கும்படி எங்கு சென்றார்கள்?

5. லூக்கா 18:10ஐ வாசிக்கவும். அந்த மனிதர்கள் யார்?

6. லூக்கா 18:11ஐ வாசிக்கவும். பரிசேயனுடைய ஜெபம் என்ன?

7. லூக்கா 18:12ஐ வாசிக்கவும். உபவாசம் என்பதின் அர்த்தம் என்ன?

8. லூக்கா 18:12ஐ வாசிக்கவும். தசமபாகம் கொடுப்பதின் அர்த்தம் என்ன?

9. லூக்கா 18:13ஐ வாசிக்கவும். ஆயக்காரன் எங்கு நின்றான்,ஏன் அங்கு நின்றான்?

**லூக்கா 18:13-14** - *ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன்கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.*

10. லூக்கா 18:13ஐ வாசிக்கவும். ஆயக்காரன் ஏன் அண்ணார்ந்து பார்க்காமல் தலையை தொங்கப்போட்டுக் கொண்டான்?

11. லூக்கா 18:13ஐ வாசிக்கவும். ஆயக்காரனின் ஜெபம் என்ன?

12. லூக்கா 18:14ஐ வாசிக்கவும். இவர்களில் யார் வீட்டுக்குத் திரும்பி போனபோது நீதிமானாக்கப்பட்டவன் என்று அறிவிக்கப்பட்டான்?

13. லூக்கா 18:14ஐ வாசிக்கவும். பரிசேயனில்லாமல் ஏன் ஆயக்காரன் நீதிமானாக அறிவிக்கப்பட்டான்?

14. லூக்கா 18:14ஐ வாசிக்கவும். ஆயக்காரனை தேவன் மன்னித்தாரா?

15. ரோமர் 10:13ஐ வாசிக்கவும். நீங்கள் இப்போது தேவனுடைய சமூகத்தில் முழங்காலை முடக்கி உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து தேவனே நான் பாவி என் மேல் கிருபையாயிரும் என்று கெஞ்சினால் ஆயக்காரனுக்கு செய்தது போலவே உங்களுக்கும் செய்வாரா?

**ரோமர் 10:13** - *ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்*

**1யோவான் 1:8-9** *நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.(9) நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

# பதில் ஆதாரங்கள்

1. லூக்கா18:9ஐ வாசிக்கவும். உவமை என்றால் என்ன? ***வேதாகம உவமைகள் என்பது ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கப்பண்ணும் கதைகளாகும்.***

2. லூக்கா18:9ஐ வாசிக்கவும். இயேசு இந்த உவமையை யாருக்கு கூறினார்?

***தாங்கள் நீதிமான்கள் என்று தங்களையே எண்ணிக்கொள்ளும் சுயநீதிகாரரை குறித்து கூறினார்***

3. லூக்கா 18:9ஐ வாசிக்கவும். (வசனத்தின் கடைசிபகுதி) சுயநீதி உடையவர்கள் எப்போதும் மற்றவர்களிடம் தங்களைப்பற்றிய குணாதிசயங்களை வெளிப்படுத்துவார்கள் லூக்கா 18:9ன் படி அந்த குணாதிசயங்கள் யாவை?

***B. அவர்கள் மற்றவர்களை அற்பமாகவோ கீழானவர்களாகவோ சிந்திப்பார்கள்***

4. லூக்கா 18:10ஐ வாசிக்கவும். இரண்டுபேர் ஜெபிக்கும்படி போனார்கள் இன்றை வழக்கு சொல்லின்படி அவர்கள்ஜெபிக்கும்படி எங்கே சென்றார்கள்?

***திருச்சபைக்கு***

5. லூக்கா 18:10ஐ வாசிக்கவும். அந்த மனிதர்கள் யார்?

6. லூக்கா 18:11ஐ வாசிக்கவும். பரிசேயனுடைய ஜெபம் என்ன?

***தேவனே மற்றவர்களை போல இல்லாதபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் (நான் பாவியல்ல) நான் மோசடிக்காரன் அல்ல, அநியாயக்காரன் அல்ல,விபச்சாரக்காரன் அல்ல இந்த ஆயக்காரனை போலவும் அல்ல என்பதே அவனுடைய ஜெபமாக இருந்தது.***

7. லூக்கா 18:12ஐ வாசிக்கவும். உபவாசம் என்பதின் அர்த்தம் என்ன?
***உணவு சாப்பிடாமல் இருப்பது***

8. லூக்கா 18:12ஐ வாசிக்கவும். தசமபாகம் கொடுப்பதின் அர்த்தம் என்ன?

***ஒருவனுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை கொடுப்பது***

9. லூக்கா 18:13ஐ வாசிக்கவும். ஆயக்காரன் எங்கு நின்றான், ஏன் அங்கு நின்றான்?

***தூரத்தில் நின்றான். தேவாலயத்திற்குள் போவதற்கு அவன் வெட்கப்பட்டான். காரணம் அந்த அளவு மோசமான பாவியாக இருந்தபடியால் தேவாலயத்தின் வெளியே நின்றான்.***

10. லூக்கா 18:13ஐ வாசிக்கவும். ஆயக்காரன் ஏன் அண்ணாந்து பார்க்காமல் தலையை தொங்கப் போட்டுக் கொண்டான்?

***நீங்கள் யாருக்காவது தவறு செய்துவிட்டால் அவர்களை முகத்துக்கு நேராக சந்திக்க முடியாதல்லவா? அது போலத்தான் அவன் தேவ சமூகத்தை பார்க்க வெட்கப்பட்டான்.***

11. லூக்கா 18:13ஐ வாசிக்கவும். ஆயக்காரனின் ஜெபம் என்ன?
***பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்.***

12. லூக்கா 18:14ஐ வாசிக்கவும். இவர்களில் யார், வீட்டுக்குப் போன போது நீதிமானாக்கப்பட்டவன் என்று அறிவிக்கப்பட்டான்?

***ஆயக்காரன்.***

13. லூக்கா 18:14ஐ வாசிக்கவும். பரிசேயனில்லாமல் ஏன் ஆயக்காரன் மட்டும் நீதிமானாக அறிவிக்கப்பட்டான்?

***ஆயக்காரன் தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்தினான். பரிசேயனோ பெருமையோடிருந்தான், தனக்கு இரட்சகர் தேவை என்று அவன் யோசிக்கவேயில்லை***

14. லூக்கா 18:14ஐ வாசிக்கவும். ஆயக்காரனை தேவன் மன்னித்தாரா?

***ஆம். மன்னித்தார்.***

15. ரோமர் 10:13ஐ வாசிக்கவும். நீங்கள் இப்போது தேவனுடைய சமூகத்தில் முழங்காலை முடக்கி உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து தேவனே நான் பாவி என் மேல் கிருபையாயிரும் என்று கெஞ்சினால் ஆயக்காரனுக்கு செய்தது போலவே உங்களுக்கும் செய்வாரா?

***ஆம் நிச்சயம் மன்னிப்பார். அவர் என்னை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிப்பார். 1யோவான் 1:8-9 பார்க்கவும்.***

பாடம் 3

# கிருபையினால் நீதி

டான் க்ரோ

இன்றையதினம் நாம் கிருபையினால் உண்டாகும் நீதியை பற்றிய காரியங்களை பார்க்கப் போகிறோம். ரோமர்3:21-23ல்,*"இப்படியிருக்க பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால் எந்த மனுஷனும் நியாயபிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க நியாயப்பரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. அதைகுறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைபற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே, விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும் வித்தியாசமே(வேறுபாடு)இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து (வீழ்ச்சி)தேவமகிமையற்றவர்களாகி"*, (குறியீட்டிற்குள் உள்ளது நான் சொன்னது) என்று சொல்கிறது.

இந்த வசனம் சொல்லுகிறதை கவனியுங்கள். *"இப்படியிருக்க நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது".* நான் ஒரு சமயம் ஒரு மனிதனிடம் பரலோகம் செல்வதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் பத்து கற்பனைகளை கடைபிடிக்கவேண்டும் என்றும், தன் மனைவிக்கு உண்மையாக இருக்கவேண்டும் என்றும், ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழவேண்டும் என்றும், கூறினார். அப்போது அவரிடம் பரலோகத்தில் தேவனுடைய சமூகத்திற்கு அல்லது தேவனுடைய இராஜ்ஜியம் போவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று

உங்களுக்கு தெரியுமா? உங்களுடைய நீதியானது தேவனுடைய நீதிக்கு ஒத்திருக்கவேண்டும் என்றேன்? அதற்கு அவர், என்ன! மறுபடியும் சொல்லுங்கள் என்றார். தேவனுக்கு சமமான நீதியை உடைய மனிதன் எவருமே இல்லை. ஒரே ஒருவர்தான் அந்த நீதியை உடையவராக இருக்கிறார். அவர்தான் இயேசு கிறிஸ்து என்றார். அப்போது நான், நீங்கள் சொன்னது மிகவும் சரியானது, உட்புறமோ வெளிப்புறமோ நாம் யாருமே நமது தனிப்பட்டமுறையில் கற்பனைகளை சரியாக கடைபிடித்தது இல்லை, ஆனாலும் தேவனுக்கு முன்பாக நாம் கிட்டிச்சேரும்படிக்கு, அவரது நீதிக்கு ஒத்திருக்கின்ற நீதியானது நமக்கு அத்தியாவசியமாயிருக்கிறது.

அதைத்தான் 21ம், 22ம் வசனங்கள் மிகவும் சரியாக நமக்கு சொல்கிறது. *"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.22. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை".* உங்களுக்கும் எனக்கும் தேவன் தரக்கூடியதான நீதியென்பது, "இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக" நமக்கு உண்டாகிறது. மேலும் அவரை விசுவாசிக்கின்ற அனைவருக்கும் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு விதமான நீதிகள் இருக்கிறது, ஒன்று மனுஷனுடைய நீதியாகும், மற்றொன்று தேவனுடைய நீதி என்பதாகும். மனிதனுடைய நீதியென்பது, ஒரு மனிதனுடைய சிறந்த நடவடிக்கைகளும், சிறந்த செயல்களுமாகும். ஆனால் அது அவர்களை தேவனுக்கு முன்பாக உகந்தவர்களாக ஆக்கமாட்டாது. தேவனுடைய நீதிக்கு சமமான நீதி இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். தேவனே அதை உங்களுக்கு கொடுக்கிறார். தேவனுடைய நீதியென்பது நியாயப்பிரமணங்களுக்கு அப்பாற்பட்டதாகும். அது நியாயப்பிரமாணம் இல்லாமல் வெளியாக்கப்பட்ட தேவனுடைய நீதியே.

அதைப்பற்றி கிரேக்கப் பதத்தில் உறுதியான குறிப்புகள் எதுவும் இல்லை. அப்படியிருப்பதினால் நியாயப்பிரமாணத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் தேவன் தமது நீதியையே நமக்கு கொடுக்கிறார் என்பது

தான் அதன் அர்த்தமாகிறது. நியாயப்பிரமாணத்தின்படியான நீதியென்பது கிரியைகளினால் சம்பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. அப்போதுதான் தேவனுக்கு முன்பு அங்கீகரிப்பு உண்டாகும் என்று எண்ணப்படுகிறது. அனைத்து உலக மதங்களும் தேவனுடைய அங்கீகரிப்பை தம்முடைய கிரியைகளினால் சம்பாதித்து, சாதித்துதான் நாம் அதை பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகின்றது. சுவிசேஷம் என்ற வார்த்தையின் அர்த்தம் "நற்செய்தி" என்பதாகும். சுவிசேஷத்தின் அந்த நற்செய்தி என்னவென்றால் தேவன் தமது சொந்த நீதியைக் கொடுக்க விரும்புகிறார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்ததையும் அதன் மூலமாக நியாயப்பிரமாணத்திற்கு ஈடான நீதி நமக்கு வைக்கப்பட்டிருக்கிறதையும் விசுவாசிக்கிற எல்லோருக்கும் அவர் தம்முடைய சொந்த நீதியை கொடுக்கிறார். இது நியாயப்பிரமாணம் இல்லாமல் உண்டாகும் தேவனுடைய நீதி. இது நம்முடைய கிரியைகளினாலோ, சம்பாதிப்பதினாலோ, சாதித்துகாட்டுவதினாலோ இல்லாமல் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக வருகிறது.

22வது வசனத்தை கவனியுங்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் வரும் தேவநீதியானது, விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் என்று சொல்லப்பட்டுள்ளது. *தேவ நீதியானது விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும்.* ஏன் தேவன் தம்முடைய நீதியை அனைவருக்கும் கொடுக்கிறார்? "(வித்தியாசமே இல்லை) நாம், *எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி*", (குறியீட்டிற்குள் உள்ளது நான் சொன்னது). நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள், நான் செய்திருக்கிறேன். நாம் அனைவரும் தேவனுடைய தரத்தின் அளவிற்கும் பூரணத்திற்கு புறம்பானவர்களானோம். நம்முடைய பாவத்தின் காரணத்தினால் நமக்கு தேவையான பெரிய காரியம் எதுவென்றால் தேவனுடைய அங்கீகரிப்பும், சரியான உறவும், நீதிமானாகும் நிலையுமே. மேலும் இது நியாயப்பிரமாண கிரியைகளினால் நமக்கு உண்டாகாமல் இயேசு கிறிஸ்துவின்மேல் நாம் வைக்கும் விசுவாசத்தினால் தேவனால் நமக்கு

அருளப்பட்டதாக இருக்கிறது. தேவனுடைய நீதியானது உங்களுடைய எந்தவிதமான கிரியைகளினாலும் கொடுக்கப்பட்டதல்ல. உங்கள் முயற்சி, பிரயாசங்கள், சம்பாத்தியங்களினால் உண்டாகாது. அது இயேசுகிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தினால், அவரை சார்ந்து கொள்ளும் நம்பகதன்மையினாலும் உண்டாகிறது.

ஆபிரகாம்(யூத முற்பிதா)எவ்வாறு இரட்சிக்கப்பட்டதாக வேதம் சொல்கிறது. அவன் தேவனை விசுவாசித்தான். தேவன் அவனுக்கு கொடுத்த வாக்குத்தங்களை விசுவாசித்தான். ஆனபடியினாலே தேவ நீதியானது அவனுடைய கணக்கில் கொண்டு வரப்பட்டது. ஆபிரகாம் தனது விசுவாசத்தினாலே தேவனுக்கு முன் நீதிமானாக அறியப்பட்டான் என்னும் காரியம் அவனுக்கு மட்டுமானதல்ல. ஒரு மனிதன் இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதின் மூலம் அவன் நீதிமான் என்று அறிவிக்கப்பட்டார் என்று ரோமர் 3:21-22ல் வாசிக்கிறோம். நம்முடைய பாவங்களுக்காக தமது இரத்தத்தை சிந்தி கிரயத்தை செலுத்தி முடித்தபடியால், கிறிஸ்துவை விசுவாசிக்கிற எந்த ஒரு மனிதனும் தனது வாழ்வில் நீதியுள்ளவர்களாக (நீதிமானாக) ஆனதாக கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது என்று வேதம் சொல்லுகிறது.

ரோமர் 5:17ல், "*அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே*" என்று சொல்லுகிறது. தேவன் உங்களுக்கு நீதியையும் தேவனுக்கு முன்பு நீதிமானாக நிற்கும் சிலாக்கியத்தையும் தானமாக கொடுத்திருக்கிறார். தானமாக கொடுக்கப்பட்ட அது கிரயம் கொடுத்துதான் வாங்கப்பட்டது. ஆயினும் அதை பெற்றுக்கொள்பவர் கிரயம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் எனக்கு பரிசாக ஒரு பொருளை கொடுத்துவிட்டு அதன் பின்பு என்னை அதற்கான கிரயத்தை செலுத்தும்படி கூறினால் அது பரிசாக இருக்க முடியாது. இருப்பினும் அந்த பரிசுக்கான

கிரயத்தை நீங்கள் செலுத்தியிருக்கிறீர்கள். உங்களுக்கும் எனக்கும் தேவன் நீதியை ஈவாக கிடைக்கப்பண்ணியிருக்கிறார். ஆயினும் இந்த பரிசாகிய நீதியையும், விடுதலையையும், தேவனுக்கு முன்பு சரியான நிலையில் நிற்கும் சிலாக்கியத்தையும் இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே வருகிறது.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. தீத்து 3:5ஐ வாசிக்கவும். நமக்கு தேவையான நீதியை நாமே உருவாக்கிக் கொள்ள முடியுமா?

**தீத்து 3:5** - *நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*

2. 2கொரிந்தியர் 5:21ஐ வாசிக்கவும். எந்தவிதமான நீதி நமக்கு தேவையாய் இருக்கிறது?

**2கொரிந்தியர் 5:21** -*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

3. ரோமர் 3:22ஐ வாசிக்கவும். நாம் எப்படி அந்த நிதியை பெற்றுக்கொள்ள முடியும்?

**ரோமர் 3:22** -*அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமேஇல்லை.*

4. பிலிப்பியர் 3:9ஐ வாசிக்கவும் . பிரமாணத்தினால் உண்டாகும் நீதி என்பது என்ன?

**பிலிப்பியர் 3:9** -*நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,*

5. கலாத்தியர் 2:21ஐ வாசிக்கவும். தேவனுடையக கிருபையை நாம் எப்படி விருதாவாக்க முடியும்?

**கலாத்தியர் 2:21-** *நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்கு கிறதில்லை;நீதியான நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.*

6. ரோமர்5:17ஐ வாசிக்கவும். தேவனுடைய நீதியானது எப்படி பெற்றுக்கொள்ளப்படுகிறது?

**ரோமர் 5:17 -** *அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.*

# பதில் ஆதாரங்கள்

1. தீத்து 3:5ஐ வாசிக்கவும். நமக்கு தேவையான நீதியை நாமே உருவாக்கிக் கொள்ள முடியுமா?

**இல்லை முடியாது.**

2. 2கொரிந்தியர் 5:21ஐ வாசிக்கவும். எந்தவிதமான நீதி நமக்கு தேவையாய் இருக்கிறது?

**தேவனுடைய நீதி (அது இயேசுகிறிஸ்து முலம் உண்டாகிறது)**

3. ரோமர் 3:22ஐ வாசிக்கவும். நாம் எப்படி அந்த நிதியை பெற்றுக்கொள்ள முடியும்?

**இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக.**

4. பிலிப்பியர் 3:9ஐ வாசிக்கவும். பிரமாணத்தினால் உண்டாகும் நீதி என்பது என்ன?

**அது என்னுடைய நீதியாக இருக்கிறது. என்னுடைய பிராயசங்களால் நான் உண்டு பண்ணிக் கொண்டதாகும்.**

5. கலாத்தியர்2:21ஐ வாசிக்கவும். தேவனுடையக கிருபையை நாம் எப்படி விருதாவாக்க முடியும்?

**கிறிஸ்துவையும் நமது இரட்சிப்பிற்காக அவர் மரித்ததையும் நாம் விசுவாசிக்காமல் தேவனுடைய கிருபையை விருதாவாக்கினோம் நம்முடைய சொந்த கிரியைகளை நம்பி இரட்சிக்கப்பட முடியும் என்று எண்ணினோம்.**

6. ரோமர்5:17ஐ வாசிக்கவும். தேவனுடைய நீதியானது எப்படி பெற்றுக்கொள்ளப்படுகிறது?

**ஈவாக பெறுகிறோம்.**

பாடம் 4

# தேவனோடுள்ள உறவு

ஆண்ட்ரு வோமக்

உறவுகளை பொருத்தவரை மிகவும் முக்கியமான ஒன்று என்னவெனில், நாம் உறவு ஏற்படுத்திக்கொள்ளப்போகும் நபரைக் குறித்து சரியாக புரிந்துகொள்ள வேண்டும் என்பது தான். இந்த காரியம் தேவனோடுள்ள உறவுக்கும் பொருந்தக்கூடியது. தேவனோடு ஆரோக்கியமான உறவினை வளர்த்துக் கொள்வதற்கு நீங்கள் தேவனுடைய அடிப்படை சுபாவத்தையும் குணாதிசயங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். அவருடைய அடிப்படை சுபாவத்தையும் குணாதிசயங்களையும் தவறாக புரிந்துகொண்டபடியினால்தான் அநேகர் தேவனோடு சாத்தியமான உறவுகளை வளர்த்துக்கொள்ள முடியாமல் போகிறார்கள். ஏதேன் தோட்டத்தில் சர்பத்தினால் ஆதாம் ஏவாள் சோதிக்கப்பட்டபோது மிகச் சரியாக இது தான் நடந்தது. அவர்கள் சோதிக்கப்பட்டார்கள். மொத்தத்தில் தேவனுக்கு கீழ்படியாமல் போனார்கள். ஒட்டு மொத்த மனித சமுதாயத்தையும் பாவத்திற்குள்ளாக்கி விட்டார்கள். உண்மையில், அவர்கள் தேவனையும் அவருடைய சுபாவத்தையும் சரியாக புரிந்துகொள்ளாததினால்தான் சோதனைக்குட்பட்டு போனார்கள்.

ஆதியாகமம் 3:1-5 சம்பவம் அநேகருக்கு பிரபலமான வேதப்பகுதியாகும்: *“தேவனாகிய கர்த்தர் உண்டாக்கிய சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. ஸ்திரீயை நோக்கி நீங்கள் தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனிகளையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.ஸ்திரீ சர்பத்தை பார்த்து நாங்கள் தோட்டத்தில் உள்ள விருட்சங்களின் கனியைப் புசிக்கலாம் ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியை குறித்து தேவன் நீங்கள் சாகாத படிக்கு ருசிக்கவும் அதை தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.அப்போது சர்பம் ஸ்திரீயை நோக்கி நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள்திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களை(தேவன்) போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது”.* (குறியீட்டிற்குள் உள்ளது நான் சொன்னது)

தேவன் உண்மையில் நல்லவர் அல்ல என்பது போன்ற வஞ்சகமான வார்த்தைகளை பிசாசு கூறினான். ஏதோ தேவன் சிலவற்றை ஆதாம் ஏவாளுக்கு கொடுக்காமல் பிடித்து வைத்திருப்பதுபோலவும், ஏதோ அவர்கள் பூரணவளர்ச்சி அடைவதை தேவன் விரும்பாதவர்போலவும், ஏதோ அவர் தம்மைப்போல அவர்கள் ஆகக்கூடாதென்று நினைப்பவர்போலவும், ஏதோ அவர்களை தடுப்பதற்காகவும் அல்லது அவர்களை காயப்படுத்துவதற்காகவும்தான் தேவன் நன்மை தீமை அறியக்கூடிய மரத்தின் கனியை அவர்கள் புசிக்கக்கூடாதென்று கட்டளையிட்டார் என்பதுபோலவும் சாத்தானுடைய வஞ்சகமானகூற்று இருந்தது. ஒரு விதத்தில், சாத்தான் தேவனுடைய சுபாவம் மற்றும் குணாதிசயங்களுக்கு எதிராக வந்து, தேவன் அவர்களுக்கு நல்லவைகளை கொடுக்கும்படி விரும்பவில்லை என்ற போலி வார்த்தைகளை கூறினான். இன்றும்கூட மக்கள் வாழ்க்கையில் அதேவிதமான காரியம்தான் சம்பவித்துக் கொண்டிருக்கிறது. அவர்களிடம் சாத்தான், “நீங்கள் தேவனைப்பின்பற்றி அவருடைய வார்த்தைக்கு முரணாக காரியங்களை நீங்கள் அனுபவிக்காவிட்டால், நீங்கள் ஒருபோதும் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்கமுடியாது, வாழ்க்கை மிகவும் வெறுப்பாகவும் செத்ததாகவும் இருக்கும்” என்று கூறினார். வருந்தத்தக்க உண்மை என்னவென்றால் போதை மருந்துகள், மது, விபச்சாரம், முரட்டாட்டம், சுய இச்சை, வேலையில் வெற்றி இப்படிப்பட்ட பல விதமான காரியங்களில் மக்கள் மகிழ்ச்சி தேடுகிறார்கள். முயற்சி செய்தபின் அவைகள் திருப்தியளிக்கவில்லை என உணர்ந்துக்கொள்கிறார்கள். அவைகள் திருப்தியை தரவில்லை என்று உணரும் தருணம் வரும்முன்னே தங்கள் வாழ்வையும், தங்கள் சுகத்தையும், தங்கள் குடும்பத்தையும் சிதைத்திருப்பதை உணருவார்கள்.

உண்மை என்னவென்றால் தேவன் நல்ல தேவனாக இருக்கிறார். அவருடைய சித்தம் நல்லதாக இருக்கிறது. சாத்தான் ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்கு எதிராக பயன்படுத்திய அதே விதமான சோதனைகளை இன்றைக்கும் நம்மிடம் பயன்படுத்துகிறான். தேவன் நல்லவர் அல்ல என்று சுட்டிகாட்டும்படி சாத்தான் அப்படி செய்தான். வேதாகமம் குறித்த குறைந்த அறிவுள்ளவர்கள் அவ்விதமான

அபிப்பிராயத்தை அடைவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் வேதாகமத்தில் அவர் மக்களை கடினமாகவும் கொடுமையான வழிமுறையினாலும் நடத்திய சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எண்ணாகமம் 15: 32-36 வரை உள்ள வசனங்கள் யாவும் ஓய்வுநாளில் விறகு பொறுக்கிய மனிதன், ஓய்வுநாளை ஆசரியாமல் போன குற்றத்திற்காக கல்லெறிந்து கொல்லப்பட்டதை குறித்து எழுதப்பட்டுள்ளது. அது மிகவும் கடுமையானதாக தோன்றலாம். ஆனால் அவ்விதமான தண்டனைகளுக்கு பின்பாக தேவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது. இருப்பினும் வேதத்தை மேலோட்டமாக வாசிப்பவர்களுக்கு அது புலப்படாது. வேதத்தை கருத்தோடு ஆராய்ந்தால் ரோமர் 7:13ல் பவுல் சொல்லுவது போல பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதே ஜனங்கள் செய்த பாவத்தை மிகுந்த பாவமாக வலுபெறுவதற்கே என்பது புலப்படும். ஜனங்கள் தங்களுடைய மீறுதல்கள் எந்த அளவு மரணத்திற்கு ஏதுவானது என்பதையும், அது தேவனுக்கு எதிரான குற்றம் என்பதையும் உணராமல் இருந்தார்கள். ஆதலால்தான் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்துக்கொண்டும், தங்களுடைய செயல்களை மற்றவர்களுடைய செயல்களுடன் அளந்து பார்த்துக்கொண்டதுமான தவற்றை செய்தனர்.

ஒரு வேளை ஒருவன் பாவம் செய்து மரணமடையாவிட்டால் அந்த பாவம் ஒன்றும் அத்தனை மோசமானது அல்ல என்றெண்ணி ஜனங்கள் தங்களுடைய வாழும் தரத்தை குறைத்துக்கொண்டார்கள். எது சரி எது தவறு என்று புரிந்து கொள்ளும் அந்த உண்மையான கண்ணோட்டத்தை அவர்கள் இழந்து போனார்கள். தேவன் எது சரியான ஜீவியம் என்கிற உண்மையான தரத்திற்கு நேராக மனுகுலத்தை மீண்டும் திருப்பிக்கொண்டுவர வேண்டியயததாயிருந்தது. அப்போது தான் சாத்தானையும் அவனுடைய சோதனைகளையும் அவர்கள் புறக்கணிக்க இயலும். மேலும் தவறான முடிவுகளின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று புரிந்து கொள்ள முடியும். அந்த சூழலில் தான் தேவன் பிரமாணத்தை கொடுத்து அதை நடைமுறைக்கு கொண்டு வந்தார். இதை அவர் செய்ய முனைந்தபோது தான்கொடுத்த நியாயபிரமாணத்தை அவர் செயல்படுத்த வேண்டியதாயிருந்து.

தேவன் பழைய ஏற்பாட்டு பிரமாணங்களை, “இவைகள் அனைத்தையும் நீங்கள் செய்யும் வரையிலும் நான் உங்களை நேசிக்க முடியாது அல்லது ஏற்றுக்கொள்ள முடியாது”என்ற நோக்கத்தில் கொடுக்கவில்லை. அது அவருடைய சுபாவமோ குணாதிசயமோ அல்ல.

மாறாக அவர்கள் எது சரி தவறு என்று புரிந்து கொள்ளும் கூர்மையான அறிவை அடையும்படி செய்து நமக்கு ஒரு இரட்சகர் தேவை என்கிற நிலைக்கு அவர்களை கொண்டுவருவதற்கே தேவன் பிரமாணத்தை கொடுத்தார். தேவன் தங்களை நேசிப்பதற்கு முன்பாகவே எல்லாவற்றிலும் அவர்கள் மிக சரியானவர்களாக இருக்க வேண்டும் என தேவன் கேட்பதாக ஜனங்கள் நினைத்துக்கொண்டிருப்பதுதான் பிரச்சனை. தங்களின் கிரியைகளின்படிதான் தேவனுடைய அன்பு நம்மேல் இருக்கும் என்று அநேகர் கொண்டுள்ள மனப்பான்மைக்கு இது வழி நடத்துகிறது. எல்லாவற்றையும் மிகச்சரியாக செய்துமுடிக்க முயற்சி செய்யாத பட்சத்தில் தேவன் அவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று எண்ணுகின்றனர். ஆனால் இது வேதாகமத்தின் செய்தி அல்ல.

தேவனுடைய இருதயமானது மனுக்குலத்தை அவரோடு ஒப்புரவாக்க வேண்டும் என்றே இருக்கிறது. அவர்களை நியாயம் தீர்க்கவோ, அவர்களது பாவங்களை கணக்கெடுப்பு செய்யவோ, அவர்களது பாவங்களை அவர்களுக்கு எதிராக குற்றம்சாட்ட வைத்துக் கொள்ளவோ தேவன் விரும்பவில்லை. தேவனுக்கு அப்படிபட்ட நல்ல இருதயம்தான் வேதாகமத்தில் உள்ள அவருடைய ஜனங்களின்மேலும் இருந்தது, இன்று உங்கள் மேலும் இருக்கிறது. "*தேவன் அன்பாக இருக்கிறார்*"(1யோவான் 4:8), என்கிற அவருடைய உண்மையான இருதயத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அவர் உங்களுடைய பாவங்களையும், உங்களையும் அவரையும் பிரிக்கக்கூடிய எதையும் தூக்கியெறிய விரும்புகிறார். அதை அவர் இயேசு கிறிஸ்து மூலமாக ஏற்கனவே நிறைவேற்றியிருக்கிறார். இன்று அவருடனான உறவை உங்களுக்கு கொடுக்கிறார். ஆனால் உங்களுடைய கிரியைகளின் அடிப்படையிலில்லாமல், இயேசு உங்களுடைய பாவங்களை சுமந்தார் என்று நீங்கள் விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளும்போது அது உண்டாயிருக்கிறது. உங்களது வாழ்வின் தோல்விகள் எத்தனை மோசமானவைகளாக இருந்தாலும் தேவனோடு உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். நீங்கள் இயேசுகிறிஸ்துவின் மேல் உங்களுடைய விசுவாசத்தை வைக்க வேண்டும் என்பதை மட்டுமே தேவன் எதிர்பார்க்கிறார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. ஆதியாகமம் 3:1ஐ வாசிக்கவும். சாத்தான் ஏவாளிடம் என்ன கேள்வி கேட்டான?

**ஆதியாகமம் 3:1 -** *தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.*

2. ஆதியாகமம் 2:17 மற்றும் 3:3ஐ வாசிக்கவும். தேவன் ஆதாமோடு சொல்லியிருந்த வார்த்தைகளோடு எந்தெந்த வார்த்தைகளை ஏவாள் கூட்டிச் சொன்னான்?

**ஆதியாகமம் 2:17-** *ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*

**ஆதியாகமம் 3:3 -** *ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.*

3. ஆதியாகமம் 3:6ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின் படி ஒருவிசை தேவனுடைய வார்த்தையை குறித்த சந்தேகத்தை ஏவாளுடைய இருதயத்தில் உட்புகுத்தியபின்பு அவள் என்ன செய்தாள்?

**ஆதியாகமம் 3:6** *அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.*

4. ஆதியாகமம் 3:9-10ஐ வாசிக்கவும். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபின்பு தேவன் அவர்களோடு தொடர்ந்து தொடர்பு கொண்டு உறவு வைத்திருந்தாரா?

**ஆதியாகமம் 3:9-10** - *அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். (10) அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.*

5. ஆதியாகமம் 3:22-24ஐ வாசிக்கவும். தேவன் ஆதாம் ஏவாளை ஏன் ஏதேன் தோட்த்தில் இருந்து அனுப்பிவிட்டார்?

**ஆதியாகமம் 3:22-24** *பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, (23)அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.(24)அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக்காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.*

6. தண்டனைக்கு பதிலாக அது தேவனுடைய இரக்கதின் செயல் என உங்களால் பார்க்க முடிகிறதா?

7. ரோமர் 5:17ஐ வாசிக்கவும். தேவனுடைய பரிபூரண கிருபையையும், நீதியின் ஈவையும் நாம் எப்படி அடையமுடியும்?

A. விலைக்கொடுத்து வாங்க வேண்டும்
B. சம்பாதிக்க வேண்டும்
C.பெற்றுக்கொள்ளவேண்டும்

8. ரோமர் 6:23ஐ வாசிக்கவும். நாம் பாவம் செய்தால் நமக்கு என்ன கிடைக்கிறது?

**ரோமர் 6:23** *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.*

9.அதற்கு பதிலாக கிருபையினால் தேவன் நமக்கு என்ன தருகிறார்?

10.ரோமர் 10:3ஐ வாசிக்கவும். நாம் நம்முடைய சுயநீதியை தேவனுக்கு முன்பாக நிலைநிறுத்த விரும்பினால் நாம் எதை செய்யத் தவறுகிறோம்?

**ரோமர் 10:3** *எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.*

11. 1யோவான் 1:9 மற்றும் ரோமர்4:3ஐ வாசிக்கவும். அவருக்கெதிரான நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள் அனைத்தையும தேவன் என்ன பண்ணுவதாக வாக்குத்தத்தம் பண்ணினார்?

**1யோவான் 1:9** *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

**ரோமர் 4:3** *வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது.*

12. இவைகள் தேவனுடைய குணாதிசயங்களை பற்றி உங்களுக்கு என்ன வெளிப்படுத்துகிறது?

# பதில் ஆதாரங்கள்

1. ஆதியாகமம் 3:1ஐ வாசிக்கவும். சாத்தான் ஏவாளிடம் என்ன கேள்வி கேட்டான?

***நீங்கள் தோட்டத்தில் உள்ள சகல கனிகளையும் புசிக்க வேண்டாம் என்று சொன்னதுன்டோ என்றது.***

2. ஆதியாகமம் 2:17 மற்றும் 3:3ஐ வாசிக்கவும். தேவன் ஆதாமோடு சொல்லியிருந்த வார்த்தைகளோடு எந்தெந்த வார்த்தைகளை ஏவாள் கூட்டிச் சொன்னான்?

***அதை தொடவும் வேண்டாம் என்று கூட்டிச் சொன்னாள்.***

3.ஆதியாகமம் 3:6ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின் படி ஒருவிசை தேவனுடைய வார்த்தையை குறித்த சந்தேகத்தை ஏவாளுடைய இருதயத்தில் உட்புகுத்தியபின்பு அவர் என்ன செய்தாள்?

***கனியை பறித்து புசித்தாள்***

4. ஆதியாகமம் 3:9-10ஐ வாசிக்கவும். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபின்பு தேவன் அவர்களோடு தொடர்ந்து தொடர்பு கொண்டு உறவு வைத்திருந்தாரா?

***ஆம்.***

5. ஆதியாகமம் 3:22-24 தேவன் ஆதாம் ஏவாளை ஏன் ஏதேன் தோட்த்தில் இருந்து அனுப்பிவிட்டார்?

***ஜீவ விருட்சத்தின் கனியை புசித்து என்றென்றும் பாவநிலையிலே இருந்துவிடாதபடிக்கு அப்படி செய்தார்.***

6. தண்டனைக்கு பதிலாக அது தேவனுடைய இரக்கத்திளன் செயல் என்று உங்களால் பார்க்க முடிகிறதா?

***ஆம்.***

7. ரோமர் 5:17ஐ வாசிக்கவும். தேவனுடைய பரிபூரண கிருபையையும், நீதியின் ஈவையும் நாம் எப்படி அடைய முடியும்?

***பெற்றுக் கொள்ள வேண்டும்.***

8. ரோமர் 6:23ஐ வாசிக்கவும். நாம் பாவம் செய்தால் நமக்கு என்ன கிடைக்கிறது?

***மரணம்.***

9. அதற்கு பதிலாக கிருபையினால் தேவன் நமக்கு என்ன தருகிறார்?

***இயேசுவில் நித்தியஜீவன்.***

10. ரோமர் 10:3ஐ வாசிக்கவும். நாம் நம்முடைய சுயநீதியை தேவனுக்கு முன்பாக நிலைநிறுத்த விரும்பினால் நாம் எதை செய்யத் தவறுகிறோம்?

***நம்முடைய நீதியாக இயேசுவிற்கு நம்மை ஒப்புக்கொடுக்க தவறுகிறோம்.***

11. யோவான் 1:9 மற்றும் ரோமர்4:3ஐ வாசிக்கவும். அவருக்கெதிரான நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள் அனைத்தையும், தேவன் என்ன பண்ணுவதாக வாக்குத்தத்தம் பண்ணினார்?

***அகற்றுகிறார், மறந்துவிடுகிறார், மன்னிக்கிறார்.***

12. இவைகள் தேவனுடைய குணாதிசயங்களை பற்றி உங்களுக்கு என்ன வெளிப்படுத்துகிறது?

***அவர் இரக்கமும் அன்பும் நிறைந்தவர்.***

பாடம் 5

# தேவனுடைய சுபாவம்

## ஆண்ட்ரூ வோமக்

தேவனோடு இனிய உறவு வளர்த்துக் கொள்வதற்கு நாம் அவருடைய உண்மையான சுபாவத்தையும் குணாதிசயங்களையும் அறிந்திருக்க வேண்டும். நம்முடைய பாவங்களின் நிமித்தம் அவர் கோபம் கொண்டிருக்கிறாரா? அல்லது நம்முடைய கிரியைகளுக்கு அப்பாற்பட்டு நமக்கு அவருடைய ஜீவனையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் தரவிரும்புகிற இரக்கமுள்ள தேவனாய் இருக்கிறாரா? சரியாகச் சொல்லப்போனால் வேதவாக்கியங்கள் தேவனைப்பற்றி இரண்டு விதமான கண்ணோட்டங்களை நமக்கு தருகிறது. அதனால் அவர் மாறிவிட்டார் என்றோ அல்லது வித்தியாசமாக எதையோ செய்துவிடார் என்றோ அர்த்தமில்லை. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், தேவன் “மனிதர்களின் பாவங்களை அவர்களுக்கு எதிராக நிறுத்தி வைத்திருந்தார்” என்ற பதம் வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இதை குழந்தைகள் வளர்ப்பிற்கு ஒப்பிடலாம். அவர்கள் மிகவும் சிறுவர்களாக இருக்கும்போது, ஏன் அவர்கள் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும், ஏன் சுயநலம் அற்றவர்களாக இருக்க வேண்டும், ஏன் தன் உடன்பிறப்புகளிடமிருந்து பொம்மைகளை பிடுங்க கூடாது என்றெல்லாம் அவர்களுக்கு சொல்லி புரியவைப்பது கூடாதகாரியம். விதிகளைப் பற்றி கற்றுக் கொடுத்து அவைகளை மீறும் சமயங்களில் அவர்களை சரிபடுத்துவது மிகவும் அவசியமாக இருக்கிறது. தேவனையும், சாத்தானையும் பற்றி அவர்கள் அறியாமல் இருந்தாலும் கூட ஒழுங்கு விதிகளை அமல்படுத்த வேண்டியது அவசியமாகும். அப்படி செயல்படவில்லையென்றால் அவர்கள் சுயநலம் மிக்கவர்களாக மாறும்பொழுது பிசாசுக்கு இடம் கொடுத்துவிட நேரிடும். விதிமுறைகளின் கோட்பாடுகளை அவர்கள் புரிந்துக்கொள்ளமுடியாமலிருக்கலாம். ஆனால் திரும்பவும் விதிமுறைகளை மீறினால் தண்டிக்கப்படுவோம் என்பதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியும்.

ஒரு விதத்தில் இதைத்தான் தேவன் பழைய ஏற்பாட்டில் செய்திருக்கிறார். புது உடன்படிக்கையின் கீழ் இருக்கும் நமக்கு உள்ள ஆவிக்குரிய கண்ணோட்டம், மறுபடியும் பிறப்பதற்கு முன்பான ஜனங்களுக்கு இல்லை. ஆகையால் அவர்களுக்கு அவர் பிரமாணங்களை கொடுக்கவேண்டியதாயிருந்தது. அவர்கள் பாவத்தை விட்டு விலகியிருக்கும்படி அந்த பிரமாணங்களை அவர் தண்டனையோடு அமல்படுத்த வேண்டியதாயிருந்தது. சிலநேரம் தண்டனை மரணமாகவும் இருந்தது. சாத்தான் பாவத்தின் மூலமாக ஜனங்களை அழித்துக்கொண்டிருப்பதினால், பாவத்தின்மீது கட்டுப்பாடுகள் கொண்டுவரவேண்டியதாயிருந்தது, பிரமாணத்தை அமல்படுத்த வேண்டியதாயிருந்தது. இந்த காரியங்கள், நம்முடைய பாவங்களினால் தேவன் உண்மையில் நம்மை நேசிக்கவில்லையென்கிற தவறான அபிப்ராயத்தை உண்டுபண்ணினாலும், தேவனுடைய வார்த்தை அப்படி போதிக்கவில்லை. ரோமர் 5:13ல் “நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது, நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது” என்று சொல்லப்படுகிறது. “நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்குமுன்” என்றால் தேவன் பத்து கற்பனைகளும், யூத தேசத்திற்கான சடங்காச்சார கட்டளைகளும் கொடுத்த நாட்களான மோசேயின் நாட்டுகளுக்கு முன்புவரை என்று அர்த்தம். அந்த காலம் வரை பாவம் உலகில் இருந்தது ஆனால் (கணக்கிடப்படவோ)எண்ணப்படவோயில்லை. “கணக்கிடுதல்” அல்லது “எண்ணப்படுதல்” என்பது வணிக கணக்கியலில் உபயோகப்படுத்தப்படும் பதம். உதாரணத்திற்கு நீங்கள் உங்களுக்கு பழக்கபப்பட்ட கடைக்கு சென்று ஒரு பொருளை வாங்கின பின்பு “என் கணக்கில் வைத்துக்கொள்ளுங்கள்” என்று கடைக்காரரிடம் சொல்லும்போது, அதை கடைக்காரர் உங்கள் கணக்கில் வைத்துக்கொண்டால், உங்கள் கணக்கு பட்டியலில் நீங்கள் வாங்கிய பொருள் நீங்கள் வாங்கியதாக கணக்கில் வைக்கப்படுகிறது. ஒருவேளை கடைக்காரர், நீங்கள் வாங்கியதை கணக்கில் வைக்கத்தவறினால், அது உங்களுக்கு எதிராக பதிவுசெய்யப்படவில்லை என்று அர்த்தம்.

பத்து கற்பனைகள் கொடுக்கப்படும்வரை, பாவம் ஜனங்களுக்கு எதிராக கணக்கில் வைக்கப்படவில்லை என்று இந்த வசனம் சொல்லுகிறது. இது ஒரு அருமையான கூற்று. ஆதியாகமம் 3 மற்றும் 4ஐ கவனியுங்கள். ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாக

பாவம் செய்தபோது தேவன் பரிசுத்தராகவும் மனுக்குலம் பாவத்தில் இருப்பதாலும், தேவன் இந்த பாவ மனுக்குலத்திற்கு செய்வதற்கு ஏதுமில்லை என்று அனேகர் கருதிக்கொண்டிருக்கின்றனர். பரிசுத்தம் இல்லாத மனிதனுக்கு பரிசுத்தமுள்ள தேவன் எதுவும் செய்வதற்கு இல்லாதபடியினால் தம்முடைய பிரசன்னத்திலிருந்து மனிதனை அகற்றவேண்டும் என்பதற்காக தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார் என்று அவர்கள் எண்ணுகின்றனர். மேலும் அவர்கள், தங்களுடைய சரியான செயல்களால் தங்கள் பாவச்செயலை சுத்திகரித்தாலோழிய, தேவன் மறுபடியும் தம்மோடு உறவு வைத்துக்கொள்ளமாட்டார் என்று எண்ணுகின்றனர். இது இயேசு கொண்டுவந்த செய்திக்கு முற்றிலும் மாறாக உள்ளது. ரோமர் 5:8ல் நீங்கள் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து உங்களுக்காக மரித்ததினாலே, தேவன் உங்கள்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார் என்று சொல்கிறது. ஆகையால் தேவன், நீங்கள் உங்கள் பாவ செயல்களை சுத்திகரித்தபின்பல்ல, நீங்கள் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே உங்கள்மேல் தமது அன்பை விளங்கப்பண்ணினார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. உங்கள் வாழ்க்கையையே மாற்றக் கூடியதான சுவிசேஷத்தின் மாபெரும் சத்தியங்களில் ஒன்று, நீங்கள் இருக்கிற விதமாகவே தேவன் உங்களை நேசிக்கிறார் என்று புரிந்துகொள்வதுதான். அவர் உங்களை எந்த அளவிற்கு நேசிக்கிறார் என்றால், நீங்கள் அவருடைய அன்பை பெற்றுக்கொண்டால், நீங்கள் இருக்கிற விதமாக இருக்க விரும்பமாட்டீர்கள். நீங்கள் மாறிவிடுவீர்கள். தேவனின் அன்பை பெறுவதற்காக நீங்கள் மாறாமல், அவருடைய அன்பின் விளைவாக மாறுவீர்கள்.

ஆதியாகமம் 4ம் அதிகாரத்தில், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பிறகும்கூட மனிதனோடு தேவன் ஐக்கியம் வைத்திருப்பதை நீங்கள் காண முடியும். காயினும் ஆபேலும் தேவனுக்கு காணிக்கை பலியைச் செலுத்த வந்தபோது தேவன் அவர்களோடு பேசினார். அவர்களது செவி கேட்கும்படியான சத்தத்தில் அவர் பேசினார். அவர்களுடைய பதில்களை நாம் கவனிக்கும் போது அவர்கள் அந்த சத்தத்திற்கு மிகவும் பரிட்சயப்பட்டவர்களாக தெரிகிறது. தேவனுடைய

அந்தசத்தத்திற்கு மிகவும் பரிட்சயப்பட்டவர்களாக தெரிகிறது. தேவனுடைய குரலைக் கேட்டு அவர்கள் பயப்படவில்லை. காயின் தன் சகோதரனை கொலை செய்தபோது பூமியின் முதல் கொலைகாரனாக மாறினான். அப்பொழுது வானத்திலிருந்து தேவனுடைய குரல் ஒலித்தது. உன் சகோதரன் ஆபேல் எங்கே என்று கேட்ட பொழுது எந்த உறுத்தலும் இல்லாமல் தேவனிடத்தில் பொய் சொன்னான். தனக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லாதது போல பேசுகிறான். ஒரு மனிதன் அடிக்கடி தேவனுடைய சத்தத்தை கேட்டு பழக்கப்பட்டவனாக இருந்தால் மட்டுமே, அவருடைய சத்தத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல்,அதை குறித்து எந்த பயம் இல்லாதவனாக இருப்பதற்கான வாய்ப்பு உண்டாகும். இவைகள் அனைத்தையும் பார்க்கும்பொழுது, பொதுவாக நம்பப்படுவதுபோல தேவன் மனிதனோடு உறவை முறித்துக்கொண்டார் என்று இல்லாமல், இன்னும் மனிதனோடு ஐக்கியம் வைத்திருக்கிறார் என்று தெரியவருகிறது. தேவன் மனிதனுடைய பாவத்தை அவனுக்கு எதிராக கணக்கு வைக்கவில்லை. அப்படி என்றால் அவர்களுடைய பாவங்களை அவர் மன்னித்துவிட்டார் அல்லது அவர்கள் தவறு செய்யவில்லை என்று ஆகிவிடுமோ? அப்படி அல்ல. அதனால்தான் முடிவாக அவர் பிரமாணங்களை கொடுத்தார். மனிதனை அவனுடைய சரியான ஸ்தானத்திற்கு கொண்டு வருவதற்காகவே தேவன் கற்பனைகளை கொடுக்கவேண்டியதாக இருந்தது. மனிதன் தனக்கு ஒரு இரட்சகர் தேவை என்றும், அவன் தன்னைத்தான் தாழ்த்தி மன்னிப்பை ஈவாக பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தேவன் மனிதனுக்கு காண்பிக்க வேண்டியதாயிருந்தது. மதமானது இவையெல்லாவற்றையும் கட்டுப்படுத்தி மாற்றி போதித்தது. அதாவது, நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதன் மூலமாய்தான் தேவனுடைய மன்னிப்பையும் அங்கீகரிப்பையும் பெறமுடியும் என்றும், அதற்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என்று போதித்தது. அப்படி இல்லை! பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின் நோக்கம் என்னவென்றால், நீங்கள் உங்களையே இரட்சிக்கமுடியாது என்று உணரச்செய்யும் விதத்தில் பாவத்தை பெரிதாக்கி, "தேவனே இதுதான் உம்முடைய பரிசுத்தத்தின் தரமாக இருந்தால், என்னால் அதை அடையமுடியாது,

என்னை மன்னித்து, என்மேல் இரக்கமாயிரும்”, என்று சொல்லவைப்பதே. தேவனுடைய ஒட்டுமொத்த சுபாவம் எப்பொழுதும் அன்பாகவே இருக்கிறது.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. ரோமர் 5:13ஐ வாசிக்கவும். “எண்ணப்படுதல்” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

**ரோமர் 5:13** *நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.*

2. ரோமர் 7:7ஐ வாசிக்கவும். நியாயப்பிரமாணத்தின் நோக்கமானது என்ன?

**ரோமர் 7:7 -** *ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே.*

3. கலாத்தியர் 3:24ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின் அடிப்படையில் நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?

**கலாத்தியர் 3:24 -** *இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.*

4. யோவான் 8:1-11. விபசாரத்தில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட பெண்ணை இயேசு எப்படி கையாண்டார்?

**யோவான் 8:1-11 -** *இயேசு ஒலிவமலைக்குப் போனார். (2) மறுநாள் காலையிலே அவர் திரும்பித் தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். (3) அப்பொழுது விபசாரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி: (4) போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். (5) இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். (6)அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார். (7) அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, (8) அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார். (9) அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். (10) இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத்தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். (11) அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.*

5. இயேசுவின் வார்த்தைகளும் செய்கைகளும் தேவனுடைய உண்மையான சுபாவத்தை பிரதிபலிக்கிறதா? யோவான் 3:34 வாசிக்கவும்.

**யோவான் 3:34** *தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்.*

6. 1யோவான் 4:8ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின் அடிப்படையில் தேவனுடைய உண்மையான சுபாவம் என்ன?

**1யோவான் 4:8 -** *அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.*

7. ரோமர் 5:6ஐ வாசிக்கவும். நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கையில் தேவனுடைய அன்பு நம்மேல் வெளிப்படுத்தப்பட்து?

8. ரோமர் 5:8. நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கும்பொழுது தேவன் நம்மில் அன்புகூர்ந்தார்?

9. ரோமர் 5:10 நாம் யாராக இருக்கும் போது தேவன் நம்மில் அன்பு கூர்ந்தார்?

**ரோமர் 5:10** *நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின்மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

10. நீங்கள் உங்கள் பாவத்திற்கு இயேசு செலுத்திய கிரயத்தை நம்பி, உங்கள் பாவத்தை மன்னிக்கும்படியாகவும், உங்களுக்கு கர்த்தரும் இரட்சகருமாக இருக்கும்படியும் இயேசுகிறிஸ்துவை நீங்கள் கேட்டுக்கொண்டால், தேவன் தம்முடைய உண்மையான சுபாவமான கிருபையையும் இரக்கத்தையும் உங்களிடம் காண்பிப்பாரா?

# பதில் ஆதாரங்கள்

1. ரோமர் 5:13ஐ வாசிக்கவும்."எண்ணப்படுதல்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

**ஒருவருடைய கணக்கில் கணக்குவைத்துக்கொள்வது.**

2. ரோமர் 7:7ஐ வாசிக்கவும். நியாயப்பிரமாணத்தின் நோக்கமானது என்ன?

**பாவத்தை தெரியப்படுத்துவதற்காக**

3. கலாத்தியர் 3:24ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின் அடிப்படையில் நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?

**இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகரின் தேவையை மனுக்குலத்திற்கு காண்பிப்பதற்காக**

4. யோவான் 8:1-11. விபசாரத்தில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட பெண்ணை இயேசு எப்படி கையாண்டார்?

**இரக்கத்தோடும் கிருபையோடும்**

**5.** இயேசுவின் வார்த்தைகளும் செய்கைகளும் தேவனுடைய உண்மையான சுபாவத்தை பிரதிபலிக்கிறதா? யோவான் 3:34 வாசிக்கவும்.

**ஆம்**

6. 1யோவான் 4:8ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின் அடிப்படையில் தேவனுடைய உண்மையான சுபாவம் என்ன?

**அன்பு**

7. ரோமர் 5:6ஐ வாசிக்கவும். நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கையில் தேவனுடைய அன்பு நம்மேல் வெளிப்படுத்தப்பட்டது?

**பெலனற்றிருக்கும் போது (அதாவது) உதவியற்று, தேவ பக்தியற்றவர்கனாக இருக்கும்போது.**

8. ரோமர் 5:8. நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கும்பொழுது தேவன் நம்மில் அன்புகூர்ந்தார்?

**பாவிகளாக**

9. ரோமர் 5:10. நாம் யாராக இருக்கும் போது தேவன் நம்மில் அன்பு கூர்ந்தார்?

**சத்துருக்களாக**

10. நீங்கள் உங்கள் பாவத்திற்கு இயேசு செலுத்திய கிரயத்தை நம்பி, உங்கள் பாவத்தை மன்னிக்கும்படியாகவும், உங்களுக்கு கர்த்தரும் இரட்சகருமாக இருக்கும்படியும் இயேசுகிறிஸ்துவை நீங்கள் கேட்டுக்கொண்டால், தேவன் தம்முடைய உண்மையான சுபாவமான கிருபையையும் இரக்கத்தையும் உங்களிடம் காண்பிப்பாரா?

**ஆம்**

பாடம் 6

# மனந்திரும்புதல்

டான் க்ரோ

மனந்திரும்புதல் என்றால் என்ன என்பதை குறித்து சிலர் தவறான புரிந்து கொள்ளுதலோடிருக்கிறார்கள். மனந்திரும்புதல் என்பது சரியாய் இருப்பதல்ல, ஆனால் திசை மாறுவதாகும். நாம் இப்பொழுது கெட்ட குமாரன் அல்லது காணாமற்போன குமாரனின் உவமையை பற்றி பார்க்கப்போகிறோம். ஒரு தனிமனிதன் மனந்திரும்புவது என்றால் என்ன என்பதை மிகத் தத்ரூபமாக விளக்க இயேசு ஒரு கதையை சொல்லியிருக்கிறார். லூக்கா15:11-12ல், *"பின்னும் அவர் சொன்னது: ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்"* என்று இயேசு சொன்னார்.

அந்த இளைஞன் தன் தகப்பன் மரிக்கும் முன்பாகவே தனக்கு கிடைக்கவேண்டிய சுதந்திரத்தை பெற்றுக் கொள்ள விரும்பினான் அது வழக்கத்திற்கு மாறானதாகும். இருப்பினும் அவனுடைய தகப்பன் விண்ணப்பத்தை ஏற்று கொண்டு அவர்களுடைய சுதந்திரத்தை அவர்களுக்கு பிரித்துக் கொடுத்தான். 13வது வசனம்,*"சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்"* என்று சொல்லுகிறது. இளைய மகன் தன்னுடைய எல்லா செல்வங்களையும் எடுத்துக்கொண்டான், தன்னுடைய சுதந்திரத்தை எடுத்துக்கொண்டான், தூரதேசத்திற்கு போனான், துன்மார்க்கமான ஜீவியம் செய்து அனைத்தையும் வீணாக்கி போட்டான். ஆங்கில வேதாகமத்தின் ஒரு மொழிபெயர்ப்பில், "கொண்டாட்டங்களில் விபச்சாரிகளிடம் பணத்தைச் செலவழித்தான்" என்று கூறுகிறது.

14-15 வசனங்களை வாசிக்கவும், *“எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. (நிலங்களெல்லாம் வறட்சியாகி மக்கள் பட்டினியால் வாடிக்கொண்டிருந்தார்கள்)அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான் ”* (குறியீட்டில் உள்ளது நான் சொன்னது). அந்த தேசத்தில் ஒரு மனிதனிடத்தில் அவனுக்கு ஒரு வேலை கிடைத்தது. அவன் பன்றிகள் மேய்க்கும்படி அனுப்பப்பட்டான். 16வது வசனம் சொல்லுகிறதாவது, *“அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை”.* அவன் மிகவும் பசியாய் இருந்தான் அந்தப் பட்டினியின் கொடுமையினால் பன்றி தின்னும் உணவை கொடுங்கள் சாப்பிடுகிறேன் என்று கேட்டான். ஆனால் அதையும் கூட யாரும் அவனுக்கு கொடுக்கவில்லை. அவன் தன்னுடைய ஆஸ்திகளையெல்லாம் அழித்துப்போட்டான். *17ம் வசனம், “அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்” என்று சொல்லுகிறது.* வேறு ஆங்கில வேதாகமத்தின் மொழிபெயர்ப்பில், *“அவன் தன் சுய உணர்விற்குத் திரும்பிய போது.” வேறுவிதமாக சொல்லவேண்டுமென்றால் அவனுடைய தகப்பனுடைய வேலைக்காரர் அனைவருக்கும் போதுமான உணவு இருக்கிறது. ஆனால் இவனோ பசியினால் சாகிறான் என்பதை உணர்ந்தான்.*

அவன் ஒரு நல்ல தீர்மானம் எடுத்தான், மனந்திரும்பினான். மனந்திரும்புதல் என்பது மனம் மாற்றம், இருதயத்தில் உண்டாகும் மாற்றம். அது ஒரு மனிதனை திசை திருப்பசெய்து புதிய திசையை நோக்கி நகரச்செய்யும். 18-19 வசனங்களில் *“நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி ” “என்னை ஒரு அடிமை வேலைக்காரராக ஏற்றுக்கொள்ளும், தகப்பனே உமக்கு விரோதமாய் நான் பாவம் செய்தேன். உம்முடைய ஆஸ்தியை*

*அழித்துவிட்டேன். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தேன். என்னை* வேலைக்காரனாக ஏற்றுக்கொள்ளும் என்றான்". பின்பு எழுந்து தகப்பனிடம் சென்றான். மனந்திரும்புதல் என்பது மனப்பான்மையின் மாற்றம், சிந்தையின் மாற்றம், இருதயத்தின் மாற்றத்தை காட்டிலும் மேலானதாகும். எதை ஒருவன் விசுவாசிக்கிறானோ அதன்படி செயல்பட அவனை அது வழிநடத்துகிறது. அதாவது அவன் திரும்பி அந்த புதிய திசையில் செல்கிறான். நாம் எல்லாரும் பிதாவாகிய தேவனைவிட்டும், நம்முடைய குடியிருப்பாகிய பரலோகத்தை விட்டும் விலகிபோய்விட்டோம். ஏசாயா 53:6ம் வசனத்தில், "*நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்* " என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் தேவனுடைய இரக்கத்தினால் நம்முடைய பாவங்களை இயேசு கிறிஸ்துவின் மேல் சுமத்தினார்.

20-24ஆம் வசனத்தில் அந்த சம்பவம் தொடர்கிறது, "*எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்*". ஒரு நாள் இரவு ஒரு மனிதரிடம் நான் இந்த கதையை சொல்லிக்கொண்டிருந்தேன். அவர் இதற்கு முன்பு இந்த கதையை பற்றி கேள்விப்பட்டதில்லை. அதனால் அந்த மனிதருக்கு தெரிந்தவரை, அப்படி ஒரு மகன் திரும்பி வந்தால் அவருடைய தகப்பனார் "நீ என்ன செய்திருக்கிறாய், என்னுடைய எல்லா சொத்துக்களையும் என் வாழ்நாள் முழுவதும் நான் உழைத்து சேகரித்த அனைத்தையும் நீ வீணாக்கி விட்டாய், என்னுடைய அடிமை வேலைக்காரருடன் ஒருவனாய் இருந்துகொள்" என்று தான் சொல்லியிருப்பார் என்று அந்த மனிதன் என்னிடம் கூறினார். பெரும்பாலும் உலகத்தின் தகப்பனார் மிகவும் கோபமாக அப்படித்தான் செயல்படுவார்கள். ஆனால் இந்த தகப்பனுடைய அணுகுமுறையை கவனியுங்கள்: "*அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி,* (தன்னுடைய மகன்மேல் அவருடைய இருதயத்திலிருந்து அன்பு பொங்கி) *ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று*

*சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான்.* அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்". அவர்கள் விருந்தும் கொண்டாட்டமுமாய் மகிழந்தனர்.

ஒருமுறை நான் இக்கதையை ஒருவரிடத்தில் சொன்னபோது, அவர் "இயேசு சொல்வதை பார்க்கும்போது, நான் பரலோக தகப்பனிடம் அவருடைய இரக்கத்திற்காக திரும்பி, "பிதாவே, நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்தேன், உமக்கு மகனாக இருப்பதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னால், அவர் என்னை ஏற்றுக்கொள்வார்" என்று சொன்னார். நம்முடைய பரலோகப்பிதா மனதுருக்கம் உடையவர். அவர் உங்களை அடிமையாக்கமாட்டார். அவர் உங்களை முழு குமாரத்துவத்துடன் மீட்டு தம்மோடு சேர்த்துக்கொள்வார். தேவன் காத்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் விலகிப்போய்விட்டீர்களா? அப்படியானால் இன்றே நீங்கள் ஏன் பிதாவாகிய தேவனிடத்திற்கும், உங்கள் குடியிருப்பான பரலோகத்திற்கும் உங்கள் மனதை திருப்பக்கூடாது?

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மனந்திரும்புதலை விளக்கிக்கூறுக.

2. லூக்கா 13:1-5ஐ வாசிக்கவும். அழிந்து போகாமல் இருப்பதற்கு ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

**லூக்கா 13:1-5 -** *பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்; அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள். (2) இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? (3) அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.(4) சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? (5) அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்.*

3. 2பேதுரு 3:9ஐ வாசிக்கவும். அனைத்து மனிதர்களை பற்றிய தேவனுடைய விருப்பம் என்ன?

**2பேதுரு 3:9** - *தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.*

4. லூக்கா 16:19-31-வாசிக்கவும். ஐசுவரியவான் ஏன் மரித்தோரிலிருந்து ஒருவன் திரும்பிவந்து தன் சகோதரரிடம் பேசும்படி விரும்பினான்?

***லூக்கா 16:19-31*** *ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான் (20) லாசரு என்னும் பேர்கொண்ட ஒருதரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, (21) அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.(22) பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். (23) பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். (24) அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். (25) அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.(26)அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.*

*(27) அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, (28) நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். (29) ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான். (30) அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.(31) அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.*

5. லூக்கா 16:30ஐ வாசிக்கவும். வேதனையான இடமாகிய அதை (நரகம்) தவிர்ப்பதற்காக இந்த சகோதரர்கள் அவசியம் செய்ய வேண்டியது என்ன?

6. அப்போஸ்தலர் 26:18ஐ வாசிக்கவும். இது குறிப்பிட்டு சொல்லாமல் இருந்தாலும், இந்த வசனம் மனந்திரும்புதலை பற்றி கூறுகிறது. அப்படி மனந்திரும்புகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கிறது?

**அப்போஸ்தலர் 26:18-***அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.*

7. அப்போஸ்தலர் 26:20 இந்த வசனத்தின் இறுதிப்பகுதியில் மூன்று காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மூன்று காரியங்கள் யாவை?

**அப்போஸ்தலர் 26:20** -*முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்.*

8. மத்தேயு 7:21-23ஐ வாசிக்கவும். தேவனுடைய சித்தம் செய்யாமல் வேறு எதை இந்த மனிதர்கள் செய்கிறார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார்?

**மத்தேயு 7:21-23** - *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.(22) அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.(23) அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்*

9.உதட்டளவில் தேவனை ஆராதிப்பதை விட்டு மனந்திரும்புதல் எவ்வளவு முக்கியமானதென்பதை இது எவ்வாறு காண்பிக்கிறது?

10. ஏசாயா 5:57ஐ வாசிக்கவும். துன்மார்க்கர் என்ன செய்ய வேண்டும்?

**ஏசாயா 55:7** -*துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.*

11. அநீதி உள்ளவன் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் என்னென்ன?

12. மேலே குறிப்பிட்டள்ள காரியங்களை கடைபிடிக்கும் ஒருவனுக்கு தேவன் என்ன செய்வார்?

13. லூக்கா 15:7ஐ வாசிக்கவும். மனம்திரும்பும் ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் என்ன சம்பவிக்கும்?

**லூக்கா 15:7** *அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரேபாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

14. அப்போஸ்தலர் 3:19ஐ வாசிக்கவும். நீங்கள் மனந்திரும்பியிருந்தால் அல்லது மாறி இருந்தால், உங்கள் பாவத்துக்கு என்ன நேரிடும்?

# பதில் ஆதாரங்கள்

1. மனந்திரும்புதலை விளக்கிக்கூறுக.

**A. புதிய அர்ப்பணிப்பின் திசையில் முற்றிலுமாக திரும்புவது.**

**B. அது சிந்தனையின் மாற்றம்.**

**C. இருதயத்தின் மாற்றம் தேவனிடம் திரும்பும் விளைவை உண்டாக்குகிறது. அதாவது ஒருவனுடைய பழைய வழிகளை விட்டு தேவனுடைய வழியில் நடத்துதல்.**

**D. போகும் திசையிலிருந்து மாறுவது. பரிபூரணப்படுவது என்று அர்த்தமல்ல.**

**E. ஒருவருடைய வாழ்க்கையின் ஒட்டுமொத்த திசையையே மாற்றக்கூடிய தீர்மானத்தை எடுப்பது.**

**F. பழைய வழிகளை விட்டுத் திரும்பி முழுமையாக தேவனுக்கு அர்ப்பணித்து அவருடைய வழிகளில் நடப்பது.**

**G. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடம் திரும்புதல்.**

2. லூக்கா 13:1-5ஐ வாசிக்கவும். அழிந்து போகாமல் இருப்பதற்கு ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

**மனந்திரும்ப வேண்டும்.**

3. 2பேதுரு 3:9ஐ வாசிக்கவும். அனைத்து மனிதர்களை பற்றிய தேவனுடைய விருப்பம் என்ன?

**அனைவரும் மனந்திரும்ப வேண்டும் என்பதுதான்.**

4. லூக்கா 16:19-31-வாசிக்கவும். ஐசுவரியவான் ஏன் மரித்தோரிலிருந்து ஒருவன் திரும்பிவந்து தன் சகோதரரிடம் பேசும்படி விரும்பினான்?
**ஆதலால் அவர்கள் இந்த வேதனையான இடத்திற்கு வருவதை தவிர்க்க முடியும்.**

5. லூக்கா 16:30ஐ வாசிக்கவும். வேதனையான இடமாகிய அதை (நரகம்) தவிர்ப்பதற்காக இந்த சகோதரர்கள் அவசியம் செய்ய வேண்டியது என்ன?
**அவர்கள் கட்டாயம் மனந்திரும்ப வேண்டும்.**

6.அப்போஸ்தலர் 26:18ஐ வாசிக்கவும். இது குறிப்பிட்டு சொல்லாமல் இருந்தாலும், இந்த வசனம் மனந்திரும்புதலை பற்றி கூறுகிறது. அப்படி மனந்திரும்புகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கிறது?

**A.கண்கள் திறக்கப்படும்.**

**B.இருளிலிருந்து ஒளிக்கு திரும்புதல்.**

**C.சாத்தானின் வல்லமையில் இருந்து தேவனிடம் திரும்புதல்.**

**D.பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளுதல்.**

**E. சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளுதல்.**

7. அப்போஸ்தலர் 26:20 இந்த வசனத்தின் இறுதிப்பகுதியில் மூன்று காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மூன்று காரியங்கள் யாவை?

**A.மனந்திரும்பு**

**B.தேவனிடம் திரும்பு**

**C.தங்கள் செயல்கள் மூலம் மனந்திரும்புதலை நிருபித்தல்.**

8. மத்தேயு 7:21-23ஐ வாசிக்கவும். தேவனுடைய சித்தம் செய்யாமல் வேறு எதை இந்த மனிதர்கள் செய்கிறார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார்?

**அக்கிரமம் அல்லது அநீதி.**

9. உதட்டளவில் தேவனை ஆராதிப்பதை விட்டு உண்மையாக மனந்திரும்புதல் எவ்வளவு முக்கியமானதென்பதை இது எவ்வாறு காண்பிக்கிறது?

**இரட்சிப்பு இருதயத்திலிருந்து உண்டாகிறது. வெறும் உதட்டளவிலிருந்து உண்டாவதில்லை.**

10. ஏசாயா 5:57ஐ வாசிக்கவும். துன்மார்க்கர் என்ன செய்ய வேண்டும்?

**அவர்களது வழிகளைக் கைவிட வேண்டும்.**

11. அநீதி உள்ளவன் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் என்னென்ன?

**தங்கள் சிந்தனைகளைக் கைவிட்டு கர்த்தரிடம் திரும்பவேண்டும்.**

12. மேலே குறிப்பிட்டுள்ள காரியங்களை கடைபிடிக்கும் ஒருவனுக்கு தேவன் என்ன செய்வார்?

**பரிபூரண இரக்கமும் மன்னிப்பையும் பெறுகின்றனர்.**

13. லூக்கா 15:7ஐ வாசிக்கவும். மனந்திரும்பும் ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் என்ன சம்பவிக்கும்?

**பரலோகத்தில் களிகூறுதல்**

14.அப்போஸ்தலர் 3:19ஐ வாசிக்கவும். நீங்கள் மனந்திரும்பியிருந்தால் அல்லது மாறி இருந்தால் உங்கள் பாவத்துக்கு என்ன நேரிடும்?

**என் பாவக்கறை துடைத்தொழித்து போடப்படும்.**

பாடம் 7

# அர்ப்பணிப்பு

டான் க்ரோ

***லூக்கா 14:25-26- பின்பு அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப்பார்த்து: யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.***

*"பின்பு அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப்பார்த்து"(லூக்கா 14:25).* இயேசுகிறிஸ்துவின் ஊழிய காலங்களில் ஏராளமானவர்கள் அவருக்கு பின் சென்றார்கள். ஆங்கில மொழியைவிட கிரேக்க மொழியில் இது தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது அந்த நாட்களில் திரளான மக்கள் இயேசுவின் பின்னால் மறுபடியும் பின்தொடர்ந்து போய்கொண்டே இருந்தார்கள். ஒருவேளை அவர் செய்த அற்புதங்களை அல்லது அவர் கொடுத்த உணவுகளை எதிர்பார்த்து போயிருக்கலாம். என்ன காரணம் என்பது தெரியாது. ஆனால் ஏராளமான மக்கள் பின் சென்றார்கள் என்பது மட்டும் உண்மை. இந்த நேரத்தில்தான் இயேசு திரும்பி வேண்டுமென்றே சிலகாரியங்களை சொன்னார். அது, அநேகர் அவரை பின்பற்றுவதிலிருந்து பின்வாங்குவதற்கு ஏதுவானது போல தோற்றமளித்தது.

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, (அதாவது என்னோடு வர விரும்பி, என்னை பின்பற்ற வேண்டுமென்றிருந்தால், இதுதான் தேவையானது) தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்". (லூக்கா 14:26, மேலே குறியீட்டுக்கள் உள்ளது நான் சொன்னது). நான் அந்த வசனத்தை கவனிக்குமபோது ஆண்டவரே நீர் அந்தவித அர்த்ததில் பேசியிருக்கமாட்டீர் என்று சொல்லிக்கொண்டேன். "வெறுத்தல்" என்ற வார்த்தையின் அர்த்தம் தான் என்ன? ஒருவேளை அதன் அர்த்தமானது கொஞ்சம் குறைவாக நேசிக்க வேண்டும் என்பதுபோல இருக்கலாம்.

ஆயினும் நான் அதைக்குறித்து ஆய்வு செய்ய துவங்கியபோது அந்த வார்த்தையின் பொருள் மெய்யாகவே “வெறுத்தல்” என்றுதான் அர்த்தம் என கண்டு கொண்டேன்.

இயேசு ஒரு குறிப்பிட்ட விஷயத்தை வலியுறுத்தி சொல்வதற்காக கடினமான வார்தையை பயன்படுத்தியிருக்கிறார். *நீங்கள் உங்களுடைய தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், உங்கள் ஜீவனையும் வெறுக்காவிட்டால் அவருக்கு சீஷனாயிருக்கமாட்டீர்கள் என்று சொன்னார்.* உங்களிடம் ஒன்று கேட்கிறேன் உலகத்தில் உங்களுக்கு கிடைக்க கூடிய மிகவும் நெருக்கமான உறவு எதுவாக இருக்கும்? அது உங்களுடைய தாய், தந்தை, மனைவி மற்றும் பிள்ளைகளாகத்தான் இருக்கும். உங்கள் மனைவி உங்களுக்கு எதிராக வந்து உங்களை விவாகரத்து செய்து விட்டால், உங்கள் தகப்பனும் தாயும் மரணமடைந்துவிட்டால் என்ன நடக்கும்? அதன் பின்பு உங்களோடு யார் இருப்பார்கள்? அது உங்கள் சகோதர சகோதரிகளாய் தான் இருப்பார்கள். ஆனால் இயேசுவோ நீ அவர்களை வெறுக்காத பட்சதில் அவருடைய சீஷனாக இருக்கமுடியாது என்று சென்னார். இங்கு இயேசு என்ன தான் சொல்லுகிறார்?

இயேசு நாம் மிகவும் நெருக்கமாக கொண்டிருக்கும் உறவுகளை குறித்தே பேசுகிறார். அவர் உங்களுடைய அர்ப்பணிப்பை எதிர்பார்கிறார். அதாவது இயேசுவுக்கு முதன்மையான இடத்தை கொடுக்கும் அர்ப்பணிப்பை நம்மிடத்தில் எதிர்பார்கிறார். அவரே உங்களுடைய வாழ்வில் முதல் நபராக இருக்கும்படி விரும்புகிறார். உலகத்தில் நீங்கள் நெருங்கிய உறவுகளோடு கொண்டுள்ள உறவை, நீங்கள் அவரோடு கொண்டுள்ள உறவோடு ஒப்பிடவிருக்கிறார். உலகத்தில் “வெறுத்தல்” என்பது ஒரு உருவகம். ஒப்பிடுவதற்கான வார்த்தைகள் “என்னுடைய உறவானது உலகத்தில் இருக்கக்கூடிய எந்த காரியங்களை காட்டிலும் மிகவும் முக்கியமானதாக இருக்க வேண்டும்” என்று இயேசு சொல்கிறார். றீங்கள் உங்கள் வாழ்க்கை துணைவியாரைவிட, உங்கள் பிள்ளைகளைவிட, தாய், தந்தை,

சகோதர சகோதிரிகளைவிட நீங்கள் அதிகம் நேசிக்கக்கூடிய ஒரு நபர் இருக்கிறார். அவர் யாரென்று அறிவீர்களா? அந்தநபர் தேவனல்ல. அந்த நபர் நீங்கள் தான், நீங்கள் அதிகம் நேசிக்கும் உங்களுடைய நெருக்கமான உறவுகளைகாட்டிலும் உங்களைத்தான் நீங்கள் நேசிக்கிறீர்கள்.

திருமணங்கள் ஏன் முறிந்து போகிறது? ஏன் ஜனங்கள் விவாகரத்து செய்துகொள்கின்றனர்? ஏனென்றல், அவர்கள் தங்களது வாழ்க்கை துணைவரை காட்டிலும் தங்களையே அதிகம் நேசிக்கிறார்கள். “நான் எதிர்பார்க்கிறபடி நீ நடந்துகொள்ளவில்லை, ஆனபடியினாலே உன்னை விட்டுவிடுகிறேன்.” என்கின்றனர். நீங்கள் விரும்புகிற உங்களுடைய சுயநல வாழ்க்கைவிட, இயேசு உங்கள் வாழ்க்கையில் முதன்மையாக இருக்க விரும்புகிறார். இதுவே உண்மையான சீஷத்துவம். கிரையம் இல்லாத சீஷத்துவத்தை அவர் பேசவில்லை. அவரை பின்பற்றும்படி அவர் நம்மை கேட்டுக்கொள்கிறார். நம்முடைய வாழ்க்கையில் அவர் முதன்மையாக இருக்கவேண்டும் என்று நம்மிடம் கேட்கிறார்.

# சீடத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. லூக்கா 9:57-62ஐ வாசிக்கவும். இயேசுவை பின்பற்றுவதில் இருக்க வேண்டிய அர்ப்பணிப்பின் நிலையை குறித்து இந்த வேதபகுதி என்ன போதிக்கிறது?

**லூக்கா 9:57-62 -** *அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். (58 )அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.(59) வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.(60) அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்.(61) பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.(62) அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்.*

2. லூக்கா 8:13-14ஐ வாசிக்கவும். ஏன் சிலர் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு தூரமாய் விலகிப்போகிறார்கள்?

**லூக்கா 8:13-14 -** *மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். (14)மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.*

3. எசேக்கியேல் 16:8ஐ வாசிக்கவும். தேவன் தமது ஜனங்களோடு உள்ள உறவை விளக்கிக்காட்டுவதற்க்கு திருமணத்தை ஆதாரமாக காண்பிக்கிறார். இந்த உறவில் ஒருவர் யாருடைய உடைமையாக ஆகிறார்?

***எசேக்கியேல் 16:8*** - *நான் உன் அருகே கடந்துபோனபோது, உன்னைப் பார்த்தேன்; இதோ, உன் காலம் பருவகாலமாயிருந்தது; அப்பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து, உன் நிர்வாணத்தை மூடி, உனக்கு ஆணையிட்டுக்கொடுத்து, உன்னோடு உடன்படிக்கை பண்ணினேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; இவ்விதமாய் நீ என்னுடையவளானாய்.*

4. 1கொரிந்தியர் 6:19-20ஐ வாசிக்கவும். நீங்கள் யாருக்கு சொந்தமானவர்கள்?

**1கொரிந்தியர் 6:19-** *உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா?*

5. 1கொரிந்தியர் 6:20ஐ வாசிக்கவும். உங்கள் சரிரமும் ஆவியும் யாருக்கு சொந்தமானதாக இருக்கிறது?

6. யாக்கோபு 4:4ஐ வாசிக்கவும். தேவனுக்கு விரோதமான ஆவிக்குரிய வேசித்தனத்தை உங்களால் செய்ய முடியுமா?

**யாக்கோபு 4:4 -** *விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.*

7. தேவனுடைய பார்வையில் ஆவிக்குரிய வேசித்தனம் என்பது என்ன? ரோமர் 1:25ஐ பார்க்கவும்.

**ரோமர் 1:25 -** *தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.*

8.யோவான் 2: 23-25 - இந்த வசனங்களின் மூலம் அர்ப்பணம் மற்றும் விசுவாசம் குறித்து என்ன கற்றுக் கொள்ள முடிகிறது.

**யோவான் 2: 23-25 -** *அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்தபின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள்.(23)பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். (24 )அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை.(24)மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை.*

9.லூக்கா 14:28-30ஐ வாசிக்கவும். இயேசுவை பின்பற்றுவதற்கான விலைகிரயத்தை கணக்கிட்டுள்ளீர்களா? நீங்கள் அவரை பின்பற்ற விரும்புகின்றீர்களா?

**லூக்கா 14:28-30** - *உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, (29 )அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்:(30) இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?*

# பதில் ஆதாரங்கள்

1. லூக்கா 9:57-62ஐ வாசிக்கவும். இயேசுவை பின்பற்றுவதில் இருக்க வேண்டிய அர்ப்பணிப்பின் நிலையை குறித்து இந்த வேதபகுதி என்ன போதிக்கிறது?

**முழுமையான அர்ப்பணம்.**

2. லூக்கா 8:13-14 ஏன் சிலர் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு தூரமாய் விலகிப்போகிறார்கள்?

**தேவனுடைய வசனத்தில் அவர்கள் ஆழமாக வேர்யில்லாத படியினாலும் உலக கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் கிறிஸ்தவ வாழ்வைவிட்டு விலகிப்போகிறார்கள்.**

3. எசேக்கியேல் 16:8 தேவன் தமது ஜனங்களோடு உள்ள உறவை விளக்கிக்காட்டுவதற்க்கு திருமணத்தை ஆதாரமாக காண்பிக்கிறார் இந்த உறவில் ஒருவர் யாருடைய உடைமையாக ஆகிறார்?

**தேவனுடைய உடமையாயிருக்கிறார்.**

4. 1கொரிந்தியர் 6:19ஐ வாசிக்கவும். நீங்கள் யாருக்கு சொந்தமானவர்கள்

**தேவனுக்கு சொந்தமானவர்கள்.**

5. 1கொரிந்தியர் 6:20ஐ வாசிக்கவும். உங்கள் சரிரமும் ஆவியும் யாருக்கு?

**தேவனுக்கு சொந்தமாக இருக்கிறது.**

6. யாக்கோபு 4:4ஐ வாசிக்கவும். தேவனுக்கு விரோதமான ஆவிக்குரிய வேசித்தனத்தை உங்களால் செய்ய முடியுமா?

**ஆம் செய்ய முடியும்.**

7. தேவனுடைய பார்வையில் ஆவிக்குரிய வேசித்தனம் என்பது என்ன?

**தேவனை விட்டு விக்கிரகளுக்கு நேராக இருதயம் திரும்புவதை (தேவனை காட்டிலும் அதிக முக்கியத்துவம் எதற்கு கொடுக்கப்பட்டாலும் அது விக்கிரகம்) ரோமர் 1:25**

8. யோவான் 2: 23-25 இந்த வசனங்களின் மூலம் அர்ப்பணம் மற்றும் விசுவாசம் குறித்து என்ன கற்றுக் கொள்ள முடிகிறது?

**இயேசு நம்முடைய முழு இருதயத்தை விரும்புகிறார் (முழுமையான அர்ப்பணிப்பு)**

9. லூக்கா 14: 28-30 இயேசுவை பின்பற்றுவதற்கான விலைகிரயத்தை கணக்கிட்டுள்ளீர்களா? நீங்கள் அவரை பின்பற்ற விரும்புகின்றீர்களா?

**ஆம் பின்பற்ற விரும்புகிறேன்.**

பாடம் 8

# தண்ணீர் ஞானஸ்நானம்

டான் க்ரோ

**கேள்வி :** "பரலோகம் செல்வதற்கு நீங்கள் ஞானஸ்நானம் பெறுவது அவசியமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன். நான் தேவனை நேசிக்கிறேன். எனக்கு 7 வயது இருக்கும் போது நான் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டேன். இப்பொழுது எனக்கு 18 வயது ஆகிறது. ஸ்தாபன பிரிவுக்கு அப்பாற்பட்ட சபையைச் சார்ந்த ஒருவர் அந்த சிறு வயதில் ஞானஸ்நானம் எடுத்த ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு எந்த விதமான வாய்ப்பும் இல்லை என்றார். மேலும் அவர் பரலோகம் செல்ல வேண்டுமானால் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்றும் கூறினார். ஆனால் என்னுடைய பாப்டிஸ்ட் குடும்பத்தார் அதற்கு மறுத்து விட்டனர். நான் பரலோகம் செல்ல விரும்புகிறேன். என்னால் இயன்ற மட்டும் நான் தேவனுக்காக வாழ்ந்து வருகிறேன். நான் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் வயதுடையவனாக இருக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தயவுசெய்து எனக்கு உதவி செய்யுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக நன்றி".

**பதில் :** இரட்சிப்பும், பாவமன்னிப்பும் இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலம் இலவசமான ஈவாக கிடைக்கிறது. அப்போஸ்தலர் 10:43ஐ ஆங்கில வேதத்தின் (என் ஐ வி) வேறொரு மொழிபெயர்ப்பில் "அவரை விசுவாசிக்கிற எல்லாரும் அவருடைய நாமத்தின் மூலமாய் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்கிறார்கள் என்று எல்லா தீர்க்கதரிசிகளும் அவரைக்குறித்து சாட்சி கொடுக்கிறார்கள்"என்று சொல்லுகிறது. விசுவாசத்தினாலே இரட்சிப்பு உண்டாகிறது.

அதாவது இயேசுவின்மேல் நம்பிக்கையும், தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக நிற்கும்படியான சிலாக்கியத்தை தரும்படியாக, அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதின்மேல் நம்பிக்கையும், அதை சார்ந்திருப்பதின் மூலமாகவே உண்டாகிறது. அப்போஸ்தலர் 10:44-48 வசனங்களில் விசுவாசிகள் ஞானஸ்நானம் பெறவதற்கு முன்பாகவே (அவர்களது இரட்சிப்பை உறுதிப்படுத்தும் விதமாக) பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது.

இது உண்மையாக இருந்த போதிலும், மற்ற நேரங்களில் பாவமன்னிப்பு ஞானஸ்நானம் எடுக்கப்படுகிற நேரங்களில் தான் ஏற்படுகிறதுபோல தோன்றுகிறது (அப்போஸ்தலர் 2:28). ஏனென்றல் ஞானஸ்நானம் என்பது ஒருவர் இயேசுவிடம், மனந்திரும்புதலிலும் விசுவாசத்திலும், திரும்பும்போது நடக்கும் ஒரு வெளிப்படையான விசுவாச செயலாகும். (மாற்கு 16:16, *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"*. என்று சொல்லுகிறது. மேலும் இது சுத்த மனசாட்சிக்காக தேவனை அழைக்கும் ஒரு வழியாகவும் இருக்கிறது. (அப்போஸ்தலர 22:16, 1பேதுரு 3:21).

அந்த 7 வயதில் நீங்கள் உங்கள் இருதயத்தின் ஆழத்திலுருந்து இயேசுவிடம் உண்மையாக திரும்பி, ஞானஸ்நானம் எடுத்திருந்தீர்களானால் உங்களுடைய குழந்தைத்தனமான விசுவாசத்தை தேவன் அங்கீகரிக்கிறார். ஞானஸ்தானத்திற்கென்று சில அம்சங்கள் அவசியமாயிருக்கிறது. அதில் மனந்திரும்புதல் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். உங்கள் இருதயத்திலும் சிந்தையிலும் மாற்றம் உண்டானதா? அதன் விளைவாக நீங்கள் பாவத்திலிருந்து இயேசுவினிடத்திற்கும் அவர் தரும் மன்னிப்பினிடத்திற்கும் திரும்பும்படியான மாற்றம் உண்டானதா (அப்போஸ்தலர் 2:38, 20:21 மற்றும் 17 : 30)? இயேசுவை உங்களுடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசித்தீர்களா? (மாற்கு 16:16, யோவான் 3:16, ரோமர் 10:9,10) அப்படி இல்லையானால் உடனே இயேசுவிடம்

திரும்புங்கள். பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள். மன்னிப்பை பெறும்படி அவருடைய கிருபையை சார்ந்துக் கொள்ளுங்கள். அவரை பின்பற்றும் தீர்மானத்தை தண்ணீர் ஞானஸ்நானம் மூலமாக முத்தரியுங்கள். அவரை பின்பற்றுங்கள்.

**ஞானஸ்நானம் என்பது ஒருவன் தான் இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தும் செயலாக இருக்கிறது.** அப்படிப்பட்ட விசுவாசம் இல்லாத பட்சத்தில் அந்த செயலுக்கு எந்தவித அர்த்தமும் இல்லாமல் போகும். கர்த்தரும் இரட்சகருமான இயேசுவிடம் திரும்பியவர்கள் அந்த விசுவாசத்தை வெளிப்படுத்தும் விதமாக இந்த பகிரங்கமான முறையில் இயேசுவை வெளிப்படையாக அறிக்கை செய்கிறார்கள். இயேசுவின் கட்டளைக்கு "மாட்டேன்" என்று சொல்லும் ஜனங்கள், ஒருவிதத்தில் செத்த விசுவாசத்தை காண்பிக்கிறார்கள். **ஜனங்கள் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்த விருப்பமில்லாமல் இருந்தால் அந்த விசுவாசம் செத்ததாக இருக்கிறது** (யாக்கோபு 2:18,19). விசுவாசமே இரட்சிக்கும் (இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசம்).ஆனால் இரட்சிக்கும் விசுவாசம் எப்பொழுதும் தனித்திருப்பதில்லை. அது எப்பொழுதும் தன்னை வெளிப்படுத்த வாஞ்சை உடையதாய் இருக்கின்றது. ஞானஸ்நானமானது அந்த விசுவாசத்தை வெளிப்படுத்தி காட்டியதாக இருக்கும். **ஞானஸ்நானம் இரட்சிப்பதில்லை, இயேசுவே இரட்சிக்கிறவர். தண்ணீர் உங்கள் பாவங்களை கழுவுவதில்லை இயேசுவின் இரத்தமே பாவங்களை கழுவும்.** ஆனால் விசுவாசமானது அவருடைய இரத்தத்தை உங்கள் மேல் பூசுகிறது. மேலும் சில நேரங்களில் அந்த விசுவாசமானது ஒருவன் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகிற போது வெளிப்படுத்த ப்படுகிறது (அப்போஸ்தலர 22:16). கேள்வியென்னவெனில், நீங்கள் மனந்திரும்பினீர்களா? நீங்கள் அவரின்மேல் (இயேசுவின்மேல்) விசுவாசம் வைத்துள்ளீர்களா? அப்படியானால், இன்னும் ஏன் தாமதிக்கிறீர்கள். எழுந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. அந்த இளைஞன் கேட்ட கேள்வி என்ன?

2. அப்போஸ்தலர் 10:43ன் படி நமக்கு இரட்சிப்பு எவ்வாறு கிடைக்கிறது?

**அப்போஸ்தலர் 10:43 -** *அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.*

3. ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தை வெளிப்படுத்திக் காட்டும் செயலாய் இருக்கிறது. அது வழக்கமாக இரட்சிப்பு உண்டாகும் சமயங்களில் நடக்கிறது. அப்போஸ்தலர் 2:38 இந்த சத்தியத்தை எப்படி வெளிப்படுத்திக்காட்டுகிறது?

**அப்போஸ்தலர் 2:38 -** *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

4. மாற்கு 16:16 இந்த சத்தியத்தை எப்படி வெளிப்படுத்துகிறது?

**மாற்கு 16:16 -** *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

5. ஞானஸ்நானம் என்பது தேவனை நோக்கி அழைக்கும் வழியாக இருக்கிறது. அப்போஸ்தலர் 22:16 இந்த சத்தியத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

**அப்போஸ்தலர் 22:16 -** *இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.*

6. ஞானஸ்நானம் என்பது சுத்த மனசாட்சிக்காக தேவனை அழைக்கும் ஒரு வழியாக இருக்கிறது. 1பேதுரு 3:21 இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகிறதா?

**1பேதுரு 3:21 -** *அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது;*

7. அப்போஸ்தலர் 2:38ன்படி ஞானஸ்நானம் பெற அவசியமானது எது?

8. மாற்கு 16:16 ன்படி ஞானஸ்நானம் பெற அவசியமானது எது?

9. ஒரு குழந்தை மனந்திரும்ப முடியுமா?

10. சிறு குழந்தைகள் விசுவாசிக்க முடியுமா?

11. அப்போஸ்தலர் 10:43-48 வாசிக்கவும். இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் உண்டான பின்பு ஒரு விசுவாசியான அவன் எடுக்கவேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன?

**அப்போஸ்தலர் 10:43-48-** *அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.(44) இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (45) அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், (46) பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். (47) அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, (48) கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.*

# பதில் ஆதாரங்கள்

1.அந்த இளைஞன் கேட்ட கேள்வி என்ன?

**பரலோகம் செல்வதற்கு ஞானஸ்நானம் எடுக்கவேண்டுமா என்று கேட்டான்.**

2. அப்போஸ்தலர் 10:43ன் படி நமக்கு இரட்சிப்பு எவ்வாறு கிடைக்கிறது?

**இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலம் இலவசமான ஈவாக கொடுக்கப்படுகிறது.**

3. ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தை வெளிப்படுத்திக் காட்டும் செயலாய் இருக்கிறது. அது வழக்கமாக இரட்சிப்பு உண்டாகும் சமயங்களில் நடக்கிறது. அப்போஸ்தலர் 2:38 இந்த சத்தியத்தை எப்படி வெளிப்படுத்திக்காட்டுகிறது?

**மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பேதுரு கூறினார்.**

4. மாற்கு 16:16 இந்த சத்தியத்தை எப்படி வெளிப்படுத்துகிறது?

**விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று இயேசு கிறிஸ்து கூறினார் ஒரே நேரத்தில் அவைகள் சம்பவிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகிறது.**

5. ஞானஸ்நானம் என்பது தேவனை நோக்கி அழைக்கும் வழியாக இருக்கிறது. அப்போஸ்தலர் 22:16 இந்த சத்தியத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

**இயேசுவின் நாமத்தை அழைக்கும் ஒருவனுக்கு அவனுடைய பாவங்கள் கழுவப்படும் என்று இந்த வசனம் சொல்லுகின்றது அதாவது வாயினால் அவரை அழைக்கும்பொழுது (லூக்கா 18:13) அல்லது ஞானஸ்நானம் செயல் மூலமாக என்பதாக என்று இந்த வசனம் குறிப்பிடுகிறதாக தோன்றுகிறது.**

6. ஞானஸ்நானம் என்பது சுத்த மனசாட்சிக்காக தேவனை அழைக்கும் ஒரு வழியாக இருக்கிறது. 1பேதுரு 3:21 இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகிறதா?

**ஆம்**

7. அப்போஸ்தலர் 2:38ன்படி ஞானஸ்நானம் பெற அவசியமானது எது?

**மனம்திரும்புதல்**

8. மாற்கு 16:16 ன்படி ஞானஸ்நானம் பெற அவசியமானது எது?

**ஒருவர் விசுவாசிக்க வேண்டியது அவசியமாகும்.**

9. ஒரு குழந்தை மனந்திரும்ப முடியுமா?

**இல்லை முடியாது.**

10. சிறு குழந்தைகள் விசுவாசிக்க முடியுமா?

**இல்லை முடியாது.**

11. அப்போஸ்தலர் 10:43-48 வாசிக்கவும். இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் உண்டான பின்பு ஒரு விசுவாசியான அவன் எடுக்கவேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன?

**தண்ணீர் ஞானஸ்நானம்.**

பாடம் 9

# கிறிஸ்துவுக்குள் உங்கள் அடையாளம் - பாகம்1

ஆண்ட்ரூ வோமக்

**2 கொரிந்தியர் 5:17**ல், *"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின"* என்று சொல்லப்பட்டுள்ளது. "கிறிஸ்துவுக்குள்" என்ற பதமானது புதிய ஏற்பாட்டில் சுமார் 300 தடவைகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது எப்பொழுதும் தேவனோடுள்ள ஐக்கியத்தின் உறவை குறிப்பிடுகிறதாக இருக்கிறது. உங்கள் வாழ்வில் இந்த ஐக்கியம் ஏற்பட்டுவிட்டால், நீங்கள் புது சிருஷ்டியாக ஆகிவிடுவீர்கள். வேறுசில மொழிபெயர்புகளில் "புது சிருஷ்டிப்பு" என்றே மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதை சரியாக புரிந்துகொள்வதில் பிரச்சனை இருப்பதால், கிறிஸ்துவுக்குள் உங்கள் புதிய அடையாளத்தை புரிந்துகொள்வது அவசியமென நான் நம்புகிறேன். கிறிஸ்துவுக்குள்ளான இந்த புதிய அடையாளம் சரீர மண்டலத்தில் நடைபெறவில்லை. இது உங்கள் சரீரத்தை பற்றியும் பேசவில்லை. அதாவது இது உங்கள் சரீரம் முழுமையாக மாறுகிறது என்றோ, உங்கள் சரீர தோற்றம் மாறுகிறதென்றோ சொல்லவில்லை. ஒரு மனிதன் இரட்சிக்கப்படுவதற்க்கு முன்பு பருமனாக இருந்தாரென்றால், இரட்சிக்கப்பட்ட பின்பும் அவர் பருமனாகத்தான் இருப்பார். இது உணவுக்கட்டுப்பாட்டினால் மட்டும்தான் உடல் பருமன் குறையும். மேலும் இது, உங்கள் மனது மற்றும் உணர்ச்சி பகுதியை குறித்தும் பேசவில்லை. இந்த பகுதியைதான் அநேக ஜனங்கள் உண்மையான "அவர்கள்" என கருதுகின்றனர். ஒருவேளை இரட்சிக்கப்படுவதற்கு முன் சாமர்த்தியவாதியாக இல்லாமல் இருந்தால் இரட்சிக்கப்பட்டவுடனே சாமர்த்தியவாதியாக மாறிவிட மாட்டீர்கள். பெரும்பாலும் உங்களுடைய பழைய நினைவுகளும் எண்ணங்களும் இன்னும் அப்படியே இருக்கும்.

மூன்றாவது பகுதி ஒன்று இருக்கிறது. அது "நம்முடைய ஆவி மனிதன்". நீக்குதல் என்னும் கோட்பாட்டின்படி, முந்தைய இரண்டு பகுதியை நீக்கிவிட்டால், நம்மிடத்தில் மாற்றம் அடைந்தது இந்த பகுதியாகத்தான் இருக்கவேண்டும். இதை உறுதிப்படுத்தும் ஒரு வேதப்பகுதி 1 தெசலோனிக்கேயர் 5:23ல் இங்கே பவுல் தெசலோனிக்கருக்கு ஜெபிக்கும் போது, *சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக". இந்த வேதப்பகுதி நமக்கு ஆவி,* ஆத்துமா, சரீரம் என மூன்று பகுதிகள் இருப்பதாக காண்பிக்கின்றது. "சரீர பகுதி" வெளிப்படையாக எல்லோரும் காணும்படியாக இருக்கிறது. அது நம்முடைய பகுதியில், காணக்கூடியதாகிய நம்முடைய வெளித்தோற்ற மனிதன். அதைத்தவிர நமக்கு மற்றுமொரு பகுதி இருப்பதை நாம் எல்லோரும் அங்கீகரிக்கிறோம். அது நம்முடைய உணர்வு மற்றும் மனது சார்ந்த பகுதி. இதைத்தான் வேதவாக்கியம் "ஆத்துமா" என்றழைக்கிறது. ஒருவர் உங்களை சரீரப்பிரகாரமாய் தொடமுடியாமல் இருந்தாலும், அவர்களுடைய வார்த்தைகளின் மூலமாய் உங்களை, நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ தொடமுடியும். அநேக ஜனங்கள் சரீர பகுதியிலும், ஆத்தும பகுதியிலும் இசைந்துள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் வேத வாக்கியத்தின்படி, "ஆவி" என்னும் மற்றுமொறு பகுதி இருக்கிறது.

நம்மில் ஒரு பகுதியான "ஆவி" தான் மாற்றம் அடைந்திருக்கிறது. இரட்சிக்கப்பட்டபின் அதுதான் புதிதாகியிருக்கிறது. அது நிஜமாகவே ஜீவனை தருகிற பகுதி. யாக்கோபு 2:26, "*அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" என்று சொல்கிறது.* ஆவிதான் உங்கள் சரீரத்தில் நிஜமாகவே ஜீவனை ஊதுகிறது என்பதை இது காண்பிக்கின்றது. இங்கிருந்துதான் நமக்கு ஜீவன் வருகிறது. ஆதியாகமம் 2ம்

அதிகாரத்தில் தேவன் ஆதாம் ஏவாளை உண்டாக்கினபோது ஆதாம் சரீரம் முழுமையாகயிருந்தது. அதன் பின்பு தேவன் தமது ஜீவசுவாசத்தை அவன்மேல் ஊதினார். இங்கு "ஊதினார்" என்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற பழைய ஏற்பாட்டு எபிரேய வார்த்தையும், நாம் சுவாசத்திற்கு பயன்படுத்துகிற வார்த்தையும் மிகச்சரியாக ஒரே வார்த்தையாக இருக்கிறது. அது "ஆவி" என்று மற்ற இடங்களில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தேவன் ஆதாமின் சரீரத்தையும், ஆதாமின் ஆத்தும மனிதனையும் சிருஷ்டித்தார். அதன் பின்பு தேவன் ஜீவசுவாசத்தை அவனுக்குள் ஊதினார். அவன் ஜீவஆத்துமாவானான். நம்முடைய ஒரு பகுதியான "ஆவி" தான் ஜீவனைத் தருகிறது.

ஒருவருடைய இரட்சிப்புக்கு முன்பு, அதாவது தேவன் தமக்குள் வரும்படியாக ஒருவன் தம்முடைய வாழ்க்கையை முழுமையாக அர்பணித்ததிற்கு முன்பாக, அவர்களுக்குள்ளிருந்த ஆவி மரித்ததாக இருந்தது. எபேசியர்: 2:1 ல் *"அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.(உயிரடயச் செய்தார்)"* (குறியீட்டிற்குள் இருப்பது நான் சொன்னது) என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் மறுபடியும் பிறப்பதற்கு முன்பாக சரீரப்பிரகாரமாக உயிரோடுதான் இருந்தோம் என்று நாம் அறிவோம். ஆனால் "மரித்தவர்களாய்" என்கின்ற வார்த்தை ஆவிக்குரிய மரணத்தை குறிக்கிறது. வேதாகமத்தில் மரணம் என்பது அநேகர் எண்ணுகிறது போல, முற்றிலும் இல்லாமல் அழிந்து போய்விடுவோம் என்று அர்த்தமல்ல. அதன் உண்மையான அர்த்தம் "பிரித்தல்" எனப்படும். சரீரப்பிரகாரமாக ஒரு மனிதன் மரிக்கும்போது அவன் முற்றிலும் இல்லாமல் அழிந்துபோவதில்லை. அவர்கள் உடனடியாக தேவனுடைய பிரசன்னத்திற்கோ அல்லது நரகத்தின் பிரசன்னத்திற்கோ போய்விடுவதாக வேதாகமம் போதிக்கிறது. ஆவியும் ஆத்துமாவும் தொடர்ந்து ஜீவிக்கும். ஆனால் சரீரத்தில் இருந்து பிரிந்திருக்கும். அதனால் அந்த சரீரம் அழிந்து மக்கிப்போகும்.

**ஆதி 2:17ல்**, *"ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவேசாவாய் என்று கட்டளையிட்டார்"* என்று சொல்லும் போது அவர்கள் சரீரப்பிரகாரமாக மரித்துவிடுவார்கள் என்று அர்த்தமில்லை. அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் மரித்துவிடுவார்கள் என்று அர்த்தம். அதாவது அவர்கள் தேவனைவிட்டு பிரிந்து விடுவார்கள் என்று அர்த்தம்.

தேவன் நமக்குள் ஊதிய "ஆவி" என்னும் அந்த பகுதிதான், நமக்கு உண்மையில் ஜீவனையும் ஊக்கத்தையும் அளிக்கிறதாக இருக்கிறது. அந்த ஆவிதான் தேவனுடைய இயற்க்கைக்கு அப்பாற்பட்ட ஜீவனிலிருந்து பிரிந்தது. அவருடைய பரிசுத்த மற்றும் பரிபூரண ஜீவனிலிருந்து பிரிந்தது. இந்த ஜீவனைதான் வேதாகமம் "சோயே (ZOE)ஜீவன்" அல்லது "ஜீவன் முழுமையாகவும் பரிபூரணமாகவும்" என்று அழைக்கின்றது. இதன் பின்பு மனிதன் சீர்குலைய ஆரம்பித்தான். இருப்பினும் அவன் இயங்கிக்கொண்டுதான் இருந்தான். ஆனால் தேவனிடமிருந்து பிரிந்து தனிப்பட்ட விதமாக இயங்கிக்கொண்டிருந்தான். அதுதான் உண்மையில் நம்முடைய வாழ்க்கையில் எல்லா பிரச்சனைகளுக்கும் காரணமாக இருக்கிறது. அதுதான் எல்லா விதமான உணர்வு ரீதியான மனஅழுத்தத்திற்கும் காரணமாக இருக்கிறது.

ஒருவன் கர்த்தரிடம் வரும்போது, புதியஆவியை பெற்று, மறுபடியும் பிறந்தவர்களாகிறார்கள். இந்த பதத்தைதான் இயேசு யோவான் 3:5ல் பயன்படுத்தினார். மனிதன் எவ்வாறு சரீரத்தோடு பிறக்கும்போது ஆவி, ஆத்துமா, சரீரத்தோடு பிறக்கிறானோ, அதுபோலவே அவன் மறுபடியும் பிறக்கும்போது கிறிஸ்துவின் ஆவியை பெற்றுக்கொள்கிறான். கலாத்தியர் 4:6ல், "மேலும் *நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்"*.தேவன் நிஜமாகவேஅவருடைய ஆவியை நமக்குள் வைக்கிறார். இப்பொழுது நாம் புதிய தரமுள்ள ஜீவன் உடையவர்களாக இருக்கிறோம். ஒரு புதிய அடையாளமுடையவர்களாக இருக்கிறோம். அதனால் நாம்

நம்முடைய ஆவியில் முழுமையாக புதிய மனிதனாக இருக்கிறோம்.

எஞ்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையே, உங்கள் ஆவியில் நிகழ்ந்ததை நீங்கள் உங்கள் ஆத்துமாவிலும் மனதின் மண்டலத்திலும் கற்றுக்கொள்வதுதான். உண்மையென்னவெனில், நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்களுடைய கர்த்தராக ஏற்றுக்கொண்ட போது, உங்கள் இரட்சிப்பில் மூன்றில் ஒரு பங்கு முடிவடைந்துவிட்டது. உங்கள் ஆவி முற்றிலுமாக மாற்றம் அடைந்துவிட்டது. இதே ஆவிதான் நித்தியம் முழுவதும் உங்களுக்கு இருக்கும். அது ஏற்கனவே அன்பு, சந்தோஷம், சமாதானத்தை கொண்டுள்ளதாகவும், முழுவதுமாக தேவபிரசன்னத்தினால் நிறைந்துள்ளதுமாகவும் இருக்கிறது. உங்களுடைய ஆவியில் குறைபாடோ பற்றாக்குறையோ இல்லை. ஆனால் அதை நீங்கள் அறிந்து உணர்ந்துக்கொள்ள வேண்டும். அதனால் தான் கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையை படிப்பது மிகவும் முக்கியமாக இருக்கிறது. நீங்கள் முற்றிலுமாக புத்தம் புதிய மனிதர். ஆனால் அதைக் குறித்த அறிவை நீங்கள் அடையும்வரை நீங்கள் மாற்றமடையமாட்டீர்கள். ஆவியும் ஜீவனுமான தேவனுடைய வார்த்தையை நீங்கள் கண்டு, அதன் மூலமாக கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்பதையும், தேவன் என்ன செய்தார் என்பதையும் பார்த்து, அதை விசுவாசிக்க ஆரம்பிக்கும் போதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெயம் வருகிறது.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. 2 கொரிந்தியர் 5:17ஐ வாசிக்கவும் - ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் என்னவாயிருக்கிறான்?

**2கொரிந்தியர்5:17** *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

2. 2 கொரிந்தியர் 5:17ஐ வாசிக்கவும் - பழைய காரியங்களுக்கு என்ன நேர்ந்தது?

3. 2 கொரிந்தியர் 5:17ஐ வாசிக்கவும் - எந்தெந்த காரியங்கள் புதிதாயின?

4. எபேசியர் 2:1-5 ஐ வாசிக்கவும் - நீங்கள் மறுபடிபிறப்பதற்கு அல்லது உயிர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு உங்கள் நிலைமை எப்படி இருந்தது?

**எபேசியர் 2:1-5** அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். (2) அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். (3) அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

(4) தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே, (5) அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

**5.**எபேசியர் 2:2ஐ வாசிக்கவும். அவ்விசுவாசியாக எப்படி நடந்துகொண்டீர்கள் அல்லது எப்படி வாழ்ந்தீர்கள்?

6. எபேசியர் 2:3-5ஐ வாசிக்கவும் - தேவன் எதிலே ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறார்?

7.எபேசியர் 2:4 ஐ வாசிக்கவும் - தேவன் ஏன் அவ்வளவு இரக்கமுள்ளவராய் இருக்கிறார்?

8.எபேசியர் 2:5 ஐ வாசிக்கவும் - நாம் மரித்தவர்களாயும், மீறுதல்களும் பாவங்களும் உள்ளவர்களாய் இருக்கும்போது தேவன் நமக்கு என்ன செய்தார்?

9. எபேசியர் 2:5ஐ வாசிக்கவும் - தேவன் நம்மை எப்படி இரட்சிக்கிறார்?

10. 1கொரிந்தியர் 6: 9-10 ஐ வாசிக்கவும் - இந்த பட்டியலில் விவரிக்கப்பட்டதோடு உங்களை சம்மந்தப்படுத்தி பார்க்க முடிகிறதா?

**1கொரிந்தியர் 6: 9 - 11** *அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,(10)திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.(11) உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

11. 1 கொரிந்தியர் 6: 9-10 ஐ வாசிக்கவும் - "இருந்தீர்கள்" என்ற பதமானது கடந்தகாலம்,நிகழ்காலம் அல்லது எதிர்காலத்தின் நிலையாக உள்ளதா?

12. 1 கொரிந்தியர் 6: 11 ஐ வாசிக்கவும் - நீங்கள் மறுபடிபிறக்கும்போது உங்களுக்கு சம்பவிக்ககும் மூன்று காரியங்கள் என்னென்ன?

13. 1 கொரிந்தியர் 6: 11 ஐ வாசிக்கவும் - இது கடந்த, நிகழ் அல்லது வருங்காலத்தின் நிலமையா?

14. 1 கொரிந்தியர் 6: 17 ஐ வாசிக்கவும்- அப்படியே கர்த்தரோடிருக்கிறவனும் அவருடனே என்னவாக இருக்கிறான்?

**1 கொரிந்தியர் 6: 17 -** அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.

# பதில் ஆதாரங்கள்

1. 2கொரிந்தியர் 5:17ஐ வாசிக்கவும் - ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் என்னவாயிருக்கிறான்?

**ஒரு புதிய சிருஷ்டி**

2. 2கொரிந்தியர் 5:17ஐ வாசிக்கவும் - பழைய காரியங்களுக்கு என்ன நேர்ந்தது?

**அவைகள் ஒழிந்துபோயின**

3. 2 கொரிந்தியர் 5:17ஐ வாசிக்கவும் - எந்தெந்த காரியங்கள் புதிதாயின?

**எல்லாம் புதிதாயின**

4. எபேசியர் 2:1-5 ஐ வாசிக்கவும் - நீங்கள் மறுபடிபிறப்பதற்கு அல்லது உயிர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு உங்கள் நிலைமை எப்படி இருந்தது?

**அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்திருந்தேன்**

5. எபேசியர் 2:2ஐ வாசிக்கவும் அவ்விசுவாசியாக எப்படி நடந்துகொண்டீர்கள் அல்லது எப்படி வாழ்ந்தீர்கள்?

**உலகத்தின் வழிகளை பின்பற்றினேன், பிசாசுக்கு கீழ்படிந்திருந்தேன், கீழ்படியாமையின் ஆவியுடன் வாழ்ந்தேன்**

6.எபேசியர் 2:3-5 ஐ வாசிக்கவும் - தேவன் எதிலே ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறார்?

**இரக்கத்தில்**

7.எபேசியர் 2:4 ஐ வாசிக்கவும் - தேவன் ஏன் அவ்வளவு இரக்கமுள்ளவராய் இருக்கிறார்?

**அவர் நம்மேல் வைத்த அன்பினால்.**

8.எபேசியர் 2:5 ஐ வாசிக்கவும் - நாம் மரித்தவர்களாயும், மீறுதல்களும் பாவங்களும் உள்ளவர்களாய் இருக்கும்போது தேவன் நமக்கு என்ன செய்தார்?

**நம்மை கிறிஸ்துவோடு வாழும்படிச் செய்தார்**

9. எபேசியர் 2:5 ஐ வாசிக்கவும் - தேவன் நம்மை எப்படி இரட்சிக்கிறார்?

**அவருடைய கிருபையினால்**

10.1கொரிந்தியர் 6: 9-10 ஐ வாசிக்கவும் - இந்த பட்டியலில் விவரிக்கப்பட்டதோடு உங்களை சம்மந்தப்படுத்தி பார்க்க முடிகிறதா?

**ஆம்**

11. 1 கொரிந்தியர் 6: 9-10 ஐ வாசிக்கவும் - இருந்தீர்கள் என்ற

பதமானது கடந்தகாலம்,நிகழ்காலம் அல்லது எதிர்காலத்தின் நிலையாக உள்ளதா?

**கடந்தகாலம்**

12. 1 கொரிந்தியர் 6: 11 ஐ வாசிக்கவும்- நீங்கள் மறுபடிபிறக்கும்போது உங்களுக்கு சம்பவிக்ககும் மூன்று காரியங்கள் என்னென்ன?

**தேவனால் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தராகவும்,நீதிமான்களாகவும் ஆக்கப்பட்டீர்கள்.**

13. 1 கொரிந்தியர் 6: 11 ஐ வாசிக்கவும்- இது கடந்த, நிகழ் அல்லது வருங்காலத்தின் நிலமையா?

**நிகழ்காலம்.**

14. 1 கொரிந்தியர் 6: 17 ஐ வாசிக்கவும்- அப்படியே

கர்த்தரோடிருக்கிறவனும் அவருடனே என்னவாக இருக்கிறான்?

**ஒரே ஆவியாயிருக்கிறான்.**

பாடம் 10

# கிறிஸ்துவுக்குள் உங்கள் அடையாளம் - பாகம் 2

## ஆண்ட்ரூ வோமக்

முந்தைய பாடத்தில், நாம் மறுபடி பிறப்பது என்றால் என்ன என்பதை பற்றியும், அதாவது நம்முடைய ஆவி மாற்றமடைந்ததை பற்றி பார்த்தோம். இதற்கு 2கொரிந்தியர்-5-17ஐ உபயோகப்படுத்தினோம். இந்த வசனம், *"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்று சொல்கிறது. நாம் மறுபடியும் பிறந்த பொழுது, நம்முடைய* ஆவியில் முழுமையான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்றும், நம்முடைய ஆவியில் நிகழ்ந்த அந்த மாற்றத்தை நாம் அறிந்துகொள்ளும் ஒரே வழி தேவனுடைய வார்த்தையின் மூலமாக மட்டுமே என்றும் காண ஆரம்பித்தோம். அதை நாம் வெளிப்புற விஷயங்கள் மூலமாக உணர முடியாது. நம்முடைய உணர்ச்சிகள் மூலமாகவும் உணர முடியாது. ஏனெனில் உணர்ச்சிகள் ஆத்தும மண்டலத்தில் உள்ளது. ஆனால் நம்முடைய ஆவியின் பகுதிதான் முழுமையாக மறுரூபமடைந்திருக்கிறது.

நான் சில வசனங்களை குறிப்பிடுகிறேன், அவைகள் ஒரு மனிதன் தனது வாழ்வில் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் போது ஏற்படுகின்ற வைகளை நமக்கு காண்பிக்கிறது. எபேசியர்-4:24 *"மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறது.* ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது, அவர்களுடைய ஆவி மெய்யான நீதியும் பரிசுத்தமும் அடைகிறது. வேதாகமம் இரண்டு விதமான நீதியை குறித்து பேசுகிறது.

உங்களுடைய சொந்த செயல்களின் மூலம் நீங்கள் உண்டுபண்ணுகிற நீதி ஒன்று இருக்கிறது. மற்றவர்களுடனான உறவில் நீங்கள் அவ்விதமான நீதியை பராமரிக்கவேண்டும். நீங்கள் சரியான வாழ்க்கை வாழாவிட்டால் அல்லது சரியான செயல்கள் செய்யாவிட்டால், ஒருவேளை உங்கள் முதலாளி உங்களை வேலையிலிருந்து நீக்கிவிடலாம் அல்லது உங்கள் மனைவி உங்களை விவாகரத்து செய்துவிடலாம். எனவே நீங்கள் உங்களுடைய சொந்த நீதியை கொண்டிருக்கவேண்டும். இருப்பினும் தேவன் உங்களுடைய வெளிப்புற நீதியை கொண்டு உங்களை ஏற்றுக்கொள்வதில்லை. தேவன் நிஜமாகவே அவருடைய நீதியை உங்களுக்கு தந்திருக்கிறார்.

2கொரிந்தியர் 5:21 ல், நாம் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பிதாவாகிய தேவன் குமாரனை நமக்காக பாவமாக்கினார் என்று சொல்கிறது. ஆகவே நம்முடைய வெளிப்புறமான நீதிக்கு மிகவும் அப்பாற்பட்ட ஒரு நீதி இருக்கிறது. அந்த நீதி தேவன் நமக்கு என்ன செய்தாரோ அதன் அடிப்படையில் இருக்கிறது. நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக தேவனுடைய நீதியை பெற்றுக்கொண்டோம். நாம் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கிறோம். அந்த நீதியை அடையும்படி மேலும் மேலும் வளரவில்லை. நாம் ஏற்கனவே நீதிமான்களாக இருக்கிறோம். ஒரு எளிமையான வரையறை என்னவென்றால் நாம் ஏற்கனவே தேவனிடம் சரியான நிலைப்பாட்டில் இருக்கிறோம்.

கிறிஸ்துவைக்கொண்டு தேவன் நம்மேல் பிரியமாக இருக்கிறார், மற்றபடியாக இல்லை. மாற்றமே நம்முடைய ஆவியில்தான்

நடந்திருக்கிறது. நாம் ஏற்கனவே மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டிக்கப்பட்டு புத்தம்புது சிருஷ்டிகளாக இருக்கிறோம். **எபேசியர்:2-10**ல்*"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்".* என்று சொல்கிறது. நம்முடைய ஆவியில், நாம் பரிபூரணமும் முழுநிறைவுள்ளவர்களாகவும் இருக்கிறோம். அங்கே பாவமோ குறைபாடோ இல்லை. **எபேசியர்1:13**ல் - *"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்".*

உங்களில் சிலர் இப்படியாக நினைக்கலாம், "சரி, நான் முதல் முதலில் கர்த்தரை விசுவாசிக்கும்போது, நான் முழுமையாக மன்னிக்கப்பட்டேன், சுத்திகரிக்கப்பட்டேன் என்று நானும் விசுவாசிக்கத்தான் செய்தேன். எல்லாம் நன்றாக தான் இருந்தது. ஆனால்,அதன் பின்பு நான் பாவம் செய்தபோதோ, நான் மறுபடியும் தேவனை தோற்றுப்போக செய்துவிட்டேன்" என்று நினைக்கலாம். அப்படி நீங்கள் பாவம் செய்திருந்தால், உங்களுடைய மனது மற்றும் உணர்ச்சி பகுதிகளில்தான் தோற்றுப்போயிருப்பீர்கள். ஆனால் உங்கள் ஆவி பாவம் செய்யவில்லை. பழத்தை பதப்படுத்துவதற்காக, எப்படி ஒரு பெண் ஜாடியில் பழத்தை போட்டு, அதை எல்லா அசுத்தங்களிலிருந்து காத்துக்கொள்ளும்படியாக, காற்று நுழைய முடியாதபடி அதன்மீது மெழுகை ஊற்றி, அதை மூடி எப்படி சீல் வைக்கப்பட்டதோ,அப்படியே உங்களுடைய ஆவியும் சீல் (முத்திரை) வைக்கப்பட்டுள்ளது. தேவன் உங்களை சீல் (முத்திரை) வைத்திருக்கிறார். ஆகையால் நீங்கள் மறுபடியும் பிறந்தபொழுது புதிய ஆவியை பெற்றீர்கள். பாவம் உங்களுடைய ஆவிக்குள் ஊடுருவவே முடியாது. உங்களுக்கு ஒரு

புதிய அடையாளம் இருக்கிறது. நீங்கள் தேவனோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், உங்களுடைய மாம்சத்தின்படியல்லாமல், ஆவியில் நீங்கள் என்னவாகயிருக்கிறீர்களோ அதனடிப்படையில்தான் நீங்கள் அவரோடு ஐக்கியம் வைத்துக்கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் தான் நீங்கள் அவரை தொழுதுக் கொள்ளவேண்டும்.

உண்மையில் இது கிறிஸ்தவ வாழ்க்கையில் பெரிய மறுரூப மாற்றமாகும். அதாவது ஒரு மனிதன் தனது அடையாளத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் சரீர மண்டலத்தில் என்ன செய்கிறீர்களோ அதனடிப்படையிலோ, உங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்களோ அதனடிப்படையிலோ தேவனோடு உறவு வைத்துக்கொள்ளக்கூடாது. அவர் உங்களுக்கு என்ன செய்தாரோ, அதன் முலமாக நீங்கள் ஆவியில் என்னவாக இருக்கிறீர்களோ, அதனடிப்படையில் தான் அவரோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டும். ஊசலாடும்படியில்லாமல் (இப்படியும் அப்படியும் தடுமாறிக்கொண்டே இல்லாதபடி), அது ஒரு முடிக்கப்பட்ட பரிபூரண செயலாக இருக்கிறது. நீங்கள் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டிப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். அது உங்களுடைய ஆவி பகுதி. தேவனோடு ஐக்கியம் வைத்துக் கொள்வதற்கு, நீங்கள் அவரை ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்கிற இந்த அடையாளத்தில் நீங்கள் நிலைத்து நிற்கவேண்டும்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. 1கொரிந்தியர்-6:17. நம்முடைய ஆவியில் முழுமையான மாற்றம் நடைபெற்றது என்பதை நாம் அறிந்துகொள்வதற்கு ஒரே வழி தேவனுடைய வார்த்தையின் மூலமாகத்தான். இந்த வசனம் நமக்கு என்ன நடந்ததாக சொல்கிறது?

1**கொரிந்தியர்-6:17-** *அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.*

2. எபேசியர்-3:17ஐ வாசிக்கவும். கிறிஸ்து இப்போது எங்கே இருக்கிறார்?

**எபேசியர்-3:17-** *விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,*

3. எபேசியர்-3:17ஐ வாசிக்கவும். இது எப்படி நிகழ்கிறது?

4. 1 யோவான்-5:12 வாசிக்கவும். இரட்சிப்பை பெற்றுக்கொள்ள நாம் யாரை உடையவர்களாக இருக்க வேண்டும்?

**1 யோவான்-5:12 -** *குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.*

5. கொலோசெயர் 1:26-27ஐ வாசிக்கவும். ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது வெளியாக்கப்பட்ட இரகசியம் என்ன?

**கொலோசெயர் 1:26-27** *உங்கள் பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். (27)புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.(28) எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.(29) அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.*

6. எபேசியர் 4:23-24ஐ வாசிக்கவும். நீதியினாலும் மெய்யான பரிசுத்தத்தினாலும் உருவாக்கப்பட்டது ?

**எபேசியர் 4:23-24** - *உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, (24) மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.*

7. 2கொரிந்தியர் 5:21ஐ வாசிக்கவும். நாம் யாருடைய நீதியை உடையவர்களாக இருக்கிறோம்?

**2கொரிந்தியர்-5:21** -*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

8. எபேசியர் 1:4ஐ வாசிக்கவும். தேவனுக்கு முன்பாக விசுவாசியின் நிலை என்னவாக இருக்கிறது?

**எபேசியர் 1:4 -***தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு,அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,*

9. எபேசியர்-1:6ஐ வாசிக்கவும். நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டோம்?

**எபேசியர் 1:6 -** *தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த்தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.*

# பதில் ஆதாரங்கள்

1. 1கொரிந்தியர்-6-17 நம்முடைய ஆவியில் முழுமையான மாற்றம் நடைபெற்றது என்பதை நாம் அறிந்துகொள்வதற்கு ஒரே வழி தேவனுடைய வார்த்தையின் மூலமாகத்தான். இந்த வசனம் நமக்கு என்ன நடந்ததாக சொல்கிறது?

**நம்முடைய ஆவி கர்த்தரோடு இசைந்திருக்கிறது.**

2. எபேசியர்-3:17ஐ வாசிக்கவும். கிறிஸ்து இப்போது எங்கே இருக்கிறார்?

**நம்முடைய இருதயங்களில்**

3. எபேசியர்-3:17ஐ வாசிக்கவும். இது எப்படி நிகழ்கிறது?

**விசுவாசத்தினால்**

4. 1யோவான்-5:12 வாசிக்கவும். இரட்சிப்பை பெற்றுக்கொள்ள நாம் யாரை உடையவர்களாக இருக்க வேண்டும்?

**குமாரரானாகிய இயேசு கிறிஸ்து.**

5. கொலோசெயர் 1:26-27ஐ வாசிக்கவும். ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது வெளியாக்கப்பட்ட இரகசியம் என்ன?

**கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.**

6. எபேசியர் 4:23-24ஐ வாசிக்கவும். மெய்யான நீதியினாலும் பரிசுத்தத்தினாலும் சிருஷ்டிக்கப்பட்டது என்ன?

**நமது புதிய மனிதன் (நமது மறுபடி பிறந்த ஆவி )**

7. 2 கொரிந்தியர் 5 : 21ஐ வாசிக்கவும். நாம் யாருடைய நீதியை உடையவர்களாக இருக்கிறோம்?

**கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியை.**

8. எபேசியர் 1:4ஐ வாசிக்கவும். தேவனுக்கு முன்பாக விசுவாசியின் நிலை என்னவாக இருக்கிறது?

**பரிசுத்தமும் குற்றமற்றவராக.**

9. எபேசியர்-1:6ஐ வாசிக்கவும். நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டோம்?

**பிரியமானவருக்குள் (இயேசு கிறிஸ்துவிற்குள்)**

பாடம் 11

# கிறிஸ்தவன் பாவம் செய்யும் போது என்ன நேரிடுகிறது?

டான் க்ரோ

இன்றையதினம் கிறிஸ்தவன் பாவம் செய்யும்போது என்ன நேரிடுகிறது? என்ற தலைப்பில் பாடத்தை கவனிக்கப் போகிறோம். 1யோவான் 1:8-9 வசனங்களில், *"நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது(9) நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"* என்று கூறப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம் காலப்போக்கில் தடுமாற்றமடைந்து கடைசியில் பாவம் செய்துவிடுகிறோம். ஆனால் இப்பொழுதுக்கும், மறுபடியும் பிறப்பதற்கு முன்புக்கும் என்ன வித்தியாசம் என்றால், இப்பொழுது நாம் புதுசுபாவம் உடையவர்களாக இருக்கிறோம். அது, நாம் பாவம் செய்யும்போது நம்மை துயரப்படச்செய்கிறது. நாம் பாவம்செய்யாமல் நீதியுள்ள வாழ்க்கையை வாழவேண்டுமென்று இருக்கிறோம். ஆனால் நாம் பாவம் செய்தால் என்ன நேரிடுகிறது? நாம் மறுபடியும் இரட்சிக்கப்படவேண்டுமா? அதைத்தான் வேதாகமம் போதிக்கிறதா? அப்படியாக இருந்தால் நமக்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லை. ஒருவிதத்தில் சொல்லப்போனால் நாம் இந்த உலகத்திலுள்ளவர்களைவிட மிகவும் பரிதாபமான நிலையில்தான் இருப்போம். குறைந்தபட்சம் அவர்கள் பாவம் உண்டென்று உணர்த்தும் மனசாட்சியினால் வாதிக்கப்படாமலாவது இருக்கிறார்களே. விசுவாசிகளாக, பாவம் நமக்கு நம்முடைய கவனத்தின் மையமாக இருக்கக்கூடாது. எபிரேயர் 10:2ன் படி, இயேசுகிறிஸ்துவின் பலியின் மூலமாக, விசுவாசிக்கு பாவம் உண்டென்று உணர்த்தும் மனசாட்சி இருக்கக்கூடாது. பாவம் நம்முடைய வாழ்க்கையின் மையமாக இருக்கக்கூடாது. தேவனே நமக்கு மையமாக இருக்க வேண்டும்.

ரோமர் 4:2ல் *“ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப் பட்டானாகில் (நீதிமான் என்று அறிவிக்கப்பட்டான்) மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை.”* (குறியீட்டில் உள்ளது நான் சொன்னது) என்று சொல்லப்பட்டுள்ளது. இரட்சிப்பு நம்முடைய தகுதியின் அடிப்படையில் இருக்குமானால், அதாவது நாம் செய்யும் காரியங்களை வைத்து இருக்குமானால், நாம் மெச்சிக்கொள்ள முடியும். நாம், “கர்த்தரே நீர் சிலுவையில் செய்துமுடித்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் நான் செய்த காரியங்களை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!” என்று சொல்ல முடியும். ஆகையால், நாம் நித்தியகாலம் முழுவதும் இயேசுவின் முதுகில் தட்டிக்கொடுத்துக் கொண்டும், நாம் செய்த காரியங்களை வைத்து நம்முடைய முதுகில் நம்மைநாமே தட்டிக்கொடுத்துக்கொண்டே இருப்போம். ஆனால் அப்படி இல்லை! இரட்சிப்பை குறித்து மகிமைபப்படவோ அல்லது மேன்மைபடுத்திக்கொள்ளவோ மனிதனுக்கு எவ்வித பங்கும் இல்லாதவாறு தேவன் இரட்சிப்பை வடிவமைத்துள்ளார். மகிமையும் மேன்மைப்படுத்துதலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலேயே இருக்கும் (ரோமர் 3:27). நித்திய ஜீவனெனும் ஈவு, நிச்சயமாகவே ஒரு ஈவாக இருக்கிறது. அதை சம்பாதிக்க முடியாது. (ரோமர் 6:23)

ரோமர் 4:2ல்*ஆபிரகாம் தம்முடைய சொந்த கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில், மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதாவது காரணம் இருந்திருக்கும் என்று சொல்லுகிறது. ஆனால் நடந்தது அதுவல்ல. மனிதன் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறான் என்று வேதவாக்கியம் எப்படி சொல்லுகிறது? அவனுடைய சொந்த செயல்களினாலேயா? அவனுடைய சொந்த கிரியைகளினாலேயா? அவன் செய்யும் காரியங்களினாலேயா? ஆபிரகாம் எவ்வாறு நீதிமானாக எனப்பட்டான் அல்லது நீதிமானாக அறிவிக்கப்பட்டான்? அவன் செய்த காரியயங்கள் மூலமாகவா அல்லது செய்யாததின் மூலமாகவா, அல்லது அவன் விசுவாசித்ததின் மூலமாக தேவனை வெறுமனே நம்பி, அவரை சார்ந்திருப்பதின் மூலமாகவா? வேதாகமம் ரோமர் 4:3ல், “ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது” என்று சொல்கிறது.*

நான் பாவம் செய்த மற்றும் தோற்றுப்போன நேரங்களிலும்கூட எது என்னை நான் அழிந்துபோகாதபடி பாதுகாக்கிறது? எது என்னை நிலைநிறுத்துகிறது? அது என்னவென்றால், இயேசு என்னுடைய எல்லா பாவங்களையும் சிலுவையில் சுமந்தார் என்பதும், மற்றும் அவரை விசுவாசிப்பதின் மூலமாக (என்னுடைய சொந்த கிரியைகளினால் அல்ல), நான் நீதிமானாக்கப்பட்டேன் (தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டேன்) என்பதும்தான். ரோமர் 4:6-8ல், "*அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனால் நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தை காண்பிக்கும் பொருட்டு: எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்! எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று* தாவீது சொல்லியிருக்கிறான்" என்று சொல்லுகிறது.

அதன் பின்பு 7வது வசனத்தில் "*எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.*" என சொல்லப்பட்டுள்ளது. "*எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான்*" (ரோமர் 4:8) என்பது தான் தீர்வு. அவர் சிலநேரம் எண்ணாமலிருக்கலாம் என்றோ, சில நேரம் எண்ணலாம் என்றோ, சிலநேரம் எண்ணமாட்டார் என்றோ அது சொல்லவில்லை. *எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று* சொல்லுகிறது. இதைத்தான் அழுத்தமான எதிர்மறையான வாசகம் என்று கிரேக்கத்தில் சொல்லுவார்கள். அப்படியென்றால் அவர் ஒருபொழுதும், எப்பொழுதும் பாவத்தை நம்முடைய கணக்கில் (வைக்கமாட்டார்) எண்ணமாட்டார். இதுவே புதுஉடன்படிக்கையின் நற்செய்தி. எபிரெயர் 10:16ல், " நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் (அவர்களின் இருதயத்தில்) வைத்து, அவைகளை அவர்களுடைய

மனதில் (அவர்களின் மனதிலும் கூட) எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (குறியீட்டில் உள்ளது நான் சொன்னது). அந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியை தேவன் 17வது வசனத்தில் சொல்லுகிறார்: "அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதை சொல்லுகிறார்."

நீங்கள் பாவம் செய்து அதை அறிக்கை செய்ய நேரம் கிடைக்காத போதும், எது உங்களை நீதிமானாகவும், சரியான நிலையிலேயும் பாதுகாத்து நிலைநிறுத்துகிறது? அது நீங்கள் இயேசுகிறிஸ்துவின் மேல் கொண்ட விசுவாசமாகும். அவர் நாமம் இயேசு. அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். (மத்தேயு 1:21)

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1.ரோமர் 4:5ஐ வாசிக்கவும். தேவன் யாரை நீதிமானாக்குகிறார்?

**ரோமர் 4:5-6 -***ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.(6) அந்தப்படி,கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு:*

**2.**ரோமர் 4:2-3 வாசிக்கவும். ஆபிரகாம் விசுவாசித்த போது அதற்கு

முன்பு அவனிடம் இல்லாத எந்த ஒன்றை தேவன் அவனுக்கு

கொடுத்தார்?

**ரோமர் 4:2-3 -** *ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை.(3) வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது.*

3.ரோமர் 4:22-24ஐ வாசிக்கவும். ஆபிரகாமை போல நாமும்

விசுவாசித்தால் நமது கணக்கில் தேவன் எதை கொண்டு வருவார்?

**ரோமர் 4:22-24 -** *ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (23) அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காகமாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது.*

*24. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்.*

4. ரோமர் 4:6ஐ வாசிக்கவும். தேவநீதியை எந்த மனிதனுடைய கணக்கில் கொண்டு வருவார்?

A. அவர்களுடைய கிரியைகளின்படி

B.அவர்களுடைய செயல்களுக்கு அப்பாற்பட்ட விதத்தில்

C.அவர்கள் எவ்வளவு நல்லவர்களோ அதைப் பொறுத்து

5 எபிரேயர் 10:14 வாசிக்கவும் விசுவாசிகளை தேவனுக்கு முன்பாக எத்தனை காலம் பூரணப்படுத்துகிறார்?

**எபிரேயர் 10:14**- *ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.*

6.ரோமர் 5:17ஐ வாசிக்கவும். நீதி எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டது?

A. சம்பாதிப்பதின் மூலமாக

B. பரிசாக

C. கிரியை செய்வதின் மூலமாக

**ரோமர் 5:17 -***அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின்*

*பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.*

7.”ஈவு” என்ற வார்த்தை எதை குறிக்கிறது?

8.இயேசுவை உங்களுடைய தனிப்பட்ட இரட்சகராக நம்புவதற்கு அவர் உங்களை எங்கு கொண்டு போவார் என்று நம்ப வேண்டும்?

A. திருச்சபை

B. பரலோகம்

C. ரஷ்யா

# பதில் ஆதாரங்கள்

1.ரோமர் 4:5 வாசிக்கவும் தேவன் யாரை நீதிமானாக்குகிறார்?

**பாவியை**

2.ரோமர் 4:2-3ஐ வாசிக்கவும். ஆபிரகாம் விசுவாசித்த போது அதற்கு முன்பு அவனிடம் இல்லாத எந்த ஒன்றை தேவன் அவனுக்கு கொடுத்தார்?

**நீதிமானாக்கப்பட்டான்.**

3.ரோமர் 4:22-24ஐ வாசிக்கவும். ஆபிரகாமை போல நாமும் விசுவாசித்தால் நமது கணக்கில் தேவன் எதை கொண்டு வருவார்?

**நீதிமானாக்கப்படுதலை**

4.ரோமர் 4:6 வாசிக்கவும். தேவநீதியை எந்த மனிதனுடைய காலத்தில் கொண்டு வருவார்?

**அவர்களுடைய செயல்களுக்கு அப்பாற்பட்ட விதத்தில்**

5.எபிரேயர் 10:14 வாசிக்கவும். விசுவாசிகளை தேவனுக்கு முன்பாக எத்தனை காலம் பூரணப்படுத்துகிறார்

**என்றென்றைக்கும்.**

6. ரோமர் 5:17ஐ வாசிக்கவும். நீதி எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டது?

**பரிசாக.**

7.”ஈவு” என்ற வார்த்தை எதை குறிக்கிறது?

**இலவசமாக கொடுக்கப்படுவது பெற்றுக் கொள்பவர் கிரையம் கொடுக்காமல் பெற்றுக் கொள்வது.**

8.இயேசுவை உங்களுடைய தனிப்பட்ட இரட்சகராக நம்புவதற்கு, அவர் உங்களை எங்கு கொண்டு போவார் என்று நம்ப வேண்டும்?

**B.பரலோகம்.**

பாடம் 12

# தேவனுடைய வார்த்தையின் முழுமை

## ஆண்ட்ரூ வோமக்

மாற்கு 4ம் அதிகாரமானது தேவனுடைய வார்த்தையின் முழுமையை, அதாவது அதிலுள்ள நம்பகத்தன்மையை, வல்லமையை, உத்தமத்தை, காண்பிக்கும் மிகசிறந்த அதிகாரமாக இருக்கிறது. நீங்கள் மாற்கு 4வது அதிகாரத்தை மத்தேயு 13 மற்றும் லூக்கா 8ம் அதிகாரத்தோடு சேர்த்துப்பார்க்கும்போது, இந்த ஒரு நாளில் மட்டும் குறைந்தபட்சம் பத்து உவமைகள் போதிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று விதையை விதைக்கிற ஒருவனைப் பற்றிய உவமையாகும். மாற்கு 4:26ல், *"பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை* விதைத்து" என்று சொல்லப்பட்டுள்ளது. 14ம் வசனத்தில் விதை என்பது தேவனுடைய வசனம் என்று குறிப்பிட்டுள்ளதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். நீங்கள் விவசாயியாக இருப்பது எப்படி என்று தேவன் கற்றுக்கொடுக்கவில்லை. ஆனால் ஆவிக்குரிய சத்தியங்களை விளக்குவதற்காக இயற்கைப்பிரகாரமான காரியங்களை உபயோகப்படுத்துகிறார். 27ம் வசனத்தில், *"இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது"*, என்று சொல்லப்பட்டுள்ளது. அது மிகவும் முக்கியமானது என்று நம்புகிறேன். உண்மையில் அந்த மனிதனுக்கு புரியவில்லை என்று இது சொல்லுகிறது. இது எப்படி நடக்கிறது என்று இந்த மனிதனுக்கு தெரியவில்லை.

சிலர், "நீங்கள் எதைப்பற்றி பேசுகிறீர்கள் என்று எனக்கு கொஞ்சம்கூட புரியவில்லை. தேவனுடைய வார்த்தையை வாசிப்பது என்னை எப்படி மாற்றும், தேவனுடைய ஜீவன் எப்படி எனக்குள் வந்து என்னை உயிரடையச் செய்கிறது" என்று சொல்லுகிறார்கள். எனக்கு அது முழுமையாக புரியவில்லையென்றாலும் அது கிரியை செய்கிறது என்பதை மட்டும் நான் அறிவேன். எப்படி ஒரு சிறு விதை நிலத்தில்

விதைத்தவுடன் அதிலிருந்து தண்டு வளர்ந்து அதன் முழுவதும் அநேக கதிர்களும், கதிர்கள் நிறைந்த தானியத்தின் நூறு மடங்கு விளைச்சலை தருகிறது என்பது எனக்கு புரியவில்லை. யாரும் அதை முழுமையாக புரிந்துகொள்ளவும் இல்லை. ஆனால் அது கிரியை செய்கிறது. இதுவும் கிரியை செய்கிறது என்று நான் சொல்லுகிறேன். தேவனுடைய வார்த்தையை படித்து இதை நன்றாக ஊறவிடும்போது, இது உங்களது மனப்பான்மையையும், உங்களுடைய அனுபவத்தையும், உங்களுடைய கண்ணோட்டத்தையும் மாற்றுகிறது.

28ம் வசனத்தில் *எப்படியென்றால், "நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத்தானாய்க் கொடுக்கும்."* என்று சொல்லப்பட்டுள்ளது. விதையை அடைகாத்து முளைக்கப்பண்ணி, அதன் ஜீவனை வெளிப்படுத்தும் விதத்தில் நிலமானது உருவாக்கப்பட்டுள்ளது. உங்களுடைய இருதயம் தேவனுடைய வார்த்தைக்காக படைக்கப்பட்டுள்ளது. அதுதான் உண்மை. தேவனுடைய வார்த்தையானது உங்களுடைய இருதயங்களில் வைக்கப்படு வதற்காகவே உருவாக்கப்பட்டது. வேதத்தை சுமப்பதால் அல்லது எப்போதும் அதை அருகிலேயே வைத்துக் கொண்டிருப்பதால் அல்லது நம்முடைய மேஜையில் வைத்திருந்தாலோ, எங்கு போனாலும் உடன் கொண்டு செல்வதாலோ எந்த பயனும் இல்லை. அது உங்கள் வாழ்வில் எந்த வல்லமையையும் வெளிகொண்டுவராது. நீங்கள் வேத வசனத்தை எடுத்துக்கொண்டு அதை விதையாக்கி உங்கள் இருதயத்தில் விதைக்க வேண்டும். நீங்கள் அப்படி செய்யும் போது உங்கள் இருதயமானது தானாகவே பலனைக் கொடுக்கும்படி வடிவமைகக்கப்பட்டுள்ளது. அது உங்கள் வாழ்க்கையில் காரியங்கள் நடைபெறும் விதத்தை தானாகவே மாற்றியமைக்கும். மேலும் அந்த வசனம் நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும் என்று சொல்லுகிறது. அதாவது வளர்ச்சி பெறுவதற்கும், முதிர்ச்சி பெறுவதற்கும் வெவ்வேறு படிகளும் நிலைகளும் இருக்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. நிறையபேர் என்னிடம் வந்து,தாங்கள் தேவனுக்காக ஒரு நல்ல தெய்வீகமான காரியம் நடைபெற

எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும், அதற்கு நான் அவர்களோடு ஒருமனப்படும்படியாக என்னிடத்தில் வருகிறார்கள். ஆனால் அவர்கள் அதுவரை எதையுமே செய்யாமல் இருந்திருந்தால், ஒருவரையும் தேவனிடத்தில் வழிநடத்தாமல் இருந்திருந்தால், அடுத்த சில வாரங்களில் எந்தவிதமான தொலைக்காட்சி ஊழியமோ ரேடியோ ஊழியமோ அவர்களுக்கு கிடைக்கப்போவதில்லை என்பதை என்னால் உறுதியாய் சொல்லமுடியும்.

நீங்கள் காரியங்களை படிப்படியாக செய்ய வேண்டும். தேவனிடத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு, சில நிலைகள் இருக்கிறது. அதை தான் இந்த உவமையானது நமக்கு சித்தரித்துக் காண்பிக்கிறது. முதலாவதாக நீங்கள்தான் தொடங்க வேண்டும் அதன் பிறகு நம்பிக்கை உண்டாகும், அடுத்து விசுவாசம் உண்டாகும். அதன் பிறகுதான் விளைச்சல் உண்டாகும். வெற்றிக்கு எப்பொழுதுமே படிகள் இருக்கிறது. யாருமே தொடங்கியவுடன் பூஜ்யத்திலிருந்து ஆயிரம் மைல்கள் வேகத்தில் உடனடியாக பாய்ந்துவிட முடியாது. இது தெய்வீக வாஞ்சையாய் இருந்தால் கூட, அது அவ்விதமாக கிரியை செய்யாது. தேவனுடைய ராஜ்யம் என்பது விதைக்கு ஒப்பாய் இருக்கிறது என்று இந்த வேதப்பகுதி காண்பிக்கிறது. வார்த்தையானது உங்கள் இருதயங்களில் விதைக்கப்பட வேண்டும். அதன் பின்பு படிப்படியாக விளைச்சல் உண்டாகும். எப்படியென்றால், “முதலில் முளையையும், பின்பு கதிரையும், பின்பு கதிரிலே நிறைந்த தானியமும்” என்கிறது. அடுத்த வசனத்தில், “பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார்” என்று சொல்லப்படுகிறது. சில படிகள் இருக்கிறது. ஆனால் இறுதியில் முதிர்ச்சிக்கும் பலனுக்குமான ஒரு நேரம் வரும்.

35வது வசனத்தில் இந்த காரியம் குறிப்பிடப்பட்டுள்ளது. *“அன்றுசாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்.”* இயேசு, நாள் முழுவதும் தேவனுடைய வார்த்தையின் வல்லமை குறித்து போதித்துக் கொண்டிருந்தார். வார்த்தை எப்படி விதையை போல் இருக்கிறது என்றும், அது எவ்வாறு

தேவனுடைய ஜீவனை உங்களுடைய வாழ்வில் வெளிப்படுத்தும் என்பதையும் போதித்துக் கொண்டிருந்தார். அவர் இதைப்பற்றிப் பேசும்போது குறைந்தது 10 உவமைகளைப் பயன்படுத்தினார். ஆகையால் அவர்களுக்கு அவர் ஒரு பரீட்சை வைக்கிறார். அவர்களிடத்தில் கூறும்போது, "அக்கறைக்கு போவோம் வாருங்கள்" என்றார். இதுதான் அவர்களுக்கு கர்த்தரிடத்திலிருந்து வந்த வார்த்தை. நாம் படவில் போவோம் என்றோ, பாதி வழியில் அது மூழ்கிப்போகும் நிலை உண்டாகும் என்றோ அவர் கூறவில்லை. ஆனால், "அக்கறைக்கு போவோம்" என்று கூறினார். அவர் உடனே படகில் ஏறி தூங்கப் போனார். படகு போய்க்கொண்டிருக்கையில் பெரிய புயல் வந்தது. படகு தண்ணீரால் நிரம்பியது. இங்கே நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். பயணித்த படகு ஒரு சொகுசு கப்பல் அல்ல. அப்படிப்பட்ட கப்பல்களில் அடுத்தடுத்து அறைகள் வசதியானதாக இருக்கும். அப்படி ஒரு இடம் இருந்திருந்தால், இயேசு நனைந்து போகாமல் என்ன நடக்கிறது என்று அறியாமல் தூங்கிக் கொண்டு இருந்தார் என்று சொல்லலாம். அது திறந்தநிலை படகு. அதிலே இயேசு தூங்கிக்கொண்டிருந்தார். மெதுவாக அந்த படகு தண்ணீரில் அமிழ்ந்து கொண்டிருந்தது. இது முக்கியமாக இருப்பதற்கு காரணம் என்னவென்றால், அங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார். இருந்தும் கூட அவர் தூங்கிக்கொண்டிருந்தார். அவருடைய சீஷர்கள் மிகவும் பயந்து கலங்கிப் போனார்கள். அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து, "போதகரே நாங்கள் அழிந்து போகிறோமே உமக்கு கவலை இல்லையா?" என்றனர். இதையே வேறு வார்த்தையில் சொல்வோமானால், "ஏதாவது செய்யுங்கள்,செய்யுங்கள், தண்ணீரை எடுத்து வெளியே ஊற்றுங்கள்! துடுப்பு போடுங்கள்! எதையாகிலும் செய்யுங்கள்! உங்கள் பங்கிற்கு எதையும் செய்யாமல் இருக்கிறீர்கள்!" என்று சொன்னார்கள். அநேக சமயங்களில் மக்கள் இதைப் போலவேதான் தேவனிடம் அணுகுகின்றனர். "ஆண்டவரே, நீர் ஏன் எதையும் செய்யவில்லை" என்று கேட்கின்றனர். அவர் ஏற்கனவே செய்து முடித்திருக்கிறார். தேவன் நமக்கு தேவையான அனைத்தையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியின் மூலம் நமக்கு வழங்கிவிட்டார். அவர் தமது வார்த்தையை உருவாக்கி

இந்த எல்லா விதைகளையும் கொடுத்திருக்கிறார். அந்த விதைகளை எடுத்து நமது இருதயமாகிய நிலத்தில் விதைக்க வேண்டியது நம்முடைய வேலையாக இருக்கிறது. மேலும் அதினின்று ஜீவன் உண்டாகும் வரை அதை தியானிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆனால் சீஷர்களும் இயேசு கிறிஸ்துவை தூக்கத்திலிருந்து எழுப்பும்படி விரும்பி, "நீர் எழுந்து ஏதாகிலும் செய்ய மாட்டீரோ" என்றார்கள். அவர் எழுந்து காற்றையும் கடலையும் அதட்டினார். அப்போது அமைதல் உண்டாயிற்று. அவர் திரும்பி தன்னுடைய சீஷர்களை பார்த்து, ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? "ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று" என்றார். அவர் எழுந்து, மன்னித்துக் கொள்ளுங்கள், ஏதாவது செய்திருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அவர்களுக்கு வேத வசனத்தை போதிப்பதும் வாக்குத்தத்தங்களை கொடுப்பதும் மட்டுமே அவருடைய பங்காக இருக்கிறது. அந்த வார்த்தையை எடுத்துக்கொண்டு அதை விசுவாசிக்க வேண்டியது அவர்களுடைய பங்காக இருக்கிறது. இயேசு இந்த உலகத்திற்கு வந்ததின் மூலமாக தேவன் சகலத்தையும் கொடுத்திருக்கிறார். உங்கள் வாழ்வின் சகல பகுதிகளிலும் நீங்கள் வெற்றிப்பெறும்படிக்கு அனைத்தையும் விதையின் வடிவாக வார்த்தையில் கொடுத்து இருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவனுடைய வார்த்தையாகிய விதையை எடுத்து, அதை வாசிப்பது மூலமாக உங்கள் இருதயத்தில் விதைத்து, நன்றாய் தியானித்து, சிந்தித்து, அந்த விதையை உங்களுக்குள்ளே வேர்கொள்ளும்படிக்கு அனுமதிக்க வேண்டும். நீங்கள் அப்படி செய்யும் போது, நீங்கள் எழுந்து நின்று உங்கள் வாழ்க்கையில் வரக்கூடிய சூறாவளி காற்றை பார்த்து, இரையாதே அமைதலாயிரு என்று சொல்ல முடியும்.

இயேசு தங்களுக்கு கொடுத்த அனைத்து போதனைகளையும் சீஷர்கள் எடுத்துக்கொண்டு, "அக்கரைக்கு போவோம் வாருங்கள்" என்று சொல்லவேண்டும் என்பதுதான், தேவன் இந்த சீஷர்களுக்கு தந்த மிகசிறந்தது என நான் நம்புகிறேன்."இன்று நமக்கு கற்றுக்கொடுத்த எல்லாவற்றின்படியும் இது (அக்கரைக்குப் போவோம் வாருங்கள்) ஒரு வாக்குத்தத்த வார்த்தை" என்று அவர்கள் சொல்லி

இருக்கலாம். அதன்படி, “சர்வலோகத்தையும் சிருஷ்டித்தவர், நாம் பாதிவரை சென்று மூழ்கிவிடுவோம் என்று சொல்லாமல் அக்கறைக்கு போவோம் வாருங்கள் என்று சொன்னார்” என்றும் சொல்லியிருக்கலாம். அவர்கள் வார்த்தையை எடுத்து விசுவாசத்தோடு கலந்து, காற்றையும் கடலையும் அதட்டியிருக்கலாம். அதைத்தான் இயேசு, “அற்பவிசுவாசிகளே, ஏன் சந்தேகப்பட்டீர்கள்?” என சொன்னார். உங்களுக்கு ஒன்று தெரியுமா? நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதன்படி நடக்க வேண்டும்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1.மத்தேயு 13:19ஐ வாசிக்கவும். தேவனுடைய வார்த்தைகளை உங்கள் இருதயங்களில் விதைக்காத பட்சத்தில் அதற்கு என்ன நேரிடும்?

**மத்தேயு 13:19-** *ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.*

2.**யோசுவா 1:8**ஐ வாசிக்கவும். நாம் எப்பொழுதெல்லாம் தேவனுடைய வார்த்தையை தியானிக்க வேண்டும்?

***யோசுவா 1:8*** *இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலு் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.*

3. யோவான் 6:63ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின்படி கர்த்தருடைய வார்த்தையானது ------------------------------------------

***யோவான் 6:63*** *-ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.*

4. மத்தேயு 4:4ஐ வாசிக்கவும். மனிதன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல ---------------------------------------------------------------------

**மத்தேயு 4:4***அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.*

5. எபேசியர் 6:17 வாசிக்கவும். தேவனுடைய வார்த்தையானது எந்த விதமான ஆயுதமாக இருக்கிறது?

**எபேசியர் 6:17 -** *இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

6. பட்டயமானது அதன் எதிரிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

7. ரோமர் 8:6ஐ வாசிக்கவும். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு சரியான இடத்தைக் கொடுக்கும் பொழுது அது நமக்கு -----------------------------------------------------கொடுக்கும்.

**ரோமர் 8:6** - *மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.*

8. 2கொரிந்தியர் 3:18ஐ வாசிக்கவும். நாம் எதில் கவனத்தை வைக்கிறோமோ அப்படியே ஆகிறோம் நாம் எதன் மேல் நம்முடைய கவனத்தை வைக்க வேண்டும்?

**2கொரிந்தியர் 3:18** - *நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*

# பதில் ஆதாரங்கள்

1.மத்தேயு 13: 19ஐ வாசிக்கவும். தேவனுடைய வார்த்தைகளை உங்கள் இருதயங்களில் விதைக்காத பட்சதத்தில் அதற்கு என்ன நேரிடும்?

***சத்துருவானன் அவைகளை எடுத்துப் போடுவான். ஆகவே அது நமது வாழ்வில் பலன் தர இயலாமல்போகும்.***

2.**யோசுவா 1:8**ஐ வாசிக்கவும். நாம் எப்பொழுதெல்லாம் தேவனுடைய வார்த்தையை தியானிக்க வேண்டும்?

***இரவும் பகலும்***

3. யோவான் 6 63ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின்படி கர்த்தருடைய வார்த்தையானது---------------------------------------------

***ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.***

4. மத்தேயு 4:4ஐ வாசிக்கவும். மனிதன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல ----------------------------------------------------------------------

***தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.***

5.எபேசியர் 6:17 வாசிக்கவும். தேவனுடைய வார்த்தையானது எந்த விதமான ஆயுதமாக இருக்கிறது?

***பட்டயம்.***

6. பட்டயமானது அதன் எதிரிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

***ஆம்***

7. ரோமர் 8:6ஐ வாசிக்கவும். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு சரியான இடத்தைக் கொடுக்கும் பொழுது அது நமக்கு -----------------------------------------------------கொடுக்கும்.

***ஜீவனையும் சமாதானத்தையும்***

8. 2கொரிந்தியர் 3:18ஐ வாசிக்கவும். நாம் எதில் கவனத்தை வைக்கிறோமோ அப்படியே ஆகிறோம் நாம் எதன் மேல் நம்முடைய கவனத்தை வைக்க வேண்டும்

***தேவன் மேலும் அவருடைய மகிமையின் மேலும்***

பாடம் 13

# தேவன் குற்றமற்றவர்

## ஆண்ட்ரூ வோமக்

இன்றைய தினம் தேவன் என் வாழ்வில் செய்த ஒரு முக்கியமான காரியத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தங்கள் வாழ்க்கையில் நடக்கின்ற அனைத்துமே தேவனிடமிருந்து உண்டானது என்று மக்கள் நம்புகின்றனர், அவரே அனைத்தையும் கட்டுப்படுத்துகிறார் என்றும் நம்புகின்றனர். அதற்கு காரணம் என்னவென்றால், தேவன் சர்வத்துக்கும் மேலானவராக, சர்வ வல்லமை படைத்தவராக வரையறுக்கப்பட்ட படியால், அவர்தான் தங்கள் வாழ்வில் நடக்கின்ற யாவையும் கட்டுப்படுத்தி வருகிறார் என்று அவர்கள் யூகித்து கொள்ளுகின்றனர். அவ்விசுவாசிகளும் கூட அப்படி தான் நம்புகின்றனர். அநேக கிறிஸ்தவர்கள் இந்த உபதேசத்தை ஊக்குவித்ததினால், அது அவர்களுடைய வாழ்வில் ஆழமாக வேருன்றிவிட்டது. ஆனால் வேதாகமம் இதற்கு எதிர்மறையாக போதிக்கின்றது என்று நான் நம்புகிறேன். ஆகையால் இந்த பாடத்தை நீங்கள் படிப்பது மிகவும் முக்கியமாக இருக்கிறது. யாக்கோபு 1:13-17ல் *"சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள். நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை"* என்று சொல்லுகிறது.

இந்த வசனங்கள் தேவனே நன்மையானவைகளுக்கு மூலகாரணராக இருக்கிறார் என்று மிகத் தெளிவாக காண்பிக்கிறது. இயேசு யோவான் 10:10 ல் *"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்கிறார்.* அது நல்லதாக இருந்தால் தேவனுடையது. அது தீமையானதாக இருந்தால் சாத்தானுடையது. இது மிகவும் எளிமையான இறையியல். இது மிகவும் குழப்பத்திற்கு ஏதுவாக இருப்பதற்கு காரணம் என்னவென்றால், யாக்கோபு 4:7ல் "ஆகையால், *தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."* என்று சொல்லுகிறது. இந்த வசனம், நாம் தேவனுக்கு கீழ்படிந்து: அதாவது அவருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றும், பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும் என்றும் சொல்லுகிறது. "எதிர்த்து" என்று சொல்லப்பட்ட வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால், உறுதியாக எதிர்த்து நின்று போராடு என்பதாகும்.

தங்கள் வாழ்க்கையில் நடக்கும் எல்லாம் முற்றிலும் தேவனிடத்திலிருந்து வருகிறது என்று மக்கள் நம்புகின்ற போது, உதாரணமாக வியாதி, வியாபாரத்தில் தோல்வி, வேலை இழப்பு, முரட்டாட்டமான குழந்தைகள் அல்லது விவாகரத்து போன்ற இவைகளை அவர்கள் எதிர்த்துநிற்க முடியாத நிலைக்கு தள்ளி கொண்டு போகிறது. சூழ்நிலைகளை உருவாக்குபவர் தேவன் என்றும், தங்களை தண்டிப்பதற்கு அந்த சூழ்நிலைகளை தேவன் பயன்படுத்துகிறார் அல்லது தங்களை மாற்றுவதற்காக அப்படி செய்கிறார் என்றும், உண்மையாகவே அப்படி அவர்கள் நம்பினால், அவைகளை எதிர்த்தால் தேவனையே எதிர்த்து சண்டை போடுகிறோம் என்று அர்த்தம். யாக்கோபு 4:7 ல் சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்போது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் என்று சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் உங்களை தேவனுக்கு கீழ்படுத்த

வேண்டும். சில காரியங்கள் தேவனுடையவைகளாகவும் சிலகாரியங்கள் சாத்தானுடையவைகளாக இருக்கிறது என்பதை இது காண்பிக்கிறது. இந்த பிரபஞ்சத்தில் தீய சக்திகள் இருக்கிறது. உங்கள் வாழ்க்கையில் சம்பவிக்கும் அனைத்துமே தேவனிடத்திலிருந்து வந்தவைகள் அல்ல. நீங்கள் அதை புரிந்துக்கொள்ளாவிட்டால் நீங்கள் பிசாசுக்கு கீழ்படியும்படியாக ஆகிவிடுகிறது. அதனால் நீங்கள் உண்மையில் சாத்தானுக்கு அதிகாரமளித்து விடுகிறீர்கள்.

ரோமர் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை காண்பிக்க விரும்புகிறேன். ஏனென்றால் அது பெரும்பாலும் தவறாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நான் பல அடக்க ஆராதனைகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அங்கே பலரும் தேவனைப் பற்றி அறியாதவர்கள் இருப்பார்கள். திருச்சபைக்கு போகாதவர்கள், வேத வசனங்களை பற்றி எதுவுமே தெரியாதவர்கள் இருப்பார்கள். ஆனால் இந்த ஒரு வசனத்தை அறிந்திருப்பார்கள். அது ரோமர் 8:28ல், "*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்*" என்கிறது. உங்களது வாழ்வில் என்ன நடந்தாலும் அதை தேவன் தான் செய்கிறார் என்றும், அதை ஏதோ ஒருவிதத்தில் நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார் என்றும் இந்த வசனம் வியாக்கியானம் செய்யப்படுகிறது. ஒரு சமயம் வாலிபனும் ஒரு பெண்ணும் இறந்து போயிருக்க அந்த அடக்க ஆராதனைக்கு போயிருந்தேன். அந்த இரண்டு பேரும் மதுவையும் போதைப் பொருட்களையும் கலந்து குடித்து விட்டு தங்களுடைய காரை மிகவும் வேகமாக ஓட்டி இருக்கிறார்கள். திடிரென ஒரு இடத்தில் அவர்கள் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தொலைபேசி கம்பத்தில்

மோதி இறந்து போனார்கள். பிரசங்கியார், “சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என அறிந்திருக்கிறோம்” என்று இந்த வசனத்தை மேற்கோள் காட்டி, இதை செய்ததற்கு தேவனுக்கு ஏதோ ஒரு நோக்கம் இருந்திருக்க வேண்டும் என சொன்னார். அந்த இரண்டு பேரையும் தேவன் கொன்று போடவில்லை. அது போலவே சாத்தான்தான் கொன்று போட்டுவிட்டான் என்றும் சொல்லிவிட முடியாது. இது அவர்களுடைய தவறு. அவர்கள் பெற்றோர் மற்றும் பெரியவர்கள் கற்றுக் கொடுத்திருந்த வாழ்க்கை தரத்திற்கு எதிராக செயல்படுவதற்கு அந்த பிள்ளைகளை அவன் தூண்டிவிட்டான் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் நிச்சயமாக அது அவர்களது தேர்வுதான். அவர்கள் தான் அந்த போதைப் பொருட்களை பயன்படுத்தினார்கள். அவர்கள் தான் அந்த கம்பத்தில் மோதினார்கள். அது இயற்கையாக நடந்த ஒன்று. தேவன் அதற்கு காரணகர்த்தா அல்ல.

“சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என அறிந்திருக்கிறோம்” என்று சொல்லும்போது அதனுடைய அர்த்தம் என்ன? முதலில் இந்த வசனம், சகலமும் தேவனிடத்திலிருந்து வந்து, அது நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று சொல்கிறது. இதற்கு ஒரு தகுதியையும் இந்த வசனம் வைத்திருக்கிறது. அது “தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு” என்று சொல்கிறது, தேவனை நேசிக்காதவர்களுக்கு இந்த வசனம் வேலை செய்யாது. நாம் சொல்லி தெளிவுபடுத்த வேண்டிய அவசியமில்லாத அளவிற்கு இந்த வசனம் மிகத் தெளிவாக இருக்கிறது. அப்படி இருந்தும் தேவனுக்கும் அவருடைய நெறிமுறைக்கும் எதிராக துன்மார்க்கமாக வாழ்ந்த அந்த இளம் வாலிபர் போன்ற மக்களுக்கு எவ்வாறு இந்த வசனத்தை பயன்படுத்துகிறார்கள் என்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும் மட்டுமே நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று இவ்வசனம் சொல்கிறது.

1யோவான் 3:8, *"பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதி முதல் பாவம் செய்கிறான் பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படி தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என்று சொல்லப்பட்டுள்ளது.* சாத்தானின் செயல்களை அழிப்பதற்காகவே தேவன் தம்மை வெளிப்படுத்தினார். அதுவே அவருடைய நோக்கம். அது அவரை நேசிக்கிறவர்களுக்கும் அவருடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்களுக்கும் மட்டுமே சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். அதாவது அவருடைய அழைப்பின்படியாகவே நடப்பவர்களுக்கு, சாத்தானை எதிர்த்து நிற்கிறவர்களுக்கு, மேலும் அவனுடைய செயல்களை அழிக்கும்படி செயல்படுபவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. பிசாசுக்கு எதிர்த்து தேவனுக்காக வாழ்பவர்கள் மட்டுமே, பிசாசு தங்கள் வாழ்க்கையில் எதை செய்தாலும் தேவன் அதை மாற்றி நன்மைக்கு ஏதுவாக உபயோகப்படுத்துவார் என சொல்ல இயலும்.

நம் வாழ்க்கையில் நடக்கும் எல்லாவற்றையும் தேவன் கட்டுப்படுத்தவில்லை என்பதை நாம் பகுத்தறிய துவங்க வேண்டும். எதிரி ஒருவன் இருக்கிறான். அவன் கொல்லவும், திருடவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் இயேசுவோ நமக்கு ஜீவனை தரும்படியாக வந்தார். நாம் ஜீவனை தெரிந்துகொண்டு, நம்முடைய வாழ்வில் நடக்கும் அனைத்து காரியங்களுக்கும் தேவன் குற்றவாளி அல்ல என்பதை நாம் மனதார அங்கீகரிக்க வேண்டும், ஒரு வேளை தாம் செய்த காரியங்களுக்கு குற்றம் சுமத்தப்பட்ட மனிதனாக தேவன் வந்திருந்தால், அதாவது அவர் மனிதனாக புற்று நோய், உடல் ஊனங்கள், மனஅழுத்த சோர்வுகள், வருத்தம், துயரம் ஆகியவற்றை மக்கள் மீது கொண்டு வந்திருந்தால் இவ்வுலகில் உள்ள எந்த அரசாங்கமும் அவரை கைது செய்யாமல், சிறையில் அடைக்காமல் அல்லது அவரது செயலை தடுத்து நிறுத்த முயற்சிக்காமல் இருந்திருக்காது என நான் உறுதியாக சொல்ல முடியும். அப்படியிருந்தும் நமது வாழ்க்கையில் சந்தித்த எந்த மனிதனைக் காட்டிலும் கற்பனை செய்ய இயலாத அளவிற்கு

மிகவும் இரக்கமுள்ள தேவன், ஜனங்களை அடிக்கும்படியாகவும், இப்படிப்பட்ட காரியங்களை செய்யும்படியாகவும் சுற்றித்திரிகிறார் என நாம் நினைக்கிறோம். சில காரியங்கள் பிசாசின் தாக்குதல்களினால் நடக்கிறது. நடக்கும் எல்லா பேரழிவுகளும் தேவன் நியமித்ததல்ல. காப்பீடு கழகங்கள் தங்களுடைய பாலிசிகளில், “நிலநடுக்கம் மற்றும் கொள்ளை நோய்களை, தேவனின் செயல்” என எழுதுகிறார்கள். அப்படி அல்ல. தேவன் இந்த எல்லா காரியங்களுக்கும் மூலகாரணர் அல்ல.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1.யாக்கோபு 1: 1-3 வாசிக்கவும். தேவன் பொல்லாங்கினால் மனிதர்களை சோதிக்கிறாரா?

**யாக்கோபு1:1-3** *சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.*

2.யாக்கோபு 1:17 நல்ல ஈவுகள் எங்கிருந்து வருகிறது?

**யாக்கோபு 1:17** *நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.*

3.யோவான் 10:10 வாசிக்கவும். திருடன் என்பது யார்?

**யோவான் 10:10-** *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

4.யோவான் 10:10ஐ வாசிக்கவும். அவனுடைய நோக்கம் என்ன?

5.யோவான் 10:10ஐ வாசிக்கவும். இயேசு எதற்காக வந்தார்?

6.யாக்கோபு 4:7ஐ வாசிக்கவும் .தேவனுக்கு உங்களை கீழ்படுத்துவதாலும் பிசாசுக்கு எதிர்த்து நிற்பதாலும் என்ன நடக்கும்?

**யாக்கோபு 4:7 -** *ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*

7.ரோமர் 8:28ஐ வாசிக்கவும். சகல காரியங்களும் தேவனிடமிருந்து வருகின்றது என்று சொல்லுகின்றதா?

**ரோமர் 8:28** *அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.*

8.அப்போஸ்தலர் 10:38ஐ வாசிக்கவும். வியாதிகள் தேவனிடமிருந்து வருகின்றதா?

**அப்போஸ்தலர் 10:38-***நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.*

9. 1யோவான் 3:8 வாசிக்கவும். தேவகுமாரன் வெளிப்பட்டதன் நோக்கம் என்ன?

**1யோவான் 3:8 -** *பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.*

# பதில் ஆதாரங்கள்

1.யாக்கோபு 1: 1-3 வாசிக்கவும். தேவன் பொல்லாங்கினால் மனிதர்களை சோதிக்கிறாரா?

**இல்லை.**

2.யாக்கோபு 1:17 நல்ல ஈவுகள் எங்கிருந்து வருகிறது ?

**ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து.**

3.யோவான் 10:10 வாசிக்கவும். திருடன் எனபது யார்?

**பிசாசு.**

4.யோவான் 10:10 வாசிக்கவும். அவனுடைய நோக்கம் என்ன?

**திருடவும் கொல்லவும் அழக்கவும்.**

5. யோவான் 10:10 வாசிக்கவும். இயேசு எதற்காக வந்தார்?

**பரிபூரண வாழ்வு கொடுக்க வந்தார்.**

6.யாக்கோபு 4:7 வாசிக்கவும். தேவனுக்கு உங்களை கீழ்படுத்துவதாலும், பிசாசுக்கு எதிர்த்து நிற்பதாலும் என்ன நடக்கும்?

**அவன் என்னை விட்டு ஓடிப் போவான்.**

7.ரோமர் 8:28 வாசிக்கவும். சகல காரியங்களும் தேவனிடமிருந்து வருகின்றது என்று சொல்லுகின்றதா?

**இல்லை.**

8.அப்போஸ்தலர் 10:38ஐ வாசிக்கவும். வியாதிகள் தேவனிடமிருந்து வருகின்றதா?

**இல்லை.**

9.1யோவான் 3:8 வாசிக்கவும். தேவகுமாரன் வெளிப்பட்டதன் நோக்கம் என்ன?

**சாத்தானுடைய கிரியைகளை அழிக்கும்படி வெளிப்பட்டார்.**

பாடம் 14

# ஆவியினால் நிறைந்த வாழ்வின் வல்லமை

டான் க்ரோ

மாற்கு 16:15-16ஐ மாபெரும் கட்டளை என்று அழைக்கப்படுகிறது. இயேசு தம்முடைய சீஷர்களிடம், "*நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்: விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*" என்று கூறினார். அப்போஸ்தலர் 8வது அதிகாரம், 5 மற்றும் 12வது வசனத்தில் இந்த கட்டளை பிலிப்புவின் பிரசங்கத்தின்மூலம் சமாரியாவில், எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்று பார்க்கலாம். "*அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்....தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்*".

கேள்வி என்னவெனில், மாற்கு 16:15-16ன்படி சமாரியாவில் உள்ள மக்கள் கிறிஸ்தவர்களாக ஆகிவிட்டார்களா? ஆம் அவர்கள் ஆகிவிட்டார்கள். பிலிப்பு சமாரியா பட்டணத்திற்கு போய் இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். அவர்கள் இயேசுவை விசுவாசித்ததால் அங்கிருந்த ஆண்களும் பெண்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். மாபெரும் கட்டளையின்படி இந்த ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என நாம் கூறமுடியும். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்களா?

வேதாகமம் யோவான் தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுத்ததை பற்றி சொல்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்து மட்டும்தான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கமுடியும். வேதவசனத்தின்படி ஜனங்கள் விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட பின்பு தண்ணீர் ஞானஸ்நானம்

பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர்களோ பரிசுத்த ஆவியினால்உண்டாகும் ஞானஸ்நானம் பெறவில்லை. அப்போஸ்தலர் 8: 14-17ல், "சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு பேதுருவையும் யோவனையும் அவர்களிடத்தில் அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்று இருந்தவர்களாக கண்டு அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும் படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது.

வேத வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஒருவன் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றதால் அல்லது இரட்சிக்கப்பட்டதால் மட்டும் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் என்று அர்த்தமல்ல. பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய வாழ்கைக்குள் வந்தார். யோவான் 20:22ல் பரிசுத்த ஆவியானவர் சீஷர்களை புதுப்பித்தார் என்பதை நாம் காண்கிறோம். ஆனால் பெந்தகோஸ்தே நாளில்தான் அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் மற்றும் தேவனால் பெலனடைந்தார்கள். தனிப்பபட்ட நபர் இரட்சிப்பின்போது பரிசுத்தஆவியினால் உயிர்பிக்கப்படுவதற்கும், பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் அடைவதற்கும் வித்தியாசம் உண்டு. பரிசுத்தஆவியானவருக்குள் முழுகுதல் என ஒன்று உண்டு. அது தனிப்பட்ட நபர் மீது வரும்போது அவர்களை பெலப்படுத்தினது. ஒருவர் இரட்சிக்கப்பட்டார் என்பதினால் மட்டும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என அர்த்தமாகிவிடாது.

அப்போஸ்தலர் 19:1,2ல் "அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:(2)நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான்.அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள்

கேள்விப்படவே இல்லை என்றார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது. "நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியை பெற்றவர்களா?"என்று பவுல் கேட்டான். அதற்கு அவர்கள், "பரிசுத்த ஆவியை பற்றி எதையும் அறியோம்" என்றார்கள். அதற்கு பவுல், "நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறாவிட்டால் வேறு எதனால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்கள்" என்றான். அதற்கு அவர்கள், "நாங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம்" என்றார்கள். பவுல் நிச்சயமாக அவர்களுக்கு இயேசுவையே கிறிஸ்து என்று விளக்கி சொல்லி இருப்பான் என்று நம்புகிறேன். அதன் பின்புதான் இந்த விசுவாசிகள் தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலமாக இயேசுவோடு அடையாளப்படுத்திக்கொண்டார்கள் என நான் நம்புகிறேன். 6 மற்றும் 7 வசனங்களில், "அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்தரிசனஞ் சொன்னார்கள். (7)அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டு பேராயிருந்தார்கள்", என்று சொல்லப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் வரவிருந்த மேசியாவை விசுவாசித்த சீஷர்கள் தான் என்றாலும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறவில்லை. ஒரு மனிதன் மறுபடி பிறந்து தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்று இருந்தும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறாமல் இருக்கக்கூடும். பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறுவது, இரட்சிப்பின் மாற்றத்திலிருந்து, ஒரு தனித்த மற்றும் தனித்துவமான அனுபவமாகும்.

நான் ஒரு மனிதனுக்கு தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்க முடிந்தாலும், அவர்களுக்கு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்க என்னால் முடியாது. இயேசு மட்டுமே அதை செய்ய முடியும். அவரிடத்தில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக ஒரு போதும் வேண்டுதல் செய்யாத நீங்கள் இப்போது வேண்டுதல் ஏன் செய்யக்கூடாது? லூக்கா 11:13ல், "*பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்பொழுது பரம பிதாவனவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்பவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம்*

*அல்லவா என்றார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது.* நீங்கள் ஏன் இன்றைக்கு அவரிடம் கேட்கக்கூடாது!

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1.மாற்கு 16:16, அப்போஸ்தலர் 8:5,8:12 வசனங்களை வாசிக்கவும். அப்போஸ்தலர் 8:12ல்குறிப்பிட்டுள்ள மக்கள் கிறிஸ்தவர்களானவர்களா?

**மாற்கு 16:16-***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

**அப்போஸ்தலர் 8:5**-*அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.*

**அப்போஸ்தலர் 8:12-***தேவனுடையராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

2. அப்போஸ்தலர் 8:14-16ஐ வாசிக்கவும். இந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியையும் பெற்றுக் கொண்டார்களா?

**அப்போஸ்தலர்8:14-16** *சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.(15) இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, (16) அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி,*

3.அப்போஸ்தலர் 19:1-5.ஐ வாசிக்கவும். இந்த மக்கள் விசுவாசிகளா?

**அப்போஸ்தலர் 19:1-5** *அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல்மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:(2) நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.(3) அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.(4) அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.(5) அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

4.அப்போஸ்தலர் 19:6-7.ஐ வாசிக்கவும். அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களா?

*அப்போஸ்தலர் 19: 6-7 அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித்தீர்கதரிசனஞ் சொன்னார்கள்.(7)அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டுபேராயிருந்தார்கள்.*

5.லூக்கா 11:13.ஐ வாசிக்கவும். இந்த வேதப்பகுதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்கிறது?

**லூக்கா 11:13** *அவனோ தன் வீட்டிலே ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு;*

6. 1கொரிந்தியர் 14:2. ஒருவர் அந்நிய பாஷை பேசும்போது அவர்கள் என்ன செய்கிறார்கள்?

**1கொரிந்தியர் 14:2** *ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.*

7. 1கொரிந்தியர் 14 : 14ஐ வாசிக்கவும். ஒருவன் அந்நிய பாஷையில் பேசும் போது என்ன நடக்கிறது?

**1கொரிந்தியர் 14 : 14** *அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.*

8. 1கொரிந்தியர் 14:16 -17 வாசிக்கவும். ஒருவன் அந்நிய பாஷையில் பேசும் போது என்ன நடக்கிறது?

**1கொரிந்தியர்14:16-17** *இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.17. நீ நன்றாய் ஸ்தோத்திரம்பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடையமாட்டானே.*

9.அப்போஸ்தலர் 2:4 வாசிக்கவும். ஒருவர் அந்நிய பாஷையில் பேசும் போது பரிசுத்த ஆவி பேசுகின்றாரா? அல்லது தனிப்பட்ட மனிதன் பேசுகின்றானா?

**அப்போஸ்தலர் 2:4-** *அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

10. அப்போஸ்தலர் 2:4. ஒருவருக்கு யார் அந்த உச்சரிப்புகளை கொடுக்கிறார்?

# பதில் ஆதாரங்கள்

1.மாற்கு 16:16 அப்போஸ்தலர் 8:5,8:12 வசனங்களை வாசிக்கவும். அப்போஸ்தலர் 8:12ல் குறிப்பிட்டுள்ள மக்கள் கிறிஸ்தவர்களானவர்களா?
**ஆம்**

**2.**அப்போஸ்தலர் 8 :14,16 வாசிக்கவும் இந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியையும் பெற்றுக் கொண்டார்களா?

**இல்லை**

3.அப்போஸ்தலர் 19:1-5ஐ வாசிக்கவும். இந்த மக்கள் விசுவாசிகளா?

**ஆம்**

4.அப்போஸ்தலர் 19 6-7ஐ வாசிக்கவும். அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களா?

**இல்லை**

5.லூக்கா 11:13ஐ வாசிக்கவும். இந்த வேதப்பகுதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்கிறது?

**கேட்க வேண்டும்.**

6. 1கொரிந்தியர் 14:2 ஒருவர் அந்நிய பாஷை பேசும்போது அவர்கள் என்ன செய்கிறார்கள்?

**தேவனோடு பேசுகின்றனர் ரகசியங்களை பேசுகின்றனர்**.

7.1கொரிந்தியர் 14 : 14ஐ வாசிக்கவும். ஒருவன் அந்நிய பாஷையில் பேசும் போது என்ன நடக்கிறது?

**அவர்களுடைய ஆவி தேவனிடம் ஜெபிக்கிறது.**

8. 1கொரிந்தியர் 14:16 -17 வாசிக்கவும். ஒருவன் அந்நிய பாஷையில் பேசும் போது என்ன நடக்கிறது?

**தேவனை மகிமைப் படுத்துகின்றனர், மேலும் தங்கள் ஆவியில் தேவனுக்கு நன்றி சொல்லி துதிக்கின்றனர்**

9.அப்போஸ்தலர் 2:4 வாசிக்கவும். ஒருவர் அந்நிய பாஷையில் பேசும் போது பரிசுத்த ஆவி பேசுகின்றாரா? அல்லது தனிப்பட்ட மனிதன் பேசுகின்றானா?

**தனிப்பட்ட மனிதன் பேசுகின்றான்**

10.அப்போஸ்தலர் 2:4. ஒருவருக்கு யார் அந்த உச்சரிப்புகளை கொடுக்கிறார்?

**பரிசுத்த ஆவியானவர்**

பாடம் 15

# பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வது எப்படி?

டான் க்ரோ

இன்றைய தினம் நாம் பரிசுத்த ஆவியை எப்படி பெற்றுக்கொள்வது என்பதை பற்றிப் பார்க்கப்போகிறோம். அப்போஸ்தலர் 10:1ல், "*இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்*" என்று சொல்லப்பட்டுள்ளது. இவன் ஒரு ராணுவ பட்டாளத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவின் தலைவராக இருந்திருக்கக்கூடும். 2வது வசனத்தில், "*அவன் தேவபக்தியுள்ளவனும் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்.*" அவன் நீதிமானாக இருந்தான். நல்ல காரியங்களைச் செய்து வந்தான். தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனும், தேவை உள்ளவர்களுக்கு தானதர்மங்கள் செய்கிறவனும், மேலும் எப்போதும் தேவனிடத்தில் ஜெபிக்கிறவன் என்றும் வேதம் சொல்லுகிறது. நாம் பார்க்கப்போகிறது மிகவும் ஆச்சரியமாய் இருக்கும். அவன் நல்ல காரியங்களைச் செய்து வந்த போதிலும், அவன் தேவனுக்கு பயந்து இருந்த போதிலும், ஜெபிக்கும் வாழ்வு இருந்த போதிலும், தனிப்பட்ட முறையில் இயேசுவின் மூலமாய் தேவனிடத்தில் எந்த உறவும் இல்லாதவனாக இருந்தான்.

3 முதல் 6 வரையுள்ள வசனங்களில், "பகலில் ஏறக்குறைய *ஒன்பதாம்மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு,4. அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. (5) இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி.(6) அவன் தோல்*

*பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது.நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்" என* சொல்லப்பட்டுள்ளது.

இந்த மனிதன் தேவனுக்குப் பயப்படுகிறவனாக இருந்த போதிலும், நல்ல காரியங்கள் செய்து நீதி உள்ளவனாய் இருந்த போதிலும், தேவனுக்கு முன்பாக ஜெபிக்கிற வாழ்க்கை உடையவனாக இருந்த போதும், இவனிடம் ஒரு தேவதூதன் அனுப்பப்பட்டு சீமோன் பேதுருவின் இடத்திற்கு ஆள் அனுப்பவும், அவன் வந்து செய்ய வேண்டியதை சொல்வான் என்றும் செய்தியாக கிடைக்கப்பெற்றான். அப்போஸ்தலர் 10:43ல் பேதுரு அவனுக்கு அறிவுறித்தியதை இங்கு பார்க்கலாம். *"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்" என்றான்.*

இது ஆச்சரியமாக இல்லையா? *தம்முடைய கணக்கில் சேரும்படியாக பல நல்ல காரியங்களை செய்துவந்த போதிலும், அவனுக்கு இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனோடு தனிப்பட்ட உறவு இல்லை. தேவன், "நீ செய்கிற காரியங்கள் மிகவும் சிறந்தது: அவைகள் மிகவும் அற்புதமானவைகள், அவைகள் எனக்கு முன்பாக நினைவூட்டுதலாக உள்ளன. ஆனால் நான் செய்யப்போவதை உனக்கு சொல்கிறேன். நான் ஒரு தூதனை உன்னிடம் அனுப்பியுள்ளேன். அவன் உன்னை பேதுரு என்னும் பேர் கொண்ட ஒருவரை அழைத்து வரும்படி சொல்லுவான். அந்த பேதுரு வந்து நீ என்ன செய்ய வேண்டும் என்பதை உனக்கு சொல்லுவான்" என்றார். அப்போஸ்தலர் 10:43ல், பேதுரு கொர்நேலியு வீட்டிற்கு சென்று, அவர் சொன்னதாவது, அவரை (கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்.* இப்பொழுது இங்கு என்ன நடந்தது என்று பாருங்கள். *"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்."* (அப்போஸ்தலர் 10:44). *கொர்நேலியு இயேசுவின் மேல் உள்ள*

*விசுவாசத்தை குறித்து பேதுருவிடமிருந்து கேட்க கேட்க அதை பெற்றுக்கொண்டு, பாவமன்னிப்புக்காக தன்னுடைய விசுவாசத்தை இயேசுகிறிஸ்துவின் மேல் வைத்தான்.* அவன் அப்படி செய்த உடனே, அவன் மேலும் அந்த வீட்டில் இருந்த அத்தனை பேர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். *46வது வசனத்தில், "பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் .......... பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்" என்று* சொல்லப்பட்டது. அவர்கள் எப்படி அதை அறிந்தார்கள்? 45,46வது வசனத்தில், **"அவர்கள் பல பாஷைகளை பேசுகிறதையும், தேவனை புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது....".**

புதியஏற்பாட்டில் ஒவ்வொரு முறையும் பரிசுத்தஆவியானவர் தனிப்பட்ட நபர் மீது இறங்கினபோது, பரிசுத்தஆவியின் வரம் வெளிப்படுகிறது. அவர்கள் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பெற்றார்கள் என்பதற்கு அது சாட்சியாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் வழக்கமாக, அந்நியபாஷை பேசினார்கள் அல்லது தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

டெக்சாஸின் மாநகரமான டாலாஸில் உள்ள வயல்வெளியில், ஒருமாலைப்பொழுதில் முழங்காலில் நின்றுகொண்டு, தேவனே அந்நியபாஷை பேசுவதை பற்றியும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பற்றியும் ஜனங்கள் பேசுவதைக் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது, ஆனால் நான் உம்மை துதிப்பதற்கும், உம்மை உயர்த்துவதற்கும், என்னுடைய தாய் மொழியான ஆங்கிலத்தையும் தாண்டி பேசுவதற்கு ஒரு வழியிருந்தால் எனக்கு அது வேண்டும் என்று கூறினேன். தேவனை ஆராதிக்க தொடங்கினேன். அப்படி செய்தபோது பரிசுத்த ஆவியானவர் எனக்கு ஒரு பாஷையை, ஒரு உச்சரிப்பை கொடுத்தார். நிச்சயமாகவே இதற்கு முன்பு நான் அதை அறிந்ததும் இல்லை, கற்றுக்கொண்டதும் இல்லை. ஆனால் பேசினேன். அப்போஸ்தலர் 2:4ல் "*அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்*" என்று வேதம் சொல்கிறது. (குறிப்பு: இந்த வசனத்தில் "வரத்தின்படியே" என்ற வார்த்தைக்கு, ஆங்கில வேதாகமத்தில் "உச்சரிப்பின்படியே" என்று அர்த்தம்கொள்ளும் வார்த்தை

உபயோகப்படுத்தப்பட்டுள்ளது) யார் பேசினார்கள்? அவர்கள் பேசினார்கள். யார் அந்த உச்சரிப்பை கொடுத்தது? பரிசுத்த ஆவியானவர்.

லூக்கா 11:13ல், *“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா” என்றார்.* நீங்கள் இப்பொழுது செய்ய வேண்டியதெல்லாம் “கேளுங்கள்”, பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், தேவனுக்கு உங்களை விட்டுக்கொடுங்கள், கர்த்தரை ஆராதிக்கத் தொடங்குங்கள். அப்பொழுது, நீங்கள் கற்றிடாத பாஷையில் அவரை துதிப்பதற்கும் ஆராதிப்பற்கும், அவர் உங்களுக்கு உச்சரிப்பைத் தருவார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1.இரட்சிப்பைக் குறித்து வேதம் பயன்படுத்தும் சில விதிமுறைகளை விவரிக்கவும்?

யோவான் 3:3*இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

அப்போஸ்தலர் 3:19 *ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்,*

மாற்கு 16:16 *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

கொலோசியர் 2:13 *உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;*

ரோமர் 8: 9 *தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

மத்தேயு 25:46 *அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.*

2.அப்போஸ்தலர் 11:15ஐ வாசிக்கவும். பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஞானஸ்நானத்தின் அனுபவத்தை குறித்து இந்த வசனம் எப்படி விவரிக்கிறது?

**அப்போஸ்தலர் 11:15**ஐ வாசிக்கவும். *நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோல, அவர்கள்மேலும் இறங்கினார்.*

3.இயேசுவின் சீஷர்கள் பரிசுத்தஆவியை பெற்றுக்கொண்டார்கள் (யோவான் 20 : 22), ஆனால் சில நாட்களுக்கு பின்பு பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 2:1-4). இந்த காரியங்களை ஒப்பிட்டு பார்க்கவும் (யோவான் 20:22 மற்றும் அப்போஸ்தலர் 2:1-4).

**யோவான்20:22-** *அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்,*

**அப்போஸ்தலர் 2: 1-4** *பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.(2) அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.(3)அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.(4)அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

4.அப்போஸ்தலர்1:8ஐ வாசிக்கவும். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?

**அப்போஸ்தலர் 1 : 8** *பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

5. அப்போஸ்தலர் 2 :38,39 மற்றும் 1கொரிந்தியர் 1:7ஐ வாசிக்கவும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது இன்று நமக்கு உள்ளதா?

***அப்போஸ்தலர் 2:38,39*** *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (39 )வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;*

**1கொரிந்தியர் 1:7** *அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.*

6.லூக்கா 11:13ஐ வாசிக்கவும். நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறாமல் இருந்தால் இப்பொழுது என்ன செய்யவேண்டும்?

**லூக்கா 11:13***பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா*

7.**அப்போஸ்தலர் 2:4** வாசிக்கவும். நீங்கள் கேட்டு பெற்றுக்கொள்வீர்களா? நீங்கள் தேவன் தரும் அந்த ஜெப பாஷையில் அரிடம் பேசவும் அவரை ஆராதிக்கவும் செய்வீர்களா?

**அப்போஸ்தலர் 2:4** -*அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

# பதில் ஆதாரங்கள்

1. இரட்சிப்பைக் குறித்து வேதம் பயன்படுத்தும் சில விதிமுறைகளை விவரிக்கவும்?

**மறுபடி பிறந்தவர்களாக இருத்தல் (யோவான் 3:3) மாற்றம் பெறுதல் (அப்போஸ்தலர் 3:19), விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுதல் (மாற்கு 16:16), மன்னிக்கப்படுதல் (கொலோசியர் 2 :13), கிறிஸ்துவின் ஆவியை (ரோமர் 8:9) நித்திய ஜீவனை (மத்தேயு 25:46)பெற்றுக்கொள்ளுதல்.**

2. அப்போஸ்தலர் 11:15ஐ வாசிக்கவும். பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஞானஸ்நானத்தின் அனுபவத்தை குறித்து இந்த வசனம் எப்படி விவரிக்கிறது?

**ஒருவர் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்குவது போல**

3. இயேசுவின் சீஷர்கள் பரிசுத்தஆவியை பெற்றுக்கொண்டார்கள் (யோவான் 20:22), ஆனால் சில நாட்களுக்கு பின்பு பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 2:1-4). இந்த காரியங்களை ஒப்பிட்டு பார்க்கவும் (யோவான் 20:22 மற்றும் அப்போஸ்தலர் 2:1-4).

**யோவான் 20:22ல் சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார்கள். அப்போஸ்தலர் 2:1-4ல் அதே சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டர்கள் (உள்ளானதும் வெளிப்பிரகாரமான மூழ்குதல்).**

4. அப்போஸ்தலர் 1:8ஐ வாசிக்கவும். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?

**ஊழியம் செய்வதற்கு (சாட்சியாக இருப்பதற்கு) பெலனடையும்படி.**

5. அப்போஸ்தலர் 2:38,39 மற்றும் 1கொரிந்தியர் 1:7ஐ வாசிக்கவும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது இன்று நமக்கும் உள்ளதா?

**ஆம் பரிசுத்த ஆவியின் வரமானது இயேசுவின் இரண்டாம் வருகையில் நிறுத்தபப்படும். அதுவரை இருக்கும்**

6. லூக்கா 11:13ஐ வாசிக்கவும். நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறாமல் இருந்தால் இப்பொழுது என்ன செய்யவேண்டும்?

**கேட்க வேண்டும்**

7. **அப்போஸ்தலர் 2:4** வாசிக்கவும். நீங்கள் கேட்டு பெற்றுக்கொள்வீர்களா? நீங்கள் தேவன் தரும் அந்த ஜெப பாஷையில் அரிடம் பேசவும் அவரை ஆராதிக்கவும் செய்வீர்களா?

**ஆம். நான் பேசுவேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் (அந்த அந்நியபாஷை) உச்சரிப்பைத் தருவார்**

பாடம் 16

# அந்நிய பாஷையில் பேசுவதின் நன்மைகள்

ஆண்ட்ரூ வோமக்

பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் முதல் முதலில் வந்தபோது நடந்த காரியங்களில் ஒன்று என்னவென்றால், அங்கே இருந்த எல்லாரும் அந்நியபாஷையில் பேசினார்கள். அப்போஸ்தலர் 2:4ல் பெந்தகோஸ்தே நாளில் அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் என்று சொல்கிறது. தொடர்ந்து அப்போஸ்தல நடபடிகளின் புத்தகத்தில் ஜனங்கள் பரிசுத்த ஆவியைப் பெறும்பொழுது தேவபிரசன்னம் வெளிப்பட்டதை காணமுடிகிறது.

நிச்சயமாக, அந்நியபாஷையில் பேசவதைவிட இன்னும் அநேக காரியங்கள் பரிசுத்தஆவியானவருக்கு உள்ளது. ஆனாலும் அது, வெளிப்பட்டவைகளில் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. 1கொரிந்தியர் 14:13,14ல், *“அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்” என்று சொல்கிறது.* நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும் பொழுது உங்கள் ஆவி ஜெபிக்கிறது. நீங்கள் அந்நியபாஷையில் பேசும் போது அதை வியாக்கியானம் செய்வதற்காக

ஜெபியுங்கள். அப்பொழுது உங்கள் புரிதல் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும். நான் என்னுடைய தனிப்பட்ட சாட்சியை சொல்கிறேன். நான் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டு அந்நியபாஷையில் பேசத்தொடங்கியபோது, அது என் வாழ்வை வியக்கத்தக்க விதத்தில் மாற்றியது. நான் மறுபடி பிறந்த போது கிறிஸ்து எனக்குள்ளாக ஜீவிக்க வந்தாரென்றும், அப்படி வந்து தம்முடைய அனைத்தையும் எனக்குள் வைத்துவிட்டார் என்பதை நம்புகிறேன். ஆனால் பரிசுத்தஆவி என் மேல் வந்த போது அது எனக்கும் மற்றவர்களுக்கும் வெளிப்படத்தொடங்கியது. அங்கே அநேக விதமான காரியங்கள் நடந்தது. நான் அந்நிய பாஷையில் ஜெபித்த முதல் வருடத்தில், என்னுடைய மனது, இது எல்லாம் பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது என்றும். அப்படி நான் செய்வதெல்லாம் என்னுடைய நேரத்தை வீணடிக்கும் காரியமாக இருக்கிறது என்றும் சொன்னது. அந்நிய பாஷையில் ஜெபிப்பதற்கு எனக்கு விசுவாசம் தேவைப்பட்டது. ஆகவேதான் உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று யூதா 20 சொல்லுகிறது. அது உங்களை இயற்கைபிரகாரமான சிந்தனையிலிருந்தும் காரணங்களிலிருந்தும் வெளியேற்றி, இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாச மண்டலத்திற்குள் உங்களை வைக்கிறது.

நான் பெற்றுக் கொண்ட அடுத்த அனுபவமானது நான் அந்நிய பாஷையில் ஜெபித்த போது நான் பல ஆண்டுகளாக நினைக்காதவர்கள் என்னுடைய நினைவிற்கு வந்தார்கள். அவர்களுக்காக ஜெபிக்கத் தொடங்கினேன். ஒரு சில தினங்களிலேயே அவர்கள் என்னை தொடர்புகொள்வார்கள். மேலும் அவர்களுக்கு சில அற்புதமான

காரியங்கள் நடந்ததை அறிந்து கொள்ள முடிந்தது. இப்படி பல காரியங்களுக்கு பின், இறுதியில் இவைகள் அனைத்தையும் ஒன்றினைத்து பார்க்கும் போது, நான் அந்நியபாஷையில் ஜெபிக்கும் போது நான் ஞானத்தோடு ஜெபிக்கிறேன். அது என்னுடைய மூளை அறிவுக்கும் திறனுக்கும் அப்பாறபட்ட செயலாக இருந்தது. சகலத்தையும் அறிந்ததும், கிறிஸ்துவின் சிந்தையை உடையதுமான என்னுடைய ஆவி ஜனங்களுக்காக ஜெபித்ததுபோல, என்னுடைய சரீரப்பிரகாரமான புரிதலோடு என்னால் ஜெபித்திருக்கவே முடியாது.

ஒரு நாள் அந்நியபாஷையில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் சொன்னதுபோல அந்நியபாஷையில் ஜெபிப்பதற்கு விசுவாசம் அவசியமாக இருந்தது. அப்பொழுது, “நீ இப்படிப்பட்ட பொருளற்ற பேச்சை பேசுவதற்கு பதிலாக, ஆங்கிலத்தில் பேசி சில நன்மைகளை செய்திருக்கலாமே” என்பது போன்ற சில எண்ணங்களுடன் நான் போராடிக்கொண்டிருந்தேன். நான் இந்த எண்ணங்களையெல்லாம் கையாளவேண்டியதாக இருந்தது. அந்த எண்ணங்களை கீழே தள்ளி, நான் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டே இருந்தேன். நான் நான்கு ஆண்டுகளளாக சந்திக்காத ஒருவர் என் கதவை தட்டினார். அவர் உள்ளே வந்தார். நான் வாருங்கள் என்றேன். எதுவும் சொல்லாமல் உள்ளே வந்து உட்கார்ந்த உடனே அழுது தன் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் கொட்டத்தொடங்கினார். ஏனென்றால் அவர் அநேக பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டிருந்தார். நான் உட்கார்ந்து, “நான் ஆங்கிலத்தில் ஜெபித்திருக்க வேண்டும்” என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய அடுத்த சிந்தனையாக “நான் நான்கு வருடம் அவரை பார்க்கவே இல்லை, அப்படி இருக்கும்போது அவருக்காக என்ன ஜெபிப்பது, எப்படி ஜெபிப்பது?” என்று சிந்தித்துக்

கொண்டிருந்தேன். அப்பொழுது, நான் அந்நியபாஷையில் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது தேவன் என்னை தயார் செய்துகொண்டிருந்தார் என்று எனக்கு தோன்றியது. நான் அந்நியபாஷையில் அவருக்காக பரிந்து பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். ஒருவேளை நான் தெரிந்த பாஷையில் என்னுடைய புரிதலில் ஜெபித்திருந்தால், என்னால் அப்படி புரிந்து பேசியிருக்க முடியாது. திடிரென எனக்கு ஒரு வெளிப்பாடு உண்டானது. உடனே அவரிடம், "உங்களுடைய பிரச்சனை என்ன என்று என்னால் சொல்ல முடியும்" என்று அவருடைய பிரச்சனையெல்லாம் சொல்லி முடித்து, அவருக்கான பதிலையும் அவருக்கு கொடுத்தேன்.

நான் ஒரு சபை பிரிவை சார்ந்த சபையில் இருந்த போது இந்த சம்பவம் நடைபெற்றது. எனக்கு என்ன நடந்தது என்று அவருக்கு தெரியவில்லை. அது எனக்கும் புரியவில்லை. இச்சம்பவம் எங்கள் இருவருக்குமே பயத்தை உண்டுபண்ணியது. ஆனால் அது தேவ வல்லமையின் வெளிப்பாடு. தேவன் அதை இயற்கைக்கு அப்பாற்பட்டு உபயோகப்படுத்தினார். அது தான், "நான் அந்நியபாஷையில் விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுகிறது" என்பதற்கு அர்த்தம். உங்கள் ஆவி : மறுபடியும் பிறந்திருக்கிறது, கிறிஸ்துவின் சிந்தையை உடையதாக இருக்கிறது, சரியாக என்ன செய்யவேண்டும் என்று அறிந்திருக்கிறது. அது தேவனிடத்தில் அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறது மற்றும் உங்களுடைய ஆவிக்கு எந்த வரையரையும் வரம்பும் இல்லை. உங்களுடைய ஆவியின் வெளிப்பாட்டிலும், வல்லமையிலும் உங்களால் நடக்கக்கூடுமானால், அது உங்களுடைய சரீரப்பிரகாரமான வாழ்க்கையை மறுரூபப்படுத்தும். அதை செய்வதற்கான ஒரு வழி, அந்நியபாஷையில் ஜெபிப்பது. (அது மட்டுமே வழியல்ல, அதுவும் ஒருவழி). அப்படி நீங்கள் செய்யும்போது, நீங்கள் உங்களுடைய மகாபரிசுத்த விசுவாசத்தில் உங்களை கட்டியெழுப்புகிறீர்கள் என்பதையும், உங்களுடைய ஆவி மறைக்கப்பட்டதாயிருந்த தேவ

ஞானத்தை போதிக்கிறது என்பதையும், பூரணமான தேவனுடைய வெளிப்பாடு வருகிறது என்பதையும் அங்கீகரித்து நம்புங்கள். பின்பு, 1கொரிந்தியர் 14:13ன்படி, அந்நியபாஷையில் பேசுகிறவன், அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்க ஜெபிக்கக்கடவன். அப்படியென்றால் நீங்கள் அந்நியபாஷையில் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது பாதியில் நிறுத்திவிட்டு, ஆங்கிலத்தில் அதன் அர்த்தத்தை சொல்லும் விதமாக ஜெபிக்க வேண்டும் என்பதல்ல. அதன் அர்த்தம் என்னவென்றால், உங்களுடைய புரிதல் பயனுள்ளதாக இருக்கும் என்பதாகும்.

ஒரு வேளை நீங்கள் திருச்சபைகளில் அந்நியபாஷை பேசி செய்தி கொடுத்தால் பாதியில் நிறுத்தி வீட்டு தமிழில் அர்த்தம் சொல்லவேண்டும். நான் தனிப்பட்ட முறையில் ஜெபிக்கும் போது என்ன செய்வேன் என்றால் நான் அந்நியபாஷையில் ஜெபிப்பேன், பின்பு தேவன் எனக்கு வெளிப்பாடுகளை தருவார் என்று நம்புவேன். சில நேரங்களில் என்னுடைய மனப்பான்மை மாறுகிறது. எனக்கு குறிப்பிட்ட வார்த்தை எதுவும் கிடைக்காவிட்டாலும் திடிரென நான் காரியங்களை தெளிவாக காண்கிறேன். வேறுவிதமான கண்ணோட்டத்தை பெறுகிறேன். முழு வெளிப்பாடு கிடைப்பதற்கு ஒரு வாரம்கூட ஆகலாம். ஆனால் அந்நியபாஷையில் நான் ஜெபிக்கும் நேரமும், அதற்கு அர்த்தம் சொல்லுவதும், அதின் ஒரு பங்கு என நான் நம்புகிறேன்.

அந்நியபாஷையை பேசுவது, நீங்கள் பரிசுத்தஆவியை பெற்றுக் கொண்டீர்கள் என்பதற்காக மட்டுமல்ல, இன்னும் அநேக காரணங்களுக்காகவும் முக்கியமானதாக இருக்கிறது. அது உங்களுடைய அனுதின வாழ்க்கையின் ஒரு பங்காக இருக்க வேண்டும். அது உங்களுடைய மூளையையும், அதனுடனான

பயங்களையும் சந்தேகங்களையும், பை-பாஸ் செய்து, உங்கள் இருதயத்திலிருந்து பிதாவோடு நேரடியாக தொடர்பு கொள்வதற்கு அது வழியாய் இருக்கிறது. அது உங்களை மகாபரிசுத்த விசுவாசத்தில் கட்டியெழுப்பி, மறைக்கப்பட்டதாயிருந்த தேவ ஞானத்தை வெளிப்படுத்துகிறது. நீங்கள் அனைவரும் இதில் பெருகும்படியாகவும், உங்கள் விசுவாசம் கட்டவிழ்க்கப்படவும், நீங்கள் அந்நியபாஷையில் பேசுவதின் முழு நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படியாகவும் நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. யூதா 20ஐ வாசிக்கவும். பரிசுத்த ஆவியில் ஜெபிப்பதால் உண்டாகும் பெரிய நன்மைகள் என்ன?

***யூதா 20*** *நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களைஉறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி,*

2. அப்போஸ்தலர் 2:4ஐ வாசியுங்கள். எத்தனைப் பேர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்?

**அப்போஸ்தலர் 2:4** : *அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

3. அப்போஸ்தலர் 2:4ஐ வாசியுங்கள். அப்படி அவர் நிரப்பப்பட்டதால் உண்டான விளைவுகள் என்ன ?

4. 1கொரிந்தியர் 14:14ஐ வாசியுங்கள். அந்நியபாஷையில் ஜெபிக்கும் பொழுது உங்களுடைய எந்த பகுதி ஜெபிக்கிறது?

**1கொரிந்தியர் 14:14**ஐ *என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.*

5. 1கொரிந்தியர் 14:2 வாசியுங்கள் ஒருவன் அந்நியபாஷை பேசும்போது யாருடன் பேசுகிறான்?

**1கொரிந்தியர் 14:2** *ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.*

6. 1கொரிந்தியர் 14:2 வாசியுங்கள். நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது மற்றவர்கள் அவன் என்ன சொல்கிறான் என்பதை புரிந்துகொள்ள முடியுமா?

7. 1கொரிந்தியர் 14:2 வாசியுங்கள. நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது உங்களது ஆவி என்ன பேசுகிறது?

8. 1கொரிந்தியர் 14:4 நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது என்ன செய்கிறீர்கள்? என்னை நல்லொழுக்கத்திற்கு உட்படுத்துகிறேன் என்னை கட்டியெழுப்புகிறேன்.

**1கொரிந்தியர் 14:4** *அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.*

**1கொரிந்தியர் 14:16** *இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம்பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.*

# பதில் ஆதாரங்கள்

1. பரிசுத்த ஆவியில் ஜெபிப்பதால் உண்டாகும் பெரிய நன்மைகள் என்ன?

**நான் பரிசுத்த ஆவியில் ஜெபிக்கும் பொழுது என்னை நான் கட்டி எழுப்புகிறேன்.**

2. அப்போஸ்தலர் 2:4வாசியுங்கள். எத்தனைப் பேர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்களா?

**அனைவரும் நிரப்பப்பட்டார்கள்.**

3. அப்போஸ்தலர் 2:4 வாசியுங்கள். அப்படி அவர் நிரப்பப்பட்டதால் உண்டான விளைவுகள் என்ன ?

**அவர்கள் அந்நிய பாஷைகளை பேசினார்கள்.**

4. 1கொரிந்தியர் 14:14 வாசியுங்கள். அந்நியபாஷையில் ஜெபிக்கும் பொழுது உங்களுடைய எந்த பகுதி ஜெபிக்கிறது?

**என்னுடைய ஆவி ஜெபிக்கிறது.**

5. 1கொரிந்தியர் 14:2 வாசியுங்கள். ஒருவன் அந்நியபாஷை பேசும் போது யாருடன் பேசுகிறான?

**தேவனோடு பேசுகிறான்.**

6. 1கொரிந்தியர் 14:2 வாசியுங்கள். நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது மற்றவர்கள் அவன் என்ன சொல்கிறான் என்பதை புரிந்துகொள்ள முடியுமா?

**இல்லை**

7. 1கொரிந்தியர் 14:2 வாசியுங்கள். நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது உங்களது ஆவி என்ன பேசுகிறது?

**ரகசியங்கள், ரகசிய காரியங்கள் (என்.சி.வி ஆங்கில மொழிபெயர்ப்பு), தேவனுக்கும் எனக்கும் உள்ள நெருங்கிய உறவு (மெசேஜ் பைபிள்).**

8. 1கொரிந்தியர் 14:4 நீங்கள் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது என்ன செய்கிறீர்கள்?

**என்னை பக்திவிருத்தியடைய செய்கிறேன். என்னை கட்டியெழுப்புகிறேன்.**

9. 1கொரிந்தியர் 14:16 வாசியுங்கள். நீங்கள் அந்நிய பாஷையில ஜெபிக்கும் போது என்னென்ன செய்கிறீர்களா?

**தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ணுகிறேன்.**

# CONTACT DETAILS

## INDIA

www.awmindia.net info@awmindia.net

## Locations:

### Hyderabad

42-343/1/188, Near Flora Hotel, Maruthi Nagar
A S Rao Nagar, Hyderabad 500 040, INDIA.
Ph: (040) 4028 0718

### Chennai

72-D, Nandhini Mahal, I Floor, Velachery Main Road
Velachery, Chennai 600 042, INDIA.
Ph: (044) 4202 1820

### Mumbai

Bethel, Plot No 305/E, Mith Chowky, Near Girdhar Park
Malad (W), Mumbai 400 064, INDIA.
Ph: +91 8976549515

### Delhi

Phone: +91 9560591787

## USA

Andrew Wommack Ministries Inc.
PO Box 3333, Colorado Springs CO 80934-3333
www.awmi.net

## UK

Andrew Wommack Ministries - Europe
PO Box 4392, Walsall, WS1 9AR, ENGLAND
www.awme.net

# முழுமையான
# சீஷத்துவ
# நற்செய்தி பணி

(The Complete Discipleship Evangelism)

## நிலை 2
(16 பாடங்கள்)

## Level 2
(16 Lessons)

ஆன்ட்ரூ வோமக்
மற்றும்
டான் க்ரோ

Andrew Wommack
and
Don Krow

The Complete Discipleship Evangelism
48-Lesson Course
Level 2 (16 Lessons)
Copyright ©2012, Andrew Wommack
Andrew Wommack Ministries
PO Box 3333, Colorado Springs, CO 80934-333
www.awmi.net

Title in Tamil: முழுமையான சீஷத்துவ நற்செய்தி பணி
©2020  Andrew Wommack Ministries India
www.awmindia.net
info@awmindia.net

Item Code: TM 417-2/3

Permission is granted to duplicate or reproduce for discipleship purposes on the condition that it is distributed free of charge.

# முழுமையான சீஷத்துவ நற்செய்தி பணி
# நிலை 2

## உள்ளடக்கம


1. சுயநலம்: எல்லா துக்கங்களுக்கும் ஆதாரம் 5
2. தேவனுடைய வார்த்தையை எவ்வாறு தியானிப்பது 13
3. மனதைப் புதுப்பித்தல் 19
4. கிறிஸ்துவுடைய சபையின் முக்கியத்துவம் 27
5. விடுதலை 39
6. விசுவாசியின் அதிகாரம் 48
7. குணப்படுத்துதல் பரிகாரத்தில் உள்ளது 59
8. குணமாகுதலுக்கு தடைகள் 69
9. மற்றவர்களை மன்னித்தல் 81
10. திருமணம் - பகுதி 1 93
11. திருமணம் - பகுதி 2 101
12. தேவனின் அன்பு - பகுதி 1 113
13. தேவனின் அன்பு - பகுதி 2 124
14. நிதி - பகுதி 1 133
15. நிதி - பகுதி 2 141
16. உங்கள் ஜெபங்களுக்கு பதில் வராதபோது என்ன செய்ய வேண்டும்? 148

# பாடம் 1

# சுயநலம்: எல்லா துக்கங்களுக்கும் ஆதாரம்

*ஆண்ட்ரூ வோமக்*

இன்று நாம் அனுபவிக்கும் பெரும்பகுதியின் மையமாக இருப்பது சுயநலமாகும். நீதிமொழிகள் 13ஆம் அதிகாரத்தில் நிச்சயமாக நாம் வாசிக்கவேண்டிய ஒரு வசனம் இருக்கிறது, ஆனால் உங்கள் சொந்த வேதாகமத்தைத் திறந்து வாசிக்காவிட்டால் அதை நீங்கள் நிச்சயம் நம்பமாட்டீர்கள். 10வது வசனம் கூறுகிறது, *"அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்: ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு."* அநேகருக்கு இதில் பிரச்சனை காணப்படும். "அகந்தையினால் மாத்திரம்தான் வாக்குவாதமும் மோதலும் பிறக்கும் என்று சொல்ல முடியாது" என அவர்கள் சொல்லு வார்கள்.நீதிமொழிகள் 17ஆம் அதிகாரம் 14ஆம் வசனப்படி பார்த்தால், விவாதம் சண்டைக்கு ஆரம்பமாக இருக்கிறது, எனவே பெருமை மட்டுமல்ல, பெருமைக்கு மேலாக ஏதோ ஒன்றுதான் சண்டையை உருவாக்குகிறது. “இது இப்படித்தான்; நான் அப்படித்தான்; உங்களுக்குப் புரியாது;” என மற்றவர்கள் சொல்லுவார்கள். இல்லை பெருமையினால் மட்டுமே வாக்குவாதம் வருகிறது என்று வேதாகமம் சொல்லுகிறது. முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்றல்ல. இதுதான் முக்கிய காரணம்.சிலர் மீண்டும், "எனக்கு எல்லா வகையான பிரச்சனைகளும் உண்டு, ஆனால் அதில் பெருமை என்ற ஒரு பிரச்சனையே இல்லை. எப்படியாயினும், நான் என்னுடைய சுயமதிப்பீட்டை மிகவும் குறைவாக வைத்திருப்பதால், யாரும் என்னை பெருமை கொண்டுள்ளேன் என்று குற்றப்படுத்த முடியாது" எனக் கூறுவார்கள்.

நாம் பெருமை என்றால் என்ன என்று மீண்டும் ஆராய வேண்டும். நீங்கள் வேறொருவரை விட சிறந்தவர் என்று நினைப்பதில் மட்டுமல்ல, எளிமையான சொற்களில் சொல்ல வேண்டுமானால், எல்லாவற்றின் மையமாகவும் உங்களையே பார்ப்பதுதான். சுயநலமே உண்மையில் எல்லா பெருமைக்கும் வேராயிருக்கிறது. எண்ணாகமம் 12:2-ல் மோசேயின் சகோதரன் ஆரோனும், சகோதரி மிரியாமும் மோசேயின் கலப்பினத் திருமணத்தைக் குற்றப்படுத்திக் கொண்டு அவனுக்கு எதிராக வந்து, *"கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்."* மூன்றாம் வசனம் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் எனக் கூறுகிறது. அவர்கள் சொன்னதை எதிர்க்காமல் அவர்களுக்காக ஜெபித்தார்.

மோசே பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன் என்று சொல்லப்பட்டிருக்கும்போது, அதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். பூமியில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் நிச்சயமாக கோடிக் கணக்கானவர்கள் இருந்திருப்பார்கள். அவர்கள் எல்லாரிலும் மோசே மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் மிகுந்த ஆச்சரியம் என்னவென்றால் அதை எழுதியவர் அவர் தான். நீங்கள் உண்மையிலே தாழ்மையுள்ளவர்களாய், சாந்தமுள்ளவர்களாய் இருந்தால், அது உங்களுக்கேத் தெரியாது என்று அநேகர் எண்ணுகிறார்கள். இது ஒரு தவறான அபிப்பிராயம்.பெருமை என்பது எல்லோரையும் விட அவர்கள் சிறந்தவர்கள் என்று நினைப்பதில்லை.இது ஒருபுறம் ஆணவமும் மற்றொருபுறம் குறைந்த சுயமரியாதையையும் கொண்ட ஒரே குச்சியில் இருக்கும் எதிர் வெளிப்பாடுகள். இது சுயநலமானது. நீங்கள் எல்லோரையும் விட சிறந்தவர் அல்லது எல்லோரையும் விட மோசமானவர் என்று நினைத்தால் பரவாயில்லை. நீங்கள் முற்றிலும் சுயநலவாதி. இதன் மூலம் எல்லாம் வடிகட்டப்படுகிறது. கூச்ச சுபாவமுள்ள நபர் மிகவும் பெருமைப்படுகிறார்.மேலும் சுயத்தைப் பற்றி மட்டுமே மையமாகக் கொண்ட சிந்தனையை கொள்கிறார்.

நான் சொல்ல வருகிற கருத்து என்னவென்றால், சுயநலத்தை மையமாகக் கொண்டிருப்பது, உண்மையில் எல்லா பெருமைக்கும் மூல காரணமாகும். அதை நீங்கள் நீதிமொழிகள் 13: 10-ல் வாசித்தால், *"அகந்தையினால்*

*மாத்திரம் வாது பிறக்கும்."* நம்முடைய சொந்த சுயநலம்தான் நம்மில் கோபத்தை உருவாக்குகிறதே அல்லாமல் மக்கள் நமக்கு செய்யும் செயல்கள் அல்ல. நம்முடைய சுயநலமே மக்கள் செய்யும் செயல்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று தூண்டுகிறது.மக்கள் உங்களை தவறான வழியில் நடத்துவதை நீங்கள் ஒருபோதும் தடுக்க முடியாது; அது அப்படி சம்பவிக்காது. விசுவாசம் என்பது மற்றவர்களைக் கட்டுப்படுத்துவது அல்ல, ஆனால் உங்களை நீங்களே சமாளிக்கவும் உங்களுக்குள் இருக்கும் விஷயங்களைச் சமாளிக்கவும் உதவுகிறது. எனவே மக்கள் உங்களுக்கு என்ன செய்தாலும் பரவாயில்லை.

இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது,அவரை சிலுவையில் அறையிட்ட மக்களிடம் திரும்பி, "பிதாவே, இவர்களை மன்னியுங்கள், ஏனென்றால் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள்" என்று சொல்ல முடிந்தது. அவர் அந்த மக்களைக் கட்டுப்படுத்தவில்லை, அதற்கு பதிலாக தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். இது நமக்கு கோபம் வரத்தக்கதாக சுயநலத்தை உருவாக்குகிறது! இயேசு த மக்காக இங்கு வரவில்லை, ஆனால் அவர் உலகத்தை மிகவும் நேசித்து, நமக்காக இங்கு வந்தார். அவர் சிலுவையில் தொங்கும்போது தனது தாயை நினைத்து,அவருடைய சீடர்களில் ஒருவரிடம் அவரைக் கவனித்துக் கொள்ளுமாறு பேசினார். கடுமையான கோபத்திலும், அநீதியானநேரத்திலும் மற்ற எல்லாவற்றிற்கும் நடுவிலும் இயேசு அன்புடன் மன்னிக்கவும் செயல்படவும் காரணம், அவர் சுயநலத்துடன் இருக்கவில்லை.

உங்கள்சொந்த சுயநலம்தான் உங்களைகோபப்படுத்துகிறது, ஆனாலும் நீங்கள் சுயத்திற்கு மரிக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. என்னிடம் ஒரு சடலம் இருந்தால், நான் அதை அவமதிக்கலாம், உதைக்கலாம், துப்பலாம் அல்லது புறக்கணிக்கலாம். ஆனால் அது உண்மையிலேயே சடலமாக இருந்தால், அது பதிலளிக்காது. உங்களைச் சுற்றியுள்ள விஷயங்களுக்கு நீங்கள் பதிலளிப்பதற்காக நடந்து கொள்ளும் விதம், அந்த வெளிப்புற விஷயங்களால் அல்ல; ஆனால் உங்கள் உட்புறத்தில் இருப்பதே காரணமாகும். உங்களை தவறான வழியில் நடத்தும் எல்லா தடைகளையும் நீக்கிவிட முயன்றால் , நீங்கள் ஒருபோதும் விசுவாசத்தில் அவ்வளவு வலுவாக இருக்க மாட்டீர்கள். ஆனால் நீங்களே அதை சமாளிக்க முடியும். நீங்கள் இயேசுவை உங்கள்

வாழ்க்கையின் தேவனாக்கினால், உங்களை நேசிப்பதை விட அவரையும், அவருடைய ராஜ்யத்தையும், மற்றவர்களையும் நேசிக்க முடியும். நீங்கள் அதைச் சுயமாகக் கையாளும் போது உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சச்சரவும், சர்ச்சையும் நின்றுவிடும் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்த எல்லாவற்றையும் பயன்படுத்துவதற்கான ஒரு சிறந்த சாவி என்னவென்றால், சுயநல நோக்கங்களுக்காக அவர் உங்களுக்கு ராஜ்யத்தை வழங்கவில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும். ஒவ்வொரு தேவைகளையும் உங்களுக்குத் தருவதற்காக அவர் இந்த விஷயங்களைச் செய்யவில்லை.உங்கள் சுயத்தை மறுப்பதற்கும், சுயநலமான வாழ்வை இழப்பதற்கும் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது வாழ்க்கை என்னவென்று நீங்கள் உண்மையில் கண்டுபிடிக்கத் தொடங்குகிறீர்கள். உங்களை விட மற்றவர்களை நேசிப்பதில் தான், உங்கள் கோபத்தையும்,காயங்களையும் மற்றும் உங்களுக்குள் இருக்கும் எல்லாவற்றையும் தீர்த்துக் கொள்ளத் தொடங்குவீர்கள்.

நான் சொன்ன இந்த சில விஷயங்கள் மூலம்,தேவன் உங்கள் இருதயத்தை திறக்க வேண்டும் என்றும், உங்களுடைய சொந்த சுயநலம்தான் உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது என்பதை உணர்த்துவார் என்று நான் பிரார்த்திக்கிறேன். பழியை வேறு எங்காவது வைப்பதற்குப் பதிலாக, நீங்கள் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், அதை எதிர்கொள்ள வேண்டும், தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்த வேண்டும், மேலும் உங்கள் வாழ்க்கையில் அவரை உள்ளே வரச் சொல்லி, அவரை பெரியவராக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் வெற்றியில் நடக்க இதுவே வழி.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மாற்கு 9: 33-34-ஐ வாசியுங்கள்.கப்பர்நகூமுக்கு செல்லும் வழியில்சீடர்கள் எதைப் பற்றி வாதிட்டார்கள்?

   **மாற்கு 9: 33-35** - *அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார்.அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்.அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து: எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன், என்றார்.*

2. இது நம் அனைவரின் சுயநலத்தையும் பிரதிபலிக்கிறதா?

3. மாற்கு 9:35 ஐப் படியுங்கள். இந்த வார்த்தையின் படி, ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் எப்படி இருக்க வேண்டும்?

4. லூக்கா 22: 24-27-ல் இயேசுவின் போதனையை விரிவாக விளக்குங்கள்.

   **லூக்கா 22: 24-27** - *அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ,* பணிவிடைசெய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கி*றவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்.*

5. நீதிமொழிகள் 13:10 ஐப் படியுங்கள். என்ன காரணத்தால் மட்டும் வாது பிறக்கும்?

**நீதிமொழிகள் 13:10** - *அகந்தையினால்மாத்திரம் வாது பிறக்கும். நன்கு அறிவுறுத்தப்படுவது ஞானம்.*

6. கலாத்தியர் 2:20 -ஐ வாசியுங்கள். நாம் எப்படி நம் வாழ்க்கையை வாழ வேண்டும்?

**கலாத்தியர் 2:20** - *கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.*

7. மத்தேயு 7:12 ஐ வாசியுங்கள். சுயநலத்திற்கான மாற்று மருந்து என்ன?

**மத்தேயு 7:12** - *மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.*

# பதில் ஆதாரங்கள்

1. மாற்கு 9: 33-34-ஐவாசியுங்கள். கப்பர்நகூமுக்கு செல்லும் வழியில் சீடர்கள் எதைப் பற்றி வாதிட்டார்கள் ?

   ***அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் வாதிட்டார்கள்***

2. இது நம் அனைவரின் சுயநலத்தையும் பிரதிபலிக்கிறதா?

   ***ஆம்***

3. மாற்கு 9:35 ஐப்படியுங்கள். இந்த வார்த்தையின்படி, ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் எப்படி இருக்க வேண்டும்?

   ***வேலைக்காரனாக இருக்க வேண்டும்.***

4. லூக்கா 22: 24-27-ல் இயேசுவின் போதனையை விரிவாக விளக்குங்கள்.

   ***"மேலும், வரவிருக்கும் ராஜ்யத்தில் யார் பெரியவர் என்று அவர்கள் தங்களுக்குள்வாதிடத் தொடங்கினர். இயேசு அவர்களிடம், 'இந்த உலகில் ராஜாக்களும் பெரிய மனிதர்களும் தங்கள் மக்களைச் சுற்றிலும் கட்டளையிடுகிறார்கள், ஆனாலும் அவர்கள் "மக்களின் நண்பர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் உங்களிடையே, மிகப் பெரியவர்கள் மிகக் குறைந்த பதவியில் இருக்க வேண்டும், தலைவர் ஒரு ஊழியரைப் போல இருக்க வேண்டும். பொதுவாக எஜமானர் மேஜையில் அமர்ந்து அவரது ஊழியர்களால் சேவை செய்யப்படுகிறார். ஆனால் இங்கே இல்லை! நான் உங்கள் வேலைக்காரன் "(லூக்கா 22: 24-27, புதிய வாழ்க்கை மொழிபெயர்ப்பு)***

5. நீதிமொழிகள் 13:10 ஐ படியுங்கள். என்ன காரணத்தால் மட்டும் வாது பிறக்கும்?

   ***அகந்தை***

6. கலாத்தியர் 2:20 -ஐ வாசியுங்கள். நாம் எப்படி நம் வாழ்க்கையை வாழ வேண்டும்?

***கிறிஸ்துவின் விசுவாசத்தால் (அல்லது கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம்), சொந்த பலங்கள் அல்லது பலவீனங்களால் அல்ல.***

7. மத்தேயு 7:12 ஐ வாசியுங்கள். சுயநலத்திற்கான மாற்று மருந்து என்ன?

***தேவனை மையமாக வைத்து, மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்;***

# பாடம் 2

# தேவனுடைய வார்த்தையை எவ்வாறு தியானிப்பது

*டான் க்ரோ*

*தியானித்தல்* என்கிற வார்த்தையின் பொருள், பிரதிபலித்தல், ஆழ்ந்து சிந்தித்தல், மனதில் திட்டமிடுதல், நோக்கம் கொள்ளுதல், நிர்ணயித்தல் என்பதாகும். இதன் கிரேக்க வார்த்தையானது “மனதிற்குள் ஏதோ ஒன்றைச் சுழற்றுதல்” என்பதைக் குறிக்கிறது. மேலும் இது கற்பனை செய்தல் என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றது.

தியானத்திற்கு வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இரண்டு காரணங்கள்: சரியான ஞானத்தை ஆழ்ந்து சிந்தித்து அறிதல். இது மனதைப் புதுப்பித்தல் ,ஜெபித்தல், ஸ்தோத்தரித்தல் மற்றும் தியானித்தல் மூலமாக தேவனை அவர் வார்த்தையின் மூலமாக தேடுதல் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது அவரையே ஆழ்ந்து சிந்திப்பதும், பரவசமடைவதும், மெய்மறப்பதாகும்.

*தியானத்தை தலைப்புவாரியான ஆய்வின் மூலம் செய்யலாம்.* ஆழ்ந்து சிந்திக்க ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுப்பது. (உ.) ஞானஸ்நானம்.இந்த வார்த்தை கிரேக்கத்தில் இருந்தோ , எபிரேயத்தில் இருந்தோ அல்லது ஒரு நல்ல அகராதியில் இருந்தோ வரையறை செய்யுங்கள். இந்த வார்த்தை எந்த மூலவார்த்தையிலிருந்து வந்தது எனக் கண்டுபிடியுங்கள். வேதத்தில், மனந்திரும்புதல் (அப். 2:38), பாவ மன்னிப்பு பெறுதல் (அப். 2:38),விசுவாசித்தல், (மாற்கு 16:16), இரட்சிப்படைதல் (I பேதுரு 3:21), ஞானஸ்தானம் பெறுதல்

(அப். 22:16) போன்ற வசனங்களை எடுத்துக்கொண்டு, அதற்கு தொடர்புடைய பாடங்களைஆழ்ந்து ஆராய்ச்சி செய்யுங்கள்.

உங்களுக்கேத் தோன்றும் கேள்விகளையோ அல்லது வேதத்தில் எழும் கேள்விகளையோ சிந்தித்து ஆராய வேண்டும். (உ):ஞானஸ்நானத்திற்கு முன்பாக அடைய வேண்டிய தகுதிகள் எவையேனும் உண்டா? ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன? இது எப்போது முதல் பழக்கத்தில் வந்தது? எந்தக் காலக் கட்டத்தில்?

*தியானத்தை விரிவான ஆய்வின் மூலம் மேற்கொள்ளலாம். அதாவது வேதாகமத்தில் ஒரு புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வசனமாக ஆய்வு செய்தல்.* இதில் செய்யவேண்டியது என்னவென்றால், நீண்ட காலமாக இதன் அனைத்து உள்ளடக்கத்தையும் படித்துப்பழகி இருக்கும் நீங்கள் புத்தகம் முழுவதையும் ஆழ்ந்து சிந்தித்து ஆராய வேண்டும். (அகராதிகள் மற்றும் வசனங்கள்)

*தியானத்தை, வார்த்தை ஆய்வின் மூலமாகவும் செய்யலாம்.* சில வார்த்தைகளுக்கு அர்த்தம் என்ன? விசுவாசிப்பது என்றால் என்ன? *தேவன்* என்கிற வார்த்தைக்கு பொருள் என்ன? இயேசு என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன? *கிறுஸ்து* என்கிற வார்த்தைக்கு பொருள் என்ன? நியாயப்படுத்துதல் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

*வேதாகமத்தில் உள்ள பகுதிகளில் இருந்து நீங்கள் தியானிக்கலாம். வழக்கமாக ஒரு பகுதி என்பது பல்வேறு சொற்றொடர்களைக் கொண்ட ஒரு எண்ணங்களின் பிரிவு.* ஒரு எழுத்தாளர் தாங்கள் வலியுறுத்தும் கருத்தை மாற்றும்பொழுது அவர்கள் ஒரு புது பகுதியைத் தொடங்கி எழுதுவார்.

வேதத்தின் வழியே தியானிக்கும் பொழுது, ஏன் இந்தக் கேள்வி கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது? இந்த இடத்தில் அதன் தொடர்பு என்ன? போன்ற கேள்விக்குறி மற்றும் நிறுத்தற்குறிகளைக் கவனியுங்கள்.

வேதாகம தியானம் என்பது வெறும் வார்த்தைகளை மட்டும் பார்ப்பதில்லை. அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் இருக்கும் தேவனைப் பார்ப்பதுமாகும்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. தியானி என்னும் வார்த்தைக்குப் பொருள் என்ன?

2. வேதாகம தியானத்திற்கான இரண்டு காரணங்கள் என்ன?

3. தலைப்பு வாரியான ஆய்வு என்றால் என்ன?

4. வேதாகம வெளிப்பாட்டு ஆய்வு என்றால் என்ன?

5. லூக்கா 6:46 வாசிக்கவும். தேவன்/ஆண்டவர் என்னும் வார்த்தைக்குப் பொருள் என்னவென்று நினைக்கிறீர்கள்?

   **லூக்கா 6:46** *என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிற படி நீங்கள் செய்யாமற் போனதென்ன?*

6. மத்தயூ 1:21 வாசிக்கவூம், இயசூே என்னூம் வார்த்தயின் அர்த்தம் என்ன?

   **மத்தேயு 1:21** *"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்"*

7. லூக்கா 23:1-2 வாசிக்கவும். கிறிஸ்து என்னும் வார்த்தைக்கான பொருள் என்னவென்று நினைக்கிறீர்கள்?

   **லூக்கா 23:1-2** *"அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைப் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டுபோய், இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர் மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்."*

8. பகுதி என்றால் என்ன?

9. வேதாகம தியானம் என்பது வெறும் வார்த்தைகளை மட்டும் பார்ப்பதில்லை. அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் இருக்கும் தேவனைப் பார்ப்பதுதாகும்.

# பதில் ஆதாரங்கள்

1. தியானி என்னும் வார்த்தைக்குப் பொருள் என்ன?

   ***பிரதிபலித்தல், ஆழ்ந்து சிந்தித்தல், மனதில் திட்டமிடுதல், நோக்கம் கொள்ளுதல், நிர்ணயித்தல் என்பதாகும்.***

2. வேதாகம தியானத்திற்கான இரண்டு காரணங்கள் என்ன?

   ***சரியான ஞானத்தை ஆழ்ந்து சிந்தித்து அறிதல். இது அறிவைப் புதுப்பித்தல், ஜெபித்தல், ஸ்தோத்தரித்தல் மற்றும் தியானித்தல் மூலமாக தேவனை அவர் வார்த்தையின் மூலமாக தேடுதல்***

3. தலைப்புவாரியான ஆய்வு என்றால் என்ன?

   ***ஆழ்ந்து சிந்திக்க ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து ஆராய்வது***

4. வேதாகம வெளிப்பாட்டுஆய்வு என்றால் என்ன?

   ***வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு, அதில் ஒவ்வொரு வசனமாக ஆராய்தல்.***

5. லூக்கா6:46 வாசிக்கவும். தேவன்/ பிரபு என்னும் வார்த்தைக்குப் பொருள் என்னவென்று நினைக்கிறீர்கள்?

   ***நாம் கீழ்ப்படியும் ஒருவர் (முதலாளியைப் போல)***

6. மத்தேயு1:21 வாசிக்கவும், இயேசு என்னும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

   ***ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர்***

7. லூக்கா23:1-2 வாசிக்கவும். கிறிஸ்து என்னும் வார்த்தைக்கான பொருள் என்னவென்று நினைக்கிறீர்கள்?

   ***ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டவர்***

8. பகுதி என்றால் என்ன?

***பல்வேறு சொற்றொடர்களைக் கொண்ட ஒரு எண்ணங்களின் பிரிவு***

9. வேதாகம தியானம் என்பது வெறும் வார்த்தைகளை மட்டும் பார்ப்பதில்லை.

***அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் இருக்கும் தேவனைப் பார்ப்பதுமாகும்.***

# பாடம் 3

# மனதைப் புதுப்பித்தல்

*டான் க்ரோ*

இன்று மனம் புதிதாக்குதலைக் குறித்துப் பார்க்கப்போகிறோம். நான் இரண்டு வேதபகுதிகளை படிக்க விரும்புகிறேன். முதலாவது பிலிப்பியர் 4:8: *"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."* நாம் சிந்திக்க வேண்டிய காரியங்கள் உண்டு என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாகக் கூறுகிறார். வேறு விதமாக சொல்ல வேண்டுமானால், நம்முடைய சிந்தனைகளை நாம் தேர்ந்தெடுக்கலாம். ரோமர் 7:22,23 ஆம் வசனத்தின்படி, தேவ வார்த்தைக்கு முரணான சிந்தனைகள் சில நேரங்களில் நமக்கு வருகிறது என்று நான் அறிவேன். நமக்குள்ளே இருந்து போர் புரிகிற பாவப்பிரமாணமானது நம்முடைய சிந்தையைத் தாக்குகிறது. நாம் அப்படியே உட்கார்ந்திருந்து, நம் சிந்தனைகளை நமக்குள் கூடுகட்ட விடாமல், நமக்கு வேண்டிய சிந்தனைகளை நாம் தெரிந்தெடுக்கலாம் என்று வேதாகமம் நமக்கு பிலிப்பியரிலிருந்து சொல்லுகிறது. ஒரு மனிதனின் இருதயத்தின் நினைவு எப்படி இருக்கிறதோ அப்படியே அவன் இருக்கிறான் என்று வேதாகமம் (நீதிமொழிகள் 23:7) சொல்கிறது. எனவே நாம் என்ன சிந்திக்கிறோம் என்பது மிகவும் முக்கியமானது.

ரோமர் 12:1,2 இல் வேதாகமம் சொல்கிறது, *"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை*

*முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."* நம்முடைய மனதைப் புதிதாக்குகிறதினாலே நாம் மறுரூபமாக முடியும் என்று வேதாகமம் சொல்கிறது. அப்பல்லோ விண்கலம் விண்வெளிக்குச் சென்றபோது, ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் அதன் போக்கில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியுமா? கோணல் மாணலான பாதையில் அவர்கள் சந்திரனை சென்றடைந்தார்கள். அவர்கள் சேர்ந்தபோது, அவர்கள் இறங்குவதற்காக குறிக்கப்பட்ட 500 மைல் நீள படலத்தில் எப்படியோ ஒரு சில அடிகளுக்குள் இருக்கத்தக்கதாக இறங்கினார்கள். அந்த முழுப்பயணமும் வெற்றிகரமாக அமைந்தது. நாம் ஜீவபலியாக இருப்பதின் மூலம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பூரண அர்ப்பணமுள்ளவர்களாக நம்முடைய வாழ்க்கைப்பாதையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஜீவபலியாக இருப்பதின் பிரச்சனை என்னவென்றால், சில நேரங்களில், பலிபீடத்தை விட்டு விலகி ஓடி விட விரும்புவதால், தேவனே,எனக்கு நீர் வேண்டும்; உம்முடைய வழிகள் வேண்டும் என்று அவ்வப்போது நம்முடைய சிந்தையில், திருத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

நம்மை பூரணமாக அர்ப்பணிக்கிறோம் என்பதோடு மாத்திரமல்ல, நாம் வெற்றிகரமான கிறிஸ்தவ ஜீவியம் நடத்த நம்முடைய மனதைப் புதிதாக்குகிறதினாலே மறுரூபப்படுவதும் அவசியமான ஒரு பகுதியாகும். நாம் உலகப் பிரகாரமான விளைவுகளை விரும்பவில்லையென்றால், உலகப்பிரகாரமான முறையில் சிந்திக்கவும் கூடாது. பிலிப்பியர் 4:8ல் நாம் வாசிக்கிறபடி, நாம் எதை சிந்திக்க வேண்டுமென்பதைத் தெரிந்தெடுக்க முடியும். அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்." பழைய ஏற்பாட்டுக் காலத்தில், அவர்கள் என்ன செய்வார்களென்றால், தேவனுடைய வார்த்தையை எடுத்து, கதவு நிலைகளிலும், தங்கள் ஆடைகளிலும், எப்போதும் அவர்களுக்கு முன்பாக இருக்குமாறு வைத்துக் கொள்வார்கள். தேவனுடைய வார்த்தைகளைப் பற்றி அவர்கள் இரவும் பகலும் பேசிக் கொண்டிருக்க வேண்டுமென

தேவன் அவர்களுக்கு போதித்திருந்தார். அதோடு அவர்கள் இந்தக் காரியங்களை எல்லாம் தங்கள் பிள்ளைகளுக்கு சொல்ல வேண்டும். இதைப் பற்றி சிந்திப்பது மிகவும் முக்கியம். உண்மையிலே வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வதற்கு நாம் தேவனுடைய வார்த்தையை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்திருக்க வேண்டுமென்பது மிகவும் முக்கியம். அன்புள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும், நற்கீர்த்தியுள்ளவைகளையும் சிந்திப்பதற்கு எதிரான காரியம் என்னவென்றால், தேவனுக்குரிய காரியங்களையும், ஆவிக்குரிய காரியங்களையும் சிந்திக்காமல் இருப்பதாகும். ரோமர் 8:6 சொல்கிறது, *"மாம்சசிந்தை மரணம்,"* ஆனால் அதின் மறுபகுதி சொல்கிறது, *"ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்."* தேவனுடைய ஆவியின் காரியங்களை சிந்திப்பது ஜீவனாயும் சமாதானமாயும் இருக்கிறது. ஆனால் விபசாரத்தைக் குறித்தும், இந்த உலகப் பிரகாரமான காரியத்தைக் குறித்தும், பணத்தைக் குறித்தும், பொருளாசைக் குறித்தும் சிந்திக்கத் துவங்குவோமானால் நம்முடைய வாழ்வில் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? ஒருவன் எப்படி சிந்திக்கிறானோ, அவன் அப்படியே இருக்கிறான். நாம் அப்படியே செயல்படத் துவங்கிவிடுவோம். நாம் இந்த காரியங்களை நம்முடைய வாழ்வில் செய்யத் தொடங்கி, நம்முடைய வாழ்க்கையை அழித்துவிடுவோம். உண்மையில் ஆவிக்குரிய போராட்டம் என்பது எப்பொழுதும் பிசாசை எதிர்த்து நிற்பதும் கடிந்துகொள்வதும் மட்டுமல்ல - சில நேரங்களில் அதை செய்ய வேண்டிய தேவையிருக்கும். ஆனால் ஆவிக்குரிய போராட்டம் என்பது நாம் எதை சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதும், எதில் நம்முடைய சிந்தை நாட்டமாயிருக்கிறது என்பதுமே.

ஏசாயா 26:3ல் தேவனை உறுதியாகப் பற்றிக்கொண்டவனை அவர் பூரணசமாதானத்துடன் காத்துக் கொள்வார் என்று வேதாகமம் சொல்கிறது. ரோமர் 12ல் சொல்லப்பட்டுள்ளது போல நாம் நம்முடைய வாழ்க்கையில் அவ்வப்போது திருத்தங்கள் செய்ய வேண்டியதாயிருக்கும். "தேவனே, அந்த சிந்தனைகள் தவறானவை. நான் திரும்பி என் மனதைப் புதுப்பித்து, அன்புள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ அவைகளை சிந்திக்க வேண்டும்.

எனவே உங்களுக்குள் சத்துருவின் போராட்டங்கள் காணப்பட்டாலோ, நீங்கள் அடிமைத்தனத்தில் இருந்தாலோ,

சிந்திக்க வேண்டாதவைகளை சிந்தித்துக் கொண்டிருந்தாலோ, உடனடியாக நீங்கள் உங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். வேதம் சொல்கிறது, "நீங்கள் தேவனிடத்தில் நெருங்கி சேர்ந்தால், அவரும் உங்களிடத்தில் நெருங்கி சேருவார். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." நான் என்னுடைய வாழ்விலும் காரியங்களை நழுவவிட்டு, சோர்வும், தளர்வும் என்னை நெருங்கச் செய்ததுண்டு. அந்த நேரங்களில் வேதாகமத்தை படித்து, அதில் , "தேவனே, நீர் என்னைப்பற்றி இப்படியாக சொல்லுகிறீர், தேவனே நீர் தான் என்னுடைய பெலன்," என்றெல்லாம் சொல்வது மிகக் கடினம். வெற்றி என்பது எவ்வளவு எளிதில் அடையக்கூடியது என்று உங்களுக்குத் தெரியுமா? இப்பொழுது சத்துருவானவன் எனக்கு செய்வதை நான் எதிர்க்கப் போகிறேன். நான் வேதத்தைத் திறந்து சில வார்த்தைகளை வாசிப்பதோடு மட்டுமல்ல, அவ்வார்த்தைகளின் பின்னால் உள்ள தேவனோடு இணைந்து கொள்ளப் போகிறேன். அவரில் என் மனம் தாபரிக்க செய்யப் போகிறேன். கர்த்தாவே, என்னைப் பற்றி நீர் இவ்விதமாகக் கூறியிருக்கிறீர், நான் மன்னிக்கப்பட்டவன், சுத்திகரிக்கப்பட்டவன், உம்முடைய அன்பைவிட்டு ஒன்றும் என்னைப் பிரிக்க முடியாது என்று நீர் சொல்லியிருக்கிறீர்" என்று சொல்ல வேண்டும். நீங்கள் அமர்ந்திருந்து, தேவன் உங்களுக்காக செய்த எல்லாவற்றையும் சிந்திக்கும்போது, சில நொடிப்பொழுதில், மற்ற காரியங்களை எல்லாம் மறந்துவிடுவீர்.

நான் ஒரு உதாரணத்தை சொல்ல விரும்புகிறேன். ஒருவர் இவ்விதமாக ஒருமுறை சொன்னார், "இப்பொழுது, இன்னும் பத்து நிமிடங்களுக்கு நீங்கள் இளம் சிவப்பு நிற யானைகளைக் குறித்து சிந்திக்க வேண்டாம்." என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியுமா? அடுத்த பத்து நிமிடங்களும் நாங்கள் செய்ததெல்லாம் இளம் சிவப்பு யானைகளைக் குறித்தே யோசித்துக் கொண்டிருந்தோம். பின்பு அவர் கேட்டார்,"சுதந்திர தேவியின் சிலையின் நிறம் என்ன? பச்சை என்று ஒருவர் சொன்னார். "நல்லது, அந்த சிலையில் எந்தக் கரத்தை உயர்த்திப் பிடித்து நிற்கிறாள்?" என்று கேட்டார். ஒருவர் வலது கரம் என்று சொன்னார். பின்பு அவர், " சுதந்திர தேவியின் சிலையில் அவள் கையில் வைத்திருப்பது என்ன?" என்று கேட்டார். ஒரு டார்ச் விளக்கு என்று ஒருவர் சொன்னார். பின்னர் அவர் கேட்டார், "இளம் சிவப்பு யானைகளைப் பற்றிய உங்கள் சிந்தனைக்கு என்ன

நடந்தது?" என்று கேட்டார். அவைகள் போய்விட்டன. "இவைகளை நீங்கள் நினைக்கக் கூடாது" என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஏனென்றால் அப்படிச் சொன்னால் அந்த சிந்தைனை தான் வரும். அந்த சிந்தைனைகளை மற்ற நற்சிந்தைனைகளை வைத்து அப்புறப்படுத்த வேண்டும் என்று உண்மையில் வேதாகமம் நமக்குச் சொல்கிறது. இந்த சிந்தைனைகள் நமக்கு எதிராக வரும்போது, நாம் சிந்திக்க வேண்டாதவைகளை சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று உணரும்போது, உடனே நம்முடைய புதிய அடையாளத்தை நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். நாம் உடனடியாக தேவனிடமாகத் திரும்பி, பக்கங்களிலுள்ள வார்த்தைகளால் அல்ல, அவ்வார்த்தைகளின் பின்னால் உள்ள தேவனோடு இணையவேண்டும். நாம் அப்படி செய்யும்போது, நம்முடைய மனது தேவனிலும் ஆவியின் காரியங்களிலும் தங்கி, தேவ சமாதானத்தாலும் ஜீவனாலும் மறுரூபமடைவதைக் காண்பீர்கள் என்று வேதாகமம் ரோமர் 8:6ல் சொல்கிறது. என் சகோதரரே, நீங்கள் இவைகளை சிந்தித்து, கிறிஸ்து உங்களுக்கென்று வாங்கிக் கொடுத்த சுதந்திரத்திலும் சுயாதீனத்திலும் நடந்திடுங்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. ரோமர் 12:1,2 வாசிக்கவும். நம்முடைய சரீரங்களால் நாம் என்ன செய்யவேண்டும்?

   **ரோமர் 12:1,2 -** *“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.”*

2. ரோமர் 12:2 வாசிக்கவும் . இந்த வசனம் நமக்கு சொல்வது, நாம் ______________ வேறுபட்டு இருக்க வேண்டும்.

3. அப்போஸ்தலர் 17:11 வாசிக்கவும். நாம் எதனுடன் இசைந்து சிந்திக்க வேண்டும்?

   **அப்போஸ்தலர் 17:11** *“அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.”*

4. ரோமர் 8:5-6 வாசிக்கவும். ஆவியின் சிந்தையென்பது ______________

   **ரோமர் 8:5-6** *“அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்”.*

5. ரோமர் 12:1-2 வாசிக்கவும். இந்த வசனங்களின்படி நாம் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் என்ன?

6. ஏசாயா 26:3 வாசிக்கவும். நாம் பூரண சமா தானத்தில் எப்படித் தரித்திருக்க முடியும்?

**ஏசாயா 26:3, 4** *“உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.*

7. ஏசாயா 26:3 வாசிக்கவும். நாம் எந்தெந்த வழிகளில் நம்முடைய மனதை தேவனில் வைக்க முடியும்?

# பதில் ஆதாரங்கள்

1. ரோமர் 12:1 வாசிக்கவும். நம்முடைய சரீரங்களால் நாம் என்ன செய்யவேண்டும்?

*அவற்றை தேவனுக்கு வழங்குங்கள் அல்லது ஒப்புக்கொடுங்கள்*

2. ரோமர் 12:2 வாசிக்கவும் . இந்த வசனம் நமக்கு சொல்வது, நாம் ____________ வேறு பட்டு இருக்க வேண்டும்.

*உலகம் அல்லது அவிசுவாசிகள்*

3. அப்போஸ்தலர் 17:11 வாசிக்கவும். நாம் எதனுடன் இசைந்து சிந்திக்க வேண்டும்?

*தேவனுடைய வசனமாகிய வார்த்தையில்*

4. ரோமர் 8:5-6 வாசிக்கவும். ஆவியின் சிந்தையென்பது ____________

*ஜீவனும் சமாதானமும்.*

5. ரோமர் 12:1-2 வாசிக்கவும். இந்த வசனங்களின்படி நாம் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் என்ன?

*நம்மை ஜீவ பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தப்பின் நம்முடைய மனதை புதுப்பிக்க வேண்டும்*

6. ஏசாயா 26:3 வாசிக்கவும். நாம் பூரண சமாதானத்தில் எப்படித் தரித்திருக்க முடியும்?

*நம்முடைய மனதை கர்த்தரிடத்தில் வைக்க வேண்டும்*

7. ஏசாயா 26:3 வாசிக்கவும். நாம் எந்தெந்த வழிகளில் நம்முடைய மனதை தேவனில் வைக்க முடியும்?

*ஜெபம், ஸ்தோத்திரம், வார்த்தையின் தியானம் மற்றும் நன்றி செலுத்துதல்*

# பாடம் 4

# கிறிஸ்துவுடைய சபையின் முக்கியத்துவம்

*டான் க்ரோ*

இன்று கிறிஸ்துவுடைய சபையின் முக்கியத்துவத்தைக் குறித்துப்படிக்கலாம். வேதாகமத்தில் எபிரேயர் 10:25 சொல்கிறது: *"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும்."* கிறிஸ்துவுடைய சபையின் முக்கியத்துவத்தை நாம் பார்க்கும்போது, என்னுடைய கேள்வி, "சபை என்பது என்ன?"

அமெரிக்காவில் கொலராடோ ஸ்பிரிங்ஸ் என்கிற இடத்தில் உள்ள ஒரு உள்ளூர் சபையில் சீடத்துவ நற்செய்திப்பணி பயிற்சியை நடத்தினேன். இதை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று நாங்கள் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, களத்தில் இறங்கி அதைச் செயற்படுத்தினோம். அந்த சபை மக்களுடன் இணைந்து ஆறு வாரங்கள் பணியாற்றியதில், அவர்கள் அல்லாமல் மற்றவர்களிடத்தில் 20 வேதாகமக் குழுக்களை ஸ்தாபிக்க முடிந்தது. சில மாதங்களாக அந்த வேதாகம குழுக்களில் உள்ள மக்களோடு இணைந்து பணிசெய்தோம். அந்த போதகர் ஒருநாள் என்னோடு பேசியது என்னைக் குழப்பியது. அவர் கேட்டார்: "இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டிருந்தார் என்று வேதாகமம் சொல்கிறது. இந்த வேதாகம குழுக்களில் உள்ள மக்கள் சபைக்கு வருவதை நம்மால் ஏன் பார்க்க முடியவில்லை?"

நாம் களத்தில் இறங்கியபோது, மக்கள் இரட்சிக்கப்பட்டுக் கொண்டும், சீடர்களாக்கப்பட்டுக்கொண்டும் இருந்தனர். அவர்களுக்கு ஊழியமும் செய்யப்பட்டது. ஆனால் அந்த போதகர் குறிப்பாக அர்த்தப்படுத்தியது என்னவென்றால், "அவர்கள் ஏன் ஞாயிறு காலையில் இந்தக் கட்டிடத்தில் ஒன்று சேர வராமல் இருக்கிறார்கள்?". சபையைக் குறித்து என்னுடைய விளக்கம் சற்று மாறுபட்டதாக இருந்தது. அந்தப் போதகர் சொன்னது எனக்குக் கஷ்டமாக இருந்தது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் நினைத்தேன், உண்மையிலே *இந்த சீஷத்துவ நற்செய்திப்பணி பயிற்சி வேலை செய்கிறதா? மக்களின் வாழ்க்கையை நாம் இதனால் சந்திக்க முடிகிறதா?* நாம் பலரை சந்திக்கிறோம் என்று எனக்குத் தெரியும், ஆனால் எனக்கு ஏற்பட்ட குழப்பம் என்னவென்றால், சந்திக்கப்பட்ட மக்கள் ஏன் ஞாயிறு காலை ஆராதனைக்கு வராமல் இருக்கிறார்கள்.

"சபை" என்கிற வார்த்தையைக் குறித்து ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டேன். நான் கண்டுபிடித்தவற்றை இந்தப் பாடத்தில் உட்படுத்தியுள்ளேன். ரோமர் 16:3, 1 கொரிந்தியர் 16:19, கொலோசெயர் 4:15, பிலேமோன் 2, அப்போஸ்தலர் 5:42, 20:20 ஆகிய வசனங்களில் புதிய ஏற்பாட்டு காலங்களில் ஒரு சிலரின் வீடுகளில் நடைபெற்ற சபைகளைக் குறித்து வேதாகமம் முதன்மையாகப் பேசுகிறது. எல்லாவித சபைகளும் இருக்கிறதென்று எனக்குத் தெரியும். வீட்டு சபைகள், சிறிதும் பெரிதுமான மக்களைக் கொண்ட சபைகள், இன்னும் பெரிய சபைகள் எல்லாம் இருக்கிறது. புதிய ஏற்பாட்டு சபை மக்களின் வீடுகளில் சிறுசிறு குழுக்களாக சந்தித்ததாகத் தோன்றுவது தான் என் கவனத்தை மிகவும் ஈர்த்தது.

லாரன்ஸ் ஓ ரிச்சர்ட்ஸ் எழுதிய *வேதாகம வார்த்தைகளுக்கான வெளிப்பட விளக்க அகராதியில்* (பக்கம் 164) சொல்கிறபடி, "சபை என்கிற வார்த்தையைக் குறித்து மக்கள் சற்று குழப்பமடைவதை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். அந்த வார்த்தையை பல்வேறு வழிகளில் பயன்படுத்துகிறோம். ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தைப் பொருட்படுத்துகிறோம் (உதாரணமாக 4வது தெருவில் உள்ள சபை), மற்றும் ஒரு ஞாயிற்றுக்கிழமை கூடுகையை (உதாரணமாக இன்றைக்கு நீங்கள் சபைக்குச் சென்றீர்களா?) இவ்விதமான பயன்பாடுகள் வேதாகமத்தில் இல்லை. நான் தொடர்ந்து சிந்தித்தேன், அதனுடைய அர்த்தம் என்ன? *"சபை" என்கிற வார்த்தை எதை*

*அர்த்தப்படுத்துகிறது?* இன்னும் சிலவற்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தொடர்ந்து சொல்கிறது, "ஆராதிக்க வருகிற விசுவாச மக்களின் கூட்டமாக சபையைக் கருதுவதைவிட மதப்பிரகாரமான சேவைகளுக்கு பயன்படுகிற ஒரு கட்டிடமாக சபையை அநேகர் எண்ணுவதால், சபை என்கிற வார்த்தை மாறுபட்ட பொருள் தருவதாகிறது. சபைக்கான கிரேக்க வார்த்தை *'எக்ளிசியா'*, இதை எழுத்தின்படி பார்த்தால், ஆராதிப்பதற்கு, அல்லது ஜெபிப்பதற்கு அல்லது துதிப்பதற்கு அல்லது தேவனை நோக்கிப் பார்ப்பதற்கு கூடுகிற ஒரு மக்கள் கூட்டத்தையே குறிக்கிறது. வேறுசில காரியங்களையும் இங்கு கொண்டுவருகிறேன். இது சொல்கிறது, "எக்ளிசியா என்கிற புதிய ஏற்பாட்டு வார்த்தை எத்தனை விசுவாசிகளை வேண்டுமானலும் குறிக்கலாம் - வீடுகளில் சந்திக்கிற சிறு குழுக்களுக்கும் பயன்படுத்தலாம். (ரோமர் 16:5). ஒரு பெரிய பட்டணத்தில் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கு சேர்த்தும் (அப்.11:22) பயன்படுத்தலாம் அல்லது பூகோள ரீதியாக ஒரு பெரும் பகுதிக்கும் -ஆசியா அல்லது கலாத்தியா என்கிற விதத்திலும் - குறிக்கலாம்." இன்னும் சொல்கிறது, "சபையின் சரியான சந்திப்பு ஒரு வீட்டில் நிகழுவதாக இருந்தது. இப்படி ஒரு கூட்டம் கூடுகையில், ஒரு பாடல் இருந்தது, ஒரு உபதேச வார்த்தை இருந்தது, ஒரு வெளிப்பாடு, ஒரு அந்நிய பாஷை அல்லது வியாக்கியானம் (1கொரிந்தியர் 14:26) இருந்தது. தனிப்பட்டவர்கள் பகிர்ந்துகொண்டார்கள் - அவர்கள் சொல்வதை மற்றவர்கள் கவனித்துக் கேட்டார்கள் (1 கொரிந்தியர் 14:29 ). இப்படிப்பட்ட பகிர்ந்துகொள்கிற வார்த்தைகள் மூலம் சபையானது ஒரு விசுவாச சமுதாயமாக நிலைநிற்பதற்கு அவசியமாக இருந்தது . ஒவ்வொரு நபரும் தங்களுடைய ஆவிக்குரிய வரத்தினால் பங்களிக்கவும், சேவை செய்யவும் எதிர்பார்க்கப்பட்டார்கள்."

எபிரெயர் 10:25 சொல்கிறது, *"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல்."* இயேசுவை நோக்கிப்பார்க்க, ஆண்டவரைத் துதிக்க, ஆண்டவரிடத்தினின்று ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள, அதை செயற்படுத்த கூடிவருகிற ஒரு மக்கள் கூட்டமாக சபை இருந்தது. புதிய ஏற்பாட்டு சபையின் பிரதான நோக்கம் பக்திவிருத்தியாக இருந்தது. விசுவாசத்தில் ஒருவரையொருவர் கட்டி எழுப்பும் நோக்கத்துடன் அவர்கள் கூடி வந்தார்கள்.

ஆரம்பகால சபை ஒரு சுவிசேஷ சபையாக இருந்தது. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தைப்

பகிர்ந்துகொண்டு எல்லா இடங்களிலும் மக்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.அவர்கள் செய்ததைப் போலவே, கர்த்தர் சபையில் அனைவரையும் சேர்த்தார் - ஒரு கட்டிடத்தில் அல்ல - ஆனால் மனந்திரும்பி, விசுவாசிக்கும் தேவனுடைய மக்களிடம் சேர்த்தார். ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்கும், ஒன்றாக உணவைப் பகிர்வதன் மூலம், ஒருவருக்கொருவர் கூட்டுறவு கொள்வதற்கும், அவர்களின் ஆவிக்குரிய தாலந்துகளைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் ஒன்றாக இருந்தபோது ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய பரிசுகளை வழங்கினர். பின்னர் அவர்கள் வெளியே சென்று வார்த்தையைப் பிரசங்கிப்பார்கள். முழு சுழற்சியும் மீண்டும் தொடங்கும். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து , தங்களை ஒன்று சேர்த்தார்கள். அவர்கள் எங்கு கூடியிருந்தாலும் பரவாயில்லை என ஒரு இடத்தில் அல்லது யாராவது வீட்டில் கூடினார்கள். இது ஒரு பெரிய அளவிலான நபர்களாக இருக்கலாம், அல்லது வீடுகளில் ஒரு சிறிய எண்ணிக்கையிலான நபர்களாக இருக்கலாம். அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே ஒன்றாகச் சந்தித்தது ,தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்துவதற்கும், ஒருவருக்கொருவர் ஊக்குவிப்பதற்கும், ஒருவருக்கொருவர் கூட்டுறவு கொள்வதற்கும் தவிர, மற்றவைகள் ஒரு பொருட்டல்ல.

நகரம் முழுவதும் இருபது வெவ்வேறு வேதாகமபள்ளிகளில் சந்திப்பதன் மூலம் ,நான் முன்னர் குறிப்பிட்ட உள்ளூர் சபையின் மூலம் சீடத்துவ சுவிசேஷ திட்டத்துடன் நாங்கள் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பதை கண்டுபிடித்தோம்.

நாங்கள் இருபது வெவ்வேறு சபைகளில் சந்திக்கிறோம். இன்று நமக்குத் தெரிந்தபடி அது சபையாக அல்ல; ஆனால் நாங்கள் வாரத்திற்கு இருபது தடவைகள் “சபை” என்ற பெயரில், ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்பதற்காகவும், கர்த்தராகிய இயேசுவுக்கு அறிவுறுத்தப்படுவதற்காகவும் ,கர்த்தராகிய இயேசு என்ற பெயரில் நாங்கள் ஒன்றாகச் சந்தித்து, தேவனுடைய வார்த்தையிலிருந்து, நம்முடைய ஆவிக்குரிய தாலந்துகளைப் பயன்படுத்துவதற்காகவும் சந்தித்தோம்,

நீங்கள் எந்த சபைக்குச் சென்றாலும் பரவாயில்லை - நீங்கள் ஒரு மதச்சார்பற்ற சபையிலோ அல்லது ஒரு மெகா சபையிலோ அல்லது ஒரு சிறிய வீட்டுக் குழுவிலோ சந்திக்கிறீர்கள் என்றால் - நீங்கள் பார்க்கும்போது வேதம்

சொல்கிறது நாள் நெருங்கி வருகிறது, பாவம் பெருகும்போது, தேவனின் கிருபை அதிகமாகிறது. தேவனுடைய மக்களின் இந்த கூட்டங்களுக்குள் அருள் பெருகும். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் ஒரு பகுதியைக் கொண்ட சபையில், ஒவ்வொரு விசுவாசியும் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யலாம், ஒருவருக்கொருவர் அறிவுறுத்தலாம், உங்கள் ஆவிக்குரிய தாலந்தை ஒருவருக்கொருவர் பயன்படுத்தி ஊக்குவிக்கலாம்.

விசுவாசிகள் குழுவுடன் இந்த வழியில் சந்திப்பதன் மூலம் நாம் அனைவரும் பயனடைவோம். கர்த்தராகிய இயேசுவின் பெயரில் சந்திப்பது இரண்டு அல்லது மூன்று பேர் தான் என்றாலும், நாம் ஒரு வழக்கமான அடிப்படையில் சந்திக்க வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துவதற்கும், ஒருவருக்கொருவர் அறிவுறுத்துவதற்கும், ஒருவருக்கொருவர் ஊக்குவிப்பதற்கும், இயேசுவை ஒன்றாகப் பார்ப்பதற்கும், ஒருவருக்கொருவர் ஜெபிப்பதற்கும் ஒன்றாகச் சந்திப்பது நல்லது. சபையைப் பற்றி நாம் நிறைய சொல்ல முடியும். மூப்பர்கள், மேற்பார்வையாளர்கள், போதகர்கள் மற்றும் சபை மேலாண்மையைப் பற்றி நாம் பேசலாம். ஆனால் அது இந்த போதனையின் நோக்கம் அல்ல. இந்த போதனையின் நோக்கம் சபையின் நோக்கத்தை அறிந்துகொள்வதும், ஒரு தீவில் ஒரு மனிதனைப் போல நாம் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை என்பதையும் அறிந்து கொள்வதுதான். நாம் அப்படி வாழ முடியாது. நாம் இரட்சிப்பைப் பெற்றபோது, விசுவாசிகளின் உலகளாவிய சரீரமான கிறிஸ்துவின் சரீரத்தில் தேவன் நம்மை வைத்தார். நமக்கு ஒருவருக்கொருவர் தேவை, ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தவும், தேவன் நமக்கு அளித்த ஆவிக்குரிய தாலந்துகளுடன் ஒருவருக்கொருவர் சேவை செய்யவும், தேவனின் சபையாக நாம் ஒன்றாகச் சந்திக்க வேண்டும். இன்று தேவனுடைய மக்களுடன் சந்திப்பதை நான் உங்களுக்கு ஊக்குவிக்கிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. எபிரெயர் 10:25 வாசிக்கவும். நாம் எதை விட்டுவிடக் கூடாது?

**எபிரெயர் 10:25 -** *சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*

2. அப்போஸ்தலர் 5:42 வாசிக்கவும். தினந்தோறும் தேவாலயத்திலும், வீடுகளிலும் இயேசுவை _____________ மற்றும் ________________.

**அப்போஸ்தலர் 5:42 -** *தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்.*

*3.அப்போஸ்தலர் 2:42 வாசிக்கவும். ஆதித் திருச்சபை தொடர்ந்து செய்த நான்கு காரியங்கள் யாவை*

*4.அப்போஸ்தலர் 2:44-45 வாசிக்கவும். ஆதித் திருச்சபை சபையில் வாகனங்கள் நிறுத்துவதற்கான கட்டுமான செலவிற்கு பணம் கொடுத்தது .சரியா அல்லது தவறா?*

**அப்போஸ்தலர் 2:44-45 -** *விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.*

5. 1கொரிந்தியர் 12:28 வாசிக்கவும். தேவன் தம்முடைய சபையிலே வைத்திருக்கிற எட்டு வித்தியாசமான வரங்களை பட்டியலிடவும்.

**1 கொரிந்தியர் 12:28 -** *தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்*

6. 1கொரிந்தியர் 14:26 வாசிக்கவும். தேவனுடைய மக்கள் சபையாக சேர்ந்து சந்திக்கும்போது, அவர்களுடைய வரங்களை பயன்படுத்துவதற்கான சுதந்திரம் இருந்தது. அவர்கள் கூடினபோது நடந்த ஐந்து காரியங்களைக் குறிப்பிடவும்.

**1கொரிந்தியர் 14:26** - *நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.*

7. அப்போஸ்தலர் 6:1 வாசிக்கவும். புதிய ஏற்பாட்டின் ஆதித்திருச்சபை அனுதின உணவை பங்கிட்டது __________.

**அப்போஸ்தலர் 6:1** - *அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.*

8. யாக்கோபு 1:27 வாசிக்கவும். பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பக்தியாயிருப்பது

**யாக்கோபு 1:27** - *திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.*

9. 1 தீமோத்தேயு 5:9-11 வாசிக்கவும். புதிய ஏற்பாட்டின் ஆதி சபையால் தாங்கப்பட்ட விதவைகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?

**1 தீமோத்தேயு 5:9-11** - *அறுபது வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி,பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து,*

*இவ்விதமாய் நற்கிரியைகளைக்குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இளவயதுள்ள விதவைகளை அதிலே சேர்த்துக்கொள்ளாதே; ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் காமவிகாரங்கொள்ளும்போது விவாகம்பண்ண மனதாகி,*

10. 1 கொரிந்தியர் 9:14 வாசிக்கவும். சபை விதவைகளையும், அனாதைகளையும், ஏழைகளையும் ஆதரிப்பதோடு , வேறு எதை ஆதரிக்கிறது

**1 கொரிந்தியர் 9:14** - *அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்.*

11. மத்தேயு 25:35-40 வாசிக்கவும். காணிக்கை பெட்டியில் பணத்தைப் போடுவதுதான் தேவனுக்குக் கொடுக்கிற ஒரே வழி என்று மக்கள் ஏன் எண்ணுகிறார்கள்?

**மத்தேயு 25:35-40** - *பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவர்களாகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவர்களாகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.*

12. அப்போஸ்தலர் 4:32-35, நீதிமொழிகள் 3:9-10 வாசிக்கவும். ஆதி சபையின் மூப்பர்களும் போதகர்களும் பணத்தை வைத்து என்ன செய்தார்கள்?

**அப்போஸ்தலர் 4:32-35, -** *விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.*

*கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.*

*நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.*

**நீதிமொழிகள் 3:9-10 -** *உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்.*

# பதில் ஆதாரங்கள்

1. எபிரெயர் 10:25 வாசிக்கவும். நாம் எதை விட்டுவிடக்கூடாது?

***நாம் விசுவாசிகளாக ஒன்றாக கூடிவருதலை விட்டுவிடக்கூடாது.***

2. அப்போஸ்தலர் 5:42 வாசிக்கவும். தினந்தோறும் தேவாலயத்திலும், வீடுகளிலும் இயேவை ________________

***பிரசங்கித்து போதித்தனர்.***

3. அப்போஸ்தலர் 2:42 வாசிக்கவும். ஆதித் திருச்சபை தொடர்ந்து செய்த நான்கு காரியங்கள் யாவை?

***அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் (ஒன்றாக உணவருந்தி, ஐக்கியத்தைப் பகிர்ந்து கொள்ளல்) ஜெபத்திலும் தரித்திருந்தார்கள்.***

4. அப்போஸ்தலர் 2:44-45 வாசிக்கவும். ஆதித் திருச்சபை சபையில் வாகனங்கள் நிறுத்துவதற்கான கட்டுமான செலவிற்கு பணம் கொடுத்தது. உண்மையா அல்லது தவறா?

***தவறு.***

5. 1கொரிந்தியர் 12:28 வாசிக்கவும். தேவன் தம்முடைய சபையிலே வைத்திருக்கிற எட்டு வித்தியாசமான வரங்களை பட்டியலிடவும்.

***அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், அற்புதங்கள் செய்பவர்கள், குணமாக்கும் வரம் பெற்றவர்கள், நிர்வாக வரம் பெற்றவர்கள், அறியாத பாஷைகளில் பேசும் வரம் பெற்றவர்கள்.***

6. 1கொரிந்தியர் 14:26 வாசிக்கவும். தேவனுடைய மக்கள் சபையாக சேர்ந்து சந்திக்கும்போது, அவர்களுடைய வரங்களை பயன்படுத்துவதற்கான சுதந்திரம் இருந்தது. அவர்கள் கூடினபோது நடந்த ஐந்து காரியங்களைக் குறிப்பிடவும்.

***ஒருவர் பாட்டுப்பாடினார், மற்றொருவர் போதித்தார், மற்றொருவர் தேவன் தனக்குத் தந்த வெளிப்பாடைக் கூறுவார், ஒருவர் அந்நிய பாஷையில் பேசுவார், மற்றொருவர் பேசப்பட்டதற்கு விளக்கம் தருவார்.***

7.அப்போஸ்தலர் 6:1 வாசிக்கவும். புதிய ஏற்பாட்டின் ஆதித்திருச்சபை அனுதின உணவை ________________ பங்கிட்டது.

***விதவைகளுடன்***

8.யாக்கோபு 1:27 வாசிக்கவும். பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பக்தியாயிருப்பது ______________________ அவர்களின் பாடுகளின்போது விசாரிப்பதாகும்.

***அனாதைகளையும் விதவைகளையும்***

9. 1தீமோத்தேயு 5:9-11 வாசிக்கவும். புதிய ஏற்பாட்டின் ஆதி சபையால் தாங்கப்பட்ட விதவைகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?

***ஆதரிக்கப்பட வேண்டிய விதவை குறைந்தது அறுபது வயதுடையவராக இருக்கவேண்டும். தன் கணவருக்கு உண்மையுள்ளவராக இருந்திருக்க வேண்டும். அவள் செய்த நன்மைகளினிமித்தம் மற்றவர்களால் : மதிக்கப்படுகிறவளாக இருக்கவேண்டும். தன் பிள்ளைகளை நல்லமுறையில் வளர்த்திருக்கிறாளா? அந்நியரை உபசரித்திருக்கிறாளா? மற்ற கிறிஸ்தவர்களுக்கு தாழ்மையுடன் சேவை செய்திருக்கிறாளா? துயரத்தில் இருப்பவர்களுக்கு - உதவிசெய்திருக்கிறாளா? நன்மை செய்வதற்கு ஆயத்தமாக இருந்திருக்கிறாளா? வயது குறைந்த விதவைகள் இந்த பட்டியலில் இருக்கக்கூடாது.***

10. 1கொரிந்தியர் 9:14 வாசிக்கவும். விதவைகளையும், அனாதைகளையும், ஏழைகளையும் சபை ஆதரிப்பதோடு______________________ தாங்கினது.

***வசனத்தை போதிப்பவர்களையும்***

11. மத்தேயு 25:35-40 வாசிக்கவும். காணிக்கை பெட்டியில் பணத்தைப் போடுவதுதான் தேவனுக்குக் | கொடுக்கிற ஒரே வழி என்று மக்கள் ஏன் எண்ணுகிறார்கள்?

*ஏனென்றால் அவர்களுக்கு அப்படிதான் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.*

12. அப்போஸ்தலர் 4:32-35, நீதிமொழிகள் 3:9-10 வாசிக்கவும். ஆதி சபையின் மூப்பர்களும் போதகர்களும் பணத்தை வைத்து என்ன செய்தார்கள்?

*தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்து, தங்கள் கொடுத்தலின் மூலம் தேவனைமகிமைப்படுத்தினார்கள்.*

# பாடம் 5

# விடுதலை

*டான் க்ரோ*

நாம் இன்று பிசாசின் போராட்டத்தைக் குறித்துப்பார்க்கப் போகிறோம். இயேசு இப்பூமியில், தம்முடைய ஊழியத்தில் பிசாசுகளைத் துரத்தினார், பிணியாளிகளை சுகமாக்கினார், மரித்தோரை எழுப்பினார், இன்னும் பல அற்புதங்களையும் செய்தார். அவரின் ஊழியத்தில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி மக்களிடத்திலிருந்து பிசாசுகளை துரத்துவதாக இருந்தது. வேதாகமத்தில் அப்போஸ்தலர் 10:38 நமக்குச் சொல்கிறது, *"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்: தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். மேலும்* 1 யோவான் 3:8 சொல்கிறது, *"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்."* நான் பிசாசுகளின் தன்மையைக் குறித்து வித்தியாசமான கண்ணோட்டம் உடையவனாக இருந்தேன் - பிசாசுகள், தீய ஆவிகள், அசுத்த ஆவிகள் என்றழைக்கப்படுகிறவைகள் எல்லாம் உண்மையான ஜீவனுள்ள தேவனை ஆராதிக்காமல், விக்ரகங்களை தொழுது கொண்டிருக்கிற இந்தியாவிலோ அல்லது மூன்றாம் உலக நாடுகளிலோ தான் தோன்றும் என தவறாக எண்ணினேன்.

அமெரிக்காவில், டெக்சாஸ் மாகாணத்தில் ஒரு சபையில் சில ஆண்டுகளுக்கு முன்பாக எனக்கு நேரிட்ட ஒரு அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மக்கள் எல்லாரும் பாடிக் கொண்டிருந்தபோது, ஒரு பெண் திடீரென தரையிலே விழுந்தாள். அவளுக்கு ஏதோ வலிப்பு வியாதி இருந்ததுபோலத் தோன்றியது. அங்கே டாக்டர். ரைஸ்

என்ற பெயருடைய ஒரு மருத்துவர் இருந்தார். அந்த சபையில் இருந்த சிலருடைய வீடு அருகாமையில் இருந்ததினால், அப்பெண்ணை வீட்டுக்கு எடுத்துச்சென்று பரிசோதிப்பது நல்லது என்றார். நாங்கள் அவர்கள் வீட்டை அடைந்தபோது, இவள் ஒரு காட்டுப்பூனை போல மாறினாள். அவளின் கண்கள் எல்லாம் பரந்து விரிந்தது. இந்த மெல்லிய உருவமுடைய இளம் வாலிபப் பெண்ணிலிருந்து, கடுமையான ஆண்குரலில் பேசுகிற ஒலிவந்தது. திடீரென அது என்னை வார்த்தைகளால் தாக்க ஆரம்பித்தது, "நீ நரகத்திற்குப் போகிறாய்! நான் அதை மறுத்து "இல்லை" என்று சொன்னேன். நான் அதுபோன்ற காட்சியைக் கண்டிராதபடியால், மிகவும் பீதியடைந்தவனாக இருந்தேன். அது சொன்னது, "ஆம், நீ நரகத்திற்குத் தான் போகிறாய்," நான் சொன்னேன், " இல்லை, நான் நரகத்திற்கு போக மாட்டேன்." அதற்கு என் மீது வல்லமையும் அதிகாரமும் உள்ளது போலத் தோன்றியது, எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, அந்தப் பெண்ணுக்குள் இருக்கும் அசுத்த ஆவியைக் கையாள எனக்குத் தெரியவில்லை.

என்னுடன் இருந்த நண்பர் ஒருவர் இதை எல்லாம் கண்டு பயந்து, உடனே அங்கிருந்து சென்று விட்டார்.நான் தனியாக அங்கு இருந்தேன். நான் என்ன செய்வது என்று திகைத்து நின்றேன். அந்தப் பெண்ணுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட பெலன் இருந்தது, அவள் ஒருக்காலும் கற்றறியாத ஜெர்மனி மொழியில் பேச ஆரம்பித்தாள் - பிசாசின் எல்லாவிதமான வெளிப்பாடுகளும் அவளிலிருந்து வந்து கொண்டிருந்தன. பிசாசு பிடித்திருந்தவளாகிய அவளை எப்படி கையாள்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் வேதகமத்திற்கு வல்லமை உண்டு என்று நான் எப்போதும் விசுவாசித்தேன் . நீங்கள் ஒரு குழந்தையாயிருந்து டிரக்குலா போன்ற பிசாசு மையமான திரைப்படத்தைப் பார்ப்பது போலிருந்தது. பிசாசு திடீரென்று அந்த நபரை நோக்கி வரும், உடனே அந்த நபர் ஒரு சிலுவையை உருவுவார், அந்தப் பிசாசு "ஆஆ" என்று கத்தி போய்விடும். நானும் வேதாகமத்தைக் குறித்து அப்படித்தான் யோசித்தேன். அதற்கு வல்லமை உண்டு என்று எனக்குத் தெரியும். ஆனால் அந்த வல்லமையை எப்படி வெளிக்கொணருவது என்று எனக்குத் தெரியவில்லை. இதுபோன்ற சூழ்நிலையை நான் சந்தித்திராதபடியால், அந்த நேரத்தில் தேவனுடைய கிருபை எனக்கு உதவியது. நான் என் வேதாகமத்தைத் திறந்து, புதிய ஏற்பாட்டில் பிலிப்பியர் புத்தகத்தைத் திருப்பினேன். 2 ஆம்அதிகாரம் 8 முதல்11 வசனங்களை வாசிக்க ஆரம்பித்தேன், *"அவர் மனுஷரூபமாய்க்*

*காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."*

அதற்கு அந்தப் பிசாசு,"அதைச் சொல்ல வேண்டாம் அந்த வார்த்தைகளை என்னால் தாங்க முடியவில்லை! அதைச் சொல்ல வேண்டாம்!" என்றது. எனன ஒரு ஆச்சரியமான திருப்பம் என்று நான் நினைத்தேன். எனவே நான்" நல்லது, இயேசுவின் நாமத்தில், வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் அனைவரின் முழங்கால்களும் முடங்கும்." என்று சொன்னேன்."அதைச்சொல்லவேண்டாம்! அந்த வார்த்தைகளை என்னால் தாங்க முடியவில்லை! அதைச் சொல்லவேண்டாம், சொல்லவேண்டாம்!" என்று அவள் அலறினாள்.நான் வசனங்களை வாசிக்க வாசிக்க *இந்தப் பிசாசு இவளுக்குள் மடத்தனமாக மாறிக்கொண்டிருக்கிறது என நான் நினைத்து தொடர்ந்து வாசித்தேன்."அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்,"* மீண்டும் அதேவிதமான பதில் வந்தது, "அதைச் சொல்ல வேண்டாம், என்னால் தாங்க முடியாது!" பின்பு அந்தப் பிசாசு அவளின் காதுகளைப் பிடித்து, "அதைச் சொல்ல வேண்டாம், என்னால் அந்த வார்த்தைகளைத் தாங்கமுடியாது, அதைச் சொல்ல வேண்டாம்!" என்று சொல்லிக் கொண்டே அவளைத் தரையிலே தள்ளிப்போட்டது, அவள் இயேசுவின் நாமத்தில் பணிந்துகொள்ள ஆரம்பித்தாள். நான் மேலும் சொன்னேன், "இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் அனைவரும் முழங்கால்களும் முடங்கும்" என்று கூறினேன்.

சற்றுநேரத்துக்கு முன்புவரை, அந்தப் பிசாசு என்மேல் அதிகாரமும் வல்லமையும் கொண்டிருந்தது. அது என்னை அங்கிருந்து அடித்து துரத்திவிடும் என்று எண்ணினேன்-எனக்குத்

தெரியவில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் தேவனுடைய வார்த்தைக்கு வல்லமை உண்டு. நான் வேதாகமத்தைத் திறந்து, எபேசியர் 6:17 வாசித்தேன், *"தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்".* சத்துருவை வெட்டி வீழ்த்துகிற தாக்குதலின் ஆயுதமாக இது இருக்கிறது என்பதை கவனியுங்கள். தேவனுடைய வார்த்தையே ஆவியின் பட்டயம். இயேசு சோதிக்கப்பட்டபோது, என்ன செய்தார் என்று நினைத்துப்பாருங்கள். பிசாசு அவரிடத்தில் வந்து, "நீர் எனக்கு முன்பாக விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், உலகத்தின் எல்லா இராஜ்யங்களையும் நான் உனக்குத் தருவேன்," என்று சொன்னது. இயேசு *"அப்பாலே போ சாத்தானே: உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே"* (மத்தேயு 4:10) என்றார். பின்பு பிசாசு அவரை மீண்டும் சோதித்தது. அவரோ, "எழுதியிருக்கிறது, சாத்தானே,எழுதியிருக்கிறதே," என்று சொல்லி, தேவ வார்த்தையை எடுத்துக் காட்டினார். அவர் ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்தினார், பின்னர் பிசாசு அவரை விட்டு கொஞ்சக் காலம் நீங்கியிருந்தான் என்று வேதாகமம் சொல்கிறது.

சத்துருவைத் தோற்கடிக்கும்படிக்கு, நமக்கு இருக்கிற ஒரே ஆயுதம் தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயமே. நான் அதினின்று கற்றுக்கொண்டது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? நான் கற்றுக்கொண்டது இதுதான்: ஒவ்வொரு முறை நான் வேதாகமத்தைப் படிக்கும்போது, எவ்வளவு பசியாயிருக்கிறேன் என்பதை உணர்ந்து, அதினின்று எடுத்துப் புசிப்பேன் அல்லது அன்றையதினம் நான் செய்யாமல் விட்டுவிட்ட காரியங்களைப் பற்றி யோசிப்பேன். சீடத்துவத்தைக் கற்றுக்கொண்டு இருப்பவர்கள் வகுப்பிற்கு வராமல் இருப்பதற்கு அநேக காரணங்களைச் சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும். ஏன் அப்படி சொல்கிறார்கள் என்று கண்டுகொண்டேன். வேதாகமத்தில் உள்ள சில காரியங்களை நாம் அறிய வேண்டுமென தேவன் விரும்புகிறார், சாத்தான் அவைகளை நாம் அறியக்கூடாது என விரும்புகிறான். எனவே ஒவ்வொரு முறையும் நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் படிக்க வரும்போதும் அல்லது சீஷத்துவ வகுப்பிற்கு வரும்போதும் வேதாகமத்தில் உள்ள சில காரியங்கள் உங்களுக்குத் தெரியக்கூடாது என சத்துரு விரும்புகிறான் - அந்த வார்த்தைகளில் மறைந்திருக்கிற தேவனை நீங்கள் காணக்கூடாது என விரும்புகிறான்.

அந்தகாரத்தின் இராஜ்யம் ஒன்றிருக்கிறது, தேவனுடைய அன்பின குமாரனின் இராஜ்யமும் இருக்கிறது. கொலோசெயர் 1:13ல் பவுல் சொல்கிறார், *"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்."* நீங்கள் எந்த இராஜ்யத்தில் இருக்கிறீர்கள்? எங்கே ஆட்சியும் ஆளுகையும் இருக்கிறதோ அதுதான் இராஜ்யம். இயேசு கிறிஸ்துதான் இராஜா. நீங்கள் உங்கள் வாழ்க்கையை எப்பொழுதாவது அவருக்குக் கொடுத்திருக்கிறீர்களா? இன்று நீங்கள் அவரைப் பின்பற்றுகிறீர்களா? அல்லது மற்ற காரியங்கள் உங்கள் வாழ்வில் முதன்மைத்துவம் செலுத்திக் கொண்டிருக்கிறதா? லூக்கா 6:46ல் *“என்னை ஆண்டவரே! ஆண்டவரே! எனறு நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?”* என்று இயேசு சொல்கிறார். அவர் உங்கள் வாழ்வில் முதன்மையானவராக இருக்க விரும்புகிறார். உங்கள் வாழ்வின் ஆட்சிபீடத்திலிருந்து, அந்த முதன்மை ஸ்தானத்திலிருந்து, அவரைப் பிரிக்க முயற்சிக்கிற ஒரு அந்தகாரத்தின் இராஜ்யம் இருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்றால், சத்துருவானவன் அந்த முதன்மை ஸ்தானத்தைப் பிடிக்க விரும்புகிறான். உங்கள் முழு இருதயத்துடன் நீங்கள் இன்று இயேசுவிடம் திரும்பி, ஒரு சத்துரு உண்டு என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். அவன் பெயர் சாத்தான், அவனுக்குப் பிசாசுத்தனமான வல்லமை இருக்கிறது, ஆனால் நமக்கு அவன் மேல் அதிகாரம் உண்டு என வேதாகமம் சொல்கிறது.

மத்தேயு 10:8ல் *"வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்: இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்"* என்று இயேசு சொல்கிறார்.இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், நீங்கள் அதற்காக செல்லும்போது, உங்களுக்கு சத்துருவின் மேல் அதிகாரம் கிடைக்கும். தேவன் உங்களுக்காக வைத்திருப்பதிலிருந்து சத்துரு உங்களைப் பிரிக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இயேசுவை உங்கள் ஆண்டவராக்கி, அவருக்கு முதலிடம் கொடுங்கள். அதற்காக நீங்கள் ஒருக்காலும் வருந்தமாட்டீர்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1 எபேசியர் 6:12 வாசிக்கவும். பிசாசின் உலகத்தோடு நமக்கிருக்கிற போராட்டத்தை இந்த வசனம் எப்படி விவரிக்கிறது?

**எபேசியர் 6:12** - *"இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு."*

2. மாற்கு 16:17வாசிக்கவும். விசுவாசிக்கு உள்ள அதிகாரத்தைக் குறித்து இந்த வசனம் என்ன சொல்கிறது?

**மாற்கு 16:17** *"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;"*

3. யாக்கோபு 4:7 வாசிக்கவும். பிசாசின் பிடியிலிருந்து விடுதலையைத் தேடுகிற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

**யாக்கோபு 4:7,** *"தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்".*

4. யாக்கோபு 1:14 வாசிக்கவும். தீமையான காரியத்தை விரும்பத்தக்கதாக சாத்தான் எப்படி நம்மை வஞ்சிக்கிறான்?

**யாக்கோபு 1:14** *"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்."*

5. ரோமர் 6:13 வாசிக்கவும். கிறிஸ்துவின் காரியங்களால் ஒருவன் தன் வாழ்க்கையை நிரப்புவானாகில், பிசாசுகள் இருக்கமுடியாமல் தானாகவே ஓடிப்போகும், நாம் என்ன செய்ய வேண்டுமென்று இந்த வசனம் சொல்கிறது?

**ரோமர் 6:13,** *"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு*

*ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்”.*

6. ரோமர் 13:14 வாசிக்கவும். மாம்சத்தின் கிரியைகள் பிசாசுகளுக்குத் தீனியாகிறது. எனவே தேவனுடைய வழிகளாகிய அன்பிலும், சுத்தத்திலும் நடந்து, அவைகளைப் பட்டினிப்போடவேண்டும்.நாம் நமது மாம்சத்திற்கு எந்த______ செய்ய தேவையில்லை.

**ரோமர்13:14** - *துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்*

7. லூக்கா 10:17-19 வாசிக்கவும். பிசாசுகளைத் துரத்தும்படிக்கு நாம் அவரிடத்தில் ஜெபிக்க வேண்டுமென இயேசு ஒருக்காலும் சொல்லவில்லை. அவர் நமக்கு வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுத்துள்ளார். இந்த வசனம்சொல்கிறது, நமக்கு வல்லமையும், அதிகாரமும் ____________________ மேல் உண்டு.

**லூக்கா 10:17-19** - *பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.*

# பதில் ஆதாரங்கள்

1 எபேசியர் 6:12 வாசிக்கவும். பிசாசின் உலகத்தோடு நமக்கிருக்கிற போராட்டத்தை இந்த வசனம் எப்படி விவரிக்கிறது?

***போராட்டம் உண்டு என்று***

2. மாற்கு 16:17வாசிக்கவும். விசுவாசிக்கு உள்ள அதிகாரத்தைக் குறித்து இந்த வசனம் என்ன சொல்கிறது?

***இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவதற்கு நமக்கு அதிகாரம் உண்டு.***

3. யாக்கோபு 4:7 வாசிக்கவும். பிசாசின் பிடியிலிருந்து விடுதலையைத் தேடுகிற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

***தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்***

4. யாக்கோபு 1:14 வாசிக்கவும். தீமையான காரியத்தை விரும்பத்தக்கதாக சாத்தான் எப்படி நம்மை வஞ்சிக்கிறான்?

***அவன் நம்மை நம் சுய இச்சையினாலே இழுத்து, சிக்குண்டு, சோதிக்கப்பட வைக்கிறான்***

5. ரோமர் 6:13 வாசிக்கவும். கிறிஸ்துவின் காரியங்களால் ஒருவன் தன் வாழ்க்கையை நிரப்புவானாகில், பிசாசுகள் இருக்கமுடியாமல் தானாகவே ஓடிப்போகும், நாம் என்ன செய்ய வேண்டுமென்று இந்த வசனம் சொல்கிறது?

***நாம் நம்மை பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், நம் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.***

6. ரோமர் 13:14 வாசிக்கவும். மாம்சத்தின் கிரியைகள் பிசாசுகளுக்குத் தீனியாகிறது. எனவே தேவனுடைய வழிகளாகிய அன்பிலும் சுத்தத்திலும் நடந்து, அவைகளைப் பட்டினிப்போடவேண்டும்.

***நாம் நமது மாம்சத்திற்கு எந்த _______________ செய்ய தேவையில்லை. (ஏற்பாடும்)***

7. லூக்கா 10:17-19 வாசிக்கவும். பிசாசுகளைத் துரத்தும்படிக்கு நாம் அவரிடத்தில் ஜெபிக்க வேண்டுமென இயேசு ஒருக்காலும் சொல்லவில்லை. அவர் நமக்கு

***வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுத்துள்ளார்.***

# பாடம் 6

# விசுவாசியின் அதிகாரம்

*ஆன்ட்ரூ வோமக்*

விசுவாசிகளாகிய நமக்கு தேவன் அதிகாரம் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்துப் பேசும்போது, நமக்கு இருக்கிற அதிகாரத்தைப் பற்றி மட்டுமல்ல, சாத்தானுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பற்றியும் பார்க்க வேண்டும். அவன் அளவுக்கதிகமாக பெரிதுபடுத்தப்பட்டிருக்கிறான். நம்மைவிட மேலான ஒரு வல்லமையோடு நாம் சண்டையிடுவதாக நம்பும்படி கிறிஸ்தவர்கள் நடத்தப்பட்டிருக்கிறார்கள், அவனை எப்படியோ சமாளிக்கிற ஒரு நிலைமை நமக்கு உள்ளது. வேதவாக்கியங்கள் நமக்கு அப்படிப் போதிக்கவில்லை. எபேசியர் 6:12 சொல்கிறது, *"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு"* என வேதாகமம் சொல்கிறது. சாத்தான் இருப்பது உண்மை. அவனுக்கும் துரைத்தனங்களால், வல்லமைகளாலான ஒரு முறைமை இருந்தாலும், இதற்கு முந்திய வசனம் நாம் சத்துருவின் தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்று சொல்லுகிறது. உண்மையில் நமக்கு எதிராக சத்துருவுக்கு இருக்கிற ஒரே வல்லமை ஏமாற்றுவது மட்டும்தான்; வெற்றி சிறப்பது அல்ல.

ஆதியாகமம் 3ஆம் அதிகாரத்தில் ஆதாம் ஏவாளுக்கு எதிராக முதலாம் சோதனை வந்தபோது, சாத்தான் ஏதோ மேலான ஒரு சக்தியுடன் வரவில்லை . உதாரணமாக, ஒரு மாபெரும் விலங்கிற்குள் அல்லது யானைக்குள் புகுந்து, ஆதாமின் தலைக்குமேல் அதின் பாதத்தை வைத்து, "எனக்குப் பணிந்துவிடு, இல்லாவிட்டால், " என்று

சொல்லி மிரட்டாமல், தேவனுடைய படைப்புகளில் மிகவும் தந்திரமான சர்ப்பத்துக்குள் புகுந்தான். அவன் தந்திரமாக சர்ப்பத்திற்குள் வந்ததற்கான காரணம் - ஆதாமையும் ஏவாளையும் அவன் கட்டாயப் படுத்தும் எதையும், செய்ய வைக்க முடியவில்லை என்பதே. அவனால் ஏமாற்ற மட்டுமே முடிந்தது. அவன் தேவனின் தன்மைக்கும் குணத்திற்கும் எதிராக வந்து அவரை விமர்சிக்கத் தொடங்கினான்."தேவன் உன்னை நேசிக்கவில்லை", அவர் உங்களிடமிருந்து விஷயங்களைத் மறைக்கிறார் . தேவனுக்கு எதிராக பாவம் செய்ய ஆதாமையும் ஏவாளையும் தூண்டுவதற்கு அவர் ஏமாற்றுவதைப் பயன்படுத்தினான்.

இங்கே சொல்வதற்கு அநேக காரியங்கள் இருந்தாலும், விசுவாசியின் அதிகாரம் பற்றியதான காரியத்தை உங்களுக்கு முன்னாகத் தெளிவாக வைக்க விரும்புகிறேன். சாத்தானுக்கு உங்கள் மேல் எந்த வல்லமையும் அதிகாரமும் கிடையாது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அவன் தோற்கடிக்கப்பட்ட சத்துரு. பொய்களையும் ஏமாற்று வேலைகளையும் உங்களுக்கு எதிராக அவன் வரமுடியும். உங்கள் வாழ்க்கை அழிந்து கொண்டிருக்குமானால், "சாத்தான் தான் இந்த அம்புகளை எனக்கு எதிராக எய்கிறான்," என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் அவனுக்கு வெடிமருந்தை வழங்குகிறவர்கள் நீங்கள் தான். அவனுடைய பொய்களுக்கும் வஞ்சனைகளுக்கும் பதில் கொடுக்க வேண்டியவர்கள் நீங்களே. நீங்கள் சாத்தானுக்கு இணங்காவிட்டால், அவன் உங்களுக்குள் வரவோ அல்லது உங்கள் மீது வல்லமையை செலுத்தவோ முடியாது. 2 கொரிந்தியர் 10:3-5 சொல்கிறது, *"நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்".* உங்களின் யுத்தத்திற்கான ஆயுதங்கள் என்னவென்று வசனங்கள் சொல்கின்றன. குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஆயுதமும் உங்கள் சிந்தையை, உங்கள் நினைவுகளை குறிப்பிடுவதாக உள்ளது. உங்களை ஏமாற்றுவதைத் தவிர சாத்தானுக்கு உங்கள் மீது எந்த விதமான அதிகாரமும் கிடையாது.

சில காரியங்களை சுருக்கமாக தொகுத்துக்கூற விரும்புகிறேன். ஆதியிலே தேவன் மெய்யாகவே சகல அதிகாரமும் உடையவராக இருந்தார். எல்லா அதிகாரமும் வல்லமையும் தேவனிடத்திலிருந்து வரவேண்டி இருந்தது. ஏனெனில் அவர் ஒருவரே எல்லா வல்லமையும் தமக்குள்ளே கொண்டிருந்தார். எல்லாம் அவரினின்று பகிர்ந்தளிக்கப்பட்டதே. அவர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோது, அவர் சகல அதிகாரமும் வல்லமையும் உடையவராக இருந்தார். பின்பு ஆதியாகமம் 1:26ல் தேவன் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்து, *"அவர்கள் ... பூமியனைத்தையும் .....ஆளக்கடவர்கள் என்றார்."* இதை சங்கீதம் 115:16 உடன் இணைத்துப் பாருங்கள், *"வானங்கள் கர்த்தருடையவைகள்: பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்."* சிருஷ்டிகர் என்ற முறையில் தேவன் சர்வத்திற்கும் ஆளுனராக இருந்தார், ஆயினும் பூமியின் மேலுள்ள ஆளுகையை அல்லது அதிகாரத்தை சரீரப்பிரகாரமான மனிதர்களுக்குக் கொடுத்தார். இந்த பூமியை ஆளுகை செய்வதற்கு சாத்தான் எந்த உரிமையும் வல்லமையும் கிடையாது. மனிதனை பாவத்திற்கேதுவாக வஞ்சித்ததின் மூலம் அவன் அந்த அதிகாரத்தை எடுத்துக்கொண்டான். தேவன் அந்த வல்லமையை மனித இனத்துக்குக் கொடுத்தார். மனிதன் வீழ்ந்தபோது, அவன் தேவனால் அருளப்பட்ட அந்த வல்லமையை பிசாசுக்கு தந்துவிட்டான். மனிதனை அடக்கும்படியாகவோ, இந்த பூமியை ஆளும்படியாகவோ சாத்தானுக்கு ஒருக்காலும் தேவனால் வல்லமை கொடுக்கப்படவில்லை.

சாத்தான் இந்த உலகத்திற்கு தேவனாயிருக்கிறான் என்று வேதவாக்கியம் சொல்லுகிறது, ஆனாலும் தேவன் அவனை இந்த உலகத்துக்குக் கடவுளாக ஏற்படுத்தவில்லை. மனிதனுக்கு மேலான ஸ்தானத்தை ஒருக்காலும் தேவன் பிசாசுக்கு கொடுக்கவில்லை. இந்த பூமியின் மீதான ஆளுகையையும், அதிகாரத்தையும் அவர் மனிதனுக்குக் கொடுத்தார். சாத்தானால் அடக்கி, ஆளுகை செய்து, எல்லாப் பிரச்சனைகளையும் கொண்டுவர முடிகிறதென்றால், அதற்கு ஒரே காரணம் மக்கள் தேவனிடமிருந்து பெற்ற அதிகாரத்தை அவர்கள் அவனுக்கு தந்துவிடுகிறார்கள். இது தேவனுக்கு உண்மையிலே ஒரு பிரச்சனையாயிற்று. ஏனெனில் ஆவியாயிருக்கிற தேவன் இந்த பூமியின் மீதான அதிகாரத்தை சரீரப்பிரகாரமான மனிதர்களுக்கு வழங்கியிருந்தார். திட சரீரமுடைய மக்கள் மாத்திரமே இந்த பூமியில் ஆளுகை செய்யவும், தாக்கம் ஏற்படுத்தவும் வல்லமையும் அதிகாரமும்

பெற்றிருந்தனர். நம்முடைய அதிகாரத்தை சாத்தான் பெற்றுக் கொள்வதற்காக அவன் நம்மிடம் வரவேண்டியதாயிருந்தது. அதனால் தான் அவன் ஒரு சரீரத்தில் குடிபுக விரும்புகிறான். வேதவாக்கியங்களில் பிசாசுகள் எதையாவது செய்வதற்கு ஒரு சரீரம் வேண்டியதாயிருந்தது. ஏனெனில் சாத்தான் ஒரு திட சரீரத்தின் வழியாகவே தன் எல்லா வேலைகளையும் செய்ய முடியும். ஏனெனில் ஆவியாயிருக்கிற தேவன் அதிகாரத்தை சரீரப்பிகாரமான மனுஷ ர்களுக்குக் கொடுத்துவிட்டபடியால், ஒரு விதத்தில் அவரின் கைகள் கட்டப்பட்டது போலானது. இங்கே தேவனுக்கு வல்லமையும் அதிகாரமும் இல்லை என்பதாக அல்ல, ஆனால் அவரின் உத்தமத்தின் நிமித்தமாக அப்படியாயிற்று. அவர் அதிகாரத்தை சரீரப்பிரகாரமான மனுஷர்களுக்குக் கொடுத்தார். தேவன் தன் வார்த்தையில் உண்மையுள்ளவராக இருந்து, அந்த அதிகாரத்தை உடனே பறித்துக்கொள்ளாமல், தாம் சொன்ன வாக்கைக் காத்து நிறுத்துகிறார். அவர் தம்மை வெளிப்படுத்தும்படி, வரலாறு முழுவதுமாக ஒரு மனுஷனைத் தேடிக்கொண்டிருந்தார், ஆனால் பிரச்சனை என்னவென்றால், எல்லாரும் களங்கப்பட்டவர்களாய் தங்களை சாத்தானுக்கு இணங்கப்பண்ணினார்கள். எனவே அவர் என்ன செய்தார்?

தேவன் இறுதியாக தாமே இந்த பூமிக்கு ஒரு மனிதனாக அவதரித்தார். நீங்கள் இதைப் புரிந்துகொள்ளும்போது இது மிகப்பெரிய ஒரு காரியமாக இருக்கும். ஏனெனில் பிசாசு இப்பொழுது ஒரு பெரும் பிரச்சனைக்குள்ளாகி விட்டான். அவன் மனிதவர்க்கத்தின் வல்லமையை எடுத்து பயன்படுத்திக்கொண்டிருந்தான், தேவன் நேரடியாக இந்தப் பிரச்சனைகளுக்குள் ஈடுபடக் கூடாதிருந்தது. ஏனெனில் மனிதன் தன் விருப்பத்தின் அடிப்படையில் தேவனால் அருளப்பட்ட அதிகாரத்தை சாத்தானுக்கு திருப்பிக் கொண்டிருந்தான்.சாத்தான் செய்தது தவறாக இருந்தாலும், மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும் வல்லமையையும் அவனுக்குக் கொடுத்தான். ஆனால் இப்பொழுதோ தேவன் குறுக்கே வந்துவிட்டார், இப்பொழுது அவர் ஆவியில் மாத்திரமல்ல, சரீரப்பிரகாரமான மாம்ச வடிவிலும் வெளிப்பட்டுவிட்டார். இந்தக் காரியம் பிசாசின் நிலைமையை மோசமாக்கிவிட்டது, தேவன் பரலோகத்தில் அதிகாரமுடையவராக மாத்திரமல்ல, மனுஷனாக வந்ததால் பூமியின் மேல் அதிகாரம் பெற்றார். யோவான் 5:26-27ல் இயேசு சொல்கிறார், *"ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்*

*தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்."* இங்கே அவர் தம்முடைய திட சரீரத்தைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்.

இயேசு வந்து தேவன் தந்த அதிகாரத்தைச் செயற்படுத்தினார். பிசாசு அவரை சோதித்தான், இயேசுவோ ஒருக்காலும் அவனுக்கு இணங்கவில்லை. அவரோடு பண்ணின ஒவ்வொரு யுத்தத்திலும் அவன் தோற்றுப்போனான். பின்பு இயேசு நம்முடைய பாவங்களை சுமந்து, நமக்காக மரித்து, பாதாளத்திற்குச் சென்று, உயிரோடு எழுந்தார். மத்தேயு 18:18ல், *"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"* என்றார். தேவன் மனிதனுக்குக் கொடுத்ததும், மனிதன் துர்ப்பிரயோகம் செய்ததுமான அதிகாரத்தை அவர் மீட்டெடுத்தார். மாம்சத்தில் வந்த தேவனாகிய இயேசு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உடையவரானார். அடுத்த வசனத்தில் அவர் சொல்கிறார், "நீங்கள் போய் இந்த காரியங்களைச் செய்யுங்கள்." அதாவது அவர் சொல்கிற விதமாவது, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இப்பொழுது என்னிடத்திலிருக்கிறது. அதை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்." ஆயினும் இவ்விதமாக தேவன் விசுவாசிகளாகிய நமக்கு கொடுத்திருக்கிற அதிகாரத்தில் ஒரு தனி வித்தியாசம் உண்டு. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் நமக்குமான அதிகாரமாகும். இது ஆதாம் ஏவாளுக்கு தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்டது போன்றதல்ல. அவர்கள் அந்த அதிகாரத்தை கொடுத்துவிட முடிந்தது. பிசாசு அவர்களை ஆக்கிரமித்தான். நம்பிக்கையற்ற நிலைக்குள்ளாகினர். ஆனால் இன்று அந்த அதிகாரம் இயேசு கிறஸ்துவுடன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. வங்கியில் கூட்டுக்கணக்கு வைத்திருப்பவர்கள் இரண்டுபேரும் கையெழுத்திடாவிட்டால் காசோலைக்குப் பணம் தர மாட்டார்கள். நம்முடைய அதிகாரம் இயேசுவோடுகூடப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது, அவரின் அதிகாரம் சபைக்குப் பகிரப்பட்டுள்ளது.

நாம் தவறினாலும்கூட, இந்த அதிகாரத்தை ஒருக்காலும் தேவன் பிசாசுக்கு ஒப்புக்கொடுக்கமாட்டார். சாத்தான் முற்றிலும் வல்லமையற்றவன். அவன் உங்களை வஞ்சித்தாலன்றி அல்லது நீங்கள் விருப்பத்தின் அடிப்படையில் அவனுக்கு இணங்கினாலன்றி உங்கள் வாழ்வில் ஒன்றும்

செய்ய அவனால் முடியாது. நீங்கள் ஒருவேளை உங்கள் அதிகாரத்தை அவனுக்குக் கொடுக்கலாம்.அதற்காக தனிப்பட்ட முறையில் துன்பப்படுவீர்கள். ஆனாலும் மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட, தேவன் அருளியதான அதிகாரம் இனி ஒருக்காலும் முழுமையாக பிசாசுக்குச் சென்றடையாது. இப்பொழுது அந்த அதிகாரம் நமக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அவர் எப்படியும் உண்மையுள்ளவராக இருக்கிறார். அதிகாரமும் வல்லமையும் உங்களுக்கு உண்டென்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். சாத்தான் சிந்தனைகளால் உங்களுடன் சண்டையிடுகிறான். நீங்கள் உங்கள் ஆயுதங்களால் இந்த சிந்தனைகளை சிறைப்படுத்திவிட முடியும். பிசாசு உங்களை சரீரப் பிரகாரமாக ஒடுக்குவது தவறு என்று நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும். குணமாக்கப்படுதலைக் குறித்து வேதவாக்கியங்கள் சொல்வதை கவனித்துப் பாருங்கள். யோவான் 8:32 சொல்கிறது, *"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்".* அதிகாரமும் வல்லமையும் உங்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் அதை உங்களுக்குத் தந்திருக்கிறார். நீங்கள் அதைச் செயற்படுத்த முடியாதபடி உங்களை தடுத்து நிறுத்துவது என்னவெனில், உங்கள் சிந்தைனைகளை இன்னும் சிறைப்படுத்தாமல் இருக்கிற காரியமேயாகும். உங்களுக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உணரும்படி, உங்கள் சிந்தையைப் புதிதாக்குவதற்கு, நீங்கள் இன்னும் இந்த ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் இருக்கிறீர்கள். அதிகாரமும் வல்லமையும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை அறிந்துக் கொள்வது உற்சாகப்படுத்துவதாக உள்ளது.

நீங்கள் இதை எடுத்துப் பயன்படுத்தி, தியானித்து, உங்களைக் கண்டுதான் சாத்தான் நடுங்கிக் கொண்டிருக்கிறான் என்கிற வெளிப்பாட்டை தேவன் உங்களுக்குத் தர வேண்டுமென நான் ஜெபிக்கிறேன். தேவன் அருளியிருக்கிற வல்லமையும் அதிகாரமும் உங்களிடத்தில் உள்ளபடியால், நீங்கள் சத்துருவைக்க கண்டு பயப்படக் கூடாது. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7).

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன்பயன்படும் வசனங்கள்

1. ஆதியாகமம் 3:1 வாசிக்கவும். சாத்தான் இருக்கிறான், ஆனால் அவனின் உண்மையான வல்லமை நம்மை வஞ்சிக்கிற திறமையில்தான் உள்ளது. ஏவாள் எதைக் கேள்வி கேட்கும்படி சாத்தான் நடத்தினான்?

   **ஆதியாகமம் 3:1 -** *தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.*

2. ஆதியாகமம் 3:1 வாசிக்கவும். சாத்தான் ஏன் வஞ்சனையைப் பயன்படுத்தினான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

3. ஆதியாகமம் 1:26, 28 வாசிக்கவும். மனிதனுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது யார்?

   **ஆதியாகமம் 1:26, 28 -** *பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.*

4. சங்கீதம் 8:4-8 வாசிக்கவும். தேவன் மனிதனை எவ்வாறு படைத்தார்?

   **சங்கீதம் 8:4-8 -** *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.. நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய*

*கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும்,ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.*

5. 2 கொரிந்தியர் 4:4 வாசிக்கவும். என்ன நடந்ததாக வேதவாக்கியம் சுட்டிக்காட்டுகிறது?

**2 கொரிந்தியர் 4:4 -** *தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

6. மத்தேயு 4: 8-9 வாசிக்கவும். இந்த வசனங்கள் இந்தக் குறிப்பை உறுதிப்படுத்துகிறதா?

**மத்தேயு 4: 8-9 -** *மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.*

7. மத்தேயு 28:18 வாசிக்கவும், இயேசு மறித்து உயிரோடு எழுந்தபின் ,யாருக்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் இருக்கிறது ?

**மத்தேயு 28:18 -** *அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

8. மத்தேயு 28:18-19 வாசிக்கவும். இந்த வசனத்தின்படி அந்த அதிகாரம் யாருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது?

**மத்தேயு 28:18-19-** *அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

9. எபேசியர் 1:19 வாசிக்கவும். இந்த வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் யாரிடத்தில் வெளிப்படுத்தப்படுகிறது

**எபேசியர் 1:19-** *தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.*

# பதில் ஆதாரங்கள்

1. ஆதியாகமம் 3:1 வாசிக்கவும். சாத்தான் இருக்கிறான், ஆனால் அவனின் உண்மையான வல்லமை நம்மை வஞ்சிக்கிற திறமையில்தான் உள்ளது. ஏவாள் எதைக் கேள்வி கேட்கும்படி சாத்தான் முயற்சிதான்?

   ***கர்த்தருடைய வார்த்தையை (தேவன் உண்மையிலேயே சொன்னாரா?***

2. ஆதியாகமம் 3:1 வாசிக்கவும். சாத்தான் ஏன் வஞ்சனையைப் பயன்படுத்தினான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

   ***அவன் தன் அதிகாரத்தினால் அவர்களைக் கீழ்ப்படியாமலிருக்க கட்டாயப் படுத்தவில்லை. அவர்கள் ஆளுமையை விட்டுக் கொடுக்க அவன் அவர்களை ஏமாற்றினான்.***

3. ஆதியாகமம் 1:26, 28 வாசிக்கவும். மனிதனுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது யார்?

   ***தேவன்***

4. சங்கீதம் 8:4-8 வாசிக்கவும். தேவன் மனிதனை எவ்வாறு படைத்தார்?

   ***அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கி,மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டினார்.***

5. 2கொரிந்தியர் 4:4 வாசிக்கவும். என்ன நடந்ததாக வேதவாக்கியம் சுட்டிக்காட்டுகிறது?

   ***சாத்தான் மனிதனின் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இந்த உலகத்தின் தேவனாக ஆனான்***

6. மத்தேயு 4: 8-9 வாசிக்கவும். இந்த வசனங்கள் இந்தக் குறிப்பை உறுதிப்படுத்துகிறதா?

   ***ஆம்***

7. மத்தேயு 28:18 வாசிக்கவும். இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, இப்பொழுது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் படைத்தவர் யார்?

***இயேசு***

8. மத்தேயு 28:18-19 வாசிக்கவும். இந்த வசனத்தின்படி அந்த அதிகாரம் யாருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது?

***விசுவாசிக்கு***

9. எபேசியர் 1:19 வாசிக்கவும். இந்த வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் யாரிடத்தில் வெளிப்படுத்தப்படுகிறது?

***விசுவாசிக்கிற நமக்கு***

# பாடம் 7

# குணப்படுத்துதல் பரிகாரத்தில் உள்ளது

*ஆன்ட்ரூ வோமக்*

இன்று குணமாகுதலைக் குறித்தும் இயேசு கிறிஸ்து நமக்காக சம்பாதித்த குணமாக்குதலைக் குறித்து இந்த பாடத்தில் பார்க்கப் போகிறோம். மாற்கு 2, லூக்கா 5 ஆம் அதிகாரங்களில் மிகவும் அதிகமாக மக்கள் கூடியிருந்த வீட்டில் இயேசு பேசிக் கொண்டிருக்கையில் திமிர்வாதக்காரன் ஒருவன் அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு முன்பாக கூரையின் வாயிலாக இறக்கினர்.இயேசு அற்புதமாக அந்த மனிதனை குணமாக்குகிறார். மத்தேயு 8:14-16ல், இயேசு மக்களைக் குணமாக்கிய பின்பு, வேதாகமம் சொல்கிறது, *"இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார். அவர்அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று: அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்."* இப்படி நடந்ததற்கான காரணத்தை வசனம் 17 நமக்குச் சொல்கிறது, *"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது"*. இங்கே நடந்த சம்பவத்தில், இயேசு அநேகரை குணமாக்கினார்.ஏசாயா 53:3-5 குறிப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது: *"அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் (இது கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனம்), துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார், அவரை விட்டு,*

*நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம், அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிக்கப்பட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"* (குணமாகிறேன்).

இந்த பகுதிகள் வேதாகமத்தின் வல்லமைமிக்க பகுதிகளாகும். சிலர் சொல்வார்கள், "கொஞ்சம் பொறுங்கள், இதெல்லாம் ஒரு ஆவிக்குரிய உணர்வில் பேசுவது." நான் வளர்ந்து வந்த சபையிலே சரீரப்பிரகாரமான குணமாகுதலை அவர்கள் நம்பவில்லை. இது போன்ற ஒரு வேதபகுதியை எடுத்து அதை ஆவிக்குரியதாக்கி சொல்வார்கள் - நாம் உணர்வு பூர்வமாகக் காயப்பட்டு, இயேசுவுக்கு நம்முடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும்போது அந்தக் காயங்களை எல்லாம் இயேசு குணமாக்குகிறார். ஆனால் இந்த வேதபகுதியை நாம் இந்தப் பாடத்தில் குறிப்பிட்டுள்ள வேதபகுதிகளுடன் இணைத்துப்பார்த்தால், இப்பகுதிகளுக்கான பயன்பாட்டினை அது தெளிவாக்குகிறது.இயேசு நம்மை உணர்வுரீதியாகவும் மற்ற வழிகளிலும் குணப்படுத்துவார் என்பது உண்மையாயினும், இந்தப்பகுதிகள் நம்முடைய உடலில் நிகழுகிற சரீரசுகத்தைப் பற்றித்தான் பேசுகிறது. மத்தேயு 8:17ல் பார்க்கிறோம், *"அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்,"* என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இந்த குணமாகுகிற சம்பவங்கள் நிகழ்ந்தன. அவர் தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்பதின் நிறைவேறுதலாக இவைகள் நிகழ்ந்தன. இது சரீரப்பிரகாரமான நோய்களையும், காயங்களையும், வேதனைகளையும் குறிக்கிறது. அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் என்கிற வேதவார்த்தையின் நிறைவேறுதலாக இயேசு மக்களை சரீரப்பிரகாரமாக குணமாக்கினார்.

வேதாகமம் தொடர்ந்து, 1பேதுரு 2:24ல் சொல்கிறது, *"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப்பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்: அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."*

இது கடந்தகாலமாக இருக்கிறது. இயேசு வந்தார், மற்றும் நம்முடைய சரீரங்களை வியாதிகளினின்று குணமாக்குவது என்பது அவர் வந்த நோக்கத்தின் ஒருபகுதியாகும்.அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்க வந்தார் என்பதின் முக்கியத்துவத்தை நான் மட்டுப்படுத்தவில்லை. அது மிகவும் முக்கியமானது, பாவமன்னிப்பு தான் எல்லாவற்றிற்கும் வாசலைப்போன்றது, ஆயினும் அவர் பாவங்களை மன்னிப்பதற்காக மட்டும் வரவில்லை. நம்முடைய சரீரத்தை சுகமாக்குவதற்காகவும் வந்தார். இரட்சிப்புக்கு புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை (Sozo) "சோசோ" பல்வேறு காரியங்களை உள்ளடக்குகிற ஒரு வார்த்தையாகும். இன்னும் நீங்கள் சற்று கவனித்துப் பார்த்தால், "குணமாக்கினார்" என்ற அர்த்தத்திலும் இந்த வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யாக்கோபு 5:14 சொல்கிறது, *"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக: அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்:"* இங்கே "இரட்சிக்கும்" என்பதற்கு "சோசோ" என்கிற கிரேக்க வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் சரீரப்பிரகாரமான வியாதியினின்று குணமாகுதலைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது.பாவங்கள் மன்னிக்கப்டுவதற்காக புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கானமுறை பயன்படுத்தப்பட்டுள்ள இந்த வார்த்தை சரீரசுகமடைவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மத்தேயு 10ம் அதிகாரத்தில் இயேசு தம் சீஷர்களை அனுப்பும் போது, பிணியாளிகளை குணமாக்கவும், குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கவும், மரித்தோரை எழுப்பவும், பிசாசுகளைத் துரத்தவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அவர்களுக்குக் கட்டளைகொடுத்து அனுப்பினார். எவ்விதமாக அவர்களிடம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சொன்னாரோ அதேவிதமாக பிணியாளிகளை குணமாக்கவும், குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கவும், பிசாசுகளை துரத்தவும் சொன்னார். உங்கள் பாவங்களை மன்னிக்க வந்த இயேசு, உங்களை குணமாக்கவும் வந்தார்.

ஒரு பாவத்தை செய்து அதிலிருந்து நீங்கள் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்று நீங்கள் ஒருக்காலும் நினைக்க வேண்டாம். அதைப்

போல நீங்களும் வியாதியில் இருக்கவேண்டுமென்று கர்த்தர் ஒருக்காலும் விரும்பமாட்டார். உங்கள் வாழ்வில் தேவன் வியாதியை கொண்டு வருவதில்லை. சில நேரங்களில் மக்கள் இப்படியாக சொல்வார்கள், "இந்த வியாதி உண்மையிலேயே தேவனிடத்திலிருந்து வந்த ஒரு ஆசீர்வாதம், ஏனெனில் இது என்னை தேவனிடமாகத் திருப்பியது." இன்னல்கள் மத்தியில் மக்கள் தேவனிடம் திரும்புகிறார்கள் என்பது உண்மையாயினும், வியாதியை அனுப்பி அவர் உங்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கமாட்டார். எப்படியாய் அவர் உங்கள் மேல் பாவத்தை வைக்கமாட்டாரோ, அப்படியே அவர் உங்கள் மேல் வியாதியையும் வைக்கமாட்டார். நீங்கள் போய் பாவத்தில் வாழ்வதின் மூலம் சில காரியங்களைக் கற்றுக் கொள்ளமுடியுமா?விபசாரம் போன்ற பாவங்களை செய்து, அதினால் வியாதி உண்டாகி, அப்படியாக அவ்வித வாழ்க்கை பாவரகமானது எனக் கற்றுக்கொள்வீரா? நிச்சயமாக அப்படிக் கற்றுக் கொள்ளமுடியும். ஆனால் தேவன் அவ்விதவாழ்க்கைக்கு உங்களை நடத்த மாட்டார். அவர் பாவத்தை உங்கள் வாழ்வில் வைக்கவில்லை, ஆயினும் நீங்கள் பாவஞ்செய்து கற்றுக் கொள்ளவிரும்பினால் செய்யலாம். உங்கள் தலையை சுவற்றிலே கொண்டு போய் முட்டி, அதன் மூலம் அப்படி செய்வது நல்லதல்ல எனக் கற்றுக்கொள்ளலாம். தலையைக் கொண்டு போய் சுவற்றிலே முட்டாமலும் அந்த பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். எல்லா பாடத்தையும் துன்பப்பட்டுத்தான் படிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உங்களைத் தாழ்மைப்படுத்தவும் உங்களுக்கு சில பாடங்களைக் கற்றுக்கொடுக்கவும் தேவன் வியாதியை உங்களுக்குக் கொடுக்கவில்லை. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாகவும், உங்கள் வியாதி நீங்கி நீங்கள் குணமடையவும் இயேசு மரித்தார். அவர் தம்முடைய சரீரத்திலே உங்கள் பாவங்களை சுமந்து கொண்டார், அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்.

தேவனுடைய இயற்கைக்கப்பாற்பட்ட தெய்வீகசுகமானது எல்லாருக்கும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. இயேசு மரித்து நமக்காக ஏற்படுத்திக் கொடுத்த பரிகாரத்தின் ஒரு பாகமாக அது இருக்கிறது. உங்கள் சுகத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளாவிட் டால், தேவன் அதைக் குறித்து வருத்தப்பட மாட்டார். நீங்கள் தேவனை நேசிப்பதற்கு குணமடைந்தாக வேண்டுமென்று இல்லை. நீங்கள் குணமாகுதலை விசுவாசிக்காமலேயே, தேவனை உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசித்து, பரலோகம் செல்லலாம். உண்மையாக சொல்லப்போனால்,

நீங்கள் ஆரோக்கியத்தில் நடப்பது எவ்வாறு என்று அறியாமல் இருப்பதால், ஒரு வேளை சீக்கிரமாக சென்று விடுவீர்கள். உங்களுக்குத் தெரியுமா - அது உங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. அதைத்தருவதற்காக இயேசு மரித்தார். நீங்கள் நலமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மத்தேயு 8:16-17 வாசிக்கவும். இயேசு எத்தனை பேரை குணமாக்கினார்?

**மத்தேயு 8:16-17,** *“அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்:அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.”*

2. ஏசாயா 53:3-5 வாசிக்கவும். இந்த வசனங்கள் எந்த வகையான குணப்படுத்துதலைக் குறித்து பேசுகின்றன?

**ஏசாயா 53:3-5** - *அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.*

3. மத்தேயு 8:17 வாசிக்கவும். நம்முடைய நோய்களுக்கு மற்றும் பலவீனத்திற்கு என்ன நேர்ந்தது?

4. I பேதுரு 2:24 வாசிக்கவும். எந்த இரண்டு காரியங்களை இயேசு நமக்கு செய்ததாக இந்த வசனம் குறிப்பிடுகிறது.

**I பேதுரு 2:24:** *நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே*

*நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*

5. யாக்கோபு 5:14-15 - 15 வது வசனத்தில் உள்ள “இரட்சிப்பு*என்ற சொல்லை கிரேக்க மொழியில் சோசோ என்பர். அதற்கு பேணுதல் ,பாதுகாத்தல் ,முழுமையடைதல் ,குணமாக்குதல் மற்றும் விடுதலை என்று பொருள் . இதே வார்த்தை வேதாகமத்தில் இரட்சிப்பு என பொருள் படுகிறது. இந்த வசனங்களின் அடிப்படையிலும், கிரேக்க மொழியிலும், இரட்சிப்பில் என்ன இருக்கிறது?

**யாக்கோபு 5:14-15** *உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.*

6. மத்தேயு 10:7 வாசிக்கவும். இயேசு தம் சீடர்களை வெளியே அனுப்பும்போது என்ன சொல்லி அனுப்பினார்?

**மத்தேயு 10:7-8** *“போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள்.”*

7. மத்தேயு 10: 8 வாசிக்கவும். இயேசு அவர்களை என்ன செய்ய வேண்டும் என்று சொன்னார்?

8. மாற்கு 16:15 வாசிக்கவும். இயேசு தம் சீடர்களை என்ன செய்ய வேண்டும் என்று சொன்னார்?

**மாற்கு 16:15-18,** *"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன:*

*என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக்குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.*

9. மாற்கு 16:16 வாசிக்கவும். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் என்ன செய்வார்கள்?

10. மாற்கு 16:17 வாசிக்கவும். விசுவாசிகளை எந்த அடையாளங்கள் பின் தொடரும்?

11. மாற்கு 16:18 வாசிக்கவும். வேறு எந்த அடையாளங்கள் விசுவாசியைப் பின் தொடரும்.

# பதில் ஆதாரங்கள்

1. மத்தேயு 8:16-17 வாசிக்கவும் இயேசு எத்தனை பேரை குணமாக்கினார்?

*அவரிடம் வந்த அனைவரையும்.*

2. ஏசாயா 53:3-5 வாசிக்கவும். இந்த வசனங்கள் எந்த வகையான குணப்படுத்துதலைக் குறித்து பேசுகின்றன?

*எல்லா விதமான குணப்படுத்துதலும் (சரீரப்பிரகாரமாகவும்)*

3. மத்தேயு 8:17 வாசிக்கவும். நம்முடைய நோய்களுக்கு மற்றும் பலவீனத்திற்கு என்ன நேர்ந்தது?

*இயேசு ஏற்றுக் கொண்டார். .*

4. I பேதுரு 2:24 வாசிக்கவும். எந்த இரண்டு காரியங்களை இயேசு நமக்கு செய்ததாக இந்த வசனம் குறிப்பிடுகிறது.

***அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல்* சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானோம்.**

5. யாக்கோபு 5:14-15 - 15 வது வசனத்தில் உள்ள “இரட்சிப்பு*என்ற சொல்லை கிரேக்க மொழியில் சோசோ என்பர். அதற்கு, வழங்க, பாதுகாக்க, குணப்படுத்த, பதப்படுத்த மற்றும் முழுமையாய் இருங்கள் என்று பொருள் . இதே வார்த்தை வேதாகமத்தில் இரட்சிப்பு என பொருள் படுகிறது. இந்த வசனங்களின் அடிப்படையிலும், கிரேக்க மொழியிலும், இரட்சிப்பில் என்ன இருக்கிறது?

*குணமாக்குதல்*

6. மத்தேயு 10:7 வாசிக்கவும். இயேசு தம் சீடர்களை வெளியே அனுப்பும்போது என்ன சொல்லி அனுப்பினார்?

*பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது*

7. மத்தேயு 10: 8 வாசிக்கவும். இயேசு அவர்களை என்ன செய்ய வேண்டும் என்று சொன்னார்?

***வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணி, மரித்தோரை எழுப்பி, பிசாசுகளைத் துரத்த வேண்டும்.***

8. மாற்கு 16:15 வாசிக்கவும். சீடர்களை என்ன செய்ய வேண்டுமென்று இயேசு சொன்னார்?

***உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.***

9. மாற்கு 16:16 வாசிக்கவும். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் என்ன செய்வார்கள்?

***விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவார்கள்***

10. மாற்கு 16:17 வாசிக்கவும். விசுவாசிகளை எந்த அடையாளங்கள் பின் தொடரும்?

***பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;***

11. மாற்கு 16:18 வாசிக்கவும். வேறு எந்த அடையாளங்கள் விசுவாசியைப் பின் தொடரும்?

***வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்***

# பாடம் 8

# குணமாகுதலுக்கு தடைகள்

*ஆன்ட்ரூ வோமக்*

இதற்கு முந்தைய பாடத்தில், சுகமடைவது தேவனுடைய சித்தமென்பதையும், பாவ பரிகாரத்தின் ஒரு பகுதியாக இது இருக்கிறது என்று பார்த்தோம். இதைக் குறித்து இன்னும் அநேககாரியங்களை சொல்ல முடியும். இதை நீங்கள் ஏற்றுக்கொண்டு வேதவாக்கியங்களில் பார்த்திருந்தாலும், இன்னும் பல கேள்விகள் உண்டாகிறது - உதாரணமாக, "நம்மை குணப்படுத்துவது தேவனுடைய சித்தமானால், இன்னும் ஏன் அனைவரும் சுகம் பெறாமல் இருக்கிறார்கள்?" பல காரணங்கள் உண்டு, ஆயினும் எனக்குத் தெரிந்த சிலவற்றைப் பகிர்ந்து கொள்கிறேன். குணமடைவது தேவனுடைய சித்தமாக இருந்த போதிலும், ஏராளமான தகவல்கள் இதைக் குறித்து இருந்தாலும், நான் அறிந்ததின் ஒரு பகுதியை உங்கள் முன் வைக்கிறேன். பல காரணங்களுள் அறியாமையும் ஒன்றாகும். நீங்கள் அறியாத அல்லது உங்களுக்குத் தெரியாத ஒரு காரியத்தை நீங்கள் செயற்படுத்த முடியாது. என்னுடைய வாழ்வில் இது உண்மையாக இருந்தது.

தேவனுடைய சித்தம் தானாக நடந்து வருவதாகவும், எனக்கு அதில் எந்த ஒரு வல்லமையும், அதிகாரமும், தாக்கமும் இல்லை என்கிற விதத்தில் நான் போதிக்கப்பட்டிருந்தேன். என்னுடைய அறியாமையின் நிமித்தம் பல காரியங்கள் நடந்தன. நான் பன்னிரெண்டு வயதாயிருக்கும் போது, என் தந்தை இறந்து விட்டார். நான் இருபத்தோரு வயதான போது என்னருகே இரண்டு மூன்று பேர் மரித்துப் போயினர். அவர்கள் அனைவரும் சுகமடைய வேண்டுமென்று நான் ஜெபித்தேன். ஆனாலும் அவர்கள் சுகமடையவில்லை. அது தேவனுடைய சித்தமல்ல என்ற காரணத்தால் அல்ல, ஆனாலும் நான் அறியாமையில் இருந்தபடியால்

அப்படியாயிற்று. அறியாமையில் இருந்தால், இப்படிதான் காரியங்கள் நடக்கும். ஆனால் அறியாமை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க காரணமல்ல. இது புவிஈர்ப்பு விதியைப் போல் ஒன்றாகும்."நல்லது, பத்தாவது மாடியில் இருந்து தவறி விழுந்தால் மரித்துப் போவேன் என்று நான் ஒரு போதும் அறியவில்லையே"- என்று ஒருவர் சொல்லலாம்.அந்த விதியின் முழுமையான தாக்கமும் என்னில் செயல்பட்டால் தான் நான் அதை உணருவேன் என்று சொல்ல முடியாது. சில தேவனுடைய விதிகளைப் பற்றி மக்கள் அறிவீனமாக இருக்கிறார்கள். தேவனுடைய குணமாக்குதலின் முறைமையானது எப்படி செயல்படுகிறதென்று அவர்கள் அறியாமலிருக்கிறார்கள், அறியாமை அநேகமக்களைக் கொல்லுகிறது.

சுகம்பெறாதபடி நம்மைத் தடுக்கிற மற்றொரு காரியம் பாவமாகும். நீங்கள் அதை சொல்லும் போது, மக்கள் வருத்தமடைகிறார்கள். ஏனெனில் அப்படி நீங்கள் சொல்லும்போது, எல்லா நோய்களும் பாவத்தின் விளைவாக வருவதாகப் புரிந்துகொள்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. நான் மட்டும் அப்படி சொல்லவில்லை. யோவான் 9 ஆம் அதிகாரத்தில், இயேசு தேவாலயத்திலிருந்து வெளியே வந்தபோது, அங்கே இருந்த பிறவிக் குருடனாகிய ஒரு மனிதனை அவருடைய சீஷர்கள் குணமாக்குதலுக்கு தடைகளை சுட்டிக் காட்டினார்கள். வசனம் 2ல் சீஷர்கள் கேட்டார்கள், *"ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ?"* அவர்கள் அவனின் வியாதியை நேரடியாக பாவத்தோடு தொடர்புபடுத்தி, இவனின் வியாதிக்குக் காரணம் இவனின் பாவமா அல்லது இவனின் பெற்றோர் செய்த பாவமா என்று கேட்டார்கள். அவர்கள் இருவரும் பாவஞ்செய்யவில்லை என்பதாகத்தான் இயேசுவின் பதில் இருந்தது. அவனோ அவனின் பெற்றோரோ ஒருக்காலும் பாவஞ்செய்யவில்லை என்று அர்த்தமல்ல, ஆனால் அவனின் குருட்டுத்தன்மைக்கு அவர்களின் பாவம் நேரடிகாரணமாகாது என்று தான் சொல்கிறார். எல்லா வியாதிகளும் பாவத்தோடு தொடர்புடையது என்பதும் உண்மையாகாது, ஆனால் வியாதிக்கு பாவம் ஒரு காரணமல்ல என்பதும் உண்மையல்ல.

யோவான் 5ம் அதிகாரத்தில் பெதஸ்தா குளத்தண்டையில் இயேசு இருக்கும் போது, ஒருவரை அற்புதமாக சுகமாக்குகிறார். அங்கே ஏராளமானோர் இருந்த போதும், ஒரே

ஒருவரை மட்டும்தான் இயேசு குணமாக்கினார். யார் தன்னை குணமாக்கினார் என்று அந்த மனிதனுக்குத் தெரியவில்லை. வசனம் 12ல் யூதர்கள்அவனிடத்தில் கேட்கிறார்கள், *"அதற்கு அவர்கள் உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார்?"* வசனங்கள் 13, 14 தொடர்கிறது, *"சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்னாரென்று அறியவில்லை: அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார் அதற்குப்பின்பு இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்."* இயேசு இங்கே பாவமானது அவனுடைய பழைய வியாதியை விட கொடிய ஒன்றைக் கொண்டு வரும் என்று சொல்கிறார்.வியாதியாகிய விளைவை பாவத்தோடு இயேசு இங்கே இணைக்கிறார். யோவான் 9ஆம்அதிகாரத்தில், அவன் குருடனாய்ப் பிறந்ததற்கு யார் செய்த பாவமும் காரணமல்ல என்றும் சொல்கிறார்.

சில காரியங்கள் இயற்கையாக நிகழ்கிறது, ஆனாலும் சில நேரங்களில் வியாதிகள், நோய்கள், பிரச்சனைகள்,பாவத்தின் நேரடி விளைவாகவும் இருக்கக்கூடும். அவ்விதமான சம்பவங்களிலும் தேவன் தான் இதை செய்கிறார் என்று பொருளல்ல. உதாரணமாக, ஒருவர் இயற்கையின் ஒழுங்குக்கு மாறுபட்ட விதத்தில் ஓரினச் சேர்க்கை முறையைப் பின்பற்றுவதாக வைத்துக் கொள்ளுங்கள். மனித சரீரம் அப்படியாக வாழும்படி அமைக்கப்படவில்லை. அவ்விதமான வாழ்க்கைமுறையில் பால்வினை செயல்களால் பரவும் நோய்கள் வருகின்றன. தேவன் இந்த நோய்களுக்குக் காரணம் அல்ல - ஏற்படுத்தப் பட்ட ஒழுங்கிற்கு மாறாக வாழும்போது, இயற்கைக் கொந்தளிக்கிறது. நீங்கள் வெளியே போய், தவறான உணவை உட்கொள்வீர்களானால், உங்கள் சரீரத்தில் ஏற்படும் பாதிப்பை தேவன் செய்கிறார் என்று சொல்லக்கூடாது. இங்கே இயற்கையான விதிகளும்,இயற்கையான காரணங்களும் உண்டு. எனவே மக்கள் குணமடையாமல் இருப்பதற்குப் பாவம் ஒரு காரணமாக இருக்கிறது.

நீங்கள் சுகத்திற்காக தேவனை விசுவாசிக்கும் போது, உங்களுக்கே தெரிந்த ஒரு பாவம் உங்கள் வாழ்வில் இருக்குமானால், நீங்கள் அந்த பாவத்தை நிறுத்தியாக வேண்டும். ஏனெனில் அதன் மூலமாக தேவன் உங்களுக்குத் தருகிறதைத் தடுக்க சாத்தானுக்கு நீங்கள் நேரடியான வாய்ப்பைத் தருகிறீர்கள். ரோமர் 6:16 சொல்கிறது,

*"மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்களென்று அறியீர்களா?"* உடனே சாத்தான் உங்கள் எஜமானனாகி, நீங்கள் இரட்சிப்பை இழந்து, நரகத்திற்குப் போவீர்கள் என்று அர்த்தமல்ல. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் - நீங்கள் பாவத்தில் வாழ்ந்தால் - சாத்தானுக்கு உங்கள் வாழ்க்கையில் ஒரு வழி அமைத்துக்கொடுக்கிறீர்கள். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வாரன் என்று யோவான் 10:10 சொல்கிறது. ஆனால் இயேசுவோ ஜீவன் தரும்படிக்கு வந்தார். எனவே உங்களுக்கு ஜீவன் தரும் படி இயேசு முயற்சித்துக் கொண்டிருக்கையில், சாத்தான் உங்களை நோய்வாய்ப்படுத்தவும் எத்தனித்துக் கொண்டிருக்கிறான். நீங்கள் பாவத்தின் மூலம் சாத்தானுக்கு உங்களைக் கீழ்ப்படுத்துவீர்களானால், நீங்கள் அவனை பெலப்படுத்தி, அவனுக்கு உங்கள் வாழ்வில் ஒரு தருணத்தைக் கொடுக்கிறீர்கள். நீங்கள் விரும்புகிற சுகத்தை எல்லாம் ஜெபித்துக் கேட்டுக் கொண்டிருக்கலாம், ஆனால் உங்கள் செயல்கள் பிசாசை உட்கொண்டுவந்து, நோய்களையும் கொடுக்கிறது. எனவே நீங்கள் பாவத்தில் வாழ்வீர்களானால், அதை நிறுத்தியாக வேண்டும்.

இன்னும் ஒன்றை இங்கே சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன். உங்கள் வாழ்வையே நீங்கள் துருவித்துருவி ஆராய்ந்து, "நான் இருக்க வேண்டிய அந்த சீரான நிலைமைக்கு இன்னும் வரவில்லை," என்று சொல்லி, தேவனால் சுகமளிக்கக் கூடும் என்று நீங்கள் விசுவாசித்தாலும் கூட "நான் அதற்குத் தகுதியானவன் அல்ல" என்று நீங்கள் நம்புகிறீர்கள். இதுவும் தவறே. நாம் சரியான தகுதியுடையவர்களாக இருந்து, தேவன் தரும் சுகத்தைப் பெறுவோம் என்றால் நம்மில் யாரும் ஒருக்காலும் அதைபெறப் போவதில்லை. தகுதியான மக்களை தமக்கென பணிசெய்யும்படி தேவன் ஒருக்காலும் வைத்திருந்ததில்லை. எனவே உங்களின் பரிசுத்தத்தையும் தகுதியையும் அடிப்படையாகக் கொண்டு தேவன் உங்கள் வாழ்வில் செயல்படுகிறார் என்று நீங்கள் கணிக்கத் தேவையில்லை. இயேசு உங்களுக்காக செய்ததும், நீங்கள் அவர் மேல் வைத்திருக்கிற விசுவாசமும் தான் அடிப்படையாகும். அதே வேளையில் உங்கள் செயல்களை நீங்கள் அலட்சியப்படுத்த முடியாது, பிசாசுக்கு இணங்குவீர்களானால் அவன் உங்களுக்குத் தடை வைப்பான்.

சாத்தானுக்கு உங்கள் வாழ்வில் இடம் கொடுக்கிற எந்த செயலையும் விட்டு நீங்கள் மனந்திரும்பிவீர்களானால், குணமாகுதல் உங்கள் வாழ்வில் எளிதாக நிகழ்வதை காணமுடியும்.

சுகம் பெறுவதைத் தடுக்கிற இன்னொரு காரியம் உங்களை பாதிக்கும் மற்ற மக்களுடைய எதிர்மறை சிந்தையும், அவிசுவாசமும் ஆகும். அநேகர் இதைக் குறித்து அதிகம் சிந்திப்பதில்லை. மாற்கு 6ஆம் அதிகாரத்தில் இதற்கு சரியான எடுத்துக்காட்டு இருக்கிறது. இயேசு தான் வளர்ந்த சொந்த ஊரில் இருக்கிறார். அவரை சிறுபிராயத்திலிருந்தே அந்த மக்கள்அறிந்திருந்தபடியால், அவர்கள் அவரை மதிக்கவில்லை. அவரின் தாய், தகப்பனையும், சகோதர, சகோதரிகளையும் அறிந்திருந்தபடியால், மற்ற மக்கள் அவருக்கு மதிப்புக்கொடுத்தது போல் அவர்கள் கொடுக்கவில்லை. அவருக்கு எதிராக வந்து அவரைக் குற்றஞ்சாட்டினார்கள். மாற்கு 6:4-6 சொல்கிறது, *"இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். அங்கே அவர் சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல், அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு: கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம் பண்ணினார்."* இங்கே இயேசு வெறொரு அற்புதமும் செய்யவில்லை என்று அல்ல. அவரால் செய்ய முடியவில்லை என்றுள்ளது. இங்கே தேவகுமாரனாகிய இயேசு பூமிக்கு மனிதனாக வந்தார், அவரிடத்தில் எந்த விசுவாசக்குறைவும் இல்லை . நிச்சயமாக அவரின் வாழ்வில் பாவம் பிரவேசிப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லாதிருந்தது. ஆயினும் மக்களின் அவிசுவாசம் அவரின் செயல்களைக் கட்டுப்படுத்தியது. *"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை."* என்று மத்தேயு 13:58ல் கூறப்பட்டுள்ளதோடு இணைத்துப் பார்க்கும்போது, இயேசு தனக்குள்ளே எந்த கட்டுப்பாடுகளும் இல்லாதவராக இருந்த போதிலும், சாத்தான் உட்பிரவேசிக்கத் தக்கதாக எந்தப் பாவ வாய்ப்பும் அற்றவராக இருந்த போதிலும், சுற்றியிருந்த மக்கள் அவரின் செயல்களைக் கட்டுப்படுத்த முடிந்தது.

எல்லா நேரங்களிலும் அனைவரையும் தேவன் சுகப்படுத்துவதே அவரின் சித்தம் என்று நான் சொல்வதை

நீங்கள் புரிந்துக் கொள்வது மிகவும் முக்கியம். நீங்கள் இதை விசுவாசிப்பீர்களானால், ஒரு மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளை எல்லாம் வெளியேற்றிவிடுகிற தவறான செயலைச் செய்யலாம். ஏனெனில் தேவனுடைய சித்தம் அனைவரும் குணமடைவதே என்று விசுவாசிக்கிறீர்கள். அவர்கள் குணமடைய வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயினும், அவர்களின் சித்தத்திற்கு மாறாக தேவன் ஒரு போதும் செயல்பட மாட்டார். தாங்கள் குணமடையாமல், நோய்வாய்ப் பட்டிருக்கவேண்டுமென்ற அவர்களின் உரிமையை தேவன் காத்துக்கொள்வார். சுகமடையும்படி யாரையும் நாம் பெலவந்தப்படுத்த முடியாது - மற்றவர்களின் விசுவாசத்தாலும் அவர்களை குணப்படுத்த முடியாது. அவர்கள் விசுவாசப் போராட்டத்தில் இருப்பார்களானால், மற்றவர்கள் உதவி செய்ய முடியுமே தவிர அவர்களுக்காக எதையும் செய்துவிட முடியாது. குணமடைவதற்கு எதிராக ஒருவர் தன்னை நிலைப்படுத்தியிருந்தால், நீங்கள் அதை மேற்கொள்ள முடியாது. இதினிமித்தமாக, நீங்கள் ஒரு மருத்துவமனைக்குச் சென்று, அங்குள்ள நோயாளிகளை எல்லாம் வெளியேற்ற முடியாது - ஒரு சபைக்குச் சென்று அங்குள்ள எல்லாரையும் அவர்கள் ஒத்துழைப்பின்றி குணமாக்கவும் முடியாது. இன்னும் இது குறித்துப் பலவற்றைப் பேசலாம். இயேசு ஜனங்களை சுகமாக்கியபோது, மரித்தோரை எழுப்பியபோது, அவர் சிலரிடத்தில் போய், "அழாதே," என்று சொல்லுவார். தாயினிடத்தில் அழாதே என்று சொல்லிவிட்டு, அவளின் மகனை உயிரோடு எழும்ப செய்வார். சிலரின் விசுவாசம் சில இடங்களில் பயன்படுத்தப்பட வேண்டும். நம்மிடத்தில் விசுவாசம் இருக்க வேண்டும், குணமாகுதல் விஷயத்தில் அடங்கியுள்ள பலகாரியங்கள் உண்டு. நான்ஒருசிலவற்றைமட்டும்இன்றுஉங்களுடன்பகிர்ந்துள்ளேன். அவைகள் உங்களுக்கு உதவும் என நம்புகிறேன். இவையனைத்தின் மத்தியிலும் நீங்கள் பிடித்துக் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய காரியம் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். நீங்கள் குணமடைய வேண்டுமென்பது தேவனுடைய சித்தம், ஆனால் அவருடன் எப்படி ஒத்துழைப்பது என்று நீங்கள் கற்றிருக்க வேண்டும். அவர் அதை உங்களுக்காக செய்ய முடியாது. உங்கள் மூலமாகத்தான் செய்வார். இது உங்களுக்குள் இருந்து வர வேண்டும்.

நீங்கள் உங்களையே ஒப்புக்கொடுப்பதற்கு இவைகள் உதவ வேண்டுமென்றும், தேவனுடைய வல்லமை உங்கள் மூலமாக

பாயவேண்டுமென்றும், நீங்கள் இயற்கைக்கப்பாற்பட்ட ஆரோக்கியத்துடன் வாழ வேண்டுமெனவும் ஜெபிக்கிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மத்தேயு 8: 17 வாசிக்கவும். நாம் குணமாவதற்கு இயேசு என்ன செய்தார்?

**மத்தேயு 8: 17** *“அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.”*

2. ஓசியா 4:6 வாசிக்கவும். கீழ்கண்ட காரணங்களால் சிலர் குணமாகவில்லை.

   A. அறியாமை

   B. ஆலயத்திற்கு செல்லவில்லை

   C. நல்லவர்களாக இல்லை

**ஓசியா 4:6** *“என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்.”*

3. யோவான் 9: 1-3 வாசிக்கவும். இந்த மனிதன் குருடானதற்கு என்ன காரணம் என்று சீடர்கள் நினைத்தார்கள்?

அவர்கள் நினைத்தது சரியா?

யோவான் 9: 1-3, *அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்.*

4. யோவான் 5: 14 வாசிக்கவும். பாவம் வியாதியை உண்டு பண்ணும். எப்பொழுதும் அல்ல. வியாதியைத் தவிர வேறு எதை பாவம் பிறப்பிக்கும்?

**யோவான் 5: 14** *"அதற்குப் பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்."*

5. ரோமர் 5:12-14 வாசிக்கவும். எப்பொழுதுமே வியாதிக்கு காரணம் பாவம் என்பதை விட வேறு என்ன இருக்கக்கூடும்?

**ரோமர் 5:12-14** *இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.*

6. அப்போஸ்தலர் 10:38 வாசிக்கவும். அப்போஸ்தலர் 10:38ன்படி வியாதி எதனால் வருகிறது?

**அப்போஸ்தலர் 10:38,** *"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்டயாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்."*

7. மத்தேயு 13:58 வாசிக்கவும். குணமாவதற்கு என்ன தடை?

**மத்தேயு 13:58,** *"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை."*

8. யாக்கோபு 5:15 வியாதியை எது குணமாக்கும்?

**யாக்கோபு 5:15,** *“அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.”*

# பதில் ஆதாரங்கள்

1. மத்தேயு 8: 17 வாசிக்கவும். நாம் குணமாவதற்கு இயேசு என்ன செய்தார்?

   ***அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்***

2. ஓசியா 4:6 வாசிக்கவும். சிலர் கீழ்கண்ட காரணங்களால் குணமாகவில்லை.

   ***அறியாமை (அறிவு குறைபாடு)***

3. யோவான் 9: 1-3 வாசிக்கவும். இந்த மனிதன் குருடானதற்கு என்ன காரணம் என்று சீடர்கள் நினைத்தார்கள்?

   ***பாவம்***

   அவர்கள் நினைத்தது சரியா?

   ***தவறு.***

4. யோவான் 5: 14 வாசிக்கவும். பாவம் வியாதியை உண்டு பண்ணும். எப்பொழுதும் அல்ல. வியாதியைத் தவிர வேறு எதை பாவம் பிறப்பிக்கும்?

   ***நோயை விட மோசமான பல விஷயங்களையும் மரணத்தையும் பிறப்பிக்கிறது (ரோமர் 6:23)***

5. ரோமர் 5:12-14 வாசிக்கவும். எப்பொழுதுமே வியாதிக்கு காரணம் பாவம் என்பதைவிட ,வேறு என்ன இருக்கக்கூடும்?

   ***வீழ்ச்சி (ஆதி.3) ஆதாம் தன் மீறுதலின் நிமித்தம் பாவத்தையும் வியாதியையும் மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தினான்.***

6. அப்போஸ்தலர் 10:38 வாசிக்கவும். அப்போஸ்தலர் 10:38ன்படி வியாதி எதனால் வருகிறது?

   ***பிசாசின் பிடியில் அகப்படுவதால்***

7. மத்தேயு 13:58 வாசிக்கவும். குணமாவதற்கு என்ன தடை?

***அவிசுவாசம்***

8. யாக்கோபு 5:15 வியாதியை எது குணமாக்கும்?

***விசுவாசமுள்ள ஜெபம்.***

# பாடம் 9

# மற்றவர்களை மன்னித்தல்

*டான் க்ரோ*

மத்தேயு 18: 21-22 கூறுகிறது. *"அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதர மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்."* (அடைப்பு என்னுடையது). தனக்கு எதிராக பாவம் செய்த ஒருவரை எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று கேட்டதில், பேதுருமிகவும் தாராளமாகஇருப்பதாக நான் நினைக்கிறேன், "ஒரு நாளில் ஏழு முறை என நினைக்கிறீர்களா?" என்றுஇயேசு கேட்டு, பின்பு"பேதுரு, ஏழு முறைஅல்ல, ஏழு எழுபது முறை" என்று கூறினார். அப்படியானால் அது 490 முறைகளுக்கு பிறகு நீங்கள் மன்னிக்க வேண்டியதில்லை என்று அர்த்தமல்ல. இயேசு சொன்னது, ஒரு நபருக்கு நிகழக்கூடிய சாத்தியமற்ற எண்ணிக்கையிலான குற்றங்களில், மன்னிப்பு தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்று அவர் சொன்னார். மன்னிப்பு என்பது ஒரு கிறிஸ்தவரின் உண்மையான அணுகுமுறையாக இருக்க வேண்டும். லூக்கா 23: 34 ல், *"அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்."* ஸ்தேவானும், அப்போஸ்தலர் 7: 60 ல், *"ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்."* அனைவரும் மன்னிப்பை பெறுபவர்கள் அல்ல. ஆனால் ஒரு கிறிஸ்தவன் மனதில் எப்பொழுதும் மன்னிக்க வேண்டும் என்ற சிந்தை இருக்கும்.

இயேசு ஒரு உவமையை மத்தேயு 18:23ல் சொன்னபோது *"பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் (உடன் ஒரு கணக்கீடு செய்யுங்கள்)கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பத்தாயிரம் தாலந்துகள் (பத்து கோடி டாலர்கள்)கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டு வந்தார்கள்.கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில்பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்."* (அடைப்புக்குறிப்புகள் என்னுடையவை) தொடர்ந்தபோது மன்னிப்பு பற்றி இயேசு ஒரு உவமையைக் கூறுகிறார். இப்போது, இங்கே இருந்தநிலைமை: தனது எஜமானிடம் பத்து கோடி டாலர்களைக் கடனாகக் கொண்ட ஒரு மனிதர். அவர் அதைச் செலுத்த எந்த வழியும் இல்லை, அவரால் முடியாது என்று அவருக்குத் தெரியும். எஜமானருக்கும் அவரால் முடியாது என்று தெரியும். அந்த நாட்களில், அமெரிக்காவில் உங்களால் முடிந்த திவால் நிலையை நீங்கள் உரிமை கோர முடியாது. அவர்கள் உங்களையும், உங்கள் மனைவியையும், உங்கள் பிள்ளைகளையும், உங்களிடம் இருக்கும் அனைத்தையும் விற்பார்கள், நீங்கள் அடிமைத்தனத்திற்குச் செல்வீர்கள். எல்லாவற்றையும் செலுத்தும் வரை நீங்கள் சிறைக்கு அனுப்பப்படுவீர்கள்.அது ஒருபோதும் இல்லையென்றால், உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் சிறையில் இருப்பீர்கள். இந்த மனிதன் தனக்குத் தெரிந்த ஒரே காரியத்தைச் செய்தான். முழங்காலில் இறங்கி கருணைக்காக அழுதார், "எஜமானரே, தயவுசெய்து என்னுடன் பொறுமையாக இருங்கள்! தயவுசெய்து, நான் உங்களிடம் கெஞ்சுகிறேன். நான் உங்களுக்கு எல்லாவற்றையும் திருப்பித் தருகிறேன். பொறுமையாய் இருங்கள்! 27 வது வசனத்தில் என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டதாகவும் அது கூறுகிறது.

நம்மால் செலுத்த முடியாத கடன் இருந்தது. வேதாகமம்சொல்கிறது,"பாவத்தின் சம்பளம் மரணம்(ரோமர்

6:23);- நித்தியத்திற்கும் தேவனிடமிருந்து பிரிதல் -உலகில் உள்ள் வெள்ளியும் தங்கமும் நம்மை மீட்க முடியவில்லை. தேவன் இரக்கமுள்ளவர். அவருடைய கிருபையினால் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பூமிக்கு அனுப்பினார். தேவன் தம்முடைய இரக்கத்தினாலும் கருணையிலும் நம்மைப் பார்த்து, "அந்தக் கடனை நான் உங்களுக்கு மன்னிக்கிறேன்" என்றார்.

பத்து கோடி டாலர்கள் மன்னிக்கப்பட்ட இந்த மனிதரிடம் ஒரு சக ஊழியர் இருபது டாலர்களைக் கடனாக கொண்டிருந்தார். அவர் சொன்னார், "நான் பத்து கோடி டாலர்களுக்கு மன்னிப்பை பெற்று விட்டேன், எனக்கு இந்த இருபது டாலர்கள் என்ன? நீங்களும் என்னைப் போலவே சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! அதை விட்டு விடுங்கள்.நான் பத்து கோடி டாலர்களை மன்னித்துவிட்டேன்! " அதுதான் நடந்திருக்க வேண்டும், ஆனால் அது நடக்கவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்று படிப்போம் வசனங்களில் 28-31. *“அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான்.அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவன் உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.”* பத்து கோடி டாலர்கள் மன்னிக்கப்பட்ட பின்னர் அவர் அந்த மனிதரை இருபது டாலர்களுக்கு சிறையில் தள்ளினார்! அதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?

32-34 வசனங்கள், *"அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்.நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து,*

*அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்."* இந்த மனிதர் தனது சக ஊழியரிடம் நடந்து கொண்ட விதம் காரணமாக சிறையில் தள்ளப்பட்டார். இதனால் அவர் மன்னிப்பதை இழந்தார். இயேசு 35 வது வசனத்தில், *"நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்."* நம்முடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டிருப்பது- மரணம் தண்டனையாகி நித்தியத்திற்கும் தேவனிடமிருந்து பிரிதல் - மற்றவரை மன்னிக்க மறுப்பது முட்டாள்தனம் அல்லவா? "என்னை மன்னித்து, இயேசு கிறிஸ்துவின் மூலமாக எனக்கு இரக்கம் காட்டுங்கள்" என்று தேவனிடம் மன்றாடுகிறோம்.மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு, பின்னர் திரும்பி, வேறொருவரை மன்னிக்க மறுக்கிறோம். தேவன் அதை பொல்லாங்குத்தனம் என்கிறார்.

நான் சிறிது காலத்திற்குதிற்கு முன்பு ஒரு சபையில் ஆயராக இருந்தேன், அங்கு ஒரு இளம் பெண் இருந்தாள். அவளால் எதிர்காலத்து விஷயங்களைக் காண முடிந்தது. அவள் ஒரு நாள் என்னிடம் வந்து, “பரிசுத்த ஆவியானவர் எனக்கு வரவிருக்கும் விஷயங்களைச் சொல்கிறார். யாராவது இறக்கப் போகிறார்கள் என்றால் அது எனக்குத் தெரியும். ஒரு வாகனம் அழியப் போகிறதென்றால் எனக்குத் தெரியும். இது பரிசுத்தாவியின் வெளிப்பாடா என்று அவள் கேட்டாள். நான் சொன்னேன், "என் பதிலை நீங்கள் விரும்ப மாட்டீர்கள், ஆனால் அது பரிசுத்த ஆவியானவர் என்று நான் நம்பவில்லை. அப்போஸ்தலர் 16-ல் அப்போஸ்தலனாகிய பவுலைப் பின்தொடர்ந்த அதே ஆவிதான் இது. ஒரு பிரிவினை ஆவி என்று நான் நினைக்கிறேன். இறுதியாக நான்அதைக் கடிந்துகொண்டு, அந்தப் பெண்ணிலிருந்து வெளியே வரும்படி கட்டளையிட்டேன்.மேலும் அவள் எதிகாலத்தைப் பற்றி சொல்லும் திறனை இழந்தாள். அவளுக்கு வெளிப்பாடு தந்தது தேவன் இல்லை என்று அவளிடம் சொன்னேன். மற்றும் அவளிடம், "நீங்கள் இயேசுவிடம் சென்று அவரிடம் “ஆண்டவரே, நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே என்னிடம் விஷயங்களைச் சொல்வதும், தகவல்களைத் தருவதும் எது? உங்கள் பரிசுத்த ஆவியா அல்லது அது வேறு ஏதாவதா?” என கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவள் ஒரு நாள் என்னிடம் திரும்பி வந்து, "நான் இறைவனிடம்

பேசினேன், அது சரி என்று நினைக்கிறேன், என்றாள். நான் ஒரு பெரிய மேய்ப்பன் அல்ல.

இது 1986 ன் ஆரம்பத்தில்நடந்தது. என்ன நடந்தது தெரியுமா? எங்களிடம் சேலஞ்சர் என்று அழைக்கப்படும் ஒரு விண்வெளி விண்கலம் இருந்தது. அந்த பள்ளி ஆசிரியர்களில் ஒருவர் பெண். இந்த இளம் பெண் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அடுத்த நாள் சேலஞ்சரில் போகப் போகும் பெண் வந்து அதைப் பற்றி பேசுவதைப் பார்த்தாள். ஒரு ஆவி அவளிடம் பேசி, "அவள் இறக்கப் போகிறாள், அவள் இறக்கப் போகிறாள்." என்றது. அடுத்த நாள் சேலஞ்சர் அறிமுகப்படுத்தப்பட்டபோது, உலகம் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்தபோது அது வெடித்தது. குழுவினர் அனைவரும், மற்றும் அந்த பெண்ணும் அழிந்தனர். அந்த இளம் பெண் என்னிடம் வந்து, "சகோதரர் டான், என்னுடன் பேசுவது மற்றும் எனக்கு தகவல் கொடுப்பது பரிசுத்த ஆவியானவர் அல்ல என்று நான் நினைக்கிறேன். நீங்கள் எனக்கு ஜெபிக்க வேண்டும்? " அன்றிரவு வழிபாடு முடிந்த பின்னர், எல்லோரும் சென்ற பின் அவளைக் கையால் தொட்டு, "அசுத்த ஆவியே, இந்தப் பெண்ணை விட்டு வெளியே வா !" என்றேன் . எதுவும் நடக்கவில்லை. இயேசுவின் சீடர்கள் ஒரு முறை இளைஞனிடமிருந்து ஒரு ஆவியைத் துரத்த முயன்றார்கள். அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. அந்த இளைஞனை என்னிடம் கொண்டு வாருங்கள் என்று இயேசு சொன்னார். எனவே நான், "ஆண்டவரே, எனக்குத் தெரியும் இங்கு என்ன நடக்கிறது என்று. இவளை நான் உம்மிடத்தில் கொண்டு வருகிறேன்" என்றேன். என் மனைவி எங்களுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார்.தேவன் அவளுக்கு ஒரு வார்த்தையை கொடுத்தார். என் மனைவி என்னிடம் அது ஏதோ அவள் தாயைக் குறித்தது என்றார். உடனே நான் அந்தப் பெண்ணிடம், "உங்கள் தாயை மன்னிப்பீர்களா? எனக் கேட்டேன். உடனே ஒரு குரல் அவளிடமிருந்து கத்தியது, "இல்லை! உடனே நான் , " அசுத்த ஆவியே நான் உன்னை பிணைக்கிறேன், " என்று சொன்னேன். அவள் தன் தாயை மன்னிக்கலாமா என்று ஆதாயம் கேட்டாள். பின்னர் அவள் மன்னித்து தன் தாயை விடுவித்து, தேவனுடைய கிருபையினாலும் உதவியினாலும் அவளை விடுவித்தாள். மன்னிப்பதற்கான முடிவை எடுப்பதன் மூலம் அவளால் வெளியேற முடிந்தது. பின்னர் அவள் விடுதலையும் சுதந்திரத்தையும் பெற்றாள்.

மத்தேயு 18-ல் உள்ள உவமையில் இயேசு சொன்னதைப் போலவே, நம்முடைய பரலோகத் தகப்பனால் இவ்வளவு பெரிய கடனிலிருந்து மன்னிப்பை பெற்றபின் ,மற்றவர்களை நம்முடைய இருதயங்களிலிருந்து மன்னிக்காவிட்டால், சித்ராவதையாளர்களின் கைகளில் நாம் இருப்போம். சித்ராவதையாளர்கள் என்றால் யார்? அவை எல்லா வகையான விஷயங்களாக இருக்கலாம் - பேய் கோட்டைகள், அடக்குமுறை, நோய்கள், மனச்சோர்வு,மற்றும் பல விஷயங்கள். மன்னிக்காதது வேராகும். நாம் மன்னிக்கப்பட்ட பிறகு மற்றவரை மன்னிக்காதது, சாத்தானை நம் வாழ்வில் காலடி வைக்க அனுமதிக்கிறது. மன்னிப்பதற்கான முடிவை நாம் எடுக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது. கர்த்தருடைய ஜெபத்தில் (மத்தேயு 6:9-11) எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் என்று இயேசு சொன்னார்.

மாற்கு 11: 25-26 கூறுகிறது, “நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.” அதற்கு என்ன பொருள்? மன்னிப்பு நம் இருதயத்தில் எவ்வளவு காலம் இருக்க வேண்டும்? தேவனிடம் சென்று ஜெபிக்க நமக்கு நேரம் எடுக்கும் வரை மட்டுமே. யாருக்கும் எதிராக சிறிதளவு மன்னிப்பு இல்லாதிருந்தால், நாம் அவர்களை விடுவித்து, “தேவனே, நான் இன்று அவர்களை விடுவிக்கிறேன். நான் அவர்களை மன்னிக்கிறேன். இவ்வளவு பெரிய கடனை நீங்கள் மன்னித்ததால் நான் இதை தேர்வு செய்கிறேன்.”

*“ஆண்டவரே, இந்த பாடத்தைப் படிக்கும் எவரும் தங்கள் வாழ்க்கையில் யாரையாவது மன்னிக்காமல் இருந்தால், அந்த நபர் வாழ்ந்துக் கொண்டிருந்தாலும் அல்லது இறந்துவிட்டாலும், அவர்களை மன்னிக்க இந்த நேரத்தில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இன்று அவர்கள் உங்கள் வல்லமையினாலும், உங்கள் கிருபையினாலும் குணமடையட்டும் என்று அவர்களுக்காக பிரார்த்தனை செய்கிறேன் ஆண்டவரே, இயேசுவின் நாமத்தில் ஆமென்.”*

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மத்தேயு 18:21 வாசிக்கவும். எத்தனை தரம் பேதுரு மன்னிப்பை வழங்க வேண்டும் என்றான்?

   **மத்தேயு 18:21-27,** *“அப்பொழுது, பேதுருஅவரிடத்தில்வந்து, ஆண்டவரே, என்சகோதரன்எனக்குவிரோதமாய்க்குற்றஞ் செய்துவந்தால், நான்எத்தனைதரம்மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோஎன்றுகேட்டான்.அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள்.கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.*

2. மத்தேயு 18:22 வாசிக்கவும். எத்தனை தரம் நாம் மன்னிக்க வேண்டுமென இயேசு சொல்கிறார்?

3. மத்தேயு 18:23-24 வாசிக்கவும். எவ்வளவு பணம் இந்த ஊழியக்காரன் அவன் எஜமானனுக்கு கடன்பட்டிருந்தான்?

4. மத்தேயு 18:25 வாசிக்கவும். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், என்ன நடக்கும்?

5. மத்தேயு 18:26 வாசிக்கவும் ஊழியக்காரனின் விண்ணப்பம் என்ன?

   அவன் தனது கடனைத் திருப்பிச் செலுத்தியிருக்க முடியுமா?

6. மத்தேயு 18:27 வாசிக்கவும். ஊழியக்காரனிடம் அவன் எஜமான் எப்படி நடந்துக் கொண்டார்?

நம்மீதும் நம்முடைய கடனைக்குறித்தும் தேவனுடைய மனப்பான்மை என்ன ?

7. மத்தேயு 18:28 வாசிக்கவும். உடன் வேலைக்காரன் மன்னிக்கப்பட்ட ஊழியக்காரனுக்கு எவ்வளவு கடன்பட்டிருந்தான்?

**மத்தேயு 18:28** *“அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவன் உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.*

8. மத்தேயு 18:28 வாசிக்கவும். ஊழியக்காரன் தன் உடன் வேலைக்காரனிடம் எப்படி நடந்துக்கொண்டான்?

9. மத்தேயு 18:29-30 வாசிக்கவும். மன்னிக்கப்பட்ட ஊழியக்காரன் தன்உ டன் வேலைக்காரனுக்கு என்ன செய்தான்?

10. மத்தேயு 18:31-33 வாசிக்கவும். மன்னிக்காத ஊழியக்காரனை எஜமான் எவ்வாறு அழைத்தான்?

11. மத்தேயு 18:33 வாசிக்கவும். ஊழியக்காரன் என்ன செய்திருக்க வேண்டுமென எஜமானன் சொன்னான்?

12. மத்தேயு 18:33 வாசிக்கவும். எஜமானுக்குத் தெரிந்தபோது என்ன வாயிற்று? அவன் உணர்வுகள் எவ்வாறு பாதிக்கப்பட்டது?

13. மத்தேயு 18:34 வாசிக்கவும். மன்னிக்காத ஊழியக்காரன், அவன் செய்கையால்(அல்லது முடிவால் )அவனுக்கு முதலில் மன்னிக்கப்பட்டதை இழந்துவிட்டானா?

14. மத்தேயு 18:35 வாசிக்கவும்.இந்த உவமையின் பொருள் என்ன?

# பதில் ஆதாரங்கள்

1. மத்தேயு 18:21 வாசிக்கவும். எத்தனை தரம் பேதுரு மன்னிப்பை வழங்க வேண்டும் என்றான்?

*ஏழுதரம்*

2. மத்தேயு 18:22 வாசிக்கவும். எத்தனை தரம் நாம் மன்னிக்க வேண்டுமென இயேசு சொல்கிறார்?

*நானுற்று தொண்ணூறு (முடிவில்லாமல், தொடர்ந்து)*

3. மத்தேயு 18:23-24 வாசிக்கவும். எவ்வளவு பணம் இந்த வேலையாள் அவன் எஜமானனுக்கு கடன்பட்டிருந்தான்?

*பத்தாயிரம் தாலந்துகள் அல்லது பத்து கோடி டாலர்கள் (திருப்பிச் செலுத்த முடியாத ஒரு தொகை)*

4. மத்தேயு 18:25 வாசிக்கவும். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், என்ன நடக்கும்?

*அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்*

5. மத்தேயு 18:26 வாசிக்கவும்வேலையாளின்விண்ணப்பம்என்ன?

*ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்*

அவன் தனது கடனைத் திருப்பிச் செலுத்தியிருக்க முடியுமா?

*அநேகமாக இல்லை*

6. மத்தேயு 18:27 வாசிக்கவும். வேலையாளிடம் அவன் எஜமான் எப்படி நடந்துக் கொண்டார்?

*இரக்கம் மற்றும் மன்னிப்பு*

நம்மீதும் நம்முடைய கடனைக்குறித்தும் தேவனுடைய மனப்பான்மை என்ன ?

***இரக்கம் மற்றும் மன்னிப்பு***

7. மத்தேயு 18:28 வாசிக்கவும். உடன் வேலைக்காரன் மன்னிக்கப்பட்ட ஊழியக்காரனுக்கு எவ்வளவு கடன்பட்டிருந்தான்?

***நூறு காசு (ஒரு நாள் கூலி)***

8. மத்தேயு 18:28 வாசிக்கவும். ஊழியக்காரன் தன் உடன் வேலைக்காரனிடம் எப்படி நடந்துக்கொண்டான்?

***பொறுமையின்மை , வன்முறை, மன்னியாமை***

9. மத்தேயு 18:29-30 வாசிக்கவும். மன்னிக்கப்பட்ட ஊழியக்காரன் தன் உடன் வேலைக்காரனுக்கு என்ன செய்தான்?

***அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்.***

10. மத்தேயு 18:31-33 வாசிக்கவும். மன்னிக்காத ஊழியக்காரனை எஜமான் எவ்வாறு அழைத்தான்?

***பொல்லாத ஊழியக்காரனே***

11. மத்தேயு 18:33 - வாசிக்கவும். ஊழியக்காரன் என்ன செய்திருக்க வேண்டுமென எஜமானன் சொன்னான்?

***நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொன்னான்.***

12. மத்தேயு 18:33 வாசிக்கவும். எஜமானுக்குத் தெரிந்தபோது என்னவாயிற்று? அவன் உணர்வுகள் எவ்வாறு பாதிக்கப்பட்டது?

***அவருக்கு கோபம் வந்தது***

13. மத்தேயு 18:34 வாசிக்கவும். மன்னிக்காத ஊழியக்காரன், அவன்செய்கையால் (அல்லது முடிவால் )அவனுக்கு முதலில் மன்னிக்கப்பட்டதை இழந்துவிட்டானா?

***ஆம்***

14. மத்தேயு 18:35 வாசிக்கவும்.இந்தஉவமையின்பொருள்என்ன?

***நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.***

# பாடம் 10

# திருமணம் - பகுதி I

*டான் க்ரோ*

இன்றைய தினம் நாம் திருமணத்தை குறித்து பேச இருக்கிறோம். முதன்மையாக, சில புள்ளி விவரங்களை உங்களுக்கு கொடுக்க விரும்புகிறேன்.75% சதவிகிதம் குடும்பங்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் சில திருமண ஆலோசனைகள் தேவை.இரண்டு திருமணங்களில் ஒன்று விவாகரத்தில் முடிகிறது. 50% திருமணங்களில், யாரோ இருவரில் ஒருவர் உண்மையாக இல்லாமல் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. ஏறக்குறைய 30% ஊழியக்காரர்கள் தங்கள் சபையிலுள்ள யாரிடமாவது தகாத உறவை வைத்திருக்கிறார்கள். இது எனக்கு தெளிவாக அல்லது வெளிப்படையாக தெரிகிறது. அவர்கள் வேதாகம அடிப்படையில் திருமணத்தின் கொள்கை உள்ளதை புரிந்துக் கொள்ளவில்லை. அப்படிப்பட்ட கொள்கைக்கு அருகில் இருந்தால், நாம் அப்படிப்பட்ட திருமண பாடங்களில் தேவன் என்ன சில காரியங்களை சொல்லுகிறார் மற்றும் நீங்கள் அந்த அடிப்படையிலே உங்களுடைய திருமண உறவை பெலப்படுத்த முடியும் என்பதைப் பார்ப்போம்.

திருமணம் என்பது தேவனுடைய ஆலோசனை (அல்லது) திட்டம். அவரே அதை வடிவமைத்தார். ஆதியாகமம் 2:18ன் படி *"தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்"* மற்றும் ஆதியாகமம் 1:31 *"தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று".* அது முழுமையான படைப்பு என்று நாம் நினைவு கூற வேண்டும். தேவன் மனிதனுடன் ஐக்கியத்தை வைத்தார். அது அவருக்கு உன்னத ஐக்கியமாக இருந்தது. ஒவ்வொரு

நாளும் மாலை குளிர்ச்சி வேளையில் அவர் வந்துஆதாமுடன் ஐக்கியம் வைத்தார். சில சமயங்களில் நாம் யோசிப்பது ஒரு வேளை தேவனுடன் சரியான ஐக்கியம் வைத்திருந்தால் உண்மையில் எந்த ஒரு தேவையும் இருந்திருக்காது. ஆனால் அது உண்மையல்ல. ஆதியாகமம் 1:31ல் தேவன், தாம் படைத்த படைப்பை பற்றி அறிந்து கொள், *அது மிகவும் நல்லது என்றார்.* முதன்முதலாக தேவன் நல்லதல்ல என்று சொன்னது ,ஆதியாகமம் 2:18 வேதப்பகுதியில் இருக்கிறது. *மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல* என்கிறது. எனவே திருமணம் என்பது மனிதனின் தேவைகளை சந்திக்கவும், பிரச்சனைகளை தீர்க்கவும், தனிமையைப் போக்கவும், அனுபவத்தைப் பெறவும், தேவனுடைய திட்டமாய் இருந்தது. இந்த கையேட்டை கடைப்பிடித்து அதை தேவன் நினைப்பது போல் கைக்கொண்டால். வாழ்க்கையில் சந்தோஷம் மட்டுமே வரும் துயரம் வராது.

ஆதியாகமம் 2:24 *"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்".* திருமணம் என்பது எல்லா உறவுகளையும் விட்டுவிட்டு, உங்கள் வாழ்க்கையில் ஒரு தனி நபரோட வைத்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கையை, இப்படியாக தான் தேவன் அதை வடிவமைத்தார். எப்படியெனில் அது திரித்துவ உறவு. இந்த திருமண உறவில் தேவன் ஆதாம் ஏவாளை ஒன்றாக அழைத்தார். அது ஆதாம் தேவனுடன் வைத்துள்ள உறவை மாத்திரமல்ல அல்லது ஏவாள் தேவனுடன் உள்ள உறவுக்கு அல்ல. இப்பொழுது ஆதாமுக்கு, ஏவாளுக்கும் ஒன்றாகவும் , ஒரு மனமாகவும் தேவனுடன் உள்ள உறவுமே. வேதம் சொல்கிறது 1 பேதுரு 3:7, *"அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்."* ஆதியாகமம் 5:1-2 - இது ஒரு முக்கியமான வேத பகுதி. *"ஆதாமின் வம்சவரலாறு: தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார். அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களைச் சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார். ஆதாம் நூற்று முப்பது வயதானபோது, தன்*

*சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு சேத் என்று பேரிட்டான்."* ஆகவே திருமண உறவு என்பது தேவனுக்கும் எனக்கும் அல்லது தேவனுக்கும் அந்த ஸ்திரிக்கும் அல்ல. எனக்கும் என்னுடைய மனைவிக்கும் உள்ள ஒருமனம். தேவ கிருபையின் படி அந்த சந்ததி, சேர்ந்து ஒரு மனமாய் தேவனுக்கு ஊழியம் செய்வதேயாகும்.

ஆதியாகமம் 2:24ல் நாம் ஏற்கனவே தியானித்தபடி மனிதன் தன் தாயையும் தகப்பனையும் விட்டு மனைவியுடன் இசைந்திருப்பான் . அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இசைந்திருப்பது என்கிற வார்த்தை, ஒரு காரியத்தை செய்ய ஒருவரோடு ஒருவர் ஒட்டி இருப்பது அல்லது ஒன்றாக இருப்பது. உங்களுடைய திருமண உறவில் ஏதாவது பிரச்சனை இருக்குமானால் நான் சில கேள்விகளை உங்களிடம் கேட்கிறேன். நீங்கள் செய்கிற எந்தக் காரியமும் உங்களுடைய துணைவியாருடன் ஒத்துபோகிற மாதிரி செய்கிறீர்களா அல்லது அவர்களுடன் ஒரு நெருக்கத்தை/ முறிவை/பிரிவைக் கொண்டு வருகிறதா? நீங்கள் செய்கிற விஷயங்களில் உங்கள் உறவுகள் வளர்க்கிறதா அல்லது பிரிந்து போகிறதா. நீங்கள் சில காரியங்களை கவனிக்க வேண்டும்.

ஜனங்கள் அன்பு என்பதை ஏதோ உணர்ச்சி வசப்படுவதாக நினைக்கிறார்கள். எப்படியெனில், "நான் உன் மீது அன்பு வைத்திருக்கிறேன், ஆனால் இப்பொழுது அதிலிருந்து வெளியே வந்து விட்டேன். இனி உன்மேல் எனக்கு அன்பில்லை. ஒரு வேளை நீங்கள் அவ்வாறு செயல்படும் குடும்பத்தை சார்ந்திருந்தால், திருமணம் செய்ய ஒரு நீதிபதியிடமோ அல்லது ஒரு ஊழியரிடமோ செல்வீர்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கையை ஒரு துணைக்கு அர்ப்பணித்து, வாழ்நாளெல்லாம் உண்மையாய் இருந்து, மரிக்கும் வரை வாழ விரும்புவீர்கள். ஆனால் அவ்வாறு செயல்படாத குடும்பத்தை சேர்ந்த்திருந்தால், இது வரை "அன்பு" என்பதை நீங்களும் பார்த்ததில்லை, குடும்பத்திற்கும் தெரியவில்லை. உங்களுடைய பெற்றோர்ளும் அதைப்பற்றி தெளிவாக அறிவிக்கவில்லை. ஆனால் உங்கள் மனைவியோ அல்லது கணவரோ அதிக அன்பும், பாசமும் நிறைந்த குடும்பத்திலிருந்து வந்திருந்தால், அதிக அன்பை உங்களிடம் எதிர்பார்க்கலாம். எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் நீங்கள் உங்கள் துணைக்கு அன்பு செலுத்த ஒப்புக் கொள்கிறீர்கள். இதற்கு முன்பாக அறியாத அன்பை தெரிவிக்க போகிறீர்கள்.

ஆனால் எப்படி என்று தெரியவில்லை.இதற்கு முன் அன்பு செலுத்தாததினால், உங்களால் செயல்பட முடியாதபோது ,ஒரு வேளை நீங்கள் தோல்வியடையலாம். சில வருடங்களுக்குப் பிறகு நீங்கள் ஒரு வேளை ஆலோசனை கேட்கலாம். பிறகு இவ்விதமாய் சொல்லலாம். நாங்கள் சாதாரணமாக ஒருவருக்கொருவர் ஒத்து போகவில்லை. நான் இனி அன்பு கூறுவதுமில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு இன்று நான் ஒரு நல்ல செய்தி வைத்திருக்கிறேன். உங்களுடைய திருமண வாழ்வின் பிரச்சனைகளை சரி செய்ய சில விஷயங்கள் உண்டு.

நீங்கள் புதிய குளிர்சாதனப் பெட்டி ஒன்றை வாங்கின பிறகு, பிரச்சனை வந்தால் அதன் கையேட்டை பார்ப்போம். இது பிரச்சனைக்கு முடிவு கொடுக்கும் அல்லது அதை சரி செய்ய மனிதனிடம் எடுத்து செல்வோம். அதே போல உங்கள் திருமண வாழ்க்கையை சரி செய்ய கையேடு உண்டு. அது தேவனுடைய வார்த்தையாகும் . வேதாகமம் தீத்து 2:4 வில் சொல்கிறது, அன்பு கற்றுக்கொடுக்கும் மற்றும் கற்றுக்கொள்ளும். நீங்கள் ஒரு குழப்பமான குடும்பத்திலிருந்து வந்திருந்தாலும், உங்கள் மனைவியை எப்படி நேசிக்கவேண்டும் என்று தெரியவில்லை என்றாலும் - உங்கள் திருமணம் பிரிந்து போகிறது என்றால். உங்களுக்கு ஒரு நல்ல செய்தி இருக்கிறது. I யோவான் 5:3 இல் *“நாம் தேவனுடைய கற்பனைகளைக்கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.* இயேசு கிறிஸ்துவின் கட்டளைகள் மூலம் அன்பு கூறவும், இரக்கம், தயவு ஆகியவற்றை தாராளமாய் வெளிப்படுத்த மற்றவர் நலனைக் கருதி, திருமண உறவை பெறவும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மாற தேவன் உதவி செய்வார்.

திருமண வாழ்விலிருந்து இது ஒரு அறிமுக பாடம். தேவன் உங்களை இன்று ஆசீர்வதிப்பாராக. இந்த பாடத்தை தொடர்ந்து படியுங்கள். இந்த பாடத்தின் மூலம் தேவன் உங்களுக்கு அதிக ஞானத்தையும் அறிவையும் கொடுப்பார் என நம்புகிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. எபிரேயர் 5:31-32 வாசிக்கவும். எபிரேயர் 5:31 என்பது ஆதியாகமம் 2:24 என்பதன் மேற்கோள். எபிரேயர் 5:31ஐ வாசிக்கும்போது, தேவன் உண்மையிலேயே எதைக் குறித்துப் பேசியுள்ளதாக நினைக்கிறீர்கள்?

   **எபிரேயர் 5:31-32,** *"இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்."*

2. யாக்கோபு 4:4-5 வாசிக்கவும். இந்த வசனங்கள் எதை போதிக்கின்றன?

   **யாக்கோபு 4:4-5,** *"விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?*

3. I பேதுரு 3:7 ஏன் நாம் ஒற்றுமையுடனும், அன்புடனும், கணவன்/மனைவியோடு சேர்ந்து வாழ வேண்டும்?

   **I பேதுரு 3:7,** *"அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்."*

4. யோவான் 15:5 வாசிக்கவும். நம் வாழ்வில் கிறிஸ்து தேவனாயிராமல் நம் திருமண வாழ்க்கை வெற்றியடையுமா?

   **யோவான் 15:5,** *"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்,*

*அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது."*

5. தீத்து 2:4 வாசிக்கவும். அன்பு ஒரு உணர்வு மட்டுமல்ல. வேதாகமத்தின்படி அன்பு ________________ ஆகவும் இருக்கலாம்.

**தீத்து 2:4,** *"தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்..."*

6. I யோவான் 5:3 நாம் தேவனின் கட்டளைகளின்படி நடந்தால், நாம் ______________________ நடக்கிறோம்.

**I யோவான் 5:3,** *" நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல."*

7. மத்தேயு 7:12 வாசிக்கவும். நம் திருமண வாழ்வில் பிரச்சனைகள் வருமானால், யாராவது ஒருவர் ____________________ல் நடக்கவில்லை என்று பொருள்.

**மத்தேயு 7:12,** *"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்."*

8. I கொரிந்தியர் 13:4 வாசிக்கவும். அன்பு என்பது:
   1. உணர்ச்சி
   2. ஒரு சூடான உணர்வு
   3. தயவு

**I கொரிந்தியர் 13:4,** *"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.."*

# பதில் ஆதாரங்கள்

1. எபிரேயர் 5:31-32 வாசிக்கவும். எபிரேயர் 5:31 என்பது ஆதியாகமம் 2:24 என்பதன் மேற்கோள். எபிரேயர் 5:31ஐ வாசிக்கும்போது, தேவன் உண்மையிலேயே எதைக் குறித்துப் பேசியுள்ளதாக நினைக்கிறீர்கள்?

   ***திருமணத்தில் இணைந்த கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள உறவு***

2. யாக்கோபு 4:4-5 வாசிக்கவும். இந்த வசனங்கள் எதை போதிக்கின்றன?

   ***கர்த்தர் நம் மீது வைராக்கிய வாஞ்சையுள்ளவராகவும் உண்மையுள்ளவராகவும் இருக்க விரும்புகிறார்.***

3. I பேதுரு 3:7 ஏன் நாம் ஒற்றுமையுடனும், அன்புடனும், கணவன்/மனைவியோடு சேர்ந்து வாழ வேண்டும்?

   ***நம் ஜெபங்களுக்குத் தடை வராமல் இருக்க***

4. யோவான் 15:5 வாசிக்கவும். நம் வாழ்வில் கிறிஸ்து தேவனாயிராமல் நம் வாழ்க்கை வெற்றியடையுமா?

   ***இல்லை***

5. தீத்து 2:4 வாசிக்கவும். அன்பு ஒரு உணர்வு மட்டுமல்ல. வேதாகமத்தின்படி அன்பு ________________ஆகவும் இருக்கலாம்.

   ***கற்றுக் கொடுக்கலாம்***

6. I யோவான் 5:3 நாம் தேவனின் கட்டளைகளின்படி நடந்தால், நாம் _____________ நடக்கிறோம்.

   ***அன்பு***

7. மத்தேயு 7:12 வாசிக்கவும். நம் திருமண வாழ்வில் பிரச்சனைகள் வருமானால், யாராவது ஒருவர்__________ நடக்கவில்லை என்று பொருள்.

***அன்பில்***

8. I கொரிந்தியர் 13:4 வாசிக்கவும். அன்பு என்பது:

   1. உணர்ச்சி
   2. ஒரு சூடான உணர்வு
   3. தயவு

***3. தயவு***

# பாடம் 11

# திருமணம் - பகுதி 2

*டான் க்ரோ*

இப்பொழுதும் நாம் மறுபடியும் திருமணம் என்ற பாடத்தை பார்ப்போம். கேள்வி இதுவே திருமணம் என்றால் என்ன? இதைப் பற்றி எப்போதாவது யோசித்தது உண்டா? வேதத்தின்படி தேவனால் வடிவமைக்கப்பட்டது தான் திருமணம். திருமணம் என்றால் ஒன்றாக சேர்வதும், ஒருமனப்படுவதும், ஐக்கியப்படுவதுமே ஆகும். ஆதியாகமம் 2:24 சொல்கிறது: *"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."* திருமணம் என்பது ஒருவருக்கொருவர் ஒருமானதாய் சேர்ந்துக் கொள்வதைக் காட்டிலும்மேலானதுஎன்பதுஉங்களுக்குதெரியுமா?உதாரணம் I கொரிந்தியர் 6: 15,16 மற்றும் ஆதியாகமம் 2:24ல் உள்ள திருமண காரியங்களை யோசியுங்கள். என்னை வேசியுடன் சேர்ப்பது என்னை தானாகவே என் மனைவியிடமிருந்து விவாகரத்து செய்யவோ அல்லது என்னை வேசியை திருமணம் செய்து கொள்ளவோ செய்யாது.அப்படியென்றால் திருமணம் என்றால் என்ன? ஒருமனப்பாடும், ஒன்றாய் பெறுவதும், ஒரே மாம்சமாய் இருப்பதும் ஆகும். இதற்கும் வேசியோடே இசைந்திருப்பதற்கும் வித்தியாசம் என்ன? வேசியோடு இணைந்திருப்பது அவளுடன் ஒரே சரீரமாய் மாறி விடுவது.

வேதம் சொல்கிறபடி திருமணம் என்பது, ஒரு மனைவியுடன் ஒன்றாக சேர்ந்து இருப்பதே. ஆனால் அதைக் காட்டிலும் மேலானது, ஒரு உடன்படிக்கையுடன் ஒன்று சேர்வதாகும்.இந்த உடன்படிக்கை என்பது எபிரேய மூல மொழியில் பெரித் என அழைக்கப்படுகிறது. அப்படியென்றால் ஒருவரோடு ஒருவர் பிணைந்து இருப்பது.

தனி மனிதனின் மரணம் வரையிலான இறுதி அர்ப்பணிப்பு. இப்பொழுது ஒரு வேசியிடம் போனால், அப்படிப்பட்ட பாவத்தை செய்தால், ஒருவர் மற்றொருவர் இடையே எந்த அர்ப்பணிப்பும் இருக்காது.திருமணத்தின் நறுமணம் முதன்மையில் எல்லாவற்றையும் விட்டுவிடுவதாகும். வேதம் சொல்கிறபடி, தகப்பன், தாயையும் கூட விட்டு விட்டு, மனைவியோடு இசைந்திருப்பது. எசேக்கியலில் வாசிக்கிறோம், நீ என்னுடையவனாய் மாறிவிட்டாய். தனி ஒருவன் எல்லாவற்றையும் விட்டுவிடுவதாகும். வெளிப்படையாக திருமணத்திற்கு பிறகு தகாத உறவு ஒருவரோடு வைத்திருந்தால், அது திருமண கொள்கையை மீறுவதாகும்.ஒரு மனம், ஒன்றாக சேர்த்துக் கொள்வது, ஐக்கியப்படுவது இவை எல்லாம் ஒரு உடன்படிக்கை மூலமாக வருவது அல்லது அர்ப்பணிப்பு மூலமாக வருவது. எசேக்கியேல் 16: 8 இதை திருமண உடன்படிக்கை என்று அழைக்கிறது. கிறிஸ்து சபையை நேசித்ததைப் போலவே, திரும்ணத்திலும் கணவன் மனைவியை நேசிப்பதற்கான உற்சாகத்தை , எபேசியர் 5-ல் நாம் அறிகிறோம். இது அன்பின் உடன்படிக்கைக்கான காரணம், திருமணத்தில் அன்பு என்பது உடன்படிக்கை. எல்லாவற்றிற்கும் மேலாக, அன்பு என்பது திருமணத்தை ஆளும் கொள்கையாக இருக்க வேண்டும்.

திருமணம் என்பது ஒற்றுமையின் உடன்படிக்கையாகும். 1 பேதுரு 3: 7 கூறுகிறது, “புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்." அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள் - திருமண உறவுக்காக தேவன் வடிவமைத்துள்ள ஒற்றுமையில் நாம் நடக்காவிட்டால் நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தடையாக இருக்கும். நீதிமொழிகள் 2: 16-17 தன் திருமண உடன்படிக்கையை கைவிடுகிற, தன் இளமைக்கால வழிகாட்டியான ஒரு பெண்ணைப் பற்றி பேசுகிறது. மேலும் திருமண உறவு அவளுடைய தேவனின் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. இது மிகவும் தீவிரமான ஒரு விஷயம். இது ஒரு தனிநபருக்கு நாம் செய்யும் உடன்படிக்கை, ஆனால் இது தேவனுக்கு முன்பாக நாம் செய்யும் ஒரு உடன்படிக்கையும் கூட. மக்களுக்கு ஊழியம் செய்ய நாம் எவ்வளவு விரும்புகிறோமோ, அதே போல் தேவனுக்கும்

ஒரு முன்னுரிமை உள்ளது. அது நம் திருமணத்தில் கவனம் செலுத்துவதாகும். திருமணம் என்பது உண்மையில் என் வாழ்க்கையை வேறொரு நபரிடம் மையமாகக் கொண்டது, நான் சொன்னது போல், அன்பு என்பது ஆளும் கொள்கையாகும்.

வேதாகமத்தில் மத்தேயு 7:12 கூறுகிறது, மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். இது ஒரு சுயநல காரியம் அல்ல, அல்லது சுயமானது அல்ல, இந்த நபர் உங்களுக்கு என்ன கொடுக்க முடியும் என்பது பற்றி அல்ல. கொரிந்தியர் 13: 4 அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. திருமணம் அவ்வாறு வடிவமைக்கப்பட்டதற்கான காரணம், இது தேவனுடனான உண்மையான உறவு என்னவாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு, ஒரு மாதிரி. அவர் நமக்கு இயற்கையில் விளக்கம் அளித்துள்ளார். ஒரு நல்ல திருமணம், ஒரு சிறந்த திருமணம் எப்படி என்று அவர் நமக்குக் காட்டியுள்ளார். ஏனென்றால் நாம் ஒரு உண்மையான நித்திய உறவோடு அவருடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். திருமணம் என்பது ஒரு தற்காலிக விஷயம். மரணம் நம்மைப் பிரிக்கும் வரை மட்டுமே. உயிர்த்தெழுதலில், அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. திருமணத்தில் கொடுக்கப்படவில்லை என்று வேதாகமம் கூறுகிறது. ஒரு நல்ல திருமணம் -மற்றும் அன்பின் கொள்கைகள் - இன்னொருவருக்கு தன்னலமற்ற முறையில் கொடுக்கும் கொள்கைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். "நீங்கள் உண்மையிலேயே புரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால், நான் உங்களை ஒரு திருமண உறவுக்கு அழைத்தேன்; இது சில வருடங்கள் நீடிக்கும்; பின்னர் போய்விடும்; ஆனால் என் அன்பு அனைத்தும் வெளிப்படும் ஒரு நித்திய உறவு உங்களுக்கு என்றென்றும்உண்டு” என்று அவர் கூறுகிறார்,.

திருமணத்தின் சில கொள்கைகளை உங்களுக்கு தருகிறேன். திருமணம் என்பது ஒரு கூட்டுறவு மட்டுமல்ல. வேதாகமத்தில் ஆதியாகமம் 4-ல் ஒரு அறிவாகவும் 1 பேதுரு 3: 7-ல் வாழ்வின் கிருபையின் வாரிசுகளாக இருப்பதாகவும் பேசுகிறது. திருமணம் என்பது ஒரு உடன்படிக்கை. அதாவது அது பிணைப்பு என்று பொருள்: இதில் ஒரு அர்ப்பணிப்பு

இருக்கிறது. பாவம் முதல் சபையில் நுழையவில்லை; இது முதல் திருமணத்திற்குள் நுழைந்தது. எனவே நாம் வழிகாட்டலைப் பெற வேண்டும். திருமணத்தைப் பற்றிய வழிமுறைகளைப் பெற வேண்டும் மற்றும் அன்பின் கொள்கைகளை நம் வாழ்வில் செயல்படுத்த வேண்டும். நாம் கேட்கலாம், "அன்பு என்றால் என்ன? அன்பின் விளக்கம் உண்மையில், ஒரு வகையில், தன்னலமற்றது. ஏசாயா 53: 6 கூறுகிறது, வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம். ஆனால் திருமணத்தில், நாம் மற்ற நபரின் மீது கவனம் செலுத்தி அவர்களின் நலனையும் நன்மையையும் தேடுகிறோம்.

உங்கள் மனைவியை நேசிப்பது உங்கள் சரீரத்தை நேசிப்பதைப் போன்றது என்று வேதாகமம் எபேசியரில் சொல்கிறது. கணவர்களான நாங்கள் மனைவியை போற்றி மதிக்க வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற மனைவியைப் பாராட்ட வேண்டும். உங்கள் சொந்த சரீரத்தை நேசிப்பது என்பது நீங்கள் உட்கார்ந்து உங்களுடன் கைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள், உங்களை நீங்களே தட்டிக் கொள்ளுங்கள், "ஓ, நான் உன்னை விரும்புகிறேன்," என்று சொல்லுங்கள். அது அப்படியல்ல. உங்களை நேசிப்பது என்பது உங்களைப் பாதுகாத்துக் கொள்வது, உங்களை நீங்களே கவனிப்பது. நாம் ஒருபோதும் நம் மனைவிகளை பொருட்படுத்தாமல் இருக்கக்கூடாது, அவர்களுடைய பலவீனங்களில் ஒன்றையும் ஒருபோதும் சொல்லக்கூடாது. அதை பகிரங்கமாக அம்பலப்படுத்தக்கூடாது. அவர்களை ஒருபோதும் கேலி செய்யக்கூடாது, அல்லது அவர்களை காயப்படுத்தும் செயல்களைச் செய்யக்கூடாது. நாம் நம்மை நேசிப்பது போல அவர்களையும் நேசிக்க வேண்டும்.

ஜெபத்தில் உங்களை தேவனிடம் சமர்ப்பியுங்கள். முதலில், உங்களை நேசித்ததற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள். பின்னர், அவர் உங்களுக்குக் கொடுத்த துணைக்கு நன்றி. அது பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கலாம். உங்கள் துணையை நீங்கள் பாராட்டாமல் இருக்கலாம். நீங்கள் அவரை அல்லது அவளை வீழ்த்தியிருக்கலாம். அது சுயநலமானது மற்றும் பாவம் என்று வேதாகமம் கூறுகிறது. எபேசியர் 5-ல் இயேசு தம்முடைய வார்த்தைகளால் தண்ணீர் விட்டு கழுவுவது போல் சபையை சுத்தப்படுத்தினார். உங்கள் துணையின் மீது நீங்கள் வார்த்தைகளைப் பேசும்போது, நீங்கள் பேசும் சொற்களின் நிலைக்கு அவர்கள் உயருவார்கள்.

“நீங்கள் நல்லவர் அல்ல, நீங்கள் அசிங்கமாக இருக்கிறீர்கள், அதிக எடை கொண்டவர்” என்று நீங்கள் சொன்னால், நீங்கள் உங்கள் திருமணத்தை ஒடுக்குகிறீர்கள்; ஒற்றுமையை ஏற்படுத்த மாட்டீர்கள்; பிரிவு மற்றும் அந்நியப்படுதலை ஏற்படுத்துவீர்கள். ஆனால் “தேனே” போன்ற தயவான வார்த்தைகளை நீங்கள் பேசி, நீங்கள் செய்யும் காரியங்களை நான் பாராட்டுகிறேன்; நான் உன்னை நேசிக்கிறேன்; உங்கள் செயல்களால் அவற்றை ஆதரித்தவுடன், உங்கள் துணையானது அந்த வார்த்தைகளின் நிலைக்கு உயரும்.

உங்கள் திருமண உறவில் நிறைய பிரச்சினைகள் வந்தது, நீங்கள் பேசிய வார்த்தைகளால் என்பதை இன்று நீங்கள் உணர முடிகிறதா? உங்கள் துணையை மேலே கொண்டு வருவதற்கு பதிலாக வீழ்த்தி விட்டீர்களா? இன்று உங்கள் துணையிடம் நல்ல வார்த்தைகளை பேச நான் உங்களை ஊக்குவிக்கிறேன். அன்பு என்பது ஒரு உணர்வு அல்ல; நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் அன்பு மற்றொரு நபரின் நலனையும் நன்மையையும் நாடுங்கள்.ஒரு சிறிய மரத்துண்டில், பல அடுக்கு ஓவியங்களை வரைவது போன்று உங்கள் கனிவான செயலைக் காண்பியுங்கள்.அன்பு சிறிய தயவுமற்றும் செயல்களால் கட்டமைக்கப்படுகிறது. உங்கள் துணையை மதிக்க, மரியாதை, மதிப்பு மற்றும் அன்பின் வார்த்தைகளைப் பேசத் தொடங்குங்கள். நீங்கள் ஒரு வித்தியாசத்தைக் காண்பீர்கள். இந்த கொள்கைகளை நீங்கள் செயல்படுத்தும்போது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. நீதிமொழிகள் 18:22 வாசிக்கவும். திருமணம் என்பது

   A. ஒரு நல்ல விஷயம்;

   B. பயங்கரம்;

   C .தேவனை திருப்திப்படுத்துவது

**நீதிமொழிகள் 18:22.** *"மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயவையும் பெற்றுக்கொள்ளுகிறான்."*

2. எபிரேயர் 13: 4 வாசிக்கவும். திருமணத்தில் உறவு என்பது (படுக்கையில்)

   A. பாவம்;

   B. அசுத்தம் மற்றும் தீது;

   C. மாசில்லாதது

**எபிரேயர் 13:4,** *"விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்."*

3. பிரசங்கி 9:9 வாசிக்கவும். சரியா? தவறா? தெய்வீகத்திருமணம் என்பது ஒரு பரிசு மற்றும் தேவனிடத்திலிருந்து நம்முடைய வாழ்க்கைக்கு கிடைக்கும் பொக்கிஷம்.

**பிரசங்கி 9:9,** *" சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே."*

4. I யோவான் 3:18 வாசிக்கவும். பிலிப்பு கில்லியம் என்ற நீதிபதி அவர் நடத்திய 28,000 வழக்குகளில் தகப்பனுக்கும் தாய்க்கும் அன்பில்லாமையே அநேக சிறுவர்களின் மன நோய்க்கு காரணம் என்றறிந்தார். நாம் எவ்வாறு அன்பு செலுத்த வேண்டும்?

**I யோவான் 3:18,** *"என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்."*

5. எபேசியர் 5:28 வாசிக்கவும்.சரியா? தவறா? நான் என் சுய சரீரத்தை அசட்டை செய்வது போன்று என் மனைவியை அசட்டை செய்வதில்லை.

**எபிரேயர் 5:28,** *அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்."*

6. I யோவான் 3:16 வாசிக்கவும். சரியா? தவறா? "நான் உன்னை நேசிக்கிறேன்" என்ற வார்த்தைகளுடைய செயலை மதிப்பிட்டால் அது அழகாக இருக்கும் . இயேசு தனது வாழ்வை கொடுத்து இதற்கு அர்த்தம் கற்பித்தார். நாம் நம்மால் முடிந்த அனைத்து வழிகளிலும் நம் வாழ்வை நம் துணைக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

நீங்கள் எவ்வாறு நேசிக்கப்பட்ட வேண்டும் என்ற வழிமுறையை விளக்குக.

**I யோவான் 3:16,** *"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்."*

7. எபேசியர் 5: 25-26 வாசிக்கவும்.சரியா? தவறா? என் மனைவியின் நடத்தை நான் பேசும் வார்த்தையைப் பொறுத்து தான் இருக்கும். நான் அவள் மீது எதை பேசுகிறேனோ அந்த அளவு ஆற்றலோடு இருப்பாள்.

**எபிரேயர் 5: 25-26,** *"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்.."*

8. ரோமர் 8:38-39 & I யோவான் 4:19 வாசிக்கவும். சரியா? தவறா? நாம் பேசப்படும் வார்த்தைகளுக்கு காட்டப்படும்

செய்கையால் நாம் அன்பைப் பெறுகிறோம். தேவன், வேதாகமத்திலுள்ள தமது அன்பான வார்த்தைகளால் நம்மிடம் அன்பு செலுத்துகிறார்.

**ரோமர்** 8:38-39, *"மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்."*

**I யோவான்** 4:19, *" அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்."*

9. I யோவான் 5:3 & II யோவான் 1:6 வாசிக்கவும். சரியா? தவறா? அன்பு செலுத்த வேண்டியவை தேவனின் கட்டளைகள் மூலம் அறிந்துகொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது

**I யோவான்** 5:3, *" நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல."*

**II யோவான்** 1:6, *"நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே."*

10. யோவான் 14:15 வாசிக்கவும். சரியா? தவறா? அன்பு என்பது உங்களது உணர்வு சம்பந்தப்பட்டது அல்ல; அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. வேதாகமத்தில் தந்துள்ள அனைத்துக் கட்டளைகளும் மனிதனின் விருப்பத்திற்காகவே தரப்பட்டுள்ளன. தேவன், உங்களை உணர வேண்டும் என்று சொல்வதில், அவர் உங்களை செயல்பட கூறுகிறார்.

**யோவான்** 14:15, *"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்."*

11. கலாத்தியர் 5:22-23 வாசிக்கவும். அன்பு இயற்கையானது. அது பரிசுத்த ஆவியால் அறியப்பட்டு மனித வர்க்கத்தில் பிறப்பிக்கப்பட்டது. அன்பு என்பது பின் வருவானவற்றுள் ஒரு கனி; 1) மனிதனின் யோசனை; 2) மனிதனின் இயற்கைத் தன்மை; 3) தேவனின் பரிசுத்த ஆவி.

**கலாத்தியர் 5:22-23,** *"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை."*

12. எபேசியர் 5:31-32 வாசிக்கவும். ஒரு நல்ல திருமணமானது எந்த சிறு பான்மை மாதிரி?

**எபேசியர் 5:31-32,** *"இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்.*

# பதில் ஆதாரங்கள்

1. நீதிமொழிகள் 18:22 வாசிக்கவும். திருமணம் என்பது

***A. ஒரு நல்ல விஷயம் & C. தேவனை திருப்திப்படுத்துவது***

2. எபிரேயர் 13: 4 வாசிக்கவும். திருமணத்தில் உறவு என்பது (படுக்கையில்)

***C. மாசில்லாதது***

3. பிரசங்கி 9:9 வாசிக்கவும். சரியா? தவறா? தெய்வீகத்திருமணம் என்பது ஒரு பரிசு மற்றும் தேவனிடத்திலிருந்து நம் வாழ்க்கையில் கிடைக்கும் பொக்கிஷம்.

***சரி***

4. I யோவான் 3:18 வாசிக்கவும். பிலிப்பு கில்லியம் என்ற நீதிபதி அவர் நடத்திய 28,000 வழக்குகளில் தகப்பனுக்கும் தாய்க்கும் அன்பில்லாமையே அநேக சிறுவர்களின் மன நோய்க்கு காரணம் என்றறிந்தார்.

***செயல் மற்றும் உண்மையான அக்கறை மூலம்***

5. எபேசியர் 5:28 வாசிக்கவும்.சரியா? தவறா? நான் என் சுய சரீரத்தை அசட்டை செய்வது போன்று என் மனைவியை அசட்டை செய்வதில்லை.

***சரி***

6. I யோவான் 3:16 வாசிக்கவும். அதன் செயலை மதிப்பிட்டால், "நான் உன்னை நேசிக்கிறேன்" என்பது அழகான வார்த்தைகள். இயேசு தன வாழ்வை கொடுத்து இதற்கு அர்த்தம் கற்பித்தார். நாம் நம்மால் முடிந்த அனைத்து வழிகளிலும் நம் வாழ்வை நம் துணைக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

***சரி***

உங்களுக்கு எப்படி அன்பு செலுத்தப்பட வேண்டும் என்ற வழிமுறையை விளக்குக.

7. எபேசியர் 5: 25-26 வாசிக்கவும்.சரியா? தவறா? என் மனைவியின் நடத்தை நான் பேசும் வார்த்தையைப் பொறுத்து தான் இருக்கும். அவளை நான் என் வார்த்தைகளின் அவசியத்திற்கு நடக்கும்படி செய்து விடுவேன்.

***உண்மை. எபேசியார் 5:26 ல் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை என்பது ரேமா - /அதாவது பேசப்பட்ட வார்த்தையாகும்***

8. ரோமர் 8:38-39 & I யோவான் 4:19 வாசிக்கவும். சரியா? தவறா? நாம் பேசப்படும் வார்த்தைகளுக்கு காட்டப்படும் செய்கையால் நாம் அன்பைப் பெறுகிறோம். தேவன், வேதாகமத்திலுள்ள தமது அன்பான வார்த்தைகளால் நம்மிடம் அன்பு செலுத்துகிறார்.

***உண்மை. தேவனுடைய வார்த்தைகள் எப்பொழுதுமே நமக்கு அன்பான வார்த்தைகள்.***

9. I யோவான் 5:3 & II யோவான் 1:6 வாசிக்கவும். சரியா? தவறா? அன்பு செலுத்த வேண்டியவை தேவனின் கட்டளைகளால் வெளிப்படுத்தப்பட்டு. நாம் இந்த கட்டளைகளை தேவனின் வார்த்தைகளில் இருந்து கற்றுக் கொள்ளலாம்.

***உண்மை***

10. யோவான் 14:15 வாசிக்கவும். சரியா? தவறா? அன்பு என்பது உங்களது உணர்வு சம்பந்தப்பட்டது அல்ல; அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. வேதாகமத்தில் தந்துள்ள அனைத்துக் கட்டளைகளும் மனிதனின் விருப்பத்திற்காகவே தரப்பட்டுள்ளன. தேவன், உங்களை உணர வேண்டும் என்று சொல்வதில்; அவர் உங்களை செயல்பட கூறுகிறார்.

***உண்மை***

11. கலாத்தியர் 5:22-23 வாசிக்கவும். அன்பு இயற்கையானது. அது பரிசுத்த ஆவியால் அறியப்பட்டு மனித வர்க்கத்தில் பிறப்பிக்கப்பட்டது. அன்பு என்பது பின் வருவானவற்றுள் ஒரு கனி;

***c. தேவனின் ஆவி.***

12. எபேசியர் 5:31-32 வாசிக்கவும். ஒரு நல்ல திருமணமானது எந்த சிறு பான்மை மாதிரி?

***கிறிஸ்துவும் அவர் சபையும்***

# பாடம் 12

# தேவனின் அன்பு - பகுதி 1

*டான் க்ரோ*

I கொரிந்தியர் 13: 3 கூறுகிறது. *"எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை."* I கொரிந்தியர் 14: 1 *கூறுகிறது, "அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்."* அதைப் பின்தொடரவும், அதை உன்னதமானதாக கருதவும் வேதாகமம் சொல்கிறது. வாழ்க்கையை நித்தியத்திற்குள் கொண்டு செல்வது இதுதான். நாம் நம்முடைய கார்கள், வீடுகள் அல்லது பணத்தை எடுக்க மாட்டோம். இயேசுகிறிஸ்து நமக்கு அளித்த அன்பை மட்டும் தான் எடுத்துச் செல்வோம் . பரிசுத்த ஆவியின் நித்திய மதிப்பும் பொருளும் கொண்ட ஒரே விஷயம் அந்த அன்புமட்டுமே.

அன்பு என்றால் என்ன அர்த்தம்? நான் சொல்கிறேன், "நான் என் மனைவியை நேசிக்கிறேன், எனக்கு ஐஸ்கிரீம் பிடிக்கும். நான் ஆப்பிள் பை நேசிக்கிறேன். அன்பை விவரிக்க ஆங்கிலத்தில் ஒரே ஒரு சொல் மட்டுமே உள்ளது, எனவே நான் என் மனைவியை நேசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, நான் பூனையை நேசிக்கிறேன் என்று சொல்லும்போது என் மனைவி என்ன நினைப்பாள்?நான் கூறுவது என்னவென்பதை நீங்கள் உணர்கிறீர்களா?அன்பு என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தும் போது, சிலர் இது பாலியல் அன்பு என்று நினைக்கிறார்கள், சிலர் இது ஒரு தீவிரமான சூடான உணர்வைக் குறிக்கிறது என்று நினைக்கிறார்கள்.மக்கள் அன்பிற்கு எல்லா வகையான விளக்கங் களையும் கொண்டிருக்கிறார்கள். கிரேக்க மொழியில் நான்கு முக்கிய

சொற்கள் உள்ளன. ஒன்று ஈராஸ்! இதுவேதாகமத்தில் பயன்படுத்தப்படவில்லை, மேலும் இது பாலியல் ஈர்ப்பு அல்லது பாலியல் அன்பு என வரையறுக்கப்படுகிறது. ஒரு மனிதன் தன் தந்தையையும் தாயையும் விட்டுவிட்டு, தன் மனைவியிடம் இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாக இருப்பார்கள் என்று சொன்னபோது, தேவன்அந்த அன்பை நியமித்தார். சாலொமோனின் பாடல் என்ற தலைப்பில் வேதாகமத்தில் உள்ள புத்தகம், தேவன் திருமண உறவுக்கு ஏற்படுத்திய பாலியல் அன்பைப் பற்றியது. மற்ற வகையான அன்பு, எல்லா மனிதர்களுக்கும் இலவசம் என்று தேவன் கூறுகிறார், ஆனால் ஈராஸ் என்பது திருமண உறவுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மற்றொரு வகையான அன்பு *ஸ்டார்ஜ்* என்று அழைக்கப்படுகிறது மற்றும் இது ஒரு குடும்ப உறவின் இயற்கையான பிணைப்பு அல்லது பாசம். பின்னர் *பிலியோ* உள்ளது, இது *பிலியா* என்ற மூல வார்த்தையிலிருந்து வருகிறது. இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் சுமார் எழுபத்திரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது, மேலும் இது தீவிரமான பாச உணர்வைக் குறிக்கிறது. அன்பைப் பற்றி பேசும் பெரும்பாலான மக்கள் அன்பு உண்மையில் என்னவென்று நினைக்கிறார்கள்?எனவே "நான் காதலிக்கிறேன், நான் காதலிலிருந்து விழுகிறேன்." உங்கள் திருமணம் அந்த வகையான அன்பைக் கட்டியெழுப்பினால், நீங்கள் உயர்ந்திருக்கும் நேரங்களும், நீங்கள் தாழ்ந்திருக்கும் இருக்கும் நேரங்களும் இருக்கும். அதன் அடிப்படையில் நீங்கள் காதலிக்கவும் முடியும் மற்றும் அன்பிலிருந்தும் வெளியேறவும் முடியும்.

தேவனுடைய அன்பினால் நாம் ஒருவருக்கொருவர் நேசிக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. இது *அகேப்பே* அன்பு. அகேப்பே அன்பு என்றால் என்ன? இதில் பல அம்சங்கள் உள்ளன. மேலும் 1 கொரிந்தியர் 13 அன்பு என்ன என்பதற்கு முழு வரையறையையும் தருகிறது. 1 யோவான் 5: 3 ல், *"நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல."* என்று கூறுகிறது. இயேசுவின் கட்டளைகள் அன்பின் வெளிப்பாடுகளை நமக்குக் காட்டுகின்றன, ஆனால் நான் அதைச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால்,நான் மத்தேயு 7:12 ஐப் பயன்படுத்துவேன் *"மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ,*

*அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்."* தேவாலயத்தில் என்னை நேசிக்க யாருமில்லை ,என்னைப் பற்றி கவலைப்பட யாருமில்லை என்பது ஒரு விஷயமே இல்லை. யாராவது உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதை நீங்கள் முதலில் செய்யுங்கள். அதுதான் அன்பு. நமக்கு மேலே உள்ள மற்றவர்களின் நலனையும் நன்மையையும் தேடுவது ,நமது மாம்சத்திற்கு எதிராகவும், நமது இயற்கைக்கு எதிராகவும் செல்கிறது. இது தேவனால் கூடும். தேவன் இல்லாமல் இதை வெளிப்படுத்த முடியும் என்று நான் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். ஆவியின் கனியே அன்பு என்றும், தேவன் அன்பாயிருக்கிறார் என்றும் வேதாகமம் கூறுகிறது. அவர் அன்பின் மூலமாகவும், அவருடைய கட்டளைகளின் மூலமாகவும் எவ்வாறு நேசிக்க வேண்டும் என்பதைக் காண்பிப்பவராகவும் இருக்கிறார். அவர்தான் நம்முடைய மாம்சத்தின் வெளிச்சத்தில் கூட, சரியான தேர்வுகளையும் முடிவுகளையும் எடுக்கவும், சரியான கொள்கைகளைச் செயல்படுத்தவும் நமக்கு பலம் தருவார்.

ஒரு நாள் நான் வழக்கமாக வேலைக்குப் பிறகு ஜெபம் செய்ய விரும்பினேன். நான் ஒரு பூங்காவில் இருந்தேன், "தேவனே, நான் உண்மையில் ஒருவருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறேன்" என்று சொன்னேன். இது மிகவும் சூடான நாள், நான் ஒரு சிறு பையனையும் ஒரு சிறுமியையும் ஊஞ்சலில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். ஒரு ஊஞ்சல் காலியாயிருந்தது, அதனால் நான் மேலே சென்று ஊஞ்சலில் அமர்ந்தேன். நான் சிறுமியின் பக்கம் திரும்பி, "இது ஒரு நல்ல நாள்" என்றேன்.அவள் தனக்கு ஆங்கிலம் பேச வராது என்று சொன்னாள், நான் "நீ எங்கிருந்து வருகிறாய்?" எனக் கேட்க,அவர் ருமேனியாவைச் சேர்ந்தவர் என்று கூறினார். அந்த பகுதியில் ருமேனியர்கள் இருப்பதை நான் அறிவேன், அந்த ருமேனிய மக்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஒரு வேளை நான் ஏன் தங்கள் குழந்தைகளுடன் பேசுகிறேன் என்று யோசித்துக்கொண்டிருக்கலாம். நான் சென்று, "நான் உங்களுக்கு உதவ விரும்புகிறேன்" என்றேன். அவர்கள் “எங்களுக்கு உதவுவதா? நீங்கள் ஏன் எங்களுக்கு உதவ விரும்புகிறீர்கள்? உங்களுக்கு எங்களை கூட தெரியாது!" நான் சொன்னேன், "ஏனென்றால் கடவுள் உங்களுக்கு உதவ விரும்புகிறார்." 1 யோவான் 3: 18-ல் நான் அன்பின் கொள்கைகளைப் பற்றி தியானித்துக் கொண்டிருந்தேன்.

அதில் *“என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்”* என்றுள்ளது.நாம் நம் வாயின் வார்த்தைகளால் மட்டுமல்ல, நம்முடைய செயல்களாலும் நேசிக்க வேண்டும். நான் வழக்கமாக என்னுடன் பணத்தை எடுத்துச் செல்வதில்லை என்றாலும், என் சட்டைப் பையில் கொஞ்சம் இருந்தது. நான் வெளியேறினேன், "இது இதற்கானது என்று அவர்களுக்கு பணத்தை கொடுத்தேன். அன்று நான் உபவாசம் இருந்ததால், என்னுடன் சிறிது உணவு இருந்தது. அதனால் நான் சொன்னேன், "இங்கே கொஞ்சம் உணவு இருக்கிறது. அது அவர்களை நெகிழச் செய்தது. அவர்கள், "நீங்கள் யார்?" என்று கேட்டனர். நான் சொன்னேன். "இன்று நான் உங்களை சந்திக்க வேண்டும் என்று தேவன் ஒரு தெய்வீக நியமனம் செய்துள்ளார். நான் உங்களை மீண்டும் பார்க்கப் போகிறேன்”, என்று சொல்லி சென்றேன்.

நான் வீட்டிற்குச் சென்று அந்த ரோமானியர்களுடன் சந்தித்ததைப் பற்றி என் மனைவியிடம் சொன்னேன். நான் சிறிது உணவு எடுத்து அதை சமைத்தேன். அடுத்த நாள் நான் ஒரு கேரேஜ் விற்பனையில் உணவுகள் நிறைந்த ஒரு பெட்டியை வாங்கி என் மனைவியுடன் மீண்டும் பூங்காவிற்குச் சென்றேன். ருமேனியர்களும் அவர்களுடைய குழந்தைகளும் அங்கே இருந்தார்கள், நான் சொன்னேன், “நான் உங்களுக்கு பரிசுகளை கொண்டு வந்திருக்கிறேன். அவை கனமானவை. எனவே நான் எனது காரில் செல்லப் போகிறேன். நீங்கள் வசிக்கும் இடத்தை நீங்கள் எனக்குக் காண்பித்தால், பரிசுகளை உங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்வேன். " அவர்கள் வழியைக் காண்பிக்க,நாங்கள் அவர்களின் சிறிய ஒரு படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டிற்கு வந்ததும், நான் பெட்டிகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டேன், எல்லாவற்றையும் பெட்டியிலிருந்து எடுத்து, அவர்களுக்கு ஒரு நேரத்தில் பொருட்களைக் கொடுக்க ஆரம்பித்தேன். நான் அதை அவர்களிடம் ஒப்படைத்தபோது, அவர்களின் முகத்தில் கண்ணீர் வர ஆரம்பித்தது, அந்த பெண்மணி, “நான் அழுவேன்! நான் அழப் போகிறேன்!” என்றார். நான் சொன்னேன், "திங்கள் இரவு நாங்கள் எங்கள் வீட்டில் ஒரு வேதாகமம் ஆய்வு வைத்திருக்கிறோம், உங்களை அங்கே அழைக்க விரும்புகிறேன். “ அவர்கள் "நாங்கள் வர விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். ஆனால் நான் சொன்னேன், "நான் உங்களுக்கு பரிசுகளை வழங்கியதால் நீங்கள் வருவதை

நான் விரும்பவில்லை." அவர்கள், "இல்லை, நாங்கள் வந்து உங்கள் நண்பர்களைச் சந்திக்க விரும்புகிறோம்" என்றார்கள்.

அவர்களுக்கு போக்குவரத்து இல்லாததால், நான் அவர்களை என் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். வெகு சீக்கிரமாகவே, தேவன் அவர்களைத் தொட ஆரம்பித்தார். அவர்களால் ஆங்கிலம் நன்றாக பேச முடியவில்லை. ஆனால் நாங்கள் அவர்களுக்காக ஜெபிப்பதற்கு முன்பு அவர் அவர்களைத் தொட்டார். தேவனின் அன்பு அவர்களுக்கு வெளிப்பட்டது. வெகு காலத்திற்கு முன்பே நாங்கள் மற்றொரு ருமேனிய தம்பதியரை சந்தித்தோம்! நான் முதல் ஜோடியிடம், நீங்கள் சென்று மற்றொரு ருமேனிய ஜோடியைச் சந்திக்க உதவுவீர்களா? அவர்கள் ஒப்புக் கொண்டு ஒரு நாள் அழைத்தார்கள், "மிஸ்டர் டான் உங்களைப் பற்றி கேள்விப்பட்டோம். எங்களது தனிமைகள் மோசமாக உள்ளன. நாங்கள் உங்களை சந்திக்க விரும்புகிறோம். எனது ருமேனிய நண்பர்களை அழைத்து அவர்களை சந்திக்க சென்றோம்! நான் அவர்களுக்கு பரிசுகள், உணவு மற்றும் அனைத்து வகையான பொருட்களையும் எடுத்துக்கொண்டேன். நான் அதைச் செய்து அவர்களுடன் செல்லத் தொடங்கியபோது, முதல் ருமேனிய தம்பதியர் ஒருவர், "நீங்கள் வேதாகமம் படிப்புக்குச் செல்ல வேண்டும். அவர்கள் இயேசுவைப் பற்றி பேசுகிறார்கள், அது அற்புதம் "அவர்கள்," ஒரு நிமிடம் காத்திருங்கள்! நான் ஒரு கம்யூனிஸ்ட் நாட்டைச் சேர்ந்தவன், கடவுள் இருக்கிறாரா என்று தெரியவில்லை. இந்த இயேசுவை நாங்கள் விரும்பவில்லை" என்றார்.

எனக்கு ஒரு நண்பராக இருங்கள் என்றேன். மற்றும் வார இறுதி நாட்களில் அவர்களை வெளியே அழைத்துச் சென்று அவர்களுக்கு உடைகள், கோட்டுகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கித் தந்தேன். அவர்கள் மிகவும் சங்கடமாகவும் தயக்கமாகவும் உணர்ந்தனர். "சரி, உங்களுக்கு இந்த கோட் தேவையில்லையா?" " வேண்டும் தான், ஆனால் ..." "அப்படியானால் உங்களுக்காக இந்த கோட்டைப் பெறுவோம்." அவர்கள் எங்கள் வேதாகமம் ஆய்வுக்கு வரமறுத்தார்கள்: உடனே நான் "அங்கே சில அமெரிக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உங்களுக்கு வேலை பெற உதவுவார்கள்" என்றவுடன் அவர்கள் உடனே வந்தார்கள். அன்றிரவு நடந்த வேதாகமம் படிப்பில், நான் இறைவனிடம் மிகவும் முட்டாள்தனமான ஒன்றைச் சொன்னேன், "ஆண்டவரே, நீங்கள் இன்றிரவு எனக்கு ஒரு உண்மையான

பரிசுத்தமான அந்நிய பாஷையைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் ஒருவருக்கொருவர் நன்றாக தொடர்பு கொள்ள முடியாது. அன்றிரவு வேதாகமம் ஆய்வில் சில அமெரிக்கர்கள் இருந்தனர் ,அவர்கள் தங்கள் சாட்சிகளை வழங்கினர். நான் பேசத் தொடங்கியபோது, இரண்டாவது ருமேனிய தம்பதியைச் சேர்ந்த பெண்மணி ஒளிரத் தொடங்கினார்.ஏதோ நடக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆய்வுக்குப் பிறகு, "நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்" என்று சொன்னேன், நாங்கள் ஜெபிக்கையில், தேவன் திடீரென்று அவர்களைத் தொட்டு, அறையின் முழு வளிமண்டலத்தையும் அவருடைய அன்பால் நிரப்பினார். பின்னர் அந்த பெண்மணி, "உங்களுக்குத் தெரியும், அமெரிக்கர்கள் பேசும்போது, அவர்கள் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நீங்கள் எழுந்து ஆரம்பித்தபோது இயேசுவைப் பற்றிப் பேசுவது, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பு, அவர் என்ன செய்தார் என்பதனால் நாம் அவருடன் உறவு கொள்ள முடியும் - நீங்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் எனக்குப் புரிந்தது! நான் அதை சரியாக புரிந்து கொண்டேன்! அது தேவனாகத்தான் இருக்க வேண்டும்! இதன் விளைவாக, ருமேனியர்கள் மட்டுமல்ல, நம் எல்லாருடைய வாழ்வும் மாற்றப்பட்டன.

எனது வீடு திங்கள் இரவுகளில் சர்வதேச மக்கள் ருமேனியர்கள், பல்கேரியர்கள் மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்களால் நிரப்பத் தொடங்கியது. தேவன் வாழ்க்கையை மாற்றிக்கொண்டிருந்தார், நாங்கள் அவர்களை நேசிக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்தார்கள். எங்களிடம் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்களும் இருந்தார்கள். நாம் ஒருவருக்கொருவர் பேசமுடியாது என்றாலும், அவர்கள் அறிந்த ஒன்று: நாங்கள் ஜெபிக்கும்போது, தேவன் அவர்களுக்கு வெளிப்படுவார். நான் அவர்களுக்காக எதையும் செய்வேன் என்றும் நான் அவர்களை நேசிக்கிறேன் என்பதையும் அவர்கள் அறிந்தார்கள். தேவன் அவர்களின் வாழ்க்கையையும் இன்னும் பலரின் வாழ்க்கையையும் மாற்றினார். ஒரு நாள் ஒரு பூங்காவில், மற்றொரு நிறத்தை மற்றொரு தேசியத்தைச் சேர்ந்த சிலரைக் கண்டேன். எனக்கு எந்தவிதமான அன்பான உணர்வும் இல்லை. ஆனால்அன்பு இதுதான் என்று எனக்குத் தெரியும்: யாராவது உங்களுக்குச் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்பினாலும், அவர்களுக்குச் செய்யுங்கள். நான் உணர்ந்த விதத்தைப் பொருட்படுத்தாமல் அவர்களின் நலனையும் நன்மையையும் தேடினேன். என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்களை எனக்கு

மிகவும் பிடித்தது பிலியாஅன்பு, உணர்வுகளைக் கொண்ட அன்பு, அவர்கள் என்னிடம் "ஐ லவ் யூ" என்று சொல்ல ஆரம்பித்தார்கள், என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்கள். அது என்னில் செய்தது அவர்களுக்கு அந்த மாதிரியான உணர்வை ஏற்படுத்தியது. நீங்கள் உணர்வுகளைக் கொண்ட ஒரு அன்பைப் பெற விரும்பினால் உங்கள் வாழ்க்கையில், அகபே அன்பைப் பயிற்சி செய்யுங்கள். நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் மற்றவர்களின் நலனையும் நன்மையையும் தேடுங்கள். இதில் ஒரு அன்பை உருவாக்கும் உணர்வுகள் உள்ளன.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. I யோவான் 5:3 வாசிக்கவும். தேவனின் அன்பு ______________ மூலமாக வெளிப்பட்டது.

**I யோவான் 5:3,** *"நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல."*

2. ரோமர் 13:9-10 வாசிக்கவும். இந்த வசனங்களில் உள்ள கட்டளைகள் எவ்வாறு அன்பை வெளிப்படுத்துகின்றன.

**ரோமர் 13:9-10,** *"எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக்கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது."*

3. ரோமர் 12:19-21 வாசிக்கவும். நமக்கு விருப்பம் இல்லாவிடினும் எவ்வாறு நம் எதிரிகளை நேசிப்பது?

**ரோமர் 12:19-21,** *"பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு."*

4. தீத்து 2:4 வாசிக்கவும். இந்த வசனம் அன்பை பற்றி என்ன சொல்கிறது?

**தீத்து 2:4,** *"தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்..."*

5. I கொரிந்தியர் 13:4-8 வாசிக்கவும். அன்பின் கொள்கைகளை விளக்குக:

**I கொரிந்தியர் 13:4-8,** *"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்."*

6. I யோவான் 3:18 வாசிக்கவும். நாம் அன்பை எவ்வாறு பிரயோகிக்க வேண்டும்?

**I யோவான் 3:18,** *"என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்."*

# பதில் ஆதாரங்கள்

1. I யோவான் 5:3 வாசிக்கவும். தேவனின் அன்பு __________ மூலமாக வெளிப்பட்டது.

***கற்பனைகள்***

2. ரோமர் 13:9-10வாசிக்கவும். இந்த வசனங்களில் உள்ள கற்பனைகள் எவ்வாறு அன்பை வெளிப்படுத்துகின்றன.

***அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது. உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக***

3. ரோமர் 12:19-21 வாசிக்கவும். நமக்கு விருப்பம் இல்லாவிடினும் எவ்வாறு நம் எதிரிகளை நேசிப்பது?

***உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு;நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.***

4. தீத்து 2:4 வாசிக்கவும். இந்த வசனம் அன்பை பற்றி என்ன சொல்கிறது?

***அன்பு போதிக்கப்பட வேண்டும். அது ஒரு உணர்வு மட்டும் அல்ல.***

5. I கொரிந்தியர் 13:4-8 வாசிக்கவும். அன்பின் கொள்கைகளை விளக்குக:

***அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.அன்பு ஒருக்காலும் ஒழியாது.***

6. I யோவான் 3:18 வாசிக்கவும். நாம் அன்பை எவ்வாறு பிரயோகிக்க வேண்டும்?

***கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.***

# பாடம் 13

# தேவனின் அன்பு - பகுதி 2

*டான் க்ரோ*

வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட வரையில், பூமியின் முகத்தில் வந்த அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடாக இயேசு கிறிஸ்து இருந்தார். "ஐ லவ் யூ" என்ற வார்த்தைகளை அவர் ஒருபோதும் சொல்லவில்லை. அது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா. அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடு "ஐ லவ் யூ" . அதை அவர் ஒருபோதும் சொல்லவில்லை. ஏனென்று தெரியுமா? ஏனென்றால், வார்த்தைகளை விட அன்பு அதிகம்; அது செயல். நான் என் மனைவியிடம் "ஐ லவ் யூ" என்று கூறிவிட்டு வெளியே சென்று அவளுக்கு எதிராக விபச்சாரம் செய்ததாக வைத்துக்கொள்வோம்? அவள் என் வார்த்தைகளை நம்புவாளா, அல்லது என் செயல்களை அவள் நம்புவாளா? என் செயல்களின்படி என்னை நம்புவார், ஏனென்றால் 95 சதவீத அன்பு சொற்களற்றது. நீங்கள் சொல்லும் விஷயங்களில் இல்லை; ஆனால் அது நீங்கள் செய்யும் செயலில் உள்ளது.

1 யோவான் 3: 18 ல், *"என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். (நம் வாயின் வார்த்தைகளால் மட்டும் நேசிக்க வேண்டாம்); ஆனால் செயலிலும் சத்தியத்திலும் நேசிக்க வேண்டும்"* (அடைப்புக்குறிப்புகள் என்னுடையது). அன்பு என்பது ஒரு செயலைக் குறிக்கும் சொல். மத்தேயு 25: 35-36-ல், "நான் பசியாக இருந்தேன், நீங்கள் எனக்கு உணவளித்தீர்கள்" என்று சொல்லும் போது , தனது செயல்களால் அன்பை இயேசு விவரிக்கிறார். எனக்கு தாகமாக இருந்தது. நீங்கள் எனக்கு குடிக்க ஏதாவது கொடுத்தீர்கள். நான் எந்த ஆடையும் இல்லாமல் இருந்தேன். நீங்கள் என்னை உடுத்தினீர்கள். நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன்.

நீங்கள் என்னை கவனித்துக்கொண்டீர்கள். " பின்னர் 40 வது வசனத்தில் அவர் கூறுகிறார்,"என் சகோதரர்களில் மிகக் குறைவானவர்களிடம் இதைச் செய்வதன் மூலம், நீங்கள் அதை எனக்குச் செய்தீர்கள்." நீங்கள் பார்க்கிறீர்கள். அன்பு ஒரு செயல்; இது நீங்கள் செய்யும் ஒன்று. எபிரெயர் 6:10 கூறுகிறது, *"உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன்அநீதியுள்ளவரல்லவே."* மத்தேயு 22-ல் மிகப் பெரிய கட்டளை என்ன என்று இயேசுவிடம் கேட்கப்பட்டபோது, இது கடவுளை நேசிப்பதும், நம் சக மனிதனை நேசிப்பதும் தான் என்றார். சரியாக புரிந்து கொண்டால் இந்த இரண்டு கட்டளைகளும் உண்மையில் ஒன்றாகும். என் சகோதரர்களில் மிகக் குறைவானவர்களிடம் நீங்கள் அன்பைக் காட்டும்போது, நீங்கள் அதை உண்மையில் அவருக்குக் காட்டுகிறீர்கள் என்று இயேசு சொன்னார். வேதப் பகுதியில், இயேசு கிறிஸ்துவின் நடைமுறை வழிகளில், மற்றவர்களை நேசிப்பதன் மூலம்நாம் நேசிக்க ஒரு அருமையான வாய்ப்பு இருப்பதாக வேதாகமம் கற்பிக்கிறது.

முந்தைய பாடத்தில், ஒரு பூங்காவில் நான் சந்தித்த ருமேனியர்களைப் பற்றி நான் சொன்னேன். நான் எப்படி உணர்ந்தேன் என்பதைப் பொருட்படுத்தாமல் அவர்களின் நலனையும் நன்மையையும் தேடியதால் அவர்களின் வாழ்க்கை மாறியது. அவர்கள் வேறுபட்ட நிறமாகவும், தேசியமாகவும் இருந்தனர். ஆனால் இயேசுவைப் போன்ற மற்றவர்களின் நலனையும் நன்மையையும் நாம் அடையும்போது தேவனின் அன்பு வெளிப்படும் என்பதை நான் அறிவேன். அவர் சிலுவை க்கு செல்வது போல் உணரவில்லை என்றாலும், அவர், "பிதாவே, வேறு வழி இருந்தால், அது இருக்கட்டும், ஆனாலும் என் விருப்பம் அல்ல, உ ம்முடையது நிறைவேறட்டும் " என்றார். இயேசு எப்படி உணர்ந்தார் என்பதைப் பொருட்படுத்தாமல் நம்முடைய நலனையும் நன்மையையும் நாடினார்.

ஒரு நாள் ருமேனியர்களிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அவர்கள் கண்ணீரில் இருந்தனர். அவர்கள் ஏழரை ஆண்டுகளாக அமெரிக்காவில் இருந்தனர். இப்போது கன்சாஸில் வசித்து வந்தனர். அவர்கள், "எங்கள் அரசியல் புகலிடம் ஆவணங்களை நாங்கள் இறுதியாக தீர்ப்பளித்தோம். முறையீடு செய்ய அவர்கள் எங்களுக்கு

முப்பது நாட்கள் அவகாசம் தருகிறார்கள், பின்னர் நாங்கள் நாடு கடத்தப்படுகிறோம். " இந்த நாட்டில் அரசியல் தஞ்சம் பெறுவதற்கு பொதுவாக 2 முதல் 5 சதவீதம் மட்டுமே வாய்ப்பு உள்ளது. ருமேனியர்கள் ஒரு வழக்கறிஞரிடம் சென்றனர். அவர் அடிப்படையில் அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்று கூறினார். நாங்கள் பிரார்த்தனை செய்வோம். அவர்களுக்கு உதவ முயற்சிப்பேன் என்று சொன்னேன். எப்படி, எனக்குத் தெரியாது. அவர்களை திருப்பி அனுப்புவது பெரும் அநீதி என்று நான் நினைத்தேன் - குறிப்பாக அவர்களின் குழந்தைகள் இப்போது ருமேனிய மொழி பேசமுடியாது.

ருமேனியர் இப்போது கன்சாஸில் வசித்து வருவதால், எனது நண்பர் ஒருவர் எங்கள் கொலராடோ காங்கிரஸ்காரரை அழைத்தார். அவர் கன்சாஸில் செனட்டர் சாம் பிரவுன்பேக்கைத் தொடர்பு கொள்ளச் சொன்னார். செனட்டர் பிரவுன்பேக்கிற்கு பணியாற்றிய கிம் என்ற நண்பர் எனக்கு இருப்பதால் , அது மிகவும் நன்றாக இருந்தது. இந்த வழக்கில் வாஷிங்டன் டி.சி.யில் நான்கு பேர் பணியாற்றினர். கன்சாஸில் உள்ள சுப்லெட்டில் உள்ள சமூகம் இந்த ருமேனியர்களை இங்கே விரும்புவதாகக் கூறி கையொப்பங்களின் மனுவுடன் ருமேனியர்களுக்குப் பின்னால் வந்தது. "அவர்கள் நல்ல மனிதர்கள், அவர்கள் வரி செலுத்துகிறார்கள், அவர்கள் வேலை செய்கிறார்கள் .நாங்கள் அவர்களை இங்கே இருக்கபடி விரும்புகிறோம்." என்ன நடந்தது என்பது பற்றி ஒரு முழு அறிக்கை செய்தித்தாள் இருந்தது. இது ஒரு அதிசயம். எங்கள் அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட உயர் அதிகாரிகள் இருப்பதால், ருமேனியர்களுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அந்த முடிவு தலைகீழானது, அவர்கள் அமெரிக்காவில் தங்கலாம் என்று இருந்தது .

நான் கன்சாஸின் சுப்லெட்டிற்குச் சென்றேன். நான் வருகிறேன் என்று என் நண்பர்களுக்குத் தெரியாது. நான் அங்கு சென்றதும், அவர்கள் அரசியல் தஞ்சம் பெற உதவியதற்காக செனட்டர் பிரவுன்பேக்கிற்கு தொலைபேசியில் நன்றி தெரிவித்தனர். ஜனாதிபதி கிளிண்டனின் குற்றச்சாட்டு விசாரணையின் கடைசி நாள் என்பதால் அவர் தனிப்பட்ட முறையில் அங்கு இருக்க முடியாது. ஆனால் ஏபிசி மற்றும் என்.பி.சி செய்திகள் ஆகியவை தங்கள் கேமராக்களுடன் இருந்தன. அவர்கள் தொடங்கியவுடன், அவர்கள் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்தார்கள். கேமராக்கள் என்னிடம் வந்தன. அதற்கு அவர்கள், "நீங்கள் யார், இந்த மக்களை நீங்கள் எப்படி

அறிவீர்கள்?" முழு கதையையும் அவர்களிடம் சொன்னேன்- நான் அவர்களை எவ்வாறு சந்தித்தேன், தேவனின் காரணமாகவும், மத்தேயு 7: 12 ல் இயேசு சொன்னவற்றின் காரணமாகவும் அவர்களின் நலனையும் நன்மையையும் தேடினேன்.

நாங்கள் எல்லா இடங்களிலும் சிவப்பு, வெள்ளை மற்றும் நீல பலூன்கள் இருந்த உடற்பயிற்சி கூட த்திற்குச் சென்றோம், தேசபக்தி பாடல்கள் பாடப்படுகின்றன. என் நண்பர்கள் உள்ளே வந்ததும், அனைவரும் கத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். நகர மேயர், “இன்று, பிப்ரவரி 12, இந்த ருமேனியர்களின் நினைவாக ஜுகான் குடும்ப தினமாக இருக்கப்போகிறது” என்றார். அவர்கள் மரியாதை நிமித்தமாக செனட்டர் வாஷிங்டன் டி.சி.யில் உள்ள தலைநகரில் பறந்த ஒரு அமெரிக்கக் கொடியை எடுத்து அவர்களுக்கு வழங்கினார். அவர்கள் வாழ்நாள் முழுவதும் சட்டப்பூர்வமாக தங்க முடிந்தது என்று கூறும் ஆவணங்களையும் அவர் வழங்கினார். அவர்கள் அனைவரும் ஒரு சாட்சியம் அளித்தனர், பின்னர் என்னை ஜெபிக்கச் சொன்னார்கள். நான் சொன்னேன், "இன்று நாம் மிகவும் நன்றி சொல்லாத ஒரு நபர் இருக்கிறார், அதுதான் சர்வவல்லமையுள்ள தேவன். ஏழரை ஆண்டுகளுக்கு முன்பு, CO, கொலராடோ ஸ்பிரிங்ஸில் உள்ள ஒரு பூங்காவில், நான் தேவனைத் தேடிக்கொண்டிருந்தேன். அன்றைய தினம் ஒருவரிடம் அவருடைய அன்பை அடைய விரும்புகிறேன் என்று அவரிடம் சொன்னேன். நான் இந்த ருமேனியர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். ” நான் கதையை மீண்டும் சொன்னேன், " உங்களுக்கு தேவன் உதவ விரும்புகிறார்-அமெரிக்காவிற்கு வருக"

இது எல்லாம் வந்த விதம் ஒரு அதிசயம். சரியான நேரத்தில் சரியான நபர்களை சரியான நேரத்தில் அறிந்தேன். இதெல்லாம் நடப்பதற்கு ஒரு வருடம் முன்பு செனட்டர் பிரவுன்பேக் என்னை ஆண்ட்ரூ வோமேக் அமைச்சகங்களில் வந்து சந்திக்க ஏற்பாடு செய்தார். அவள், "நீங்கள் டான் க்ரோவை சந்திக்க வேண்டும்." ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, நான் மிகவும் சங்கடமாக இருந்தேன். உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவர்களுக்குச் செய்யுங்கள் என்ற இயேசுவின் கட்டளையின் காரணமாக, தேவன் தன்னையும் தன் அன்பையும் வெளிப்படுத்தி, ஒரு குடும்பத்திற்கு உதவுவதற்காக யாரோ ஒருவருக்கு தேவன் விஷயங்களை அமைத்து த்தருகிறார் என்பதை நான்

அறிந்திருக்கவில்லை. இது அவர்கள் ஒருபோதும் மறக்க முடியாத ஒரு அதிசயம். அவர்கள் இன்று உங்களுக்குச் சொல்வார்கள், "இது தேவனால் தான்." ருமேனிய பெண்மணி அன்கா, "என் நம்பிக்கை அலைபாய்ந்தது, ஆனால் தேவன் உண்மையுள்ளவர், அவர் எங்களை அமெரிக்காவில் தங்க அனுமதித்தார்" என்றார்.

அன்பிற்காக கூக்குரலிடும் ஏராளமான மக்கள் இப்போது உள்ளனர். தேவனுடைய வார்த்தையிலிருந்து அன்பின் கொள்கைகளைப் புரிந்துகொள்வதற்கான முடிவை நீங்களும் நானும் எடுக்கும்போதுதான், அவர்கள் அதைப் பெற முடியும். அன்பு என்றால் கருணை, அன்பு மற்றவர்களின் நலனை நாடுகிறது-இயேசு சிலுவையில் சென்றபோது நம்முடைய நலனை நாடினார். தேவனின் அன்பைக் கொண்டு நேசிப்பதன் அர்த்தம் என்ன என்பதற்கான இந்த கொள்கைகளை, நீங்கள் அதிகமாகப் பார்க்கும்போது தேவன் இன்று உங்களை ஆசீர்வதிப்பார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மத்தேயு 7:12 வாசிக்கவும். பொன்னான கட்டளை எதுவென்று உங்கள் சொந்த வார்த்தைகளால் எழுதுக:

**மத்தேயு 7:12,** *" ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்."*

2. மத்தேயு 7:12 வாசிக்கவும். அன்பைக் கண்டறிய முயற்சிப்பதில், பலர் சரியான நபரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார்கள். நீங்கள் சரியான நபரைக் கண்டுபிடிக்க வேண்டுமா அல்லது சரியான நபராக மாற வேண்டுமா?

3. I யோவான் 5:3 வாசிக்கவும். அன்பு என்பது ஒரு உணர்வா அல்லது ஒரு செயலா?

**I யோவான் 5:3,** *" நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல."*

4. I யோவான் 3:18 வாசிக்கவும். நீங்கள் உங்கள் கணவன்/மனைவியிடம், "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று சொல்லி விட்டு, வெளியே சென்று விபச்சாரம் செய்வீர்களானால், அவர்/அவள் உங்கள் வார்த்தையையாவது அல்லது நடத்தையாவது நம்புவார்களா?

**I யோவான் 3:18,** *"என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்."*

5. ரோமர் 5:6-8 வாசிக்கவும். இயேசு மரிக்க வேண்டும் என்று உணர்ந்ததாக நீங்கள் நினைக்கிறீர்களா?

**ரோமர் 5:6-8,** *"அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை*

*ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே,தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."*

6. கலாத்தியர் 5:22 வாசிக்கவும். நாம் தேவனை நம் வாழ்க்கையின் நடுவில் வைக்காமல் அன்பு கூற முடியுமா?

**கலாத்தியர் 5:22,** *"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்."*

7. I யோவான் 4:8 வாசிக்கவும். நாம் பிறரை நேசிக்க தேவனின் உதவியை நாடுவதன் காரணம், அவர் ஒருவரே ______________

**I யோவான் 4:8,** *"அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்."*

8. I கொரிந்தியர் 13:5 வாசிக்கவும். பின் வரும் வார்த்தைகளில் அன்பில்லாதவைகளைக் கூறுக: முரட்டுத்தனம், சுயநலம், மன்னியாமை.

**I கொரிந்தியர் 13:5,** *"அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,"*

9. I கொரிந்தியர் 13:8 வாசிக்கவும்.இந்த வாழ்க்கையிலிருந்து அல்லது கல்லறைக்குப் பிறகு நீங்கள் எதைக் கொண்டு போவீர்கள்?

**I கொரிந்தியர் 13:8,** *"அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்."*

10. நீதிமொழிகள் 10:12 வாசிக்கவும். I கொரிந்தியர் 13:5 சொல்கிறது, “அன்பு எந்த தவறுகளையும் பதிவு செய்யாது“. அன்பு எத்தனை பாவங்களை உள்ளடக்கும்?

**நீதிமொழிகள் 10:12,** *" பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்."*

# பதில் ஆதாரங்கள்

1. மத்தேயு 7:12 வாசிக்கவும். பொன்னான கட்டளை எதுவென்று உங்கள் சொந்த வார்த்தைகளால் எழுதுக:

***உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்***

2. மத்தேயு 7:12 வாசிக்கவும். அன்பைக் கண்டறிய முயற்சிப்பதில், பலர் சரியான நபரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார்கள். நீங்கள் சரியான நபரைக் கண்டுபிடிக்க வேண்டுமா அல்லது சரியான நபராக மாற வேண்டுமா?

***சரியான நபராக மாற வேண்டும்.***

3. I யோவான் 5:3 வாசிக்கவும். அன்பு என்பது ஒரு உணர்வா அல்லது ஒரு செயலா?

***நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்க வேண்டும்.***

4. I யோவான் 3:18 வாசிக்கவும். நீங்கள் உங்கள் கணவன்/மனைவியிடம், "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று சொல்லி விட்டு, வெளியே சென்று விபச்சாரம் செய்வீர்களானால், அவர்/அவள் உங்கள் வார்தையையாவது அல்லது நடத்தையாவது நம்புவார்களா?

***உங்கள் செயகளினால் .செயல்கள் வார்த்தைகளை விட உரக்கப் பேசும்.***

5. ரோமர் 5:6-8 வாசிக்கவும். இயேசு மரிக்க வேண்டும் என்று உணர்ந்ததாக நீங்கள் நினைக்கிறீர்களா?

***இல்லை.அவர் எப்படி உணர்ந்தார் என்பதைப் பொருட்படுத்தாமல், அவர் நம் அனைவரின் நலனையும் நல்வாழ்வையும் நாடினார்.***

6. கலாத்தியர் 5:22 வாசிக்கவும். நாம் தேவனை நம் வாழ்க்கையின் நடுவில் வைக்காமல் அன்பு கூற முடியுமா?

***இல்லை***

7. I யோவான் 4:8 வாசிக்கவும். நாம் பிறரை நேசிக்க தேவனின் உதவியை நாடுவதன் காரணம், அவர் ________________

***அன்பு***

8. I கொரிந்தியர் 13:5 வாசிக்கவும். பின் வரும் வார்த்தைகளில் அன்பில்லாதவைகளைக் கூறுக:

***முரட்டுத்தனம், சுயநலம், மன்னியாமை, அனைத்துமே அன்பில்லாதவைகளைக் குறிக்கிறது***

9. I கொரிந்தியர் 13:8 வாசிக்கவும்.இந்த வாழ்க்கையிலிருந்து அல்லது கல்லறைக்குப் பிறகு நீங்கள் எதைக் கொண்டு போவீர்கள்?

***அன்பு. அது ஒருக்காலும் ஒழியாது.***

10. நீதிமொழிகள் 10:12 வாசிக்கவும். I கொரிந்தியர் 13:5 சொல்கிறது, “அன்பு எந்த தவறுகளையும் பதிவு செய்யாது”. அன்பு எத்தனை பாவங்களை உள்ளடக்கும்?

***சகல பாவங்கள்***

# பாடம் 14

# நிதி - பகுதி 1

*ஆன்ட்ரூ வோமக்*

நீங்கள் நிதி ரீதியாக வளர வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். இது அனைவருக்கும் முக்கியமான ஒன்று. வாழ்வதற்கும், உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருப்பதற்கும் பணம் தேவை. தேவன் நம்மை இந்த பகுதியில் தனியாக விட்டுவிட்டு, "உங்கள் ஆவிக்குரியப் பகுதியைப் பற்றி நான் கவலைப்படுகிறேன், ஆனால் உங்கள் நிதிப் பகுதியைப் பற்றி நான் கவலைப்படவில்லை, ... நீங்கள் உங்களுக்கு சொந்தமாக இருக்கிறீர்கள்" என்று சொல்லவில்லை. ஆவி, ஆத்மா மற்றும் சரீரம் போன்ற எல்லா வழிகளிலும், அவர் உங்களை நேசிக்கிறார். மேலும் அவர் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ளார். ஓரளவிற்கு நிதி செழிப்பு அவசியம் என்பதை பெரும்பாலான மக்கள் உணர்கிறார்கள், ஆனால் மதம் ஏராளமாக இருப்பதற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

தேவனுடைய வார்த்தை பேராசைக்கு எதிராக பல வழிகளை கற்பிக்கிறது, ஆனால் நிதி என்பது ஒரு ஆசீர்வாதம் என்பதையும் மிகத் தெளிவுபடுத்துகிறது. யோவான் 3:2ல், *“பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.”* என்ன ஒரு வலுவான அறிக்கை. யோவானில்" எல்லாவற்றிற்கும் மேலாக!" இது சிகிச்சைமுறை, உணர்ச்சிகள், உறவுகள் மற்றும் நிதியைப் பற்றி பேசுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் செழித்து ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நீங்கள் ஆவி,

ஆத்துமா மற்றும் சரீரத்தில் செழிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதுவே அவருடைய விருப்பம்.

பல மத மக்கள் உண்மையில் நாம் ஏழையாக இருக்க வேண்டும் என்று கடவுள் விரும்புவதாக கூறுகின்றனர். ஏழையாக இருப்பது ஒரு தெய்வீக விஷயம்.மற்றும் நீங்கள் ஏழ்மையானவர், நீங்கள் மிகவும் தெய்வபக்தியுள்ளவர் என்று கூறுகிறார்கள். போதகர்களிடம் நிதி அதிகம் இல்லாமல் வேலை செய்யும் ஒரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்ற அந்த வகையான சிந்தனையின் கீழ்நான் வளர்ந்தேன். இதை நிச்சயமாக வேதத்தால் உறுதிப்படுத்த முடியாது. ஆபிரகாம் அவருடைய காலத்தில் மிகப் பெரிய பணக்காரர், அவருடைய உடைமைகள் தங்கள் நாடுகளின் செல்வத்தை பாதிக்கும் என்பதால் மன்னர்கள் அவரை வெளியேறச் சொன்னார்கள். ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கும் இதே நிலை இருந்தது. யோசேப்பு ஒரு மனிதர், அவரும் செழித்து வளர்ந்தார். தாவீது அரசர் ஆலயத்தைக் கட்ட 2.5 பில்லியன் டாலர் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவற்றை தனது சொந்த கருவூலத்திலிருந்து தேவனுக்குக் கொடுத்தார். தாவீதின் மகன், சாலமன் பூமியில் வாழ்ந்த மிகப் பெரிய பணக்காரர். நீங்கள் அதை வேதப்பூர்வமாகப் பார்க்கும்போது, தேவனுக்கு உண்மையிலேயே சேவை செய்தவர்கள் நிதி ரீதியாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

பவுல் இல்லாமல் போராடி செய்த மக்கள், பிலிப்பியர் 4: 13 ல் கிறிஸ்துவின் மூலமாக எல்லாவற்றையும் செய்ய முடியும் என்றும் அவர் எந்த சூழ்நிலையிலும் திருப்தியடைய கற்றுக்கொண்டதாகவும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் என்று தனக்குத் தெரியும் என்றார். தேவனுடைய ஊழியர்கள் வறுமை மற்றும் சிரமங்களை அனுபவித்த நேரங்கள் இருந்தன. ஆனால் நீங்கள் ஏழ்மையானவராக இருந்தால் மிகவும் தெய்வபக்தியுள்ளவர் என்பதை வேதத்தில் காண முடியாது. அது உண்மையல்ல, நீங்கள் தெருக்களில் வெளியே சென்று அதை நிராகரிப்பதைக் காணலாம். ஆம், பேராசை தவறு என்று இங்கே ஒரு உண்மை இருக்கிறது. 1 தீமோத்தேயு 6: 10 ல், *"பணத்தின் மீதான அன்பே எல்லா தீமைகளுக்கும் மூலமாகும்"* என்று கூறுகிறது. சிலர் அதை எடுத்து பணம் எல்லா தீமைக்கும் வேர் என்று கூறுகிறார்கள். ஆனால் அது *"பணத்தின் மீதான அன்பே எல்லா தீமைகளுக்கும் மூலமாகும்"* என்று கூறுகிறது. பணத்தை நேசிப்பவர்களிடம்

ஒரு வெள்ளி நாணயம் கூட இல்லை; மற்றவர்களுக்கு பெரும் செல்வம் இருக்கிறது, ஆனால் அதை அவர்கள் அதை நேசிக்க வில்லை. அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள்.

உபாகமம் 8:18 நிதி செழிப்பின் உண்மையான நோக்கத்தைக் காட்டுகிறது. வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கவிருந்த இஸ்ரவேலர்களிடம் கர்த்தர் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் முன்பு இல்லாத வகையில் செல்வத்தையும் செழிப்பையும் அனுபவிக்கப் போகிறார்கள். அவர் அவர்களை நோக்கி: *உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்".* வேதத்தின் இந்த பகுதியின் படி, செழிப்பின் நோக்கம் உங்கள் சொந்த சுயநல நோக்கங்களுக்காக ஏராளமான செல்வங்களை வைத்திருப்பது அல்ல.ஆனால் தேவனின் உடன்படிக்கையை இங்கே பூமியில் நிறுவலாம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இதனால் நீங்கள் ஒரு ஆசீர்வாதமாக இருக்க முடியும். ஆதியாகமம் 12: 2 ல் *கர்த்தர் ஆபிரகாமிடம், "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்."* நீங்கள் வேறு யாருக்கும் ஆசீர்வாதமாக இருக்குமுன், நீங்களே ஆசீர்வதிக்கப்பட வேண்டும்.

உங்களுக்கு சில விஷயங்கள் தேவை, தேவன் பூர்த்தி செய்ய விரும்பும் சில தேவைகள் உள்ளன. ஆனால் அது ஒரு சுயநல விஷயத்திற்கு அப்பாற்பட்டது. அவர் உங்களை செழிப்பாக்க விரும்புகிறார். அதனால் அவர் மூலமாக அவருடைய பணத்தைப் பெற முடியும். எனவே நீங்கள் ஒரு ஆசீர்வாதமாக இருக்க முடியும். 2 கொரிந்தியர் 9: 8 ல் *"மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."* என்று கூறுகிறது. தேவன் ஏன் உங்களை செழிப்பாக்கப் போகிறார் என்பதை இது சொல்கிறது - எனவே நீங்கள் ஒவ்வொரு நல்ல செயலையும் நிறைவு செய்யலாம். இது உண்மையில் செழிப்புக்கான ஒரு வேதப்பூர்வ விளக்கம் போன்றது. செழிப்பு என்றால் என்ன?

உங்களுக்கு ஒரு நல்ல வீடு, ஒரு நல்ல கார், நல்ல உடைகள் மற்றும் உணவு இருப்பதா ? இந்த வசனத்தின்படி, உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து, ஒவ்வொரு நல்ல செயலையும் நிறைவு செய்ய இது போதுமானது. தேவன் உங்கள் இருதயத்தைத் தொட்டதாக நீங்கள் நினைக்கும் விஷயங்களை நீங்கள் கொடுக்க முடியாவிட்டால், நீங்கள் ஒருவருக்கு ஆசீர்வாதமாக இருக்க விரும்புகிறீர்கள், ஆனால் முடியாவிட்டால், வேதம் சொல்வதைப் பொறுத்து நீங்கள் நிதி ரீதியாக முன்னேறவில்லை. உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் அளவிற்கு அவர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று தேவன் கூறுகிறார், மேலும் ஒவ்வொரு நல்ல செயலையும் நீங்கள் நிறைவு செய்ய முடியும்.

உண்மையான வேதாகம செழிப்பு என்பது உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமல்ல. நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகவும் இருக்க முடியும். தங்களை மட்டுமே நினைக்கும் நபர் உண்மையில் சுயநலவாதி. "நான் தேவனை அதிகம் நம்புகிறேன்" என்று யாராவது சொன்னால், மற்றவர்கள் அவர்களை பேராசை அல்லது சுயநலவாதிகள் என்று நினைக்கலாம், ஆனால் அது நோக்கத்தைப் பொறுத்தது. நீங்கள் தேவனிடம் அதிகமாகக் கேட்டால், நீங்கள் ஒரு பெரிய வீட்டை அல்லது சிறந்த காரைப் பெற முடியும். அது சரியான வேதப்பூர்வ அணுகுமுறை அல்ல. ஆனால் நீங்கள் உங்கள் சொந்த தேவைகளைப் பூர்த்திசெய்து, மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்க விரும்புவதைத் தாண்டி நீங்கள் தேவனை அதிகமாக நம்புகிறீர்கள் என்றால், அதுதான் அவர் விரும்புகிற உங்களுடைய மனப்பான்மை. நீங்கள் செழிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் செழிக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம்.

மத்தேயு 6 நமக்குத் தேவையான விஷயங்களைப் பற்றிப் பேசுகிறது. பின்னர் நாம் முதலில் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் நாடுவோம் என்றால், இவை அனைத்தும் நமக்குக் கொடுக்கப்படும். நீங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்கத் தொடங்குகையில், இந்த மற்ற எல்லாவற்றையும் அவர் வழங்குவார். உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும். மேலும் நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருப்பீர்கள். நீங்கள் வளர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் அது உண்மையில் உங்கள் நோக்கம் மற்றும் இந்த பகுதியில் உங்களுடைய செயல்களைப் பொறுத்தது.

இது உங்களுக்கு சவாலாகவும், இன்று நீங்கள் தேவனின் மிகச் சிறந்ததை நம்ப ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்றும் நான் பிரார்த்திக்கிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. 2 கொரிந்தியர் 8:7-8 வாசிக்கவும். நீங்கள் இல்லாதவர்களுக்கு கொடுக்கும்போது, எந்த ஒரு விஷயத்தை நீங்கள் நிரூபிக்கலாம்?

**2 கொரிந்தியர் 8:7-8,** *"அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும். இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக்கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும்பொருட்டே சொல்லுகிறேன்."*

2. 2 கொரிந்தியர் 8:13-14 வாசிக்கவும்.நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொடுக்கும்போது, அங்கு என்ன இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்?

**2 கொரிந்தியர் 8:13-14,** *" மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம்,*

3. 2 கொரிந்தியர் 8:13-14 வாசிக்கவும்.அனைவரின் தேவையும் எவ்வாறு சந்திக்கப்படுகிறது?"

4. எபேசியர் 4:28 வாசிக்கவும். திருடுகிறவன் இனி திருடாமல் வேலை செய்து வாழ வேண்டும். அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று எபேசியர் 4:28 சொல்கிறது?

**எபேசியர் 4:28,** *"திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்."*

5. ஆதியாகமம் 13:2 மற்றும் 12:2 தேவன், ஆபிரகாமை செல்வத்தில் நம்பியிருக்கலாம். ஏனென்றால், ஆபிரகாம் மற்றவர்களுக்கு ஒரு ______________

**ஆதியாகமம் 13:2,** *ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளையுடைய சீமானாயிருந்தான்."*

**ஆதியாகமம் 12:2,** *"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்."*

6. I தீமோத்தேயு 6:17-18 வாசிக்கவும். எந்த மூன்று காரியங்களை செல்வந்தர்கள் தங்கள் பணத்தினால் செய்வார்கள்?

***I தீமோத்தேயு** 6:17-18, இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும்..."*

7. நிதிகள் விஷயத்தில் தேவன் உங்களை நம்ப முடியுமா?

# பதில் ஆதாரங்கள்

1. 2 கொரிந்தியர் 8:7-8 வாசிக்கவும். நீங்கள் இல்லாதவர்களுக்கு கொடுக்கும்போது, எந்த ஒரு விஷயத்தை நீங்கள் நிரூபிக்கலாம்?

***உங்கள் அன்பின் உண்மையை***

2. 2 கொரிந்தியர் 8:13-14 வாசிக்கவும்.நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொடுக்கும்போது, அங்கு என்ன இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்?

***சமநிலை. ஒவ்வொருவரும் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை கொடுக்க வேண்டும்***

3. 2 கொரிந்தியர் 8:13-14 வாசிக்கவும்.அனைவரின் தேவையும் எவ்வாறு சந்திக்கப்படுகிறது?"

***உங்களால் முடிந்ததை, எப்போது முடியுமோ கொடுப்பதன் மூலம்***

4. எபேசியர் 4:28 வாசிக்கவும். திருடுகிறவன் இனி திருடாமல் வேலை செய்து வாழ வேண்டும். அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று எபேசியர் 4:28 சொல்கிறது?

***குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்க வேண்டும்***

5. ஆதியாகமம் 13:2 மற்றும் 12:2 தேவன், ஆபிரகாமை செல்வத்தில் நம்பியிருக்கலாம். ஏனென்றால், ஆபிரகாம் மற்றவர்களுக்கு ஒரு ______________

***ஆசீர்வாதம்***

6. I தீமோத்தேயு 6:17-18 வாசிக்கவும். எந்த மூன்று காரியங்களை செல்வந்தர்கள் தங்கள் பணத்தினால் செய்வார்கள்?

***நன்மை செய்து, தேவன் கொடுத்ததை வேண்டியவர்களுக்கு தாராளமாய்க் கொடுத்து மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.***

7. நிதி விஷயத்தில் தேவன் உங்களை நம்ப முடியுமா?

***ஆம்***

# பாடம் 15

# நிதி - பகுதி 2

*ஆன்ட்ரூ வோமக்*

நீங்கள் வளமாவதற்கு தேவனுடைய விருப்பம் தேவை என்பதை முந்தின பாடத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன். இது எப்படி நடக்கிறது என்பதற்கு வழிமுறைகள் உள்ளன. லூக்கா 6:38 சொல்கிறது. *"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்."* அநேக கொள்கைகள் உள்ளன. ஆனால் பிறருக்குத் தராமல் நீங்கள் வளமாவதைக் குறித்து பேச முடியாது.

செல்வ வளத்தைப் பற்றி பேசும்போது, அநேகர் தேவன் எங்களை வளமாக்க விரும்புகிறார். நாங்கள் யாருக்கும் கொடுக்க தேவையில்லை என்கின்றனர். நீங்கள் வேதாகமத்தில், தனக்குள்ளதெல்லாவற்றிலும் மீதமாக இருந்த இரண்டு காசுகளை காணிக்கையாகக் கொடுத்த அந்த விதைவையை பார்க்கிறோம். கிறிஸ்து, செல்வந்தர்கள் அதிகம் போடுவதை கவனித்தும், தம் சீடர்களிடம், இவளே எல்லோரிலும் அதிகமாக தந்தவள் என்கிறார். மற்றவர்கள் தங்கள் செல்வத்திலிருந்து கொடுத்தாலும்,இவள் தன வறுமையிலிருந்து கொடுத்தாள்.தேவன் உங்கள் காணிக்கையை மதிப்பீடு செய்யவோ அல்லது அதன் சதவிகிதத்தைப் பார்த்தோ ஏற்றுக் கொள்ளமாட்டார். ஒருவன் கொடுப்பதற்கு தன்னிடம் எதுவும் இல்லை என்று சொன்னால், அது சரி அல்ல. ஒரு சிறிய துணியையாவது எடுத்துக் கொடுக்கலாம். அனைவரிடமும் தருவதற்கு ஏதாவது ஒன்று இருக்கிறது. எனவே உங்களிடம் கொடுக்க எதுவும் இல்லை என்ற இந்த வாதத்தை விட்டுவிடுங்கள் . உண்மையில்,நீங்கள்

எதையுமே குறைவாகக் காணும் நேரம்தான் , நீங்கள் கொடுப்பது, வேறு எந்த நேரத்தையும் விட அதிகமான சதவீதமாகும். பத்து டாலர்களை வைத்துக்கொண்டு ஐந்தைக் கொடுக்கும் ஒரு நபர் , கோடிகள் மற்றும் கோடிகளை வைத்துக்கொண்டு ,எஞ்சியிருக்கும் ஒரு கோடி டாலர்களைக் கொடுப்பதை விட மிகப் பெரிய பரிசைக் கொடுத்துள்ளார். எனவே ஒவ்வொரு நபரும் கொடுக்க முடியும் வேண்டும் என்று தேவன் அதை அமைத்துள்ளார்

தேவன் ஏன் நம்மை கொடுக்க சொல்கிறார்? அநேக காரியங்கள் இருப்பினும் மிக முக்கியமான காரியம், தேவன் எல்லா விதத்திலும் அவரை விசுவாசித்து செயல்பட வேண்டுமென்று விரும்புகிறார். தேவன் இல்லாதிருந்து, அவர் வார்த்தைகளும் இல்லாதிருந்தால், நமக்கு இருப்பவற்றில் நாம் எடுத்து பிறருக்கு கொடுப்பது முட்டாள்தனம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பதாக உறுதி அளிக்கவில்லையென்றால் உங்கள் அனைத்து விருப்பங்களும் சந்திக்கப்படுவதற்கு பதிலாக நீங்கள் வேறு புறம் செல்வீர்கள். விசுவாசத்தின் மூலமாக அவர் வார்த்தை நிறைவேற வேண்டும். அதற்காகத்தான் அவ்வாறு சொன்னார்.

லூக்கா 16ல் ஒரு உக்கிராணக்காரன் தன் எஜமானுடைய ஆஸ்தியை அழித்த உவமை உண்டு. அது கடைசியில் இப்படியாக முடியும் - கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்.நீங்கள் சிறு பண விஷயத்தில் தேவனை விசுவாசிக்காவிட்டால் எப்படி மிக முக்கியமாக ஆவியின் வரங்களை பெற்றுக் கொள்வீர்கள்? இது போன்ற வேதப்பகுதிகள், பணத்தை நிர்வாகப் பொறுப்பில் மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்கிறது . பண விஷயத்தில் நீங்கள் தேவனை விசுவாசிக்காவிட்டால், உங்கள் நித்தியத்தில் எப்படி அவரை விசுவாசிப்பீர்கள்? கிறிஸ்து உங்கள் பாவத்தை மன்னித்து விட்டார் என்றும் நீங்கள் பரலோகத்தில் நித்திய நித்தியமாய் வாழப் போகிறீர்கள் என்றும் எப்படி விசுவாசிப்பீர்கள்? இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் பணத்தைவிடவும் ஆவியின் வரங்களுக்காக அதிக விசுவாசம் வைக்க வேண்டும். பணம் என்பது சிறிய விஷயம். ஆனால் அதுவே தேவனை விசுவாசிக்க ஆரம்பிக்கும் துவக்கமாகும். நீதிமொழிகள் 11:24 சொல்கிறது:

"வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு."

நீங்கள் தேவனையும் அவருடைய இராஜ்யத்தையும் முதலாவது தேடும்போது, அவர் இவைகள் யாவற்றையும் உங்களுக்கு கூட கொடுப்பார். தேவன் உங்கள் பண விஷயத்தில் உதவ வேண்டுமென நினைத்து தேவனுடைய இராஜ்யத்தை நீங்கள் தேடாமல் இருந்தால், நீங்கள் விசுவாசத்தின் முதல் படியை எட்டவில்லை. அவரை பண விஷயத்தில் நம்பவில்லை. நீங்கள் உண்மையிலேயே அவரை விசுவாசிக்கவில்லை.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. யோவான் 3:16 வாசிக்கவும். தேவனை கொடுக்க தூண்டியது எது?

**யோவான் 3:16,** *"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."*

2. I கொரிந்தியர் 13:3 வாசிக்கவும். நம்மை கொடுக்க தூண்டுவது எது?

**/ கொரிந்தியர் 13:3,** *" எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை"*

3. யாக்கோபு 2:15-16 வாசிக்கவும். இந்த வசனத்தின் பொருள் என்ன?

**யாக்கோபு 2:15-16,** *"ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்களென்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?"*

4. லூக்கா 6:38 வாசிக்கவும். இந்த வசனம் உங்களுக்கு சொல்வதென்ன?

**லூக்கா 6:38,** *"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்"*

5. எபேசியர் 1:7 வாசிக்கவும். தேவன் அவரது செல்வங்களில் இருந்து கொடுத்தாரா அல்லது அவரது செல்வத்தின்படி கொடுத்தாரா?

**எபேசியர் 1:7,** *"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது."*

6. நீதிமொழிகள் 19:17 வாசிக்கவும். நீங்கள் ஏழைகளுக்கு கொடுக்கும்போது என்ன செய்கிறீர்கள்? தேவன் உங்களுக்கு திரும்ப கொடுப்பாரா ?

**நீதிமொழிகள் 19:17,** *"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்."*

7. சங்கீதம் 41:1-3 வாசிக்கவும். ஏழைக்கு கொடுப்பவர்களுக்கு தேவன் கொடுக்கும் ஐந்து காரியங்கள் என்ன?

**சங்கீதம் 41:1-3,** *"சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்."*

# பதில் ஆதாரங்கள்

1. யோவான் 3:16 வாசிக்கவும். தேவனை கொடுக்க தூண்டியது எது?

*அவரின் அன்பு*

2. I கொரிந்தியர் 13:3 வாசிக்கவும். நம்மை கொடுக்க தூண்டுவது எது?

*அன்பு. மத்தேயு 7:12 "எப்படி உணர்கிறோம் என்பதைப் பொருட்படுத்தாமல்,மற்றவர்களின் நல்வாழ்வையும் நன்மையையும் தேடுவது".*

3. யாக்கோபு 2:15-16 வாசிக்கவும். இந்த வசனத்தின் பொருள் என்ன?

*95%அன்பானது வார்த்தியினால் மட்டுமல்ல. நாம் சொல்வதில் அல்ல; செய்வதில் உள்ளது.*

4. லூக்கா 6:38 வாசிக்கவும். இந்த வசனம் உங்களுக்கு சொல்வதென்ன?

*நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்.*

5. எபேசியர் 1:7 வாசிக்கவும். தேவன் அவரது செல்வங்களில் இருந்து கொடுத்தாரா அல்லது அவரது செல்வத்தின்படி கொடுத்தாரா?

*அவரது செல்வத்தின்படி. நம்மை மீட்க, தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தார்.*

6. நீதிமொழிகள் 19:17 வாசிக்கவும். நீங்கள் ஏழைகளுக்கு கொடுக்கும்போது என்ன செய்கிறீர்கள்?

*கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறோம்.*

தேவன் உங்களுக்கு திரும்ப கொடுப்பாரா ?

*ஆம்*

7. சங்கீதம் 41:1-3 வாசிக்கவும். ஏழைக்கு கொடுப்பவர்களுக்கு தேவன் கொடுக்கும் ஐந்து காரியங்கள் என்ன?

***தீங்குநாளில் கர்த்தர் அவர்களை விடுவிப்பார். அவர்களை பாதுகாத்து, அவர்களை பாக்கியவான்களாக்குகிறார். அவர்களை சத்துருக்களிடமிருந்து மீட்டு அவர்களை குணமாக்குகிறார். வியாதியாய்க்கிடக்கிற அவனை குணமாக்குகிறார்.***

# பாடம் 16

# உங்கள் ஜெபங்களுக்கு பதில் வராதபோது என்ன செய்ய வேண்டும்?

*ஆன்ட்ரூ வோமக்*

உங்கள் ஜெபங்களுக்கு பதில் வராத போது என்ன செய்ய வேண்டுமென்று நான் உங்களோடு பகிர்ந்துக்க கொள்ளவிரும்புகிறேன்.உங்கள் ஜெபங்களுக்கு பதில்கள் வராதது போலிருக்கும். தேவன் எப்பொழுதும் அவருடைய வார்த்தையை விசுவாசித்து ஜெபிக்கும் ஜெபங்களுக்கு விடையளிக்கிறார்.। யோவான் 5:14 சொல்கிறது: *"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்."* இது ஒரு அசைக்க முடியாத விசுவாசம். தேவன் எப்பொழுதும் ஜெபங்களுக்கு விடையளிக்கிறார்.ஆனால் விடை வராதது போலவே தோன்றும். மத்தேயு 7:7-8 சொல்கிறது: *"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்."* இந்த வார்த்தைகள் தேவன் ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார் எனக் கூறுகிறது. இருந்தாலும் நாம் அனைவரும் நம் வாழ்க்கையில் எப்போதாவது, ஏதாவது நமக்கு விருப்பமான / சரியான /

நல்லதான /சுயநலமற்றதான /தேவனின் விருப்பத்திற்கு மாறான ஒன்றைக்கேட்டு, பதில்வராமல் போயிருக்கலாம்.

தேவனுடைய வசனம் சொல்கிறது, "கேட்கிற எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்". எது உண்மை? விடை உங்களுக்கு வியப்பளிக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால், இரண்டுமே உண்மை. அநேகர் நினைக்கிறார்கள், கர்த்தருடைய வார்த்தை பதிலளிப்பார் என்கிறது, ஆனால் பதிலை காணமுடியவில்லையே? யோவான் 4:24 சொல்கிறது:" விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. *"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்."* கர்த்தர் ஆவிக்குரிய மண்டலத்தில் கிரியை செய்து பதிலளிக்கிறார் . ஆனால் அதற்கு விசுவாசம் தேவை. அது விசுவாசத்தில் துவங்கி, வெளிப்பாட்டில் முடியும். விசுவாசம் என்பது ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து இயற்கை மண்டலத்திற்கு நகர்த்தப்படுவதாகும். இதைத்தான் எபிரேயர் 11:1ல் *"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."* விசுவாசம் இல்லாத ஒன்றுக்கு உருவம் கொடுப்பது என சொல்லவில்லை.அவைகள் இருக்கின்றன ஆனால் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் பரிசுத்த ஆவியின் கண்களுக்கு தெரியக் கூடியவை. விசுவாசம் என்பது பரிசுத்த ஆவியின் வட்டத்தில் இருப்பதை, சரீர உலகிற்கு கொண்டு வருவதாகும்.அது ஒரு வானொலி இணைப்பு போன்றது.

வானொலி, தொலைகாட்சி நிலையங்கள் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒளிபரப்புகின்றன. நீங்கள் உங்கள் அறையில் எந்த ஒரு இணைப்பையும் உணர மாட்டீர்கள். ஆனால் இணைப்பு இல்லை என்பதல்ல பொருள். நீங்கள் வானொலியை அதன் அலைவரிசையில் திருப்பி நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும். வானொலி இணைப்பின் வட்டத்திலிருந்து இழுத்து, மறுபடி நீங்கள் கேட்கக்கூடிய வகையில் மறு ஒளிபரப்பு செய்து தருகிறது. தேவனும் நம் ஜெபங்களுக்கு பதில்களை அவ்வண்ணமே தருகிறார். அவர் பரிசுத்த ஆவியின் வட்டத்தில் தரும் பதில்களை நாம் நம் விசுவாசத்தினால் இழுத்து இந்த சரீர உலகிற்கு கொண்டு வர வேண்டும்.பரிசுத்த ஆவியும், சரீர ஆவியும் இணைந்து பயணிக்கின்றன. தேவன் உலாவி நம் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கிறார்.ஆனால் நாம் நம் விசுவாசத்தை, காணப்படாத பரிசுத்த ஆவிக்கும், சரீர

உலகிற்கும் இடையே பாலமாக அமைக்காததால், நம்மால் உணரமுடிவதில்லை.

உதாரணமாக தேவ மனிதனாகிய தானியேல் ஜெபித்து, தேவனிடம் வெளிப்பாட்டை கேட்கிறார். நேரம் இல்லாத காரணத்தால் சுருக்கமாக சொல்கிறேன். தேவன், காபிரியேல் தூதனை அனுப்பி, தானியேலின் ஆரம்ப ஜெபத்தில், தேவனின் கட்டளைகளிலிருந்து பதில் வந்ததாக காபிரியேல் தூதன் சொல்கிறார். தானியேல் 9:22,23 சொல்கிறது , *"அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டுவந்தேன். நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்கவந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்."* பதில் வருவதற்கு எவ்வளவு காலம் ஆனது என படிப்பீர்களானால், வெறும் மூன்று மூன்று நிமிடங்களே!

கர்த்தருடைய கட்டளைக்கும், சரீர உணருதலுக்கும் வெறும் நிமிடங்களே. தேவன் உண்மையானவர் தானா? இது அவரது விருப்பம்தானா? ஒரு சொடுக்கு நேரத்தில் நடக்கிறதே என நாம் நம் சந்தேகங்களால் யோசிக்கலாம். தேவன் கட்டளையிட்டார். அதை காபிரியேல் தூதன் நிறைவேற்ற மூன்று நிமிட தூரம் ஆனது. இதற்கு விளக்கம் தேவையில்லை; அவசியமும் இல்லை . அன்று முதல் தேவன் நம் ஜெபங்களுக்கு மூன்று நிமிட நேரத்தில் பதில் அழித்துக் கொண்டிருக்கிறார். இதை நாம் விசுவாசிக்க வேண்டும். அநேகர் பொறுத்திருப்பர். ஆனால் அது எப்போதும் அப்படி அல்ல.

தானியேல் 10ம் அதிகாரத்தில், அதே மனிதர் வேறொரு ஜெபத்தை ஜெபிக்கிறார். ஆனால் விடை வருவதற்கு மூன்று வாரங்கள் ஆகிறது. இதை படிக்கும் அநேகர், ஏன் தேவன் தனியேலின் ஒரு ஜெபத்திற்கு மூன்று நிமிடத்திலும், மறு ஜெபத்திற்கு மூன்று வார நேரமும் எடுத்துக் கொண்டார் என்று கேட்பார்கள். தானியேல் 10:11,12 சொல்கிறது, *"அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின்பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில்*

*நடுக்கத்தோடே எழுந்து நின்றேன். அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்."* தனியேலின் முதல் நாள் ஜெபத்தில் ,தேவன் தூதனுக்கு கட்டளை விட்டார் என்பதை காட்டுகிறது. பதில் கிடைக்க மூன்று வாரங்கள் ஆனாலும் கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதிருக்கிறார் என எபிரேயர் 13:8 சொல்கிறது.

அதிகாரம் 9 & 10ஐ ஒன்றாகப் பார்த்தீர்களானால் தேவன் இரு ஜெபங்களுக்கும் உடனடி பதில் தந்துள்ளார்.ஒரு ஜெபத்திற்கு மூன்று நிமிடங்கள் ஆயின; மறு ஜெபத்திற்கு மூன்று வாரங்கள் ஆயின. ஆனால் கர்த்தர் மாறாதவர். அதற்கு விளக்கம்; தேவன் நம் ஜெபங்களுக்கு விடையளிக்கும் நேரத்திற்கும் நாம் பதிலைப் பார்க்கும் நேரத்திற்கும் இடையே அதிக மாறுதல்கள் வருகின்றன. நாம் நம்பிக்கை வைத்து, விசுவாசத்தோடு அவற்றை ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து சரீர மண்டலத்தி க்கு கொண்டு வர வேண்டும். எனவே விசுவாசம் என்பது மிக அவசியமான தூண்டுகோலாகும்.

மேலும் தானியேல் 10:13ல் *"அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை. நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை."* இங்கு தனி நபரைக் குறிப்பிடாமல் அசுத்த ஆவியின் தடங்கலைக் குறிப்பிடப்பட்டுள்ளது. தடங்கலுக்கு சாத்தான் ஒரு காரணமாக இருக்கிறான். தேவன் அளிக்கும் பதில்களுக்கு, சாத்தான் வேறு மனிதர்கள் மூலம் தடையை உருவாக்குகிறான். நீங்கள் பொருளாதார ரீதியாக தடைகளை உணர்ந்தால், தேவன் நேராக பொருளாதாரத்தை தருவதில்லை. அவர் அமெரிக்காவிற்கோ, இந்த உலகின் வேறு எந்த நாடுகளுக்கோ கள்ளத்தனமாக பண உதவி செய்வதில்லை. அவர் பணத்தை உருவாக்கி பரலோகத்திலிருந்து மழையாக பொழிய செய்து உங்கள் பைகளை நிரப்புபவர் அல்ல. லூக்கா 6:38 சொல்கிறது: *"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால்*

*அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்."* கர்த்தர் அளிக்கும் பதில்கள் மனிதர்கள் மூலமாக வரும். சிலர் பொறாமையினால் நம் மீது கோபம் கொண்டால் அல்லது நாம் அவர்களுக்கு இடையூறாக இருந்தால், சாத்தான் நம் ஜெபத்திற்கு அவர்கள் மூலமாய் தடங்கல்களை கொண்டு வருவான். நாம் நம் பொருளாதாரத்திற்காக ஜெபிக்கும்போது, மற்றவர்களும் ] நம்முடைய செழிப்பின் அதிசயத்தில் பங்குள்ளவர்களாகும்படி நாம் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் ஒரு போதும் வார்த்தையைக் கொண்டு, விசுவாசத்தினால் ஜெபிக்கும் ஜெபங்களுக்கு விடை தராமல் போக மாட்டார். அவர் எப்பொழுதும் பதில் தருகிறார். நாம் அதை உணர வேண்டும். உங்கள் விசுவாசத்தை அதிகப்படுத்தி தேவன் எப்பொழுதும் உங்களுடைய ஜெபங்களுக்கு விடையளிக்கிறார் என்பதை நீங்கள் உணருவதற்கு , இது உபயோகமாயிருக்க வேண்டுமென நான் ஜெபிக்கிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. மத்தேயு 7:7-8 வாசிக்கவும். நாம் தேவனிடம் கேட்கும்போது என்ன எதிர்பார்க்கலாம் ?

   **மத்தேயு 7:7-8,** *"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்."*

2. மத்தேயு 7:7-8 வாசிக்கவும். நாம் தேடும்போது என்ன நடக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறோம்?

3. மத்தேயு 7:7-8 நாம் தட்டும்போது என்ன நடக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறோம்?

4. யோவான் 10:35 வாசிக்கவும். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை விட , குறைவாக கொடுப்பாரா?

   **யோவான் 10:35,** *"தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க...."*

5. யாக்கோபு 4:1-3 வாசிக்கவும். ஏன் இந்த மக்கள் கர்த்தரிடம் பெறுவதில் இடையூறைக் கண்டார்கள்?

   **யாக்கோபு 4:1-3,** *"உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய்*

*விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்."*

6. I பேதுரு 3:7 வாசிக்கவும். நீங்கள் உங்கள் துணைக்கு அறிவுரை சொல்லும்போது, உங்கள் ஜெப வாழ்க்கையின் விளைவு எப்படி இருக்கும்?

**I பேதுரு 3:7,** *"அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்."*

7. I யோவான் 5:14-15 வாசிக்கவும். உங்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும் சாவி எது?

**I யோவான் 5:14-15,** *"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்."*

8. மாற்கு 11:24 வாசிக்கவும். ஜெபம் செய்யும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்?

**மாற்கு 11:24,** *"ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுகொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்."*

# பதில் ஆதாரங்கள்

1. மத்தேயு 7:7-8 வாசிக்கவும். நாம் தேவனிடம் கேட்கும்போது என்ன எதிர்பார்க்கலாம் ?

***வழங்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்***

2. மத்தேயு 7:7-8 வாசிக்கவும். நாம் தேடும்போது என்ன நடக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறோம்?

***கிடைக்க வேண்டுமென்று***

3.மத்தேயு 7:7-8 நாம் தட்டும்போது என்ன நடக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறோம்?

***நமக்கு திறக்கப்பட வேண்டுமென்று***

4. யோவான் 10:35 வாசிக்கவும். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை விட குறைவாக கொடுப்பாரா?

***இல்லை***

5. யாக்கோபு 4:1-3 வாசிக்கவும். ஏன் இந்த மக்கள் கர்த்தரிடம் பெறுவதில் இடையூறைக் கண்டார்கள்?

***அவர்களின் நோக்கங்களும் இதயங்களும் தவறானவை. எல்லாம் அவர்களைப் பற்றியும் அவர்களுக்காகவும் இருந்தது. மொத்த சுயநலமும் அவர்களின் நோக்கமாயிருந்தது.***

6. I பேதுரு 3:7 வாசிக்கவும். நீங்கள் உங்கள் துணைக்கு அறிவுரை சொல்லும்போது, உங்கள் ஜெப வாழ்க்கையின் விளைவு எப்படி இருக்கும்?

***உங்கள் ஜெபங்களுக்குத் தடைவரும்***

7. I யோவான் 5:14-15 வாசிக்கவும். உங்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும் சாவி எது?

***அவருடைய சித்தத்தின்படி கேட்பது***

8. மாற்கு 11:24 வாசிக்கவும். ஜெபம் செய்யும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்?

***அவைகளைப் பெற்றுகொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு கிடைக்கும்***

# CONTACT DETAILS

## INDIA

www.awmindia.net info@awmindia.net

### Locations:

### Hyderabad

42-343/1/188, Near Flora Hotel, Maruthi Nagar
A S Rao Nagar, Hyderabad 500 040, INDIA.
Ph: (040) 4028 0718

### Chennai

72-D, Nandhini Mahal, I Floor, Velachery Main Road
Velachery, Chennai 600 042, INDIA.
Ph: (044) 4202 1820

### Mumbai

Bethel, Plot No 305/E, Mith Chowky, Near Girdhar Park
Malad (W), Mumbai 400 064, INDIA.
Ph: +91 8976549515

### Delhi

Phone: +91 9560591787

## USA

Andrew Wommack Ministries Inc.
PO Box 3333, Colorado Springs CO 80934-3333
www.awmi.net

## UK

Andrew Wommack Ministries - Europe
PO Box 4392, Walsall, WS1 9AR, ENGLAND
www.awme.net

# முழுமையான
# சீஷத்துவ
# நற்செய்தி பணி

The Complete Discipleship Evangelism

## நிலை 3
(16 பாடங்கள்)

## Level 3
(16 Lessons)

ஆன்ட்ரூ வோமக்
மற்றும்
டான் W. க்ரோ

Andrew Wommack
and
Don Krow

The Complete Discipleship Evangelism
48-Lesson Course
Level 2 (16 Lessons)
Copyright ©2012, Andrew Wommack
Andrew Wommack Ministries
PO Box 3333, Colorado Springs, CO 80934-333
www.awmi.net

Title in Tamil: முழுமையான சீஷத்துவ நற்செய்தி பணி
©2020  Andrew Wommack Ministries India
www.awmindia.net
info@awmindia.net

Item Code: TM 417-3/3

Permission is granted to duplicate or reproduce for discipleship purposes on the condition that it is distributed free of charge.

# முழுமையான சீஷத்துவ நற்செய்தி பணி
# நிலை 3

## உள்ளடக்கம


| | | |
|---|---|---|
| 1. | தெய்வீக நீரோட்டம் | 5 |
| 2. | ஊழியம் செய்ய வரங்களை உபயோகித்தல் | 14 |
| 3. | அற்புதங்கள் தேவனை மகிமைப்படுத்துகின்றன | 29 |
| 4. | தேவபக்தியான உறவுகளின் வல்லமை | 43 |
| 5. | உபத்திரவம் | 50 |
| 6. | ராஜாவும் அவருடைய ராஜ்யமும் | 59 |
| 7. | இரட்சிக்கும் விசுவாசத்தின் பொருள் | 74 |
| 8. | தேவனுடைய பிரமாணத்தை சரியாக உபயோகித்தல் | 81 |
| 9. | நியாயப்பிரமாணத்தின்கீழ் அல்ல, கிருபையின்கீழ் | 93 |
| 10. | இனிமேலும் பாவஉணர்வு இல்லை | 103 |
| 11. | நான் நேசிக்கப்பட்டவன், நான் அழகானவன் | 116 |
| 12. | இரட்சிப்பின் கனி - பாகம் 1 | 126 |
| 13. | இரட்சிப்பின் கனி - பாகம் 2 | 138 |
| 14. | சீஷத்துவத்திற்கு ஓர் அழைப்பு | 148 |
| 15. | உங்கள் சாட்சியை பயன்படுத்துவது எப்படி? | 160 |
| 16. | சீஷராக்குவதற்கு ஒவ்வொருவருடைய வரங்களையும் பயன்படுத்துதல் | 174 |

## பாடம் 1

# தெய்வீக நீரோட்டம்

### *ஆன்ட்ரூ வோமக்*

தேவன் உங்கள் வழியாக மற்றவர்களுக்குள் பாய்ந்து செல்ல நீங்கள் அனுமதிப்பதன் மூலம் நீங்கள் மற்ற மக்களுக்கு ஊழியம் செய்ய ஆரம்பிக்கலாம். அதிகாரமும் தேவவல்லமையும் உங்களுக்குள் இருக்கிறது, ஆனால் மற்றவர்களுக்குள் அதை நீங்கள் எவ்வாறு கொண்டு செல்வீர்கள்? ஒருசில வசனங்களைக் கொண்டு நாம் இந்த செய்தியை ஆரம்பிக்கலாம். *“உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துஇயேசுவுக்காக பயன்படவேண்டும்”* என்று பிலேமோன் 6, ம் வசனத்தில் பவுல் வேண்டுதல் செய்கிறார். தேவ வல்லமை உங்கள் மூலமாக கடந்துசெல்வதற்கான முதல் படி என்னவெனில், உங்களுக்குள் நன்மையான காரியங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் முதலாவது அறிந்துகொள்ள வேண்டும். உங்களுக்குள் இல்லாத ஒன்றை நீங்கள் கொடுக்க முடியாது, ஆனால் உங்களுக்குள் என்ன இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்போது, காரியங்கள் தானாகவே சம்பவிக்க துவங்கும். உங்களை ஆச்சரியப்படுத்துகிற காரியங்கள், தேவன் உங்கள் வாழ்வில் என்னென்ன செய்தார் என்பவைகளைப் பற்றிய சாட்சிகளை நீங்கள் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள ஆரம்பிக்கும்போது, மற்றவர்கள் தானாகவே பயனடைவார்கள்.

*“பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்....தேவன் அன்பாகவே இருக்கிறார்.”* (1 யோவான் 4:7,8) என்று வேதத்தில் வாசிக்கிறோம். தேவஅன்பு உங்கள் மூலமாக பாய்ந்துசெல்வதை நீங்கள் எப்பொழுதெல்லாம் உணருகிறீர்களோ, அப்பொழுதெல்லாம்

தேவன் உங்கள் வழியாக மற்றவர்களுக்குள் பாய்ந்து செல்கிறார் என்று அர்த்தம். அன்பு என்ற பதத்திற்கு கிரேக்க மொழியில் நான்கு பிரதான வார்த்தைகள் உள்ளன. "Agape Love" என்ற பதம் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அன்பை விளக்கும் வார்த்தை. ஒருவர்பால் நாம் கொள்ளும் ஈர்ப்பு, அல்லது ஆசை என்பதற்கும்,இயற்கைக்கப்பாற்பட்ட உன்னதமான இந்த தேவஅன்புக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். தேவஅன்பு உங்கள் மூலமாக மற்றவர்களுக்குள் எப்பொழுதெல்லாம் கடந்துசெல்கிறதோ, அது உங்கள் சுயத்திற்கு செய்யும் ஊழியம் அல்ல என்பதை அப்பொழுது நீங்கள் அறிந்துகொள்ளலாம். 1 கொரிந்தியர் 13:4-8 வசனங்களில் தேவவிதமான அன்பைக் குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, இதை அதனோடு ஒப்பிட்டுப் பார்த்து நீங்கள் அறிந்துகொள்ளலாம். அந்த அன்புக்குப் பொறாமையில்லை, அது தற்பொழிவை நாடாது, அது சினமடையாதது ...நீங்கள் எதை அன்பு என்று கூறுகிறீர்கள், அது உண்மையான தேவ அன்புதானா? அது சுயநலமில்லாததாக, தற்பொழிவை நாடாததாக இருக்கிறதா? ஒருவர் உங்களுக்கு என்ன செய்ய இயலும் என்பதினிமித்தம்தான் நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? என்பதையெல்லாம் நீங்கள் அலசிப்பார்க்க வேண்டும். நீங்கள் இதில் வளர்ச்சியடைந்து, தேவரகமான அன்பை எழுத்தின்பிரகாரமாக நீங்கள் அறிந்துகொண்டு, அது உங்கள் முலமாக மற்றவர்களுக்குள் பாய்ந்து செல்லுமானால், அதுவே தேவன் கிரியை செய்வதாகும். தேவஅன்பு உங்கள் முலமாக மற்றவர்களுக்குள் கடந்து செல்வதை நீங்கள் உணர்ந்துகொள்ளும்போது, நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்னவெனில், மற்றவர்களை உற்சாகப்படுத்தும் சில வார்த்தைகளை அவர்களிடம் பேசுவது, அவர்களுக்காக சில நல்ல செயல்களை செய்வதேயாகும்.

யாராவது ஒரு நபர் என் நினைவில் வரவேண்டும், அதோடுகூட அந்த நபருக்காக தேவஅன்பும் விசேஷமான மனதுருக்கமும் என் இருதயத்தை நிரப்பவேண்டும் என்று நான் நினைத்த காலங்கள் உண்டு. அப்படி நடப்பதென்பது இயற்கைக்கப்பாற்பட்ட ஒரு செயல். ஆனால் எப்போதும் அப்படி நடக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக நான் கற்றுக்கொண்டது என்னவெனில், ஒரு நபரை நான் போன் முலமாக அழைப்பேன், அல்லது அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுவேன், அல்லது வேறு ஏதாவது வழியில் அவர்களோடு நான் தொடர்புகொள்வேன். இப்படி நான் செய்தபோதெல்லாம், அவர்கள் என்னிடம்: "தம்பி, தேவன் உன்

முலமாக இன்று என்னோடு பேசினார்; அதன் முலம் என்னைத் தொட்டார்" என்று என்னிடம் அவர்கள் கூறுவார்கள். இது எவ்வாறு நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? தேவஅன்பு எனக்குள் கிரியை செய்வதை நான் உணர்ந்ததினால், இந்த தேவமனதுருக்கம் என்னிடமிருந்து அந்த நபருக்குள் பாய்ந்து சென்றது. அதை நான் இப்பொழுது நினைத்துப் பார்க்கும்போது, அது நான் அல்ல, தேவனே என்பது எனக்குத் தெளிவாக தெரிகிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார்; மற்றவர்களிடத்தில் நான் அன்புகூரும்போது, தேவனே என் மூலமாக மற்றவர்களிடத்தில் அன்புகூருகிறார். ஆண்டவர் இயேசு இப்படித்தான் ஊழியம் செய்தார். *"இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதிஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்."* என்று மத்தேயு 14:14 ல் வாசிக்கிறோம். ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கான அன்பும் மனதுருக்கமும் தம்மில் கிரியை செய்வதை இயேசு உணர்ந்ததே, தேவவல்லமை அவர் மூலமாக கடந்து செல்வதற்கான வழியாக அமைந்தது. மத்தேயு 8:2.3 ல் குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனிதனைப் பார்க்கிறோம். யூத நியாயப்பிரமாணத்தின்படி, அவன் அசுத்தமானவன், அவனை யாரும் தொடவும் கூடாது; (அவனோடு யாரும் தொடர்புகொள்ளவும் முடியாது. அவனோடு தொடர்புகொள்ளுகிறவர்களும் அவனோடு கலந்து, தங்களை அசுத்தப்படுத்திக்கொள்வார்கள்). எனவே அவன் தூரத்தில் நின்று: *"ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக்கொண்டான். இயேசு அவனை கிட்ட அழைத்து, அவனைத் தொட்டு, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார், உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்."* அவர் அந்த குஷ்டரோகிமேல் மனதுருகி, அவனைத் தொட்டார். வேதத்தில் நீங்கள் அநேக இடங்களில் இயேசுவின் மனதுருக்கத்தையும், தேவஅன்பையும் காணலாம். இது ஏதோ ஒரு உணர்ச்சி அல்ல, நம் மூலமாக கடந்து செல்லும் தெய்வீக மனதுருக்கம்.

இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது, தம்மைச் சூழ இருந்த மக்களை அவர் அதிகமாக நேசித்தபடியினால்தான், *"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"* (லுக்கா 23:34) என்று வேண்டிக்கொண்டார். இவர்கள்தான் அவரை சிலுவையில் அறைந்தவர்கள், எனினும் அவர்கள்மேல் மனதுருகி, அவர்களை மன்னிக்கும்படி தேவனிடம் வேண்டிக்கொண்டார். அது ஒரு உணர்ச்சியோ அல்லது ஒரு

உணர்வோ அல்ல, அவராக எடுத்த முடிவு அது. இருப்பினும், அந்த மனதுருக்கத்தை அவர் உணர்ந்து, மக்களை நோக்கி அதைக்கட்டவிழ்த்துவிட்டார். மறுபடியும் பிறந்த உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தேவன் வாசம்பண்ணுகிறார். நாம் ஆரம்பித்த 1 யோவான் 4:8 வசனத்தின்படி, தேவன் அன்பாயிருக்கிறார், உங்கள் மூலமாக அவர் மற்ற மக்களுக்குள் பாய்ந்துசெல்ல விரும்புகிறார். அதைச் செய்வதற்கு இந்த மனதுருக்கத்தை அவர் கட்டவிழ்த்து விடுகிறார். உங்கள் மூலமாக மற்ற மக்களுக்குள் அது பாய்ந்து செல்வதை நீங்கள் உணருவீர்கள். நீங்கள் அதைச் செய்யும்போது, நீங்கள் பிரதியுத்தரம் கொடுக்க வேண்டும்.

விசேஷமான ஏதோ ஒன்றை நீங்கள் எப்பொழுதும் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. “கர்த்தர் சொல்லுகிறதாவது” என்று நீங்கள் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. சில நேரங்களில், யாராவது ஒருவர்மேல் உங்களுக்கு மனதுருக்கம் வருமானால், நேராக அவர்களிடம் சென்று, அவர்கள்மேல் உங்கள் கைகளைப் போட்டு, “கர்த்தர் உங்களை நேசிக்கிறார், ஆகவே நானும் உங்களை நேசிக்கிறேன்” என்று நீங்கள் கூறலாம். ஒருமுறை இது நடந்தது. அதாவது திருச்சபையை விட்டு ஓடிவிடவேண்டும் என்று நான் தீர்மானித்து முடிவு செய்திருந்த நேரம் அது. ஜனங்கள் என்னைக் குறித்து பொய்யான காரியங்களைச் சொன்னார்கள், என்னைக் கொன்று விடுவதாகவும் ஒருவர் மிரட்டி இருந்தார். “ஆண்டவரே, நான் இங்கு இருப்பதால் யாருக்கு என்ன பிரயோஜனம்?” நான் செய்ய முயற்சிக்கிற காரியங்களை ஒருவரும் உற்சாகப்படுத்தமாட்டேன் என்கிறார்களே என்று ஆண்டவரிடம் முறையிட்டு, இதைக் குறித்து சாத்தானோடு நான் யுத்தம் செய்துகொண்டிருந்தேன். அந்த நேரம் பார்த்து, தூரத்திலிருந்த ஒரு சகோதரன் என்னைக் கூப்பிட்டு, என்னோடுகூட சில நிமிடங்கள் பேசினார். என்னை நீங்கள் அழைத்ததன் காரணம் என்ன என்று அவரிடம் நான் கேட்டேன். “ஒன்றுமில்லை, நான் உங்களை நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அறியவேண்டும் என்பதற்காகவே உங்களிடம் நான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறேன், நான் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தபோது, உங்களை நேசிக்கவேண்டும் என்ற தேவனுடைய மனதுருக்கம் என்னை நிரப்பியது, நான் உங்களை பாராட்டுகிறேன்” என்று அவர் கூறினார். அவர் என்னிடம் பேசிய வார்த்தைகள் அவ்வளவுதான். என் வாழ்வில் நான் கடந்து செல்கிற காரியங்கள் எதுவும் அவருக்குத் தெரியாது, எனினும் தேவன்

அந்த சூழ்நிலையைப் பயன்படுத்தினார். அந்த நபர் மூலமாக என்னை நேசித்தது தேவனே என்பதை நான் அறிவேன். அது என்னை ஊழியத்தில் நிற்க வைத்தது, என் வாழ்க்கையை மாற்றி போட்டது.

ஆகவே நாம் மற்றவர்களோடு பேசுகிற வார்த்தைகள் ஆழமானதாகவும். ஏதோ அவசியமான ஒரு முக்கியம் நிறைந்த வார்த்தைகளாக இருக்கவேண்டும் என்ற அவசியமும் கிடையாது. தேவன் அன்பாயிருக்கிறார். அந்த அன்பு எப்பொழுதெல்லாம் உங்கள் மூலமாக பாய்ந்து செல்வதை நீங்கள் உணருகிறீர்களோ. அது உங்கள் மூலமாக மற்றவர்களுக்குள் கடந்து செல்கிற தெய்வீக நீரோட்டம், அது தேவனுடைய தெய்வீக ஜீவன். நீங்கள் அதை மோப்பம் பிடிக்கும்போது, அதன்படி நீங்கள் செயல்பட வேண்டும். போங்கள், ஏதாவது செய்யுங்கள், ஏதாவது சொல்லுங்கள்; யாராவது ஒருவருக்கு ஆசீர்வாதமாயிருங்கள். தேவன் உங்கள் நாவில் வார்த்தைகளைப் போடுவார். அவர் உங்களைப் பயன்படுத்துவார். மனதுருக்கத்தால் நிறைந்து உங்களைச் சுற்றியிருக்கிற மக்களுக்கு நீங்கள் ஊழியம் செய்யும்போது. ஜனங்களை தேவன் விடுதலையாக்குவார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

குறிப்பு: தேவன் நமக்குள் கொடுத்திருக்கிறவைகளை மற்றவர்களுக்குள் கடந்து செல்வதற்கு நாம் அனுமதிப்பது எப்படி என்பதை ஆராயலாம்.

1. வாசிக்க: பிலேமோன் 6. தேவன் நம்மிலிருந்து பிறருக்குள் பாய்ந்து செல்ல அனுமதிப்பதற்கான முதல் படி என்ன?

**பிலேமோன் 6 -** *"உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட வேண்டும்."*

2. வாசிக்க: 1 யோவான் 4:7,8. அன்பு மற்றவர்களுக்குள் கடந்து செல்வதற்கான உண்மையான ஆதாரம் என்ன?

**1 யோவான் 4:7,8 -** *"பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். (8) அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்."*

3. "உங்களிலிருந்து அன்பு பாய்ந்து செல்வதை நீங்கள் எப்பொழுதெல்லாம் உணருகிறீர்களோ, அப்பொழுதெல்லாம் தேவன் உங்களிலிருந்து மற்றவர்களுக்குள் பாய்ந்து செல்கிறார்" என்று ஆன்ட்ரூ குறிப்பிடுகிறார். 1யோவான் 4:7 ல் எந்த பகுதி இதை உறுதிப்படுத்துகிறது.

4. வாசிக்க: 1 கொரிந்தியர் 13:4-8. தேவ அன்பின் சில தன்மைகள் என்ன?

**1 கொரிந்தியர் 13:4-8 -** *"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாயிராது. (5) அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது. (6) அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். (7) சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் விசுவாசிக்கும்.*

*சகலத்தையும் நம்பும். சகலத்தையும் சகிக்கும். (8) அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்."*

5. வாசிக்க: மத்தேயு 14:14. மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்ய இயேசு உந்தப்பட்டார்?

**மத்தேயு 14:14 -** *"இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதிஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்."*

6. வாசிக்க: மத்தேயு 25:37-40. அன்பு, மனதுருக்கத்தினால் மற்றவர்களை நாம் சந்திக்கும்போது, உண்மையில் நாம் யாரை நேசிக்கிறோம்? யாரை பராமரிக்கிறோம்?

**மத்தேயு 25:37-40** - *"அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப்பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? (38) எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? (39) எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். (40) அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே சொல்லுகிறேன் என்பார்."*

**எபிரெயர் 6:10 -** *"ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே."*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: பிலேமோன் 6. தேவன் நம்மிலிருந்து பிறருக்குள் பாய்ந்து செல்ல அனுமதிப்பதற்கான முதல் படி என்ன?

***கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நமக்குள் போட்டு வைத்திருக்கிற நற்கிரியைகளை அறிந்துகொள்வது.***

2. வாசிக்க: 1 யோவான் 4:7,8. அன்பு மற்றவர்களுக்குள் கடந்து செல்வதற்கான உண்மையான ஆதாரம் என்ன?

***தேவன்தான் ஆதாரம், ஏனெனில் தேவன் எப்பொழுதும் அன்பாகவே இருக்கிறார். (1 யோவான் 4:8)***

3. "உங்களிலிருந்து அன்பு பாய்ந்து செல்வதை நீங்கள் எப்பொழுதெல்லாம் உணருகிறீர்களோ, அப்பொழுதெல்லாம் தேவன் உங்களிலிருந்து மற்றவர்களுக்குள் பாய்ந்து செல்கிறார்" என்று ஆன்ட்ரூ குறிப்பிடுகிறார். 1 யோவான் 4:7 ல் எந்த பகுதி இதை உறுதிப்படுத்துகிறது?

***"அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது." (அவர்தான் அன்பின் மூல ஆதாரம்)***

4. வாசிக்க: 1 கொரிந்தியர் 13:4-8. தேவ அன்பின் சில தன்மைகள் என்ன?

***கோபப்படுவதில் அன்பு மிகவும் தாமதமாயிருக்கிறது, பொறுமையாயிருக்கிறது. இது நிகழ்காலத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதாவது அன்பு தொடர்ந்து இவ்விதமாகவே செயல்படுகிறது. கனிவான செயல்களின் வழியாகவே தன்னை அது வெளிப்படுத்துகிறது. அன்பு பொறாமைப்படுவதில்லை. எனக்கு நல்லது நடைபெறவில்லையே என்று ஆழ்ந்த வருத்தம் கொள்வதோ அல்லது பிறருடைய வெற்றியைக் கண்டு சினங்கொள்ளவோ செய்யாது அன்பு. தன்னைப் பற்றியே தம்பட்டம் அடித்துக்கொள்ளாது, தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளாது, தன்னைப் பற்றியே பேசிக்கொண்டிராது.***

***இறுமாப்பு கொள்ளாது, சுயத்தால் விழுங்கப்பட்டுக் கிடக்காது. அன்பு பெருமையாயிராது, அகங்காரமாயிராது, தன்னை ஒரு அபூர்வப் பொருளாக்க் காண்பித்துக் கொள்ளாது. சரியானதை செய்வதில் மீறுதல் செய்யாது. அது கர்வமாயிராது. தனக்கு என்ன லாபம் கிடைக்கும் என்றே தேடாது, எளிதில் சினம் கொள்ளாது. எளிதில் கோபமடையாது, உடனே பொங்கி எழாது, தீமையானதை நினைக்காது, மற்றவர்களுக்குத் தீமை செய்கிறதையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிராது. மற்றவர்கள் செய்த தீமைகளை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிராது. அநியாயம் மற்றும் தீமையானதில் சந்தோஷப்படாது. அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் சகிக்கும். எப்பொழுதும் உதவிகரமாயிருக்கும். அது ஒருபோதும் விட்டுக்கொடுக்காது, சகலத்தையும் நம்பும். அன்பு ஒருக்காலும் ஒழியாது, அது எப்பொழுதும் மற்றவர்களை பாதுகாக்கும், அது முடிவுவரை சென்றுகொண்டே இருக்கும், அன்புக்கு முடிவே இல்லை.***

5. வாசிக்க: மத்தேயு 14:14. மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்ய இயேசு உந்தப்பட்டார்?

***இயேசு மற்றவர்கள்மேல் மனதுருகினார். "மனதுருக்கம்" என்ற வார்த்தைக்கு ஆங்கில அகராதியில், "பரிதாபம்கொள்ளும் உணர்வு, இரக்கம், தயவு" என்று உள்ளது.***

6. வாசிக்க: மத்தேயு 25:37-40. அன்பு, மனதுருக்கத்தினால் மற்றவர்களை நாம் சந்திக்கும்போது, உண்மையில் நாம் யாரை நேசிக்கிறோம்? யாரை பராமரிக்கிறோம்?

***இயேசுகிறிஸ்துவையே.***

எபிரெயர் 6:10 படிக்கவும்.

## பாடம் 2

# ஊழியம் செய்ய வரங்களை உபயோகித்தல்

### *ஆன்ட்ரூ வோமக்*

நீங்கள் பெற்றுக்கொண்ட அன்பை மற்ற மக்களோடு எவ்வாறு பகிர்ந்துகொள்வீர்கள் - ஒரு பயனுள்ள ஊழியராக மற்றவர்களுக்கு நீங்கள் எவ்விதம் விளங்குவீர்கள்? 1 பேதுரு 4:11 சொல்லுகிறது, *"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்."* இங்கே தேவனுடைய வாக்கியங்கள் என்பது, பழைய ஏற்பாட்டில், ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டியில் இருந்த தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது. அதுதான் *"தேவனுடைய வாக்கியங்கள்."* ஆகவே, *"தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கவேண்டும்"* என்றால், தேவனுடைய வாயாக நீ பேசு என்று பொருள். தேவனிடத்திலிருந்து நீ பேசுவதுபோல பேசு. *"ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக."* என்று அந்த வசனம் தொடருகிறது. இந்த வசனம் கூறுவது என்னவெனில், உன்னுடைய பெலத்தின்படி அல்ல, தேவன் உனக்குத் தந்தருளும் பெலத்தின்படியே நீ மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கியமான காரியங்களில் ஒன்று என்னவெனில், நானோ அல்லது நீங்களோ மற்ற நபர் ஒருவரிடம் பேசும்போது அல்லது ஏதாவது ஒன்றை பகிர்ந்துகொள்ளும், உதவிசெய்யும்போது, நம்முடைய சொந்த பெலத்தின்படி அல்ல; தேவனே வந்து நமக்குள் வாசம்பண்ணுகிறார். அவர் நம்மிலிருந்து

பேச ஆரம்பித்து, நம்மிலிருந்து அவர்களுக்குள் பாய்ந்து செல்கிறார். எழுத்தின்பிரகாரமாக நாம் தேவனால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக, தேவனுடைய ஆவியானவர் நம்மிலிருந்து மற்றவர்களுக்குள் கடந்து செல்கிறார். மற்றவர்களோடு நாம் ஒரு காரியத்தைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கும்போது, இதுதான் ஆவியின் வரம் என்றும், இதற்காகவே வரம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு நபரையும் தேவன் எடுத்து, அவர்களுக்கென்று குறிப்பிட்ட வரங்களை அளிக்கிறார். இதையே 1 கொரிந்தியர் 12 ம் அதிகாரத்தில், அவருடைய சித்தத்தின்படி, நம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசம் வித்தியாசமான வரங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது என்று வாசிக்கிறோம். 4-6 வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, *“வரங்களில் வித்தியாசங்கள்உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள்* (பல விதங்கள் - வித்தியாசமான ஊழியங்கள், வித்தியாசமான நிர்வாகங்கள்) *உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் (செயல்படும் விதங்களில்) வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற ஆவியானவர் ஒருவரே.”* மேலே வசனத்தில் அடைப்புக் குறியில் போடப்பட்டுள்ள வார்த்தைகள் என் வார்த்தைகள். தேவன் நம் எல்லாருக்குள்ளும் தேவன் கிரியை செய்கின்றார் என்றே இந்த வசனங்கள் குறிப்பிடுகின்றன. 7 ம் வசனம் கூறுகிறபடி, *“ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று, அதாவது ஒவ்வொருவருடைய நன்மைக்கென்றும் அளிக்கப்படுகிறது.”*

தனிப்பட்ட நம் ஒவ்வொருவருக்குள்ளும் இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியை தேவன் வைத்திருக்கிறார் என்று இந்த வசனம் கூறுகிறது. நீங்கள் இதை ஒருவேளை உணராமல் இருக்கலாம், அதைக் குறித்து விழிப்புணர்வு இல்லாமல் இருக்கலாம், ஆனால் இது தேவனுடைய வார்த்தையின் சத்தியம். இந்த சீஷத்துவ சுவிசேஷ ஊழியம் பற்றிய புத்தகத்தில் இதுவரை நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றால், ஏற்கெனவே இயேசுவை உங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டிருப்பீர்கள் என்றால், தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வது எப்படி என்றும், அதை உங்கள் வாழ்வில் எப்படி செயல்படுத்துவது என்றும் நீங்கள் கற்றுக்கொண்டிருப்பீர்கள் என்றால், பரிசுத்தஆவியின் வல்லமை உங்களுக்குள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். மற்றவர்களுக்கு

வேண்டிய அற்புதங்களை நீங்கள் உங்களுக்குள் வைத்திருக்கிறீர்கள். அதை வெளிக்கொண்டு வந்து, மற்றவர்களுடைய வாழ்வில் அதை செலுத்துவது உங்கள் கைகளில்தான் உள்ளது. ஆவியானவர் இந்த வரங்களை நம் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிறார் என்று வேதம் கூறுகிறபடியால், இந்த விஷயத்தில் ஒரு நபர்கூட விடப்படவில்லை. ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், ஆவிகளைப் பகுத்தறிதல், அற்புதங்களைச் செய்யும் சக்தி, குணமாக்கும் வரங்கள் போன்ற ஆவியின் ஒன்பது வரங்கள் 1 கொரிந்தியர் 12 ம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. மேலும், ரோமர் 12 ம் அதிகாரத்தில் மற்ற வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நீங்களே அதைப் படித்து, பரிசுத்தஆவியானவர் உங்களுக்குள் வைத்திருக்கிற விசேஷ அபிஷேகத்தை - விசேஷ திறமையை, பெலத்தை உணர்ந்துகொண்டு, மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்கிறவர்களாய் மாறவேண்டும். நான் செய்கிற வழியிலே ஒவ்வொருவரும் ஊழியம் செய்ய இயலாது, உதாரணத்திற்கு. போதிக்கும் ஊழியம் உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம், ஆனால் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் தங்கள் விசுவாசத்தை மற்ற நபருடன் பகிர்ந்துகொள்ளும்போது, அதன் மூலம் மற்றவர்களுக்கு ஏதோ ஒன்றை போதிக்க முடியும். போதிப்பதற்கென்றே அழைக்கப்பட்டவர்களும், போதித்து, சபையை மேய்க்கும் அழைப்பு பெற்றவர்களும் உள்ளனர், இரக்கம் செய்கிற(hospitality) ஊழியத்தைப் பெற்றவர்களும் உள்ளனர் என்று ரோமர் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது, அது அவர்களுக்கு தேவன் தந்த வரம். இதை வாசிக்கிற உங்களில் அநேகருக்குள் ஏதாவது ஒரு வரம் அல்லது தேவன் தந்தருளின பெலம், ஆற்றல் இருக்கும், ஆனால் நீங்கள் அதைக் குறித்து விழிப்புணர்வு இல்லாமல் இருக்கக்கூடும். மற்றவர்களுக்கு நான் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்ற வாஞ்சை மாத்திரம் உங்களுக்குள் இருக்கும். நீங்கள் ஒரு அறைக்குள் செல்லும்போது, அங்கே வியாதியாயிருக்கிற ஒரு நபரைக் காணும்போது உடனே அவர்களை தூக்கிவிடுகிற கனிவுள்ள ஒருவராக நீங்கள் இருக்கக்கூடும். அவர்கள்மேல் பரிதாபம்கொண்டு, அவர்கள் செல்லுகிற கடினமான நிலையை நன்கு உணர்ந்தவர்களாய், அவர்கள் நலம்பெறும்படி அவர்களுக்கு உதவி செய்கிறவர்களாய் நீங்கள் இருக்கக்கூடும். அது இயற்கைக்கப்பாற்பட்ட தேவனுடைய வரம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

பிறருக்குக் கொடுக்கும் வரத்தை உடையவர்களாக இருக்கும்படி சிலர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர் 12 கூறுகிறது, அப்படிப்பட்டவர்கள் பணத்தை சம்பாதிக்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் அதன் மூலம் சுவிசேஷஊழியத்தைத் தாங்குகிறவர்களாகவும் இருப்பார்கள். அது அவர்களுடைய வரம், அவர்களுடைய வாழ்விற்கான அழைப்பு அது, உங்களில் சிலர் இதற்கென்றே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். சிலருக்குப் புத்தி சொல்லுகிற ஊழியம் இருக்கும், சிலருக்கு நிர்வாக ஊழியம் இருக்கும், ரோமர் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ள இவைகள், உதவி செய்கிற வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகளெல்லாம் சபை பற்றிய காரியங்களில் மட்டுமல்ல, நாம் நமது அனுதின வாழ்வில் மக்களோடுள்ள நமது மற்ற காரியங்களிலும் உள்ளன. சோர்ந்துபோய் இருக்கிறவர்களை உற்சாகப்படுத்தும் திறமை உள்ளவர்களாக உங்களில் சிலர் இருக்கக்கூடும், போதிக்கும் வரத்தையுடைய நான் இதை ஒருபோதும் செய்ய முடியாதவனாக இருக்கக்கூடும். சாதாரணமாக ஒருவர் தோள்மீது உங்கள் கைகளைப் போட்டு, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களைப் பெலப்படுத்தும் இயற்கைக்கப்பாற்பட்ட வரத்தையுடையவர்களாக நீங்கள் இருக்கக்கூடும். இங்கே நான் கூறவருகிறது என்னவெனில், இப்படிப்பட்ட வரத்தை உடைய நீங்கள், இதை ஏதோ இயற்கையான ஒன்றாகவோ, அல்லது, “நான் அப்படிப்பட்ட டைப்பான ஆள்” என்று சாதாரணமாக கூறவோ கூடாது. நான் இப்படிப்பட்ட நபர் என்று உங்களை நீங்களே ஒரு வகைப்படுத்திக் கொள்ளக்கூடாது. இது தேவன் உங்களுக்குள் வைத்துள்ள இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி என்றும், அந்த இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி, வரம்தான் சில காரியங்களை நீங்கள் பிரத்யேகமாக செய்வதற்கும், மற்றவர்களை கவர்ந்திழுப்பதற்கும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யும்போது, தேவன் உங்களுக்குள் வைத்துள்ள தேவனுடைய காரியங்களின்படி ஊழியம் செய்யவேண்டும். முழு நேரமும் செலவழித்தோ, நம்முடைய வேலைகளிலோ அல்லது நாம் போகிற எவ்விடங்களிலுமோ எப்படியோ நாம் ஊழியம் செய்கிறவர்களாய் இருக்கவேண்டும். உங்கள் அண்டை வீட்டார், அல்லது நீங்கள் போகிற கடைகளில் நீங்கள் ஊழியம் செய்யும்போது, தேவன் உங்களுக்கென்று தந்தருளின பெலத்தின்படியே செய்யவேண்டும்; உங்கள்

பெலத்தின்படி அல்ல. ஆகவே, ஜெபத்தின் மூலம் தேவனைத் தேடி, தேவன் உங்களுக்குள் வைத்துள்ள வரங்களை கண்டுபிடிக்கும்படி உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன், அவைகளை ஏதோ ஒன்றாக கருதி விட்டுவிடாதிருங்கள், பரிசுத்தஆவியானவர் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ ஒரு வரத்தை போட்டு வைத்திருக்கிறார் என்பதை அறிந்துணர்ந்து கொண்டு, உங்களுக்குள் தேவன் வைத்துள்ள வரத்தின் மூலம் மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யுங்கள்.

இவைகளை செயல்படுத்த காலமும் பயிற்சியும் எடுக்கும். முதல் தடவையே நீங்கள் மிகச் நேர்த்தியாக, சரியாக செயல்படமாட்டீர்கள், அதினிமித்தம் அதைச் செயல்படுத்த பயந்துவிடாதிருங்கள். நீங்கள் பிழை செய்துவிட்டால், தேவன் உடனே சிங்காசனத்தைவிட்டு இறங்கி உங்களை தண்டித்துவிடமாட்டார், உங்களுடைய இருதய உண்மையை மற்ற மக்கள் பார்ப்பார்கள். சில காரியங்களை நீங்கள் பூரணமாக செய்யாவிட்டாலும், அதைச் செய்யவேண்டும் என்று உங்களைத் தூண்டுகிற அந்த அன்பு பிறருக்கு ஊழியஞ்செய்யும். ஆகவே மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய ஆரம்பியுங்கள், தேவன் உங்களுக்கு வரங்களை அளித்திருக்கிறார் என்பதை அறிந்துகொண்டு, அவர் உங்களுக்குத் தந்திருக்கிற அந்த இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: 1 பேதுரு 4:11. யாருடைய பெலத்திலிருந்து ஊழியம் செய்ய வேண்டும்?

**1 பேதுரு 4:11 -** *"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்."*

2. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:4 - வித்தியாசம் வித்தியாசமான, பலவித வரங்கள் உள்ளன, ஆனால் இவைகள் எல்லாவற்றிற்கும் மூல ஆதாரம் யார்?

**1 கொரிந்தியர் 12:4 -** *"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் அவரே."*

3. வாசிக்க: 1 கொரிந்தியர் 12: 6-10. சரியான பதத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

   A) தேவன் ஒரே ஒரு வழியில்தான் கிரியை செய்கிறார்.

   B) தேவன் பலவித மக்கள் மூலம் பலவிதங்களில் கிரியை செய்கிறார்.

   C) தேவன் பிரசங்கியார் மூலமாக மட்டுமே கிரியை செய்கிறார்.

**1 கொரிந்தியர் 12:6-10 -** *"கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளு எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. (7) ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடையபிரயோஜனத்திகென்று அளிக்கப்பட்டிருக்கிறது. (8) எப்படியெனில், ஒருவனுக்கு*

*ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கம் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், (9) வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், (10) வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும்,வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது."*

4. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:7. சரியா - தவறா? பரிசுத்தஆவியானவரின் பிரசன்னமும், ஆவியின் வரங்களும் எல்லாருடைய நன்மைக்காக நம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

5. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:8-10. தேவன் ஜனங்களுக்குத் தருகிற வரங்களில் சிலவற்றை பட்டியலிடுக.

6. வாசிக்க: ரோமர் 12:6-8. தேவன் ஜனங்களுக்குத் தருகிறதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வரங்களைக் குறித்து சற்று வர்னிக்கவும்.

**ரோமர் 12:6-8** - *"நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்குத்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்."*

7. இந்த வரங்களில் ஏதாவது ஒன்று உங்கள் மூலமாக கிரியை செய்வதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

**2 தீமோத்தேயு 4:11** - *“லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்.”*

**அப்போஸ்தலர் 13:1** - *“அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னாபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.”*

**அப்போஸ்தலர் 13:15** - *“நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்துமுடிந்தபின்பு: சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று சொல்லும்படி ஜெபஆலயத்தலைவர்கள் அவர்களிடத்தில் ஆள் அனுப்பினார்கள்.”*

8. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:7. யார் பலனடையவேண்டும் இந்த வரங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது?

**நீதிமொழிகள் 22:9** - *“கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்.”*

**அப்போஸ்தலர் 20:28 -** *“ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.”*

**மத்தேயு 5:7** - *“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள்.”*

**1 கொரிந்தியர் 12:7** - *“ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.”*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: 1 பேதுரு 4:11. யாருடைய பெலத்திலிருந்து ஊழியம் செய்ய வேண்டும்?

   ***தேவனுடைய பெலத்திலிருந்து.***

2. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:4 - வித்தியாசம் வித்தியாசமான, பலவித வரங்கள் உள்ளன, ஆனால் இவைகள் எல்லாவற்றிற்கும் மூல ஆதாரம் யார்?

   ***தேவன் / பரிசுத்தஆவியானவர்.***

3. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:6. சரியான பதத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

   ***B) தேவன் பலவித மக்கள் மூலம் பலவிதங்களில் கிரியை செய்கிறார்.***

4. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:7. சரியா - தவறா? பரிசுத்தஆவியானவரின் பிரசன்னமும், ஆவியின் வரங்களும் எல்லாருடைய நன்மைக்காக நம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

   ***சரி.***

5. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:8-10. தேவன் ஜனங்களுக்குத் தருகிற வரங்களில் சிலவற்றை பட்டியலிடுக.

   ***ஞானத்தைப் போதிக்கும் வசனம் = தேவனுடைய சிந்தை மற்றும் தேவனுடைய நோக்கம் பற்றி தேவனிடத்திலிருந்து வெளிப்படுகிற இயற்கைக்கப்பாற்பட்ட வெளிப்பாடு.***

   அப்போஸ்தலர் 27:21-25 ஐ பார்க்கவும்.

   ***அறிவை உணர்த்தும் வசனம் = எந்த ஒரு உண்மை மற்றும் சம்பவங்களைப் பற்றியும், தேவனிடத்திலிருந்து வெளிப்படுகிற இயற்கைக்கப்பாற்பட்ட வெளிப்பாடுகள்.***

அப்போஸ்தலர் 9:11-12 ஐ பார்க்கவும்.

***விசுவாச வரம் = சந்தேகம் அல்லது எவ்வித காரண காரியங்களையும் அறிய முற்படாமல் தேவனை விசுவாசிக்கும் இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி.***

1 கொரிந்தியர் 13:2 ஐ பார்க்கவும்.

***குணமாக்கும் வரங்கள் = மனுஷீக உதவி மற்றும் மருத்துவமின்றி வியாதிகளைக் குணமாக்கும் இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி.***

மாற்கு 16:18 ஐ பார்க்கவும்.

***அற்புதங்களைச்செய்யும்சக்தி = இயற்கை விதிகளுக்கு மாறாக அற்புதங்களை உண்டுபண்ணும் தெய்வீக குறுக்கீடு.***

எபிரெயர் 2:3-4 ஐ பார்க்கவும்.

***தீர்க்கதரிசனம் = பேசுகிற தேவஊழியர் தேவனால் ஏவப்பட்டு பேசும் இயற்கைக்கப்பாற்பட்ட வார்த்தைகள்.***

அப்போஸ்தலர் 11:27-28; 1 கொரிந்தியர் 14:3 ஐ பார்க்கவும்.

***ஆவிகளைப் பகுத்தறிதல் = தேவனுடைய பிரசன்னம் மற்றும் ஆவிகளின் செயல்பாடுகள் பற்றி, தேவனிடத்திலிருந்து வெளிப்படும் இயற்கைகப்பாற்பட்ட வெளிப்பாடுகள்.***

அப்போஸ்தலர் 16:16-18 ஐ பார்க்கவும்.

***பற்பல பாஷைகளைப் பேசுதல் = தேவனால் ஏவப்பட்டு, தனக்குத் தெரியாத பாஷையில் பேசப்படும் இயற்கைகப்பாற்பட்ட வார்த்தைகள் ( பேசுகிற நபருக்குத் தான் என்ன பாஷையில் பேசுகிறேன் என்று தெரியாது).***

அப்போஸ்தலர் 2:4-11 ஐ பார்க்கவும்.

***பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல் = தேவனால் ஏவப்பட்டு, தனக்குத் தெரியாத பாஷையை மொழிபெயர்க்கும் இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி.***

1 கொரிந்தியர் 14:13-14 ஐ பார்க்கவும்.

6. வாசிக்க: ரோமர் 12:6-8. தேவன் ஜனங்களுக்குத் தருகிறதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வரங்களைக் குறித்து சற்று வர்னிக்கவும்.

***தீர்க்கதரிசனம் = தேவனால் ஏவப்பட்டு, பேசுபவர் தான் அறியாத பாஷையில் (அறிந்த பாஷையிலும்) பேசும் இயற்கைக்கப்பாற்பட்ட வார்த்தைகள்.***

***ஊழியம் = மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல், நடைமுடைய சேவை.***

2 தீமோத்தேயு 4:11 ஐ பார்க்கவும்.

***போதித்தல் = விவரித்தல், விளக்கமளித்தல், தேவன் சொன்னவைகளை தேவன் கூறிய கருத்திலே மக்களுக்குச் சொல்லுதல்.***

அப்போஸ்தலர் 13:1 ஐ பார்க்கவும்.

***புத்திசொல்லுதல் = வேண்டிக்கொள்ளுதல், புத்திமதி கூறுதல், ஊக்கமளித்தல், செய்யும்படி கனிவுடன் கூறுதல், அறிவுரை கூறுதல், தேறுதல் கூறுதல் அல்லது எச்சரித்தல்.***

அப்போஸ்தலர் 13: 15 ஐ பார்க்கவும்.

***பகிர்ந்துகொடுத்தல் = தேவனுக்கும் மற்றவர்களுக்கும் நன்கொடைகளை, பரிசுகளை தாராளமாக கொடுத்தல்.***

நீதிமொழிகள் 22:9 ஐ பார்க்கவும்.

***முதலாளி = நடத்துதல் அல்லது தலைமைத்துவம்.***

அப்போஸ்தலர் 20:28 ஐ பார்க்கவும்.

***இரக்கம்செய்தல் = இடறலடைந்தவர் அல்லது பரிதாப நிலையில் உள்ளவர்களுக்கு மனதுருக்கத்தை காண்பித்தல்.***

மத்தேயு 5:7 ஐ பார்க்கவும்.

7. இந்த வரங்களில் ஏதாவது ஒன்று உங்கள் மூலமாக கிரியை செய்வதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அப்படியானால் எந்த வரங்கள்?

8. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:7. யார் பலனடையவேண்டும் என்று இந்த வரங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது?

ஒவ்வொருவரும். மற்றவர்களுக்கு உதவி செய்யும்படியாக நீங்கள் வரங்களை உபயோகிப்பதன் மூலம், உங்கள் மூலமாக தேவன் கிரியை செய்யும்படியாக நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள்.

# பாடத்திலிருந்து இன்னும் சில சேர்க்கை வசனங்கள்

**அப்போஸ்தலர் 27:21-25** - *“அநேகநாள்.வர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப் புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது. ஆகிலும் திடமனதாயிருங்களென்று உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொன்னபடியே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.”*

**அப்போஸ்தலர் 9:11-12** - *“அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு, அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்.”*

**1 கொரிந்தியர் 13:2** - *“நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.”*

**மாற்கு 16:18** - *“சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.”*

**எபிரெயர் 2:3-4** - *“முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.”*

**அப்போஸ்தலர் 11:27-28** - *“அவர்களில் ஒருவனாகிய அகபு எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களில் உண்டாயிற்று.”*

**1 கொரிந்தியர் 14:3** - *“தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்.”*

**அப்போஸ்தலர் 16:16-18** - *“நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின் தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று.”*

**அப்போஸ்தலர் 2:4-11** - *“அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே*

*பேசத்தொடங்கினார்கள். வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர் ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனேபட்டணத்தைச் சுற்றியிருக்கிற லீபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும் யூதமார்க்கத்தமைந்தவர்களும், கிரேக்கரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்."*

**1 கொரிந்தியர் 14:13-14** - *"அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும்."*

## பாடம் 3

# அற்புதங்கள் தேவனை மகிமைப்படுத்துகின்றன

*ஆன்ட்ரூ வோமக்*

தேவனுடைய பெலத்தில் நடந்து, அவர் நமக்குத் தருகிற வரங்களின் மூலமாக மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்வதைப் பற்றி நாம் பேசினோம். இவை எவ்வாறு தேவனை மகிமைப்படுத்துகின்றன என்றும், அவருடைய இயற்கைக்கப்பாற்பட்ட பெலத்தை நாம் எவ்வாறு உபயோகப்படுத்த வேண்டும் அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார் என்பதைக் குறித்து சில காரியங்களை நான் பகிர்ந்துகொள்ளும்படி விரும்புகிறேன். இதற்கு பல வசனங்கள் உள்ளபோதிலும், சில வசனங்களை மாத்திரம் நான் தொட்டுச்செல்ல விரும்புகிறேன். மத்தேயு 9 ம் அதிகாரத்தில், திமிர்வாதக்காரன் ஒருவனை இயேசு சுகமாக்கின சம்பவம் உள்ளது, இதே சம்பவத்தை மாற்கு 2 ம் அதிகாரத்திலிருந்து சற்று விரிவாகக் கூற விரும்புகிறேன். மத்தேயு 9:8 ல் *“ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்”* என்று வாசிக்கிறோம். ஆவியின் வரங்களும் - அற்புதங்களும் தேவனை மகிமைப்படுத்துகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? அதற்காகத்தான் அதிசயமான அந்த அற்புத வல்லமையை நமக்குத் தருகிறார்.

சுவிசேஷத்தை மற்ற மக்களோடு நீங்கள் பகிர்ந்துகொள்ளத் தொடங்கும்போது, “நீங்கள் கூறுவது உண்மை என்று நான் எங்ஙனம் அறிந்துகொள்வது?” என்று நீங்கள் கூறும் வார்த்தையின்பேரில் சந்தேகம்கொள்வது இயற்கையான ஒன்றுதான். பல லட்சக்கணக்கான ஆத்துமாக்களை கர்த்தரண்டை நடத்திய பிரபல சுவிசேஷகர் T.L. ஆஸ்பான் என்பவரைக் குறித்து ஒருமுறை நான் இவ்விதம் கேள்விப்பட்டேன். ஆரம்பத்தில் அவர் சொல்வதை ஜனங்கள்

விசுவாசிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார், ஆனால் அவர்களோ அதை விசுவாசியாமல், அவரைப் பார்த்து: “உம்மிடத்தில் உள்ள இந்த கருப்பு புத்தகம் மற்ற கருப்பு புத்தகங்களைக் காட்டிலும் எவ்வாறு மேலானது?” என்று கேட்டார்கள். அப்பொழுதுதான் T.L. ஆஸ்பான்: *“பைபிள் உண்மையென்று இந்த மக்களை விசுவாசிக்கச் செய்வது எப்படி? பைபிள் தேவனுடைய வார்த்தை என்று எனக்கு நன்றாகத் தெரியும், ஆனால் இந்த மக்களையும் அவ்வாறு நம்பும்படி செய்வது எப்படி?”* என்று யோசித்தார்.

தனது ஊழியத்தில் தோல்வியுற்றவராய், சோர்வடைந்தவராய் ஊழிய பணித்தளத்தைவிட்டு, வீடு வந்துசேர்ந்து, தேவனை தேட ஆரம்பித்தார். தம்முடைய இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையை பயன்படுத்த வேண்டும் என்று தேவன் ஆஸ்பானிடம் கூறினார். ஆம், அற்புதங்களும், அடையாளங்களும்தான் தேவனுடைய வார்த்தை உண்மையானது என்பதை உறுதிபடுத்தும், அதுவே மக்களுடைய வாழ்க்கையை மாற்றும். *“அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிபிக்கப்பட்டிருக்கிறீர்களே”* 1 பேதுரு 2:23 ல் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தைதான் ஜனங்களுடைய வாழ்க்கையை மாற்றுகிறது. ஆனால், தேவன்தான் அதன் மூலம் பேசுகிறார் என்று அவர்கள் விசுவாசிக்கும்படி செய்வது எப்படி? ஆம், அற்புதங்களின் நோக்கம் அதுவே. தேவனுடைய வார்த்தையை ஒருவருக்கு நாம் அறிவித்து, அந்த நபர் தன் வியாதியிலிருந்து சுகமடைவது தேவனுடைய சித்தம் என்று கூறி, இயேசுவின் நாமத்தில் தேவனுடைய வல்லமையை அந்த நபர்மீது கூறுகிறோம். அவர்களுடைய குருட்டுக் கண்கள் திறக்கப்படும்போது, செவிட்டுக் காதுகள் கேட்கும்திறனை பெறும்போது, அதுதான் தேவனுடைய கிரியை. அற்புதங்கள் ஜனங்களுடைய வாழ்க்கையை மாற்றப்போவது இல்லை, ஆனால் அற்புதங்கள், நீங்கள் பேசுகிற வார்த்தைகள் தேவனுடைய வார்த்தை என்பதை அவர்கள் விசுவாசிக்கும்படி செய்யும்.

இதற்கான வேதவாக்கிய உதாரணம் மாற்கு 2:1-9 வசனங்களில் உள்ளன. அவற்றை வாசிப்போமாக. *“சில நாட்களுக்குப்பின்பு அவர்(இயேசு) மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்; அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு; உடனே வாசலுக்கு முன்னும்*

*நிற்க இடம்போதாதபடிக்கு அநேகர் கூடி வந்தார்கள்; அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார். அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள். ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய்ச் சேரக்கூடாமல், அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அங்கே உட்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர்: இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்ற தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? ...நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட"* என்றார். (அடைப்புக் குறியில் உள்ளவை என் வார்த்தைகள்). உண்மையென்னவெனில், இரண்டுமே சாத்தியமானவைகள் அல்ல. ஒரு மனுஷன் பாவங்களை மன்னிப்பது சாத்தியமல்ல, வாத நோயில் உள்ள ஒரு மனிதனை இன்னொரு மனுஷன் சுகமாக்குவது என்பதும் சாத்தியமானது அல்ல. ஆகவே, இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை தேவனால் செய்யக் கூடும் எனில், மற்றொன்றையும் அவரால் செய்யக் கூடும்.

*"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்."* என்று மாற்கு 2:10-12 வசனங்களில் இயேசு கூறினார்.

இயேசு இங்கே மிகத் தெளிவாக: "பூமியிலே பாவங்களை மன்னிக்க (திமிர்வாதக்காரனுடைய பாவத்தை மன்னித்தார்) மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டு என்பதை

நீங்கள் அறியவேண்டும்" என்று கூறுகிறார். அவருடைய வார்த்தையில் அதிகாரம் உண்டு என்பதை ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக, சுகமாக்குதலை இங்கே அவர் உண்டுபண்ணினார், அதன்பிறகு பாவங்களை மன்னிக்கும் ஆவிக்குரிய காரியமும் நடைபெறுகிறது. தம்முடைய வார்த்தையை நிரூபிக்கும்படி இயேசு அற்புதங்களை நடப்பித்தார். இதே காரியம்தான் எபிரெயர் 2: 2-3 வசனங்களில், *"முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்"* என்று சொல்லப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய வார்த்தையை பரிசுத்தஆவியின் வல்லமையினால் உறுதிப்படுத்தினார் என்று இங்கே சொல்லப்பட்டுள்ளது. இதற்கு ஒப்பாக மாற்கு 16:20 ல், *"கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்"* என்று வாசிக்கிறோம். இங்கே நான் சொல்ல வருகிற குறிப்பு என்னவெனில், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு நீங்கள் அவருடைய இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையை பயன்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். பேசுகிறது தாம்தான் என்பதை நிரூபிக்கும்படியாக பரிசுத்தஆவியின் வரங்களின் மூலம் உண்டாகும் அற்புதங்களைப் பயன்படுத்துகிறார். இறுதியாக ஜனங்கள் தங்கள் இருதயங்களில் விடுதலை பெற்றிருக்கவேண்டும், சில நேரங்களில் சிலருடைய இருதயம் இருக்கிற நிலைமையைப் பொறுத்து அவர்கள் சரீரம் மற்றும் உணர்வுகளை குணமாக்குவதன் மூலமாகவும் தேவன் கிரியை செய்வார். அப்படிப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து, அந்த நபர் விடுதலையடையும்படி நீங்கள் பார்ப்பீர்களெனில், கர்த்தர் அவர்களுடைய மீதமுள்ள வாழ்க்கையைத் தொடும்படி அவர்கள் அனுமதிப்பார்கள், அதன்பிறகு எழுத்தின்பிரகாரம் அவர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் கர்த்தருக்கு ஒப்புவிப்பார்கள்.

கொரிந்தியர்களை தான் முதலாவது எப்படி அனுகினார் என்பதைக் குறித்து. 1 கொரிந்தியர் 2:1-5 வசனங்களில், பவுல் இவ்வாறு கூறுகிறார். *"சகோதரரே, நான் உங்களிடத்தில்*

*வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது."* எதற்காக தாம் வரவில்லை என்பதைக் குறித்த காரணத்தை பவுல் இங்கே தெளிவாகக் கூறுகிறார். அவர்களுடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்தின்மேல் நில்லாமல், தேவனுடைய பெலத்தின்மேல் நிற்கும்படிக்கு அவருடைய வார்த்தைகள் பரிசுத்தஆவியின் வல்லமையினால் நிறைந்திருந்ததாகக் கூறுகிறார்.

இந்த விஷயத்தில் கிறிஸ்தவம் அருமையான தர்க்கத்தை / அர்த்தத்தை உடையது. சத்தியத்தை நீங்கள் ஒருமுறை அறிந்து கொள்வீர்களெனில், இவ்வளவு நாளாக ஏன் இதை நான் அறியவில்லை என்றும், ஏன் மற்றவர்கள் இதைத் தழுவிக்கொள்ள தயங்குகிறார்கள் என்றும் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். தேவன் இன்றும் ஜீவிக்கிறார், தம்முடைய வார்த்தையில் அவர் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறபடியே வல்லமையுள்ளவராக தம்மை வெளிப்படுத்த விரும்புகிறார். *"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"* என்று எபிரெயர் 13:8 கூறுகிறது. இயேசு இந்த பூமிக்கு வந்தார், அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மூலமாக அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதை மக்கள் அறிந்துகொண்டார்கள். *"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்."* என்று அப்போஸ்தலர் 10:38 கூறுகிறது. அவருடைய வார்த்தைகள் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது, அவர்மூலம் நடைபெற்ற அற்புதங்கள் அவருடைய செய்தியைக் கேட்கும்படி மக்களை அழைக்கும் மணியோசையாக அமைந்திருந்தன, இயேசுவின் ஊழியத்தைக் கண்ட மக்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்று சுவிசேஷத்தில்

பல வசனங்கள் கூறுகின்றன. மக்களுடைய வாழ்க்கை மாறும்படியாக இயேசு பரிசுத்தஆவியின் வல்லமையை பயன்படுத்தியிருப்பார் எனில், அவர் செய்ததைவிட சிறப்பாக (வேறுவழியில்) செயல்பட முடியும் என்று நம்மைக் குறித்து நாம் எப்படி நினைக்கக்கூடும்? தம்முடைய செய்தியை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு, மக்களை கவரும்படியாக, அவரே அற்புதங்களைப் பயன்படுத்தியிருக்கும்போது, இயற்கைக்கப்பாற்பட்ட தேவனுடைய வல்லமை நம் ஊழியத்தில் செயல்படாமல், உலகத்தை நாம் எவ்வாறு தேவனண்டை இழுக்க முடியும்? அற்புதங்கள் தேவனை மகிமைப்படுத்துகின்றன என்பதே சத்தியம். அவைகள் ஜனங்களை இழுக்கும் மணியோசை. மதிய உணவுக்கு அழைக்கும் மணியோசையைப் போன்றவை அற்புதங்கள் - உணவுதான் உங்களை திருப்திபடுத்தும். ஆனால் அந்த உணவு பக்கம் உங்கள் கவனத்தைத் திருப்புவது மணியோசையே. மணியோசை இல்லையெனில், சிலர் உணவை இழக்கக்கூடும். தேவனுடைய அற்புத வல்லமை இல்லாவிட்டால், தேவன் என்று ஒருவர் உண்டு என்றும், அவர் அவர்களுடைய இருதயங்களை மாற்ற முடியும், அவர்களுடைய பாவங்களை அவர் மன்னிக்க முடியும் என்ற உண்மையைஅவர்கள் இழக்கக்கூடும்.

தேவன் நம் மூலமாக பாய்ந்துசென்று மற்றவர்களுடைய வாழ்க்கையில் தம்முடைய வல்லமையை செயல்படுத்த விரும்புகிறார் என்ற உண்மையை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். “நான் ஒரு நபருக்காக ஜெபித்து, அவர் சுகமடையாமல் போனால் என்ன செய்வது என்று நான் பயப்படுகிறேன்” என்று ஒருவேளை நீங்கள் சொல்லக்கூடும். ஒரு உண்மையை நீங்கள் அறிய வேண்டும். ஒரு நபருக்காக நீங்கள் ஜெபிக்கும்போது, அற்புதம் நிகழ்ந்து, அந்த நபர் விடுதலையடைந்தால், தேவன்தான் கிரியை செய்தார், அதற்குக் காரணம் நீங்கள் அல்ல; அவ்விதமாகவே, ஒரு நபர் விடுதலையடையாவிட்டால், அதற்கான குற்றம் உங்கள்மேல் சுமராது. காரணம், நீங்கள் ஜெபிக்கிறீர்கள் அவ்வளவுதான் உங்கள் வேலை; சுகமாக்குகிறவர் தேவனே, ஆனால் அதை அவர் உங்கள் மூலமாகவே செய்கிறார். அற்புதமான வழியில் தேவன் உங்களைப் பயன்படுத்த விரும்புகிறார். மற்ற தேவமனுஷர்கள் மூலமாக தேவன் எவ்விதம் கிரியை செய்தார் என்பதை அறிய தேவனுடைய வார்த்தையை நீங்கள் நன்றாக படிக்க வேண்டும். படித்து அதை உங்கள்

வாழ்க்கையிலும் பயிற்சி செய்யுங்கள். அற்புதமான, தேவனுடைய இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமை இன்று உங்கள் மூலமாக பாய்ந்துசெல்ல அனுமதியுங்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. அற்புதங்கள் என்பது என்ன?

2. வாசிக்க: மாற்கு 2:10-12. இயேசு செய்த அற்புதம் அவருக்கு எதைச் செய்ய அதிகாரம் உண்டென்பதை நிரூபித்தது?

   **மாற்கு 2:10-12** - *"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, (11) திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (12) உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிச் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்."*

3. வாசிக்க: மாற்கு 16:15-18. விசுவாசிகளாக நாம் என்ன செய்ய வேண்டும்?

   **மாற்கு 16:15-18** - *"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (16) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (17) விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்;நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; (18) சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்."*

4. வாசிக்க: அப்போஸ்தலர் 8:5,12. ஜனங்கள் பார்த்தவை என்ன? அதற்கு அவர்கள் எவ்விதம் பிரதியுத்தம் கொடுத்தார்கள்?

**அப்போஸ்தலர் 8:5-8** - *"அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். (6) பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். (7) அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். (8) அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று."*

5. வாசிக்க: அப்போஸ்தலர் 3:12. "தன்னுடைய சொந்த பரிசுத்தம் அற்புதங்களை உண்டுபண்ணுவது குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு என்ன கூறினார்?"

**அப்போஸ்தலர் 8:12** - *"தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்."*

**அப்போஸ்தலர் 3:12** - *"பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: "இஸ்ரவேலரே, இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?"*

6. வாசிக்க: அப்போஸ்தலர் 3:16. அற்புதங்கள் எவ்விதம் நிகழுகின்றன?

**அப்போஸ்தலர் 3:16** - *"அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது, அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது."*

7. அப்போஸ்தலர்கள் மூலமாக நடைபெறாத அற்புத சம்பவங்கள் புதிய ஏற்பாட்டில் நடைபெறுகின்றனவா?

8. வாசிக்க: 1 கொரிந்தியர் 1:7. அற்புதங்களை செய்யும் சக்தி வரங்கள் எப்பொழுது ஒழியும்?

**1 கொரிந்தியர் 1:7 -** *"அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்."*

# பதில் ஆதாரங்கள்

1. அற்புதங்கள் என்பது என்ன?

***தெய்வீக வல்லமையின் வெளிப்பாடு என்று கருதப்படுகிற இயற்கைக்கப்பாற்பட்ட/அல்லது வழக்கத்திற்கு மாறான சம்பவம். மேலும், இயற்கை விதிகளுக்கு மேலாக குறுக்கிட்டு செயல்படும் இயற்கைக்கப்பாற்பட்ட தேவனுடைய வல்லமையின் செயல்.***

2. வாசிக்க: மாற்கு 2:10-12. இந்த வசனங்களில், இயேசு செய்த அற்புதம் அவருக்கு எதைச் செய்ய அதிகாரம் உண்டென்பதை நிரூபித்தது?

***பாவங்களை மன்னிக்க.***

3. வாசிக்க: மாற்கு 16:15-18. விசுவாசிகளாக நாம் என்ன செய்ய வேண்டும்?

***சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், மனந்திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், நவமான பாஷைகளில் பேசுங்கள், வியாதிஸ்தரை சுகமாக்குங்கள்.***

4. வாசிக்க: அப்போஸ்தலர் 8:5,12. ஜனங்கள் பார்த்தவை என்ன? அதற்கு அவர்கள் எவ்விதம் பிரதியுத்தம் கொடுத்தார்கள்?

***அவர்கள் அற்புதங்களைப் பார்த்தார்கள் (வசனம் 7), இயேசுவை விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்.***

5. வாசிக்க: அப்போஸ்தலர் 3:12. “தன்னுடைய சொந்த பரிசுத்தம் அற்புதங்களை உண்டுபண்ணுவது குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு என்ன கூறினார்?”

***அந்த சப்பாணி மனிதன் சுகம் பெற்றதற்கு தன்னுடைய சக்தியோ, பக்தியோ காரணம் அல்ல; தேவனே அதைச் செய்தார்.***

6. வாசிக்க: அப்போஸ்தலர் 3:16. அற்புதங்கள் எவ்விதம் நிகழுகின்றன?

***இயேசுவின் நாமத்தினால், அவர்மேல் வைக்கும் விசுவாசத்தால்.***

7. அப்போஸ்தலர்கள் மூலமாக நடைபெறாத அற்புத சம்பவங்கள் புதிய ஏற்பாட்டில் நடைபெறுகின்றனவா?

***ஆம், கிறிஸ்துவைப் பின்பற்றின பெயர்அறியப்படாத ஒருவர் மூலமாக (மாற்கு 9:38-39), அனனியா (அப். 9:10-18).***

8. வாசிக்க: 1 கொரிந்தியர் 1:7. அற்புதங்களை செய்யும் சக்தி வரங்கள் எப்பொழுது ஒழியும்?

***கர்த்தராகிய இயேசு வரும்போது, அவர் திரும்பி வரும்போது.***

# பாடத்திலிருந்து இன்னும் சில சேர்க்கை வசனங்கள்

**மாற்கு 9:38-39** - *"அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாத ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான். (39) அதற்கு இயேசு: அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்."*

**அப்போஸ்தலர் 9:10-18** - *"தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி, அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். (11) அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்; (12) அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார். (13) அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். (14) இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். (15) அதற்குக் கர்த்தர்: நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். (16) அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன். (17) அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும்*

பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். (18) உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள்போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான்."

பாடம் 4

# தேவபக்தியான உறவுகளின் வல்லமை

*டான் க்ரோ*

தேவபக்தியான உறவுகளில் காணப்படும் வல்லமை குறித்து இன்று நாம் தியானிப்போம். இதைக் குறித்து நீங்கள் நினைக்கும்போது, வேதாகமம் முழுவதிலும் இந்த பாடம் குறித்துப் பேசப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, "Church" என்பதன் எபிரெய வார்த்தை *"Ekklesia"*, இதனர்த்தம், "a called out group - வெளியே அழைக்கப்பட்ட ஒரு கூட்டம்" என்பதாகும். தேவனுடைய வார்த்தையை நீங்கள் நன்கு கவனிக்கும்போது, சர்ச் எனப்படுகிற சபை / தேவ ஜனங்கள், ஒன்றுகூடி ஒருவரையொருவர் சந்திக்கும்படி உற்சாகப்படுகின்றனர். ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணவும், தினமும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். வேதாகமத்தில் "மூப்பர்" என்ற வார்த்தையை நீங்கள் காணக்கூடும், பல வேதவசனங்களில் இந்த வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது, வயதில் மூத்தவர், சுபாவத்தில் முதிர்ச்சியடைந்தவர், கிறிஸ்துவின் ஜீவனில் நடக்கிறவர், தனது குடும்பம் மற்றும் திருமண வாழ்வில் ஜெயஜீவியம் செய்கிற நபரைத்தான் இந்த வார்த்தை குறிக்கிறது. திருமண வாழ்வில் எனக்கு ஏதாவது பிரச்சினை காணப்படும்போது, தனது நீண்டகால வாழ்வில் தேவபக்தியான ஞானத்தைப் பெற்றுக்கொண்ட தேவபக்தியானஒரு மனிதனிடத்தில்தான் ஆலோசனைக்கு நான் செல்வேன்.

வேதத்தில் கிறிஸ்துவின் சரீரம் என்று கூறப்பட்டிருப்பது, நமது மாம்ச சரீரத்திற்கு ஒப்பாகவே விவரிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணரவேண்டும். அதில் கைகள், கண்கள், காதுகள் மற்றும் வித்தியாசமான அவயவங்கள் உள்ளன.

ஆம், நாம் ஒவ்வொருவரும் ஒன்று சேர்ந்து அனைத்து அவயவங்களாய் இருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறபடியால், ஒருவரிலிருந்து ஒருவர் பெலத்தைப் பெறுகிறோம். ஒவ்வொரு திசுக்களுக்கும், சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களுக்கும் தனித்தனி விசேஷங்களும், சொந்தமான திறமைகளும், சுயமான பெலம், ஞானத்தை அருளும் தன்மைகளும் உள்ளன.

யாக்கோபு 5:16 ல், வேதம் இவ்வாறு கூறுகிறது, *"நீங்கள் சொஸ்மடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."* தேவபக்தியான உறவுகளில் உள்ள வல்லமைக்கு இந்த வசனம் ஒரு உதாரணம். கிறிஸ்துவின் சரீரத்தில் ஏதோ ஒன்று குறைவுபடுகிறது. விசுவாசியின் ஆசாரியத்துவத்தை முக்கியப்படுத்தி, நேராக தேவனிடம் செல்வதைக் குறித்து அதிகம் கூறுகிற நாம், ஒருவரிடம் ஒருவர் செல்வதை தவிர்ப்பதன் மூலம் சில காரியங்களை நாம் இழந்துவிடுகிறோம். ஒருவர் குற்றங்களை ஒருவரிம் அறிக்கையிடுவதைக் குறித்து வேதம் பேசுகிறது. Dr. லோரன் லூயில் என்ற ஒரு நண்பர் எனக்கு இருக்கிறார். அவர் வயதான ஒரு கண்ணியமான மனிதர், நாங்கள் இருவரும் சந்தித்து பேசி செலவழித்த நேரங்கள் அதிகம். அவர் ஒரு கிரேக்க வேத பண்டிதர், நேரடியாகவே கிரேக்க வேதத்தையே அவர் வாசிப்பார். வேதவசனத்தில் ஏதாவது ஒரு விளக்கத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை எனில், நான் அவரிடம் சென்று, அதை குறித்து கிரேக்க மொழி வேதாகமத்தில் என்ன கூறப்பட்டுள்ளது என்று கேட்பேன். கிரேக்கத்தின் காலங்களைக் குறித்தும் நான் அவரிடத்தில் கேட்பேன், வேதாகம பாடங்களில் அவர் எனக்கு மிகவும் உதவி செய்திருக்கிறார். பல மணி நேரங்களை இந்த மனிதோடு நான் செலவழித்திருக்கிறேன். அவர் ஞானமுள்ள ஒரு மனிதர், வெற்றிகரமான திருமண வாழ்க்கையுடையவர். நாம் அனைவரும் நம்முடைய குற்றங்களை அறிக்கையிட வேண்டிய நேரங்கள் உள்ளன. நம்முடைய பாவங்களை நாம் தேவனிடம்தான் அறிக்கையிட வேண்டும் என்பதை நான் அறிவேன், நம் பாவங்களை மன்னிக்க மற்றவர்களுக்கு அதிகாரம் உண்டு, ஆகவே யாரோ ஒருவரிடம் உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள் என்று நான் சொல்லவில்லை, ஏனெனில் பாவமன்னிப்பு பெற

நேரடியாக நாம் தேவனிடம்தான் செல்லவேண்டும். ஆனால், நம் வாழ்க்கையில் ஒரு கணக்கொப்புவிப்பு நமக்குத் தேவை.

தேவபக்தியான உறவுகளின் பெலம் எதில் உள்ளதென்றால், தேவனைத் தேடும்படி ஒருவர் நம்மை உற்சாகப்படுத்தும்படி நாம் ஒருவருக்கொருவர் கணக்கொப்புவிக்கிறவர்களாய் இருக்கவேண்டும். சபை கூடிவருதலை விட்டுவிடாதபடிக்கு நாம் ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும், தன் இருதயத்தைக் கடினப்படுத்தி பாவத்தில் விழுந்துவிடாதபடிக்கு ஒருவரையொருவர் எச்சரிக்க வேண்டும் என்று வேதத்தில் எபிரெய நிருபத்தில் நாம் வாசிக்கிறோம். இவையனைத்தும் தேவபக்தியான உறவுகளின் முக்கியத்துவத்தைக் குறித்துப் பேசுகின்றன.அதே நேரம், தேவபக்தியற்ற உறவுகள் நம் மனதையும், சிந்தனையையும் எவ்வாறு பாதிக்கும் என்பதைக் குறித்தும் வேதம் நம்மை எச்சரிக்கிறது. அதன் விளைவுகளை நாம் அறிவதற்கு முன்னதாகவே, நாம் செய்யக்கூடாத காரியங்களைச் செய்யும்படி அதற்குள் அது நம்மை நடத்திவிடும், தேவபக்தியான உறவுகளுக்கு நடுவாக நாம் நம்மை வைத்துக்கொள்ளாததேஅதன் காரணமாகும் (நீதி. 11:14; 13:20 மற்றும் 1 கொரி. 15:33). *“நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது?”* (2 கொரி. 6:14) என்று வேதம் கூறுகிறது.

நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது, தேவபக்தியான உறவுகளால் சூழப்பட்டிருங்கள், எதிர்மறையான வழியில் உங்களை நடத்துகிற காரியங்களிலிருந்து விலகி ஓடுங்கள். நம்மை இன்னும் சீர்ப்படுத்தி, கூர்மையாக்குகிற தேவபக்தியான விசுவாசிகளை நம் வாழ்க்கையில் கொண்டிருப்பது மிகவும் முக்கியம் (நீதி. 22:17). தொடர்ந்து நீங்கள் இந்தக் காரியங்களை தியானியுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.‘

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: 1 கொரிந்தியர் 15:33. உறவுகளைக் குறித்து இந்த வசனம் நமக்கு எதைப் போதிக்கிறது?

   **1 கொரிந்தியர் 15:33** - *"மோசம்போகாதிருங்கள், ஆகாத சம்பாஷனைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்."*

2. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:12. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்து இந்த வசனம் நமக்கு எதைக் காண்பிக்கிறது?

   **1 கொரிந்தியர் 12:12 -** *"எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகச் கிறிஸ்துவும் இருக்கிறார்."*

3. வாசிக்க: எபிரெயர் 10:24 - எபிரெயர் 10:24 லிருந்து, தேவபக்தியான உறவுகளைக் குறித்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

   **எபிரெயர் 10:24-25** - *"மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, (25) சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்."*

4. வாசிக்க: எபிரெயர் 15:25. உறவுகளைக் குறித்து இந்த வசனத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

5. வாசிக்க: நீதிமொழிகள் 5:22.23. தேவபக்தியற்ற உறவுகளிலிருந்து நாம் நம்முடைய இருதயத்தை ஏன் காத்துக்கொள்ள வேண்டும்?

**நீதிமொழிகள் 5:22.23** - *“துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும்; தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான். அவன் புத்தியைக் கேளாததினால் மடிந்து, தன் மதிகேட்டின் மிகுதியினால் மயங்கிப் போவான்.”*

6. வாசிக்க: 2 தீமோத்தேயு 2:22. யாரோடுகூட நாம் நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும் சமாதானத்தையும் தொடர வேண்டும்?

**2 தீமோத்தேயு 2:22 -** *“அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.”*

7. வாசிக்க: எபிரெயர் 13:7. நம்முடைய வாழ்வில் நாம் யாரை நினைத்து, அவர்களை நம் மாதிரியாக்க் கொள்ள வேண்டும்?

**எபிரெயர் 13:7 -** *“தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து, உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.”*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: 1 கொரிந்தியர் 15:33. உறவுகளைக் குறித்து இந்த வசனம் நமக்கு எதைப் போதிக்கிறது?

***கெட்ட சகவாசம், தீயஉறவுகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.***

2. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:12. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்து இந்த வசனம் நமக்கு எதைக் காண்பிக்கிறது?

***மாம்ச சரீரத்தைப் போலவே, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்ற அவயவங்களான உறுப்பினர்கள் நமக்குத் தேவை***

3. வாசிக்க: எபிரெயர் 10:24. எபிரெயர் 10:24 லிருந்து, தேவபக்தியான உறவுகளைக் குறித்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

***தேவபக்தியான உறவுகளில் இருப்பவர்கள் மற்றவர்கள்மேல் அன்புக்கும் நற்கிரியைக்கும் ஏவப்பட வேண்டும்.***

4. வாசிக்க: எபிரெயர் 15:25. உறவுகளைக் குறித்து இந்த வசனத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

***நாம் ஒருவரையொருவர் சந்திக்க வேண்டும், ஐக்கியம்கொள்ள வேண்டும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தவேண்டும்.***

5. வாசிக்க: நீதிமொழிகள் 5:22,23. தேவபக்தியற்ற உறவுகளிலிருந்து நாம் நம்முடைய இருதயத்தை ஏன் காத்துக்கொள்ள வேண்டும்?

***மதிகேட்டின் மிகுதியினால் மதிமயங்கிப்போகாதபடிக்கு (வசனம் 23)***

6. வாசிக்க: 2 தீமோத்தேயு 2:22. யாரோடுகூட நாம் நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும் சமாதானத்தையும் தொடர வேண்டும்?

***சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே.***

7. வாசிக்க: எபிரெயர் 13:7. நம்முடைய வாழ்வில் நாம் யாரை நினைத்து, அவர்களை நம் மாதிரியாகக் கொள்ள வேண்டும்?

***தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து, உங்களை நடத்தினவர்களை.***

# பாடம் 5

# உபத்திரவம்

## *டான் க்ரோ*

மத்தேயு 10:16-23 தமது சீஷர்கள் எதிர்ப்புகளை சந்திக்க ஆயத்தமாக வேண்டுமென்று இயேசு விரும்பினார். எதிர்ப்புகள் வரப்போகின்றன என்பதை அவர்கள் அறியவேண்டுமென விரும்பினார். தேவபக்தியாய், கிறிஸ்துவை மையமாகக்கொண்டு வாழ்கிறவர்கள் உபத்திரவப்படுவார்கள் (2 தீமோ. 3:12). அது ஏதோ நீங்கள் கடிந்துகொள்ளவேண்டிய ஒன்று அல்ல. அதன் பின்னால் எதிரி இருக்கக்கூடும், ஆனால், உபத்திரவம் என்பது நீதிக்காக நீங்கள் நிற்கிறதில் ஒரு பங்கு. கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்கிறவர்கள் உபத்திரவப்படுவார்கள் என்று வேதம் கூறுகிறதே. *“இதோ, ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல நான் உங்களை அனுப்புகிறேன்”* (மத்தேயு 10:16) என்று சொல்லி இயேசு தமது சீஷர்களை அதற்கென்று ஆயத்தப்படுத்தினார். *“இதோ”* என்ற வார்த்தையின் அர்த்தம், “என் பிள்ளைகளே, கவனியுங்கள். நீங்கள் இதை நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல நான் உங்களை அனுப்புகிறேன்.” ஆடுகள் என்பவை தற்பாதுகாப்பு இல்லாதவை, அவைகள் பிறரை சார்ந்து வாழும் மிருகம். ஆடுகளுக்குக் கோரை / நச்சுப் பற்கள் கிடையாது, சர்ப்பத்தைப்போல நஞ்சு கிடையாது - அதற்கு எந்த பாதுகாப்பும் கிடையாது. அதற்கு இருக்கும் ஒரே பாதுகாப்பு, அதன் மேய்ப்பன்தான்.

ஓநாய்களை ஆடுகள் அருகே வராதபடிக்கு பாதுகாத்துக்கொள்ள வேண்டியதே மேய்ப்பனின் கடமை, ஆனால் இயேசு இங்கே அதற்கு முற்றிலும் எதிர்மாறான ஒரு காரியத்தைச் சொல்லுகிறார். “ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல நான் உங்களை அனுப்புகிறேன்.”

இது ஆச்சரியமான ஒரு வார்த்தை அல்லவா! எதிர்ப்புகளை சந்திக்க அவர்கள் மனரீதியில் ஆயத்தமாக வேண்டுமென்பதற்காகவே இப்படி கூறுகிறார். "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்று எபேசியர் 6:12 ல் வாசிக்கிறோம். எதிர்ப்புகள் இருக்கும். உபத்திரவம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதி என்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாயிருங்கள்" (மத்தேயு 10:16) என்று கூறுவதன் மூலம் அதற்கு உங்களை ஆயத்தப்படுத்துகிறார். "வினாவுள்ளவர்களாயிருங்கள்" என்றால், அனைத்து சூழ்நிலைகளிலும் ஞானமுள்ளவர்களாயிருங்கள் என்று பொருள். தேவையில்லாமல் பிரச்சினைகளை நீங்கள் தூண்டிவிட மாட்டீர்கள், உங்களோடுகூட நீங்கள் ஞானத்தைக் கொண்டு செல்வீர்கள். சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாயும், புறாக்களைப்போல கபடற்றவர்களாயும் இருங்கள்.

அதன்பிறகு, *"மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"* (மத்தேயு 10:17) என்று கூறுகிறார். காரணம், சாத்தான் மனிதர்களைப் பயன்படுத்தப் போகிறான். *"கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகார பிரபு"* என்று எபேசியர் 2:2 ல் வாசிக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் நோக்கத்தையும், தேவனுடைய வார்த்தையையும் எதிர்க்கும்படியாக சாத்தான், மனிதர்கள் நம்மை எதிர்க்கும்படி அவர்களை உபயோகப்படுத்தப் போகிறான். ஆகவே, *"மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெபஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்"* (மத். 10:17). பவுல் இவ்வாறு கூறினார், *"இயேசுகிறிஸ்துவினிமித்தம், இயேசுகிறிஸ்துவின் செய்தியினிமித்தம், சுவிசேஷ செய்தியினிமித்தம் வாரினால் அடிபட்டேன், யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்."* (2 கொரி. 11:23 - 24). நீங்கள் அதிபதிகளுக்கு முன்பாக கொண்டு செல்லப்படுவீர்கள் - இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை எதிர்க்கும்படியாக சில நேரங்களில் சாத்தான் அரசாங்கத்தைக்கூட பயன்படுத்துவான். அவர்களுக்குச் சாட்சியாக அல்லது அவர்களுக்கு எதிராக,

இயேசுவினிமித்தம் நீங்கள் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு செல்லப்படுவீர்கள்.

சுவிசேஷம் அறிவிப்பதைக் குறித்து வேதபாடம் ஒன்றை நான் எடுத்துக்கொண்டிருந்தேபோது, இழந்துபோனவர்களை சந்திப்பதற்கு சுவிசேஷ நிருபங்கள் மற்றும் நமது தனிப்பட்ட சாட்சியை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து மாணவர்களுக்கு நான் விளக்கிக் காண்பித்துக் கொண்டிருந்தேன். ஒருவருக்கு நான் சுவிசேஷம் அறிவித்து,, இன்னும் ஐம்பது முதல் நூறு பேருக்கு அதை அனுப்பி வைத்தேன். ஒரு சில நாட்களுக்குப் பிறகு Mary Anne என்ற பட்டணத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. “இதைச் செய்த உன்னை நான் சும்மாவிடப் போவதில்லை, இயேசுகிறிஸ்துவைக் குறித்து நீ எனக்கு எப்படி சொல்லலாம்? இதிலிருந்து நீ தப்ப முடியாது, என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டார்கள். அதற்கு நான்: “நல்லது, போன் புத்தகத்திலிருந்து உங்கள் பெயரை நான் அறிந்துகொண்டேன்” என்றேன். அந்தப் பெண்மணியோ: “நீ ஒரு பொய்யன், என் பெயரும், என் விலாசமும் போன் புத்தகத்தில் இல்லை” என்று கூறி, போலீஸ் நாளைய தினம் உம்மைத் தொடர்புகொள்வார்கள் என்று கூறி வைத்தார்கள். *“வேதாகமம் கூறுவது இத்தனை உண்மையோ?”* என்று நான் எனக்குள்ளே யோசித்தேன். அப்படியே அடுத்த நாள் போலீஸ் என்னோடு தொடர்புகொண்டார்கள். என்னை விசாரிப்பதற்காக அவர்கள் இரண்டு மணிநேரத்திற்கும் அதிகமாக நேரம் செலவழித்தார்கள்.

நான் சொல்வது இன்னதென்று உங்களுக்குத் தெரிகிறதா? சாலைகளில் குற்றவாளிகள் இருக்கும்போதுதான், போலீஸ் தங்கள் இரண்டு மணி நேரத்தை செலவிடுவார்கள். ஆனால் என்னிடத்தில் ஏன்? இயேசுகிறிஸ்துவினிமித்தம், சுவிசேஷத்தினிமித்தம். தேவனுடைய வார்த்தை உண்மையிலே சத்தியமா? ஆம், நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி நின்றால், இயேசுவை அறிவிப்பதற்கு நீங்கள் தைரியம் உள்ளவர்களாய் இருந்தால், மனிதர் முன்பாக நீதியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு நீங்கள் தைரியமுள்ளவர்களாய் இருந்தால், அங்கே எதிர்ப்புகள் காணப்படும். பொல்லாத சக்திகளும் உள்ளன, நல்ல சக்திகளும் உள்ளன. அவற்றைச் சந்திப்பதற்கு தம்முடைய சீஷர்கள் ஆயத்தமானவர்களாய் இருக்கவேண்டுமென்று இயேசு விரும்பினார்.

*“அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்”* என்று மத்தேயு 10:19 ல் இயேசு கூறினார். தேவனுடைய ஆவி உங்களோடு இருக்கும்போது, வேதத்தில் உள்ள ஸ்தேவானுக்கு அருளப்பட்ட ஞானத்தைப் போல உங்களுக்கும் அருளப்படும். அவன் பேசின ஞானத்தை மக்கள் எதிர்க்கக் கூடாதிருந்தது. *“என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்”* என்று மத்தேயு 10:22 - 23 வசனங்களில் இயேசு கூறினார். நீங்கள் வேதவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் இராமல், அதன்படி செய்கிறவர்களாயும் இருப்பீர்களெனில், நீதிக்கு எதிராக, இயேசுகிறிஸ்துவின் சித்தத்திற்கு எதிராக எதிர்ப்புகள் இருக்கும்.

சில நாட்களுக்குமுன் நான் ஒரு பூங்காவில் இருந்தேன், அங்கே இருந்த ஊஞ்சலில் வயதான ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தார். அவர் கள்ளங்கபடற்றவர், அவர் என்னை எதுவும் சொல்லமாட்டார் என்று நினைத்து, நானும் அவரோடுகூட அந்த ஊஞ்சலில் உட்காரலாமா என்று கேட்டு, உட்கார்ந்து அவரோடு பேச ஆரம்பித்தேன். அவருடைய பெயர் ஜேன். “சரி, நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?” என்று கேட்டேன். “ஓ, நான் வயதான ஒரு பெண், வேலையிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டேன், எனவே தற்பொழுது நான் எந்த வேலையும் செய்யவில்லை” என்று அவர்கள் கூறினார்கள். சரி. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று அவர் என்னைக் கேட்டார். நான் பாரம்பரிய சபைசாராத ஒரு ஊழியத்தில் ஊழியம் செய்கிறேன் என்றேன். உடனே அந்தப் பெண்ணின் முகரூபம் மாறினது. *“தேவனைப் பற்றி எனக்கு எதுவும் நீங்கள் சொல்லக்கூடாது, இயேசுவைப் பற்றி சொல்லக்கூடாது”* என்ற சத்தமிட்டார். ஓ ஜேன் அவர்களே, நீங்கள் அவ்வாறு பேசக்கூடாது என்று நான் கூறினேன். உடனே அந்தப் பெண்மணி: இயேசு மாத்திரம் என் கண்முன் இப்பொழுது இருந்தால், அவருடைய முகத்தில் நான் துப்புவேன் என்று அவர் கோபத்தில் கொப்பளித்தார். ஜேன் நீங்கள் அப்படிப் பேசக் கூடாது, நீங்கள் இப்படிப் பேசுவதற்கு ஒருவேளை திருச்சபையில் அநேக மக்கள் உங்களை காயப்படுத்தியிருக்கக்கூடும், சரி என் குடும்பத்தைப் பற்றி நான் சற்று கூறட்டும் என்றேன். அதற்கு அவர்: இல்லை

நீங்கள் சொல்ல வேண்டாம், அப்படியே இயேசு உங்கள் குடும்பத்திற்கு என்ன செய்தார் என்பதை சொல்லுவீர்கள், நீங்கள் சொல்வதை கேட்க நான் தயாராக இல்லை, நீங்கள் அதைப் பற்றி பேசவே கூடாது என்று சத்தமிட்டார். அதற்கு நான்: ஜேன், இயேசுவைப் பற்றி நான் கொஞ்சம் கூறுகிறேன், அதை தயவுசெய்து கேளுங்கள் என்றேன். "வாயை மூடு என்று நான் உனக்குச் சொல்லுகிறேன்" என்று கூறி, சற்று தொலைவில் அவருடன் கொண்டு வந்திருந்த ஒரு சிறு நாயை அழைத்துக்கொண்டு வேகமாக போய்விட்டார்.

பாருங்கள், அவருக்குள் கீழ்ப்படியாமையின் ஆவி குடிகொண்டிருந்தபடியால், அவர் தனது நிதானத்தை இழந்திருந்தார், அவர் சாத்தானால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார். சுவிசேஷம் கூறும்போது யாரும் என்னைப் பார்த்து சத்தம்போட மாட்டார்கள், என் முகத்திற்கு நேராக யாரும் துப்ப மாட்டார்கள் என்று நான் நினைத்திருந்தேன். எனினும், எனக்குள் இயேசுவின் மனதுருக்கம்தான் இருந்தது, எனவே ஜேன்மீது எனக்கு வெறுப்பு வரவில்லை, அவர்மீது அன்புதான் வந்தது. அவர் நிதானம் இழந்திருந்தார், நானோ முழு நிதானத்தில் இருந்தேன். நான் வீடு திரும்பிய உடன்: "ஆண்டவரே, நடந்ததெல்லாம் உமக்குத் தெரியும், நான் நிதானமாய் இருந்ததே பெரிய அற்புதம். ஒருவர் என் முகத்திற்கு முன்பாக இருக்கும்போது, அவர்மீது எனக்கு அன்பையும், மனதுருக்கத்தையும் கொடுக்கிறதற்காக ஸ்தோத்திரம் என்று கூறினேன்."

இயேசுவின் நாமத்தை முன்னிட்டு நீங்கள் வெளியே செல்லும்போது உபத்திரவமும், எதிர்ப்புகளும் வரும். நான் புறக்கணிக்கப்படும்போது, மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாதபோது நமக்கு தைரியத்தைத் தரும் அதே ஆவியானவர், எந்த சூழ்நிலையிலும் நமக்கு ஆறுதலையும் பெலனையும் அருளுவார்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: 2 தீமோத்தேயு 3:12. தேவபக்தியாய் வாழ்கிறவர்கள் எதை அனுபவிப்பார்கள்?

 **2 தீமோத்தேயு 3:12** - *"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."*

2. "உபத்திவம்" இதை எவ்வாறு வர்னிப்பீர்கள்?

3. வாசிக்க: மாற்கு 4:16-17. என்ன காரணத்திற்காக உபத்திரவம், துன்பம் வருகின்றன?

 **மாற்கு 4:16-17** - *"அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும், (17) தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்கால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள்.வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்வர்கள்."*

4. வாசிக்க: "அப்போஸ்தலர் 8:1.4. எருசலேமில் உண்டான துன்பத்தின் விளைவு என்ன?

 **அப்போஸ்தலர் 8:1.4** - *"அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்."*

5. வாசிக்க: மத்தேயு 5:10-12. ........................................................ நிமித்தம் துன்பப்படுகிறவர்கள்மேல் ஆசீர்வாதம் இருக்கும்.

 **மத்தேயு 5:10-12** - *"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. (11) என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித*

*தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். (12) சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."*

6. வாசிக்க: மத்தேயு 5:12. விசுவாசிகள் நீதியினிமித்தம் துன்பப்படும்போது, எதை அவர்கள் எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்?

7. வாசிக்க: அப்போஸ்தலர் 9:4-5. சவுல் யாரைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்தான்?

**அப்போஸ்தலர் 9:4-5 -** *"அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்."*

8. வாசிக்க: அப்போஸ்தலர் 9:1. சவுல் உண்மையில் யாரைத்தான் துன்பப்படுத்திக்கொண்டிருந்தான்?

**அப்போஸ்தலர் 9:1** - *"சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்,"*

9. வாசிக்க: கலாத்தியர் 6:12. கலாத்தியர் புத்தகத்திலுள்ள யூதமார்க்கத்தார், சுவிசேஷத்தோடுகூட மதப் பிரகாரமான பிரமாணங்களையும் சேர்க்க முயற்சி செய்தார்கள். அப்படிச் செய்வதால், அவர் எதைப் புறக்கணித்தார்கள்?

**கலாத்தியர் 6:12 -** *"மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் தாங்கள் கிறிஸ்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள்."*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: 2 தீமோத்தேயு 3:12. தேவபக்தியாய் வாழ்கிறவர்கள் எதை அனுபவிப்பார்கள்?

   ***துன்பத்தை.***

2. "உபத்திவம்" இதை எவ்வாறு வர்னிப்பீர்கள்?

   ***தொல்லைபடுத்தப்படுதல், விசுவாசத்தினிமித்தம் துன்பப்படுதல்.***

3. வாசிக்க: மாற்கு 4:16-17. என்ன காரணத்திற்காக உபத்திரவம், துன்பம் வருகின்றன?

   ***வசனத்தினிமித்தம்; மற்றும் வசனத்தை நம் இருதயத்தைவிட்டு எடுத்துப்போடும்படியாக.***

4. வாசிக்க: "அப்போஸ்தலர் 8:1.4. எருசலேமில் உண்டான துன்பத்தின் விளைவு என்ன?

   ***ஜனங்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்."***

5. வாசிக்க: மத்தேயு 5:10-12. ........................................................ நிமித்தம்துன்பப்படுகிறவர்கள்மேல் ஆசீர்வாதம் இருக்கும்.

   ***நீதியினிமித்தம்.***

6. வாசிக்க: மத்தேயு 5:12. விசுவாசிகள் நீதியினிமித்தம் துன்பப்படும்போது, எதை அவர்கள் எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்?

   ***பரலோகத்தில் நல்ல பலனை.***

7. வாசிக்க: அப்போஸ்தலர் 9:4-5. சவுல் யாரைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்தான்?

   ***இயேசுவை.***

8. வாசிக்க: அப்போஸ்தலர் 9:1. சவுல் உண்மையில் யாரைத்தான் துன்பப்படுத்திக்கொண்டிருந்தான்?

***'கர்த்தருடைய சீஷர்களை (கிறிஸ்தவர்களை)***

9. வாசிக்க: கலாத்தியர் 6:12. கலாத்தியர் புத்தகத்திலுள்ள யூதமார்க்கத்தார், சுவிசேஷத்தோடுகூட மதப் பிரகாரமான பிரமாணங்களையும் சேர்க்க முயற்சி செய்தார்கள். அப்படிச் செய்வதால், அவர் எதைப் புறக்கணித்தார்கள்?

***கிறிஸ்துவின் சிலுவையினிமித்தம் வரும் துன்பங்களை. மற்றொரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், கிறிஸ்துஇயேசுவின்மேல் வைக்கும் விசுவாசம், கிருபையினால் மாத்திரமே வருகிற இரட்சிப்பைப் பிரசங்கிப்பதன் மூலம் வருகிற உபத்திரவங்களை அவர்கள் புறக்கணித்தார்கள்.***

# பாடம் 6

# ராஜாவும் அவருடைய ராஜ்யமும்

***டான் க்ரோ***

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களை மற்ற ஜனங்களைக் காட்டிலும் சிறப்பானவர்களாக வேறுபடுத்தி காண்பித்தது அவர்களுடைய இறைத்தன்மையே, வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், அவர்கள் நேரிடையாக தேவனால் ஆளப்பட்டதே சிறப்பம்சமாகும். ஆனால், அதன்பிறகு இஸ்ரவேல் சரித்திரத்தைப் பார்க்கும்போது, உலகத்தின் மற்ற நாடுகளுக்கு இருப்பதுபோலவே, பூமிக்குரிய(மனுஷன்) ஒரு ராஜாவால் தாங்களும் ஆளப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள் (1 சாமுவேல் 8:5-19). ஆகவே, தேவன் அவர்களுடைய விண்ணப்பத்தின்படி, சவுல் என்னும்பேர் கொண்ட ஒரு மனிதனை அவர்களுக்கு ராஜாவாக கொடுத்தார் (1சாமுவேல் 10:24-25). அதன்பிறகு, சவுலின் கீழ்ப்படியாமையினிமித்தம், தம்முடைய இருதயத்திற்கேற்றதைச் செய்யும், தாவீதை அவர்களுக்கு ராஜாவாக எழுப்பினார் (அப். 13:21-22; 1 இராஜா. 15:3)

ராஜா என்பவன் காணக்கூடாத தேவனின் காணக்கூடிய பிரதிநிதியாக இருக்கவேண்டியதாய் இருந்தது (உபா. 17:14-20). ராஜா தேவனைப் பின்பற்றும்போது, அவனும் அவனுடைய ராஜ்யமும் ஸ்திரப்பட்டன. தேவனைப் பின்பற்ற ராஜா தவறினபோது, அவனும் அவனுடைய ராஜ்யமும் தோல்வியடைந்து, சிறையிருப்புக்குள்சென்று அழிந்தன (1 சாமு. 15:22-23).

தேவன் ஒரு ராஜாவைத் தெரிந்துகொள்ளும்போது, அவனை எண்ணெயினால் அபிஷேகம்பண்ணும்படி ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். அந்த சமயத்தில் தேவ

ஆவியானவர் அந்த ராஜாமீது வந்து, அவன் நீதியோடு ஜனங்களை அரசாளும்படியாக அவனுடைய இருதயத்தை மாற்றுவார், தேவன் அவனோடு இருந்தார் (1 சாமு. 10:1.6-7,9). ஆளுவதற்கு(ஒரு ராஜாவாக இருப்பதற்கு) அபிஷேம் என்பது, பிற்காலத்தில் மேசியா வந்து ஜனங்களை ஆளப்போவதைக் குறிக்கிறதாய் இருந்தது. "Anointed - அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்பதற்கு எபிரெய வார்த்தை "mashiac (Massiah) - மேசியா" என்பதாகும், அதுவே எபிரெய மொழியில் "Christos (Christ) - கிறிஸ்து" என்று உள்ளது. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள், எதிர்காலத்தில் மேசியா (அபிஷேகம்பண்ணப்பட்டவர்) வருவார், அப்பொழுது அவர் மூலமாக பரலோகத்தின் தேவன் ஒரு ராஜ்யத்தை பூமியில் உண்டுபண்ணுவார், அந்த ராஜ்யம் ஒருபோதும் அழியாது (தானி. 2:44, 7:14, 27) என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். வேதவசனங்களை நீங்கள் நன்கு கவனித்துப் பார்ப்பீர்களெனில், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசு பேசினபோதெல்லாம், அவர் எதை மனதில் வைத்துப் பேசுகிறார் என்பதை யூதர்களுக்கு ஒருபோதும் விளக்கிக் கூறவே இல்லை. யூதர்கள் எதிர்பார்த்த ராஜ்யம் என்பது முழுக்க முழுக்க பழைய ஏற்பாட்டு முறைமையின்படியான ஒரு ராஜ்யத்தையே (ஏசாயா 9:6-7; 11:1-6; தானி. 2:44; 7:13,14,18 மற்றும் 27).

ராஜ்யம் என்றால் என்ன என்பதை சாதாரணமாக புரிந்துகொள்ளாமல், இயேசுகிறிஸ்து பேசின வார்த்தைகளைப் புரிந்துகொள்வது கூடாதகாரியம். தம்முடைய சீஷர்கள் பிரசங்கம்பண்ண வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுச் சொன்ன ஒரே ஒரு மிக முக்கியமான காரியம் ராஜ்யத்தைப் பற்றிய செய்தியே (மாற்கு 1:14-15; லூக்கா 9:1,2; அப். 28:23-31; லூக்கா 16:16 மற்றும் மத்தேயு 14:14). இந்தச் செய்தி "இரட்சிப்பு" மற்றும் "நித்தியஜீவன்" ஆகியவற்றை வழங்குவதையும் குறிக்கிறது (எபி. 2:3; மத். 19:16 இந்த வசனத்தை மத். 19:23 ம் வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க; அப். 28:23,24, 28, 30-31). "தேவனுடைய ராஜ்யம்" என்ற வார்த்தைக்குள், தேவனால் ஆளப்படுகிற ஒரு கூட்ட மக்கள் என்ற கருத்தும் உள்ளது. தேவனுடைய ராஜ்யத்துக்குள் நுழைய அதற்குரிய நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். மாற்றப்பட்ட இருதயம் தேவை. இந்த இருதய மாற்றத்தைத்தான் வேதம், மனந்திரும்புதல் என்று கூறுகிறது. அது தேவனிடத்தில் மனந்திரும்புவது; அதாவது சாத்தானைவிட்டு, பாவம் மற்றும் அதன் வழிகளைவிட்டு தேவனிடம், கிறிஸ்து மற்றும் அவர் வழிகளில் திரும்பிவருதலைக் குறிக்கிறது. அப்படி

ஒருவர் திரும்பி வரும்போது, தேவன் பாவமன்னிப்பையும், நித்தியஜீவனையும் (இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக) இலவமாக அருளுகிறார் (ரோமர் 6:23). இந்த "நற்செய்தியே" "கிருபையின் சுவிசேஷம்" அல்லது "தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்தல்" என்று கூறப்படுகிறது (அப். 20:24-25). தேவனுடைய ராஜ்யம் கிருபையினால் உண்டாகிறதாயிருக்கிறது (மத். 20:1-16), அது இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தின் மூலம் அமைதியாக, இரகசியமாக வந்தது (மத். 13:33). சீக்கிரத்தில் ஒருநாள் வெளிப்படையாக உலகில் உள்ள அனைவரும் காணும் வகையில் தேவனுடைய ராஜ்யம் வெளிப்படும். (மத்தேயு 13:36-43).

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: தானியேல் 2:44. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள், எதிர்காலத்தில் மேசியா (அபிஷேகம்பண்ணப்பட்டவர்) வருவார், அப்பொழுது அவர் மூலமாக பரலோகத்தின் தேவன் ஒரு ராஜ்யத்தை பூமியில் உண்டுபண்ணுவார், அந்த ராஜ்யம்,

   A. ஆயிரம்வருடம்வரை அந்த அரசாட்சி நிலைக்கும்.

   B. அது ஒருபோதும் அழியாது.

   C. அது தற்காலிகமானதாக இருக்கும்.

   **தானியேல் 2:44** - *"அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; .......................... அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.*

2. வாசிக்க: மத்தேயு 4:17, 23. இயேசுவின் பிரசங்கம் என்னவாக இருந்தது?

   **மத்தேயு 4:17** - *"அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்,"*

   **மத்தேயு 4:23** - *"பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெபஆலயங்களில் உபதேசித்து; ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்."*

3. வாசிக்க: மாற்கு 1: 14-15. இயேசு .............................. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

   **மாற்கு 1: 14-15** - *"யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின்*

*சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்."*

4. வாசிக்க: லூக்கா 4:43. தேவனிடத்திலிருந்து இயேசு அனுப்பப்பட்டதன் காரணம்.......................................

**லூக்கா 4:43** - *"அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்."*

5. வாசிக்க: யோவான் 4:25. ராஜ்யத்தைக் குறித்து இயேசு பேசியபோது, ராஜ்யம் என்றால் எது என்று அவர் எதை மனதில் வைத்து பிரசங்கித்தாரோ, அதை யூதர்களுக்கு வெளிப்படுத்தவே இல்லை. அது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டது, அதைக் குறித்து அவர்கள்:

   A. கொஞ்சம் அறிந்திருந்தனர்.

   B. அது ஒருபோதும் வராது என்று நினைத்தனர்.

   C. அதை அவர்கள் ஏற்கெனவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

**யோவான் 4:25** - *"அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்."*

6. வாசிக்க: லூக்கா 9:1.2. - சீஷர்கள் செய்த மூன்று காரியங்கள் என்ன?

**லூக்கா 9:1-2** - *"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்."*

7. வாசிக்க: லூக்கா 10:1-2, 8-9. எழுபதுபேர் பிரசங்கிக்கும்படி இயேசு அவர்களுக்குச் சொன்ன செய்தி என்ன?

**லூக்கா 10:1-2** - *“இவைகளுக்குப் பின்பு, கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே அனுப்பினார். (2) அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.”*

**லூக்கா 10:8-9** - *“ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் அவர்கள் உங்கள்முன் வைக்கிறதை நீங்கள் புசித்து, (9) அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.”*

8. வாசிக்க: லூக்கா 23:2. யூதர்களின் சொந்த விளக்கத்தின்படி, “கிறிஸ்து” என்றால் .................................................................... என்று பொருள்.

**லூக்கா 23:2** - *“இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்.”*

9. வாசிக்க: அப்போஸ்தலர் 17:7. ராயருடைய சட்டத்திற்கு மாறாக, பவுல் ...................... என்னும் ஒருவரை .................... என்று சொன்னதாக, யூதர்கள் பவுல்மீது குற்றஞ்சாட்டினார்கள்.

**அப்போஸ்தலர் 17:7** - *“இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு,”*

10. வாசிக்க: அப்போஸ்தலர் 19:8-10. எபேசுவிலே பவுல் தைரியமாய்ப் ........................................ பிரசங்கித்து, அவர்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்தான்.

**அப்போஸ்தலர் 19:8-10 -** *"பின்பு பவுல் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷனைபண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தான். (9) சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டு வந்தான். (10) இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்."*

11. வாசிக்க: அப்போஸ்தலர் 28:23-31. வசனம் 31 ல், அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கித்துக்கொண்டிருந்தது என்ன?

**அப்போஸ்தலர் 28:23-31 -** *"அதற்காக அவர்கள் ஒரு நாளைக் குறித்து, அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான். (24) அவன் சொன்னவைகளைச் சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியாதிருந்தார்கள். (25) இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து, புறப்பட்டுப்போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது: (26) நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள். (27) இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில்*

*போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார். (28) ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றான். (29) இப்படி அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம்பண்ணிக்கொண்டு, போய்விட்டார்கள். (30) பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, (31) மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்."*

12. வாசிக்க: மத்தேயு 24:24. உலகம் முழுதும் பிரசங்கிக்கப்பட வேண்டிய செய்தி என்ன? அவர்

**மத்தேயு 24:24** - *"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்."*

13. வாசிக்க: அப். 20:24-25. சில நேரங்களில் ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் ................................ சுவிசேஷம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அப். 20:24-25** - *"ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். (25) இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்."*

14. வாசிக்க: லூக்கா 16:16. ராஜ்யத்தைக் குறித்த அடிப்படை அறிவுகூட இல்லாமல் இயேசுவின் செய்தியை அறிந்துகொள்வது என்பது கூடாதகாரியம். ராஜ்யத்தைக்

குறித்துதான் இயேசு பிரசங்கித்தார், தம்முடைய சீஷர்கள் பிரசங்கிக்கும்படி இயேசு குறிப்பிட்டுச் சொன்ன செய்தியும் அதுதான். ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் குறித்து தம் சீஷர்களிடம்:

A. பிரசங்கியுங்கள் என்று சொன்னார்

B. இதைக் கண்டுகொள்ள வேண்டாம் என்றார்

C. இதைக் குறித்து சிந்தியுங்கள் என்றார்,

**லூக்கா 16:16** - *"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்."*

15. வாசிக்க: மத்தேயு 6:10. பொதுவாக, தேவனுடைய ராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையாகும். இந்த வசனத்தில் இது எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

**மத்தேயு 6:10** - *"உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக."*

16. வாசிக்க: கொலோசெயர் 1:13.14; ரோமர் 14:9. "தேவனுடைய ராஜ்யம்" என்ற பதத்தின்படி, ஒரு கூட்ட மக்கள்:

A. இயேசு தங்கள் உள்ளத்தில் வரும்படி கேட்கவேண்டும்.

B. தேவனுடைய ஆளுகையை ஏற்றுக்கொண்டு(பிசாசின் ஆளுகையை புறந்தள்ளுவது), அவருடைய பாவமன்னிப்பை பெறுவது.

C. சபையில் சேர்ந்துகொள்வது.

**கொலோசெயர் 1:13, 14** - *"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவராயிருக்கிற பிதாவை*

*ஸ்தோத்திரிக்கிறோம். (14) (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு அருளப்பட்டிருக்கிறது."*

**ரோமர் 14:9** - *"கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும்பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்."*

17. வாசிக்க: மத்தேயு 4:17. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு மாற்றப்பட்ட ஒரு இருதயம் தேவை. இருதயத்தில் ஏற்படும் இந்த மாற்றத்தைத்தான் வேதம்,

A. மனஸ்தாபம்

B. நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்

C. மனந்திரும்புதல் என்று அழைக்கிறது.

**மத்தேயு 4:17** - *"அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்."*

18. வாசிக்க: அப்போஸ்தலர் 26:18. பாவ மன்னிப்பைப் பெறும்படியாக நீங்கள் .......................... விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய .................................. விட்டு .................................. திரும்பி விட்டீர்களா?

**அப்போஸ்தலர் 26:18** - *"அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரி சுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்."*

19. வாசிக்க: எசேக்கியேல் 36:26-27; அப். 11:15-18. தேவனுடைய வழியில் உன்னை நடக்கச் செய்யும் புதிய இருதயம், புதிய ஆவி உனக்குக் கொடுக்கப்பட்டு விட்டதா?

**எசேக்கியேல் 36:26-27** - *“உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லாத இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். (27) உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்.”*

**அப். 11:15-18** - *“நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்தஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார். (16) யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். (17) ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோலவே அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். (18) இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.”*

20. வாசிக்க: லூக்கா 18:13-14. உன் பாவமன்னிப்பிற்காக தேவனை நோக்கி கூப்பிட்டிருக்கிறாயா?

**லூக்கா 18:13-14** - *“ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: தானியேல் 2:44. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள், எதிர்காலத்தில் மேசியா (அபிஷேகம்பண்ணப்பட்டவர்) வருவார், அப்பொழுது அவர் மூலமாக பரலோகத்தின் தேவன் ஒரு ராஜ்யத்தை பூமியில் உண்டுபண்ணுவார், அந்த ராஜ்யம்,

***ஒருபோதும் அழியாது.***

2. வாசிக்க: மத்தேயு 4:17, 23. இயேசுவின் பிரசங்கம் என்னவாக இருந்தது?

***மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது.***

3. வாசிக்க: மாற்கு 1: 14-15. இயேசு .............................. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

***தேவனுடைய ராஜ்யத்தின்***

4. வாசிக்க: லூக்கா 4:43. தேவனிடத்திலிருந்து இயேசு அனுப்பப்பட்டதன் காரணம்.......................................

***தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்க***

5. வாசிக்க: யோவான் 4:25. ராஜ்யத்தைக் குறித்து இயேசு பேசியபோது, ராஜ்யம் என்றால் எது என்பதை அவர் மனதில் வைத்து பிரசங்கித்தாரோ, அதை யூதர்களுக்கு வெளிப்படுத்தவே இல்லை. அது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டது, அதைக் குறித்து அவர்கள்:

***ஏற்கெனவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.***

6. வாசிக்க: லூக்கா 9:1.2. - சீஷர்கள் செய்த மூன்று காரியங்கள் என்ன?

***பிசாசுகளையும் துரத்துதல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்தல், பிணியாளிகளைச் சொஸ்தமாக்குதல்.***

7. வாசிக்க: லூக்கா 10: 1-2, 8-9. எழுபதுபேர் பிரசங்கிக்கும்படி இயேசு அவர்களுக்குச் சொன்ன செய்தி என்ன?

***தேவனுடைய ராஜ்யம்.***

8. வாசிக்க: லூக்கா 23:2. யூதர்களின் சொந்த விளக்கத்தின்படி, “கிறிஸ்து” என்றால் ........................................................................ என்று பொருள்.

***ராஜா.***

9. வாசிக்க: அப்போஸ்தலர் 17:7. ராயருடைய சட்டத்திற்கு மாறாக, பவுல் ......................... என்னும் ஒருவரை ..................... என்று சொன்னதாக, யூதர்கள் பவுல்மீது குற்றஞ்சாட்டினார்கள்.

***இயேசு / ராஜா.***

10. வாசிக்க: அப்போஸ்தலர் 19:8-10. எபேசுவிலே பவுல் தைரியமாய்ப் ........................................ பிரசங்கித்து, அவர்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்தான்.

***தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக்குறித்து***

11. வாசிக்க: அப்போஸ்தலர் 28:23-31. வசனம் 31 ல், அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கித்துக்கொண்டிருந்தது என்ன?

***இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து***

12. வாசிக்க: மத்தேயு 24:24. உலகம் முழுதும் பிரசங்கிக்கப்பட வேண்டிய செய்தி என்ன?

***ராஜ்யத்தினுடைய சுவிசேஷம்***

13. வாசிக்க: அப். 20:24-25. சில நேரங்களில் ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் .................................... சுவிசேஷம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

***தேவனுடைய கிருபையின்***

14. வாசிக்க: லூக்கா16:16. ராஜ்யத்தைக் குறித்த அடிப்படை அறிவுகூட இல்லாமல் இயேசுவின் செய்தியை

அறிந்துகொள்வது என்பது கூடாதகாரியம். ராஜ்யத்தைக் குறித்துதான் இயேசு பிரசங்கித்தார், தம்முடைய சீஷர்கள் பிரசங்கிக்கும்படி இயேசு குறிப்பிட்டுச் சொன்ன செய்தியும் அதுதான். ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் குறித்து தம் சீஷர்களிடம்:

***பிரசங்கியுங்கள் என்று கூறினார்***

15. வாசிக்க: மத்தேயு 6:10. பொதுவாக, தேவனுடைய ராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையாகும். இந்த வசனத்தில் இது எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

***பரலோகத்தில் தேவனுடைய சித்தம் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படவேண்டுமென்று.***

16. வாசிக்க: கொலோசெயர் 1:13.14; ரோமர் 14:9. "தேவனுடைய ராஜ்யம்" என்ற பதத்தின்படி, ஒரு கூட்ட மக்கள்:

***தேவனுடைய ஆளுகையை ஏற்றுக்கொண்டு (பிசாசின் ஆளுகையை புறந்தள்ளுவது), அவருடைய பாவமன்னிப்பை பெற்றுக்கொள்கிற மக்கள்.***

17. வாசிக்க: மத்தேயு 4:17. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு மாற்றப்பட்ட ஒரு இருதயம் தேவை. இருதயத்தில் ஏற்படும் இந்த மாற்றத்தைத்தான் வேதம்,

***மனந்திரும்புதல்என்று அழைக்கிறது.***

18. வாசிக்க: அப்போஸ்தலர் 26:18. பாவ மன்னிப்பைப் பெறும்படியாக நீங்கள் .......................... விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய ................................. விட்டு .................................. திரும்பி விட்டீர்களா?

***இருளை / அதிகாரத்தை / தேவனிடத்திற்கும்***

19. வாசிக்க: எசேக்கியேல் 36:26-27; அப். 11:15-18. தேவனுடைய வழியில் உன்னை நடக்கச் செய்யும் புதிய இருதயம், புதிய ஆவி உனக்குக் கொடுக்கப்பட்டு விட்டதா?

20.வாசிக்க: லூக்கா 18:13-14. உன் பாவமன்னிப்பிற்காக தேவனை நோக்கி கூப்பிட்டிருக்கிறாயா?

## பாடம் 7

# இரட்சிக்கும் விசுவாசத்தின் பொருள்

*டான் க்ரோ*

திருமண நாளின்போது, பாஸ்டருக்கு முன்பாக நிற்கிற அந்த மணமகனைப் பார்த்து, இப்படி கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அதாவது: "இந்தப் பெண்ணை நீ உனது தனிப்பட்ட சமையல்காரியாக ஏற்றுக்கொள்கிறாயா? உனது வீட்டைய சுத்தம்பண்ணவும், உனக்கு வேண்டிய வேலைகளையெல்லாம் செய்யுவும், உனது வீட்டுத் தரை மற்றும் உனது வீட்டுப் பொருள்களையெல்லாம் சுத்தம் செய்யவும் ஒரு பணிவிடைக்காரியாக ஏற்றுக்கொள்கிறாயா? என்று கேட்டால், என்ன நடக்கும்? திடீரென அந்த மணமகள்: "நிறுத்துங்கள், இவைகளைச் செய்வதற்கு மாத்திரம்தான் நீர் என்னை ஏற்றுக்கொள்கிறீர் என்றால், அதற்கு ஒரு வேலைக்காரியை வைத்துக்கொள்ளும். நீர் என்னை நேசிக்கவும், நான் இருக்கிறபடியே என்னை நீர் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். நான் இருக்கிறபடியே என்னை நீர் ஏற்றுக்கொண்டால், நீர் எதிர்பார்க்கிற இவைகளையெல்லாம் நான் உமக்குச் செய்வேன், ஆனால் என்னை முழுவதுமாக நீர் உமக்கென ஏற்றுக்கொள்ள வேண்டும்! என்னால்உண்டாகும் பலன்களை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, என்னை நீர் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதை நான் விரும்பவில்லை" என்று அந்த மணமகள் சொல்லுவாள்.

"ஆம், இரட்சிக்கும் விசுவாசம் என்பது கிறிஸ்துதாமே என்பதை அறியாமல் இருப்பது புதுமையான ஒன்றாக இருக்கிறது; கிறிஸ்துவின் இரட்சிக்கும் தன்மையையோ அல்லது கிறிஸ்துவின் ஆளுகையை மட்டுமல்ல, கிறிஸ்துவையே ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்து என்ன

ஸ்தானத்தில் இருக்கிறார் என்பதை மாத்திரம் பார்த்து, அவர்மேல் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு தேவன் இரட்சிப்பை வழங்குவது இல்லை, கிறிஸ்துவின் அலுவல்நிமித்தம்தான் அவர்மேல் நாம் விசுவாசம் வைக்கவேண்டும் என்பது நம்மை இரட்சிக்கும் விசுவாசத்தின் உண்மையான பொருள் அல்ல. மேலும், நமக்காக உண்டுபண்ணப்பட்ட பாவநிவாரணத்தின்மீது, சிலுவையின்மீது அல்லது அவருடைய ஆசாரியத்துவம் மற்றும் இரட்சகர் என்ற தன்மை ஆகியவற்றிற்காக மாத்திரம் நாம் அவர்மேல் விசுவாசம் வைப்பது அல்ல. இவையனைத்தும் கிறிஸ்து என்ற நபருக்குள் அடங்கியிருக்கிறது, இவையெல்லாம் கிறிஸ்துவைவிட்டு வெளியே கிடையாது, இவைகள் கிறிஸ்துவைவிட்டு பிரிந்து தனியே நிற்காது, கிறிஸ்துவும் அவருடைய செயல்களும் ஒன்றாகவே இருக்கும், ஆகவே கிறிஸ்துவையே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும், அவருடைய செயல்களை மட்டும் அல்ல. ஆனால், இன்று நமக்கு கிடைக்கிற உபதேசங்களோ நவீன கால மாறுபாடான கருத்துகளேயாகும்." என்று A.W. டோசர் என்பவர் கூறுகிறார். (The Root of the Righteous, pp.84-86)

சொல்ல வருகிற கருத்தை நீங்கள் புரிந்துகொண்டீர்களா? கிறிஸ்துவை முக்கியப்படுத்தாமல், கிறிஸ்துவின் ஒரு பகுதியை(அவரிடத்திலிருந்து கிடைக்கும் பலன்களை). அவருடைய அலுவலை மட்டும் நாம் ஏன் முக்கியப்படுத்தவேண்டும்? இது எப்படி இருக்கிறதென்றால், ஒரு பெண்ணை திருமணம் பண்ணும்போது, அவளை தன்னுடைய ஒரு பகுதியாக கருதாமல், அவளை ஒரு சமையல்காரியாக மட்டும் நினைத்து திருமணம்பண்ணுவதுபோல இருக்கிறது.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: யோவான் 1:12. ........................ ஏற்றுக்கொண்டவர்கள்

   A. அவரை (கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை)

   B. இயேசுவை இரட்சகராக

   C. இயேசுவை ஆண்டவராக

   D. இயேசுவை ஆசாரியாக

   **யோவான் 1:12** - *"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்."*

2. அப்போஸ்தலர் 16:31. நாம் யாரை விசுவாசிக்க(நம்பிக்கை அல்லது நம்பி நம்மை ஒப்புவித்தல்) வேண்டும்?

   **அப்போஸ்தலர் 16:31** - *"அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது, நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."*

3. வாசிக்க: லூக்கா 6:46. "ஆண்டவர்" என்ற வார்த்தை எதைச் சுட்டிக்காட்டுகிறது? .

   **லூக்கா 6:46** - *"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?*

4. வாசிக்க: மத்தேயு 1:21. "இயேசு" என்ற வார்த்தை எதைச் சுட்டிக்காண்பிக்கிறது?

   **மத்தேயு 1:21** - *"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில்*

*அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்."*

5. வாசிக்க: லூக்கா 23:2. "கிறிஸ்து" என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது?

**லூக்கா 23:2** - *"இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும், சொல்லி ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்."*

6. ரோமர் 1:16. இந்த வசனத்தின்படி, சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்பது, ..............................

**ரோமர் 11:16** - *"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது."*

7. வாசிக்க: ரோமர் 1:1-3. தேவனுடைய சுவிசேஷம் .............................. ஐ பற்றியது அல்லது இதையே மையமாகக் கொண்டுள்ளது.

அவருடைய குமாரனின் ஒரு பகுதியா? தேவனுடைய குமாரன் முழுவதுமா?

**ரோமர் 1:1-4** - *"இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல், ... (4) இயேசுகிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர்,"*

8. வாசிக்க: யோவான் 6:54. நீங்கள் ஒன்றை உட்கொள்ளும்போது, அது எதைக் குறிக்கிறது?

*யோவான் 6:54. "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்."*

9. கலாத்தியர் 3:27. ஒரு நபர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்போது, அவர் ................................ தரித்துக்கொள்கிறார்.

**கலாத்தியர் 3:27** - *"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே."*

10. அப்போஸ்தலர் 9:5,6. பவுல் குணப்பட்டபோது, இயேசுவினிடத்தில் அவர் கேட்ட இரண்டு கேள்விகள் என்ன?

**அப்போஸ்தலர் 9:5,6** - *"அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். (6) அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்."*

11. ரோமர் 7:4. நாம் யாரை திருமணம் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம்?

**ரோமர் 7:4** - *"அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்."*

12. கிறிஸ்துவோடுகூட நல்ல திருமணத்தை நீங்கள் சந்தோஷமாய் அனுபவிக்கிறீர்களா?

அவரோடு பேசுகிறீர்களா? ஐக்கியப்படுகிறீர்களா? அன்புகூருகிறீர்களா? அவரை ஆராதிக்கிறீர்களா?

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: யோவான் 1:12. ........................ ஏற்றுக்கொண்டவர்கள்

***அவரை(கர்த்தராகியஇயேசுகிறிஸ்துவை), தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார்.***

2. அப்போஸ்தலர் 16:31. நாம் யாரை விசுவாசிக்க (நம்பிக்கை அல்லது நம்பி நம்மை ஒப்புவித்தல்) வேண்டும்?

***கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை***

3. வாசிக்க: லூக்கா 6:46. “ஆண்டவர்” என்ற வார்த்தை எதைச் சுட்டிக்காட்டுகிறது?

***ஆண்டவர் என்பது எஜமான், ஆளுகிறவர், தலைவர், தார்மீக முறையில்நம்முடைய வாழ்க்கையின்மீது உரிமையுடையவர். மேலும், ஆண்டவர் என்பது அவருடைய இறைத்தன்மையையும் குறிக்கிறது.***

4. வாசிக்க: மத்தேயு 1:21. “இயேசு” என்ற வார்த்தை எதைச் சுட்டிக்காண்பிக்கிறது?

***இயேசுவை இரட்சகராக.***

5. வாசிக்க: லூக்கா 23:2. “கிறிஸ்து” என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது?

***இயேசுவை ராஜவாக, மேசியாவாக.***

6. ரோமர் 1:16. இந்த வசனத்தின்படி, சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்பது, ................................

***கிறிஸ்துதாமே நற்செய்தி, ஏனெனில் அவருக்குள் சகல நன்மைகளும் அடங்கியுள்ளது.***

7. வாசிக்க: ரோமர் 1:1-3. தேவனுடைய சுவிசேஷம் .................................. ஐ பற்றியது அல்லது இதையே மையமாகக் கொண்டுள்ளது.

***தேவனுடைய குமாரனைப் பற்றியது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது.***

அவருடைய குமாரனின் ஒரு பகுதியா? தேவனுடைய குமாரன் முழுவதுமா?

***குமாரன் முழுவதும்.***

8. வாசிக்க: யோவான் 6:54. நீங்கள் ஒன்றை உட்கொள்ளும்போது, அது எதைக் குறிக்கிறது?

***அது முழுவதும் உள்ளே செல்கிறது. அதாவது நீங்கள் எதை உட்கொள்கிறீர்களோ, அது உங்கள் வாழ்க்கையாக,பெலனாக மாறுகிறது.***

9. கலாத்தியர் 3:27. ஒரு நபர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்போது, அவர் ................................. தரித்துக்கொள்கிறார்.

***அவரையும், அவருடைய எல்லாவற்றையும் முழுவதுமாக தரித்துக்கொள்கிறார்.***

10. அப்போஸ்தலர் 9:5,6. பவுல் குணப்பட்டபோது, இயேசுவினிடத்தில் அவர் கேட்ட இரண்டு கேள்விகள் என்ன?

***ஆண்டவரே, நீர் யார்?2. ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?***

11. ரோமர் 7:4. நாம் யாரை திருமணம் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம்?

***முழுவதும் அவரையே.***

12. கிறிஸ்துவோடுகூட நல்ல திருமணத்தை நீங்கள் சந்தோஷமாய் அனுபவிக்கிறீர்களா?

***அவரோடு பேசுகிறீர்களா? ஐக்கியப்படுகிறீர்களா? அன்புகூருகிறீர்க***

## பாடம் 8

# தேவனுடைய பிரமாணத்தை சரியாக உபயோகித்தல்

*டான் க்ரோ*

ஒருநாள் ஜோவும் நானும் பில் மற்றும் ஸ்டீவ் ஆகியோருடன் ஒரு நதியருகே பேசிக்கொண்டிருந்தோம். தேவனைப் பற்றியோ அல்லது இயேசுகிறிஸ்துவைப் பற்றியோ முன் ஒருபோதும் கேட்டிராத மக்கள் தேவனை நேரிடையாக சந்திக்கும்போது தங்களைக் குறித்து எவ்வாறு கணக்கொப்புவிப்பார்கள்? என்ற கேள்வி அப்போது எங்கள் நடுவே எழுப்பப்பட்டது. நான் சொன்னேன், "பில், நீ ஸ்டீவை சந்திக்க அவனுடைய வீட்டிற்குப் போகிறாய் என்று வைத்துக்கொள்; அப்போது ஸ்டீவ் வீட்டில் இல்லை, அவன் மனைவி மட்டும் அங்கே இருக்கிறாள். அவனுடைய மனைவியோடு நீ விபச்சாரரீதியான உறவு கொள்கிறாய்; உன் நண்பனின் மனைவியை தீட்டுப்படுத்தியதற்காக உனக்குள் குற்றவுணர்வுதோன்றுமா - தோன்றாதா? தோன்றுமெனில், பத்து கட்டளைகளைப் பற்றியோ அல்லது பைபிளையோ முன்பின் முற்றிலும் அறியாத உனக்குள் இந்த குற்றவுணர்வு, கணக்கொப்புவிக்கும் எண்ணம்எப்படி வந்தது?

நியாயப்பிரமாணம் மற்றும் மனசாட்சி மூலமாக எது சரி, எது தவறு என்பதை அறியும் உணர்வைத் தேவன் ஒவ்வொரு நபருக்கும் கொடுத்திருக்கிறார். நியாயப்பிரமாணம் மற்றும் நம்முடைய மனசாட்சி ஆகிய இரண்டும் நம்முடைய நடத்தையைக் குறித்து நம்மைக் குற்றப்படுத்துகிற அல்லது குற்றமில்லை என்று நம்மைத் தீர்க்கிற சுய பரிசோதனையாட்களாக இருக்கின்றன (ரோமர் 2:14-15).

தான் எவ்வளவு ஒரு நல்ல நபர் என்பதை பில் என்னோடு சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு இரட்சகர் தனக்குத் தேவை

என்ற ஒரு நிலையே அவருக்கு இல்லையாம், அவ்வளவு நல்லவராம் அவர். யாத்திராகமம் 20 ம் அதிகாரத்தைத் திறந்து அதை பில்லுக்கு நான் வாசித்துக் காண்பிக்க ஆரம்பித்தேன். “பில் தேவன்தான் உன் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் முதலாவதாக இருந்தார், இந்த உலகத்தில் உள்ள மற்ற எதைக் காட்டிலும் நீர் அவரைத்தான் எப்பொழுதும் அதிகமாக நேசித்தீர், அப்படித்தானே? அப்படி இல்லையெனில், முதலாவது கற்பனையை நீர் உடைத்துப் போட்டீர் (யாத். 20:3). தேவனுக்கு முன்பாக நீர் எதையாவது உயர்த்தி இருக்கிறீரா? அப்படியானால், நீர் இரண்டாவது கற்பனையை உடைத்துப்போட்டீர்(யாத். 20:4). இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து எப்பொழுதாவது இழிவாக, இழுக்கு உண்டாக்குகிற விதத்தில் பேசி இருக்கிறீரா? அப்படியானால் மூன்றாவது கட்டளையை உடைத்ததைக் குறித்து நீர் குற்றவுணர்வு உடையவர் (யாத். 20:7). தேவனைக் கனப்படுத்துகிற, ஆராதிக்கிற நாளை நீர் எப்பொழுதும் புறந்தள்ளுகிறவராய் இருந்தீரா? நீர் நான்காவது கட்டளையை உடைத்துவிட்டீர்(யாத். 20:8). உம் வாலிப வயதில் நீர் எப்பொழுதும் உம் தாய், தந்தையை கனம்பண்ணாதவராய் இருந்தீரா? அப்படியானால் நீர் ஐந்தாவது கட்டளையை உடைத்துவிட்டீர் (யாத். 20:12). நீர் எப்பொழுதாவது யாரிடமாவது கட்டுக்கடங்காத விதத்தில் கோபப்பட்டிருக்கிறீரா? நீர் ஆறாவது கட்டளையை உடைத்துவிட்டீர் (யாத். 20:13; இதை மத்தேயு 5:21-22 வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்), நீர் எப்பொழுதாவது எந்தப் பெண்ணையாவது இச்சையோடு பார்த்திருக்கிறீரா? நீர் ஏழாவது கட்டளையை உடைத்துப்போட்டு விட்டீர் (யாத்.20:14; மத். 5:27-28). உம்முடையதல்லாத எதையாவது நீர் எப்பொழுதாவது எடுத்துக்கொண்டிருக்கிறீரா? நீர் எட்டாவது கட்டளையை உடைத்துவிட்டீர் (யாத். 20:15). நீர் எப்பொழுதும் உண்மையையே பேசி இருக்கிறீரா? இல்லையெனில், நீர் ஒன்பதாவது கட்டளையை உடைத்துவிட்டீர் (யாத். 20:16). மற்ற நபருக்குரிய எதன்மீதாவது நீர் ஆசை கொண்டிருக்கிறீரா? ஐயோ, நீர் பத்தாவது கட்டளையையும் உடைத்துவிட்டீரே (யாத். 20:17). பாவிகளை இரட்சிக்க நான் வந்தேன் இயேசு ஏன் சொன்னார் என்பதை இப்போது உம்மால் காண முடிகிறதா? (மாற்கு 2:16.17).

போதுமான அளவுக்கு நான் நல்லவன்தான் என்று நினைக்கிறோம், அதோடுகூட, பரலோகம் செல்வதற்கு போதுமான அளவுக்கு நல்லவனாயிருக்க நாம் முயற்சி

செய்கிறோம், ஆனால் அதில்தான் பிரச்சினையே இருக்கிறது. ஏனெனில், உண்மையில் நாம் அனைவரும் பத்து கட்டளைகளையும் உடைத்துப்போட்டிருக்கிறோம். ஒருவன் அனைத்து கட்டளைகளையும் கைக்கொண்டும், ஏதாவது ஒன்றில் தவறுவானானால், அதைக் குறித்து அவன் குற்றவாளியாயிருக்கிறான் என்று யாக்கோபு 2:10 கூறுகிறது. நியாயப்பிரமாணம் உன்னை ஒருபோதும் நீதிமானாக்காது, மாறாக உன்னுடைய பாவத்தை அது வெளிப்படுத்தவே செய்யும் (ரோமர் 3:19-20).

நம் எல்லாருக்கும் ஒரு இரட்சகர் தேவை. “இரட்சகர்” என்ற வார்த்தையின் அர்த்தம், பாவத்திற்கான தண்டனையிலிருந்து நம்மை இரட்சிக்கிறவர் என்பதாகும். அழிந்துபோகிறவர்கள் நித்தியஜீவனை அடையும்படியாக அவர்களை இயேசு காப்பாற்றுகிறார், மீட்கிறார். (Matt. 1:21).

பரலோகத்திற்குப் போகிற அளவுக்கு நல்லவனாயிருப்பதற்கு, தேவனுடைய நீதியின் அளவுக்கு நாம் நீதியாய் இருக்கவேண்டும் (2 கொரி. 5:21). சுவிசேஷத்தின்நற்செய்தி என்னவெனில், இயேசு நம் பாவங்களை மன்னிப்பது மாத்திரமல்ல, தமது சொந்த நீதியையே அவர் நமக்கு ஈவாக -இலவசமாக தருகிறார் (ரோமர் 5:17: *“அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.”)*

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: மாற்கு 2:16-17.யாரை இரட்சிக்க இயேசு வந்தார்?

   **மாற்கு 2:16-17 -** *"அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறதை வேதபாரகரும் பரிசேயரும் கண்டு, அவருடைய சீஷரை நோக்கி: அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறதென்னபெற்று கேட்டார்கள். இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நிதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்."*

2. வாசிக்க: ரோமர் 2:1. நாம் மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்கும்போது, நாம் நம்மையே என்ன செய்துகொள்கிறோம்?

   ஏன்?

   **ரோமர் 2:1 -** *"ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்."*

3. வாசிக்க: யாக்கோபு 2:10. தேவனுடைய அநேக கட்டளைகளைக் கைக்கொண்டும், சில கட்டளைகளை கைக்கொள்ளாமல் விட்டுவிட்டால், நாம் எதைக் குறித்து குற்றவாளிகளாயிருப்போம்?

   **யாக்கோபு 2:10 -** *"எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்."*

4. வாசிக்க: கலாத்தியர் 3:10. தேவனுடைய நியாயப்பிரமா ணத்தைக் கைக்கொள்வதன் மூலம் நாம் நீதிமான்களாக

மாறினால், அதில் எவ்வளவு கட்டளைகளை நாம் கைக்கொள்ள வேண்டும்?

இந்தக் கற்பனைகளை நாம் எவ்வளவு காலம் கைக்கொள்ள வேண்டும்?

நல்லவனாயிருக்க முயன்று, அதன் மூலம் இரட்சிக்கப்படுவது என்பது கூடாதகாரியம் ஏன் என்பதை உங்களால் காண முடிகிறதா?

**கலாத்தியர் 3:10 -** *"நியாயப்பிரமாணத்தின்கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே."*

5. வாசிக்க: கலாத்தியர் 2:16. நீதிமானாக்கப்படுதல் என்பது தேவனால் கொடுக்கப்படுகிற இலவசமான நீதி, அது ஒருநபரை தேவனோடுகூட நல் ஐக்கியப்படுத்துகிறது, மற்றும் தேவனுக்கு முன்பாக நம்மை சரியாக நிற்கச் செய்கிறது. பாவிகள் நீதிமானாக்கப்படுதல் என்பது இயேசுகிறிஸ்துவுக்குள் வைக்கும் விசுவாசத்தினிமித்தம் இலவசமாய் கிடைக்கிறது, இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் ஒரேதரம் அனைவருக்காகவும் இது செய்து முடிக்கப்பட்டாயிற்று (1 கொரி. 15:3-4 மற்றும் ரோமர் 4:25). ஒரு மனிதன் எதனால் இரட்சிக்கப்படுவது இல்லை?

ஒரு நபர் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்?

நியாயப்பிரமாணத்தினால் எத்தனை மக்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள்?

**கலாத்தியர் 2:15-16 -** *"நியாயப்பிரமாணத்தின் கிரியை களினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை யென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி னாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்துஇயேசுவின்மேல் விசுவாசிகளானோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைக ளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே."*

6. ரோமர் 6:14. கிறிஸ்தவர்களாக நீங்கள்,

   A. நியாயப்பிரமாணத்தின்கீழ் இருக்கிறீர்கள்

   B. கிருபைக்குக் கீழ் இருக்கிறீர்கள்.

**ரோமர் 6:14** - *"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது."*

7. வாசிக்க: எசேக்கியேல் 18:20. நீங்கள் நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்தால், உங்களுக்குத் தண்டனை என்னவாக இருக்கும்?

**எசேக்கியேல் 18:20** - *"பாவம்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்."*

8. வாசிக்க: ரோமர் 4:6-8. கிருபைக்குக் கீழ், உங்கள் பாவங்களைக் குறித்த காரியத்தில் தேவன் செய்கிற மூன்று காரியங்கள் என்ன?

**ரோமர் 4:6-8** - *"அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும்பொருட்டு: எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்."*

9. வாசிக்க: ரோமர் 5:1. இப்பொழுது நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நாம், என்ன பலனை அனுபவிக்கிறோம்?

**ரோமர் 5:1** - *"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமா ன்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய*

*இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."*

10. வாசிக்க: ரோமர் 5:9. அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நாம், எதனாலே நாம் இரட்சிக்கப்படுவோம்?

**ரோமர் 5:9 -** *"இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."*

11. வாசிக்க: ரோமர் 10:4. தேவனுக்கு முன்பாக நமக்கு .................. உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை முடித்துவைத்தார்.

**ரோமர் 10:4 -** *"விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்."*

12. வாசிக்க: 1 கொரிந்தியர் 1:30,31. இயேசுவை தேவன் நம்முடைய ................................ ...................................... ....................................... ................................... மாற்றினார்.

**1 கொரிந்தியர் 1:30, 31 -** *"அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.*

13. வாசிக்க: பிலிப்பியர் 3:9. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாக நீங்கள் போகும்போது, நீங்கள் உங்கள் ................................... அடைய முயற்சி செய்கிறீர்கள்.

**பிலிப்பியர் 3:9 -** *"நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,"*

14. வாசிக்க: 1 கொரிந்தியர் 11:1. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவின் பிரமாணத்திற்குக் கீழாக இருக்கிறோம். கிறிஸ்துவின் பிரமாணம் என்பது, ஒரு நபருக்கு நாம் கணக்கொப்புவிக்கக் கூடியவர்களாக, அவர் சில கட்டளைகளை கைக்கொள்கிற ஒரு வாழ்க்கை அல்ல, அந்த நபர் ..............................................

**1 கொரிந்தியர் 11:1 -** *"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்."*

15. வாசிக்க: ரோமர் 8:3. நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்கக் கூடாததாய் இருந்தது, அதற்குக் காரணம் நியாயப்பிரமாணம் பலவீனமாக இருந்தது என்று பொருள் அல்ல; நம்முடைய ..................................... பலவீனத்தினால்தான், நாம் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறோம்.

**ரோமர் 8:3 -** *"அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்."*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: மாற்கு 2:16-17. யாரை இரட்சிக்க இயேசு வந்தார்?

***பாவிகளையே***

2. வாசிக்க: ரோமர் 2:1. நாம் மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்கும்போது, நாம் நம்மையே என்ன செய்துகொள்கிறோம்?

***நம்மைநாமே; அதாவது நமக்கு எதிராக நாமே நியாயத்தீர்ப்பைக் கூறிக்கொள்கிறோம்.***

ஏன்?

***நாம் மற்றவர்களை குற்றவாளிகளாகத் தீர்த்தாலும், அதே குற்றத்தை நாமும் செய்கிறோம்.***

3. வாசிக்க: யாக்கோபு 2:10. தேவனுடைய அநேக கட்டளைகளைக் கைக்கொண்டும், சில கட்டளைகளை கைக்கொள்ளாமல் விட்டுவிட்டால், நாம் எதைக் குறித்து குற்றவாளிகளாயிருப்போம்?

***எல்லாவற்றைக் குறித்தும் குற்றவாளியாயிருப்போம்.***

4. வாசிக்க: கலாத்தியர் 3:10. தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலம் நாம் நீதிமான்களாக மாறினால், அதில் எவ்வளவு கட்டளைகளை நாம் கைக்கொள்ள வேண்டும்?

***எல்லாக் கட்டளைகளையும்***

இந்தக் கற்பனைகளை நாம் எவ்வளவு காலம் கைக்கொள்ள வேண்டும்?

***எப்பொழுதும் (ஒன்றுகூட விடாமல்) கைக்கொள்ள வேண்டும்.***

நல்லவனாயிருக்க முயன்று, அதன் மூலம் இரட்சிக்கப்படுவது என்பது கூடாதகாரியம் ஏன் என்பதை உங்களால் காண முடிகிறதா?

***ஆம், காணமுடிகிறது.***

5. வாசிக்க: கலாத்தியர் 2:16. நீதிமானாக்கப்படுதல் என்பது தேவனால் கொடுக்கப்படுகிற இலவசமான நீதி, அது ஒரு நபரை தேவனோடுகூட நல் ஐக்கியப்படுத்துகிறது, மற்றும் தேவனுக்கு முன்பாக நம்மை சரியாக நிற்கச் செய்கிறது. பாவிகள் நீதிமானாக்கப்படுதல் என்பது இயேசுகிறிஸ்துவுக்குள் வைக்கும் விசுவாசத்தினிமித்தம் இலவசமாய் கிடைக்கிறது, இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் ஒரேதரம் அனைவருக்காகவும் இது செய்து முடிக்கப்பட்டாயிற்று (1 கொரி. 15:3-4 மற்றும் ரோமர் 4:25). ஒரு மனிதன் எதனால் இரட்சிக்கப்படுவது இல்லை?

***தன் சொந்த கிரியைகளினால், அதாவது நியாயப்பிரமாணத்ததைக் கைக்கொள்கிற சுயகிரியைகளினால்.***

ஒரு நபர் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்?

***இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தினால் (நம்பிக்கை).***

நியாயப்பிரமாணத்தினால் எத்தனை மக்கள் நீதிமான் களாக்கப்படுவார்கள்?

***மாம்சமான ஒருவனும் இல்லை, அதாவது ஒரு நபரும் நீதிமானாக்கப்படுவது கிடையாது.***

6. ரோமர் 6:14. கிறிஸ்தவர்களாக நீங்கள்,

***கிருபைக்குக் கீழ் இருக்கிறீர்கள்.***

7. வாசிக்க: எசேக்கியேல் 18:20. நீங்கள் நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்தால், உங்களுக்குத் தண்டனை என்னவாக இருக்கும்?

***மரணம்.***

8. வாசிக்க: ரோமர் 4:6-8. கிருபைக்குக் கீழ், உங்கள் பாவங்களைக் குறித்த காரியத்தில் தேவன் செய்கிற மூன்று காரியங்கள் என்ன?

***அக்கிரமங்களை மன்னிக்கிறார், பாவங்களை மூடுகிறார், பாவத்தை எண்ணாதிருக்கிறார்.***

9. வாசிக்க: ரோமர் 5:1. இப்பொழுது நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நாம், என்ன பலனை அனுபவிக்கிறோம்?

***தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (அவர் நம்மீது கோபமாக இல்லை).***

10. வாசிக்க: ரோமர் 5:9. அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நாம், எதனாலே நாம் இரட்சிக்கப்படுவோம்?

***கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவோம் (நம் பாவங்களுக்கான தண்டனை நீக்கப்பட்டாயிற்று).***

11. வாசிக்க: ரோமர் 10:4. தேவனுக்கு முன்பாக நமக்கு ................ உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை முடித்துவைத்தார்.

***நீதி உண்டாகும்படியாக.***

12. வாசிக்க: 1 கொரிந்தியர் 1:30,31. இயேசுவை தேவன் நம்முடைய ................................ ...................................... ...................................... .................................... மாற்றினார்.

***ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாக.***

13. வாசிக்க: பிலிப்பியர் 3:9. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாக நீங்கள் போகும்போது, நீங்கள் உங்கள் .................................... அடைய முயற்சி செய்கிறீர்கள்.

***நியாயப்பிரமாணத்தினால் உண்டாகிற சுயநீதியை.***

14. வாசிக்க: 1 கொரிந்தியர் 11:1. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவின் பிரமாணத்திற்குக் கீழாக இருக்கிறோம். கிறிஸ்துவின் பிரமாணம் என்பது, ஒரு நபருக்கு நாம் கணக்கொப்புவிக்கக் கூடியவர்களாக, அவர் சில கட்டளைகளை கைக்கொள்கிற ஒரு வாழ்க்கை அல்ல, அந்த நபர் ..............................................

***கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும்.***

15. வாசிக்க: ரோமர் 8:3. நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்கக் கூடாததாய் இருந்தது, அதற்குக் காரணம் நியாயப்பிரமாணம் பலவீனமாக இருந்தது என்று பொருள் அல்ல; நம்முடைய ........................................ பலவீனத்தினால்தான், நாம் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறோம்.

***மாம்சத்தின்.***

## பாடம் 9

# நியாயப்பிரமாணத்தின்கீழ் அல்ல, கிருபையின்கீழ்

*டான் க்ரோ*

எனது கணவில் ஒரு பெண்ணைக் கண்டேன், அவள் தான் செய்கிற ஒவ்வொரு தவறுக்கும்(பாவங்கள்) தொடர்ந்து தண்டனைகளை அனுபவித்தாள். ஒரு மனிதன் எப்போதும் பின்தொடர்ந்து வந்து, அவள் எப்பொழுதெல்லாம் தவறு செய்கிறாளோ, அப்பொழுது அந்த மனிதன் கோபத்துடன் தலையை அசைத்து, தனது பெல்ட்டை கழற்றி, அவளை அடிப்பான். அவள் ஏதாவது தவறான வார்த்தை பேசினால், ஏதாவது தவறான ஒன்றை செய்தால், அவன் அவளைத் தண்டிப்பான். அவள் நொண்டிக்கொண்டு, புன்னகையுடன் நல்ல மனப்பான்மையுடன் வாழ அவள் முயற்சி செய்தாள், ஆனால் அவளை மேலும் பிரச்சினைக்குள்ளாக்குகிற அந்த தவறான காரியங்களையே தொடர்ந்து செய்தாள். அவள் பெரிய பாவங்களை செய்யவில்லை, ஆனால் அவள் செய்கிற சிறுசிறு தவறுகளையெல்லாம் அந்த மனிதன் காணும்போது, அவள் அடி வாங்குவாள். அவள் அதிலிருந்து மீண்டு வருவாள் என்ற நம்பிக்கையில்லாததைப்போல அது தோன்றியது. அவளை பிரச்சினைக்குள்ளாக்குகிற காரியங்களைச் செய்வதிலிருந்து அவள் வெளியே வந்தபாடில்லை. அதன்பிறகு நான் விழித்துக்கொண்டேன்.

நாம் சம்பாதிக்காத, நாம் அதற்கு தகுதியில்லாத தயவும், தேவனுடைய பெலமுமான தேவனுடைய கிருபையைக் குறித்து நான் சிந்திக்க ஆரம்பித்தேன். கிருபையில் நம்முடைய இருதயம் ஸ்திரப்படும்போது, தேவன் நம்மை ஏற்றுக்கொள்வதற்காக நாம் எந்தவித சாதனைகளையோ அல்லது நம்முடைய சொந்த பெலத்தால், திறமையால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி முயற்சி

செய்யவோ தேவையில்லை. தேவனுடைய பிரமாணங்களை உடைப்பதன் மூலம் நாம் பெறுகிற அடிகளிலிருந்து (தண்டனைகள்) நாம் வெளிவரலாம். ஆம், இயேசுகிறிஸ்து நம்மை மீட்டுக்கொண்டார்.

தயவை (favor) குறித்து சிந்தித்துப் பாருங்கள், தயவு என்றால் ஒருவருடைய அங்கீகாரம், ஆதரவு அல்லது ஆசீர்வாதத்தைப் பெறுவது என்றுபொருள். ஒருவருடைய தயவு உங்களுக்கு வேண்டும்போது, நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்த நபருக்குப் பிடித்தமானதைச் செய்யவும், பேசவும் செய்வீர்கள், அவருக்குப் பிடிக்காத எதையும் அவர்முன் செய்யமாட்டீர்கள். எப்போதும் சரியானதையே செய்வதுபோல நடிப்பதுபோன்றது அது. ஆனால், எப்போதும் இப்படி செய்வது சாத்தியமா? புவிஈர்ப்பு விசையை அலட்சியம்செய்வது போன்றது இது. இதை நீங்கள்கொஞ்ச நேரம், அல்லது கொஞ்ச நாட்கள் செய்யலாம், ஆனால் முடிவில் நீங்கள் இதில் தோல்வியடைவீர்கள். ஏனெனில் அது உங்களைவிட பலம்மிகுந்தது.

என் கணவில் வந்த ஒரு பெண்ணைக் குறித்த உதாரணத்தை நான் கூறினேன். நானும் அவ்விதமாக இருப்பதை உணர்ந்தேன், எல்லாவற்றையும் சரியாகச் செய்ய முயற்சிசெய்தேன், ஆனால் ஏதாவது ஒன்றில் தவறி, தோல்வியடைந்தேன். நாள் முழுவதும் எந்த குழப்பமும் செய்யாமல் அந்த ஒன்றில் மட்டும் நான் தவறாமல் இருந்திருந்தேனானால், ஏதாவது சாதித்திருப்பேன். ஆனால், என் தவறுகள் எப்போதும் என்னை குறைவுள்ளவனாகவே இருக்கும்படி செய்தது. என் பரம பிதாவை நான் ஏமாற்றமடையச் செய்தது மட்டுமல்ல, என்னை நானே குற்றப்படுத்தி, என்னை நானே அடித்துக்கொள்கிறேன் என்று நான் நினைத்தேன். நான் சுயத்தால் தோல்வியடைந்தவனாய் இருந்தேன். என்னுடைய திறமைகள், மற்றும் திறமையின்மை ஆகியவற்றின்மீதே நான் கவனமாயிருந்தேன். என்னால் ஒருபோதும் மேலே வரவோ அல்லது, நல்ல நிலைக்கு வர, நற்பெயரைப் பெறுவதற்கு நான் தகுதியில்லாதவனாக இருந்தது, என்னை மீட்பதற்கு ஒருவர் தேவையாய் இருந்தது.

தேவன் தம்முடைய மிகுந்த கிருபையினால் நமக்கு உதவியை அனுப்பினார்; அந்த உதவியின் நாமம்தான் இயேசு. நம்மை நம் சுயத்திலிருந்தும், அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி நாம் முயற்சிசெய்யும் பெலனில்லாத முயற்சிகளிலிருந்தும் நம்மை விடுவிக்கவே இயேசுவை

அனுப்பினார். நியாயப்பிரமாணத்தை நாம் கைக்கொள்ள முடியாததினால் நமக்கு உண்டான தண்டனைகளை இயேசு தம்மீது ஏற்றுக்கொண்டார், ஆகவே நாம் மரிக்கத் தேவையில்லை, நாம் விடுதலையடைந்தவர்களாய் பாவத்திலிருந்து வெளிவந்து, அவரோடுகூட நித்தியஜீவனை அடையலாம். தமது நீதியையே இயேசு நமக்கு ஈவாக ஈந்துள்ளார், ஆகவே, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாம் நீதி, பரிசுத்தமுள்ளவர்களாய் இருந்து, நியாயப்பிரமாணத்தின் தேவைகளை நாம் சந்திக்கலாம். அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மூலமாக அவர் செய்த கிரியைகளினால் நாம் தேவனோடு சமாதானம் பெற்றோம். சம்பாதிக்க முடியாத, அதற்கு நாம் தகுதியில்லாத தேவதயவை நாம் பெற்றிருக்கிறோம், அதுதான் கிருபை.

இதை விசுவாசித்து, எவ்வித சந்தேகமுமின்றி உங்கள் இருதயம் ஸ்திரப்பட வேண்டும், உங்களை அவர் நேசிக்கிறபடியால் இவைகளைச் செய்தார். ஆகவே, அவருடைய கிருபையை நம்பி உங்கள் இருதயம் பலமாய், பாதுகாப்பாய், உறுதியாய், நிலையாய் இருப்பதாக; அதாவது இயேசுகிறிஸ்துவின் மூலமாக பரிபூரணமான வாழ்க்கை வாழும்படி, தேவன் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் தந்துள்ளார் என்று எவ்வித சந்தேகமும், கேள்வியுமின்றி உங்கள் இருதயம் நிலைவரப்பட்டிருப்பதாக.

நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாராமல், நம்முடைய குறைகள், பிழைகள் மற்றும் பாவங்களையே பார்த்துக்கொண்டிருந்தால், நம்முடைய இருதயம் சோர்வடைந்து, தேவனிடத்திலிருந்து எதையும் பெற முடியாதபடிக்கு பலவீனமடைந்து விடும். தேவனிடத்திலிருந்து அவருடைய நீதியையும் கிருபையையும் பெற்றுக்கொள்வதற்கு நம் இருதயத்தால்தான் நாம் விசுவாசிக்கிறோம். நம்முடைய இருதயம் முழுவதும் அவருடையதாய் இருப்பதாக. அப்பொழுதுதான் நாம் பரிபூரணமடைந்து இளைப்பாறுதல் - அமைதல் அடைவோம்.

*“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.”* (நீதிமொழிகள் 4:23)

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. இந்தப் பாடத்தில் “கிருபை” எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?

2. நம்முடைய இருதயம் கிருபையில் ஸ்திரப்படும்போது, தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நம்முடைய .......................................... மூலம் இனிமேலும் சம்பாதிக்க முயற்சி செய்ய வேண்டுவதில்லை.

3. வாசிக்க: எபிரெயர் 10:14. டான் அவர்களின் தவறுகள் எப்போதும் அவரை குறைவுள்ளவனாகவே இருக்கும்படி செய்தது. இந்த வசனத்தின்படி நாம் எவ்வாறு பூரணமாக்கப்பட்டிருக்கிறோம்?

   **எபிரெயர் 10:14 -** *“ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.”*

4. வாசிக்க: ரோமர் 5:17. பிதாவாகிய தேவனுக்கு முன்பக நாம் நீதியும் பரிசுத்தமுமுள்ளவர்களாயிருந்து, நியாயப்பிரமாணத்தின் தேவைகளைச் சந்திக்கும்படி, இயேசு நமக்கு நீதியென்னும் ................................ தந்திருக்கிறார்.

   **ரோமர் 5:17 -** *“ அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.”*

5. வாசிக்க: ஏசாயா 26:3. நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாராமல், நம்முடைய குறைகள், பிழைகள் மற்றும் பாவங்களையே பார்த்துக்கொண்டிருந்தால், நம்முடைய இருதயம் சோர்வடைந்து, தேவனிடத்திலிருந்து எதையும் பெற

முடியாதபடிக்கு பலவீனமடைந்து விடும். நம்முடைய இருதயம் எதன்மீது எதன்மீதே பதிந்திருக்க வேண்டும்?

**ஏசாயா 26:3 -** *"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்."*

6. வாசிக்க: எபேசியர் 3:17. நம்முடைய இருதயம் முழுவதும் அவருடையதாய் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம்.............................

**எபேசியர் 3:17 -** *"விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,"*

7. வாசிக்க: ரோமர் 4:5. இரட்சிப்பு என்பது நம்முடைய சுயகிரியைகளால் சம்பாதிக்கக் கூடிய ஒன்றா? அல்லது தேவனுடைய கிருபையினால் உண்டாகிற ஈவா?

**ரோமர் 4:5 -** *"ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்."*

8. வாசிக்க: ரோமர் 5:17. நீதி(தேவனுக்கு முன்பாக சரியான முறையில் நிற்பது) என்பது ஒரு ஈவு. நீங்கள் அதற்காக ஏதாவது கிரியை செய்ய வேண்டுமா?

**ரோமர் 5:17 -** *"அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே."*

9. வாசிக்க: ரோமர் 6:23. இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள தேவனுடைய கிருபையின் இலவச ஈவு என்ன?

**ரோமர் 6:23** - *"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."*

10. வாசிக்க: தீத்து 3:5. உங்களில் எத்தனைபேருடைய நற்கிரியைகள் மற்றும் செயல்கள் இரட்சிப்பில் பங்களிப்பாயிருக்கிறது?

**தீத்து 3:5** - *"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்."*

11. வாசிக்க: ரோமர் 6:14. கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்பது என்பதன் அர்த்தம் என்ன என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கவும்.

**ரோமர் 6:14** - *"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது."*

12. வாசிக்க: ரோமர் 11:6. "தேவனுடைய ஆசீர்வாதங்கள் நமக்கு கிருபையினால் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவை நம்முடைய ................................................ அல்ல.

**ரோமர் 11:6** - *"அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால், கிரியையானது கிரியையல்லவே."*

13. வாசிக்க: ரோமர் 3:24. இந்த வசனத்தின் அர்த்தம் என்ன என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கவும்.

**ரோமர் 3:24** - *"இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்."*

14. வாசிக்க: எபேசியர் 1:7. நம்முடைய பாவத்திற்கான மன்னிப்பு ........................................... உண்டாயிருக்கிறது.

**எபேசியர் 1:7** - *"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது."*

# பதில் ஆதாரங்கள்

1. இந்தப் பாடத்தில் "கிருபை" எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?

***நாம் சம்பாதிக்காத, நாம் அதற்கு தகுதியில்லாத தயவு மற்றும் தேவனுடைய பெலம் என்று.***

2. நம்முடைய இருதயம் கிருபையில் ஸ்திரப்படும்போது, தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நம்முடைய ........................................ மூலம் இனிமேலும் சம்பாதிக்க முயற்சி செய்ய வேண்டுவதில்லை.

***சாதனைகள்***

3. வாசிக்க: எபிரெயர் 10:14. டான் அவர்களின் தவறுகள் எப்போதும் அவரை குறைவுள்ளவனாகவே இருக்கும்படி செய்தது. இந்த வசனத்தின்படி நாம் எவ்வாறு பூரணமாக்கப்பட்டிருக்கிறோம்?

***இயேசுவின் பலியினாலே, அவர் நம்மை என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.***

4. வாசிக்க: ரோமர் 5:17. பிதாவாகிய தேவனுக்கு முன்பக நாம் நீதியும் பரிசுத்தமுமுள்ளவர்களாயிருந்து, நியாயப்பிரமாணத்தின் தேவைகளைச் சந்திக்கும்படி, இயேசு நமக்கு நீதியென்னும் ...................... தந்திருக்கிறார்.

***ஈவை.***

5. வாசிக்க: ஏசாயா 26:3. நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாராமல், நம்முடைய குறைகள், பிழைகள் மற்றும் பாவங்களையே பார்த்துக்கொண்டிருந்தால், நம்முடைய இருதயம் சோர்வடைந்து, தேவனிடத்திலிருந்து எதையும் பெற முடியாதபடிக்கு பலவீனமடைந்து விடும். நம்முடைய இருதயம் எதன்மீது எதன்மீதே பதிந்திருக்க வேண்டும்?

***கர்த்தர்மீதே நம்முடைய இருதயம் பதிந்திருக்கவேண்டும்.***

6. வாசிக்க: எபேசியர் 3:17. நம்முடைய இருதயம் முழுவதும் அவருடையதாய் இருக்கவேண்டும். அப்பொழுதுன் நாம்....................

***திருப்தியடைந்து, சமாதானத்துடன்-இளைப்பாறுதலுடன் இருப்போம்.***

7. வாசிக்க: ரோமர் 4:5. இரட்சிப்பு என்பது நம்முடைய சுயகிரியைகளால் சம்பாதிக்கக் கூடிய ஒன்றா? அல்லது தேவனுடைய கிருபையினால் உண்டாகிற ஈவா?

***தேவனுடைய கிருபையின் ஈவு.***

8. வாசிக்க: ரோமர் 5:17. நீதி(தேவனுக்கு முன்பாக சரியான முறையில் நிற்பது) என்பது ஒரு ஈவு. நீங்கள் அதற்காக ஏதாவது கிரியை செய்ய வேண்டுமா?

***இல்லை.***

9. வாசிக்க: ரோமர் 6:23. இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள தேவனுடைய கிருபையின் இலவச ஈவு என்ன?

***நித்தியஜீவன் (நித்திய மரணத்திற்குப் பதிலாக)***

10. வாசிக்க: தீத்து 3:5. உங்களில் எத்தனைபேருடைய நற்கிரியைகள் மற்றும் செயல்கள் இரட்சிப்பில் பங்களிப்பாயிருக்கிறது?

***ஒருவருடைய நற்கிரியைகளுமல்ல.***

11. வாசிக்க: ரோமர் 6:14. கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்பது என்பதன் அர்த்தம் என்ன என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கவும்.

***நம்முடைய பாவத்திற்குத் தக்க தண்டனையை நாம் பெறாமல், கிறிஸ்து மூலமாக தேவனுடைய சிறந்ததை நாம் பெறுகிறோம். நீதி, அங்கீகாரம், பாவமன்னிப்பு அனைத்தும் நம்முடையவை (தேவனுடைய இரக்கத்தினால் எல்லாம் இலவசமாக - ஈவாக கிடைக்கிறது).***

12. வாசிக்க: ரோமர் 11:6. “தேவனுடைய ஆசீர்வாதங்கள் நமக்கு கிருபையினால் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவை நம்முடைய ..................................................... அல்ல.”

***கிரியைகளினாலல்ல***

13. வாசிக்க: ரோமர் 3:24. இந்த வசனத்தின் அர்த்தம் என்ன என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்கவும்.

***சிலுவையில் கிறிஸ்து செய்த மீட்பின் கிரியையினிமித்தம், விசுவாசிகளுக்கு நீதி (நீதிமானாக்கப்படுதல்) என்பது தேவனுடைய கிருபையின் இலவச ஈவாக கிடைக்கிறது.***

14. வாசிக்க: எபேசியர் 1:7. நம்முடைய பாவத்திற்கான மன்னிப்பு ......................................... உண்டாயிருக்கிறது.

***அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே.***

## பாடம் 10

# இனிமேலும் பாவஉணர்வு இல்லை

***டான் க்ரோ***

ஒருநாள் ஒரு குடிகாரன் தன் காரை எடுத்துக்கொண்டு, தவறான பாதையில் ஓட்டிச் சென்றான்: அப்பொழுது இன்னொரு காரோடுகூட ஏற்பட்ட மோதலில், பதினெட்டு வயது பெண் ஒருவள் மரித்துப்போனாள். அந்தப் பெண்ணின் வீட்டார் அந்த மனிதன்மீது வழக்கு தொடர்ந்தபோது, அவன் அவர்களுக்கு பதினைந்து லட்சம் டாலர் தரவேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அவ்வளவு பெரிய தொகையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதில் அந்த மனிதன் தங்கள் குடும்பத்திற்கு 936 டாலர் மட்டும் தந்தால் போதும் என்று சொல்லி, நீதிமன்றத்தில் அதற்கான ஒப்புதலையும் பெற்றுக்கொண்டார்கள். அதற்குக் காரணம், இந்த மனிதன் அந்தத் தொகையை ஒரு குறிப்பிட்ட வழியில் செலுத்தவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். குடித்து, இந்த விபத்தை உண்டாக்கின மனிதன் தான் செய்ததை நினைவுகூர வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அதாவது, அந்த மனிதன் கொன்ற அந்த பெண்ணின் பெயரில் ஒரு டாலருக்கு ஒரு காசோலை எழுதி, வாரந்தோறும் செலுத்தவேண்டும் என்றார்கள். 15 லட்சம் டாலர் செலுத்துவதைவிட, வெறும் 936 செலுத்தவது என்பது ஒரு நல்ல செய்தி என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆரம்பத்தில் வாரம் ஒரு டாலர் செலுத்துவது என்பது சுலபம், ஆனால், கொஞ்சம் நாட்களுக்குப் பிறகு, அவன் கொன்ற அந்தப் பெண்ணின் பெயரை தொடர்ந்து எழுதுவது அந்த மனிதனின் சிந்தனையை அதிகமாக பாதித்தது. தான் கொன்ற அந்தப் பெண்ணைப் பற்றி நினைத்து, ஒவ்வொரு வாரமும் அவன் மனஅழுத்தத்திற்கு உள்ளானான்.

ஒரு சில வருடங்களுக்குப் பிறகு, அவ்வாறு பணம் செலுத்துவதை அவன் நிறுத்திவிட்டான். அந்தக் குடும்பம் அவனை மீண்டும் நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று, மீண்டும் அவன் அவ்வாறு பணம் கொடுக்கும்படி உத்தரவு பெற்றார்கள். கடந்த ஆறு அல்லது ஏழு வருடங்களில் நான்கு அல்லது ஐந்துமுறை அவன் அவ்வாறு பணம் செலுத்த தவறியிருந்தான். எனினும், அவ்வாறு அவன் தவறும் ஒவ்வொரு சமயத்திலும், அந்தக் குடும்பத்தினரால் அவன் நீதிமன்றம் கொண்டுசெல்லப்பட்டு, மீண்டும் அவன் தனது பணத்தை அவர்கள் சொன்னபடி செலுத்த வேண்டியதாயிற்று.

அவன்மீது இனிமேலும் எங்களுக்கு எந்த கோபமும் இல்லை, எனினும் அவன் செய்ததை அவன் நினைவுகூர வேண்டும் என்று அந்தக் குடும்பத்தார் சொன்னார்கள்.

இதைக் குறித்து நீங்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால், பணம் செலுத்துகிற அந்த மனிதன் ஒரு சிறையிருப்புக்குள் இருப்பதுபோலவே, அந்தக் குடும்பத்தாரும் இருந்தார்கள். ஒவ்வொரு வாரமும் அவர்கள் காசோலையைப் பெறும்போது, தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை அவர்களும் நினைவுகூருவார்கள்; ஆகவே ஒரு விதத்தில், தங்கள் மகளுடைய மரணத்தை அவர்களால் அவர்களுக்கு பின்னாக எரிந்துவிட முடியவில்லை.

இப்பொழுது அந்த மனிதன் அந்தக் குடும்பத்தின்மீது, "இது ஒரு கொடூரமான, வழக்கத்திற்கு மாறான தண்டனை; ஏனெனில், இந்தத் தண்டனை என்னைக் கொல்லுகிறது, இது என் வாழ்க்கையை அழிக்கிறது! கடந்ததை என்னால் மறக்கவே முடியவில்லை, இதினிமித்தம் என் வாழ்க்கையில் என்னால் முன்நோக்கி செல்ல முடியவில்லை" என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தான்.

இந்தக் கதையின் வெளிச்சத்தில், இதேவிதமான தண்டனையின்கீழ் இருக்கிற அநேக கிறிஸ்தவர்களை நான் சந்தித்திருக்கிறேன். "இயேசு உங்களுடைய தண்டனைகளுக்கான அனைத்து கிரயங்களையும் செலுத்திவிட்டார்" என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது, ஆனால், மதரீதியான கடமைகளான வார பாக்கியை தாங்கள் செலுத்தவேண்டும் என்பதுபோல நினைத்து செயல்படுகிறார்கள், இல்லாவிட்டால் தேவன் தங்களை

ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. இவ்விதமான காரியங்கள் போய்க் கொண்டிருக்கும்போது, இந்த மனிதன் அந்தக் குடும்பத்தினரோடு எவ்விதமான உறவைக் கொள்ள முடியும்?

2. வாசிக்க: எபிரெயர் 10:1. நியாயப்பிரமாணம் எதைச் செய்ய முடியாது?

   **எபிரெயர் 10:1-2** - *"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. (2) பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?"*

3. வாசிக்க: எபிரெயர் 10:1. பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகள் நம்மைப் பூரணமாக்குவதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்று சுட்டிக் காண்பிப்பதன் மூலம் இந்த வசனம் என்ன கூறுகிறது?

4. எபிரெயர் 10:2. செலுத்தப்பட்ட பலிகள் உண்மையிலே மனுஷ பாவங்களைத் தீர்க்கும் காரியங்களில் இடைபட்டிருக்குமானால், ஆராதனை செய்கிறவர்களை அது என்ன செய்திருக்கும்?

5. குடித்திருந்த அந்த ஓட்டுநர் என்ன செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்?

6. வாசிக்க: எபிரெயர் 10:14. தேவன் தமது ஜனங்களை,

   A. நற்கிரியைகளினால்

B. திருச்சபைக்குச் செல்வதன் மூலம்

C. பத்து கட்டளைகளை கைக்கொள்வதன் மூலம்.

D. இயேசுவின் காணிக்கையினாலே (பலியினால்) பூரணப்படுத்துகிறார்.

**எபிரெயர் 10:14 -** *"ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்."*

7. வாசிக்க: எபிரெயர் 10:14. இயேசுவின் பலி (விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளுதல்) விசுவாசிகளை பரிபூரணப்படுத்துகிறது:

A. அடுத்தமுறை அவர்கள் பாவம்செய்யும்வரை.

B. அவர்களுடைய கடந்தகால பாவங்களிலிருந்து.

C. என்றென்றைக்கும்.

8. வாசிக்க: ஆதியாகமம் 20:1-18. இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மனிதர்கள் யார்?

**ஆதியாகமம் 20:1-18 -** *"ஆபிரகாம் அவ்விடம் விட்டு, தென்தேசத்திற்குப் பிரயாணம்பண்ணி, காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி, கேராரிலே தங்கினான். (2) அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான். (3) தேவன் இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி: நீ அழைப்பித்த ஸ்திரீயினிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே என்றார். (4) அபிமெலேக்கு அவளைச் சேராதிருந்தான். ஆகையால் அவன்: ஆண்டவரே, நீதியுள்ள ஜனங்களை அழிப்பீரோ? (5) இவள் தன் சகோதரி என்று அவன் என்னோடே சொல்லவில்லையா? அவன் தன் சகோதரன் என்று இவளும் சொன்னாளே, உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்று சொன்னான். (6) அப்பொழுது தேவன்: உத்தம இருதயத்தோடே நீ இதைச் செய்தாய் என்று நான் அறிந்திருக்கிறேன்; நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்,*

ஆகையால், நீ அவளைத் தொட நான் உனக்கு இடங் கொடுக்கவில்லை. (7) அந்த மனுஷனுடைய மனைவியை அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு தீர்க்கதரிசி, நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்; நீ அவளை அனுப்பிவிடாதிருந்தால், நீயும் உன்னைச் சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்கள் என்று அறிவாயாக என்று சொப்பனத்திலே அவனுக்குச் சொன்னார். (8) அபிமெலேக்கு அதிகாலையில் எழுந்து, தன் ஊழியக்காரரையெல்லாம் அழைப்பித்து, இந்தச் சங்கதிகளையெல்லாம் அவர்கள் கேட்கும்படி சொன்னான்; அந்த மனுஷர் மிகவும் பயந்தார்கள். (9) அப்பொழுது அபிமெலேக்கு ஆபிரகாமை அழைப்பித்து: நீ எங்களுக்கு என்ன காரியம்செய்தாய், நீ என்மேலும் என் ராஜ்யத்தின்மேலும் கொடி பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்? செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தாயே என்றான். (10) பின்னும் அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி: என்னத்தைக் கண்டு நீ இந்தக் காரியத்தைச் செய்தாய் என்றான். (11) அதற்கு ஆபிரகாம்: இவ்விடத்தில் தெய்வபயம் இல்லையென்றும், என் மனைவினிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும் நான் நினைத்தேன். (12) அவள் என் சகோதரி என்பதும் மெய்தான், அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல, அவள் எனக்கு மனைவியானாள். (13) என் தகப்பன் வீட்டைவிட்டு தேவன் என்னை தேசாந்தரியாய்த் திரியும்படி செய்தபோது, நான் அவளை நோக்கி: நாம் போகும் இடமெங்கும் நீ என்னைச் சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச் செய்யவேண்டிய தயை என்று அவளிடத்தில் சொல்லியிருந்தேன் என்றான். (14) அப்பொழுது அபிமெலேக்கு ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவன் மனைவியாகிய சாராளையும் அவனிடத்தில் ஒப்புவித்தான். (15) பின்னும் அபிமெலேக்கு: இதோ, என் தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; உன் பார்வைக்கு சம்மதியான இடத்திலே குடியிரு என்று சொன்னான். (16) பின்பு சாராளை நோக்கி: உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன்; இதோ, உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும் மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக என்றான். இப்படி அவள் கடிந்து கொள்ளப்பட்டாள். (17) ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளினிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம்

*அடைத்திருந்தபடியால், (18) ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்."*

9. வாசிக்க: ஆதியாகமம் 20:2,5. இந்தச் சம்பவத்தில் மற்றவனிடம் பொய் சொல்லி, அவனை ஏமாற்றிய மனிதன் யார்?

**ஆதியாகமம் 20:2** - *"அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான்."*

**ஆதியாகமம் 20:5** - *"இவள் தன் சகோதரி என்று அவன் என்னோடே சொல்லவில்லையா? அவன் தன் சகோதரன் என்று இவளும் சொன்னாளே, உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்று சொன்னான்.*

10. வாசிக்க: ஆதியாகமம் 20:7. தேவன் ஆபிரகாமுடைய செயல்களை அங்கீகரிக்கவில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனினும், தேவன் யார் பட்சத்தில் இருந்தார். அபிலேக்கு பட்சமா- ஆபிரகாமின் பட்சமா?

ஏன்? வாசிக்க: ஆதியாகமம் 15:1.18; யாக்கோபு 2:23.

**ஆதியாகமம் 20:7** - *"அந்த மனுஷனுடைய மனைவியை அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு தீர்க்கதரிசி, நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்; நீ அவளை அனுப்பிவிடாதிருந்தால், நீயும் உன்னைச் சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்கள் என்று அறிவாயாக என்று சொப்பனத்திலே அவனுக்குச் சொன்னார்."*

**ஆதியாகமம் 15:1** - *"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி; அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே ; நான் உனக்குக் கேடகமும், உனக்க மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்."*

**ஆதியாகமம் 15:18** - *"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்,"*

**யாக்கோபு 2:23** - *"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்."*

11. வாசிக்க: ஆதியாகமம் 20:7 மற்றும் 17-18. ஆபிரகாம் தவறு செய்தபோதிலும், யாருக்காக ஜெபம்பண்ணவேண்டுமென்று தேவன் யாரிடம் சொன்னார்?

    A. ஆபிரகாம் அபிமெலேக்குக்காக ஜெபம்பண்ண வேண்டியதாய் இருந்தது.

    B. அபிமெலேக்கு ஆபிரகாமுக்காக ஜெபம்பண்ண வேண்டியதாய் இருந்தது.

    C. அவர்கள் இருவரும் ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணவேண்டியதாய் இருந்தது.

**ஆதியாகமம் 20:7** - *"அந்த மனுஷனுடைய மனைவியை அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு தீர்க்கதரிசி, நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்; நீ அவளை அனுப்பிவிடாதிருந்தால், நீயும் உன்னைச் சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்கள் என்று அறிவாயாக என்று சொப்பனத்திலே அவனுக்குச் சொன்னார்."*

**ஆதியாகமம் 20:17-18** - *"ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளினிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்தபடியால், (18) ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்."*

12. வாசிக்க: ரோமர் 8:31. சில நேரங்களில் நாம் தவறினாலும் யார் நம் பட்சத்தில் இருக்கிறார்?

**ரோமர் 8:31** - *"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"*

13. வாசிக்க: ரோமர் 4:8. நாம் பிழைகள், தவறுகள் செய்தாலும், தாம் என்ன செய்யமாட்டேன் என்று தேவன் சொல்லுகிறார்?

**ரோமர் 4:8** - *"எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்."*

14. வாசிக்க: எபிரெயர் 8:12-13. புதிய உடன்படிக்கையில், தாம் என்ன செய்யமாட்டேன் என்று தேவன் வாக்குபண்ணியிருக்கிறார்?

**எபிரெயர் 8:12-13** - *"ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது."*

15. வாசிக்க: எபேசியர் 2:5 மற்றும் 8,9. நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டோம்?

**எபேசியர் 2:5** - *"அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்,"*

**எபேசியர் 2:8,9** - *"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல."*

16. வாசிக்க: தீத்து 3:5. நாம் எப்படி இரட்சிக்கப்படுவதில்லை?

நாம் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறோம்?

**தீத்து 3:5 -** *"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்,"*

17. வாசிக்க: எபேசியர் 1:6. நம்மைத் தம்முடைய .................................. இரட்சித்ததினால், நித்தியம் முழுவதுமாக நாம் தேவனைத் துதிப்போம், ஏனெனில் அவர் தம்முடைய பிரியமானவர் மூலமாக ........................................................ கொள்ளப்பட்டோம்.

**எபேசியர் 1:6 -** *"தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாத் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்."*

# பதில் ஆதாரங்கள்

1. இவ்விதமான காரியங்கள் போய்க் கொண்டிருக்கும்போது, இந்த மனிதன் அந்தக் குடும்பத்தினரோடு எவ்விதமான உறவைக் கொள்ள முடியும்?

   ***முழுவதும் மன்னிக்காமை, கசப்பு, சண்டை போன்றதொரு உறவு.***

2. வாசிக்க: எபிரெயர் 10:1. நியாயப்பிரமாணம் என்னத்தைச் செய்ய முடியாது?

   ***பலிசெலுத்துகிறவர்களை பூரணமாக்க(கறைதிரை அற்றவர்களாக்க)***

3. வாசிக்க: எபிரெயர் 10:1. பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகள் நம்மைப் பூரணமாக்குவதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்று சுட்டிக் காண்பிப்பதன் மூலம் இந்த வசனம் என்ன கூறுகிறது?

   ***அந்தப் பலிகள் தினமும், வாரந்தோறும், மாதந்தோறும் மீண்டும் மீண்டும் செலுத்தப்பட்டுக்கொண்டே வந்தது. திரும்ப திரும்ப அவைகள் செலுத்தப்பட்டு வருகின்றன என்ற உண்மையே, அவைகள் மக்களுடைய பாவத்தோடு நிரந்தரமாக நீக்க முடியவில்லை என்பதை சுட்டிக்காண்பிக்கிறது.***

4. எபிரெயர் 10:2. செலுத்தப்பட்ட பலிகள் உண்மையிலே மனுஷ பாவங்களைத் தீர்க்கும் காரியங்களில் இடைபட்டிருக்குமானால், ஆராதனை செய்கிறவர்களை அது என்ன செய்திருக்கும்?

   ***இனிமேலும் பாவஉணர்வு தேவையில்லை என்று அவர்களுக்கு உணர்த்தியிருக்கும் (ஆனால், அதற்குப் பதில் எப்போதும் தோல்வியை நோக்கியே மக்களை தள்ளியது)***

5. குடித்திருந்த அந்த ஓட்டுநர் என்ன செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்?

***அவருடைய பாவத்தை எப்போதும் நினைக்கும்படியாக.***

6. வாசிக்க: எபிரெயர் 10:14. தேவன் தமது ஜனங்களை,

***இயேசுவின் காணிக்கையினாலே (பலியினால்) பூரணப்படுத்துகிறார்.***

7. வாசிக்க: எபிரெயர் 10:14. இயேசுவின் பலி (விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளுதல்) விசுவாசிகளை பரிபூரணப்படுத்துகிறது:

***என்றென்றைக்கும்.***

8. வாசிக்க: ஆதியாகமம் 20:1-18. இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மனிதர்கள் யார்?

***ஆபிரகாம் மற்றும் அபிமெலேக்கு.***

9. வாசிக்க: ஆதியாகமம் 20:2,5. இந்தச் சம்பவத்தில் மற்றவனிடம் பொய் சொல்லி, அவனை ஏமாற்றிய மனிதன் யார்?

***ஆபிரகாம்***

10. வாசிக்க: ஆதியாகமம் 20:7. தேவன் ஆபிரகாமுடைய செயல்களை அங்கீகரிக்கவில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனினும், தேவன் யார் பட்சத்தில் இருந்தார். அபிலேக்கு பட்சமா- ஆபிரகாமின் பட்சமா?

***ஆபிரகாமின்பட்சம்.***

ஏன்? வாசிக்க: ஆதியாகமம் 15:1.18; யாக்கோபு 2:23.

***ஏனெனில் ஆபிரகாமோடு தேவன் உடன்படிக்கை பண்ணியிருந்தார், அவன் தேவனுடைய சிநேகிதனென்று எண்ணப்பட்டான்.***

11. வாசிக்க: ஆதியாகமம் 20:7 மற்றும் 17-18. ஆபிரகாம் தவறு செய்தபோதிலும், யாருக்காக ஜெபம்பண்ணவேண்டுமென்று தேவன் யாரிடம் சொன்னார்?

***ஆபிரகாம் அபிமெலேக்குக்காக ஜெபம்பண்ண வேண்டியதாய் இருந்தது.***

12. வாசிக்க: ரோமர் 8:31. சில நேரங்களில் நாம் தவறினாலும் யார் நம் பட்சத்தில் இருக்கிறார்?

*தேவன்*

13. வாசிக்க: ரோமர் 4:8. நாம் பிழைகள், தவறுகள் செய்தாலும், தாம் என்ன செய்யமாட்டேன் என்று தேவன் சொல்லுகிறார்?

*நம்முடைய பாவங்களை எண்ணமாட்டார், நமக்கெதிராக நம் பாவங்களை வைத்துக்கொண்டிருக்கமாட்டார்.*

14. வாசிக்க: எபிரெயர் 8:12 -13. புதிய உடன்படிக்கையில், தாம் என்ன செய்யமாட்டேன் என்று தேவன் வாக்குபண்ணியிருக்கிறார்?

*நம் பாவங்களை நினைக்கமாட்டேன் என்று*

15. வாசிக்க: எபேசியர் 2:5 மற்றும் 8,9. நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டோம்?

*அவருடைய கிருபையினாலே; அதாவது, நாம் தகுதியில்லாதவர்களாய் இருந்தும், அவர் நம்மேல் வைத்துள்ள தயவு, இரக்கத்தினாலே.*

16. வாசிக்க: தீத்து 3:5. நாம் எப்படி இரட்சிக்கப்படுவதில்லை?

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம்.*

நாம் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறோம்?

*தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்,*

17. வாசிக்க: எபேசியர் 1:6. நம்மைத் தம்முடைய .................................. இரட்சித்ததினால், நித்தியம் முழுவதுமாக நாம் தேவனைத் துதிப்போம், ஏனெனில் அவர் தம்முடைய பிரியமானவர் மூலமாக ........................................................ கொள்ளப்பட்டோம்.

*கிருபையினால் / ஏற்றுக்கொள்ளப்பட்டோம், அங்கீகரிக்கப்பட்டோம்.*

## பாடம் 11

# நான் நேசிக்கப்பட்டவன், நான் அழகானவன்

*டான் க்ரோ*

ஒருநாள், மைக்கேல் என்னுடைய அலுவலகத்திற்குள் வந்து, தன்னுடன் பயிலும் இன்னொரு மாணவரைக் குறித்து, மிகவும் இரகசியமான ஒரு தகவலைப் பற்றி என்னிடம் கூறினான். Charis Bible College ல் நான் ஒருமுறை என்னுடைய பாடத்தை எடுத்துக்கொண்டிருக்கும்போது, பேக்டீரியா தன்னுடைய சட்ட திண்டுவில் (legal pad) ஏதோ எழுதிக் கொண்டிருப்பதுபோல தெரிந்து. அவள் எழுதிய அந்த வாசகம், "நான் நேசிக்கப்பட்டவள், நான் அழகானவள்," போன்றவை. அனைவரும் விரும்பும் வகையில் நேர்த்தியான, இயற்கையான முறையில் உடை உடுத்தி, அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் இனிமையான பெண் பேக்டீரியா. தான் ஒரு புறக்கணிக்கப்பட்ட, யாராலும் நேசிக்கப்படாத நபர் என்று அவர் நினைத்ததுதான் அவள் அந்த வாசகங்களை எழுதியதன் உண்மையான காரணமாகும்.

மனிதர்களாகிய நம் அனைவருடைய அடிப்படை தேவைகளும் இதுதான், மற்றவர்களால் நேசிக்கப்பட வேண்டும், அனைவரும் நம்மை ஏற்றுக்கொள்ளவேண்டும், மதிக்கவேண்டும், தேவனோடுகூட நாம் சரியான உறவில் இருக்கிறோம் என்ற நிச்சயமுடையவர்களாய் சுய மதிப்பு உடையவர்களாய் இருத்தல் ஆகியவைதான். உலகில் உள்ள அநேக மதங்கள், இன்று மக்களை, தான் ஒரு நேசிக்கப்படாத நபர், மற்றவர்களால் மதிக்கப்படாத, ஏற்றுக்கொள்ளப்படாத நபர் என்ற உணர்வுள்ளவர்களாவே வைத்திருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்தில் பல காரியங்களில் விசுவாசிகள் சமாதானத்தை அனுபவித்தாலும், குற்றவுணர்வு, ஆக்கினைத்தீர்ப்பு ஆகியவைகளைப் பயன்படுத்தி, சாத்தான் விசுவாசிகளை மிகப் பெரிய அரணுக்குள் வைத்திருக்கிறான்.

இங்கே ஒரு கேள்வி: முதன் முறையாக இயேசுகிறிஸ்துவை நீங்கள் ஏற்றுக்கொண்டபோது, இயேசு உங்களை நேசிக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லியிருப்பார்கள்; ஆனால், அவரை நீங்கள் உங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டதன் மூலம், அவர் உங்களுடைய பரிபூரணமான நீதியாக மாறிவிட்டார் என்பது உங்களுக்குச் சொல்லப்பட்டதா? அவர் உங்களுக்கு நீதியாக மாறிவிட்டார் என்பதுதான் உங்களுக்கு மிகவும் தேவையான ஒன்று. 1 கொரிந்தியர் 1:30,31 வசனங்களில், *"அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்களே.................. அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்"* என்று வாசிக்கிறோம். இதுதான் சுவிசேஷத்தின் நற்செய்தி. *"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது."* (ரோமர் 1:16,17) *"ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவ னாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்."* (ரோமர் 4:5) விசுவாசத்தில் விசுவாசம் வைக்கும்படியாக தேவன் நம்மை அழைக்கவில்லை, அல்லது ஏதாவது ஒரு ஆதாயத்திற்காக விசுவாசிக்கும்படி அழைக்கவில்லை; மாறாக, அவரை நம்பி, அவரைச் சார்ந்த வாழ்க்கை வாழும்படி நம்மை அழைத்திருக்கிறார்.

தேவன் உங்களை ஏற்கெனவே நேசித்திருக்கிறபடியால், இனிமேலும் புதிதாக,அதிகமாக தேவன் உங்களை நேசிக்க முடியாது (1 John 4:8). ஆனால், அந்த அன்பை நீங்கள் இன்னும் அதிகமாக பெற்றுக்கொள்ளலாம், அதிகமாக உணரலாம், இன்னும் அதிகமாக அனுபவிக்கலாம். அவரை எவ்வளவு அதிகமாக விசுவாசிக்கிறீர்களோ, உங்களை அவர் நேசிப்பதை அவ்வளவு அதிகமாக உணருவீர்கள். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" என்று வேதம் கூறுகிறது. (1 யோவான் 4:19). இதைக் குறித்துச் சிந்தித்து, விசுவாசித்து, அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: ரோமர் 8:38-39. அப்போஸ்தலனாகிய பவுல் எதைக் குறித்த நிச்சயமுள்ளவராயிருக்கிறார்?

   **ரோமர் 8:38,39** - *“மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயமுள்ளவனாயிருக்கிறேன்.”*

2. நான் வேதாகம கல்லூரியில் இருந்தபோது, எனக்குப் போதித்த பேராசிரியரில் ஒருவர், பின்வருமாறு ஒரு குறிப்பை எங்களுக்கு அனுப்பிவைத்தார். அதில்: “நீதிமானாக்கப்படுதல் என்பது நீதித்துறை சம்பந்தப்பட்ட ஒரு செயல், ஆகவே, விசுவாசிக்கிற எவனும் நீதிமான் என்று தேவன் அறிவித்திருப்பதன் மூலம் ஒருவர் நீதிமானாக மாறிவிடமுடியாது” என்று கூறியிருந்தார். அதன்பிறகு, வேதத்தை நானே ஆராய்ந்து பார்த்தபோது, நீதிமானாக்கப்படுதல் என்பது ஒரு இலவச நீதி என்றும், அதைத் தேவன் ஒருவருக்கு இலசமாக அளிக்கும்போது, அதை அந்த நபர் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய பார்வையில் அது நீதியாக எண்ணப்படுகிறது என்பது சரியே என்று அறிந்துகொண்டேன். தேவன் எந்த நீதிபதிகளைக் காட்டிலும் மேலானவர் அல்லவா! ரோமர் 5:19 ஐ வாசிக்க. இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதல் மூலம்(அவர் நியாயப்பிரமாணத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தும், சிலுவை தண்டனைக்குள் சென்றார், அது நமக்காகவே), அநேகர்:

   A. நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள்

   B. நீதிமான் என்று எண்ணப்பட்டனர்

C. நீதிமான்களாக்கப்பட்டார்கள்

**ரோமர் 5:19 -** *"அன்றியும், ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்."*

3. வாசிக்க: 2 கொரிந்தியர் 5:21. "நாம் அவருக்குள் ......................... பாவம் அறியாத அவரை (இயேசுகிறிஸ்துவை), தேவன் பாவமாக்கினார்." (அடைப்புக் குறி வார்த்தைகள் என்னுடையவைகள்)

**2 கொரிந்திர் 5:21 -** *"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை பாவமாக்கினார்."*

4. வாசிக்க: கொலோசெயர் 1:22,23. இயேசு இந்தப் பூமிக்கு வந்து, நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். அதினிமித்தம், தேவனுக்கு முன்பாக நாம் பரிசுத்தமுள்ளவர்களாக, குற்றமற்றவர்களாக, கண்டிக்கப்படாதவர்களாக நிற்கிறோம்:

A. உங்கள் மனைவியின் பார்வையில்

B. உங்கள் நண்பருடைய பார்வையில்

C. தேவனுடைய பார்வையில்

**கொலோசெயர் 1:22-23** - *"முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்."*

5. வாசிக்க: எபேசியர் 1:6. தேவன் தமது கிருபையினாலே நம்மை ..................................... நாம் நித்தியகாலம் முழுவதும் தேவனைத் துதித்துக்கொண்டே இருப்போம்.

**எபேசியர் 1:6** - *"தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறர்."*

6. வாசிக்க: எபிரெயர் 10:14. இயேசுகிறிஸ்துவின் சிலுவை தியாக பலியின் மூலமாக, நாம் பூரணமாக்கப்பட்டிருக்கிறோம். எதுவரைக்கும்?

   A. அடுத்தமுறை நீங்கள் பாவம் செய்கிறவரைக்கும்

   B. திருச்சபைக்கு நீங்கள் செல்கிறவரைக்கும்

   C. என்றென்றைக்கும்

**எபிரெயர் 10:14-17** - *"ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். (15) இதைக்குறித்துப் பரிசுத்தஆவியானவரும் நமக்குச் சாட்சியாகச் சொல்லுகிறார்; எப்படியெனில்: (16) அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து; அவைகளை அவர்களுடைய மனதிலே எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு, (17) அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்."*

7. வாசிக்க: எபிரெயர் 10:15-17. புதிய உடன்படிக்கையில், நம்முடைய பாவங்களை தேவன் எப்பொழுதெல்லாம் நினைவுகூருவதாக வாக்குப்பண்ணுகிறார்,

   A. நாம் பாவம் செய்யும் ஒவ்வொரு முறையும்'

   B. நம்முடைய தசமபாகங்களை நாம் செலுத்தாதபோது

   C. இனி ஒருபோதும் நினைவுகூருவதே இல்லை.

8. வாசிக்க: ரோமர் 6:1-2. நம்முடைய எல்லாப் பாவங்களைக் காட்டிலும் தேவனுடைய கிருபை மிகவும் பெரியது.

தேவனுடைய கிருபை இன்னும் நம்மேல் பெருகும்படிக்கு நாம் தொடர்ந்து பாவஞ்செய்யலமா?

**ரோமர் 6:1-2** - *"ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?"*

9. வாசிக்க: எபிரெயர் 9:12. இயேசு நமக்காக உண்டுபண்ணின மீட்பு (நம்முடைய பாவங்களினால் உண்டான தண்டனைகளிலிருந்து விடுதலை) எப்படிப்பட்டது?

    A. தற்காலிக மீட்பு

    B. ஒரு பகுதி மீட்பு

    C. நித்திய மீட்பு.

**எபிரெயர் 9:12** - *"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்."*

10. வாசிக்க: ரோமர் 8:33. தேவன் தெரிந்துகொண்டவர்களுக்கு விரோதமாக குற்றஞ்சாட்டுகிற ஒரு நபரைக் கூறுங்கள்.

**ரோமர் 8:33** - *"தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.*

11. வாசிக்க: ரோமர் 8:34. தேவன் தெரிந்துகொண்டவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற (அதாவது, நீதிமன்றம் கூறும் தண்டனைத்தீர்ப்பைப்போல அவர்கள்மேல் தண்டனைதீர்ப்புகூருதல்) யாராவது ஒரு நபரைக் கூறுங்கள்.

**ரோமர் 8:34,35** - *"ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. கிறிஸ்துவின்*

*அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பதவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, நாசமோசமோ, பட்டயமோ?"*

12. வாசிக்க: ரோமர் 8:35. தேவனுடைய அன்பைவிட்டு ஒரு கிறிஸ்தவனைப் பிரிக்கிற ஒரு நபரைக் கூறவும்.

13. வாசிக்க: ரோமர் 8:31. சீஷத்துவ பாடத்தின் இறுதியுரை என்ன?

**ரோமர் 8:31** - *"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: ரோமர் 8:38-39. அப்போஸ்தலனாகிய பவுல் எதைக் குறித்த நிச்சயமுள்ளவராயிருக்கிறார்?

***மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு தன்னைப் பிரிக்கமாட்டாதென்ற நிச்சயமுடையவராய் இருந்தார்.***

2. நான் வேதாகம கல்லூரியில் இருந்தபோது, எனக்குப் போதித்த பேராசிரியரில் ஒருவர், பின்வருமாறு ஒரு குறிப்பை எங்களுக்கு அனுப்பிவைத்தார். அதில்: “நீதிமானாக்கப்படுதல் என்பது நீதித்துறை சம்பந்தப்பட்ட ஒரு செயல், ஆகவே, விசுவாசிக்கிற எவனும் நீதிமான் என்று தேவன் அறிவித்திருப்பதன் மூலம் ஒருவர் நீதிமானாக மாறிவிடமுடியாது” என்று கூறியிருந்தார். அதன்பிறகு, வேதத்தை நானே ஆராய்ந்து பார்த்தபோது, நீதிமானாக்கப்படுதல் என்பது ஒரு இலவச நீதி என்றும், அதைத் தேவன் ஒருவருக்கு இலசமாக அளிக்கும்போது, அதை அந்த நபர் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய பார்வையில் அது நீதியாக எண்ணப்படுகிறது என்பது சரியே என்று அறிந்துகொண்டேன். தேவன் எந்த நீதிபதிகளைக் காட்டிலும் மேலானவர் அல்லவா! ரோமர் 5:19 ஐ வாசிக்க. இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதல் மூலம் (அவர் நியாயப்பிரமாணத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தும், சிலுவை தண்டனைக்குள் சென்றார், அது நமக்காகவே), அநேகர்:

***நீதிமான்களாக்கப்பட்டார்கள்***

3. வாசிக்க: 2 கொரிந்தியர் 5:21. “நாம் அவருக்குள் ......................... பாவம் அறியாத அவரை (இயேசுகிறிஸ்துவை), தேவன் பாவமாக்கினார்.” (அடைப்புக் குறி வார்த்தைகள் என்னுடையவைகள்)

## *நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு*

4. வாசிக்க: கொலோசெயர் 1:22,23. இயேசு இந்தப் பூமிக்கு வந்து, நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். அதினிமித்தம், தேவனுக்கு முன்பாக நாம் பரிசுத்தமுள்ளவர்களாக, குற்றமற்றவர்களாக, கண்டிக்கப்படாதவர்களாக நிற்கிறோம்:

## *தேவனுடைய பார்வையில்*

5. வாசிக்க: எபேசியர் 1:6. தேவன் தமது கிருபையினாலே நம்மை ...................................... நாம் நித்தியகாலம் முழுவதும் தேவனைத் துதித்துக்கொண்டே இருப்போம்.

## *பிரியமானவருக்குள் (இயேசு தேவனுடைய பிரியமானவர்) நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டோம்.*

6. வாசிக்க: எபிரெயர் 10:14. இயேசுகிறிஸ்துவின் சிலுவை தியாக பலியின் மூலமாக, நாம் பூரணமாக்கப்பட்டிருக்கிறோம். எதுவரைக்கும் ?

## *என்றென்றைக்கும்*

7. வாசிக்க: எபிரெயர் 10:15-17. புதிய உடன்படிக்கையில், நம்முடைய பாவங்களை தேவன் எப்பொழுதெல்லாம் நினைவுகூருவதாக வாக்குப்பண்ணுகிறார்,

## *இனி ஒருபோதும் நினைவுகூருவதே இல்லை.*

8. வாசிக்க: ரோமர் 6:1-2. நம்முடைய எல்லாப் பாவங்களைக் காட்டிலும் தேவனுடைய கிருபை மிகவும் பெரியது. தேவனுடைய கிருபை இன்னும் நம்மேல் பெருகும்படிக்கு நாம் தொடர்ந்து பாவஞ்செய்யலாமா?

## *அபச்சாரம். செய்யக்கூடாதே.*

9. வாசிக்க: எபிரெயர் 9:12. இயேசு நமக்காக உண்டுபண்ணின மீட்பு (நம்முடைய பாவங்களினால் உண்டான தண்டனைகளிலிருந்து விடுதலை) எப்படிப்பட்டது?

## *நித்திய மீட்பு.*

10. வாசிக்க: ரோமர் 8:33. தேவன் தெரிந்துகொண்டவர்களுக்கு விரோதமாக குற்றஞ்சாட்டுகிற ஒரு நபரைக் கூறுங்கள்.

***ஒருவனுமில்லை.***

11. வாசிக்க: ரோமர் 8:34. தேவன் தெரிந்துகொண்டவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற (அதாவது, நீதிமன்றம் கூறும் தண்டனைத்தீர்ப்பைப்போல அவர்கள்மேல் தண்டனைதீர்ப்புகூருதல்) யாராவது ஒரு நபரைக் கூறுங்கள்.

***ஒருவனாகிலும் இல்லை.***

12. வாசிக்க: ரோமர் 8:35. தேவனுடைய அன்பைவிட்டு ஒரு கிறிஸ்தவனைப் பிரிக்கிற ஒரு நபரைக் கூறவும்.

***ஒருவனும் இல்லை.***

13. வாசிக்க: ரோமர் 8:31. சீஷத்துவ பாடத்தின் இறுதியுரை என்ன?

***தேவன் நம்முடைய பட்சத்திலிருக்கிறார், ஆகவே நமக்கு விரோதமாயிருப்பவன் ஒருவனும் இல்லை.***

# பாடம் 12

# இரட்சிப்பின் கனி - பாகம் 1

*டான் க்ரோ*

ஒருமுறை தேவனை விசுவாசித்து, அதன்பிறகு அந்த விசுவாசத்தில் தொடராவிட்டால், அந்த விசுவாசம் ஒரு நபரை "இரட்சிக்குமா?" விசுவாசம் ஒழிந்துபோகக் கூடுமா? அப்படி விசுவாசம் ஒழிந்தும் வாக்குத்தத்தத்தைப் பெற இயலுமா? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ஆதி. 15:6). ஆபிரகாமின் விசுவாசம் ஒழிந்திருந்தால் (நின்றிருந்தால்), நீதியாக எண்ணப்பட்ட அந்த நீதியும் ஒழிந்துபோகுமோ?

வேதவாக்கியங்களிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவெனில், "விசுவாசம்" என்பது ஒருமுறை முழுமையாக செய்யப்படுகிறபோது தொடங்கப்படுகிற ஒரு செயல் (*கடந்த காலம்*), ஆனால் அந்த விசுவாசம், கிரேக்க நிகழ்காலத்தின்மூலம் வரும்போது, அது கிறிஸ்தவ வாழ்வில் தொடருகிறது. நிகழ்காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை, அது தொடரவேண்டும், அல்லது மீண்டும் மீண்டும் செய்யப்படவேண்டும், நடைமுறையில் இருக்கவேண்டும். நிகழ்காலத்தை நாம் பயன்படுத்தும்போது, பின்வரும் வசனங்களை அல்லது வாக்கியங்களை நாம் உபயோகிப்போம் எனில், அவர்/அவள் வேத வாக்கியங்களை நல்ல முறையில் புரிந்துகொள்வதற்கு நாம் உதவியாயிருக்க முடியும். இந்த வார்த்தைகள்: ***மீண்டும், மீண்டும்; அதாவது, தொடர்ச்சியாக, தொடர்ந்து, பழக்கம் அல்லது வாழ்க்கை முறையாக, தடையில்லாமல்.***

பின்வரும் வேத வசனங்கள் கிரேக்க பதத்தில் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதை கவனியுங்கள்.

**யோவான் 3:16 - "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன்** *(நிகழ்காலம், விசுவாசிக்கிறார், தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டே இருக்கிறார்)* **எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு,அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."**

**எபிரெயர் 10:14 - "ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.** *(நிகழ்காலம்: பிரித்தெடுக்கப்பட்டவர்களை, பிரித்தெடுக்கப்பட்டவர்களாகவே இருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அந்த ஒரே பலி பூரணப்படுத்தியிருக்கிறது.* NKJV *மொழிபெயர்ப்பில்,* பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் என்றும், NIV *மொழிபெயர்ப்பில்,* பரிசுத்தமாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் *"என்றும் கூறப்பட்டுள்ளது)".* (அடைப்புக் குறியில் உள்ளவை என் வார்த்தைகள்).

**1 யோவான் 3:9 - "தேவனால் பிறந்த எவனும்** *(நிகழ்காலம்: பாவஞ்செய்வதையே தன் வாழ்க்கை முறையாக கொள்ளாதவன், மனந்திரும்பாத இருதயத்தின்படி நடக்காதவன்)* **பாவஞ்செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள்** *(நிகழ்காலம்: தேவனுடைய வித்து அவனுக்குள் இருக்கிறது, தொடர்ந்து நிலைத்திருக்கிறது)* **தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யான்** *(நிகழ்காலம்: பாவஞ்செய்வதை தன் வாழ்க்கை முறையாக, தொடர்ச்சியாக செய்யமாட்டான்)."*

**மாற்கு 1:15 - "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி** *(நிகழ்காலம்: மனந்திரும்புகிறான், சூழ்நிலைகள் எதுவாயிருந்தாலும் தேவனை நோக்கி மனந்திரும்புகிறான்),* **சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்** *(நிகழ்காலம்: விசுவாசிக்கிறான், தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டே இருக்கிறான்)"*

**யோவான் 5:24 - "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு** *(நிகழ்காலம்: தொடர்ந்து விசுவாசித்தல்)* **நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே**

**மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.** (அடைப்புக் குறியில் உள்ளவை என் வார்த்தைகள்)."

**லூக்கா 15:7 - "அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற** *(நிகழ்காலம்: மனந்திரும்புதலில் நிலைத்திருக்கிறவன்)* **ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

**அப்போஸ்தலர் 17:30 - "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று** *(நிகழ்காலம்: தொடர்ந்து மனந்திரும்பிக்கொண்டே இருக்கவேண்டும்)* **எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்** *(நிகழ்காலம்: கட்டளையிடுகிறார் தொடர்ந்து கட்டளையிட்டுக்கொண்டே இருக்கிறார்."*

**யோவான் 6:47 - "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு** *(நிகழ்காலம்: தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டே இருத்தல்)* **நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

**ரோமர் 4:5 - "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால்** *(நிகழ்காலம்: தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டே இருத்தல்),* **அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்."**

**அப்போஸ்தலர் 26:20 - "முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக்** *(நிகழ்காலம்: தொடர்ந்து மனந்திரும்புதலில் நிலைத்திருத்தல்)* **குணப்படவும்** *(நிகழ்காலம்: தொடர்ந்து குணப்படுதல்),* **மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்ய வேண்டும்** *(நிகழ்காலம்: மனந்திரும்புகலை நிரூபிக்கிற கிரியைகளை*

*அல்லது செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும்).”*

***முடிவுரை:*** வேதவாக்கியங்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் நிகழ்காலம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திற்கேற்ற அந்த அனைத்து வசனங்களையும் இங்கே காண்பிப்பது என்னுடைய நோக்கமல்ல. அர்மீனியசம் மற்றும் கால்வனிசம் என்கிற இறையியல்கள் சில காரியங்களில் மாறுபட்டாலும், விசுவாசம் என்பது தொடர்ச்சியாக நடைபெறுகிற ஒரு செயல் என்று இரண்டும் கற்பிக்கின்றன.

கால்வனிசம், நித்திய பாதுகாப்பு உண்டென்று பலமாக அறிக்கையிடுகிறது, அதாவது உண்மையான விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் சில நேரங்களில் இடறக்கூடும், விழக்கூடும்; எனினும் அவர்கள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தப்படுவார்கள் (1 கொரி. 1:8) என்று போதிக்கிறது. நித்திய பாதுகாப்பை விசுவாசிக்கிறவர்கள், உண்மையான கிறிஸ்தவ விசுவாசிகள், தங்கள் ஜீவியத்தில் பாவத்திற்கு மரித்த, மற்றும் பாவத்தில் தொடர்ந்து வாழாத அனுபவங்களையும் பெற்றிருப்பார்கள் என்றும் விசுவாசிக்கிறார்கள் (ரோமர் 6:1-3). பிற்காலத்தில் கிறிஸ்துவைவிட்டு முற்றிலும் தூரம் செல்கிறவர்கள், தாங்கள் ஒருபோதும் உண்மையாய் மறுபடியும் பிறக்கவில்லை என்பதை காண்பிக்கிறார்கள் (1 யோவான் 2:19).

அர்மீனியன் இறையியலார்கள், விசுவாசிகள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து விழுந்துபோகக்கூடும் என்று போதிக்கிறார்கள். அர்மீனியன் பொதுவாக போதிக்கிறது என்னவெனில், விழுந்துபோகிறவர்கள் தங்கள் விசுவாசத்தை இழந்து, விட்டுவிடுவார்கள். பெயரளவில் கிறிஸ்தவர்களாய் இருப்பவர்கள், மனந்திரும்புதலை நிரூபிக்கும் கனி கொடாமல், முரட்டாட்டத்தில் வாழ்வதற்கும், வேண்டுமென்றே பாவம் செய்வதற்கும் அர்மீனியன் இறையியல் இடம் கொடுப்பதே இல்லை.

*“நமக்குப் பாமில்லையென்போமானால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்”* (1 யோவான் 1:8) என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறியுள்ளார்; அதேசமயம், *“தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்”* (1 யோவான் 3:9) என்றும் கூறியுள்ளார். இங்கே ஒரு முரண்பாட்டை காண்கிறோம், ஆனால், நிச்சயமில்லாத ஒரு தன்மை என்பது

வேதத்தில் கிடையாது. எல்லா கிறிஸ்தவர்களும் பாவம் செய்தாலும் (1 யோவான் 1:8); எல்லாக் கிறிஸ்தவர்களும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார்கள் என்பதும் உண்மை (1 யோவான் 2:3). பாவமும் ஜென்மசுபாவமும் கிறிஸ்தவர்களோடு இன்னும் இருக்கிறது, ஆனால் பாவம் அவர்களுடைய எஜமானாகவோ அல்லது அவர்களுடைய தனித்தன்மை வாய்ந்த பண்பாகவோ இருக்க முடியாது (1 யோவான் 3:9). பூரண நிலையை அடையாவிட்டாலும் மனந்திரும்புதல், விசுவாசம் ஆகியவற்றிற்குமனதில் மாற்றம், இருதய மாற்றம், பாதையில் ஒரு திருப்பம் ஆகியவை அவசியம் (அப். 26:18; 1 யோவான் 1:8). "கனி" என்பது விசுவாசத்தின் உண்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றின் பரிசோதனை. விசுவாசம் என்பது உண்மையான விசுவாசியின் சுபாவத்தை, அவருடைய செயல்களை ஆளுகை செய்கிற இயற்கைக்கப்பாற்பட்ட உறுதியான வழிநடத்துதல். விசுவாசத்திற்கு உதாரணமாக உள்ளவர்களைக் குறித்து எபிரெயர் 11ல் குறிபிப்பிடப்பட்டுள்ளவர்களின் வாழ்வில் இதைக் காண்கிறோம், விசுவாசம் என்பது அதோடுகூட வெளிப்படும் செயல்களிலும் வெளிப்படுகிறது. வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், நாம் எதை விசுவாசிக்கிறோமோ. அதுவே நம்மிலிருந்து செயலாக வெளிவரும். *"கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தைக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்"* என்று யாக்கோபு 2:18 கூறுகிறது.

விசுவாசத்தைக் குறித்து, அப்போஸ்தலர்கள் எதிர்மறையாக பேசும்போது, அதை "நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்" என்று குறிப்பிட்டுள்ளனர்; இரட்சிப்பை சம்பாதிப்பதற்கு ஒருவர் தன் சுயமுயற்சி செய்வதையும், அவராக சில கிரியைகளைச் செய்வதையுமே அது குறிக்கிறது.

நற்கிரியைகள் அல்லது விசுவாசத்தின் கிரியைகள் எனப்படுகிற இரட்சிப்பின் கனியைக் குறித்தும் வேதவாக்கியம் பேசுகிறது. அவைகள் மனந்திரும்புதல், விசுவாசத்திலிருந்து வெளிப்படுகிற கிரியைகள் அல்லது செயல்கள் (அப். 26:20; மத். 3:7-10, 1 தெச. 1:3; மற்றும் யாக்கோபு 2:14-26), இவைகள் இரட்சிப்பின் நிச்சயமாயிருக்கிறது. விசுவாசம் மற்றும் மனந்திரும்புதல் ஆகிய இரண்டிற்குமுள்ள ஐக்கியம் என்னவெனில், இவை இரண்டிலிருந்தும் வெளிப்படுகிற ஒரே கனி நற்கிரியைகள்தான். <u>நற்கிரியைகளினாலே</u> நாம் இரட்சிக்கப்படவில்லை, ஆனால் நாம் <u>நற்கிரியைகள்</u>

<u>செய்யும்படி</u> இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 2:8 - 10). கிரியைகள் என்பவைகள் விசுவாசத்தின் உண்மை, ஒருவருடைய வாழ்க்கை மற்றும் செயல்களை மாற்றாத கிருபை உண்மையான கிருபை என்று கருதமுடியாது (தீத்து 2:11-12). கனிகளினாலே உண்மையான விசுவாசிகள் யார் என்று அறியப்படுவார்கள் என்று இயேசு தமது போதனையில் கூறினார் (மத். 3:8; 7:16-20; 25:34-40; யோவான் 13:35; 14:23; அப். 26:20; ரோமர் 2:6 -11; யாக். 2:14-18 மற்றும் 1 யோவான் 3:10).

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. நிகழ்காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள் ....................

2. வாசிக்க: யோவான் 3:16. “கிரேக்கமொழியில் உள்ள நிகழ்காலத்தின்படி, யோவான் 3:16 என்ன குறிப்பிடுகிறது?”

   **யோவான் 3:16** - *“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”*

3. வாசிக்க: 1 யோவான் 3:9. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான். இதனர்த்தம் என்ன?

   **1 யோவான் 3:9** - *“தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.”*

4. வாசிக்க: லூக்கா 15:7. ............................... ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது.

   **லூக்கா 15:7** - *“அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.”*

5. வாசிக்க: அப். 17:30. எங்குமுள்ள மனுஷரெல்லாரும் ............................ என்று தேவன் கட்டளையிடுகிறார்.

   **அப். 17:30** - *“அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுதோ*

*மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்."*

6. அப்போஸ்தலர் 26:20. இந்த வசனம் எதைக் குறிப்பிடுகிறது?

**அப்போஸ்தலர் 26:20** - *"முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும்யூதேயாதேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்." (அப். 26:20)*

7. வாசிக்க: 1 யோவான் 2:3. தேவனோடுகூட தனிப்பட்ட ஐக்கியம்கொண்டிருப்பதன், அதாவது அவரை அறிவதன் மூலம் வெளிப்படுவது என்ன?

**1யோவான் 2:3** - *"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.*

8. வாசிக்க: யாக்கோபு 2:18. "கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தைக் காண்பி(இதைச் செய்வது கூடாதகாரியம்), நான் என் விசுவாசத்தை .......................... உனக்குக் காண்பிப்பேன்" என்று யாக்கோபு 2:18 கூறுகிறது.

**யாக்கோபு 2:18** - *"ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குகிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தைக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே."*

9. வாசிக்க: 1 தெசலோனிக்கேயர் 1:3. விசுவாசத்திலிருந்து வருகிற கிரியைகள், அல்லது செயல்கள் .................... என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**1 தெசலோனிக்கேயர் 1:3** - *"உங்கள் விசுவாசத்தின் கிரியையையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,"*

10. வாசிக்க: கலாத்தியர் 2:16,21. நியாயப்பிரமாணத்தின் கிரியை என்பது, இரட்சிப்பைப் பெறுவதற்கு மக்கள் செய்யும் செயல்கள் அல்லது.............................. (வசனம் 21). அவர்கள் இரட்சிக்க முடியாது, இரட்சிக்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை.

**கலாத்தியர் 2:16** - *"புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்."*

**கலாத்தியர் 2:21** - *"நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே."*

11. வாசிக்க: ரோமர் 2:7-10. எந்த இரண்டு குழு மக்களைக் குறித்து இந்த வசனங்கள் பேசுகின்றன?

**ரோமர் 2:7-10** - *"சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிரந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும், முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்."*

# பதில் ஆதாரங்கள்

1. நிகழ்காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள் ......................

***தொடரவேண்டும், மீண்டும் மீண்டும் செய்யப்படவேண்டும், செயல்படுத்தப்படவேண்டும்.***

2. வாசிக்க: யோவான் 3:16. கிரேக்கமொழியில் உள்ள நிகழ்காலத்தின்படி, யோவான் 3:16 என்ன குறிப்பிடுகிறது?

***“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன்(நிகழ்காலம்: விசுவாசிக்கிறான், தொடர்ந்து விசுவாசிக்கிறான்) எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”***

3. வாசிக்க: 1 யோவான் 3:9. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான். இதனர்த்தம் என்ன?

***“தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்*** *(நிகழ்காலம்: பாவம்செய்வது தன் வாழ்க்கை முறை என்பதுபோல அவன் தொடர்ந்து பாவஞ்செய்யமாட்டான்; மனந்திரும்பாத இருதயத்தை உடையவனாக காணப்படமாட்டான்).*

4. வாசிக்க: லூக்கா 15:7. ................................ ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது.

***மனந்திரும்புகிற, தொடர்ந்து மனந்திரும்புதலிலே நிலைத்திருக்கிற.***

5. வாசிக்க: அப். 17:30. எங்குமுள்ள மனுஷரெல்லாரும் .............................. என்று தேவன் கட்டளையிடுகிறார்.

***மனந்திரும்புங்கள், மனந்திரும்புதலிலே தொடர்ந்து நிலைத்திருங்கள்.***

6. அப்போஸ்தலர் 26:20. இந்த வசனம் எதைக் குறிப்பிடுகிறது?

**அப்போஸ்தலர் 26:20 "முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும்** *(நிகழ்காலம்: தொடர்ந்து மனந்திரும்புதலில் நிலைத்திருக்கவேண்டும்),* **மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும்** *(நிகழ்காலம்: உங்கள் மனந்திரும்புதலை நிரூபிக்கும் கிரியைகளை தொடர்ந்து செய்யுங்கள்)* **வேண்டுமென்று அறிவித்தேன்."**

7. வாசிக்க: 1 யோவான் 2:3. தேவனோடுகூட தனிப்பட்ட ஐக்கியம்கொண்டிருப்பதன், அதாவது அவரை அறிவதன் மூலம் வெளிப்படுவது என்ன?

***அவர் சொல்லுகிறதைச் செய்யவேண்டும், அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும்.***

8. வாசிக்க: யாக்கோபு 2:18. "கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தைக் காண்பி (இதைச் செய்வது கூடாதகாரியம்), நான் என் விசுவாசத்தை ........................ உனக்குக் காண்பிப்பேன்" என்று யாக்கோபு 2:18 கூறுகிறது.

***கிரியைகளினாலே, அல்லது நான் என்ன செய்கிறேன் என்பதன் மூலமாக.***

9. வாசிக்க: 1 தெசலோனிக்கேயர் 1:3. விசுவாசத்திலிருந்து வருகிற கிரியைகள், அல்லது செயல்கள் .................... என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

***விசுவாசத்தின் கிரியை.***

10. வாசிக்க: கலாத்தியர் 2:16,21. நியாயப்பிரமாணத்தின் கிரியை என்பது, இரட்சிப்பைப் பெறுவதற்கு மக்கள் செய்யும் செயல்கள் அல்லது............................ (வசனம் 21). அவர்கள் இரட்சிக்க முடியாது, இரட்சிக்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை.

***நீதி.***

11. வாசிக்க: ரோமர் 2:7-10. எந்த இரண்டு குழு மக்களைக் குறித்து இந்த வசனங்கள் பேசுகின்றன?

***விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள்.***

# பாடம் 13

# இரட்சிப்பின் கனி - பாகம் 2

***டான் க்ரோ***

*“இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல.”* (1யோவான் 3:10) இந்த வசனத்தைக் கவனித்துப் பாருங்கள். “இதினாலே நாம் நம்மை இரட்சித்துக்கொள்கிறோம்” என்று இந்த வசனம்சொல்லவில்லை. *“**இதினாலே** தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்று **வெளிப்படும்**”* என்று இந்த வசனம் கூறுகிறது.

*“அவர்களுடைய கனிகளினாலே **நீங்கள் அவர்களை அறிந்துகொள்வீர்கள்**”* (மத். 7:20) என்று இயேசு கூறினார்.

வேதத்தில், இரட்சிப்பைக் குறித்து தேவன் இரண்டு வழிகளில் பேசியுள்ளார். (1) கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்புஉண்டாகிறது (எபே. 2:8-9) (2) இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் நற்கிரியைகளை வெளிப்படுத்துவார்கள் (எபே. 2:10). விசுவாசியின் கனியைக் குறித்துப் பேசுவதற்கு நாம் ஏன் பயப்படுகிறோம்? அப்படிப்பட்ட பாடத்தைக் குறித்து பேசுவதற்கு வேதம் வெட்கப்படவில்லை. நாம் தேவனுடைய ராஜ்யத்தில், தேவனுடைய ஆளுகையின்கீழ் இருக்கிறோம் என்பதை ***நாம் இவ்விதமாகத்தான் அறிந்துகொள்கிறோம்,***

**1 யோவான் 2:3-5 - “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினாலே அறிவோம். “அவரை அறிந்திருக்கிறேன்” என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை.**

**அவருடைய வசனத்தைக் கைக்கொள்கிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்;** *நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை* **அதினாலே அறிவோம்."**

அவர் நீதியுள்ளவரென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்களெனில், நீதியைச் செய்கிற எவனும் அவரில் பிறந்தவனென்பதை அறிந்திருக்கிறீர்கள் (1 யோவான் 2:29). தேவனுடைய மற்றும் கிறிஸ்துவின் இயல்பு நீதியாகும், நீதியைக்கடைப்பிடிக்கும் ஒவ்வொருவரும் வருடைய இயல்பைப்பகிர்ந்து கொள்வதற்கான ஆதாரங்களைத்த ருகிறார்கள். யோவான் சொல்வதுபோல் அவரிடமிருந்து பிறந்தவர்களாவார்கள் என்பது அர்த்தமுள்ளதாக இருக்கிறது அல்லவா?

**1 யோவான் 3:5-10 - "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. அவரில் நிலைத்திருக்கிற** *(நிகழ்காலம்)* **எவனும் பாவஞ்செய்கிறதில்லை;** *(கிரேக்க மொழியில், இது நிகழ்காலத்தில் கூறப்பட்டுள்ளது; தொடர்ச்சியாக, பழக்கத்தில் செய்கிற செயல்களை குறிப்பிட்டுள்ளது. வேதத்தைப் படிக்கிற ஒரு நபர், வேத வாக்கியத்தை புரிந்துகொள்வதற்கு, தொடர்ந்து, மீண்டுமாக, மறுபடியும் மறுபடியும், எந்தவித தடையுமின்றி, தொடர்ச்சியாக படிப்பதை பழக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்).* **பாவம் செய்கிற** *(நிகழ்காலம்)* **எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை. பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன்** *(நிகழ்காலம்: தங்கள் வாழ்க்கையில் அதைப் பழக்கமாகக் கொண்டவர்கள், ஏனெனில் அது அவர்களுடைய இயற்கை சுபாவம்)* **அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிறவன்** *(நிகழ்காலம்: அது அவர்களுடைய இயற்கை சுபாவம் என்பதால் அதை தங்கள் வாழ்க்கை முறையாகக் கொண்டவர்கள்)* **பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்** *(நிகழ்காலம்: அது அவர்களுடைய பழக்கம், வாழ்க்கை முறை, மனந்திரும்பாத தங்கள் இருதயத்தை அவர்கள் காண்பிக்கிறார்கள்);* **ஏனெனில், அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன்**

**தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். No - one who is born of God will continue in sin** *(நிகழ்காலம்: நிறுத்தாமல் தொடர்ச்சியாக).* **இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும்** *(நிகழ்காலம்)* **இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல."** (அடைப்புக் குறியில் உள்ளவைகள் வேதாகமத்தில் உள்ள நேரடி அல்ல, என் வார்த்தைகள்). *(இதினாலே தேவனுடைய பிள்ளைகள் யாராயிருக்கிறார்கள் என்றும், பிசாசின் பிள்ளைகள் யாராய் இருக்கிறார்கள் என்றும் அறிவோம்" என்று யோவான் கூறுகிறார். நீதி மற்றும் அன்பை பயிற்சி செய்யாதவர்கள், பிதாவின் சுபாவத்தை உடையவர்கள் அல்ல. மறுபடியும் பிறந்தவர்களின் இவ்விதமான சாட்சி முக்கியமானது இல்லையா?)*

**1 யோவான் 3:14 -** *நாம்* **சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால்,** *மரணத்தைவிட்டு நீங்கி* **ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று** *அறிந்திருக்கிறோம்;* **சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்.**

**1 யோவான் 4:6 - "நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச்** *(அப்போஸ்தலர்களுக்கு)* **செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்கு** *(அப்போஸ்தலர்களுக்கு)* **செவிகொடுக்கிறதில்லை;** *இதினால்* **சத்தியஆவி** *இன்னதென்றும்,* **வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்."**

**1 யோவான் 4:8 - "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்."** *(ஒரு விசுவாசியின் அடையாளம் அன்பு, ஏனெனில், அன்புதான் தேவனுடைய சுபாவம்).*

**1 யோவான் 5:2 - "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து** *(நிகழ்காலம்: தொடர்ந்து அவரில் அன்புகூருதல்),* **அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது** *(நிகழ்காலம்: தொடர்ந்து கற்பனைகளைக் கைக்கொள்ளுதல்),*

**தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்கிறோம்."**

**1 யோவான் 5:18-19 - "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று** *(நிகழ்காலம்: அதை வாழ்க்கை முறையாகக் கொண்டு, மனந்திரும்பாத தங்கள் இருதயத்தைக் காண்பிக்கிறார்கள்) அறிந்திருக்கிறோம்*; **தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்** (KJV மொழிபெயர்ப்பில் - தன்னைக் காக்கிறான், தொடர்ந்து தன்னைக் காத்துக்கொண்டிருக்கிறான் என்று நிகழ்காலத்தில் கூறப்பட்டுள்ளது), **பொல்லாங்கன் அவனைத் தொடான். (19) நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும்** *நாம் அறிந்திருக்கிறோம்* (அடைப்புக் குறியில் உள்ள விளக்கம் என்னுடையவை)."

**அப்போஸ்தலனாகிய யோவான் இவையனைத்தையும் நம்மோடு ஏன் பகிர்ந்துகொள்கிறார்?** "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்." (1 யோவான் 5:13)

*முடிவுரை:* நீதி, பரிசுத்தம், அன்பு மற்றும் தேவனுடைய ஆவியின் கனி ஆகியவையே மறுபடியும் பிறந்ததற்கான அடையாளம். தேவபக்தியற்ற வாழ்க்கையை நீ வாழும்போது, நீ அவருக்கு (தேவனுக்கு) சொந்தம் என்ற நம்பிக்கை உனக்கே இல்லாமற்போகிறது. உன் மனச்சாட்சி உன்னைக் குற்றப்படுத்துகிறது, ஆகவே தேவன்மேல் நம்பிக்கை வைக்க உன்னால் முடியாமற்போகிறது. உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு அறிவுறுத்துகிறார் (2 பேதுரு 1:10). தேவனுடைய மகிமையான சுவிசேஷத்திற்கேற்ற வாழ்க்கை வாழ்வதன் மூலம், உண்மையிலே நீ தேவனுக்குச் சொந்தமானவன் என்பதை உன் இருதயத்திற்கு உணர்த்து. "இப்படித்தான் நாம் இரட்சிக்கப்பட்டோம்" என்று நான் சொல்லவில்லை; *"தேவனுக்கு நாம் சொந்தமானவர்கள் என்பதை இதினாலே அறிந்திருக்கிறோம்."*

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: அப்போஸ்தலர் 8:13 மற்றும் 18-22. ஒரு உண்மையான விசுவாசியின் "கனி," அல்லது அடையாளம் என்ன என்பதைக் குறித்து யோவான் முதலாவது பேசுகிறார். இவையெல்லாம் இருதயத்திலிருந்து வருகிற காரியங்கள், ஒரு விசுவாசியின் இருதயம் (சீமோனைப் போல) உண்மையில்லாததாக காணப்படும்போது, அவர்கள் செய்யவேண்டியது என்ன?

   **அப்போஸ்தலர் 8:13** - *"அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்."*

   **அப்போஸ்தலர் 8:18-22** - *"அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: (19) எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். (20) பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. (21) உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. (22) ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்."*

2. வாசிக்க: 2 பேதுரு 1:5-11. தேவன் அழைத்த, தெரிந்துகொண்டவர்களின் மத்தியில் ஒரு நபர் இருக்கிறார் என்பதற்கான உண்மையான அடையாளம், நிச்சயம் என்ன?

**2 பேதுரு 1:5-11** - *“இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், (6) ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், (7) தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். (8) இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. (9) இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான். (10) ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. (11) இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.”*

3. வாசிக்க: மத்தேயு 25:34-40. இந்த வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள விசுவாசிகளின் தன்மைகள் என்னென்ன?

**மத்தேயு 25:34-40** - *“அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (35) பசியாயிருந்தேன். எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; (36) வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன். என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்; (37) அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? (38) எப்பொழுது உம்மை*

*அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? (39) எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். (40) அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். "*

4. வாசிக்க: யோவான் 13:35. இயேசுவின் சீஷர்கள் எதனால் அறியப்படுவார்கள்?

**யோவான் 13:35 -** *"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்."*

5. வாசிக்க: மத்தேயு 7:21-23. இந்தத் தனிப்பட்ட நபர்கள் தேவனுடைய ராஜ்யத்தைவிட்டு திரும்பிப் போக காரணம் என்ன?

**மத்தேயு 7:21-23 -** *"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே, கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (22) அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோமல்லவா?என்பார்கள். (23) அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."*

6. யோவான் 14:23. ஒரு நபர் இயேசுவை நேசித்தால், அவர் என்ன செய்வார்?

**யோவான் 14:23 -** *"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என்*

*வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்."*

7. வாசிக்க: அப்போஸ்தலர் 26:20. இந்த வசனம் என்ன சொல்லுகிறது?

**அப்போஸ்தலர் 26:20 -** *"முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயாதேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்."*

8. வாசிக்க: யாக்கோபு 2:17. உன் விசுவாசம் நற்கிரியைகள் மூலம், அல்லது செயலில் வெளிப்படாவிட்டால், அது என்ன விதமாக விசுவாசம்?

**யாக்கோபு 2:17 -** *"அப்படியே, விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால், தன்னிலேதானே செத்ததாயிருக்கும்."*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: அப்போஸ்தலர் 8:13 மற்றும் 18-22. ஒரு உண்மையான விசுவாசியின் “கனி,” அல்லது அடையாளம் என்ன என்பதைக் குறித்து யோவான் முதலாவது பேசுகிறார். இவையெல்லாம் இருதயத்திலிருந்து வருகிற காரியங்கள், ஒரு விசுவாசியின் இருதயம்(சீமோனைப் போல) உண்மையில்லாததாக காணப்படும்போது, அவர்கள் செய்யவேண்டியது என்ன?

   ***இருதயத்தின் எண்ணம் மன்னிக்கப்பட,துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டும்.***

2. வாசிக்க: 2 பேதுரு 1:5-11. தேவன் அழைத்த, தெரிந்துகொண்டவர்களின் மத்தியில் ஒரு நபர் இருக்கிறார் என்பதற்கான உண்மையான அடையாளம், நிச்சயம் என்ன?

   ***அவர்கள் தங்கள் விசுவாசத்தோடுகூட ஆவியின் குணாதிசயங்கள் மற்றும் தங்களுடைய புதிய சுபாவத்தின் தன்மைகளாகிய இவைகள் அனைத்தையும் கொண்டிருப்பார்கள்.***

3. வாசிக்க: மத்தேயு 25:34-40. இந்த வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள விசுவாசிகளின் தன்மைகள் என்னென்ன?

   ***பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரம் கொடுத்தல், வியாதியாயிருக்கிறவர்களை சந்தித்தல், வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்தல், காவலிலிருக்கிறவர்களைச் சந்தித்தல் போன்ற நடைமுறை நற்கிரியைகளைச் செய்தல், இதுவே விசுவாசத்தின் கிரியைகள்.***

4. வாசிக்க: யோவான் 13:35. இயேசுவின் சீஷர்கள் எதனால் அறியப்படுவார்கள்?

   ***ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருத்தல்.***

5. வாசிக்க: மத்தேயு 7:21-23. இந்தத் தனிப்பட்ட நபர்கள் தேவனுடைய ராஜ்யத்தைவிட்டு திரும்பிப் போக காரணம் என்ன?

***அவர்கள் அக்கிரமச் செய்கைக்காரர். வேதம் எழுதப்பட்ட கிரேக்க மொழிபெயர்ப்பில், நிகழ்காலம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, அக்கிரமம், அநியாயம் செய்தல் அவர்கள் வாழ்க்கைமுறை, அவர்கள் சுபாவமாக இருந்தது. அவர்களை தாம் ஒருபோதும் அறியவில்லையென்று இயேசு கூறுகிறார். அவர்கள் தங்கள் இருதயம், மனதை மாற்றிக்கொள்ளாத, தேவனிடம் மனந்திரும்பாத மதரீதியான மக்கள்.***

6. யோவான் 14:23. ஒரு நபர் இயேசுவை நேசித்தால், அவர் என்ன செய்வார்?

***அவருடைய வசனத்தைக் கைக்கொள்வார், அல்லது அவர் சொல்வதை செய்வார்.***

7. வாசிக்க: அப்போஸ்தலர் 26:20. இந்த வசனம் என்ன சொல்லுகிறது?

***நீ செய்கின்ற செயல் மூலம் உன் மனந்திரும்புதலை நிரூபி.***

8. வாசிக்க: யாக்கோபு 2:17. உன் விசுவாசம் நற்கிரியைகள் மூலம் அல்லது செயலில் வெளிப்படாவிட்டால், அது என்ன விதமாக விசுவாசம்?

***செத்த விசுவாசம், இரட்சிப்பதற்கு உதவாத விசுவாசம் (யாக்கோபு 2:14).***

## பாடம் 14

# சீஷத்துவத்திற்கு ஓர் அழைப்பு

*ஆன்ட்ரூ வோமக்*

ஒரு சீஷனாய் இருப்பது எப்படி என்றும், மற்றவர்களை சீஷராக்குவது எப்படி என்றும் இன்று நாம் பேசப் போகிறோம். போய் ஜனங்களை மனமாற்றம் செய்யுங்கள் என்றோ, இயேசுதான் ஆண்டவர் என்று அவர்கள் அறிக்கைசெய்து, அவர்கள் பாவமன்னிப்பு பெறும்படி செய்யுங்கள் என்றோ இயேசு கூறவில்லை, மாறாக, அவர்களை சீஷராக்குங்கள் என்றுதான் கூறினார். இதில் முதல் இரண்டும் மிக முக்கியமானவைதான், அவைகளின் முக்கியத்துவத்தை நான் குறைக்கவில்லை; உண்மையான நோக்கம், மறுபடியும் பிறந்த அனுபவத்தையும் தாண்டி, ஆவிக்குரிய ஜீவியத்தில் முதிர்ச்சியடைய வேண்டும் என்பதே முக்கியமானதாகும். ஒரு கிறிஸ்தவனின் குறிக்கோள், அவன் சீஷனாய் இருக்கவேண்டும், போய் மற்றவர்களையும் சீஷராக்கவேண்டும்.

இயேசு நம்மைப் பார்த்து: நீங்கள் போய் மக்களை சீஷராக்குங்கள், அவர்களை முதிர்ச்சியடைந்த நிலைக்குள் கொண்டு வாருங்கள்; அவர்கள்போய் அப்படிப்பட்ட மற்றவர்களையும் உருவாக்கட்டும் என்றுதான் கூறினார். இன்றைய நமது திருச்சபை உலகம் இதைச் செய்யவில்லை. மக்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்பதில் மாத்திரம் நாம் கவனம் செலுத்துகிறோம், அதோடுகூட, அவர்களுக்கென்று கிளர்ஜி அல்லது ஊழியக்காரர்கள் என்று ஒரு பட்டத்தை மட்டும் கொடுத்துவிடுகிறோம். உலகம் முழுவதும் சென்று, பெரிய பெரிய சுவிசேஷ கூட்டங்கள் நடத்தி, ஆயிரக்கணக்கானோர் இயேசுவை ஏற்றுக்கொள்வதாக அறிக்கையிடும்படி செய்கிற சுவிசேஷகர்கள் இன்று நம் மத்தியில் இருக்கிறார்கள். அப்படி இயேசுவை ஏற்றுக்கொள்கிறவர்களில், சிலர் உண்மையிலே மறுபடியும் பிறக்கிற அனுபவத்தையும் பெறுவதில்லை, அந்த நேரத்தில் ஏதோ உணர்ச்சிபூர்வமாக இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறார்கள், அவ்வளவுதான். அதேசமயம்,

உண்மையாகவே மறுபிறப்பின் தன்மையை உடைந்து, தேவனோடுகூட நல்ல ஐக்கியத்தில் இருக்கிற மக்களும் உண்டு. அநேக நேரங்களில், சீஷராக மாறவேண்டும் என்று முக்கியப்படுத்துவதில்லை; இப்படிச் செய்வது தேவனுடைய எதிர்பார்ப்பு அல்ல.

குழந்தைகளை நேசிக்கிற ஒரு நபருக்கு இதை நான் ஒப்பிடுகிறேன். அது எப்படியெனில், அந்த நபர் குழந்தையைப் பார்த்து ரசிப்பது, அந்தக் குழந்தையை கொஞ்சம் நேரம் தூக்கிக் கொஞ்சுவது மாத்திரம்தான் அவரது ஆவலேயன்றி, அந்தக் குழந்தைக்கு இவர் பொறுப்பாளியாக இருக்கவேமாட்டார். உங்களுக்கு ஒரு குழந்தைப் பிறக்கும்போது, அந்தக் குழந்தையைப் பராமரித்து, பயிற்றுவித்து, அதை பெரியாளாக மாற்றுவதுதான் உங்கள் கடமையாக இருக்கும். நமக்கிருக்கிற ஜனங்கள் எல்லாரும், “மறுபடியும் பிறக்கவேண்டும், இயேசுவை அவர்கள் கர்த்தர் என்று அறிக்கைபண்ண வேண்டும்” அவ்வளவுதான் நம்முடைய எதிர்பார்ப்பு. நாம் அப்படி செய்யும்போது, உண்மையில் செய்வது என்னவெனில், அவர்கள் முதுகில் தட்டிக்கொடுத்து: “இப்பொழுது நீ ஒரு கிறிஸ்தவன்” என்று கூறுகிறோம், அவ்வளவுதான். தேவனை விசுவாசி, பைபிளைப் படி; அவ்வளவுதான் எல்லாம் உன் வாழ்வில் சரியாயிருக்கும் என்று கூறுகிறோம். ஆனால், கர்த்தர் முக்கியப்படுத்துவது இது மட்டுமல்ல.

இதினிமித்தம், நாம் அநேக ஜனங்களை உருவாக்கியிருக்கிறோம், அவர்களும் உள்ளப்பூர்வமாக தங்களை கர்த்தருக்கு ஒப்புவித்திருக்கிறார்கள், ஆனால், ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் முதிர்ச்சியடையவில்லை. கையேடு உதவிகள் இல்லாத காணரத்தால், அவர்கள்ள தங்கள் விசுவாசத்தை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்த இயலாதவர்களாய் இருக்கிறார்கள். இயேசுவுக்கு நல்ல சாட்சியாய் இருப்பதற்குப் பதிலாக, மற்றவர்கள் இடறுகிறதற்கேற்ற சாட்சிகளாய் மாறிவிடுகிறார்கள். நாம் வெளியே புறப்பட்டுப்போய், முழு உத்வேகத்துடன் செயல்படுகிற சீஷர்களை உருவாக்கவேண்டுமென்றும், அப்படி உருவாக்கப்பட்டவர்களும் தங்கள் விசுவாசத்தை மற்றவர்களுக்குள் மறுஉற்பத்தி செய்கிறவர்களாய் மாறவேண்டும் என்ற நோக்கத்தில்தான், இயேசு நம்மைப் பார்த்து: “புறப்பட்டுப்போங்கள்” என்றார்.

ஒவ்வொரு ஆறு மாதமும் நீங்கள் ஒரு நபரைக் கர்த்தருக்குள் நடத்தி, உங்கள் நேரத்தை அவர்களுக்கென்று செலவழித்து, தங்கள் விசுவாசத்தை மற்றவர்களுக்குள் உருவாக்கும் அளவுக்கு, அவர்கள் பூரண கிறிஸ்தவர்களாகும் நிலைக்கு அவர்களை சீஷராக்குவீர்களென்றால், ஆறு மாத முடிவில், இரண்டு கிறிஸ்தவர்கள் மாத்திரம் இருப்பார்கள். அதன்பிறகு, நீங்கள் இருவரும், ஒவ்வொரு நபரை கிறிஸ்துவுக்குள் நடத்தி, உங்கள் நேரத்தை அவர்களுக்கென்று செலவழித்து, அவர்களை சீஷராக்குவீர்களென்றால், ஒரு வருட முடிவில் நான்கு கிறிஸ்தவர்கள் இருப்பார்கள். ஒரு பெரிய சுவிசேஷ கூட்டம் நடத்தி, அதன்மூலம் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கைசெய்ய வைக்கிற ஒரு பெரிய சுவிசேஷகரை ஒப்பிடும்போது, இதெல்லாம் ஒன்றுமில்லை என்பதுபோல தோன்றும். “இந்தச் சீஷத்துவ முறையைப் பின்பற்றினால், வருஷத்திற்கு வெறும் நான்குபேர்தான் சீஷர்களாக உருவாவார்கள், ஆனால், சுவிசேஷ கூட்டம் நடத்துகிறவரோ ஆயிரக்கணக்கானோரை கர்த்தருக்குள் கொண்டு வருகிறார். நாமோ ஒவ்வொருவராய்த் தேடிப் போய்க்கொண்டிருக்க வேண்டும்” என்று நீங்கள் சொல்லக்கூடும். ஒருவேளை நீங்கள் நினைக்கிறபடி, ஒரே நேரத்தில் ஆயிரம்பேரை கர்த்தருக்குள் நடத்துகிற நபர், மொத்தமாக ஒருவேளை ஒரு 35,000 (முப்பத்தையாயிரம்) நபர்களை கர்த்தருக்குள் நடத்தக்கூடும். அது நல்லதுதான், அதை யாரும் குறைகூறமாட்டார்கள்; ஆனால், முழு உலகத்திலுள்ள மொத்த மக்கள் தொகையைக் கணக்கிடும்போது, அது ஒரு வாளியில் உள்ள ஒரு சொட்டு தண்ணீருக்குச் சமம். ஆனால், திருச்சபை அப்படித்தான் செயல்பட்டு வருகிறது.

சீஷத்துவத்தை நாம் முக்கியப்படுத்துவோமெனில், ஒரு நபர் ஆறு மாதத்திற்குள் ஒரு நபரை நடத்தி, அடுத்த ஆறு மாதத்தில் அந்த இரண்டுபேரும் வேறு இரண்டுபேரை சீஷர்களாக உருவாக்கி, அப்படியே அந்த நான்குபேர் அடுத்த ஆறு மாதத்தில் இன்னும் நான்குபேர், இப்படி தொடர்ச்சியாக செய்துகொண்டே இருந்தால், 12 ½ (பன்னிரண்டரை) ஆண்டுகளுக்குள், உலகில் உள்ள மொத்த மக்கள் தொகையை விட அதிக மக்களை கர்த்தருக்குள் நடத்திவிட முடியும். இதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று சிலர் நினைக்கக்கூடும், ஆனால், இதைக் கணக்கிட்டுப் பார்க்கும்படி நான் உங்களுக்குச் சவால் விடுகிறேன். நான் இதைக் கணக்குப் போட்டுப் பார்த்தேன், பன்னிரண்டரை ஆண்டுகளுக்குள், ஒரு

நபர், இன்னொரு நபர், அதன்பிறகு அந்த இருவரும் இன்னும் இருவர், அந்த நான்குபேர் இன்னும் நான்குபேர், அந்த எட்டு நபர்கள் இன்னொரு எட்டு நபர்கள் என்று கிறிஸ்துவின் சரீரத்திற்குள் மறுஉற்பத்தி செய்துகொண்டே இருந்தால், பன்னிரண்டரை ஆண்டுகளுக்குள் 5.5 பில்லியன் (ஐந்நூற்று ஐம்பது கோடி) மக்களை கர்த்தருக்குள் நடத்திவிடலாம்.

கர்த்தருக்குள் வெற்றியை அனுபவித்து, ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த நிலையை உடையவர்களாகிய நீங்கள், மற்றவர்களையும் கர்த்தருக்குள் நடத்தவேண்டும் என்ற வாஞ்சையுள்ளவர்களாய் நீங்கள் எங்கள் திட்டத்தில் இணைந்து, பயிற்சிபெறுகிறவர்களாய் மட்டுமல்ல, மற்றவரை பயிற்றுவிக்கிற பயிற்சியாளராய் நீங்கள் மாறுவீர்களென்றால், மற்ற நபரை சீஷராக்குகிற அளவுக்கு கர்த்தருக்குள் நீங்கள் முதிர்ச்சியடைந்த நபராய் இருப்பீர்களென்றால், நடைபெறும் சில காரியங்களை இங்கே நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறோம். ஒரு வருடத்தில் நீங்கள் ஒரே ஒரு நபரை சீஷராக்குவீர்களென்றால், ஒரு வருட முடிவில், நீங்களும், சீஷராக்கப்பட்ட அந்த நபரும் என இருவர் இருப்பீர்கள். இரண்டு வருட முடிவில் நான்குபேர். இதை நீங்கள் தொடர்ந்து பத்து வருடம் செய்வீர்களெனில், சீஷராக்கப்பட்ட, மற்றவர்களுக்குள் தங்கள் விசுவாசத்தை உற்பத்தி செய்கிற 1,024 நபர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இருப்பார்கள். தொடர்ந்து இந்த ஒரு நபர் என்ற முறை வருடந்தோறும் நீங்கள் செய்துகொண்டே இருந்தால், இருபது வருட முடிவில் நூறு கோடிக்கும் மேற்பட்டவர்கள் கர்த்தருக்குள் வந்துவிடுவார்கள். இது மிகவும் ஆச்சரியமானது. “போய் மக்களை மாற்றம் செய்வது அல்ல”, “*போய் - சீஷராக்குவது*” என்பதுதான் பெருக்கத்திற்காக ஆண்டவர் கொடுத்த முறை. தேவனுடைய ராஜ்யம் மக்களைச் சென்றடைய இதுவரைக்கும் காணப்பட்ட அனைத்து வழிமுறைகளிலும் இதுவே சிறந்த வழிமுறை. ஆனால், எல்லாம் உடனே நடந்துவிடவேண்டும் என்பதுதான் நமது மனப்பான்மையாக உள்ளது.

பெரியபெரிய படைமுயற்சி கூட்டங்களில் கலந்துகொண்டு, உண்மையான கிறிஸ்தவ ஜீவியம் செய்வேன் என்று தீர்மானம் எடுக்கிறவர்களில், இன்னும் கோபம், கசப்பு மற்றும் பொறாமை உள்ளவர்களாய் இருந்து, துர்சாட்சிகளாய் இருக்கிறவர்கள் எத்தனைபேர்? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கையிடுகிறவர்கள் பலரின் வாழ்க்கையைப் பார்க்கிற கிறிஸ்துவை அறியாதவர்கள்

சபைக்குப் போய்க்கொண்டு, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கையிட்டும் போலி வாழ்க்கை வாழ்கிற இந்த மாயக்காரர்களை விட நானே மேல், எனவே இவர்கள் வணங்குகிற இயேசு எனக்கு வேண்டாம் என்று சொல்லி, *சுவிசேஷத்தைவிட்டுத் திரும்பிப் போகிறவர்கள் எத்தனைபேர் என்ற புள்ளிவிபரத்தை நீங்கள் அறிய வேண்டுமா?*

இங்கே சொல்லப்படுகிறதின் முழு செய்தி என்னவெனில், முழு உலகத்தையும் சுவிசேஷமயமாக்குவதற்காக தேவன் வைத்த வழிமுறை சீஷராக்குவதேயாகும். சத்தியத்தில் நீங்கள் தொடர்ந்து நிலைத்திராதவரை சத்தியம் உங்களை விடுதலையாக்காது (யோவான் 8:31.32). ஒவ்வொரு நபரும் தேவனுடைய பரிபூரணத்தை அனுபவிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார், அதற்குதான் அவர் தனிநபர் சுவிசேஷம் கூறுதல் என்ற வழிமுறையை அவர் வைத்திருக்கிறார். இப்படிச் செய்தால், உலகத்தைச் சுவிசேஷமயமாக்க முடியாது என்று யாராவது நினைத்தால், வெற்றிக்கு இதுவரை ஒத்துவராத செயல்முறையையே அவர்கள் தெரிந்துகொள்கிறார்கள்.

சீஷத்துவத்தின் மதிப்பை உங்களுக்குக் காண்பிக்கும்படி, தேவன் உங்கள் இருதயத்தில் பேசும்படி நான் ஜெபம்பண்ணுகிறேன். சீஷர்களாய் மாறுங்கள், மற்றவர்களை சீஷராக்குங்கள் என நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. "கிறிஸ்தவர்களாகும்படி" கிறிஸ்து ஒருவரையும் அழைக்கவில்லை, மாறாக, "சீஷராகும்படியாகவே" கிறிஸ்து மக்களை அழைத்தார் என்ற செய்தி ஒருவேளை உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கக்கூடும். ஒரு பேப்பரை எடுத்துக்கொண்டு, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களைப் படித்து, மக்கள் சீஷராகும்படி இயேசு எத்தனைமுறை அழைப்பு விடுத்திருக்கிறார் என்ற வசனங்களை எழுதுங்கள்.

2. அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில், "கிறிஸ்தவர்களாகும்படி" மக்கள் அழைக்கப்படாமல், "சீஷர்களாகும்படியாகவே" அழைக்கப்பட்டார்கள். சீஷத்துவத்தைக் குறித்து, அப்போஸ்தல நடபடிகள் புத்தத்தில் குறிப்பிடப்பட்ட வசனங்களை ஒரு தனிப் பேப்பரில் எழுதவும்.

3. வேதத்தில் "சீஷர்கள்" என்ற வார்த்தை மொத்தம் 273 தடவை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், "கிறிஸ்தவர்கள்" என்ற வார்த்தையோ வெறும் மூன்று தடவை மட்டுமே வருகிறது. "கிறிஸ்தவன் (வர்கள்)" என்று மூன்றுமுறை வருகிற அந்த வேதவாக்கியங்களை ஒரு தனிபேப்பரில் பட்டியலிட்டு எழுதவும்.

4. வாசிக்க: மத்தேயு 10:25. இந்த வசனத்தின்படி, சீஷன் என்பவன் யார்?

   **மத்தேயு 10:25** - *"சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?"*

5. வாசிக்க: லூக்கா 14:26. சரியா? தவறா? சீஷனாய் இருப்பது என்பதன் அர்த்தம், மற்றவர்களுடைய வாழ்வின்

முழு நலனுக்காக, ஒருவர் தன் வாழ்க்கையை எவ்வித நிபந்தனையுமின்றி தியாகம்பண்ணுதல்.

**லூக்கா 14:26** - *"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்."*

6. வாசிக்க: லூக்கா 14:33. சரியா? தவறா? குறைந்தது சிலரைப் பற்றிய காரியங்களிலாவது, இயேசுவின் சீஷனாயிருப்பதென்றால், இயேசுவை முதல் இடத்தில் வைக்கும்படி, எழுத்தின்படி எல்லாவற்றையும் கைவிடுவதாகும்.

**லூக்கா 14:33** - *"அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்."*

7. வாசிக்க: மத்தேயு 19:29. சரியா? தவறா? இயேசுவினிமித்தம் வீடுகள், சகோதரர், சகோதரிகள், தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள், நிலங்கள் ஆகியவற்றை விட்டவர்கள் நூறத்தனையாய் பெற்று, நித்தியஜீவனையும் பெறுவார்கள்.

**மத்தேயு 19:29** - *"என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்தியஜீவனையும் சுதந்தரித்துக்கொள்வான்.*

8. வாசிக்க: அப்போஸ்தலர் 14:22. சரியா? தவறா? சீஷன் என்பவன் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்?

**அப்போஸ்தலர் 14:22** - *"சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்."*

9. வாசிக்க: எபிரெயர் 10:14. சரியா? தவறா? சீஷத்துவத்தைக் குறித்து அநேகருக்கு சந்தேகம், அல்லது அதை எதிர்ப்பதற்கு காரணம் என்னவெனில், “கிறிஸ்தவன்” ஆகிறதற்கு எந்தவித முயற்சியும் தேவையில்லை (ஏனெனில் அது கிருபையினால் உண்டாகிறது), ஆனால் “சீஷன்” என்ற நிலைக்கு வருவதற்கு தியாகமும், அர்ப்பணிப்பும் அவசியம். இதில் சத்தியம் என்னவெனில், கிறிஸ்து நமக்காக உண்டுபண்ணின மீட்பில், நம் சார்பில் எந்தவித முயற்சியும் தேவை கிடையாது; ஏனெனில் மீட்பு என்பது கிறிஸ்துவின் சார்பில் ஏற்கெனவே எல்லாம் பரிபூரணமாய் செய்து முடிக்கப்பட்டாயிற்று, அதில் இன்னும் நாம் செய்ய வேண்டியதற்கு ஒன்றுமில்லை, ஆனால், நம்முடைய முழுமை மற்றும் வாழ்க்கை முழுவதையும் கொடுக்கும்படிக்கே கிறிஸ்து எப்போதும் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

**எபிரெயர் 10:14** - *“ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவன் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.”*

10. வாசிக்க: அப்போஸ்தலர் 11:26. சரியா? தவறா? கிறிஸ்தவர்களில் ஒருசாரார், எப்பொழுதும் ஜென்மசுபாவத்தோடு உலகப் பிரகாரமாக வாழும்படியாகவும், இன்னொரு சாரார் அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாக வாழும்படியாகவும், இரண்டு விதமான கிறிஸ்தவர்களுக்கான அழைப்பை கிறிஸ்து கொடுக்கவில்லை. உண்மையில், கிறிஸ்தவர்கள் மற்றும் சீஷர்கள் இருவரும் ஒரே மாதிரி இருக்கும்படிக்கே கிறிஸ்து அழைத்திருக்கிறார்.

**அப்போஸ்தலர் 11:26** - *“அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.”*

11. வாசிக்க: மத்தேயு 28:19.20. விசுவாசிகளுக்கு இயேசு கொடுத்த கட்டளை, நீங்கள் போய்,

A. சீஷர்களை உருவாக்குங்கள்

B. எல்லா ஜாதியினரையும் மனமாற்றம் அடையச் செய்யுங்கள்.

**மத்தேயு 28:19.20** - *"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்."*

12. வாசிக்க: மத்தேயு 28:19.20. சரியா? தவறா? இயேசு கட்டளையிட்ட அனைத்திற்கும் கீழ்ப்படியும்படி, விசுவாசிகள் மற்றவர்களுக்கு உபதேசம்பண்ண வேண்டும்.

13. வாசிக்க: யோவான் 1:12. சரியா? தவறா? இயேசுவை நாம் எடுத்துக்கொள்ளாமல், அவர் வழங்கும் பலன்களை (பாவமன்னிப்பு, நீதிமானாக்கப்படுதல்.... போன்றவை) மட்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம் என்றே இயேசு எதிர்பார்க்கிறார்.

**யோவான் 1:12** - *"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."*

# பதில் ஆதாரங்கள்

1. "கிறிஸ்தவர்களாகும்படி" கிறிஸ்து ஒருவரையும் அழைக்கவில்லை, மாறாக, "சீஷராகும்படியாகவே" கிறிஸ்து மக்களை அழைத்தார் என்ற செய்தி ஒருவேளை உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கக்கூடும். ஒரு பேப்பரை எடுத்துக்கொண்டு, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களைப் படித்து, மக்கள் சீஷராகும்படி இயேசு எத்தனைமுறை அழைப்பு விடுத்திருக்கிறார் என்ற வசனங்களை எழுதுங்கள்.

2. அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில், "கிறிஸ்தவர்களாகும்படி" மக்கள் அழைக்கப்படாமல், "சீஷர்களாகும்படியாகவே" அழைக்கப்பட்டார்கள். சீஷத்துவத்தைக் குறித்து, அப்போஸ்தல நடபடிகள் புத்தத்தில் குறிப்பிடப்பட்ட வசனங்களை ஒரு தனிப் பேப்பரில் எழுதவும்.

3. வேதத்தில் "சீஷர்கள்" என்ற வார்த்தை மொத்தம் 273 தடவை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், "கிறிஸ்தவர்கள்" என்ற வார்த்தையோ வெறும் மூன்று தடவை மட்டுமே வருகிறது. "கிறிஸ்தவன்(வர்கள்)" என்று மூன்றுமுறை வருகிற அந்த வேதவாக்கியங்களை ஒரு தனிபேப்பரில் பட்டியலிட்டு எழுதவும்.

   ***அப்போஸ்தலர் 11:26; 26:28; 1 பேதுரு 4:16.***

4. வாசிக்க: மத்தேயு 10:25. இந்த வசனத்தின்படி, சீஷன் என்பவன் யார்?

   ***சீஷன் என்பவன் தன் போதகர், அல்லது எஜமானைப்போல இருப்பவன்.***

5. வாசிக்க: லூக்கா 14:26. சரியா? தவறா? சீஷனாய் இருப்பது என்பதன் அர்த்தம், மற்றவர்களுடைய வாழ்வின் முழு நலனுக்காக, ஒருவர் தன் வாழ்க்கையை எவ்வித நிபந்தனையுமின்றி தியாகம்பண்ணுதல்.

   ***சரி.***

6. வாசிக்க: லூக்கா 14:33. சரியா? தவறா? குறைந்தது சிலரைப் பற்றிய காரியங்களிலாவது, இயேசுவின் சீஷனாயிருப்பதென்றால், இயேசுவை முதல் இடத்தில் வைக்கும்படி, எழுத்தின்படி எல்லாவற்றையும் கைவிடுவதாகும்.

***சரி.***

7. வாசிக்க: மத்தேயு 19:29. சரியா? தவறா? இயேசுவினிமித்தம் வீடுகள், சகோதரர், சகோதரிகள், தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள், நிலங்கள் ஆகியவற்றை விட்டவர்கள் நூறத்தனையாய் பெற்று, நித்தியஜீவனையும் பெறுவார்கள்.

***சரி.***

8. வாசிக்க: அப்போஸ்தலர் 14:22. சரியா? தவறா? சீஷன் என்பவன் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்?

***சரி.***

9. வாசிக்க: எபிரெயர் 10:14. சரியா? தவறா? சீஷத்துவத்தைக் குறித்து அநேகருக்கு சந்தேகம், அல்லது அதை எதிர்ப்பதற்கு காரணம் என்னவெனில், “கிறிஸ்தவன்” ஆகிறதற்கு எந்தவித முயற்சியும் தேவையில்லை (ஏனெனில் அது கிருபையினால் உண்டாகிறது), ஆனால் “சீஷன்” என்ற நிலைக்கு வருவதற்கு தியாகமும், அர்ப்பணிப்பும் அவசியம். இதில் சத்தியம் என்னவெனில், கிறிஸ்து நமக்காக உண்டுபண்ணின மீட்பில், நம் சார்பில் எந்தவித முயற்சியும் தேவை கிடையாது; ஏனெனில் மீட்பு என்பது கிறிஸ்துவின் சார்பில் ஏற்கெனவே எல்லாம் பரிபூரணமாய் செய்து முடிக்கப்பட்டாயிற்று, அதில் இன்னும் நாம் செய்ய வேண்டியதற்கு ஒன்றுமில்லை, ஆனால், நம்முடைய முழுமை மற்றும் வாழ்க்கை முழுவதையும் கொடுக்கும்படிக்கே கிறிஸ்து எப்போதும் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

***சரி.***

10. வாசிக்க: அப்போஸ்தலர் 11:26. சரியா? தவறா? கிறிஸ்தவர்களில் ஒருசாரார், எப்பொழுதும் ஜென்மசுபாவத்தோடு உலகப் பிரகாரமாக

வாழும்படியாகவும், இன்னொரு சாரார் அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாக வாழும்படியாகவும், இரண்டு விதமான கிறிஸ்தவர்களுக்கான அழைப்பை கிறிஸ்து கொடுக்கவில்லை. உண்மையில், கிறிஸ்தவர்கள் மற்றும் சீஷர்கள் இருவரும் ஒரே மாதிரி இருக்கும்படிக்கே கிறிஸ்து அழைத்திருக்கிறார்.

***சரி.***

11. வாசிக்க: மத்தேயு 28:19. விசுவாசிகளுக்கு இயேசு கொடுத்த கட்டளை, நீங்கள் போய்,

***சீஷர்களை உருவாக்குங்கள்***

12. வாசிக்க: மத்தேயு 28:19.20. சரியா? தவறா? இயேசு கட்டளையிட்ட அனைத்திற்கும் கீழ்ப்படியும்படி, விசுவாசிகள் மற்றவர்களுக்கு உபதேசம்பண்ண வேண்டும்.

***சரி.***

13. வாசிக்க: யோவான் 1:12. சரியா? தவறா? இயேசுவை நாம் எடுத்துக்கொள்ளாமல், அவர் வழங்கும் பலன்களை (பாவமன்னிப்பு, நீதிமானாக்கப்படுதல்.... போன்றவை) மட்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம் என்றே இயேசு எதிர்பார்க்கிறார்.

***சரி.***

## பாடம் 15

# உங்கள் சாட்சியை பயன்படுத்துவது எப்படி?

***டான் க்ரோ***

உங்கள் தனிப்பட்ட சாட்சியை பயன்படுத்துவது பற்றி உங்களோடு நான் பேச விரும்புகிறேன். அப்போஸ்தலர் 5:42 கூறுகிறது, *“தினந்தோறும் தேவாலத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்.”* ஆதிசபை சீஷர்கள் அனுதினமும் தேவாலயத்தில் சந்தித்தனர், வீடுகள்தோறும் சந்தித்தனர்; சந்தித்து இயேசுவே கிறிஸ்து என்று உபதேசித்து, பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை கவனிக்கவும். வீடுகள்தோறும் சென்று, ஒவ்வொரு கதவையும் தட்டிச் சுவிசேஷம் அறிவிப்பது என்பது இயற்கைக்கு முரணான ஒன்று, அது அசௌகரியமான ஒன்று என்று அநேகர் நினைக்கிறார்கள். வெளியே சென்று, சீஷத்துவ ஊழியம் செய்தவற்கு கதவுகள் திறந்திருப்பதையும், மக்கள் மனந்திரும்பி இயேசுகிறிஸ்து பக்கம் திரும்புகிறதையும் பற்றி, அனுபவ வாயிலாக நாங்கள் கற்றுக்கொண்ட சில காரியங்களை உங்களோடுகூட நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்குச் சொல்லப்பட்டபடி, இது ஒன்றும் கடினமான ஒன்று அல்ல. மனந்திரும்பாத நபரிடம் பவுல் பேசும்போது, மூன்றுமுறை பவுல் தனது சாட்சியை உபயோகப்படுத்தி, சுவிசேஷம் அறிவித்ததை நான் வேதத்தில் கவனித்துள்ளேன். அப்போஸ்தலர் 9, 22, மற்றும் 26, ஆகிய அதிகாரங்களில், பவுல் தன்னுடைய அனுபவ சாட்சியைச் அவிசுவாசிகளோடே பகிர்ந்துகொண்டபோது, அவருக்கு நடந்தது என்ன? “இயேசுகிறிஸ்துவின் செய்தியை மற்ற மக்களுக்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் கண்டுபிடித்த மிக முக்கியமான ஒரு வழிமுறைதான், “ஜெப நடை.” ஒவ்வொரு வீட்டிற்கும்

சென்று, கதவைத் தட்டி, அவர்களிடம்: “இந்தப் பகுதியில் உள்ள மக்களுக்காக நாங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். எங்கள் ஜெபத்தை தேவன் கேட்டுப் பதிலளிக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்; உங்கள் குடும்பத்தில் உள்ள நபர்களுக்கு ஏதாவது உடல்நல குறைவு அல்லது மற்ற ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் சொல்லுங்கள்; உங்களுக்காக நாங்கள் ஜெபம்பண்ண விரும்புகிறோம்” என்று சொல்வோம். “ஆம், எனக்குப் பிரச்சினை இருக்கிறது; எங்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்” என்று சிலர் சொல்வார்கள்; சிலர், அசௌகரியப்பட்டு: “இப்பொழுது எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆகவே வேண்டாம்” என்று சொல்வார்கள். அப்பொழுது நாங்கள் எங்கள் அனுபவ சாட்சியை சொல்ல ஆரம்பிப்போம்.

அவர்களைப் பார்த்து: “உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறதை காண்கிறேன்” என்று நான் சொல்லுவேன். அவர்கள்: ஆம், என்பார்கள். எனக்கும் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். டிசம்பர் 14, 1981 அன்று இரட்டைப் பிள்ளைகள் எனக்குப் பிறந்தார்கள். இரண்டு பிள்ளைகளில் ஒன்று மரித்துப் போனது. உடனே கேட்டுக்கொண்டிருக்கிற நபர்: “ஐயோ,பாவம்” என்பார்கள். உடனே நான், என்ன நடந்தது என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், என்று நடந்ததை சொல்ல ஆரம்பிப்பேன். இரட்டைப் பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளை அரைகுறையாக பிறந்தது, அதன் கால் முதலாவது வெளிவந்தது, அந்தக் குழந்தை பிறக்கும்போது, சில நேரங்களில் ஆக்சிஜன் நின்றுவிடும். அந்தக் குழந்தையோ மரித்துவிட்டது.

மருத்துவச்சி குழந்தையை எடுத்து, பளார் என்று அறைந்தார்கள் (எவ்வளவு வேகமாக அடிக்க முடியுமோ அவ்வளவு வேகமாக), நுரையீரலை ஏதாவது திரவம் அடைத்திருக்கும் என்பதால், என் மகளின் நுரையீரலை உறிஞ்சினார்கள், ஒன்றும் நடக்காததால், கடைசியில் நம்பிக்கை இழந்து, மரித்த குழந்தையை என்னிடம் கொடுத்தார்கள். எந்த ஒரு தகப்பனும் அந்தச் சந்தர்பத்தில் எப்படி இருப்பாரோ, அப்படியே நானும் இருந்தேன். என் குழந்தையை நான் இழந்தநிலையில் நான் இருந்தேன். “நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், நீங்கள் எப்பொழுதாவது பைபிளைப் படித்தது உண்டா?” என்று கேட்பேன். அதற்கு அவர்கள்: “ஆம், நான் கொஞ்சம் படித்திருக்கிறேன்” என்று சிலர் சொல்வார்கள். சிலரோ:

“உண்மையில் நான் படித்தது இல்லை” என்பார்கள். நான் விளக்கம் கொடுக்க ஆரம்பிப்பேன். “ஏன் நான் கேட்டேன் என்றால், அப்போஸ்தலர் 10:38 ல், தேவன் இயேசுவோடுகூட இருந்தபடியினால், இயேசு நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார் என்று வாசிக்கிறோம்.” என்ன நடந்தது என்று நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் நம்புகிறீர்களோ, இல்லையோ, என் குழந்தை அப்பொழுது மரித்துக் கிடந்தது. இன்னும் சில நாட்களில் எங்கள் குழந்தையை நாங்கள் அடக்கம்பண்ணப் போகிறோம் என்று நான் என் மனதில் நினைத்துக்கொண்டிருந்தேன். திடீரென்று, அந்தக் குழந்தையை என் கைகளில் தூக்க வேண்டுமென்று நான் நினைத்தேன். அவளை என் கைகளில் தூக்க நான் சென்றபோது, அங்கே துஷ்ட ஆவியின் பிரசன்னம் காணப்பட்டதை உணர்ந்தேன். அதைத்தான், அசுத்தஆவி அல்லது பிசாசின் ஆவி என்று வேதம் அழைக்கிறது. அது என்னையும் சரீரப்பிரகாரமாக தாக்கி, அடுத்த வினாடியே என்னை வாதத்திற்குள்ளாக்கியது. அப்படி நடந்தவுடனே, “இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, அசுத்தஆவியே இந்தக் குழந்தையைவிட்டுப் போகும்படி நான் உனக்குக் கட்டளை கொடுக்கிறேன், இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இந்தப் பிள்ளைக்குள் ஜீவனை கட்டளையிடுகிறேன்” என்றேன். அதற்குமுன் ஒருபோதும் சுவாசிக்காத அந்த சிறுபிள்ளை, ஒருதும்மல் தும்மி ஒருமுறை சுவாசித்தது, மறுபடியும் சுவாசிப்பதை நிறுத்தியது. மீண்டுமாக நான்: “இயேசுவின் நாமத்தினாலே, அசுத்தஆவியே இந்தக் குழந்தையைவிட்டு இப்பொழுதே வெளியேறும்படி உனக்குக் கட்டளையிடுகிறேன், என் மகளுக்குள் ஜீவன் வருவதாக” என்றேன். இந்த முறை என் குழந்தை அநேக முறை தும்மி, சுவாசிக்க ஆரம்பித்தது, தொடர்ந்து சுவாசித்துக்கொண்டே இருந்தது.

நான் பேசிக்கொண்டிருக்கிற நபரை பெயர் சொல்லி அழைத்து, “மூன்றுநிமிடம் தொடர்ந்து ஒரு நபருக்குள் ஆக்சிஜன் செல்லவில்லையெனில், மூளை பாதிக்கப்பட்டுவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆனால், என் மகள் எல்லா விதத்திலும் பரிபூரண சுகத்தோடு இருந்தாள். அவளுக்கு “Vita” என்று பெயர் வைத்தோம். லத்தீன் மொழியில் அதற்கு: “Life - ஜீவன்” என்று பொருள். காரணம், தேவன் அவளுக்கு செய்ததை அவள் பெயர் மூலமாகவே மக்களுக்குச் சொல்லும்படி நாங்கள் விரும்பினோம். ஏனெனில், அவள் தனது ஜீவனை மீண்டும் பெற்றுக்கொண்டாள். அந்த நாள் முதல், வேதாகமத்தை

நான் அதிகமாகப் படிக்க ஆரம்பித்தேன், நான் கண்டுபிடித்தது என்னவெனில், என் பிள்ளைமீது அசுத்தஆவி இருந்ததுபோல, இருளின் அதிகாரம் இருக்கிறது, சாத்தானுடைய ராஜ்யமும் அவனுடைய ஆளுகையும் இருக்கிறது; அதுபோலவே தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யமும் இருக்கிறது.

“இயேசு இந்தப் பூமிக்கு வந்தபோது, மனந்திரும்புதல் மற்றும் ஜனங்கள் தம்மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம், இருளின் ராஜ்யத்திலிருந்து, தம்முடைய சொந்த ராஜ்யத்திற்குள் வரும்படியாகவும், அவரிடமிருந்து பாவமன்னிப்பைப் பெற்று, அவரைப் பின்பற்றும்படியாகவும் மக்களை அழைத்தார்.” நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது, ஆனால் என் குடும்பத்திலும், என் வாழ்விலும் என்ன நடந்தது என்பதை நான் சொல்லுகிறேன். உங்கள் வீட்டு வாசலில் நாங்கள் நிற்பதற்கான உண்மையான காரணம் என்னவென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களைச் சீஷராக்கும்படி இயேசு எங்களுக்குச் சொன்னார், அநேக ஜனங்கள் மிகுந்த அலுவல்களில் இருப்பதனால் திருச்சபைக்குச் செல்வதில்லை, சிலர் சபைக்குப் போக விரும்புவதில்லை. உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், கைகளை உயர்த்தி: “பாஸ்டர் (பாதிரியார்), இதன் அர்த்தம் என்ன?” என்று நீங்கள் கேட்க முடியாது. ஆகவேதான், நாங்களே நேரடியாக உங்களைத் தேடி வந்திருக்கிறோம். இப்படியாக பத்து நிமிடத்திற்குள், தேவனிடமிருந்து அவர்களுக்கு சொல்லவேண்டிய செய்திகளை தெளிவாகச் சொல்லிவிடுவோம். அதன்பிறகு அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில், வேதத்திலிருந்து சில கேள்விகளை கேட்போம். இப்படி சுவிசேஷம் அறிவிக்கும் முறை என்பது, பிரசங்கிப்பது போன்றது அல்ல, ஒருவரோடொருவர் உரையாடுவது போன்றது.

நாங்கள் உங்களோடு பேசுவது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கிறதா? உங்களுக்கு சம்மதியானால், உங்களுக்கு வசதியான நேரத்தைக் குறித்து எங்களுக்குச் சொல்லுங்கள். அப்பொழுது நாங்கள் வந்து, உங்களுக்கு வேதத்திலிருந்து சில சத்திய பாடங்களைக் கொடுப்போம். நாங்கள் கொடுக்கிற முதல் பாடம் உங்களுக்கு உதவவில்லை என்றால், உங்களை ஆறுதல்படுத்தவில்லை என்றால், உங்களை கட்டவில்லை (ஸ்திரப்படுத்த) என்றால், அதன் பிறகு நாங்கள் உங்கள் முகத்தைப் பார்க்கவேமாட்டோம். உங்களை ஒரு சபையில் சேர்ப்பதோ, அல்லது ஒரு

ஸ்தாபனத்தில் சேர்ப்பதோ எங்கள் நோக்கம் அல்ல, தனிப்பட்ட விதத்தில் இயேசு உங்களுக்காக என்ன செய்தார் என்பதை சொல்லவும், வேதவசனத்தை நீங்களே புரிந்துகொள்ளும்படி உங்களுக்கு உதவவுமே நாங்கள் இங்கே இருக்கிறோம். எங்களுக்கும் தெரியாத எவ்வளவோ காரியங்கள் இந்த வேதத்தில் உள்ளன, எனினும் உங்களுக்கு ஒரு சிறிய வேதபாடத்தைக் கொடுக்கும்படி நாங்கள் இங்கே இருக்கிறோம். உங்களுக்கு அதைப் படிப்பதில் விருப்பமா? இதற்குப் பதிலாக, “ஆம், எங்களுக்கு விருப்பம்தான்” என்று பலர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, குறிக்கப்பட்ட நாளில் மீண்டும் நாங்கள் அவர்கள் வீட்டுக்குச் சென்று, இந்த சீஷத்துவ பாடங்களை அவர்களிடம் துவக்குவோம். ஒரு சிறு “படைமுயற்சி கூட்டம்” நடத்தும்படி நாங்கள் அங்கே போகவில்லை. சத்தியம் என்றால் என்ன என்றே புரிந்துகொள்ளாத ஆரம்பநிலையில் அவர்கள் இருக்கும்போதே, “எடுத்தவுடனே அவர்கள் கைகளை முறுக்கி, ஒரு சிறிய ஜெபம்பண்ணும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தும்படி நாங்கள் அவர்கள் வீட்டுக்குச் செல்லவில்லை. கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையே அவர்கள் அறிந்து, புரிந்துகொள்ளும்படி, சீஷத்துவ பாடங்களை நாங்கள் தொடர்ந்து அளிக்கிறோம்.

எங்கள் சீஷத்துவ பாடங்களைப் பற்றி ஒரு பாஸ்டரிடம் நான் கூறினேன். அவர் என்னைப் பார்த்து: “டான், நீங்கள் கொடுக்கிற முதல் பாடத்திற்குப் பிறகு என்ன நடக்கிறது?” இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு நபர் எப்படி மாறுத்தரம் கொடுக்கவேண்டும் என்பதை அந்த நபர் புரிந்துகொண்டு, அவர் இலவசமாக வழங்கும் இரக்கம், பாவமன்னிப்பு ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும்நிலைக்கு அவர் வருகிறார். ஒருநாளுக்குள் இவ்வளவு பொருளை விற்றுவிட வேண்டும் என்ற கட்டாயத்திற்குள் இருக்கும் ஒரு வியாபாரியைப் போன்றவர்கள் அல்ல நாங்கள். ஆகவே, ஒரேநாளில் எல்லாம் நடந்துவிடவேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் செயல்படவில்லை; ஆனால், முதல் பாடத்தின் மூலம், தங்கள் இருதயத்திலிருந்து அவர்கள் என்ன செய்யவேண்டும் என்ற உணர்வுக்குள் அவர்கள் வந்துவிடுகிறார்கள்” என்றேன். “சரி நல்லது, 15 வது பாடத்திற்குப் பிறகு என்ன நடக்கிறது?” என்று அவர் கேட்டார். அதற்கு நான்: “15 பாடத்திற்குப் பிறகும் அவர் எங்களோடு ஐக்கியத்தில் இருப்பார் என்றால், அவர்கள் தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பியிருப்பார்கள், அதோடுகூட தண்ணீர் ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்தஆவியின்

அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டிருப்பார்கள், இந்தக் காரியம் 15 பாடங்களுக்குப் பிறகு அல்ல, அநேக நேரங்களில் 6 பாடங்களுக்குள்ளாகவே நடைபெறுகிறது" என்று கூறினேன்.

மத்தேயு 28 ம் அதிகாரத்தில், நீங்கள் உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசு சொன்னார். அவர்களை சீஷராக்கும் ஊழியத்தின் மத்தியில், இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், அவிசுவாசிக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் குறித்த புரிந்து கொள்ளுதலை அவர்களுக்குள் கொண்டுவருகிறோம். ஒரு வாரத்திற்குப் பிறகு மறுவாரம், பிறகு மறுவாரம் என்று ஒவ்வொரு வாரமும் அவர்கள் சத்தியத்தை அறிந்துகொள்ளும் அனுபவத்தை அறிந்துகொள்ளச் செய்யும்போதே, அவர்களோடு ஐக்கியம் மற்றும் தோழமை எங்களுக்கு உண்டாகிறது. அவர்கள் எங்களை நேசித்து, எங்களை நம்ப ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்குப் பிரசங்கம்பண்ண அல்ல, தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வருகிறோம். நாங்கள் வேதத்தை வாசிக்கிறோம், அவர்களையும் வாசிக்க வைக்கிறோம்; தங்களுக்கான பதிலை அவர்கள் கண்டுகொள்ளும்படியாக, தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர்களே பதிலைக் கண்டுபிடிக்கும்படியாக, அவர்கள் புரிந்துகொள்ளும் வழியில் கேள்விகள் கேட்கிறோம். வாரந்தோறும் இது நடைபெறுகிறபடியால், இயேசுவை கிறிஸ்து என்று அவர்களே வெளிப்படையாக அறிக்கையிடும் நிலைக்கு வந்துவிடுகிறார்கள். அவரை ஏற்றுக்கொள்ளுதல் என்றால் என்ன? அவரைப் பின்பற்றுதல் மற்றும் அவருக்கு தங்களை அர்ப்பணித்தல் என்றால் என்ன? என்பதை அவர்களே அறிவார்கள். இன்றைக்கு செய்யப்படுகிற பெரும்பாலான சுவிசேஷ முறையைக் காட்டிலும் அதிக வித்தியாசமான வழிமுறை இது.

இழந்துபோனவர்களை சந்திக்கும்படி நாங்கள் கடைபிடிக்கிற முதலாவதுவழி என்னவெனில், நாங்கள் அனைவரும் எங்கள் தனிப்பட்ட சாட்சியைக் கூறுவதேயாகும். எங்கள் அனைவருக்கும் தனிப்பட்ட சாட்சி உண்டு. அநேக நேரங்களில் நாங்கள் சொந்தமாக கைப்பிரதிகளை எழுதி அச்சடிக்கிறோம். "என் மகளின் மரணம்" என்ற ஒரு கைப்பிரதியை நான் எழுதினேன். அநேக முறை அந்தக் கைப்பிரதியை அநேக கதவுகளில் வைத்துச் சென்றிருக்கிறேன். எங்கள் சீஷத்தவ சுவிசேஷ குழுவில் உள்ள மற்றவர்களும்

கைப்பிரதிகளை சொந்தமாக வெளியிட்டிருக்கிறார்கள். “ஒரு அடிமை விடுதலையானான்” என்ற தலைப்பில், மது மற்றும் போதைக்கு அடிமையாயிருந்து விடுதலையான ஜோ ரோஸ்,“மயக்கமருந்து பிசாசின் மரணம்” என்ற தலைப்பில், தனது பதினைந்து வயதிலிருந்து போதைப் பொருட்களுக்கு அடிமையாயிருந்து, இயேசுவால் விடுவிக்கப்பட்ட ராக்கி ஃபோரி ஆகியோரும் கைப்பிரதி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த சாட்சிகளையெல்லாம் நாங்கள் ஜனங்களுடைய வீட்டு வாசலில் அவர்களுக்கு கூறுவோம்.

“என் குழந்தை மரித்து எட்டு நிமிடத்திற்குப் பிறகு உயிரோடு எழவில்லை, எனவே எனக்கு இப்படிப்பட்ட ஒரு வல்லமையான சாட்சி இல்லை,” என்று சிலர் சொல்வார்கள். அநேகருக்கு இப்படிப்பட்ட சாட்சிகள் இல்லை என்பது எனக்குத் தெரியும். சிறுவயது முதலே தேவனுடைய வல்லமையினால் பாவத்திலிருந்தும், உலக அசுத்தங்களிலிருந்தும் காக்கப்பட்ட ஆன்ட்ரூ உம்மக் போன்ற சாட்சிகள் உங்களுக்கு இருக்கக்கூடும். ஏனெனில், அநேகர் பாவத்தில் கிடக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொருவருக்கும் வித்தியாசம் வித்தியாசமான சாட்சிகள் உண்டு. ஒருவேளை உங்களுடைய சாட்சி வல்லமையான சாட்சி இல்லை என்று நீங்கள் கருதுவீர்களென்றால், என்னுடைய சாட்சியை நீங்கள் பயன்படுத்துங்கள். முதலாவது நாங்கள் எங்களுடைய சீஷத்துவ சுவிசேஷ குழுவை ஆரம்பித்து, ஜனங்களைச் சந்திக்க சென்றபோது, ஜோ ரோஸ் என்னுடைய சாட்சியையே பயன்படுத்தினார். கொஞ்சகாலத்திற்குப் பிறகு, நான் என் சாட்சியை கூறியதைவிட, என் சாட்சியை அவர் மிக அருமையாகக் கூறி மக்களை கர்த்தருக்குள் நடத்தினார்; ஆகவே நான்: ஜோ, இன்னும் அதிக ஜனங்களிடத்தில் சென்று, தேவன் எனக்கு என்ன செய்தார் என்று சொல்லுங்கள் என்றேன்.

காணாமல் போனவர்களை சந்திக்கும்படி, அப்போஸ்தலனாகிய பவுல் தன் சாட்சியை மூன்றுதரம் உபயோகித்திருப்பார் எனில், நீங்களும் அப்படி செய்யலாமே! இன்றைக்கு: Word Perfect. Mocrosoft Word என்று பலவிதங்களில் மக்களோடு தொடர்புகொள்வதற்கு நமக்கு கணினிகளும் இன்று நம்மிடம் உள்ளன. “ஒரு பைபிள் கடையிலிருந்து நான் இதைக் கொண்டுவந்து உங்களுக்குச் சொல்லவில்லை, எனக்கு நடந்ததை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்”

என்று மக்களுக்கு உங்கள் சாட்சியைக் கூறுவது அதிக வல்லமையானது.

உங்களுக்கு என்ன நடந்தது? கிறிஸ்துவுக்குள் நீங்கள் எப்படி வந்தீர்கள்? என்று, உட்கார்ந்து உங்கள் சாட்சியை எழுதம்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அதன்பிறகு, நீங்கள் செல்லுகிற இடத்தில், ஒரு வீட்டு வாசலில் அவர்களுக்கு உங்கள் சாட்சி கைப்பிரதியைக் கொடுங்கள்.

இதைக் குறித்து உங்களுக்கு மேலும் விபரம் வேண்டுமெனில், www.krowtracts.com என்ற எனது வெப்சைட்டிற்குச் சென்று, “Tips on Sharing Your Faith” என்ற தகவல்களைப் பாருங்கள். உங்கள் சொந்த சாட்சியை எழுதி, அதை மற்றவர்களுக்குக் கொடுக்க பழகுங்கள், மேலும், “Tips on Sharing Your Faith” தகவல்களைப் படியுங்கள். “போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கும் ஊழியத்தைச்” செய்கிற நீங்கள், ஒரு நேரத்தில் ஒரு நபரைச் சந்திக்கச் செல்லும் நீங்கள், சாதாரணமாக வாசிப்பது மட்டுமல்ல, அதை ஆராய்ந்து, கவனமாக படிப்பது மிக அவசியம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. வாசிக்க: மாற்கு 16:15. யாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்?

**மாற்கு 16:15** - *"பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுங்கள்."*

2. வாசிக்க: மத்தேயு 28:19.20. யார் சீஷராக்கப்பட வேண்டும்?

**மத்தேயு28:19.20** - *"ஆகையால்,நீங்கள்புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்."*

3. வாசிக்க: அப்போஸ்தலர் 8:5,26; 16:13-15,23; 20:20-21. சுவிசேஷம் எங்கெல்லாம் அறிவிக்கப்பட்டது?

**அப்போஸ்தலர் 8:5** - *"அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்."*

**அப்போஸ்தலர் 8:26** - *"பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்."*

**அப்போஸ்தலர் 16:13-15** - *"ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்.*

*(14) அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுகொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். (15) அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்,"*

**அப்போஸ்தலர் 20:20-21** - *"பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்."*

4. வாசிக்க: மாற்கு 4:11-12. உண்மையான இருதய மாற்றம் உண்டாவதற்குமுன், ஒரு நபர் செய்யவேண்டியது:

    A. பார்க்கவேண்டும்

    B. உணரவேண்டும்

    C. கேட்கவேண்டும்

    D. புரிந்துகொள்ளவேண்டும்

    E. மேலேசொல்லப்பட்ட அனைத்தும்.

**மாற்கு 4:11-12** - *"அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. (12) அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்."*

5. வாசிக்க: அப்போஸ்தலர் 28:23-24. பவுல் சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்து, விஸ்தரித்துப் பேசினபோது, இயேசுவைக் குறித்து அவர்களுக்கு எவ்வளவு நேரம் பேசினார்ன்?

**அப்போஸ்தலர் 28:23-24** - *"அதற்காக அவர்கள் ஒரு நாளைக் குறித்து, அநேகர்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தார்கள். அவன் காலமே தொடங்கிச் சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான்."*

6. வாசிக்க: அப்போஸ்தலர் 16:14. ஒருவர் உண்மையிலே கிறிஸ்துவின் பக்கம் திரும்பும்போது, என்ன திறக்கப்படவேண்டும்?

**அப்போஸ்தலர் 16:14** - *"அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுகொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்."*

7. வாசிக்க: அப்போஸ்தலர் 2:37. ஒரு நபர் தன் இருதயத்திலே குத்தப்பட்டு, அவருடைய இருதயம் திறக்கப்படும்போது என்ன சம்பவிக்கிறது?

**அப்போஸ்தலர் 2:37** - *"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவைம் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்."*

8. வாசிக்க: அப்போஸ்தலர் 16:31; 2:38. ஒரு நபர் செய்யவேண்டியது என்ன?

**அப்போஸ்தலர் 16:31** - *"அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."*

**அப்போஸ்தலர் 2:38** - *“பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.”*

9. வாசிக்க: அப்போஸ்தலர் 2:42 மற்றும் யோவான் 8:31-32. ஒரு நபர் செய்யவேண்டியது என்ன?

**அப்போஸ்தலர் 2:42** - *“அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.”*

**யோவான் 8:31-32** - *“இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். (32) சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.”*

10. வாசிக்க: ரோமர் 10:14-15. இந்த வசனத்தில் உள்ள கேள்விகளுக்கு, வசனத்திலிருந்தே பதில் கூறுக. ஒரு நபர் எவ்விதம் கிறிஸ்துவிடம் வருகிறார்?

**ரோமர் 10:14-15** - *“அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? (15) அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.”*

# பதில் ஆதாரங்கள்

1. வாசிக்க: மாற்கு 16:15. யாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்?

   ***சர்வ சிருஷ்டிக்கும், ஒவ்வொருவருக்கும்.***

2. வாசிக்க: மத்தேயு 28:19.20. யார் சீஷராக்கப்பட வேண்டும்?

   ***அனைத்து தேசத்திலுள்ள மக்களும்.***

3. வாசிக்க: அப்போஸ்தலர் 8:5,26; 16:13-15,23; 20:20-21. சுவிசேஷம் எங்கெல்லாம் அறிவிக்கப்பட்டது?

   ***பட்டணங்களில், வனாந்தரங்களில், ஆற்றோரம், சிறைச்சாலைகளில், பொது இடங்களில், ஒவ்வொரு வீடுகளிலும்.***

4. வாசிக்க: மாற்கு 4:11-12. உண்மையான இருதய மாற்றம் உண்டாவதற்குமுன், ஒரு நபர் செய்யவேண்டியது:

   ***மேலேசொல்லப்பட்ட அனைத்தும்.***

5. வாசிக்க: அப்போஸ்தலர் 28:23-24. பவுல் சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்து, விஸ்தரித்துப் பேசினபோது, இயேசுவைக் குறித்து அவர்களுக்கு எவ்வளவு நேரம் பேசினார்ன்?

   ***காலமே தொடங்கிச் சாயங்காலமட்டும், சுமார் 6-8 மணிநேரம்.***

6. வாசிக்க: அப்போஸ்தலர் 16:14. ஒருவர் உண்மையிலே கிறிஸ்துவின் பக்கம் திரும்பும்போது, என்ன திறக்கப்படவேண்டும்?

   ***இருதயம், ஒரு மனிதனின் மையப் பகுதி.***

7. வாசிக்க: அப்போஸ்தலர் 2:37. ஒரு நபர் தன் இருதயத்திலே குத்தப்பட்டு, அவருடைய இருதயம் திறக்கப்படும்போது என்ன சம்பவிக்கிறது?

***அவர்கள் சரியாக பிரதியுத்தரம் கொடுக்கிறவர்களாய் இருந்தால், "நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்பார்கள்.***

8. வாசிக்க: அப்போஸ்தலர் 16:31; 2:38. ஒரு நபர் செய்யவேண்டியது என்ன?

***மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், ஞானஸ்நானம் பெற வேண்டும்.***

9. வாசிக்க: அப்போஸ்தலர் 2:42 மற்றும் யோவான் 8:31-32. ஒரு நபர் செய்யவேண்டியது என்ன?

***அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்து, இயேசுவின் வசனத்தைக் கைக்கொள்ளவேண்டும்.***

10. வாசிக்க: ரோமர் 10:14-15. இந்த வசனத்தில் உள்ள கேள்விகளுக்கு, வசனத்திலிருந்தே பதில் கூறுக. ஒரு நபர் எவ்விதம் கிறிஸ்துவிடம் வருகிறார்?

***யாரோ ஒருவர் அனுப்பப்பட்டார். யாருக்கோ சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது அல்லது அறிவிக்கப்பட்டது. அவர்கள் விசுவாசிப்பதற்கு யாராவது பிரசங்கிக்கவேண்டும், அப்படி பிரசங்கிக்கப்பட்டதன் மூலம் மக்கள் இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு, கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள்.***

# பாடம் 16

# சீஷராக்குவதற்கு ஒவ்வொருவருடைய வரங்களையும் பயன்படுத்துதல்

***டான் க்ரோ***

ஒவ்வொருவருடைய வரங்களும் சீஷராக்குவதற்கு உபயோகப்படுத்தப்பட முடியும். இந்த சீஷத்துவ முறையை பல ஆண்டுகளாக நாங்கள் பின்பற்றி, மிகப் பெரிய வெற்றியுடன் ஊழியம் செய்து வருகிறோம். இதனால் ஜனங்களுடைய ஜீவியம் மாற்றப்படுகிறதையும், அவர்கள் பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் மற்றும் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்து வருகிறதையும் நாங்கள் காண்கிறோம். ஒருநாள் நான் என் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, “நாம் ஏதோ ஒன்றை தவறவிட்டுக்கொண்டிருக்கிறோம் - அவைகள் கீறல்கள் வழியாக விழுந்துகொண்டிருக்கின்றன” என்றேன். “எல்லாம் மிக நன்றாகத்தான் போய்க் கொண்டிருக்கின்றன, நீங்கள் எதைப் பற்றி சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டார்.

நான் சொல்லப்போகிறது என்னவெனில், திருச்சபை கட்டடத்திற்குள் உட்கார்ந்துகொண்டு, வாரந்தோறும் பாஸ்டர் சொல்வதைக் கேட்டு, மீண்டும் தங்கள் வீடு திரும்பிக் கொண்டிருக்கிற திருச்சபையார், தாங்கள் இருக்கிற நான்கு சுவர்களைவிட்டு வெளியே வந்து, சந்திக்கப்படாத மக்களை சந்திக்க வேண்டும். 95 சதவிகித கிறிஸ்தவர்கள் மற்ற ஒருவரையும் கிறிஸ்துவுக்குள் நடத்தவில்லை, மேலும் 90 சதவிகித சுவிசேஷ ஊழியம் கிறிஸ்தவர்கள் மத்தியில்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பது உண்மையான புள்ளி விபரமாகும். உலகத்திலே அதிகமாக சுவிசேஷமயமாக்கப்பட்ட இடம் திருச்பை கட்டடங்கள்தான்.

ஞாயிறு பள்ளி அறைகளில் நாம் சுவிசேஷ ஊழியம் செய்கிறோம், பரிசுத்த ஸ்தலங்களில் சுவிசேஷ ஊழியம் செய்கிறோம். இப்படிப்பட்ட கட்டடங்களுக்குள் சுவிசேஷ ஊழியம் செய்வதன் மூலம், சபைக்குள் இருக்கிறவர்கள்தான் இன்னும் மனந்திரும்பவேண்டும் என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா?

மூன்றாம் நூற்றாண்டு காண்ஸ்டன்டைன் காலத்திற்குப் பிறகுதான் திருச்சபை கட்டங்களே கட்டப்பட்டன. அன்றுமுதல் இன்றுவரை, சபையானது சுவிசேஷம் அறிவிக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதற்கு, இந்தச் சபைக் கட்டடங்களுக்குள்ளாகவே திருச்சபை (விசுவாசிகள்) ஒளிந்து கொண்டிருக்கிறது. புள்ளிவிபரம் கூறுகிறபடி, சுவிசேஷம் அறிவிக்கும் திட்டங்கள் அனைத்தும் 0.5 (அதாவது ஒரு சதவிகிதத்திற்கும் குறைவு) சதவிகிதம்தான் சபைக் கட்டடத்திற்கு வெளியே நடைபெறுகின்றன. சந்திக்கப்படாதவர்களை சந்திப்பதற்கு, அமெரிக்காவில் உள்ள பெரிய பெரிய ஸ்தாபனங்கள் எந்த திட்டத்தையும் செயல்படுத்தவில்லை என்பதையே இது காட்டுகிறது. சபைக்கு வெளியே உள்ள பிற மக்களை சந்தித்து, அவர்களை சீஷராக்குவதே கிறிஸ்தவத்தின் மிக முக்கியமான பகுதி என்பதை சபை மீண்டும் கண்டுகொள்ள வேண்டும்.

சீர்திருத்தம் மூலமாக, விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்கிற வெளிப்பாடை மார்ட்டின் லூத்தர் 16 ம் நூற்றாண்டில் திருச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். 19 ம் நூற்றாண்டில், திருச்சபைக்கு வெளியே நடத்தப்படும் மிகப் பெரிய சுவிசேஷ கூட்டங்கள் என்ற முறை ஜான் வெஸ்லி வழியாக வந்தது. ஆனால் ஒரு நபர் இன்னொரு நபரைச் சந்தித்து, தனித்தாள் ஊழியம் செய்து, சீஷராக்கும் முறை என்பது ஆதி அப்போஸ்தலர் காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டுபிடிக்கவேண்டிய ஒன்றாகிவிட்டது. “நீங்கள் சொல்கிற காரியம் எப்படி என்று எனக்குத் தெரியாது” என்று நீங்கள் சொல்வீர்களென்றால், இதுதான் அந்த திட்டம், அது மிகவும் சுலபமான ஒரு வழிமுறை, அதைப் பற்றி உங்களுக்கு நாங்கள் நிச்சயம் தெரிவிக்கிறோம். ஜனங்களிடத்தில் அது எவ்வளவு லகுவாக கிரியைசெய்கிறது என்றும், புது ஆத்துமாக்களை அவர்கள் வீட்டுக் வாசலிலே சந்தித்து, உங்கள் சாட்சியைக் கூறி ஊழியம் செய்வது எவ்வளவு சுலபம் என்பதை நாங்கள் உங்களுக்குக் காண்பிக்கிறோம். இதிலே இப்பொழுது நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்.இதுதான் நற்செய்தி.

ஊழியம் எப்படி செய்யவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அப்படியே செய்யுங்கள், நீங்கள் எப்படி செய்யவேண்டுமென்று மற்றவர்கள் விரும்புகிறார்களோ அப்படி அல்ல (உண்மையில் மற்றவர்கள் தங்கள் வழியில் செய்யும்படி கூறுவதை செய்ய நீங்கள் விரும்புவதில்லை), ஆகவே, நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்கள் செய்யுங்கள். அதைக் குறித்துதான் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். சீஷத்துவ சுவிசேஷம் எங்ஙனம் கிரியை செய்கிறது என்பதை நான் ஜனங்களுக்குக் கூறி, "இதோ, பாருங்கள். இப்படித்தான் நாங்கள் செய்கிறோம்; ஜனங்களுடைய வாழ்க்கையை இவ்விதமாகத்தான் தொடுகிறோம். அவர்கள் இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, பரிசுத்தஆவியின் நிறைவையும் பெற்று, தண்ணீர் ஞானஸ்நானமும் பெறுகிறார்கள்." ஜனங்கள் அதைக் கேட்டு, "ஆ, பிரமாதம்" என்பார்கள். ஆனால், உடனே நான் அவர்களைப் பார்த்து: "உங்களில் எத்தனைபேர் என்னோடுகூட ஊழியத்திற்கு வருகிறீர்கள்?" என்று கேட்டால், அங்கிருக்கிற இருநூறு நபர்களில் அதிகபட்சம் ஒரு மூன்றுபேர் வரக்கூடும். மற்றவர்கள் அதைக் குறித்துப் பயந்திருக்கக்கூடும், அல்லது எப்படிச் செய்ய வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அல்லது, நான் ஜனங்களைப் பார்த்து: சரி, நான் சொன்ன வழிமுறையை விட்டுவிடுங்கள். நாம் வெளியே சென்று Bible Studies - வேதாகமபாடங்களை வாங்குவோம், சீஷத்துவ பாடங்களை உங்களுக்கு நான் அமைத்துக் கொடுக்கிறேன். உங்களில் எத்தனைபேர் வேதத்தைப் போதிப்பதற்கு தயார்? என்று கேட்டால், பத்து அல்லது பன்னிரண்டுபேர், "ஆம், நான் கற்றுக்கொடுக்க விரும்புகிறேன்" என்பார்கள். ஆனால், அதிலும் அதற்குமேல் எண்ணிக்கை பெருகாது.

நாங்கள் செய்ய விரும்புகிறது என்னவெனில், இழந்துபோனவர்களை இரட்சிக்கவும், அவர்களை நேசிக்கவும், அவர்களை சீஷராக்கவும், சபையாகிய சரீரத்திற்குள் இருக்கிற ஒவ்வொருவருடைய வரங்களும் என்பதை உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறோம். இந்தப் பணிக்கு ஒவ்வொருவருடைய வரங்களும் தேவை, அந்த வசனங்கள் சபையாகிய சரீரத்திற்குள்தான் இருக்கின்றன, ஒவ்வொரு சபை கட்டடத்திற்குள் உள்ள மக்களிடத்திலும் உள்ளன. உங்களில் சிலர், "பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம், சுகம் போன்ற காரியங்களுக்காக நான் ஜெபம்பண்ணவிரும்புகிறேன்" என்று சொல்லக்கூடும். நல்லது, எங்களுடைய சீஷத்துவ

முறையில், அதற்கென்றும் நேரம் உள்ளது. அப்பொழுது, உங்களை அதற்காகவே ஜெபிக்கும்படி பணிப்போம். மற்றவர்கள் ஒருவேளை இவ்வாறு கூறலாம், “எனக்கு அதெல்லாம் செய்யத் தெரியாது” என்று சொல்லக்கூடும். சரி, உங்களால் மாம்சஉணவு ஆயத்தம்பண்ண முடியுமா? ஒரு கார்டை (கடிதம்...) மற்றவர்களுக்குஉங்களால் அனுப்ப முடியுமா? போன் மூலம் மற்றவர்களிடத்தில் பேச முடியுமா? சுற்றுச்சுவருக்கு வர்ணம் பூசுவீர்களா? தனி நபர் தாயின் பிள்ளையோடு ஒருமணி நேரம் உட்கார்ந்து, அந்தத் தாய் சற்றுநேரம் வெளியே சென்று தன் வேலைகளைச் செய்துமுடித்து வரும் வரைக்கும் அந்தக் குழந்தையோடு நீங்கள் இருப்பீர்களா? இதுபோன்ற நடைமுறை செயல்களை நீங்கள் செய்வீர்களா? சரி, மன்றாட்டு ஜெபம்பற்றி என்ன? உங்களில் சிலர், பரிந்துபேசி, ஜெபம்பண்ணும்படி அழைக்கப்பட்டிருப்பீர்கள். நாங்கள் ஊழியம் செய்கிற மக்களுடைய பெயர்கள் எங்களிடத்தில் உள்ளன, அந்த ஜனங்களுக்கு நீங்கள் போய் ஜெபம்பண்ணுவீர்களா? ஒரு தனி நபருக்கு, அல்லது ஜெபக் குழுவோடு இணைந்து, அவர்களுக்காக, சீஷத்துவ சுவிசேஷ ஊழியம் செய்யும்படி வாரந்தோறும் குழுவினருக்காக நீங்கள் ஜெபிப்பீர்களா?

வெளியே சென்று, மற்றவர்களைச் சந்திக்க, சீஷராக்க ஒவ்வொருவருக்கும்வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொரு வரங்களும் செயல்படுவதற்கான நிகழ்ச்சிகள், திட்டங்கள் எங்களிடம் உள்ளன. ஊழியம் செய்வதற்கு உள்ள சீஷத்துவ திறமையின்படி, ஆசிரியர் குழுவையும், அவர்களுக்கு உதவி செய்கிற உதவிஆசிரியர்கள் குழுவையும் நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதோடுகூட, அவர்களுக்கு உணவு கொடுப்பது, மாம்ச உணவு சமைப்பது அல்லது வேலை எப்படி நடக்கிறது என்று பார்க்கிற ஊழியம் செய்வது என,உதவி ஊழியம்செய்ய இரண்டுபேர் அவர்களுக்குப் பின்னாலே வருவார்கள். அதோடுகூட ஊழியம் செய்கிற எங்களுக்காகவும், நாங்கள் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ அவர்களுக்காகவும் ஜெபிப்பதற்கென ஆட்கள் எங்களுக்கு இருக்கிறார்கள்.

அதன்விளைவு என்ன தெரியுமா? ஜனங்கள் நல்ல விதத்தில் போஷிக்கப்படுகிறபடியால், பராமரிக்கப்படுகிறபடியால், தேவனுடைய அன்பு அவர்களுக்குக் காண்பிக்கப்படுகிறபடியால், தேவன் அவர்களுடைய வாழ்க்கையை மாற்றுகிறதை நாங்கள் காண்கிறோம். ஊழியத்தின் வேலைகளைச்

செய்வது யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அதை யார் செய்யவேண்டுமோ அவர்களால் செய்யப்படுகிறது- ஆம், ஜனங்களால் செய்யப்படுகிறது. ஊழியத்தின் வேலையை செய்யும்படி அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் ஆகியோர் ஜனங்களை பயிற்றுவிக்கும்படி சபையில் தேவனால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்று எபேசியர் 4:11 கூறுகிறது. ஆகவே, சபையின் முன் நிற்கிற, "பாஸ்டர்" மட்டுமல்ல, சபை ஊழியத்தின் வேலையைச் செய்துகொண்டிருக்கிறது. சபையின் வேலையைச் செய்யும்படி, பாஸ்டர் சபை மக்களுக்குப் போதிக்கும்போது, அவர்கள் சென்று ஊழியம் செய்வார்கள், அதுவே உண்மையான வெற்றி.

ஒரு உதாரணம் சொல்லுகிறேன். மற்றொரு தேசத்தின்மீது யுத்தம் செய்ய தீர்மானித்த பிறகு, ஜனாதிபதி தன் மக்களைப் பார்த்து: "யுத்தத்தில் நாம் அநேகரை இழக்க நேரிடும், ஆகவே, யுத்தம் செய்வதற்கு, நமது தளபதிகளை மட்டும் அனுப்பும்படி நான் தீர்மானித்திருக்கிறேன்" என்று சொன்னால், அவரது அறிவிப்பைக் கேட்டு, உலகம் சிரிக்கும் அல்லவா? ஆனால், நமது ஆவிக்குரிய உலகத்தில் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் செய்வதற்கு, ஐந்துவகை ஊழியம் செய்கிற தளபதிகளை மட்டும் நாம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். "அவர்கள் ஊழியம் செய்யட்டும், அவர்கள் ஊழியம் செய்வதற்கு நாங்கள் ஜெபம்பண்ணுகிறோம்." ஆம், ஒரு சேனையை உருவாக்க நாம் தவறுகிறோம். அந்தச் சேனையை உருவாக்க தேவன் விரும்புகிறார், சீஷத்துவ சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு, தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்த வரங்கள் அதில் பயன்படுத்தப்படும்.

நாங்கள் வசிக்கும் பட்டணத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் சென்று, சீஷர்களை உருவாக்குவதற்கு, வேண்டிய வல்லமையான உபகரணங்களுடன், ஒரு சேனையை உருவாக்கும்படி உதவிசெய்ய நாங்கள் விரும்புகிறோம். தேவன் எங்களுக்குக் கொடுத்த அனைத்து திட்டங்களைச் செயல்படுத்தி, நாங்கள் உருவாக்கி வைத்துள்ள சீஷத்துவ பாடங்கள் என்ற உபகரணங்கள் மூலம் இதைச் செய்து முடிக்கமுடியும். நீங்கள் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்ற இயேசுவின் கட்டளைப்படி, இழந்துபோன, புதிய ஆத்துமாக்களுக்கு, தேவன் நமக்குக் கொடுத்த வரங்களைச் செயல்படுத்தி நாம் அனைவரும்

ஊழியம் செய்ய இணையும்போது, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# சீஷத்துவ கேள்விகள் மற்றும் கேள்விகளுடன் பயன்படும் வசனங்கள்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள், சுவிசேஷம் அறிவிப்பதற்கு, சீஷராக்குவதற்கு, இழந்துபோனவர்களை சந்திப்பதற்கு நாங்கள் பின்பற்றும் வழிமுறைகள். உங்கள் சபை அங்கத்தினர்கள் இதில் ஏதாவது ஒன்றில் கையொப்பமிடலாம். உங்களுக்குள்ள வரங்களைப் பயன்படுத்தி, தொடர்ந்து ஊழியம் செய்வீர்களெனில் ஒரு நபரை தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவந்து, அந்த நபரை ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சியடைந்த நிலைக்குள் நடத்த முடியும். கீழே கொடுக்கப்பட்டவை உங்கள் சபை அங்கத்தினரின் விருப்பம், வரங்களுக்கு ஏற்றவை. உங்கள் சபை அங்கத்தினர்களுக்கு இதைக் கொடுங்கள். அதன்பிறகு இவையெல்லாம் சரியாக செய்யப்படுகிறதா என்று கவனிக்கவும், அதற்கு உதவி செய்யவும் கூடிய குழுக்களை நியமிக்கவும்.

   இதைச் செய்ய நான் விரும்புகிறேன்: (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதில் கையொப்பமிடலாம்)

   ......................................புதிய ஆத்துமாக்களை அவர்கள் வீட்டு வாசல்சென்று சந்தித்தல்.

   ....................................மன்றாட்டு ஜெபம்: இழந்துபோனவர்களுக்காகவும், சீஷத்துவ சுவிசேஷ குழுவினருக்காகவும் ஜெபித்தல்.

   ...................................உணவு கொடுத்தல் அல்லது குடும்பங்களுக்கு வேண்டிய மற்ற பொருட்களைக் கொடுத்தல்.

   ...................................மற்றவர்களை போன் மூலம் தொடர்புகொள்ளுதல் அல்லது நேரிடையாகச் சந்தித்தல்.

   ......................................தயை ஊழியம்: மற்றவர்களுக்காக உணவு சமைத்தல், கார்டு அனுப்புதல், உங்களால் முடிந்த ஏதாவது ஒரு வழியில் உதவுதல்.

..............................தனிநபராய் இருக்கிற தாய், பிள்ளைகளுக்கு உதவிசெய்தல்.

..............................திருச்சபைக்கு வாகன வசதி ஏற்படுத்தி தருதல்.

..............................மற்றவை: நான் ...................... செய்ய விரும்புகிறேன்.

2. சீஷத்துவ பாடத்தைக் கற்றுக்கொடுத்தபிறகு, பின்தொடர் ஊழியத்திற்காக பயன்படுத்தவேண்டிய சீஷத்துவத்திற்கான எளிய வழிமுறை படிவத்தைக் கீழே காணலாம். ஒவ்வொருநாளும் எத்தனை பாடங்கள் போதிக்கப்பட்டன, ஒவ்வொரு பாடத்திற்குப் பிறகு அதன் பலன் எவ்வாறு இருந்தன என்பதை போதகர் அல்லது அதிகாரத்திலிருப்பவர்கள் அறிந்துகொள்வதற்கு இந்த படிவம் உபயோகமாய் இருக்கும்.

சீஷத்துவ பின்தொடர் ஊழிய பலன் படிவம்

சந்திப்பின் தேதி/பாடம்:

பாடம் எடுத்தவர்கள் பெயர் (கள்):

கற்பிக்கப்படும்/பார்வையிடப்படும் நபர்களின் பெயர் (கள்):

ஊழியம் செய்த இடம்:

போதிக்கப்பட்ட பாடம்:

இந்தப் பாடம் எப்படி இருந்தது?

3. வாசிக்க: யாக்கோபு 1:22. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதன்படி செய்யாமற்போனால், நாம் என்ன செய்கிறோம்?

**யாக்கோபு 1:22** - *"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்."*

4. வாசிக்க: மத்தேயு 7:24-27. "புத்தியுள்ள மனுஷனாய் இருக்க, இயேசுவின் வசனங்களை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, நாம் என்ன செய்யவேண்டும்?

**மத்தேயு 7:24-27** - *“ஆகையால், நான் சொலிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். (25) பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. (26) நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். (27) பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.”*

5. எபேசியர் 4:11-13. சுவிசேஷ ஊழியத்தின் வேலையை யார் செய்யவேண்டும்?

**எபேசியர் 4:11-13** - *“மேலும், நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், (12) பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், (13) அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.*

6. வாசிக்க: அப்போஸ்தலர் 8:1,4. யார் எங்கும் சென்று சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்?

**அப்போஸ்தலர் 8:1** - *“அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று.”*

7. வாசிக்க: அப்போஸ்தலர் 8:1,4. யார் எங்கும் சென்று சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கிக்கவில்லை?

**அப்போஸ்தலர் 8:4** - *"அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்."*

8. வாசிக்க: அப்போஸ்தலர் 11:19-22. புதிய ஏற்பாட்டு ஆதிசபையின் காலத்தில், விசுவாசிகள் எங்கும் சென்று, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள், அப்போஸ்தலர் தலைமையிலான தலைமைத்துவ குழுவினர் பின்தொடர் ஊழியம்செய்து, போதித்தனர், வழிநடத்தினர். இன்றுள்ள நம் சபைகள், தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் காரியங்களை தொடங்குகிறார்கள், அதன்பிறகு விசுவாசிகள் பின்தொடருகிறார்கள். அப்போஸ்தலர் 11:19-22 வசனங்கள் இதை எவ்வாறு உறுதிப்படுத்துகின்றன?

**அப்போஸ்தலர் 11:19-22** - *"ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள். (20) அவர்களில் சீப்புருதீவாரும், சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள். (21) கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். (22) எருசலேமிலுள்ள சபையார்இந்தக் காரியங்களைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்."*

9. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:14-18. கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் தேவையானவை. நமக்கு நாமே, நமக்குள் நாம் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளக்கூடாது; எல்லாவற்றையும் செய்வதில் நமது முழு அர்ப்பணிப்பு இல்லை, மாறாக, நீங்கள் எதைச் செய்யவேண்டுமென்று தேவன் உங்களைத் தகுதிப்படுத்தி இருக்கிறாரோ, அதை நீங்கள் செய்யவேண்டும். இந்தப் பாடத்தில் நீங்கள் பெற்றுக்கொண்ட தகவல்களின்படி நீங்கள் என்ன செய்வீர்கள்?

**1 கொரிந்தியர் 12:14-18** - *சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. (15) காலானது நான் கையாயிராதபடியினாலே, நான்*

*சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? (16) காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? (17) சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? (18) தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்."*

# பதில் ஆதாரங்கள்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள், சுவிசேஷம் அறிவிப்பதற்கு, சீஷராக்குவதற்கு, இழந்துபோனவர்களை சந்திப்பதற்கு நாங்கள் பின்பற்றும் வழிமுறைகள். உங்கள் சபை அங்கத்தினர்கள் இதில் ஏதாவது ஒன்றில் கையொப்பமிடலாம். உங்களுக்குள்ள வரங்களைப் பயன்படுத்தி, தொடர்ந்து ஊழியம் செய்வீர்களெனில் ஒரு நபரை தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவந்து, அந்த நபரை ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சியடைந்த நிலைக்குள் நடத்த முடியும். கீழே கொடுக்கப்பட்டவை உங்கள் சபை அங்கத்தினரின் விருப்பம், வரங்களுக்கு ஏற்றவை. உங்கள் சபை அங்கத்தினர்களுக்கு இதைக் கொடுங்கள். அதன்பிறகு இவையெல்லாம் சரியாக செய்யப்படுகிறதா என்று கவனிக்கவும், அதற்கு உதவி செய்யவும் கூடிய குழுக்களை நியமிக்கவும்.

   இதைச் செய்ய நான் விரும்புகிறேன்: (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதில் கையொப்பமிடலாம்)

   ......................................புதிய ஆத்துமாக்களை அவர்கள் வீட்டு வாசல்சென்று சந்தித்தல்.

   ..................................மன்றாட்டு ஜெபம்: இழந்துபோனவர்களுக்காகவும், சீஷத்துவ சுவிசேஷ குழுவினருக்காகவும் ஜெபித்தல்.

   ..................................உணவு கொடுத்தல் அல்லது குடும்பங்களுக்கு வேண்டிய மற்ற பொருட்களைக் கொடுத்தல்.

   ..................................மற்றவர்களை போன் மூலம் தொடர்புகொள்ளுதல் அல்லது நேரிடையாகச் சந்தித்தல்.

   ......................................தயை ஊழியம்: மற்றவர்களுக்காக உணவு சமைத்தல், கார்டு அனுப்புதல், உங்களால் முடிந்த ஏதாவது ஒரு வழியில் உதவுதல்.

   ...............................தனிநபராய் இருக்கிற தாய், பிள்ளைகளுக்கு உதவிசெய்தல்.

................................திருச்சபைக்கு வாகன வசதி ஏற்படுத்தி தருதல்.

................................மற்றவை: நான் ........................ செய்ய விரும்புகிறேன்.

2. சீஷத்துவ பாடத்தைக் கற்றுக்கொடுத்தபிறகு, பின்தொடர் ஊழியத்திற்காக பயன்படுத்தவேண்டிய சீஷத்துவத்திற்கான எளிய வழிமுறை படிவத்தைக் கீழே காணலாம். ஒவ்வொருநாளும் எத்தனை பாடங்கள் போதிக்கப்பட்டன, ஒவ்வொரு பாடத்திற்குப் பிறகு அதன் பலன் எவ்வாறு இருந்தன என்பதை போதகர் அல்லது அதிகாரத்திலிருப்பவர்கள் அறிந்துகொள்வதற்கு இந்த படிவம் உபயோகமாய் இருக்கும்.

சீஷத்துவ பின்தொடர் ஊழிய பலன் படிவம்

சந்திப்பின் தேதி/பாடம்:

பாடம் எடுத்தவர்கள் பெயர்(கள்):

கற்பிக்கப்படும்/பார்வையிடப்படும் நபர்களின் பெயர் (கள்):

ஊழியம் செய்த இடம்:

போதிக்கப்பட்ட பாடம்:

இந்தப் பாடம் எப்படி இருந்தது?

3. வாசிக்க: யாக்கோபு 1:22. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதன்படி செய்யாமற்போனால், நாம் என்ன செய்கிறோம்?

***நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறோம்.***

4. வாசிக்க: மத்தேயு 7:24-27. "புத்தியுள்ள மனுஷனாய் இருக்க, இயேசுவின் வசனங்களை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, நாம் என்ன செய்யவேண்டும்?

***வசனத்தின்படி செய்ய வேண்டும்.***

5. எபேசியர் 4:11-13. சுவிசேஷ ஊழியத்தின் வேலையை யார் செய்யவேண்டும்?

***ஊழியக்காரரர்கள் என்று நியமிக்கப்பட்ட சிலர் மட்டுமல்ல, பரிசுத்தவான்கள் அனைவரும்.***

6. வாசிக்க: அப்போஸ்தலர் 8:1,4. யார் எங்கும் சென்று சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்?

***சிதறப்பட்ட விசுவாசிகள் அனைவரும்.***

7. வாசிக்க: அப்போஸ்தலர் 8:1,4. யார் எங்கும் சென்று சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கிக்கவில்லை?

***அப்போஸ்தலர்கள். சீஷத்துவம் மற்றும் சுவிசேஷத்திற்கு சபையார்தான் பொறுப்பு என்பதை புதிய ஏற்பாட்டு ஆதித் திருச்சபை செயல்களிலிருந்து நாம் காண்கிறோம்.***

8. வாசிக்க: அப்போஸ்தலர் 11:19-22. புதிய ஏற்பாட்டு ஆதிசபையின் காலத்தில், விசுவாசிகள் எங்கும் சென்று, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள், அப்போஸ்தலர் தலைமையிலான தலைமைத்துவ குழுவினர் பின்தொடர் ஊழியம்செய்து, போதித்தனர், வழிநடத்தினர். இன்றுள்ள நம் சபைகள், தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் காரியங்களை தொடங்குகிறார்கள், அதன்பிறகு விசுவாசிகள் பின்தொடருகிறார்கள். அப்போஸ்தலர் 11:19-22 வசனங்கள் இதை எவ்வாறு உறுதிப்படுத்துகின்றன?

***புதிய விசுவாசிகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதைக் குறித்து சபைக் கேள்விப்பட்டபோது, அவர்களுக்கு உதவிசெய்யும்படி பர்னபாவை அனுப்பினார்கள் (வசனம் 22)***

9. வாசிக்க: 1 கொரிந்தியர் 12:14-18. கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் தேவையானவை. நமக்கு நாமே, நமக்குள் நாம் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளக்கூடாது; எல்லாவற்றையும் செய்வதில் நமது முழு அர்ப்பணிப்பு இல்லை, மாறாக, நீங்கள் எதைச் செய்யவேண்டுமென்று தேவன் உங்களைத் தகுதிப்படுத்தி இருக்கிறாரோ, அதை நீங்கள் செய்யவேண்டும். இந்தப் பாடத்தில் நீங்கள் பெற்றுக்கொண்ட தகவல்களின்படி நீங்கள் என்ன செய்வீர்கள்?

*வெளியே போய், எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரங்களை பயன்படுத்துவதன் மூலம் இவைகளை நடைமுறைப்படுத்தப்படுத்துவேன் என நான் நம்புகிறேன்.*

# CONTACT DETAILS

## INDIA

www.awmindia.net        info@awmindia.net

## Locations:

### Hyderabad

42-343/1/188, Near Flora Hotel, Maruthi Nagar
A S Rao Nagar, Hyderabad 500 040, INDIA.
Ph: (040) 4028 0718

### Chennai

72-D, Nandhini Mahal, I Floor, Velachery Main Road
Velachery, Chennai 600 042, INDIA.
Ph: (044) 4202 1820

### Mumbai

Bethel, Plot No 305/E, Mith Chowky, Near Girdhar Park
Malad (W), Mumbai 400 064, INDIA.
Ph: +91 8976549515

### Delhi

Phone: +91 9560591787

## USA

Andrew Wommack Ministries Inc.
PO Box 3333, Colorado Springs CO 80934-3333
www.awmi.net

## UK

Andrew Wommack Ministries - Europe
PO Box 4392, Walsall, WS1 9AR, ENGLAND
www.awme.net